# தாய்வீடு

215

THAIVEEDU FEBRUARY 2025 www.thaiveedu.com

## மருதோவியம்!

### ஆற்றலைப் போற்றிய தமிழ்ச் சமூகம்



வடமொழி நூல்களைத்
தமிழ்ப்படுத்தற் பணியில்
ஈழத்தவர் பங்களிப்பு

– மைதிலி தயாநிதி

பெண்மொழி - பெண் மையவாதம்

– சி. ரமேஷ்

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905 209 8000
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

## ஓர் ஏகாதிபத்தியத்தின் அந்திக்காலம்!

அமெரிக்கா உள்நாட்டுப்போரில் ஈடுபட்டிருந்த 1863-ஆம் ஆண்டிலே, அந்நாட்டின் அதிபராயிருந்த ஆபிரகாம் இலிங்கன், அமெரிக்க அரசை, 'மக்களாலான, மக்களுக்கான, மக்களின் அரசு' என விபரித்தார். உள்நாட்டுப் போரில் அரச தரப்பு வெற்றியடைந்ததிலிருந்து, அமெரிக்க அரசை மட்டுமல்ல, உலகின் ஜனநாயகப் பண்புள்ள அரசுகள் அனைத்தையுமே விபரிக்க இந்த வாசகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஆனால், 2024-ஆம் ஆண்டில் டொனல்ட் ட்ரம்பின் பதவியேற்பை ஒட்டியும் தொடர்ந்தும் அரங்கேறும் நிகழ்வுகள் அங்கே மக்களுக்கான அரசு முடிவுக்கு வந்துவிட்டதென்றே சுட்டுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது முடிவை வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறதென்ற எதிர்வுகூறலுக்கும் வலுச்சேர்க்கின்றன.

அமெரிக்க அரச அதிபரின் பதவியேற்பு விழாவிலே வேற்றுநாட்டு அரச தலைவர்கள் பங்கேற்பதில்லையென்ற மரபைமீறி, ட்ரம்பின் பதவியேற்பிலே, உலகின் அதிதீவிர வலதுசாரி அரச தலைவர்கள் பலர் அழைக்கப்பட்டுக் கலந்துகொண்டார்கள். தத்தமது நாடுகளிலே மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் தலைவர்கள்தாம் ட்ரம்பின் விருந்தாளிகள். அவர்களோடு, பெருமிதம் பொங்கக் கலந்துகொண்டவர்கள் அமெரிக்காவின் மிகப்பெரிய பணமுதலைகளான இலோன் மஸ்க், ஜெஃப் பேசோஸ், மார்க் சக்கர்பேர்க் போன்றவர்கள்.

மஸ்க், ட்ரம்பின் தேர்தல் வெற்றிக்குப் பின்னாலுள்ள பணபலத்துக்கு முக்கிய காரணமானவர். பதவியேற்பு விழாவிலே, ஹிட்லரின் நாசிக் கைமுத்திரையைச் சபைக்குக் காட்டித் தனது இனக்காழ்ப்பு நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்திக்கொண்டார். பேசோஸ், குபெக் மாகாணத்திலேயுள்ள அமசோன் பணியாளர்கள் தொழிற்சங்கத்தில் இணைய முயன்றதற்காக, அந்தப் பணிமனையையே இழுத்துமூடி அவர்களை வேலையற்றவர்களாக்கி, அதையே ஏனையவர்களுக்கும் பாடமாக இருக்கச் செய்தவர். சக்கர்பேர்க் தனது சமூக வலைத்தளங்களின் மூலம் பெருந்தொகையானோரின் தனிப்பட்ட தகவல்களைத் திருடி விற்று இலாபம் பார்த்தவரென அமெரிக்க அரசாலேயே குற்றஞ்சாட்டப்பட்டவர். இங்ஙனம், மக்கள் விரோதப் பண்புகளையுடைய பெருமுதலாளிகளே அமெரிக்க ஏகாதி-யத்தியத்தின் தலைவரின், சுதந்திர உலகின் தலைவர் என வர்ணிக்கப்படுபவரின் நெருக்கமான நண்பர்கள்.

ட்ரம்பின் அரசிலே பொதுச்சுகாதாரத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருப்பவர் கடந்த காலங்களிலே தடுப்பூசிகளுக்கு எதிராகத் தீவிரமாக முழங்கியவர். அம்மை நோயும் இளம்பிள்ளைவாதமும் இல்லாமலானதற்கும், ஈர்ப்பு வலி நோயும் காசநோயும் இன்னும் எத்தனையெத்தனையோ நோய்களும் தீவிரமாகக் கட்டுப்படுத்தப்பட்டதற்கும் தடுப்பூசிகள்தாம் காரணமென்பதோடு, கொரோனா உட்பட, இத்தகைய பெருந்தொற்று நோய்கள் பணவசதி படைத்தவர்களைவிடப் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களையே பெரிதும் பாதிக்கின்றன என்பதும் உண்மையே.

வர்த்தகத்துறைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருப்பவர் சுங்கவரியை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி உலக நாடுகளை மிரட்ட முனைகிறார். அமெரிக்காவின் இறக்குமதிகளுக்குச் சுங்கவரி விதிக்கப்பட்டால், அன்றாட, அத்தியாவசியப் பொருட்களின் விலை கூடும். அது பொருளாதாரத்தில் பின்தங்கிய அமெரிக்கர்கள் மீது பெருஞ்சுமையாக இறங்கும். செல்வந்தர்களுக்கு அதனால் பாதிப்புக் குறைவு.

ட்ரம்ப் தன் பங்குக்கு 1868-ஆம் ஆண்டுமுதல் இருந்துவந்த பிறப்பால் கிடைக்கக்கூடிய குடியுரிமைச் சட்டத்தைக் கட்டுப்படுத்தி, அமெரிக்காவில் பிறந்ததனால் குடியுரிமை பெற்றவர்களை நாடுகடத்த முனைகிறார். அவர்களுள் பணக்காரர்கள் அதிகம் இருக்கமாட்டார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றி, அதில் பங்குபற்றாத ஈரான், யெமன், லிபியா ஆகிய நாடுகளின் வரிசையில் அமெரிக்காவையும் இணைத்துக் கொள்கிறார். கலிபோர்னியா மாநிலக் காட்டுத்தீ உட்பட, இயற்கை அனர்த்தங்களால் தமது வாழ்வாதாரங்களை இழந்து தவிப்பவர்கள் பெரும்பணக்காரர்கள் அல்லர். அவர்களிடம் காப்புறுதி உண்டு.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், 2021 ஜனவரி 6-ஆம் நாள் ட்ரம்புக்கு ஆதரவாகத் தலைநகரை முற்றுகையிட்டு, அரச சட்டவாளர்கள் மீது வன்முறைத் தாக்குதல் நடத்தி, அதற்காகக் கைது செய்யப்பட்டுக் குற்றத்தை ஒப்புக்கொண்ட 1500-க்கும் அதிகமான கிளர்ச்சியாளர்களை ட்ரம்ப் பொதுமன்னிப்பு வழங்கி நிபந்தனைகளின்றி விடுவித்துள்ளார்.

இலிங்கன் ஆற்றிய உரை உள்நாட்டுப் போரிலே வோஷிங்டன் தலைமைக்கு ஆதரவாக - கிளச்சியாளர்களுக்கு எதிராகப் போரிட்டு மடிந்த வீரர்களின் நினைவிடத்திலேயே நிகழ்ந்தது என்பதை ஒப்பிட்டு நோக்கினால், இலிங்கனின் எதிராளிகள் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டார்கள் என்பதை உணர்ந்துகொள்ளலாம். இதில் வரலாற்றுச் சோகம், இலிங்கனைத் தெரிவுசெய்த அதே கட்சிதான் ட்ரம்பையும் தெரிவுசெய்தது. இது வீழ்ச்சிக்கான அறிகுறியேயன்றி வேறில்லை.

இந்த வீழ்ச்சி மனித வரலாற்றுக்குப் புதிதல்ல. உரோமப் பேரரசும் பிரித்தானியப் பேரரசும் உச்சம் தொட்டிருந்த காலகட்டங்களில், அவை ஒருநாள் வீழும் என யாரும் நினைத்துப்பார்த்திருக்க முடியாது. எனினும் அவை நிகழ்ந்தன.

இதுவும் நிகழும்!

**ஓர் ஏகாதிபத்தியத்தின் அந்திக்காலம்!** 3

**இலங்கையின் இனப்படைபலம்** 5
- மணி வேலுப்பிள்ளை

**இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை** 8
- நெல்லை ஜெயசிங்

**போரில் உயிர்தப்பிய முள்ளிவாய்க்கால் மக்கள் ரொஹிங்கியா அகதிகளுக்கு புரியும் உதவி** 11
- ருக்கி பர்னாந்து
தமிழில்: மணிவேலுப்பிள்ளை

**சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம்: ... ...** 14
- ரூபன் சிவராஜா

**அதிகரித்து வரும் தீவிர வலதுசாரிக் கட்சிகளின் ஆதரவும் மக்கள் நாயகனின் வருகையும்** 18
- ரதன்

**அப்பிளில் வழியும் குருதி: கனிமங்களும் போர்க்குற்றங்களும்** 23
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**ஒழுக்க விழுமியங்களால் வளர்க்கப்பட வேண்டிய கல்விச்சூழல்** 27
- அகமட் பிஸ்தாமி

**விண்வெளி ஆய்வுகளில் புதிய பரிமாணம் காணும் இயந்திர மனிதர்கள்** 29
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**ஒளியாண்டு என்பது நேரமா? தூரமா?** 33
- குரு அரவிந்தன்

**குளிர் காலத்திற்கான ஆறு செயற்பாடுகள்** 36
- செந்தூரன் புனிதவேல்

**காபனோரொக்சைட் ஓசையின்றி உயிரைப் பறிக்கும் மாயப்பிசாசு** 37
- கந்தசாமி கங்காதரன்

**மௌனக் கொலையாளி** 41
- வேலா சுப்பிரமணியம்

**பெற்றோரின் விவாகரத்தும் பிள்ளைகளின் நடத்தையும்** 44
- த. சிவபாலு

**நாட்டை சிறக்க வைக்கும் ஐந்து அணிகலன்கள்** 47
- குமார் புனிதவேல்

**தாய்மொழி உயிர்ப்பானது** 49
- சி. நற்குணலிங்கம்

**நாம் ஒளியென்று கற்பனை செய்ததெல்லாம்** 52
- ஓவியர் ஜீவா

**சமூக மாற்றத்துக்கான அரங்கு: ஒஸ்லோவில் நடந்த 'ஒரு கல்யாணக்கதை' நாடகம்** 55
- ராஜன் செல்லையா

**சிறு துளிகளால் சிறைப்பிடிக்கப்படும் பெரும் சூரியன்கள் மைக்கல் கொலின் கவிதைகள்** 57
- 'ஆகவே' ஜபார்

**யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாரம்பரியம்: 18-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை ஆய்வுக் கட்டுரை - அறிமுகம்** 62
- அருண்மொழிவர்மன்

**'ஓர் அடிமைச் சிறுமியின் வாழ்க்கை நிகழ்வுகள்'** 67
- ரூபன் சிவராஜா

**முற்போக்கு இலக்கிய ஆளுமை கே. கணேஷ் மொழிபெயர்ப்புகள் ஓர் அறிமுகக் குறிப்பு** 73
- அன்னலட்சுமி இராஜதுரை

**இலங்கை வந்த நடேசரும் இந்தியா சென்ற கணேஷும் நூற்றாண்டை மீட்டும் ஒப்பீட்டுப் பார்வை** 76
- மல்லியப்புசந்தி திலகர்

**ஆதிலட்சுமி கப்பலும் இன்றைய இலங்கையும்** 80
- கே.ஜி. பாஸ்கரன்

**ஈழத்தின் சிறார் இலக்கியம் குறித்த மதிப்பீட்டில் கவிஞர் இக்பால் அலியின் வகிபாகம்: ஓர் ஆய்வு!** 82
- பீ.எம். ஜமாஹிர்

**பதிப்புத்துறைக்கோர் டேவிட் லிகோரி : போர்க்கால இலக்கியங்களை ஆவணப்படுத்திய பதிப்பாளர்** 87
- இயல்வாணன்

**நாடகப் பேராசான்: அஞ்சலிக் குறிப்பு** 90
- ப. ஸ்ரீஸ்கந்தன்

**குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'மண்சுமந்த மேனியர்' நாடகப் பிரதியில் போர்க் கால வாழ்வியல்** 92
- வைதேகி செல்மர் எமில்

**அருமை நண்பன்: குழந்தை ம. சண்முகலிங்கத்தின் முதல் நாடக எழுத்துரு** 99
- நா. நவராஜ்

**தோழர் 'வைகறை' ரவி** 102
- அருண்மொழிவர்மன்

**'புத்தகங்களுக்கு வரி விதிப்பது சமூக முன்னேற்றத்தை சீர்குலைக்கும்' காஞ்சனா ப்ரியகாந்த உடன் ஓர் உரையாடல்** 104
தமிழில்: ஜிஃப்ரி ஹாசன்

**ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்** 107
- என். செல்வராஜா

**கரவையூர்க் கவிஞர் மன்னவன் கந்தப்பு** 111
- வே. விவேகானந்தன்

**பன்முகக் கலைஞர் நடிகர் சிவகுமார்** 114
- சு. வேணுகோபால்

**காமன் கூத்து வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலை** 120
- அருணாசலம் லெட்சுமணன்

**பெண் மொழி - பெண் மையவாதம்** 124
- சி. ரமேஷ்

**இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள்** 128
- கோட்டி திருமுருகானந்தம்

**திருவாழ்க்கைப்பட்டாள்** 132
- த. ஜீவராஜ்

**இருள் உலகுக்குள் நுழையும் செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்** 134
- ச. சத்யதேவன்

**தலைமை அகம்** 138
- குகன் சங்கரப்பிள்ளை

**மார்க்சியமும் சமூக விஞ்ஞான முறையியலும்** 144
ஆங்கிலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

**இனப்படுகொலையின் அரசியல் - 11 பௌத்தமும் வன்முறையும்: சில கற்பிதங்கள்** 148
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் பங்களிப்பு:** 153
- மைதிலி தயாநிதி

**மகாபாரத அம்மானை** 157
- பால. சிவகடாட்சம்

**மாயக் கண்ணனா? மானுடக் கண்ணனா?** 159
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து ...** 163
- மாவிலிமைந்தன் சி. சண்முகராஜா

**தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா** 166
- பி. பற்குணரஞ்சன்

**வாழ்வுரிமை ! அமாயாவின் கடிதம்** 169
- மா. சித்திவினாயகம்

**நாளும் பொழுதும் நம் கையில் இல்லை** 173
- உஷாதீபன்

**அவளை எனக்கு மிகவும் பிடிக்கும்** 178
- அ. கந்தசாமி

**வயது முதிர்ந்த தாய்** 185
- மற்சுவோ பாஷோ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

**நிறைவுற நிகழ்ந்த 'மருதோவியம்'** 188



# இலங்கையின் இனப்படைபலம்

– மணி வேலுப்பிள்ளை –

**1947**-இல் இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி.எஸ். சேனநாயக்க பிரித்தானியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையில் ஒப்பமிட்டார். அதன்மூலம் பிரித்தானியரின் நல்லெண்ணத்தை சம்பாதித்து, இலங்கையின் முழுவிடுதலையை விரைவு படுத்த முடியும் என்று அவர் நம்பினார். அதன்படி திருகோணமலையில் ஒரு பிரித்தானிய கடற்படைத் தளமும், கட்டுநாயக்காவில் ஒரு வான்படைத் தளமும் நிலைகொண்டிருந்தன. அவையும் பொதுநலவாயமும் இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்பது அவர் நம்பிக்கை.

அவர் எதிர்பார்த்தவாறு 1948-ல் இலங்கை முழுவிடுதலை பெற்றபொழுது, நாட்டின் பாதுகாப்புக் குறித்து ஒரு வினாவும் எழவில்லை. ஆகவே பாதுகாப்புக்கென ஒரு தனி அமைச்சு அமைக்கப்படவில்லை. பிரதம மந்திரியே பாதுகாப்பு - வெளியுறவு அமைச்சராக விளங்கினார்.

டி.எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆகிய முதல் நான்கு பிரதம மந்திரிகளும் நாட்டின் பாதுகாப்பினைக் குறித்து மேற்கொண்டு அலட்டிக்கொள்ளாமல், வேறு அலுவல்களில் புலனைச் செலுத்தினார்கள்.

1956-ல் தனிச்சிங்கள மந்திரத்தை உச்சரித்து ஆட்சியில் அமர்ந்த பண்டாரநாயக்கா, 1947-ல் இலங்கையும் பிரித்தானியாவும் செய்துகொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையை முடிவுறுத்தினார். அப்பொழுது அவர் விதந்துரைத்த பாதுகாப்புக் கொள்கை கவனிக்கத்தக்கது.

*‘நாங்கள் ஒரு சிறிய நாட்டவர்கள். எம்மைத் தாக்க விளையும் வலிய நாடு எதுவும் ஒருசில நாட்களில் தோற்கடிக்க முடியாத படைபலம் எம்மிடம் இல்லை. எம்மைப் போன்ற சிறிய நாட்டவர் எவரும், வெளியாரின் தாக்குதல்களை திட்டமான முறையில் எதிர்கொள்ளும் நோக்குடன் ஒரு பாதுகாப்புப் படையினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுமில்லை. நாம் வானிலோ, கடலிலோ, தரையிலோ வெல்ல வாய்ப்புமில்லை. எம்மால் வெல்லவே முடியாது.’*

*‘உலக அரசியலைப் பொறுத்தவரை சுவிற்சர்லாந்து கடைப்பிடிப்பது போன்ற கொள்கையையே இலங்கையும் கடைப்பிடிக்க வேண்டும். அது ஒரு சிறிய நாடு. தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த அது படைபலத்தை நம்பியிருக்கவில்லை. நடு நிலைமைக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் தனது சுதந்திரத்தை அது வெற்றிகரமாகப் பேணிவந்துள்ளது. அதே போல உலக அரசியலில் இலங்கையும் ஒரு நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்து, பிறநாடுகளுடன் நட்புறவும் நல்லெண்ணமும் பாராட்ட வேண்டும். சூழ்வியலே (இராசதந்திரமே) இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் பாதுகாப்புக்கு முன்னணியாக விளங்க வேண்டும்’ (இலங்கை தகவல் திணைக்களம், 1976).*

1960-ல் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியேற்ற பிற்பாடு, 1962-ல் ஓர் ஆட்சிக்கவிழ்ப்பை மேற்கொள்வதற்கு சில மூத்த படையினரும், காவல்துறையினரும் தீட்டிய சதி அம்பலப்பட்டது. அகப்பட்ட சதிபதிகள் நீதிமன்றின்முன் நிறுத்தப்பட்டு, விசாரணைக்கு உள்ளானார்கள். இப்பொழுது படைபலத்தைப் பெருக்க நியாயம் இருந்தும்கூட, அது குறித்து உருப்படியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பெருக்கப்படும் படைபலத்தினால் அரசுக்கு மீளவும் ஆபத்து விளையலாம் என்று ஆட்சியாளர் அஞ்சியதே அதற்கான காரணம்.

1971-ல் இன்றைய அரசதிபரின் அன்றைய ஆசான் ரோகண விஜேவீரவின் தலைமையில் தென்னிலங்கை இளைஞர்கள் மேற்கொண்ட ஆயுதப் போராட்டம் வெளிநாட்டு உதவியுடன் முறியடிக்கப்பட்ட பின்னரும் கூட, படைபலத்தைப் பெருக்க உருப்படியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

1983-ல் வடக்கு, கிழக்கு இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதித்த பின்னரே நாட்டின் படைபலம் அதிரடியாகப் பெருக்கப்பட்டது. 1984-ல், இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக ஒரு தேசிய பாதுகாப்பு அமைச்சு தோற்றுவிக்கப்பட்டது. லலித் அத்துலத்முதலி தேசிய பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். பகைநாடுகளோ வல்லரசுகளோ அல்ல இலங்கைப் படையினரின் இலக்கு. பண்டாரநாயக்கா சுட்டிக் காட்டியது போல், அவற்றை *‘எம்மால் வெல்லவே முடியாது’*. உள்நாட்டில் - வடக்கு, கிழக்கு மாகாணங்களில் - உணர்ச்சி வசப்பட்டு ஆயுதம் ஏந்திய இளைஞர்களே இலங்கைப் படையினரின் இலக்கு.

1983-ல் கொல்லப்பட்ட 13 படையினரும், அதற்குப் பழி வாங்கு முகமாக கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான குடிமக்களும் வெவ்வேறு இனத்தவர்கள். படையினரைக் கொன்றவர்களும் குடிமக்களைக் கொன்றவர்களும் வெவ்வேறு இனத்தவர்கள். ஆனானப்பட்ட ஞானசார தேரர் அந்த இன வேறுபாட்டை வெட்டொன்று துண்டிரண்டாகப் பிட்டுக் காட்டினார். 2014-ல் முஸ்லீம்கள் தாக்குதலுக்கு உள்ளாகுந் தறுவாயில் அழுத்கமையில் வைத்து அவர் இட்ட முழக்கம் இது:

*‘இந்த நாட்டில் இன்னமும் ஒரு சிங்களக் காவல்துறையும் சிங்களப் படையும் இருக்கின்றன. இனி ஒரு முஸ்லீமோ, வேறொரு பிறவியோ ஒரு காவி ஆடையில் என்ன, வெறுமனே*

*ஒரு சிங்களவர் மீது கை வைத்தாலே போதும், இப்பிறவிக ளின் கதை ஒரு முடிவுக்கு வந்துவிடும்.'*

ஏனைய ஏழு மாகாணங்களையும் விடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரமே தமது பாசறைகளில் மட்டுமல் லாது, குடிமக்களுக்குச் சொந்தமான வீடுவளவுகளிலும், காணிபூமிகளிலும், மூலைமுடுக்குகளிலும் படையினர் பல தசாப்தங்களாக நிலைகொண்டுள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் ஓர் இனக்காவல் துறை வேறு நிலைகொண்டுள்ளது. முப்படைகளில் மட்டு மல்ல, காவல்துறையிலும் சிங்களவர் அல்லாத எவரும் கீழ் மட்டப் பதவி வகிப்பதே அரிது, மேல்மட்டப் பதவி மட்டும் ஒரு கேடா?

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு கோயிலையோ, பள்ளி வாசலையோ, தேவாலயத்தையோ இவர்கள் கட்டியதில்லை. மாறாக, விகாரைகள் கட்டுகிறார்கள். விடுதிகள் நடத்துகிறார் கள். பயிர் செய்கிறார்கள். தமது விளைசல்களை சந்தைப்ப டுத்துகிறார்கள்.

படையணிகளுக்கு சிங்கள மூதாதையரின் பெயரும், சிங்கள மன்னர்களின் பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன: சிங்கப் படை யணி, கெமுனு, கஜபாகு, விஜயபாகு படையணிகள், கஜ-பாகு, விஜயபாகு, பராக்கிரமபாகு கடற்படைக் கப்பல்கள் தமது தாக்குதல்களுக்குக்கூட அத்தகைய பெயர்களையே சூட்டினார்கள்.

சேமப் படையைத் தவிர்த்து, தற்பொழுது பணியாற்றிவரும் தரை, வான், கடல் படையினரின் மொத்த எண்ணிக்கையை நாடுவாரியாக ஒப்புநோக்கும் எவரும் இலங்கையின் இனப்ப டைபலம் கண்டு மலைத்தல் திண்ணம்:

| நாடுகள் | குடித்தொகை | படைத்தொகை |
|---|---|---|
| நியூசிலாந்து | 5,172,836 | 8,670 |
| கனடா | 39,299,105 | 68,000 |
| மலேசியா | 35,126,298 | 113,000 |
| இத்தாலி | 59,499,453 | 165,500 |
| இஸ்ரேல் | 9,256,314 | 170,000 |
| ஜேர்மனி | 84,548,231 | 181,600 |
| பிரித்தானியா | 68,682,962 | 184,860 |
| பிரான்சு | 66,438,822 | 200,000 |
| யப்பான் | 124,370,947 | 247,150 |
| இலங்கை | 22,834,965 | 346.000 |
| UN, 2023 Global Firepower Countries Index, 2024 | | |

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மொத்தக் குடித்தொகை ஏறத்தாழ 30 இலட்சம். ஒவ்வொன்றும் பருமட்டாக 20,000 படையாட்களைக் கொண்ட 19 படைப்பிரிவுகளுள் 16 பிரிவு கள் இவ்விரு மாகாணங்களிலும் நிலைகொண்டுள்ளன மொத்தம் 3,20,000 படையாட்கள் பருமட்டாக 10 பேருக்கு ஒரு படையாள்!

பாதுகாப்பு அமைச்சுக்கு 2025-ம் ஆண்டுக்கான செலவுக் காக 38,200 கோடி ரூபா ஒதுக்கப்படுள்ளது. வேறு சில ஒதுக் கீடுகளுடன் இதை ஒப்பிடும்பொழுது, இதன் தாக்கமும் அபத்தமும் தெரியவரும்

| | |
|---|---|
| கடற்றொழில்: | ரூபா 600 கோடி |
| சூழல்: | ரூபா 1,200 கோடி |
| மாதர், சிறார்: | ரூபா 1,400 கோடி |
| வெளியுறவு: | ரூபா 1,900 கோடி |
| கிராம விருத்தி: | ரூபா 2,400 கோடி |
| போக்குவரவு: | ரூபா 5,200 கோடி |
| கால்நடை: | ரூபா 8,300 கோடி |
| பொதுமக்கள் பாதுகாப்பு: | ரூபா 15,900 கோடி |
| கல்வி: | ரூபா 20,600 கோடி |
| பாதுகாப்பு: | ரூபா 38,200 கோடி |

1983 முதல் இற்றைவரை படைச்செலவும், மண்கொள்ளை யும், மணற்கொள்ளையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து பெருகி வந்துள்ளன. 2009-ல் போர் முடிந்தபிற கும் கூட. நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. ஈற்றில், 2022-ல், பட்ட கடனை அடைக்க வக்கின்றி சர்வதேய நாணய நிதியத்திடம் ஆட்சியாளர் மண்டியிட நேர்ந்தது.

அரசியல்வாரியான ஊழலிலிருந்து படைத்துறை மீட்கப்படும் என்று புதிய விளக்குமாறு எனத்தக்க தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது:

- படைத்துறை நவீனமயப்படுத்தப்படும்
- தளபதிகளுக்கு பணிநீடிப்பு இல்லை
- அரசியல் நியமனங்கள் தவிர்க்கப்படும்
- படை உளவுத்துறை சீரமைக்கப்படும்
- தீவிர மதவாதம், நாடுகடந்து புரியும் குற்றம், கள்ளக்கடத் தல் என்பவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்
- பிரிவினைவாதம் மீண்டும் தலைதூக்காவாறு பார்க்கப்படும்.

'அரசியல்வாரியான ஊழல்களுள்' படைத்துறையிலும் காவல் துறையிலும் புகுத்தப்பட்ட இன, மத, மொழிச் சார்பு உள்ள டக்கப்படவில்லை. அவற்றை பல்லினப் படைத்துறையாகவும் பல்லினக் காவல்துறையாகவும் சீரமைப்பது பற்றிக் குறிப்பி டப்படவில்லை. பிரிவினைவாதம் திரும்பவும் தலைதூக்கா வாறு பார்ப்பதற்கு, மனித உரிமைகளை மதித்து நடப்பது ஒரு குறுக்குவழி ஆகுமே! இலங்கை விடுதலை பெற்ற அதே ஆண்டில், 1948-ல், ஐ. நா. பறைசாற்றிய, இலங்கை ஒப்ப மிட்ட, மனித உரிமைப் பிரகடனம்:

*'இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல் அபிப்பிராயம் அல்லது வேறு அபிப்பிராயம், தேசியத் தோற்றுவாய் அல் லது சமூகத் தோற்றுவாய், உடைமை, பிறப்பு அல்லது வேறு தகுநிலை போன்ற பாகுபாடு எதுவுமின்றி அனைவரும் இப்பி ரகடனத்தில் எடுத்துரைக்கப்பட்ட உரிமைகள் சுதந்திரங்கள் அனைத்துக்கும் உரித்துடையவர்கள். மேலும், ஒருவரது நாடு அல்லது ஆள்புலம் சுதந்திரமானதாகவோ, நம்பிக்கைப் பொறுப்பாள்புலமாகவோ, தன்னைத் தானே ஆளாததா கவோ, வேறு வகையில் இறைமை மட்டுப்பட்டதாகவோ விளங்கினாலும் கூட, அதன் அரசியல் தகுநிலையை அல் லது நியாயாதிக்க தகுநிலையை அல்லது சர்வதேய தகுநி லையை அடிப்படையாகக் கொண்டு அவருக்குப் பாகுபாடு இலங்கை ஒப்பமிட்ட, காட்டலாகாது.'*

மனித உரிமைப் பிரகடனத்தையும் குடியாட்சி விழுமியங்க ளையும் மீறியே 1948-ல் மலையக மக்களின் குடியுரிமை

பறிப்பு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிற மாகாணத்தவர்களின் குடியேற்றங்கள், 1956-ல் தனிச் சிங்களச் சட்டம், 1972-இல் பௌத்தம் அரச மதம், தரப்படுத்தல்... எல்லாம் அரங்கேற்றப்பட்டன.

அத்தகைய உரிமை மீறல்களை எதிர்கொள்வதற்காக (1949-இல்) தமிழரசுக் கட்சி ஓர் இணைப்பாட்சி முறைமையை முன்வைத்தது. ஏற்கெனவே, 1815-ல் கண்டி மூப்பர்களும், 1926-ல் பண்டாரநாயக்காவும் கூட அத்தகைய இணைப்பாட்சி முறைமையை விதந்துரைத்திருந்தார்கள்!

கண்டி மூப்பர்களும், பண்டாரநாயக்காவும் விதந்துரைத்த இணைப்பாட்சி முறைமையை தமிழரசுக் கட்சி முன்வைத்த பொழுது, அது பிரிவினைவாதம் என்றும் பிற்போக்குவாதம் என்றும் கண்டிக்கப்பட்டது. ஜின்னா எதிர்கொள்ளாத கண்டனங்களை செல்வா எதிர்கொண்டார்.

அதேவேளை 1976-ல் தமிழ் ஈழக் கோரிக்கையை, அதாவது உண்மையான பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து, அவர் தலைமையில் 'வட்டுக்கோட்டை தீர்மானம்' நிறைவேற்றப்பட்டதை அடுத்து முளைவிட்ட ஆயுதப் போராட்டம் பயங்கரவாதம் என்று சாடப்பட்டது. புதிய அரசதிபர் 'எல்லோரும் இலங்கையர்' என முழங்கி வருகிறார். இது ஓநாய்கள் ஆடுகளை விளித்து 'எல்லோரும் விலங்குகள்' என்று முழங்குவதற்கு நிகரானது. 'எல்லோரும் இலங்கையர்' என்று பெரும்பான்மை இனத்தவர் முழங்குவது முக்கியமில்லை.

சிறுபான்மை இனத்தவர்கள் மனமுவந்து தம்மை 'இலங்கையர்' என்று முழங்குவதற்கு ஏதுவாகப் பெரும்பான்மை இனத்தவர் ஒழுகுவதே முக்கியம். வடக்கு, கிழக்கு, மலையக மக்களை பெரும்பான்மை இனத்தவர் இலங்கையராக மதித்து நடத்துவதே முக்கியம். 'மாற்றம்' பற்றியும் 'தூய இலங்கை' பற்றியும் அரசதிபர் வேறு முழங்கி வருகிறார். அந்த முழக்கத்தில் கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து படைகளை விலக்குவது பற்றியோ குறைப்பது பற்றியோ அவர் மூச்சும் காட்டவில்லை. அவர் மாட்டுக்கு முன்னே வண்டியைப் பூட்டுகிறார். தமது பதவியேற்பு நிகழ்விலும் அமைச்சரவையை அமைத்தபிறகு நாடாளுமன்றத்திலும் இந்தியாவிலும் தூய இலங்கை உரையிலும் அரசதிபர் எதைத் திட்டமிட்டு, வேண்டுமென்றே தவிர்த்துக்கொண்டாரோ, அதுவே இந்த நாட்டின் தலையாய பிரச்சினை.

புதுக்க வரையப்படும் அல்லது தூசுதட்டி எடுக்கப்படும் யாப்பினை, மெருகூட்டப்படும் சட்டங்களை, மாறுவேடம் அணிவிக்கப்படும் நிருவாகத்துறையை, படைத்துறையை, காவற்றுறையைக் கொண்டு நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

'எந்த மனநிலையில் ஒரு பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டதோ, அந்த மனநிலையைக் கொண்டு அப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது' (ஐன்ஸ்டைன்).



mani.velupillai@thaiveedu.com






தமிழகத் தமிழ் மீனவர்களுக்கும், இலங்கை தமிழ் மீனவர்களுக்கும் இடையே மீன் பிடிப்பதில் ஏற்பட்டு வரும் பிரச்சினை, அண்மைக் காலங்களில் இரு நாடுகளுக்கிடையே மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. இதனைத் தமிழ் இனம் சார்ந்த பிரச்சினையாக அல்லாமல், மீனவர் நலன் தொடர்பான பிரச்சினையாகப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியமாகும். மீன் பிடித்தல் என்பது இராமேசுவரம் மீனவர்களினதும், வட இலங்கை தமிழ் மீனவர்களினதும் வாழ்வாதாரத்துடன் பின்னிப் பிணைந்த தொழிலாக இருந்து வருகிறது. இதனால் இவர்கள் இதனைத் தவிர்த்து வேறு தொழில்களுக்கு உடனடியாகச் செல்வதும் சாத்தியமற்ற ஒன்றாகும். எனவே இருபகுதி மீனவர்களும், இரண்டு அரசுகளும் இணைந்து சுமுகமான தீர்வொன்றைக் காண வேண்டியது மிகவும் அவசியமாகும்.

1076 கிலோமீட்டர் நீள கடற்கரையை உள்ளடக்கிய தமிழ் நாட்டில், 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் உள்ளனர். முக்கிய மீன் பிடி நகரங்களாக, கன்னியாகுமரி, இராமேசுவரம், தூத்துக்குடி, நாகர்கோவில், நாகபட்டினம் என்பன உள்ள போதும் இராமேசுவரம், நாகபட்டினம் பகுதிகள், இலங்கை மீனவர்களுடனான பிரச்சினையில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதேபோன்று 1620 கிலோமீட்டர் மீன் பிடி கடற்கரையைக் கொண்ட இலங்கைத் தீவில் 10 லட்சத்திற்கும் அதிகமானோர் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு, நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகித்து வருகின்றனர். இவ்வாறு இரு நாடுகளிலும் மீனவர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இலங்கையின் வட கிழக்கு நீங்கலான ஏனைய கடற்பகுதிகளில் சிங்கள மீனவர்கள் மீன் பிடித்துறையில் ஈடுபட்ட போதும், இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை என்பது, இராமேசுவரம் மற்றும் நாகபட்டினத்திற்கு அண்மித்த, இலங்கையின் தீவுப்பகுதிகள், மற்றும் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மீனவர்களுடனானதாக இருக்கிறது.

இலங்கையின் வட பகுதி இராமேசுவரத்திற்கு மிக அருகாமையில், கடல் வழியில் சுமார் 25 கிலோமீட்டர் எல்லைக்குள் இருப்பதால், அதாவது 22 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ள பாக் ஜலசந்தி, இருபகுதியினதும் மீன்பிடித் தளமாக இருப்பதால் மீனவர் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. 2009-ம் ஆண்டு இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வரும் வரை, இருநாட்டு மீனவர்கள் இடையே விடுதலை அமைப்புகள் பாலமாக இருந்தமையால் பிரச்சினைகள் வரவில்லை. அப்போது, இருவருக்கும் பொது எதிரி இராணுவம். ஆனால் 2009-ல் போர் முடிவுக்கு வந்த பின்னர் இன்றுவரை, இரு நாட்டினதும் அன்றாடப் பிரச்சினையாக, மீனவர் பிரச்சினை மாறியுள்ளது. இலங்கைக் கடற்படையின் கண்காணிப்பு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதும் இதற்கு ஒரு காரணமாகும்.

## கச்சத்தீவு:

கச்சத்தீவை இழந்தமையால், இந்திய மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தமிழக அரசியல் வாதிகள் கூறி வருகின்றனர். இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் கருத்துகளைக் கேட்காது, அவர்களை நாடு கடத்தும், 1964-ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் போன்றே, கச்சத்தீவு ஒப்பந்தமும், மீனவர்கள் கருத்து உள்வாங்கப்படாது, இரு நாட்டு தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகும். அயல் நாட்டுடனான நட்பை வலுப்படுத்தும் வகையில், 1974-ஆம் ஆண்டு பாக் நீரிணைப் பகுதியில் எல்லை பிரிக்கப்படும்போது, இராமேசுவரத்தில் இருந்து 12 மைல் தொலைவில், 285.2 ஏக்கர் பரப்பளவில் இருந்த கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அது மனிதர்கள் வாழாத, பயனற்ற நிலப் பரப்பாகும். அங்கு இந்திய மீனவர்கள் தங்களின் மீன் பிடி வலைகளை உலர்த்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டதுடன், இந்தியர்கள் அங்குள்ள அந்தோனியார் ஆலயத்திற்கு விழாக் காலங்களில் போய் வரலாம் என்றும் கூறப்பட்டது. மற்றபடி கச்சத் தீவு, இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டமையால்தான், இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமை பறிக்கப்பட்டு விட்டதாக கூறுவது ஏற்புடையதல்ல. கச்சத்தீவை சுற்றிய பகுதிகளில் மீன் வளம் நிறைந்து காணப்படுகிறது என்ற கூற்றிலும் உண்மை இல்லை.

கடல் எல்லை என்பது பாக் நீர் பரப்பில் இரு நாடுகளுக்கும் உள்ள தனித்தனியான கடல் உரிமையாகும். தங்களின் ஆளுகைக்கு உட்பட்ட கடற் பரப்பு என்பது, ஒரு நாட்டின் இறை

யாண்மைக்கான எல்லை எனக் கூறப்படுகிறது. அப்பகுதியின் மீன் வளம், கனிம வளம், பெட்ரோலிய ஆய்வு போன்ற அனைத்து விதமான வளங்களும் அந்தந்த நாட்டிற்கே உரியது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச விதியாகும். எனவே கச்சத்தீவை மீளப் பெற்றால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடும் என்பதில் உண்மை இல்லை. அதற்கு வேறு பல காரணங்கள் உள்ளன என்பதைப் புரிந்து கொண்டு, அதன் அடிப்படையில் மீனவர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட கடல் வளத்தை மற்றொரு நாடு வலிமையின் அடிப்படையில் அபகரிக்க, சர்வதேச விதிகள் அனுமதிப்பதில்லை.

1974-ம் ஆண்டு கச்சத்தீவு உடன்படிக்கைக்கு பின்னர் 1976-ஆம் ஆண்டு, இலங்கை அரசு, இலங்கை மீனவர்கள் நலன் கருதி சில சட்ட விதிகளை நிறைவேற்றிக் கொண்டது. அவை இந்திய மீனவர்களுக்குப் பாதகமாகவும் இலங்கை மீனவர்களுக்குச் சாதகமாகவும் அமையலாயின. அதன்படி எல்லை தாண்டி தங்கள் கடல் பகுதியில், மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு ஆறு மாதம் முதல் இரண்டரை வருடங்கள் வரைசிறைத் தண்டனை, விதி மீறும் படகுகளைப் பறிமுதல் செய்தல் போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டன. 1976 உடன்படிக்கையின் படி, வங்காள விரிகுடாப் பகுதியில் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. குறிப்பிட்ட எல்லை வரை தமக்கான இறையாண்மையை, குறிப்பிட்ட நாடுகள் உறுதிப்படுத்திக் கொண்டன. கச்சத்தீவு ஒப்பந்தப்படி, மன்னார் வளைகுடாப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க உரிமை இல்லை என்று கூறப்படுகிறது. இதன் பாதிப்பை அண்மைக் காலங்களில் இந்திய மீனவர்கள் அனுபவிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர் .

### மீன் வளங்கள்:

இந்திய கடற்பகுதியில் குறிப்பாக இராமேசுவரம், நாகப்பட்டினம் போன்ற கடற் பகுதிகளில் போதிய மீன் வளம் இல்லை என்று கூறப்படுகிறது. இரால் போன்ற உயர் தர விலையுள்ள மீன்களின் வளம் மிகவும் குறைவாகும். குறைந்தளவு கடல் ஆழம் அதற்கு ஒரு காரணமாகவும் கூறப்படுகிறது. இந்திய கடற்பகுதியில் மீன் வளம் குறைந்து வருவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மறுபுறம் வட இலங்கையின் தீவுப் பகுதிகளின் கடற் பகுதிகளில், ஏராளமான உயர் தர மீன் வளம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் இந்திய மீனவர்கள், வளமான, நிறைவான மீன்களைத் தேடிப் பயணிக்கும் போது, இந்திய கடல் எல்லையை கடந்து, இலங்கை கடற் பகுதிக்குள் நுழைந்து விடுகின்றனர். இதனால் இலங்கையின் மீன் வளம் அழியும் அபாயத்தில் இருப்பதாகவும், இலங்கை மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### எல்லை தாண்டுதல்:

இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக கடல் தாண்டி, இலங்கைக் கடற் பகுதிகளில் மீன் பிடித்து வருவதாகக் கூறப்படுகிறது. கடல் பரப்பில் மிகவும் அனுபவம் உடைய இந்திய மீனவர்கள், காற்று சுழற்சியில், அரிதான சந்தர்ப்பங்களில் வழி மாறி இலங்கைக் கடற் பகுதிக்குள் செல்வதுண்டு. ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் அறிந்தே, திட்டமிட்டு இலங்கைக் கடற் பகுதிக்குள் மீன் பிடிக்கும் எண்ணத்துடன் சென்று வருவதாக இலங்கை மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதனால் தங்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப் படுவதாகக் கூறும் இலங்கை மீனவர்கள், எல்லை தாண்டி வருவதை மீனவர்களே உணர்ந்து நிறுத்திக் கொள்ள வேண்டும். அல்லது இந்திய அரசு அவர்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி வருகின்றனர். இதற்கு பின்வரும் வழிமுறைகளை கையாளலாம் என்பது அவர்களின் வாதமாகும்.

- தெளிவான எல்லைகளை, மீனவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் வரையறை செய்தல் வேண்டும்.
- இந்திய கடற்படையை அல்லது கடலோரக் காவல் படையை எல்லைகளில் நிறுத்த வேண்டும்.
- படகுகளின் பிரவேசத்தை அறியத்தரும் (sensor) கருவிகளை நிறுவ வேண்டும்.

இவை தவிர அத்து மீறிய பிரவேசத்தைத் தடுக்கும் வகையில், எல்லை தாண்டும் மீனவர்களுக்குக் கடும் தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் அண்மைக் காலங்க



ளில் இலங்கை மீனவர்களால் முன் வைக்கப்பட்டு வருகிறது. இலங்கைப் பகுதியில் போதிய மீன் வளம் இருப்பதால், இலங்கை மீனவர்களுக்கு எல்லை தாண்ட வேண்டிய அவசியம் உருவாகவில்லை என்றும் கூறப்படுகிறது. மறுபுறம் இந்திய பகுதியில் மீன் வளம் குறைந்துவிட்டது என்ற ஒரே காரணத்திற்காக எல்லை தாண்டுவதை அனுமதிக்க முடியாது, என்பது நடுநிலையாளர்களின் கருத்தாகும். கடல் எல்லை என்பது ஒரு நாட்டின் கடல் சார் உயிர் மற்றும் கனிம வளங்களின் மீதும் கடற் பரப்பின் மீதான சட்ட திட்டங்களின் மீதும் அந்நாட்டிற்கு உரித்தான, உரிமையை நிலைநிறுத்திக் கொள்ள சகல உரிமையும் உண்டு என்பதாகும். இந்நிலையில் எல்லை தாண்டிச் செல்வதைத் தடுக்கத் தேவையான வழிமுறைகளை இரு நாடுகளும் உயர் மட்ட பேச்சு வார்த்தைகள் வாயிலாக மேற்கொள்ள வேண்டும்.

### மீன் பிடிக்கும் வழிமுறைகளில் மாற்றம் தேவை:

இலங்கை, இந்திய மீனவர்கள், மீன் பிடித் தொழிலுக்கு வெவ்வேறான உபகரணங்களைப் பயன் படுத்தி வருகின்றனர். குறிப்பிட்ட திறன் படகுகள், வலைகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று உறுதியான சட்டதிட்டங்கள் இன்மையால்,

அவரவர் தகுதிக்கு ஏற்ற மீன் பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இழுவை முறையிலான மீன் பிடி நடவடிக்கைகளில் இந்திய மீனவர்கள் அதிக அளவில் ஈடுபாடு காட்டுவதால், இலங்கைப் பகுதிகளில் கடல் வளம் அழிந்து வருவதாக இலங்கை மீனவர்கள் கூறி வருகின்றனர். எதிர் காலத்தில் தங்களின் வாழ்வாதாரம் முற்றாகவே சீர்குலைந்து விடும் என அச்சம் தெரிவித்து வருகின்றனர். தமிழக மீனவர்கள் இழுவை மடிப் படகை மாற்றி, ஏற்கத்தக்க மாற்றுத் திட்டம் கொண்டு வர வேண்டும் என்பது இலங்கை மீனவர்களின் எதிர்பார்க்கையாகும்.

சுருக்குப் பை போன்ற வடிவில் இருக்கும் மீன் பிடி வலை, 500 அடிக்கு மேல் ஆழம் செல்லும் வகையில் இருப்பதால், கடல் அடியில் இருக்கும் மீன் குஞ்சுகள், மீன் முட்டைகள், சிறிய பெரிய என அனைத்து வகையான மீன்களை அள்ளிவிடும் அபாயம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இரட்டை மடி வலைகளை இந்திய மீனவர்கள் பயன்படுத்தி வருவதால், தங்களின் வாழ்வாதாரம் மட்டுமல்லாமல், தாங்கள் விரித்து வைத்துள்ள வலைகளும் அறுக்கப்பட்டு விடுவதாகவும் இலங்கை மீனவர்கள் வேதனை தெரிவித்து வருகின்றனர். இலங்கை மீனவர்கள் சாதாரணமான வலைகளையும் படகுகளையுமே பயன்படுத்தி வருகின்றனர். இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் ஆற்றலுக்கு, இலங்கை மீனவர்களால் ஒரு போதும் ஈடு கொடுக்க முடியாத நிலை உள்ளது. தங்கள் கிராம மக்களின் ஒரு மாத கால வருமானத்தை, இந்திய மீனவர்கள் ஒரே நாளில் அள்ளிக் கொண்டு போய் விடுவதாக, அண்மையில் தலைமன்னார் மீனவர் ஒருவர் பேட்டி ஒன்றில் கவலையுடன் குறிப்பிட்டுள்ளார். தங்களின் மீன் வளம் மட்டுமல்லாமல், பவளப்பாறைகள், கனிம வளங்கள் போன்றனவும் பாதிப்புக்கு உள்ளாவதாக இலங்கை அரசு, இந்திய அரசிடம் முறையீடு செய்து வருகிறது.

'ஈழ மீனவர்களினது வாழ்வுரிமை குறித்தும் சிந்தியுங்கள்' என்ற பொருளில் இலங்கை, யாழ் மாவட்ட மீன் பிடி கூட்டுறவுச் சங்க பிரதிநிதி திரு. மகேசன் அவர்கள் மிக அண்மையில், செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்திய இழுவைப் படகுகளின் வருகையால், வட இலங்கை மீனவர்கள், கடல் தொழில் செய்ய முடியவில்லை என வேதனை தெரிவித்த அவர், தங்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலையில் வாழ்வதாகவும் மிகுந்த கவலையுடன் குறிப்பிட்டு, இந்திய கடற்படையின் துணையுடன் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனத் தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

2007-ம் ஆண்டு மீனவர் நலவாரியம் அமைத்த தமிழக அரசு, மீனவர்கள், தொழிலாளர்கள் நலன், சமூக பாதுகாப்பு, நல்வாழ்வை உறுதிப்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்கள், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், எனப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மீன் பிடி தடைக்காலங்களில் மீனவர்களுக்குப் பண நிவாரணமும் வழங்கப்படுகிறது. இந் நிலையில் அவர்கள் பாதுகாப்பாக மீன் பிடித் தொழிலைச் செய்து வரும் வகையில் சில வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் அவசியமான ஒன்றாகும். குறிப்பாக இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மீன் பிடி முறைகளில் மாற்றங்கள் அவசியம் என்பதை தமிழக மீனவர்கள் மத்தியில் அறிவுறுத்தி அதனை அமுல் நடத்திடவும் முன் வரவேண்டும். மொழியால் ஒன்றுபட்ட இரு பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட மீனவர் பிரச்சினை, இரு நாடுகளின் அரசியல் பிரச்சினையாக உருமாறுவதற்கு முன்னதாக தீர்க்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## எல்லை தாண்டும் தமிழக மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள்:

இலங்கை இந்திய கடற் பரப்பில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்கள் கடல் எல்லை தாண்டி, இலங்கையின் கடல் பகுதிக்குள் போகும்போது, இலங்கையின் கடற் படையினரால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். குறிப்பாக நேரடி தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். அவர்கள் வசமுள்ள மீன்கள் பறிக்கப்படுகின்றன. படகுகள் சேதப்படுத்தப்படுகின்றன. வலைகளும் சேதப்படுத்தப்படுகின்றன. சில நேரங்களில் துப்பாக்கி பிரயோகமும் நடப்பதுண்டு. சிலர் கைதுக்கு ஆளாகி சிறையில் அடைக்கப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் இவ்வெண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் சிறைச்சாலைகளில் மரியாதைக் குறைவாகவும் நடத்தப்படுகின்றனர். தாக்குதலுக்கும் உள்ளாகின்றனர்.

எல்லை தாண்டும் மீன் பிடியால் வடக்கு மீனவர்களுக்குப் பாதிப்பு எனக் கூறும் இலங்கை கடற்படை தளபதி, அட்மிரல் காஞ்சன பானகொட, கைதுகள் தொடரும் எனவும் கடந்த மாதம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அண்மைக் காலங்களில் இந்தியப் படகுகள் இலங்கை அரசால், பறிமுதல் செய்யப்படுவதுடன், சில படகுகள் அரசுடமையாக்கப்பட்டும் வருகின்றன. இதனால் இந்திய மீனவர்கள் பெரும் இழப்புக்கும் ஆளாகி வருகின்றனர்.

இவ்வாறு சிறை உட்பட பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இந்திய மீனவர்கள் உள்ளாகும்போது இராமேசுவரம் போன்ற மீனவ கிராமங்களில் அமைதியின்மை ஏற்படுகிறது. 1976-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் இலங்கைக்குச் சாதகமாக இருப்பதால், இந்திய மீனவர்கள் மீதான துன்புறுத்தல் தொடர் கதையாக இருக்கிறது. நட்பு நாடு என்ற வகையில் இந்திய மீனவர்களை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டிய பொறுப்பு இலங்கைக்கு உண்டு. இதனால் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகின்றவர்கள் மீனவ தொழிலாளர்களே அன்றி முதலாளிகள் அல்ல. மீனவ தொழிலாளர்கள், விசைப் படகு உரிமையாளர்களாக இல்லை. கடல் தாண்டி இலங்கை கடற்படையினரின் பாதிப்புக்கு உள்ளாகும் இவர்களில் பெரும்பாலானோர் ஏழை மீன் பிடி தொழிலாளர்கள் ஆவர்.

இந்நிலையில் இரு அரசுகளும் மனிதாபிமான அடிப்படையில், இரு பகுதி மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும். இரு நாடுகளும், இரு மீனவ மக்களும் இணைந்து, ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பொதுவான வழிமுறையைக் காண வேண்டியது மிகவும் அவசியமாகும்.



jeyasingh@thaiveedu.com

# போரில் உயிர்தப்பிய முள்ளிவாய்க்கால் மக்கள் ரொஹிங்கியா அகதிகளுக்குப் புரியும் உதவி

ஆங்கிலத்தில் : நுக்கி பர்னாந்து

தமிழில்: மணி வேலுப்பிள்ளை



இலங்கையின் வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்தின் அந்தலையில் அமைந்திருக்கும் கடலோரக் கிராமம் முள்ளிவாய்க்கால். பெரிதும் தமிழ்மக்கள் வாழும் கிராமம். 30 ஆண்டுகளாக நிகழ்ந்த உள்நாட்டுப் போர் குருதிக்களரியில் முடிவடைந்த இடம்.

இறுதிப் போரில் இங்கு படையினரிடம் சரணடைந்தோர் கொல்லப்பட்டதாக அல்லது காணாமல் போக்கடிக்கப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. மேலும் பல்லாயிரக் கணக்கானோர்க்கு நேர்ந்த கதி இன்னும் தெரியவரவில்லை.

போரின்பொழுது முள்ளிவாய்க்கால் கிராமம் உட்பட முல்லைத்தீவு மாவட்ட மக்கள் முற்றுமுழுதாக இடம்பெயர்ந்தனர். எஞ்சியோர் தடுப்பு முகாங்களில், முள்ளுக்கம்பி அடைப்புக்குள் மாதக் கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

ஆண்டுதோறும் மே 18-ம் திகதி (போர் முடிவடைந்த நாளில்) பெருந்தொகையான தமிழ் மக்கள் ஒன்றுகூடி, தமது இழப்புகளை நினைந்து, வருந்தி, போரில் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கோரும் இடமாகவும் முள்ளிவாய்க்கால் விளங்குகிறது. தமிழர்கள் சிலர் பயன்படுத்தும் ‘முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக் கிழமை’ முதலிய சொற்றொடர்களின் தோற்றுவாயும் இதுவே.

மியன்மாரில் இழைக்கப்படும் கொடுமையிலிருந்து உயிர் தப்பி, வெளிநாட்டில் தஞ்சம் கோரும் ரொஹிங்கியா மக்கள் நிரம்பிய படகொன்று 2024 டிசம்பர் 19-ம் திகதி முள்ளிவாய்க்கால் கடற்கரையில் தென்பட்டது. முதன்முதல் அந்தப் படகைக் கண்டு, அவர்களுக்கு உதவியோர் முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த தீபனும், மற்றும் பிற கடலாளர்களுமே.

அவர்களை தீபனின் சிறிய மீன்பிடிப் படகில் சென்று பார்த்தபொழுது, அந்தப் படகில் சிறுவர்கள் உட்படப் பலர் இருப்பதைக் கண்டார்கள். ஒருசிலர் நிற்பதையும், பலர் சாய்ந்து கிடப்பதையும் கண்டார்கள். படகு வாந்தியும் குருதியுமாய் காணப்பட்டது. மொழித்தடங்கலால் இவர்களை அவர்களோ, அவர்களை இவர்களோ புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும் அவர்களுள் பலர் ‘hospital!’ என்று கத்தியது இவர்கள் காதில் விழுந்தது.

‘அந்தப் படகில் இருந்தவர்கள், குறிப்பாகச் சிறுவர்கள், கரைக்குக் கரையிறங்க விரும்புவது போல் தென்பட்டது; நானும் கிராம வாசிகள் பலரும் படகில் இருந்தவர்களைக் கரைக்குக் கொண்டுவந்து பராமரிக்க விரும்பினோம்; எனது படகில் பத்துப் பத்துப் பேராக அவர்களைக் கரைசேர்த்திருக்க முடியும்; ஆனால் சட்ட விளைவுகளை எண்ணிக் கவலைப்பட்டேன்’ என்கிறார் தீபன்.

முல்லைத்தீவைச் சேர்ந்த கடலாளர் பாஸ்கரனும் படகில் சென்று ரொஹிங்கியா மக்களைச் சந்தித்தார். அடைக்கலப் படகில் இருந்தவர்களைக் கரைக்குக் கொண்டுவரும்படி தீபனும் பாஸ்கரனும் கடற்படையினரிடம் கேட்டார்கள். அதற்குத் தமது மேலதிகாரிகளின் அனுமதி இல்லை என்று சொல்லி கடற்படையினர் கைவிரித்துவிட்டனர்.

தீபன் ஒரு மருத்துவரையும், இரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களையும் தனது படகில் ஏற்றி, அவர்களையும் தமது படகில் வந்த கடற்படையினரையும் அடைக்கலப் படகுக்கு அழைத்துச் சென்றார். ஒரு நோயாளர் ஊர்தியும் கரையில் காத்திருந்தது. அடைக்கலப் படகிலிருந்து எவரும் கரைக்குக் கொண்டுவரப்படாதபடியால், அந்த நோயாளர் ஊர்தி பயன்படுத்தப்படவில்லை.

கடலாளர்கள் அடைக்கலப் படகில் இருந்தவர்களுக்கு உணவும், தண்ணீரும் குளுக்கோசும் எடுத்துச் சென்றார்கள். பட்டினி கிடப்பவர்கள் போல் தென்பட்ட அடைக்கலப் படகினர் உணவுப்பொருட்களை நன்றியுணர்வோடு பெற்றுக்கொண்டதாகவும் கடலாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

தீபனும் மற்றும் சிலரும் கிட்டத்தட்ட 20 தடவைகள் ரொஹிங்கிய மக்களைச் சென்று சந்தித்திருக்கிறார்கள். அடைக்கலப் படகுச் செய்தி அறிந்து தூரத்து மக்களும் உணவு கொண்டுவரத் தொடங்கினார்கள்.

கடற்படையினர் தஞ்சப் படகைத் திருகோணமலைக்கு இட்

டுச் செல்ல முற்பட்டபொழுது, புதுக்குடியிருப்பிலிருந்து சிலர் கொண்டு வந்த உணவை தீபன் எடுத்துச் சென்று கடற்படையினரிடம் கையளித்தார்.

தமது பிழைப்பைக் கெடுக்கும் இந்திய இழுவைப்படகுகள் குறித்து தீபனும் பாஸ்கரனும் மனத்தாங்கல் கொண்டிருக்கிறார்கள். எனினும் ரோஹிங்கியா மக்கள் கொடுமையிலிருந்து தப்பியோடி வந்தவர்கள், அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது என்ற நம்பிக்கையில் தீபனும் பாஸ்கரனும் அவர்களை அரவணைத்து, பராமரித்தார்கள்.

அடைக்கலம் தேடிப் புறப்பட்ட ரொஹிங்கிய மக்கள் ஏற்கனவே இரண்டு மூன்று கிழமைகளாகக் கடலில் தத்தளித்தவர்



கள். எனினும் டிசம்பர் 19-ம் திகதி அன்று பெரிதும் கடலில் தான் அவர்கள் விட்டுவைக்கப்பட்டார்கள். அன்றிரவு கடற்படையினர் அடைக்கலப் படகைத் திருகோணமலைக்கு இட்டுச் சென்றார்கள். டிசம்பர் 20-ம் திகதி காலை அவர்கள் தரையிறங்க அனுமதிக்கப்பட்டார்கள்.

திருகோணமலையில் பணியாற்றும் அரசாங்க அதிகாரிகளும், பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் உணவு, உடை, உடல்நல சேவை அளித்தார்கள். ஒரு சில ரொஹிங்கியர்களுடன் உரையாடும் வாய்ப்பு உள்ளூர் ஊடகர் அமரஜீவாவுக்குக் கிடைத்தது. அவர்கள் பசித்துக் களைத்து அலுத்துப்போய் இருப்பதாகவும், சில பெண்களும், சிறுவர்களும் நாவறண்டு, நடக்க முடியாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அவர்கள் 16 நாட்கள் துப்பரவு குன்றிய படகில் தத்தளித்தவர்கள் அல்லவா?

'நாங்கள் மூன்று படகுகளில் புறப்பட்டோம்; இரண்டு தகர்ந்து போயின; அவற்றில் இருந்தவர்களும் எங்கள் படகில் ஏறிக் கொண்டார்கள். இடைவழியில் 6 பேர் இறந்துவிட்டார்கள். இறந்தவர்களின் உடல்கள் கடலில் வீசப்பட்டன' என்றார் அகதி ஒருவர்.

'மியன்மாரில் இனப்பிரச்சினை நடப்பதால் நான் வீட்டைவிட்டு வெளியேறினேன். மியன்மார் படையினருக்கு இலஞ்சம் கொடுத்து, சட்டவிரோதமாக நாட்டைவிட்டு வெளியேறினேன்' என்றார் இன்னோர் அகதி.

'எனது கிராமத்தின் மீது குண்டு பொழியப்பட்டதால், நான் உயிர்காக்க நாட்டை விட்டு வெளியேறினேன்' என்றார் மற்றோர் அகதி.

'எனது கிராமத்தில் தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்ட பிறகு, என் உயிருக்கு ஆபத்து விளையும் என அஞ்சி வெளியேறினேன்' என்றார் வேறோர் அகதி.

வெவ்வேறு நாடுகளில் குடிபுகுந்துள்ள ரொஹிங்கியா நண்பர்களும், யாழ்ப்பாணக் கடல் வலயத்தில் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு, ஏறத்தாழ ஈராண்டுகளாக இலங்கையில் தற்காலிகமாக வசிக்கும் ரொஹிங்கியா அகதிகளும் ஏற்கனவே இலங்கையில் என்னிடம் தெரிவித்த கதைகளுடன் இக்கதைகளும் ஒத்துப்போகின்றன.

ஏற்கனவே இலங்கையில் பருமட்டாக 100 ரொஹிங்கியா அகதிகள் இருக்கின்றார்கள். வங்காளதேசத்தில் கிட்டத்தட்ட 10 இலட்சம் ரொஹிங்கியர்கள் தங்கியிருக்கிறார்கள். தற்பொழுது சர்வதேய நீதிமன்றில் ஓர் இனப்படுகொலை வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது. மியன்மாரில் ரொஹிங்கியர்கள் கொடுமைக்கு உள்ளாவதாகக் குற்றஞ்சாட்டி கம்பியா தொடுத்த வழக்கு அது.

## தடுத்துவைப்பும் திருப்பியனுப்பும் சாத்தியமும்:

அடைக்கலம் கோரிய ரொஹிங்கிய மக்களை திருகோணமலையில் 3 நாட்கள் தடுத்து வைத்திருந்து, டிசம்பர் 23-ம் திகதி முல்லைத்தீவுக்கு திருப்பிக் கொண்டுவந்து, ஒரு வான் படை முகாமில் அடைத்து வைத்திருக்கிறார்கள்.

தானும் கிராமவாசிகளும் அவர்களைச் சந்திக்க விரும்புவதாகவும், அதற்கு அதிகாரிகளின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கிறார் தீபன். தான் பல தடவைகள் அவர்களைக் கடலில் சந்தித்தபடியால், அகதிகள் சிலருக்கு தன்னை நினைவிருக்கும் என்றும் கூறினார்.

முல்லைத்தீவு வியாபாரிகள் அவசர பொருளுதவி புரியத் துணைநின்றதாக உள்ளூர் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். உள்ளூர் வாசிகள் சிலர் தடுப்பு நிலையத்துக்குச் சென்று, அகதிகளுக்குத் தேவைப்படுபவற்றை விசாரித்தபொழுது, அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

நானும் வேறு சில ஊடகர்களும் தடுப்பு நிலையத்துக்குச் சென்றபொழுது, குடிவரவு அதிகரிகளின் அனுமதியின்றி தஞ்சக் கோரிக்கையாளர்களைச் சந்திக்க முடியாது என்று வான் படை அதிகாரிகள் தெரிவித்தார்கள். குடிவரவு அதிகரிகள் அங்கே இல்லை. அவர்களது அதிகாரபூர்வமான இணையதளத்தில் உள்ள தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்தி தொடர்பு கொண்டபொழுதும் பதில் கிடைக்கவில்லை.

அதற்குப் பல நாட்களுக்கு முன்னரே குடிவரவு ஆணையாளருக்கும், பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கும் நாங்கள் எழுத்தில் தகவல் தெரிவித்திருந்தோம். பல தடவைகள் தொலைபேசியிலும் அழைத்திருந்தோம். பதில் இல்லை.

டிசம்பர் 26-ம் திகதி இலங்கை மனித உரிமை ஆணையத்தின் அதிகாரிகள் தடுப்பு நிலையத்துக்குச் சென்றபொழுது, அகதிகளைச் சந்திக்க அவர்கள் கூட அனுமதிக்கப்படவில்லை. படகில் வந்தவர்களைப் பதிவுசெய்து, அவர்களது அடைக்கலக் கோரிக்கைகளைப் பரிசீலிக்க அனுமதியை எதிர்பார்த்து ஐ.நா. அகதிகள் உயர் ஆணையாளர் கூடக் காத்திருக்கிறார்.

‘ரொஹிங்கியர்களின் இலக்கு மலேசியாவாக அல்லது இந்தோனேசியாவாக இருக்கலாம்; வானிலை அவர்களை இலங்கையை நோக்கித் தள்ளியிருக்கலாம்’ என்றார் கடற்படையின் தகவலாளர். ‘நாங்கள் திக்குத் திசை தெரியாமல் போய்க்கொண்டிருந்தோம். அப்பொழுது பயணத்தைப் பத்திரமாக முடிப்பதே எங்களது ஒரே நோக்கமாய் இருந்தது’ என்று திருகோணமலையில் வைத்து ஊடகர் அமரஜீவாவிடம் கூறினார் ஒரு தஞ்சக் கோரிக்கையாளர்.

இதற்கிடையே, ‘ரொஹிங்கியர்களின் வருகை ஓர் ஆட்கடத்தல் அலுவல்; அவர்களை அகதிகள் (அல்லது தஞ்சக் கோரிக்கையாளர்கள்) என்று கொள்ள இதுவரை ஆதாரம் கிடைக்கவில்லை’ என பொது பதுகாப்பு அமைச்சர் தெரிவித்ததாக ஜனவரி 3-ம் திகதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அவர்கள் மியன்மாருக்குத் திருப்பி அனுப்பப்படலாம்; அவர்களின் விபரங்கள் கூட மியன்மார் அரசாங்கத்துடன் பகிரப்பட்டன; அந்த அரசாங்கத்துடன் கலந்துரையாடல் நடக்கிறது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் பிற தரப்பினரும் அமைச்சரின் கூற்றினைக் கண்டித்து, கேள்வி எழுப்பியுள்ளார்கள். ஜனவரி 9-ம் திகதி காலை வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவும், பொது அமைப்புகளும், மக்களும் ஒருங்கிணைந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு வெளியே கூடி, ரொஹிங்கியர்களைத் திருப்பியனுப்ப வேண்டாம் என்றும் அவர்களை சர்வதேய சட்டத்தின்படி நடத்தவேண்டும் என்றும் கோரி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

அவர்களை வான்படை முகாமில் வைத்திருப்பதை விட, குடித்துறை நிருவாகத்தின் மேற்பார்வையில் வைத்திருப்பதே நல்லது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ரொஹிங்கியர்களைத் திருப்பியனுப்புவதையும் படைமுகாமில் தடுத்து வைத்திருப்பதையும் ஆட்சேபித்து ஜனவரி 10-ம் திகதி கொழும்பிலும் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஜனவரி 10-ம் திகதி திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் அந்த வழக்குக் கூப்பிடப்பட்டபொழுது, காவல்துறையினர் புலன்விசாரணைக்கு அவகாசம் கேட்டார்கள். தடுத்து வைக்கப்பட்ட மக்களைச் சந்திக்க சட்டவாளர்கள் அனுமதி கோரினார்கள். ஜனவரி 31-ம் திகதி அடுத்த தவணைக்கு வரும்படி வான்படை அதிகாரிகளுக்கும், குடிவரவு அதிகாரிகளுக்கும் நீதிவான் அழைப்பாணை விடுத்துள்ளார்.

## தடுத்துவைத்துத் திருப்பியனுப்புவதா? மனிதாபிமான அடிப்படையில் ஆதரித்துப் பராமரிப்பதா?

எவரும் அடைக்கலம் கோரும் உரிமைக்கு உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் 14-ம் உறுப்புரை உத்தரவாதம் அளிக்கிறது. தகுந்த ஆதாரங்களுடன் தமது தாயகத்தில் கொடுமைக்கு அஞ்சுவோரை அங்கு திருப்பி அனுப்புவதைச் சர்வதேய வழமைச் சட்ட நெறிகள் தடுக்கின்றன.

கொடுமைக்கு உள்ளாகுவதிலிருந்து தப்பிப்பிழைத்து பாதுகாப்புத் தேடி வந்தவர்களாகவே ரொஹிங்கிய மக்களைத் தீபனும் பாஸ்கரனும் உள்ளூர் மக்களும் கருதுகிறார்கள். அரசாங்கம் அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்று அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள். அப்படி ஓர் இலட்சம் மக்கள் வரக்கூடும் என்று அமைச்சர் அஞ்சுவது பற்றி வினவியபொழுது, ‘உயிர்காக்க எங்கிருந்து வருவோர்க்கும் உதவிபுரிய வேண்டும்’ என்றார் பாஸ்கரன்.

முள்ளிவாய்க்கால் கிராமவாசிகளால் இவர்களுக்கு இடவசதி கொடுத்து உணவளிக்க முடியும்; ஆனாலும் உடனலம் உட்பட மற்றைய தேவைகளை அரசாங்கமே கவனிக்க வேண்டும் என்றார் திலீபன். போரின்பொழுது தரைப்படை, வான்படைகளின் குண்டுவீச்சிலிருந்து உயிர்தப்ப முயன்று, நிலவரண்களில் பதுங்கி, இடம்பெயர்ந்து, பட்டினிகிடந்து, தாங்கள் பட்டறிந்ததை யெல்லாம் வேதனையுடன் அவர்கள் நினைவு கூர்ந்தார்கள்.

இலங்கை வந்த ரொஹிங்கிய மக்களின் துன்பத்தைப் புரிந்துகொள்வதற்கு தமது பட்டறிவு உதவுவதாகவும், அவர்களுக்கு பரிவுகாட்ட ஊக்குவதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். ரொஹிங்கிய மக்களைக் கடலில் சந்தித்து, பரிவுடன் செய்தி வெளியிட்ட உள்ளூர் ஊடகர்களும் போரின்பொழுது தாம் பட்ட பாடுகளை நினைவு கூர்ந்தார்கள்.

கொடுமையிலிருந்து உயிர்தப்பித் தமது கடற்கரைக்கு வந்த முன்பின் தெரியாதவர்களை வரவேற்ற முள்ளிவய்க்கால் மக்களின் உணர்வும் கனிவும் இதயமும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், நாட்டு மக்கள் அனைவரும் கடைப்பிடிக்கத்தக்க எடுத்துக்காட்டுகளாய் அமையத்தக்கவை.

Ruki Fernando, Daily Mirror, 2025-01-11, translated by Mani Velupillai, 2025-01-12.
https://www.dailymirror.lk/opinion/Residents-of-Mullivaikkal-provide-support-and-show-solidarity-to-Rohingya-asylum-seekers/172-299957



mani.velupillai@thaiveedu.com

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் : இஸ்ரேலை இன அழிப்புக்கான தண்டனையிலிருந்து பாதுகாக்கும் முனைப்பு

– ரூபன் சிவராஜா

**சர்வதேச நீதிமன்றம் (ICJ) மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) ஆகியன வெவ்வேறு தனித்தனி வகிபாகம், ஆணைகள், அதிகாரங்களுடனான சுயாதீன நிறுவனங்கள் எனும் போதும் – இஸ்ரேல் தொடர்பான ICC–இன் கைது ஆணைக்கான விண்ணப்பமும் ICJ–இன் தொடர்ச்சியான பல சுற்று உத்தரவுகளும் இணைந்து இஸ்ரேலின் திட்டமிட்ட இன அழிப்புப் போரை அம்பலப்படுத்துகின்றன.**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிராக அமெரிக்க காங்கிரசின் பிரதிநிதிகள் சபையில் (House of Representatives) ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது போர்க் குற்றத் தண்டனைகளிலிருந்து இஸ்ரேலைப் பாதுகாப்பதற்கான தீர்மானம். 2024-மே மாதம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் ஜொவ் கல்லண்ட் ஆகியோருக்கு எதிராக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் (International Crimila Court - ICC) சிரேஸ்ர வழக்கறிஞர் காரிம் கானினால் (Karim Khan) கைது ஆணை கோரப்பட்டிருந்தது. அதற்கு எதிரானதே அண்மைய அமெரிக்கத் தீர்மானம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைப் புறக்கணிக்கின்ற, தண்டிக்கின்ற, அதன் மீது தடைகளை விதிக்கின்ற வகையிலானது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு உதவுபவர்களின் சொத்துக்களை முடக்குவது, நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்குபவர்களுக்கு அமெரிக்க விசா மறுப்பது ஆகியவை தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தண்டனைகளாகும். ‘ஒரு கங்காரு நீதிமன்றம் எங்கள் மகத்தான நட்புசக்தியான இஸ்ரேலின் பிரதமரை கைது செய்ய முயற்சிக்கிறது என்பதால் அமெரிக்கா இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறது’ என குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் சபையின் வெளிவிவகாரக் குழுவின் தலைவர் Brian Mast வாக்களிப்பின் பின்னர் தெரிவித்துள்ளார்.

## ICC, ICJ: இரண்டு சர்வதேச நீதி அமைப்புகள்:

சர்வதேச நீதி சார்ந்து இரண்டு நீதிமன்ற அமைப்புகள் உள்ளன. ஒன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (Internatinal Criminal Court - ICC), மற்றையது சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice - ICJ). இரண்டினதும் வகிபாகம் அதிகார வரையறை, கையாளும் வழக்குகளின் தன்மைகளில் வேறுபாடுகள் உள்ளன. அவை குறித்து எனது முன்னைய சில கட்டுரைகளில் விரிவாக எழுதியுள்ளேன். இறுதியாக ‘சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேல் போர்க்குற்றவாளிகள் மீது கைது ஆணை விண்ணப்பம்’ எனும் தலைப்பில் எழுதி, தாய்வீடு ஜூன் 2024-இல் வெளிவந்த கட்டுரையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC), சர்வதேச நீதிமன்றம் (IJC) ஆகியவற்றின் நீதி வழங்கல் அதிகாரம், வகிபாகம், குறைபாடுகள் குறித்த பார்வை உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு சர்வதேச நீதிமன்றங்களிலும் பலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் போர்க்குற்றங்களுக்கு எதிரான வழக்குகள் உள்ளன. சர்வதேச நீதிமன்றத்தில் 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் தென்-ஆபிரிக்கா, இஸ்ரேல் மீது தொடுத்த இன அழிப்பு, போர்க்குற்ற வழக்கினைச் சர்வதேச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) வழக்கறிஞர் காரீம் கான் (Karim Khan) இஸ்ரேல் தலைவர்களுக்கு எதிரான கைது ஆணைக் கோரிக்கையை 2024 மே மாதம் விண்ணப்பித்திருந்தார்.

## போர்க்குற்றங்கள் – மனிதத்திற்கெதிரான குற்றங்கள் – ICC விசாரணை:

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்தன்மைக்கெதிரான குற்றங்கள் குறித்த விசாரணைகள் முதலில் 2021-ம் ஆண்டு ICC வழக்கறிஞர் ஃபதூ பென்சூடாவினால் தொடங்கப்பட்டன. அந்த விசாரணை, 2024 மே மாதம் வழக்கறிஞர் கரிம் கான் (Karim Khan), இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் ஜோவ் கல்லன்ட், ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே உட்பட்ட மூன்று தலைவர்கள் மீதான கைது ஆணை பிறப்பிக்கப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது. இஸ்மைல் ஹனியே இஸ்ரேலியப் படைகளினால் 2024 ஜூலை மாதம் ஈரான் தலைநகர் தெஹரானில் கொல்லப்பட்டார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) கோரலில் பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் இன அழிப்புப் பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை. ஆனால் சர்வதேச நீதிமன்றத்தில் (IJC) இஸ்ரேலுக்கு எதிராகத் தென்னாபிரிக்கா கொண்டு

வந்த வழக்கில் பலஸ்தீனத்திற்கு எதிரான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இன அழிப்பு முன்னெடுக்கப்படுவதாகக் குற்றம் சாட்டியிருந்தது. மக்களைக் கொன்றழிப்பதோடு உள மற்றும் உடல் ரீதியான சேதங்களையும் வாழ்வைப் பாதிக்கும் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவருவதாகவும் வாதங்களை முன்வைத்திருந்தது. குழந்தை பிறப்பதனைத் தடுக்கும் செயல்களையும் இஸ்ரேல் மேற்கொண்டுவருவதாகத் தென்னாபிரிக்காவின் வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஐ.நா-வின் இன அழிப்புக்கு எதிரான சாசனத்தின் படி காசாவின் மக்களைத் தேசிய, இனத்துவ, மதக்குழு அடிப்படைகளில் முழுமையாகவோ, பகுதியாகவோ அழித்தொழிக்கும் நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் எனவும் தென்னாபிரிக்கா வலியுறுத்தியிருந்தது.

## மீள முடியாத பாதிப்பும் உடனடி ஆபத்தும்:

பலஸ்தீனர்களை இனப்படுகொலைகளிலிருந்து பாதுகாக்கும் உரிமைக்கு ‘மீள முடியாத பாதிப்பு ஏற்படுவதற்கான உண்மையான மற்றும் உடனடி ஆபத்து உள்ளது - A real and imminent risk that irreparable prejudice will be caused to the right of Palestinians in Gaza to be protected from genocide’ என்பதை 2024 ஜனவரியில் சர்வதேச நீதிமன்றம் கண்டறிந்து வெளிப்படுத்தியது. இஸ்ரேலானது காசாவில் இனப்படுகொலை செய்கிறது அல்லது செய்யப்போகிறது என்பதான தீவிர ஆபத்து உள்ளது என்றும் நீதிமன்றம் தீர்மானித்தது.

சர்வதேச நீதிமன்றத்தின் இந்த அறிவிப்பு முக்கியமானது. ஏனெனில் இது இனப்படுகொலைக்கு எதிரான சர்வதேச தீர்மானத்தில் கைச்சாத்திட்டுள்ள உலகின் 152 நாடுகளுக்கு முன்னுள்ள கடமையை நினைவுபடுத்தவும் வலியுறுத்தவும் கூடியது. இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கு இந்த உலக நாடுகள் அனைத்தும் தம்மால் இயலுமான வரையில் தமது சட்டபூர்வ அதிகாரத்தை அதற்காகப் பயன்படுத்தக் கடப்பாடுடையன. 2007-ம் ஆண்டு போஸ்னிய இனப்படுகொலை சார்ந்த வழக்கில் சர்வதேச நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு சர்வதேச ஆதரவு இருந்தது. 1990-களில் பால்கன் (Balkan) போரின் போது போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினாவின் ஸ்ரெப்ரெனிகா நகரில் 7,000-க்கும் மேற்பட்ட போஸ்னிய முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தடுக்க தவறியதற்காக சேர்பியாவைக் குற்றவாளியாக அறிவித்தது சர்வதேச நீதிமன்றம். அத்தோடு முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான ஐ.நா. சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் (UN International Criminal Tribunal for the former Yugoslavia – ICTY) சேர்பிய இராணுவக் கட்டளைத்தளபதி ராட்கோ ம்லாடிசை (Ratko Mladić) முன்னிலைப்படுத்தத் தவறியதற்காக சேர்பியா மீது கடமைமீறல் தீர்ப்பினையும் நீதிமன்றம் வழங்கியது.

## சர்வதேச நீதிமன்ற அறிக்கை: அழுத்தக் கருவி:

இஸ்ரேலின் இனப்படுகொலைகள் தொடர்பான சர்வதேச நீதிமன்ற அறிக்கையானது, இஸ்ரேலுடன் வலுவான அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ உறவுகளைக் கொண்டுள்ள நாடுகளுக்கானதொரு அழுத்தக் கருவியாகவும் நோக்கக் கூடியது. 2024 மார்ச் மாதம் ஜேர்மனிக்கு எதிராக ICJ-ல் நிகரகுவா, ஒரு வழக்கைக் கொண்டு வந்தது. இஸ்ரேலுடன் நெருங்கிய உறவினைக் கொண்டுள்ள அரசாக ஜேர்மனி, காசாவில் இனப்படுகொலைகளைத் தடுக்கவேண்டிய தனது கடமையிலிருந்து தவறிவிட்டது என்பது நிகரகுவா முன்வைத்த குற்றச்சாட்டாகும். இஸ்ரேலுக்கு அரசியல், நிதி மற்றும் இராணுவ ஆதரவை முழுமையாக ஜேர்மன் வழங்கிவருகிறது. அத்தகைய ஆதரவு இனப்படுகொலை மற்றும் வேறு பல சர்வதேச சட்ட மீறல்களாக வரையறுக்கப்படும் இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பதாக அமையும் என்று தெரிந்துகொண்டும் ஜேர்மன் அத்தகைய தளங்களிலான ஆதரவை இஸ்ரேலுக்கு வழங்கிவருவதை நிகரகுவா தாக்கல்செய்த வழக்கில் முன்வைத்துள்ளது.

நிகரகுவா தொடுத்த வழக்கு சர்வதேச ஊடகக் கவனத்தைப்




பெறவில்லை. ஆனால் இது உண்மையில் அரசியல், இராஜதந்திர, இராணுவ மற்றும் இதர வகையான பொருளாதரவை இஸ்ரேலுக்கு வழங்கும் உலக நாடுகளுக்கு மிகப்பெரிய சட்ட விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு.

நிகரகுவாவுக்குப் பதிலளிக்கையில், ஜெர்மனி தனது ‘வலுவான’ உள்நாட்டு உரிமம் வழங்கும் நடைமுறையை நம்பியது, ஏனெனில் ஏற்றுமதிக்கு உரிமம் வழங்கப்பட்ட பொருட்கள் ‘இனப்படுகொலை, மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்கள் அல்லது ஜெனீவா ஒப்பந்தங்களின் கடுமையான மீறல்களில் பயன்படுத்தப்படும்’ என்ற தெளிவான ஆபத்து உள்ளதா என்பதைக் ‘கவனமாக மதிப்பீடு செய்கிறது’ என்று வாதிட்டது. ஜெர்மன் அரசாங்கத்திற்கு எதிராக இடைக்கால நடவடிக்கைகளை உத்தரவிட ICJ மறுத்ததால், ஜெர்மனியின் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது.

1998-ல் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற உருவாக்கம் நிகழ்ந்த போது (ரோம் தீர்மானம் - Rome Statute) எதிராக வாக்களித்த 7 நாடுகளில் ஒன்றாக அமெரிக்கா இருந்தது. சீனா, ஈராக், லிபியா, யெமன், கத்தார் மற்றும் இஸ்ரேல் ஆகியனவும் எதிர்த்து வாக்களித்தன. சர்வதேச நீதி மன்றத்திற்கு எதிரான அமெரிக்காவின் (புஷ் நிர்வாகத்தின்) ஒவ்வாமை 2002-இல் பெரிதும் அதிகரித்தது. அமெரிக்காவின் தலையைக் குடைந்த முக்கிய அம்சம் ICC தனது சட்ட ரீதியான அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்க இராணுவ, அரசியல் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு எதிராக அரசியல் நோக்கமுள்ள விசாரணைகள் மற்றும் வழக்குகளை நடத்த எத்தனிக்கும் என்பதாகும்.

## அமெரிக்கத் தீர்மானம்:

'அங்கீகாரமற்ற நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிர் நடவடிக்கை - Illegitimate Court Counteraction Act' என்ற அமெரிக்கத் தீர்மானத்திற்கு ஆதரவாக 243 உறுப்பினர்களும் எதிராக 140 உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். இவ்வாக்குகளில் 198 குடியரசுக் கட்சி உறுப்பினர்களினதாகும் 45 வாக்குகள் ஜனநாயகக் கட்சியினருடையவை. ஒரு குடியரசுக் கட்சி உறுப்பினர்கூட எதிராக வாக்களிக்கவில்லை. அடுத்து இந்தத் தீர்மானம் செனற் (Senate) சபைக்குப் போகிறது. செனற் சபையில் குடியரசுக் கட்சியே பெரும்பான்மையக் கொண்டுள்ளது. அங்கு அத்தீர்மானம் நிறைவேற்றப்படும் வாய்ப்புகளே அதிகம் உள்ளன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களைத் தண்டிக்க இந்தத் தீர்மான உள்ளடக்கம் அதிகாரம் வழங்குகிறது. ICC இன் வகிபாகத்தை ஏற்றுக்கொள்ளாத அமெரிக்காவின் நட்புறவு நாடுகளைச் சேர்ந்த பிரஜை மற்றும் அமெரிக்கப் பிரஜைகளை நோக்கி இச்சட்டம் பாயும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய காங்கிரஸ் அமைக்கப்பட்டதை அடுத்து நடைபெற்ற முதலாவது வாக்கெடுப்பிலேயே, காசாவில் இஸ்ரேல் நடாத்திவரும் பலஸ்தீனர்களுக்கு எதிரான போருக்கு அமெரிக்கா வலுவான ஆதரவின் வெளிப்பாடே இந்தத் தீர்மானம்.

## காசா எதிர்கொள்ளும் பேரழிவு:

கடந்த 2023 ஒக்ரோபரிலிருந்து காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் போரில் இதுவரை குறைந்தது 47,000 பாலஸ்தீனர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. அவர்களில் 14,000 பேர் குழந்தைகள். 110,642 வரையானவர்கள் காயமடைந்துள்ளனர். 1.9 மில்லியன் பலஸ்தீனர்கள் காசாவில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். இது மக்கள் தொகையின் 80 சதவிகிதத்தை விட அதிகமாகும் என ஐநாவின் பலஸ்தீன அகதிகளுக்கான உதவி அமைப்பு (United Nations Relief and Works Agency For Palestine Refugees in the near east – UNRWA) காசா நிலைமை குறித்த அண்மைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல்-பாலஸ்தீன விவகார விசாரணைகளை மந்தகதியில் முன்னெடுப்பதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது விமர்சனங்கள் நிலவிவந்தன. காசா மீது இஸ்ரேல் முழுமூச்சாகக் கொடூரமான போரைக் கட்டவிழ்த்துவிட்டதை அடுத்து விசாரணைகள் வேகப்படுத்தப்பட்டன. இதற்கிடையில், இஸ்ரேல் மற்றும் அதன் ஆதரவுச்சக்திகள் ICC இன் பிரதான வழக்கறிஞர் கரிம் கானுக்கு மிகுந்த அழுத்தம் கொடுத்துள்ளன.

## நீதிமன்றிற்கு 'மொசாட்' அச்சுறுத்தல்:

இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பான மொசாட் (Mossad) தலைவர் ஜொசி கோஹென் (Yossi Cohen) போர்க்குற்ற விசாரணைக்கு எதிராக சர்வதேச நீதி மன்ற வழக்கறிஞரை நேரடியாக மிரட்டியுள்ளார். இந்தத் தகவலை கடந்த ஆண்டு The Guardian பத்திரிகை அம்பலப்படுத்தியிருந்தது (The Guardian, 28.05.2024). பலஸ்தீன விசாரணையைக் கைவிட வேண்டுமென ஃபதூ பென்சூடா (Fatou Bensouda) அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் இரகசியத் திட்டத்தில் கோஹென் நேரடியாக ஈடுபட்டார். இவர் மட்டுமல்ல சர்வதேச நீதிமன்ற விசாரணைக்குழுவின் நீதிபதிகள் மற்றும் பல வழக்கறிஞர்களை இஸ்ரேல் அச்சுறுத்தியுள்ளது என்ற செய்தி பல மட்டங்களிலிருந்து கசிந்துள்ளது.

*'நீங்கள் எங்களுக்கு உதவினால், உங்களை நாம் பாதுகாப்போம். உங்களினதும் உங்கள் குடும்பத்தினதும் பாதுகாப்பிற்கு ஆபத்துகளை விளைவிக்கும் செயலில் நீங்கள் ஈடுபடுவது நல்லதல்ல'* என ஜொசி கோஹென் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பென்சூடாவிடம் கூறியுள்ளார். 2015-ம் ஆண்டு பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் போர்க்குற்ற நடவடிக்கைகள் பற்றிய ஆரம்ப விசாரணைகளைச் சர்வதேச நீதி மன்றம் தொடங்கியது. அப்போதிலிருந்து, 2021-ல் விசாரணை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்படும் வரை, மொசாட் தலைவரின் அணுகுமுறை தொடர் மிரட்டலாக மாறியதாக The Guardian விபரித்திருந்தது.

## தீர்மானத்தை நிராகரிக்குமாறு மனித உரிமை அமைப்புகள் கோரல்:

சர்வதேச நீதிமன்றத்திற்கு எதிரான தீர்மானத்தை நிராகரிக்குமாறு பல்வேறு மனித உரிமை அமைப்புகள் பதவி முடிவடையவுள்ள ஜனாதிபதி ஜோ பைடனுக்குக் கடிதம் அனுப்பியிருந்தனர். 'ICC-இற்கு எதிரான செயற்பாடுகள், உலகளாவிய அளவில் பாதிக்கப்பட்ட அனைவரின் நலன்களுக்கும் குந்தகம் விளைவிப்பதோடு, மனித உரிமைகள் மற்றும் நீதி சார்ந்து அமெரிக்க நிலைப்பாடுகளுக்கும் சேதங்களை ஏற்படுத்தும்' என்று அக்குழுக்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தன. இந்த வாக்கெடுப்பிற்கு முன், மற்றொரு மனித உரிமை அமைப்புகளின் கூட்டமைப்பு, 'சுயாதீன நீதித்துறை நிறுவனங்களுக்கு எதிரான தாக்குதல்' என அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் தீர்மானத்தைக் கண்டித்துக் கடிதம் ஒன்றை வெளியிட்டது.

இஸ்ரேல் விவகாரத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிராகச் செயற்படுவதானது, நீதிமன்றத்தின் அனைத்து விசார ணைகளிலும் நீதி பெறமுனையும் பாதிக்கப்பட்ட தரப்புகளின் முனைப்புகளை ஆபத்துக்குள்ளாக்குகிறது. அத்தோடு பிற சூழல்களில் புறக்கணிப்புக் கருவிகளின் நம்பகத்தன்மையைப் பலவீனப்படுத்தும் என்றும் கடிதத்தில் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். அமெரிக்காவின் தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்ள ஒரே

வழி, உறுப்புநாடுகள் சர்வதேச நீதிமன்றத்திற்கு உறுதுணையாக நிற்பதே என சர்வதேச குற்றவியல் நிபுணரான கனடாவைச் சேர்ந்த மார்க் கெர்ஸ்டன் (Mark Kersten) வலியுறுத்தியுள்ளார்.

*‘ICC குலைய அனுமதிக்கப்பட்டால், அது அமெரிக்கத் தடை, அழுத்தங்களால் அல்ல, ஆனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உறுப்பு நாடுகளால் உரிய முறையிலும் போதுமான அளவிலும் அது பாதுகாக்கப்படவில்லை மற்றும் ஆதரிக்கப்படவில்லை என்பதே அதன் பொருள்’* என அவர் மேலும் கோடிட்டுக்காட்டியுள்ளார். குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் செனற் அவையில் நிறைவேற்றப்பட்டால், அது ICC-இன் செயற்பாடுகளுக்கு அமெரிக்கா முட்டுக்கட்டை போடுவது முதற்தடவை அல்ல. பராக் ஒபாமா-வின் ஆட்சிக்காலத்தில், பலஸ்தீனம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினராவதை எதிர்த்ததோடு, இஸ்ரேல் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதையும் எதிர்த்தது. அதே வேளை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது முந்தைய ஜனாதிபதிப் பதவிக்காலத்தில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க குற்றங்களை விசாரித்த ICC உறுப்பினர்களுக்குப் பயண அனுமதி (விசா) மறுக்கப்பட்டது. அப்போது ICC-இன் முன்னாள் பிரதான வழக்கறிஞர் ஃபடோ பென்சூடாவுக்கும் எதிரான தனிப்பட்ட தடைகளையும் அமெரிக்கா விதித்தது.

## இஸ்ரேலைப் பாதுகாக்கும் முனைப்பு:

ஜனவரி 20-ம் திகதி ஜனாதிபதியாகத் தனது இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்கியுள்ளார் ரொனால்ட் ட்ரம்ப். இந்நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிரான அமெரிக்கத் தாக்குதல்கள் குறைவடையும் வாய்ப்புகள் அரிது. குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிரான தீர்மானம் அதி முன்னுரிமைக்குரியதாக அமையும் என குடியரசுக் கட்சியின் செனற் சபைத் தலைவர் John Thune ஏலவே தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ ICC உறுப்பு நாடுகள் அல்ல, ஆனால் குற்றவியல் நீதிமன்ற உறுப்பு நாடாக அதற்குக் கட்டுப்படவேண்டிய சட்டபூர்வ கடப்பாடு இருந்தும், உறுப்பு நாடுகள் சிலவும்கூட நீதிமன்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, நெதன்யாகுவை ஒப்படைக்க மறுப்புத்தெரிவித்துள்ளன. இந்த ஆண்டு ஜனவரி 27 அன்று அவுஸ்விட்ஸ் (Auschwitz) விடுதலையின் 80-வது ஆண்டு நிறைவாகக் கொண்டாடும் நிகழ்வில் பங்கேற்க நெதன்யாகு போலந்திற்குப் பயணம் மேற்கொண்டால், தாம் அவரைக் கைதுசெய்யப் போவதில்லை என போலந்த் நாட்டின் பிரதமர் டொனால்ட் டஸ்க் (Donald Tusk) தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் தாம் குற்றவியல் நீதிமன்றத்திற்கான தமது கடப்பாட்டினை மீறுவோம் என்றும் எச்சரித்து, இஸ்ரேலுக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார். Auschwitz: இரண்டாம் உலகப் போரின் போது நாசிகளின் மிகப்பெரிய வதைமுகாம் மனிதர்களைப் பெருமளவில் கொன்றழிக்கவெனக் கட்டப்பட்டது. இந்த வதைமுகாம் போலந்தின் ஓஸ்விசிம் (Oświęcim) நகரத்தில், விஸ்வா (Wisła) நதியின் அருகில் அமைந்துள்ளது.

2020-ல் ட்ரம்ப் தனது முதலாவது ஜனாதிபதிப் பதவிக்காலத்தின்போது ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் போர்க் குற்றங்கள் மற்றும் பாலஸ்தீன ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இஸ்ரேல் குற்றங்கள் குறித்து நீதிமன்றம் நடத்திய விசாரணைகளுக்கு எதிராக மூத்த ICC தலைவர்கள் மீது தடை விதித்தார். பின்னர் பதவிக்கு வந்த ஜோ பைடன் அந்தத் தடைத் தீர்மானத்தை நீக்கினார்.

## இன அழிப்பை அம்பலப்படுத்தும் அவசியம்:

பலஸ்தீனத் தன்னாட்சி நிர்வாகம் 2015-ல் ICC-இல் அங்கத்துவம் பெற்றது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் குறித்த விசாரணையை 2019-ல் குற்றவியல் நீதிமன்றம் முதன்முதலில் அறிவித்தது. இஸ்ரேல் குற்றவியல் நீதிமன்ற உறுப்பு நாடாக இல்லாவிட்டாலும், (குற்றம் புரிந்த நாடு உறுப்பு நாடாக இல்லாவிட்டாலும்) உறுப்பு நாடு ஒன்றின் நிலப்பரப்பில் (பலஸ்தீனம்) மேற்கொள்ளப்படும் குற்றங்களை விசாரிக்கும் அதிகாரத்தினைச் சர்வதேச நீதிமன்றம் கொண்டிருக்கிறது. அமெரிக்கா வெகு சில சந்தர்ப்பங்களில் குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளை ஆதரித்துள்ளது. அதற்கான உதாரணமாக, உக்ரைனில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு கைது ஆணை கோரிய போது அமெரிக்கா ஆதரித்தது. இந்த நிகழ்வு, தனது அரசியல் நலன்களின் அடிப்படையில்தான் அமெரிக்கா சர்வதேச நீதியை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்ற முடிவை எடுக்க முனைகிறது என்பதனை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

ICJ மற்றும் ICC வெவ்வேறு தனித்தனி வகிபாகம், ஆணைகள், அதிகாரங்களுடனான சுயாதீன நிறுவனங்கள் எனும்போதும்- இஸ்ரேல் தொடர்பான ICC-இன் கைது ஆணைக்கான விண்ணப்பமும் ICJ-ன் தொடர்ச்சியான பலசுற்று உத்தரவுகளும் இணைந்து இஸ்ரேலின் திட்டமிட்ட இன அழிப்புப் போரை அம்பலப்படுத்துகின்றன.

**சான்றாதாரம்:**

- Revealed: Israeli spy chief ‘threatened’ ICC prosecutor over war crimes inquiry | Harry Davies The Guardian | 28.05.2024
- How Israel's War in Gaza Is Testing the ICJ and the ICC | https://dawnmena.org | Heidi Matthews | 26.06.2024
- The United States and the International Criminal Court https://www.hrw.org/
- US House votes to advance bill to sanction ICC over Israel arrest warrants | Aljazeera | 09.01.2025
- Will crush the ICC's case against Netanyahu (Vil knuse ICCs sak mot Netanyahu) | Pernille Solheim | Klassenkampen | 11.01.2025
- UN World Court acquits Serbia of genocide in Bosnia; finds it guilty of inaction | https://news.un.org | UN News Global perspective Human stories | 26.02.2007



rooban.s@thaiveedu.com

# அதிகரித்து வரும் தீவிர வலதுசாரிக் கட்சிகளின் ஆதரவும் மக்கள் நாயகனின் வருகையும்

– ரதன்

டிசம்பர் 24, 2011-ல் ரஷ்யாவின் Bolotnaya Square-இல் For Fair Elections என்ற பெயரில் போரட்டம் நடைபெற்றது. இதனை அடுத்த சில மாதங்கள் மொஸ்கோ உட்பட்ட பல நகரங்களில் பரவலாக நடைபெற்றன. 2012 மார்ச்சில் நடைபெற்ற தேர்தலுக்கு எதிராகவே இப்போராட்டங்கள் நடைபெற்றன. பின்னர் 2012 மே மாதம் Bolotnaya Square-இல் March of the Millions போரட்டம் நடைபெற்றது. இந்த போராட்டங்களில் ரஷ்ய நகரங்களில் வாழும் மத்தியதர வர்க்கத்தினரே பங்கு பற்றியதாக ரஷ்ய அரசு கருதியது. அதன் பின்னர் தீவிர இடது சாரியினரிலிருந்து மாறி தீவிர வலதுசாரியினரை நோக்கி கவனம் செலுத்தத்தொடங்கியது.

Nigel Farage, Le Pen போன்ற தீவிர வலதுசாரித் தலைவர்கள் ரஷ்யாவினையும் புட்டினையும் ஆதரிக்கின்றனர். இந்த Nigel Farage, Le Pen அரசியல் சார்பு நிலை மாற்றத்துக்கான காரணம் ரஷ்யாவின் தீவிர வலதுசாரி கட்சிகள் மீதான பிரச்சாரமும், அவர்களின் வளர்ச்சிக்காக ரஷ்யா வழங்கிய நிதி உதவிகளுமாகும். இந்த தீவிரவாத வலதுசாரி அமைப்புகள், கட்சிகள் உலகமயத்துக்கு எதிரானவை. இனவாதிகள். வெள்ளை இன ஆதரவாளர்கள் The Great Replacement கோட்பாட்டை உள்வாங்கியவர்கள் அல்லது கடைப்பிடிப்பவர்கள். இந்த சக்திமிகு மாற்றீடு கொள்கைளை முதன் முதல் அறிமுகப்படுத்தியவர் Renaud Camus. பிரெஞ்ச் எழுத்தாளரான இவர் இருபதாம் நூற்றாண்டு கொள்கையை தனது Le Grand Remplacement நூலின் மூலம் பிரபல்யப்படுத்தியுள்ளார். இவர் தனது நூலில் ஐரோப்பாவில் வாழும் வெள்ளையினத்தவரை மத்திய கிழக்கு மக்களும், ஆபிரிக்கர்களும் மாற்றீடு செய்யப்போகின்றார்கள் என எழுதியுள்ளார். குறிப்பாக முஸ்லீம் மக்களின் பிறப்பு விகித அதிகரிப்பையும் தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். ரஷ்யா தீவிர வலதுசாரிக் கட்சிகள் மீது தனது கவனத்தைச் செலுத்த மற்றொரு காரணமுமிருந்தது. இக்கட்சிகள் அந்தந்த நாடுகளில் சுமார் 20-30 வீதமான வாக்குகளைப் பெற்றிருந்தனர். சில நாடுகளில் ஆட்சியில் ஒரு கட்சியாகவும் இருந்தனர். இக்கட்சிகள் மத்திய வர்க்கத்தினரை பிரதிநிதித்துவப்படுத்தாவிட்டாலும், அவர்களில் அதிகமானோர் இக்கட்சிகளுக்கே வாக்களித்திருந்தனர்.

ஐரோப்பாவில் வலதுசாரிக் கட்சிகள் அதிக வாக்குகளைப் பெறுகின்றனர். அவர்களுக்கான செல்வாக்கு அதிகரித்துச் செல்கின்றது. இத்தாலி, பின்லாந்து, சொலோவொக்கியா, ஹங்கேரி குரோசியா, செக் குடியரசு ஆகிய நாடுகளில் வலதுசாரிக் கட்சிகளே ஆட்சி அமைத்துள்ளன. சுவீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் அடுத்த தேர்தலில் வலதுசாரிக் கட்சிகள் ஆட்சி அமைக்கும். இல்லையேல் அரசில் அங்கம் வகிக்கும் கட்சியாகவிருக்கும். பிரான்சில் தீவிர வலதுசாரிக் கட்சித் தலைவர் Marine Le Pen செல்வாக்கு அதிகரித்துச் செல்கின்றது. ஜேர்மனியில் Alternative for Germany (AfD) செல்வாக்கு மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. அடுத்த ஜேர்மனியின் பொதுத் தேர்தலில் இவர்களுக்கு சுமார் 25-30 வீதமான வாக்குகள் வரை பெறுவார்கள் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. 2013-ல் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. 12 வருடங்களில் முக்கிய கட்சியாக வளர்ந்துள்ளார்கள். போலாந்தில் 2015-ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தீவிர வலதுசாரிக் கட்சியான The Law and Justice Party (PiS) வேட்பாளர் Andrzej Duda வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். நாடாளுமன்றத் தேர்தலில் இரு தடவைகள் சட்டம் மற்றும் நீதிக் கட்சி வெற்றி பெற்றது. 2023 தேர்தலில் அதிகளவு வாக்குகளைப் பெற்ற கட்சியாக திகழ்ந்தது. 35.4 வீத வாக்குகளை கட்சி பெற்றபோதும், மற்றைய கட்சிகள் கூட்டணி அமைத்து நாடாளுமன்றத்தை கைப்பற்றினர். இந்தியாவில் இந்து தீவிர வலதுசாரிக் கட்சியான பி.ஜே.பி மூன்றாவது தடவையாக ஆட்சிக்கு வந்துள்ளது. அமெரிக்காவில் தீவிர வலதுசாரிக் கட்சியான குடியரசுக் கட்சி (Republic) ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ரம்ப் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். இவருக்கு எதிராக 90-க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் நீதி மன்றத்தில் முன்வைக்கப்பட்ட போதும், இவர் வெற்றி பெற்றுள்ளார். ஒரு வழக்கில் இவர் குற்றவாளி எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவர் ஜனாதிபதியாக வெற்றி பெற்றதனால் இவருக்கு தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை.

தீவிர வலதுசாரிக் கட்சிகளுக்கான செல்வாக்கு ஏன் அதிகரித்துச் செல்கின்றது. இவர்கள் தேசிய இறையாண்மையையும் தேசிய நலன்களையும் வலியுறுத்துகின்றனர். இதற்கு இவர்கள் இரு விடயங்களை முன்வைக்கின்றனர். முதலாவது இனம் மற்றும் அடையாளம் (ethnicity and identity). இக்கட்சிகள் நேரடியாகவே குடிவரவாளர்களுக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. இக்கட்சியினது வருகையினாலேயே எமது மக்களின் அடையாளம் மாற்றப்பட்டுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம், பெரும்பான்மைச் சமூகத்துக்கு கல்வி வாய்ப்பின்மை போன்றனவற்றிக்கான பிரதான

காரணமாக குடிவரவாளர்களையே இக்கட்சியினர் சுட்டிக் காட்டுகின்றனர். அமெரிக்காவின் சிலிக்கன் வலி (Silicon Valley - San Jose, Sunnyvale, Mountain View, Palo Alto and Menlo Park Cities) பிரதேசத்தில் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு வேலைவாய்ப் பில்லை. அங்கு வேலை செய்பவர்களில் பெரும்பான்மையி னர் குடிவரவாளர்களே என ஒரு விமர்சனக் கருத்து குடியரசுக் கட்சியினரால் கடந்த தேர்தலின் போது பிரச்சாரப்படுத்தப்பட் டது. இதற்கான காணெளிகளைச் சமூக வலைத் தளங்களில் காணக்கூடியதாகவுள்ளது. கணினி நிறுவனங்கள் தவிர்ந்த பல தொழிலகங்களில் பெரும்பான்மை சமூகத்தினர் செய்யத் தவிர்க்கும் வேலைகளை குடிவரவாளர்களே செய்கின்றனர். குறைந்த வேதனத்தில், அதிக நேரம் இவர்கள் வேலை பார்க் கின்றனர்.

இங்கிலாந்தில் 2024-ல் நடைபெற்ற கலவரங்கள் மற்றொரு செய்தியைச் சுட்டி நிற்கின்றது. சிறுபான்மையினரின் எண் ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இதனால், ஆதிக்க சக் தியாக சிறுபான்மையினர் மாறிக் கொண்டிருக்கின்றனர். ரிசி சுனாக், ஒபாமா போன்றவர்கள் மேற்கின் ஆட்சித் தலைவர்க ளாகத் தேர்வாகியுள்ளனர். இது பிரதான இனத்தின் ஆதிக் கத்திலிருந்து மேற்கு நாடுகள் நகர்ந்து செல்கின்றன என்ற கருத்து நிலையும், தீவிர வலதுசாரிக் கட்சிகளால் தோற்றம டையச் செய்யப்பட்டுள்ளன. ஜனவரி 12, 2025 நியூயோர்க் ரைம்ஸ்-இன் ஞாயிறு கருத்துக்களம் (Sunday Opinion) பகு தியில் Ross Douthat னால் எழுதப்பட்ட O Canada. Come Join Us என்ற பத்தியில் O Canada. Come Join Us பந்தியின் முடிவில் 'On the one hand, Trudeau's reign deliberately abandoned both Canada's Anglo-Protestant past and cautious multiculturalism that succeeded it gejpapd Kbtpy Instead he positioned his country as the first 'post national state, with no core identity, no mainstream'. அதாவது ரூடோவின் ஆட்சி கனடாவின் பிரதான சமூகத்தை கைவிட்டு விட்டது, கனடாவிற்கு மைய அடையாளம் இல்லை. பிரதான சமூகமுமில்லை. கனடா-அமெரிக்கா இணைப்பிற்கு கனடா வில் உள்ள பலசமூக கலாச்சார மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பைக் காரணமாக காட்டுவது ஆபத்தானது. கனடா வின் கொன்சவேற்றிவ் கட்சித் தலைவரும் கனடாவின் இன் றைய நிலைக்கு லிபரல் ஆட்சியில் அதிகரித்த குடிவரவாளர் களும் ஒரு காரணம் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். இதே கொன் சவேற்றிவ் கட்சியின் பிறையன் மல்றோனி ஆட்சியில் 1987-ல் கப்பலில் தமிழர்கள் நியூபவுன்ட்லான்ட் கரையை வந்த டைந்த போது 'நாங்களும் கப்பலில்தான் வந்தோம்' எனக் கூறி வரவேற்றார். அப்போது இவர்களுக்கு தொழிலாளர்க ளும், நவீன அடிமைகளும் தேவைப்பட்டனர்.

மேற்கு நாடுகள் தங்களுக்குத் தேவையேற்படும் பொழுது குடிவரவை பலவீனமாக்குவார்கள். அதே போல் கறுப்புச் சந் தையும் தேவைக்கு ஏற்ப மாறும். இன்றைய மேற்கு நாடுக ளின் வளர்ச்சிக்கு இவர்களின் பலவீனமான குடிவரவும், கறுப் புச் சந்தையும் பல காரணங்களுள் ஒன்றானவை. டோனால்ட் ரம்ப்ன் America First என்பதற்கு பின்னால் அமெரிக்க பிர தான வெள்ளை இன மக்களும் அடங்குவர்.

மேலே குறிப்பிட்ட The Great Replacement கொள்கை யையே மேற்கு நாடுகளின் தீவிர வலதுசாரிக் கட்சிகள் பிரச் சாரப்படுத்த விரும்புகின்றார்கள். பிரதான சமூக மக்களி டையே இனவாதத்தை தூண்டிவிடுகின்றனர். white supremacy அமைப்புகள் டொனால்ட் ரம்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் ஆட்சி செய்தன. Skinheads, தெருக் குழுக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட இனவாத அமைப்புகள் போன் றவை குடிவரவாளர்கள் மீது வன்முறையையும் பிரயோகிப் பார்கள். இவ்வாறான குழுக்களுக்கு அரச ஆதரவும் உண்டு. டொனால்ட் ரம்ப்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் நடை பெற்ற வன்முறைகள், இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ்-ஆல் தோற்றுவிக்கப்பட்ட வன்முறைகளை உதாரணங்களாகக் கூறலாம். ஹங்கேரி, போலாந்து போன்ற நாடுகளும் இவ்வரி சையில் இணைகின்றன.

ஐரோப்பிய நாடுகளும், கனடா, அமெரிக்கா போன்ற நாடுக ளும் ஒரு இனவாத முரண் மற்றும் மோதல்களை தோற்றுவிக் கும் காலத்தை நோக்கி நகர்கின்றன. அதில் தமிழ் மக்களும்



பாதிக்கப்படுவார்கள். மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வரும் குடிவரவாளர்கள் பயங்கரவாதிகள் என்ற பயத்தை பெரும்பான்மை சமூகத்தினர் மத்தியில் தீவிர வலதுசாரிக் கட்சிகள் உருவாக்கியுள்ளன. குறிப்பாக முஸ்லீம்களை அல் கைதாவுடனும் ஜிகாதிகளுடனும் இணைப்பார்கள். ஒரு சிலர் செய்யும் நடவடிக்கைகளுக்கு முழுச் சமூகத்தின் மீதும் பழி சுமத்தப்படும். அதே சமயம் குடிவரவாளர்களில் சிலர் செய் யும் குற்றச் செயல்கள் பெரிது படுத்தப்பட்டு ஊடகங்களில் வெளிச்சம் போட்டு பிரசுரிக்கப்படும். குறிப்பாக, வலதுசாரிக் கட்சி அச்சு ஊடகங்கள் இதனை பிரச்சாரப்படுத்துகின்றன.

இரண்டாவது, உலகமயமாதலை நிராகரித்தல். வலதுசாரிக் கட்சிகளுக்கு நிதியுதவியளிக்கும் நிறுவனங்களே இந்த உல கமயமாதலின் வளர்ச்சிக்குக் காரணகர்த்தாக்கள். குறைந்த வேதனத்துக்காகவும், மூலப் பொருட்களை குறைந்த விலை யில் பெற்றுக் கொள்ளும் வசதிக்காகவும், இந்த நிறுவனங் கள் சீனா மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் பொருட்களை உற்பத்தி செய்கின்றார்கள். இவ்வாறான உற்பத்தி நடவடிக் கையில் மூன்றாம் உலக நாடுகள் சீனாவை நோக்கி நகர்ந்த மையினால் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் வேலை வாய்ப்புக் குறைந்தது. ஆனால் வலதுசாரிக் கட்சிகள் மூன் றாம் உலக நாடுகளையும், சீனாவையும் குறை கூறிக் கொண்டு, மீள உற்பத்தியை தங்களது நாட்டிற்கு கொண்டு வரவேண்டும் எனப் பிரச்சாரம் செய்கின்றனர். இது சாத்தியப் படாத விடயம் என்று தெரிந்தே அவர்கள் பிரச்சாரம் செய்கின் றனர். இதனால் பெரும்பான்மை சமூகத்தினர் ஈர்க்கப்படுகின்

றனர். தகுந்த பத்திரமற்ற 12 மில்லியன் மக்களை நாட்டை விட்டு வெளியேற்றுவேன் எனக் கூறியே டொனால்ட் ரம்ப் பிரச்சாரம் செய்தார்.

ஜேர்மனியின் AfD எட்டு மில்லியன் குடிவரவாளர்களை வெளியேற்றுவேன் எனக் கூறி பிரச்சாரம் செய்கின்றது.

குடிவரவாளர்களை இலட்சக்கணக்காக வெளியேற்றினால் தேசிய உற்பத்தி பாதிக்கப்படும். சிறு நிறுவனங்கள் அதிகளவு பாதிக்கப்படும். இதனை எப்படி ஈடுகட்டுவது. இதற்கும் இவர்களிடம் ஒரு தீர்வு உள்ளது. இதுவே பயங்கரமானது. இது வரை காலமும் குடிவரவாளர்களாக அல்லது அகதிகளாகப் புலம் பெயர்ந்தவர்கள், காலப்போக்கில் அந்த அந்த நாடுகளின் நிரந்தர வதிவிடவுரிமையைப் பெற்று, அங்கீகரிக்கப்பட்ட பிரசையாக மாற்றம் பெறுவார்கள். அந்த நாட்டின் பிரசைகளுக்குரிய சகல உரிமைகளும் இவர்களுக்கும் கிடைக்கும். புதிய திட்டத்தின் கீழ் தேவைக்கேற்ப குடிவரவாளர்கள் உள்வாங்கப்படுவார்கள். தேவை முடிந்தவுடன் இவர்கள் மீண்டும் தங்களது சொந்த நாட்டிற்கு சென்று விடவேண்டும். ஒரு புதிய அடிமை முறை உருவாக்கப்படவுள்ளது. கனடாவின் பெருந்தோட்டங்களில் இவ்வாறான முறையுள்ளது. தோட்டங்களில் வேலை பார்ப்போர் குளிர் காலங்களில் தங்களது நாட்டிற்கு சென்று விடுவார்கள். (Foreign workers are issued work permits to fill vacant positions for specific lengths of time: TFWs are in Canada for a maximum of 2 years at any one time and SAWP workers are in Canada for a maximum of 8 months, although they can return again each season. They are paid the same as a Canadian worker for the same role, as regulated through the Temporary Foreign Worker Program, https://www.cfa-fca.ca/issues/temporary-foreign-worker-program-and-canadian-agriculture/TFWP).

தீவிர வலதுசாரிக் கட்சிகள் மக்கள் எதனை விரும்புகின்றார்களோ அல்லது மக்களுக்கு என்ன தேவைகள் உள்ளதோ அதனைத் தங்கள் கட்சியின் கருத்து நிலையாக மாற்றுகின்றனர். மக்களின் குறைகளைக் கேட்கின்றனர். இதனை பிரதான கட்சிகள் செய்யத் தவறிவிடுகின்றன. ஆனால் அவர்கள் ஆட்சி நவதாராளவாத முதலாளிகளுக்கு சார்பாக, முதலாளிகளது ஆட்சியாகவே அமையும். கொரோனாக் காலத்தின் பின்னால் உலக பொருளாதாரம் பெருமளவு வீழ்ச்சி கண்டிருந்தது. இக்காலத்தில் ஆட்சி செய்து வந்த இடது சார்புக் கட்சிகள் மற்றும் தாராளவாதக் கட்சிகளால் நாடுகளை மீள பொருளாதார பலமுள்ள நாடுகளாக மாற்றமுடியவில்லை. பணவீக்கம் அதிகரித்தது. அதனால் வட்டி அதிகரித்தது. இந்த நிலை தீவிர வலதுசாரிக் கட்சிகளுக்கு சாதகமாயின. மத்தியதர வர்க்க மக்களை குறிவைத்து பிரச்சாரம் செய்தார்கள். இன்று ஐரோப்பாவில், அமெரிக்காவில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன. கனடாவிலும் இவ்வருடம் தீவிர வலதுசாரிக் கட்சியான கொன்சவேற்றிவ் கட்சி ஆட்சியமைக்கும்.

தீவிர வலதுசாரிக் கட்சிகள் பொருளாதாரத்தை இன அடையாளத்துடன் இணைத்து பிரச்சாரம் செய்கின்றார்கள். கனடாவில் கொரோனாவின் பின்னர் 2022-ன் ஆரம்பத்தில் நடைபெற்ற Truckers convoy போராட்டங்கள் தீவிர வலதுசாரியினரால் நடத்தப்பட்ட போராட்டம். இதன் பின்னால் பல காரணங்கள் கூறப்பட்டாலும், பொருட்களை ஏற்றி இறக்கும் (ரக்கிங்) தொழில்துறையில் சிறுபான்மையினரின் ஆதிக்கம் அதிகரித்துச் சென்றமையே பிரதான காரணமாகும். இப்போராட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமை ஜஸ்ரின் ரூடோவின் ஒரு பெரிய வெற்றியாகும்.

ஏ.எப்.டி கட்சியின் சில கொள்கைகள் இவை.
Alternative for Germany (AfD) 2013
AfD's anti-immigration platform consists of the following:

- Stop government spending on refugees
- Negative immigration": Refugees in Germany are returned to their home countries
- Remove the constitutional right of foreigners to seek asylum in Germany
- Restrict the influence of Islam in Germany (https://www.britannica.com/topic/Alternative-for-Germany)

தீவிர வலதுசாரிக் கட்சிகளின் ஆட்சிக் காலத்தில் குடிவரவாளர்கள் வெளியேற்றப்படுவார்கள். இதே குடிவரவாளர்கள் புதிய அடிமைகளாக மீள தற்காலிக வேலை செய்பவர்களாக அழைக்கப்படுவார்கள். நவதாராளவாதிகளின் சொற்படி இவர்களின் ஆட்சி அமையும். டோனால்ட் ரம்ப்ன் ஆட்சியில் எலன் மஸ்க் என்ற பெரு முதலாளி ஆட்சி செய்வார். பழமைவாதக் கருத்துகள் முன்னிலை பெறும். உலகமயமாதலை எதிர்க்கின்றோம் என்ற பெயரில் உலகை ஆள்வார்கள்.

## மக்கள் நாயகனின் வருகை:

ஐரோப்பாவைப் போன்று அமெரிக்காவிலும் தீவிர வலதுசாரிக் கட்சியான குடியரசுக் கட்சி மீண்டும் ஆட்சி அமைக்க தீவிரமாக செயல்பட்டது. நவம்பரில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ரம்ப் வெற்றி பெற்ற பின்னர் அவர் பதவியேற்கும் நாளான ஜனவரி 20-ஆம் நாளுக்கு முன்பாக பல அறிவித்தல்களை மேற்கொண்டார். பொதுவாக இக்காலப்பகுதியில் தனது அமைச்சரவையை அறிவித்தார். இவ்வாறு அறிவிக்கப்படும் அமைச்சர்களை கொங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டும். அவர்கள் கொங்கிரசின் ஓர் உபகுழு உறுப்பினர்களால் கேள்வி கேட்கப்பட்டு, அவர்கள் தகுதியானவர்களா என உறுதிப்படுத்தப்படும். பின்னர் வாக்களிப்பு நடைபெற்று அவர்கள் அமைச்சர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். பெரும்பாலும் ஜனாதிபதியின் தேர்வுகள் கொங்கிரசால் நிராகரிக்கப்படுவதில்லை. ஆனாலும், இவர்களிடம் கேட்கப்படும் கேள்விகளும் பதில்களும் ஊடகங்களில் பரவலாக உரையாடப்படும், விமர்சிக்கப்படும். இம்முறையும் டொனால்ட் ரம்பின் தேர்வுகள் மீதாக பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளது. அதே சமயம் டொனால்ட் ரம்ப் தெரிவித்த மூன்று கருத்துகள் சர்ச்சையைக் கிளப்பியுள்ளன.

டொனால்ட் ரம்ப் ஒரு தேர்ந்த வியாபாரி. அவர் எவ்வாறு அமெரிக்க மக்களைத் தனது கருத்துகளால் வென்றாரோ அதே மாதிரி உலகையும் வெல்ல முயற்சிக்கின்றார். அவர் தெரிவித்த மூன்று கருத்துகள் இவை. முதலாவது கனடாவை அமெரிக்காவின் மாநிலமாக மாற்றுவேன். இரண்டாவது கிறீன்லாந்தை அமெரிக்காவின் ஒரு அங்கமாக்குவேன். மூன்றாவது பனாமாக் கால்வாயை அமெரிக்கா மீளப்பெறும். அது அமெரிக்காவுக்குரியது. 51 மைல் நீளமான பனமாக் கால்

வாய் அத்திலாந்திக் சமுத்திரத்தில் உள்ள கரீபியன் கடலையும், பசுபிக் சமுத்திரத்தையும் இணைக்கின்றது. சுமார் 10 மணித்தியாலங்கள் பயணநேரமாகும். கால்வாயைத் தவிர்த்தால் 12 நாட்கள் பயண நேரமாகும். இக்கால்வாய் மிகவும் கேந்திர முக்கியத்துவமானது. 1881-ல் பிரான்சினால் இக்கால்வாய் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி 1889-இல் கைவிடப்பட்டது. பின்னர் அமெரிக்கா 1904-ல் ஆரம்பித்து 1914-ல் கால்வாயைப் பூரணப்படுத்தியது. 2023-ம் ஆண்டு ஒரு கப்பல் பனமாக் கால்வாயைக் கடக்க 500,000-இல் இருந்து 2.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை கட்டணமாகச் செலுத்த வேண்டும். பனமா நாட்டின் மொத்த வருமானத்தில் 12 வீதம் பனாமாக் கால்வாயிலிருந்தே வருகின்றது. 1977-ல் ஜிம்மிக் காட்டர் பனமாக் கால்வாயைப் பனமாவிடம் கையளிக்க ஒப்பந்தம் கைச்சாத்திட்டார். எனினும், 1999 டிசம்பர் 31-ல் இருந்து பனமாக் கால்வாய் முழுமையாக பனாமாவிற்குரியதாகியது.

அமெரிக்கா, பனாமாக் கால்வாயை மீளப் பெறுவதன் மூலம் உலக கப்பல் போக்குவரத்தினை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் எனக் கருதுகின்றது. சீனாவிற்கு இக்கால்வாய் மிக முக்கியமானது. பனமாக் கால்வாயின் ஆரம்பத்தில் உள்ள துறைமுகமான Balboa-ஐயும் முடிவில் உள்ள துறைமுகமான Cristóbal-ஐயும் ஹொங்கொங் நிறுவனமான Hutchison Ports பராமரிக்கின்றது. 2047-ம் ஆண்டு வரை பராமரிப்பதற்கு இந்த நிறுவனத்துடன் பனமா ஒப்பந்தமிட்டுள்ளது. டொனால்ட் ரம்ப், பனமாக் கால்வாயைக் கடக்க அமெரிக்கக் கப்பல் அதிக கட்டணம் செலுத்துகின்றது. எனவே, பனமாக் கால்வாயை மீள எம்மிடம் கையளிக்கவேண்டும் என மிரட்டல் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார். ஏற்கனவே, சீன தூதரகம் பனமாக் கால்வாயின் முன்பாக அமைக்கப்படுவதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. பனாமாவில் அதிகரித்துள்ள சீன முதலீடுகளையும் அமெரிக்கா விரும்பவில்லை.

இன்றைய நிலையில் சீனா உலகின் பொருளாதார வல்லரசாக வளர்ந்துள்ளது. இதனை முறியடிக்க அமெரிக்கா பல வழிகளில் முயல்கின்றது. மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. இதனைக் அமெரிக்கா கட்டாயம் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. பனமாக் கடலின் எதிரொலி சீனா. அத்துடன், டொனால்ட் ரம்பின் பிரச்சாரத்துக்கு நிதி வழங்கிய நிறுவனம் ஒன்று, பனமாக் கால்வாயை பராமரிக்க, அதன் நிதி மற்றும் வரவு செலவை மேற்பார்வை செய்ய விரும்புகின்றது.

பனாமாவைப் போன்ற நிலையே கிறீன்லாந்துக்கும் உள்ளது. கிறீன்லாந்து டென்மார்கின் ஆளுகையின் கீழ் உள்ள நாடு (Kingdom of Denmark). அதனால், கிறீன்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் கீழும் உள்ளது. ஆனால், கிறீன்லாந்து வட-அமெரிக்காவின் ஒரு நாடாகும். கிறீன்லாந்து வட துருவத்துக்கு மிக அருகில் உள்ளது. இங்கு பல மிக முக்கிய, மிகவும் அரிதான தாதுப்பொருட்கள் உள்ளன. zinc, iron, copper, nickel, cobalt and uranium and rare earth elements, including neodymium, dysprosium and praseodymium.

1950-ம் ஆண்டு அமெரிக்கா ஒரு இராணுவ மற்றும் விண்வெளித் தளத்தை கிறின்லன்டில் அமைத்தது. (Thule Air Force Base) இத்தளம் அமெரிக்காவிற்கு பல வித விண்வெளி சமிக்ஞைகளும், இராணுவ சமிக்ஞைகளையும் கண்டுபிடிக்க உதவுகின்றது. 1946-ம் ஆண்டிலிருந்தே கிறீன்லாந்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது. டென்மார்க் அமெரிக்காவின் கோரிக்கையை நிராகரித்தே வருகின்றது. அண்மைக் காலங்களாக சீனா டென்மார்க்கினுள் முதலீடுகளைச் செய்ய முயற்சிக்கின்றது. கிறீன்லாந்தும் சீனாவிடம் முதலீடுகளைச் செய்யுமாறு கோரியிருந்தது. குறிப்பாக யுரேனியத்தை எடுப்பதற்கு சீனாவும் விரும்பியிருந்தது. எனினும், பின்னர் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. சீனா, கிறீன்லாந்தை தனது இராணுவ மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முயற்சிக்கின்றது என அமெரிக்கா கருதுகின்றது. இது, சீனாவை வட துருவ அரங்கினுள் செல்ல அனுமதிப்பது போன்றது என அமெரிக்கா அச்சப்படுகின்றது. டொனால்ட் ரம்ப்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் கிறீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. சாத்தியப்படவில்லை. இம்முறை சீனக் காய்ச்சல் டொனால்ட் ரம்ப்பை வாட்டி எடுக்கின்றது. எப்படியாயினும் அவரது ஆட்சி முடிவதற்குள் கிறீன்லாந்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுவார்.

சீனா அங்கம் வகிக்கும் பிறிக்ஸ் தற்சமயம் அமெரிக்காவிற்கு புதிதாக ஆரம்பித்திருக்கும் ஒரு ‘கொரோனா’. இதன் பகுதிகளில் ஒன்று அமெரிக்க டொலரில் பிறிக்ஸ் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வணிகத்தை நிறுத்துவதாகும். சுமார் 25 வீதமான உலக வணிகம் அமெரிக்க டொலரைத் தவிர்த்து நடைபெற்றால், அமெரிக்க டொலரின் பெறுமதி பாதிக்கப்படும். அத்துடன் அமெரிக்க டொலருக்கான தேவை குறைந்துவிடும். அதன் சக்தியும் குறையும். பிறிக்ஸ் நாடுகள் தங்களது நாணய களஞ்சியத்தில் அமெரிக்க டொலர்களைச் சேமிக்க வேண்டிய தேவையில்லாமல் போய்விடும். அந்த சேமிப்பை மையப்படுத்திய வணிக நடவடிக்கைகள் இல்லாமல் போய்விடும். அமெரிக்க தனது பொருளதாரப் பலத்தையும், இராணுவ வல்லரசு நிலையையும் தங்கவைக்க அமெரிக்க டொலர் மிக அவசியம்.

இந்த நிலையில் சீனாவின் வளர்ச்சியை முறியடிக்கவும், தனது இராணுவ பலத்தை உலகிற்கு உறுதிப்படுத்தவும் அவர்கள் நடவடிக்கை எடுத்தாக வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். பைடன் அரசின் மெத்தனப் போக்கு பிறிக்ஸின் வளர்ச்சிக்கு மேலும் உதவியது. டொனால்ட் ரம்ப் அமெரிக்க டொலரை பாவிக்காமல் வணிகம் செய்யும் நாடுகளுக்கு அதிகளவு சுங்கவரி விதிப்பேன் என எச்சரித்துள்ளார். அமெரிக்காவிற்கு பிறிக்ஸ் மீதான அச்சம் ஆரம்பித்துவிட்டது. மூன்று பிரதான பொருளாதார நாடுகள் பிறிக்ஸின் முக்கிய நாடுகள். - சீனா, ரஷ்யா, இந்தியா.

ஜி 7 நாடுகளில் ஒன்றான - எல்லை நாடான கனடாவை பொருளாதார ரீதியாக தன்னுடன் இணைப்பதன் மூலம், மேலும் தன்னைப் பலமாக அமெரிக்கா காட்சிப்படுத்த விரும்புகின்றது. அத்துடன், டொலரின் வலுவையும், பெறுமதியையும் இது அதிகரிக்கச் செய்யும்.

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான சுங்கவரியை அதிகரிப்பதன் மூலம், கனடாவை பொருளாதார ரீதியாக பலவீனப்படுத்தி தனது கட்டுப்பாட்டுக்குள்

கொண்டுவரமுடியும் என டொனால்ட் ரம்ப் கருதுகின்றார்.
எல்லை நாடான கனடாவால் தங்களுக்கு 200 பில்லியன்
டொலர்கள் நட்டம் என டொனால்ட் ரம்ப் கருத்துத் தெரிவித்
துள்ளார். இந்தக் கணக்கை ஊடகங்களும், பொருளாதார
நிபுணர்களும் உறுதிப்படுத்தத் திண்டாடுகின்றார்கள். 2023-
ஆம் ஆண்டின்படி அமெரிக்காவுக்கு கனடா ஏற்றுமதி செய்
யும் பொருட்களின் மொத்தத் தொகையைவிட, இறக்குமதி
செய்யும் பொருட்களின் மொத்தத் தொகை அதிகம். அதா
வது 67.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கனடா அதிக
வருமானமாகப் பெறுகின்றது. இதனை விட மிகுதி 132.1 பில்
லியன் டொலர்களை டொனால்ட் ரம்ப் எங்கிருந்து பெற்றார்
என்பது தெரியாது.

அமெரிக்காவினதும், டொனால்ட் ரம்பினதும் நோக்கம் கன
டாவை முற்றுமுழுதாக அமெரிக்காவுடன் இணைப்பதல்ல.
மாறாக, அமெரிக்கா - கனடா இணைந்த ஒரு பொருளாதார
சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்குவதாகும். இது வரை
கனடா-அமெரிக்கா-மெக்சிக்கோ நாடுகளுக்கிடையிலான
சுதந்திர வர்த்தக வலயம் அமெரிக்காவிற்கு சாதகமானதல்ல
என டொனால்ட் ரம்ப் கருத்து வெளியிட்டுள்ளார். உண்மை
அதுவல்ல. அமெரிக்காவே இந்த சுதந்திர வர்த்தக வலயத்
தில் இலாபமடைகின்றது. இதனைக் கூறிக் கொண்டே மற்
றொரு விடயத்தையும் டொனால்ட் ரம்ப் செய்யவிரும்புகின்
றார். அது கனடா-அமெரிக்காவுக்கான ஒரு நாணயம். இது
ஐரோப்பிய ஒன்றியத்தின் யுரோ போன்றது. ஆனால் ஐரோப்
பிய ஒன்றியத்தில் பல நாடுகள் உள்ளன. இங்கு இரண்டு
நாடுகள். ஒரு நாணயம் என்பது அமெரிக்க டொலராகவேயி
ருக்கும். இது ஒரு பொழுதும் கனடிய மக்களுக்கு சாதகமான
தாகவிருக்காது. ரொறன்ரோ, வன்கூவர் போன்ற பெரு நகரங்
களின் ஆதன சந்தை பெருமளவு வீழ்ச்சியடையும். ஒரே
டொலர் என்பது கனடாவின் பணவியலையும், நிதியையும்
அமெரிக்காவே கட்டுப்படுத்தும். ஒரு மத்திய வங்கியே இருக்
கும். அமெரிக்காவே வட்டி வீதத்தைத் தீர்மானிக்கும்.

அமெரிக்காவுடன் கனடாவை இணைப்பதாயின் கனடாவில்
சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். அது சாத்திய
மற்றது. ஆனால், ஒரு நாணயம் என்ற வடிவம், கனடாவின்
பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் கனடிய மக்கள் ஏற்றுக்
கொள்ளவேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுவார்கள். டொனால்ட்
ரம்பின் ஆட்சி முடிவதற்குள் ஒரு நாணயம் என்பது சாத்தியப்
படாவிட்டாலும், அதன் பின்னர் அமெரிக்காவிற்கு சாதகமாக
முடியலாம். அதன் முதல் அடியை டொனால்ட் ரம்ப் எடுத்து
வைத்துள்ளார்.

கடந்த சில நாட்களாக ஊடகங்களில் அடிபடும் பெயர்
கெவின் ஓ லறி (Kevin O'Leary) இவர் அல்பேட்டா முதல்வரு
டன், டொனால்ட் ரம்ப்பைச் சந்திக்க சென்றிருந்தார். இவர்
ஒரு கனடிய தொழிலதிபர். ஊடகவியலாளர். டொனால்ட் ரம்
பிற்கு நெருக்கமானவர். இவர் ஒரே நாணயம் என்ற விட
யத்தை விரும்புகின்றார். அதற்கான பிரச்சாரத்தையும் அவ்
வப்போது செய்து வருகின்றார். டொனால்ட் ரம்பிற்கு தேர்தல்
நிதி வழங்கியிருக்கலாம் என்ற ஐயப்பாடுள்ளது. ரிக்ரொக்
அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டால் அதனை வாங்குவ
தற்கு விரும்புகின்றார். கனடா-அமெரிக்கா இணைப்பிற்கு
இவர் டொனால்ட் ரம்பிற்கு உதவி செய்கின்றார். இவரைப்
போன்ற பல வணிகர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். அல்
பேட்டா முதல்வர் Danielle Smith கனடாவின் ஏனைய
மாகாண முதல்வர்களுடன் இணைந்து அமெரிக்காவுக்கு எதி
ராக, அங்கிருந்து கனடாவிற்கு இறக்குமதியாகும் பொருட்க
ளுக்கு அதிக சுங்கவரி விதிக்கும் திட்டத்தில் இணைந்து
செயல்பட மறுத்துவிட்டார். இது ஒரு முழுமையான கனடா
எதிர்ப்பை டொனால்ட் ரம்ப் மீது ஏற்படுத்த முடியாத
நிலையை ஏற்படுத்தியுள்ளது. சீனா உட்பட்ட பல நாடுக
ளுக்கு அதிக சுங்கவரி விதிப்பேன் என டொனால்ட் ரம்ப் கூறி
யிருந்தார். சீனா போன்ற நாடுகள் அமைதிகாக்கின்றன.
கனடா உடனடியாக ரம்பின் காலடியில் விழத் தயாராகியது.
ஜஸ்ரின் ரூடோ ரம்ப்பை அமெரிக்கா சென்று சந்தித்தார்.
அங்கு நடைபெற்ற இரவு விருந்தில் ஜஸ்ரின் ரூடோவை
அமெரிக்காவின் 51-வது கவர்னர் என அறிவித்தார். கனடா
வின் பயத்தை டொனால்ட் ரம்ப் அறுவடை செய்யவிரும்புகின்
றார்.

ரூடோவின் ஆட்சி மீது குறிப்பாக ரூடோ மீது ஏற்பட்ட மக்க
ளின் வெறுப்பு அவரை பதவி விலக நிர்ப்பந்தித்தது. அதனை
மறுத்து அவர் தொடர்ந்த போது, லிபரல் உட்கட்சி போராட்ட
மாகியது. தீவிர வலதுசாரிக் கட்சியான கொன்சவேற்றிவ் கட்சி
லிபரல் கட்சி மீது விமர்சனங்களை முன்வைக்காமல், ஜஸ்
ரின் ரூடோ மீதே விமர்சனங்களை அள்ளி வீசியது. ஜஸ்ரின்
ரூடோ உலகின் பேசு பொருளாக மாறிவிட்டார். கனடா ஒரு
பலவீனமா நாடாக தோற்றம் பெற்றது. பொருளாதாரத்தில்
மூன்றாம் உலக நாட்டைப் போலாகிவிட்டது என்ற தோற்றம்
பெற்றது. இதுவும் டொனால்ட் ரம்புக்கு சாதகமாகிவிட்டது.

டொனால்ட் ரம்ப் - ஜஸ்ரின் ரூடோ சந்திப்பில், ரூடோ ஒரு ஜி7
நாட்டின் தலைவர் என்ற நிலையிலிருக்கத் தவறிவிட்டார்.
உண்மையில் ஜஸ்ரின் ரூடோ கனடாவை தரமிறக்கிவிட்டார்.
கனடாவை அமெரிக்காவுடன் டொனால்ட் ரம்ப் இணைத்தால்
அதற்கு ஜஸ்ரின் ரூடோவின் நடவடிக்கைகளும் ஒரு காரண
மாகும். அல்பேட்டா மக்களில் முப்பது வீதமானோர் அல்
பேட்டா அமெரிக்காவுடன் இணைந்தால் தங்களது மாகாணத்
துக்கு இலாபம் எனக் கருதுவதாக ‘குளோப் அன்ட் மெயில்’
பதிவு செய்துள்ளது. இது 51 வீதமாகி, சர்வசன வாக்கெடுப்பு
நடைபெற்றால், அல்பேட்டா, அமெரிக்க அல்பேட்டாவாகிவி
டும். பின்னர் மிகுதிக் கனடாவை தன்னுடன் இணைப்பது
டொனால்ட் ரம்புக்கு பெரிய சவாலாகவிருக்காது.

டொனால்ட் ரம்ப்பின் இரண்டாவது ஆட்சியின் பின்னால் பெரு
வர்த்தக முதலைகள் உள்ளனர். முன்னர் தாய்வீட்டில் பிரசுர
மான அமெரிக்க தேர்தல் பற்றிய கட்டுரையில் டொனால்ட் ரம்
புக்கு தேர்தல் நிதியளித்தவர்களின் பட்டியல் உள்ளது. எலன்
மாஸ்க், விவேக் இராமசாமி போன்றவர்கள் டொனால்ட் ரம்ப்
பின் அதிகாரபூர்வமற்ற அமைச்சர்களாகவும் செயல்படுகின்
றார்கள்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இனி வரும் காலங்களில்
பெரும் வணிக நிறுவனங்களின் ஆட்சியே நடைபெறும். இது
அவர்களுக்கு பொற்காலம். கிறீன்லாந்து, பனாமாக் கால்
வாய், கனடா இந்த வணிக முதலைகளின்
கனவாகும்.



rathan@thaiveedu.com



# அப்பிளில் வழியும் குருதி : கனிமங்களும் போர்க்குற்றங்களும்

— தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## முகப்பு:

நாம் பயன்படுத்தும் கைபேசிகளில் குருதியின் கறைகள் படிந்திருப்பது எமக்குத் தெரியுமா? அந்தக் குருதியின் மணத்தை நாம் என்றாவது உணர்ந்திருக்கிறோமா? பல இறந்த உடல்களின் அவலமும் பிஞ்சுக் கரங்களின் கூக்குரலும் எமது தொழில்நுட்பக் கருவிகளில் மௌனமாய் முனகுவதை நாம் அறிவோமா? இந்தக் கேள்விகள் புதியவையல்ல. ஆனாலும், இவை கவனிப்பாரற்ற கேள்விகளே. அல்லாவிட்டால் ஆண்டுக்கொருமுறை புதிய கைத்தொலைபேசியைக் கொள்வனவு செய்ய முண்டியடிப்போமா?

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனமொன்று அதன் தயாரிப்புகளில் சட்டவிரோதமாகப் பிரித்தெடுக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட கனிமங்களைப் பயன்படுத்துவதன் மூலம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக ஆபிரிக்க நாடொன்று குற்றம் சாட்டியுள்ளமையானது கவனத்தை ஈர்த்துள்ளது. மத்திய ஆபிரிக்க நாடான, கொங்கோ ஜனநாயக குடியரசு அப்பிள் நிறுவனத்திற்கு எதிராக கிரிமினல் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது. குறித்த நிறுவனமானது 'குருதிக் கனிமங்கள்' என்று கருதப்படும் இயற்கைக் கனிமங்களை அதன் தயாரிப்புகளில் பயன்படுத்தி நாட்டின் கிழக்குப் பிராந்தியத்திற்கு எதிரான போரைத் தூண்டுகிறது என்று கொங்கோ அரசு குற்றம் சாட்டியுள்ளது.

இது புதிய பிரச்சினையல்ல. ஆனால், தனது நீதிக்காக கொங்கோ போன்ற நாடுகள் தொடர்ச்சியாகப் போராட வேண்டியுள்ளது. கடந்தாண்டு ஏப்பிரல் மாதம், கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அரசாங்கம், தலைநகர் கின்ஷாசா-வில் அமெரிக்காவில் வசிக்கும் அரசியல்வாதியும் முன்னாள் ராணுவ அதிகாரியுமான கிறிஸ்டியன் மலங்கா தலைமையிலான தாக்குதலாளிகள் கொல்லப்பட்டதை அடுத்து, 'சதி முறியடிக்கப்பட்டதை' உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், அச்சுறுத்தல் இன்னும் முடியவில்லை. இதற்கு முன்னரும் இவ்வாறான பல சதி முயற்சிகள் அரங்கேறியுள்ளன.

மூன்று அமெரிக்கக் குடிமகன்கள், இந்தச் சதி முயற்சியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டமையானது, கொங்கோவின் அரசியல் ஸ்திரமின்மையில் மேற்குலகின் தொடர்ச்சியான பங்களிப்பைக் காட்டி நிற்கும் ஒரு சிறு புள்ளி மட்டுமே. இன்று கொங்கோ ஜனநாயகக் குடியரசில், அரசாங்கத்தின் கூற்றுப்படி, 250-ற்கும் மேற்பட்ட உள்ளூர் ஆயுதக் குழுக்களும் 14 வெளிநாட்டு ஆயுதக் குழுக்களும் நாட்டின் ஐந்து கிழக்கு மாகாணங்களில் சுரங்கங்கள் மற்றும் பிரதேசத்திற்காக போராடுகின்றன. வடக்கு கிவு மாகாணத்தின் தலைநகரான கோமா இன்னும் முற்றுகையின் கீழ் உள்ளது. இந்த நகரை ருவாண்டா அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட, மோசமான ஆயுதக் குழுவாக அறியப்பட்ட M23 கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

சமீப மாதங்களாக கொள்ளை, துப்பாக்கிச் சூடு, மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் கற்பழிப்பு ஆகியவை அதிகரித்து



வருகின்றன. ஆயினும்கூட, பல தசாப்தங்களாக நீடித்த மோதலை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பது குறித்த உரையாடல் காணாமல் போயுள்ளது. ஸ்திரமின்மையையும் வன்முறைப் போட்டியையும் நேரடியாகத் தூண்டுவதில் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கு முக்கியமானதாகும்.

இந்த மோதல்கள் அரசியல் ஸ்திரமின்மையுடன் இணைக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல. பொருளாதார விரக்தி மற்றும் கட்டுப்பாடற்ற போட்டி காரணமாக, இந்தச் சுரங்கங்கள் வன்முறை, மனிதக் கடத்தல் மற்றும் காலநிலை மாற்றத்திற்குப்

பங்களிக்கின்றன, இது கொங்கோ ஜனநாயக் குடியரசின் 70 சதவீதத்திற்கும் அதிகமான வளங்களை அச்சுறுத்துகிறது. இந்த அமைப்பு முறையானது 'நவீன கால அடிமைத்தனம்' என்று தகுதி பெறலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை கூறி யுள்ளது.

இந்தப் பரவலான முறைகேடுகளைத் தடுக்க அர்த்தமுள்ள தலையீடுகளை வழங்குவதற்குப் பதிலாக, மேற்கத்திய நீதி மன்றங்கள் தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது வழக்குத் தொட ராமல் பாதுகாக்கின்றன. 2019-ம் ஆண்டில், கொங்கோவில் கோபால்ட் சுரங்கங்களில் குழந்தைத் தொழிலாளர்களைச் சட்டங்களைப் புறக்கணித்து வேலைக்கு அமர்த்தியமைக்



காக அப்பிள், கூகுள், மைக்ரோசொப்ட், டெல் மற்றும் டெஸ்லா நிறுவனங்களுக்கு எதிராக சர்வதேச உரிமைகள் வழக்கறிஞர் கள் தொடுத்த வழக்கு அமெரிக்க பெடரல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டது. நீதிபதி தனது தீர்ப் பில், தொழில்நுட்ப நிறுவனங்களைப் பொறுப்புக்கூற வைக் கப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறினார். கொங் கோவின் 255,000 சுரங்கத் தொழிலாளர்களில், 40,000-இற்கு மேற்பட்டோர் குழந்தைகள் என்பதை பல அமைப்புகள் ஆதாரங்களுடன் அறிக்கையிட்டுள்ளன. இதில் மோசமானது யாதெனில் இவ்வாறு வேலைக்கமர்த்தப்படும் சிறுவர்களில் சிலர் ஆறு வயதுக்குட்பட்டவர்கள். அவர்கள் பயங்கரமான சூழ்நிலையில் வேலை செய்கிறார்கள்.

ஆனால் இது பிரச்சினையின் ஒரு சிறுபகுதி தான். இதன் முழுமையை ஒரு சிறிய உதாரணத்தின் மூலம் விளக்கலாம். கோபால்ட் கனிமம் பிரித்தெடுக்கப்பட்டவுடன் ருவாண்டாவின் செழிப்பான கறுப்புச் சந்தைகளில் மீண்டும் வெளிப்படுகிறது. இதனது விநியோகச் சங்கிலியை M23 கட்டுப்பாட்டில் வைத் துள்ளது. இப்போது ஸ்மார்ட் போனுக்குத் தேவையான கனி மங்களைப் பெறும் கனிமச் சுரங்க நகரங்களை இந்த அமைப்பு கைப்பற்றியுள்ளது. இதற்காக பல்லாயிரக்கணக் கானோர் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தக் கனிமங்கள் எண்ணற்ற ஆபிரிக்கர்களின் இழப்பில் நிறுவனங்களை வளப்படுத்துகிறது. அதுதான் நாம் பயன்ப டுத்தும் தொழிநுட்பக் கருவிகளின் பிரதான மூலப்பொருளா கவுள்ளது.

## கொங்கோவும் வளச்சுரண்டலும்:

உலகமயமாக்கப்பட்ட உலகில், டிஜிட்டல் இணைப்புகள் எம் மைத் தொடர்புபடுத்துகின்றன, அவற்றை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம். ஒரு டிஜிட்டல் வெறி இங்கு நிலவுகி றது. ஒரு காலத்தில் நமக்குத் தெரியாதவற்றைப் பற்றி நாம் தேடி ஆராய்ந்தே முழுமையாக அறிந்திருந்தோம், இப்போது நாம் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறோம், நம் கற்பனை அறிவின் அடிப்படையில் செயற்படுகிறோம், உலகளாவியதா கக் கருதும் நெறிமுறைகளில் வேரூன்றி, மற்றவர்களுக்கு நல் லது என்ன என்பதை அறிந்துகொள்வதில் நமது நம்பிக் கையை நாம் எப்போதும் அதிகமாக நம்புகிறோம். மில்லியன் கணக்கான ஏகாதிபத்திய நுண்-தொழில்முனைவோரைப் போலவே, மேற்கத்திய நுகர்வோர் 'வெள்ளை இரட்சகர்க ளாக' மாறுகிறார்கள், கருத்தியல் ரீதியாக மிகவும் தொலை தூர இடங்களைக் காலனித்துவப்படுத்துகிறார்கள், மற்றும் ஒரு சிறந்த உலகத்தை ஊக்குவிக்கும் மனித உரிமைகள் இயக்கங்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும், நுகர்வோர் அரசாங்கங் கள் மற்றும் போர் வீரர்கள், கடத்தல்க்காரர்கள் மற்றும் பெரு நிறுவனங்களை உலகமயமாக்கப்பட்ட சகாப்தத்தில் உலக ளாவிய மதிப்புகளின் பாதையில் தங்கள் செயல்களைக் கணக்கிடும்படி கோரப்படுகிறார்கள். அதன்வழி கட்டமைக் கப்பட்ட கதையாடல்களின் வழி அவர்கள் நுகர்வோராகவும் குடிமக்களாகவும் வழிநடத்தப்படுகிறார்கள். அவை மனித உரிமைகள், மனிதாபிமான சட்டங்கள், கிறிஸ்தவ விழுமியங் கள், தாராளவாத பாரம்பரியம் பற்றிய பொது அறிவு விதிமு றைகள் மற்றும் யோசனைகளில் வேரூன்றியுள்ளன. இதன்படி மேற்குலகினர், உலகின் கிழக்கை அல்லது அபிவிருத்திய டையும் நாடுகளிற்கு உதவுகிறார்கள். அல்லாவிடின் அந் நாட்டு மக்கள் பசியால் உயிரிழந்து விடுவார்கள். எனவே அங்கு நிகழும் உற்பத்திச் செயற்பாடுகளுக்கு மேற்குலகின ரின் நுகர்வே காரணம். அவ்வகையில் நுகர்வதனூடு மேற்கு, கிழக்கை வாழவைக்கிறது.

இங்கு அழிவுபடுத்தும் மற்றும் கொடூரமான செயற்பாடுகளை உள்ளடக்கிய ஆபிரிக்கா பற்றிய விளக்கம் எதுவும் இல்லை. ஆபிரிக்காவின் பின்தங்கிய நிலை, வளர்ச்சியடையாத நிலை மற்றும் வன்முறை பற்றிய கதைகள் அவர்களை நாகரிகமடை யாதவர்களாக ஒரே மாதிரியாகச் சித்திரிக்கின்றன. இந்தக் கதைகள் காலனித்துவ தலையீட்டினைச் சுத்தப்படுத்துகின் றன, மற்றும் மேலும் நியாயமான, சமத்துவமான உலகத்தை ஊக்குவிக்கும் நவதாராளவாத வார்த்தை ஜாலங்களுடன் 'அரசியல் வெளியை' ஆதிக்கம் செலுத்துகின்றன. இவை இறுதியில் இலாபத்தை ஏகபோகமாக்குகின்றன மற்றும் உல களாவிய பொருளாதார உறவுகள் மற்றும் வன்முறை அரசிய லின் நிலையை நிலைநிறுத்துகின்றன. வன்முறை மோதலுக் கும் இயற்கை வளங்களுக்கும் இடையே உள்ள சர்ச்சைக்கு ரிய உறவு இதற்கொரு நல்ல உதாரணம்.

இன்றைய கிழக்குக் கொங்கோவின் பிரச்சினையின் அடியாழ மாக மூன்று கனிமப் பொருட்கள் உள்ளன. வெள்ளீயம் அல் லது தகரம், டான்டலம் (கோல்டன்) மற்றும் டங்ஸ்டன். இவை

‘3T’ (Tin, Tantalum (coltan) & Tungsten) என அறியப்படுகின்றன.இவை உயர்நிலை தொழில்நுட்பத் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படுவதால் 'டிஜிட்டல் கனிமங்கள்' என்றும் அழைக்கப்படும் இவை பிராந்தியத்தில் வன்முறையைத் தூண்டுகின்றன.

சமீபத்திய கொங்கோவின் போர்களில் கனிமங்கள் ஒரு பங்கைக் கொண்டிருந்தாலும், கிழக்கு கொங்கோவின் ‘தவிர்க்க முடியாத பாதுகாப்பு புதிர்’ ஒரு பரந்த வெளிப்புற மற்றும் வரலாற்றுக் காரணிகளில் வேரூன்றியுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களில், காலனித்துவப் பின்னடைவு, பிராந்திய அரசியல், உள்நாட்டு நெருக்கடிகள், நிலம் மற்றும் அடையாளத்தைச் சுற்றியுள்ள போட்டி, பலவீனமான நிர்வாகம் மற்றும் அரசியல் போட்டிகள் ஆகியவற்றின் கலவையானது வன்முறை மற்றும் அணி திரட்டலுக்கு வழிவகுத்தது. இந்தப் பின்னணியில், வழக்கமான இராணுவங்கள், கிளர்ச்சிக் குழுக்கள் மற்றும் அனைத்து வகையான அதிகாரத் தரகர்கள்-அரசியல்வாதிகள், பாரம்பரிய இனக்குழுத் தலைவர்கள் மற்றும் வணிகர்கள்-ஒரு மோதலில் இருந்து மற்றொரு சுழற்சிக்கு பொதுமக்களின் பின்னணியில் செயற்படுகிறார்கள்.

போர்களுக்குப் பணம் செலுத்த வேண்டிய அவசியம் மற்றும் ஆதாயத்திற்கான வாய்ப்புகளைச் சுரண்டுவது போன்றவற்றின் கலவையில், சில அரங்காடிகள், அதிக வருவாய் ஈட்டும் உத்தியின் ஒரு பகுதியாக, கனிமங்களின் வர்த்தகத்தை நாடினர். இதை மேற்குலகத் தொழில்நுட்ப உற்பத்தி நிறுவனங்கள் தமக்கு வாய்ப்பாக்கின. சில இந்த மோதல்களுக்கு நேரடியாக நிதியளித்தன. ஆயுதக்குழுக்களை உருவாக்கின, வழிநடத்தின.

இன்று கொங்கோ ஜனநாயகக் குடியரசில் வன்முறை மற்றும் தலையீடுகளின் தொடர்ச்சிகள் மேற்கத்திய அரசியல் மற்றும் முதலாளித்துவத்தின் ஒருங்கிணைப்பில் வேரூன்றி உள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து காலனித்துவத்திற்கு முந்தைய கொங்கோ மற்றும் அதன் காலனித்துவத்தின் முழு வரலாறும், ஒரு பரந்த நிலப்பகுதியாக (தவறாக) கருதப்பட்ட ஒரு பரந்த நிலத்தில் (தவறாக) காலடி எடுத்து வைப்பதற்கான மேற்கத்திய முயற்சிகளிலிருந்து முதலில் உருவான பூரணமற்ற, அதீத வேகத்தை நினைவில் கொள்வது மிகவும் முக்கியமானது. புதிய சர்வதேச உறவுகளின் சகாப்தம் இதனை இன்னும் சிக்கலாக்கியுள்ளது.

## அப்பிளின் மீதான வழக்கு:

மின்னணுவியல், வாகனம் மற்றும் விண்வெளித் தொழில்களுக்கு முக்கியமானவையாகக் கருதப்படும் 3T கனிமங்கள் கொங்கோவிலிருந்து சட்டவிரோதமாகப் பிரித்தெடுக்கப்பட்டு விற்பனையாகும் விநியோகச் சங்கிலிகளை விசாரிக்க அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் சட்ட நிறுவனம் ஒன்றை 2023 இறுதியில் கொங்கோ அரசாங்கம் பணிக்கமர்த்தியது. அதனது ஆய்வுகளின் அடிப்படையிலேயே அப்பிள் நிறுவனத்திற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2023-ம் ஆண்டிற்கான தனது அறிக்கையில், அப்பிள் நிறுவனம் தனது டான்டலம் கனிம வழங்குநர்களாகப் பட்டியலிட்டுள்ள 32 உருக்காலைகள் மற்றும் சுத்திகரிப்பு நிறுவனங்களில் குறைந்தது ஒன்பது நிறுவனங்கள் ருவாண்டாவிலிருந்து கனிமத்தைப் பெறுகின்றன. ஆனால் ருவாண்டாவின் முக்கிய 3T கனிமங்கள் எவையும் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அக்கனிமங்கள் ருவாண்டாவில் இல்லை. இதை குறித்த சட்ட நிறுவனம் ஏப்ரல் 2024-ல் ‘Blood Minerals: The Laundering of DRC’s 3T Minerals by Rwanda and Private Entities’ என்ற அறிக்கையில் தெளிவாக விளக்கியுள்ளது.

டான்டலம் என்பது கோல்டனில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு அரிய பூமி உலோகமாகும், அதன் உலகளாவிய இருப்



பில் 64% கொங்கோவில் உள்ளது. அதன் பெரும்பகுதி வடக்கு கிவு மாகாணத்தில் உள்ள ஒரு சுரங்க நகரமான ருபாயாவில் குவிந்துள்ளது, இது டான்டலத்தின் உலகளாவிய விநியோகத்தில் 15%-ற்கும் அதிகமாக உற்பத்தி செய்கிறது. இப்பகுதி கடந்த ஏப்ரல் மாத இறுதியில், M23-ல் கைப்பற்றப்பட்டது. அப்போதிருந்து, M23 ருபாயாவின் கோல்டன் சுரங்கங்களில் இருந்து 300,000 அமெரிக்க டாலர்களை மாதாந்த வருமானமாக ஈட்டி வருகிறது.

‘இன்று, கனிம வளங்கள் நிறைந்த மாகாணங்கள் கொங்கோ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ருவாண்டாதான் அங்கு கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கிறது,’ என்று மேற்குறித்த அறிக்கை கூறுகிறது. கொங்கோவின் கனிமங்களைக் கொள்ளையடிக்கும் செயலில், ருவாண்டாவின் ஆசி பெற்ற ஆயுதக் குழுக்கள் நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கொன்றுள்ளன. பாலியல் பலாத்காரம் செய்துள்ளன. மேலும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளளனர். இதற்கு முன்னர் ஏற்கனவே மோதல்களால் ஏழு மில்லியன் கொங்கோலியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

‘இன்றும் அப்பிள் போன்ற நிறுவனங்கள் தாங்கள் மோதலில்லாத பகுதியில் இருந்து அறமான முறையிலேயே கனிமப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதாகத் துணிந்து பொய் கூறுகின்றன’ என்று அவ்வறிக்கை குற்றஞ் சாட்டுகிறது. குறித்த

அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர், இது தொடர்பி லான சில கேள்விகளுக்கு குறித்த சட்ட நிறுவனமும் கொங்கோ அரசால் நியமிக்கப்பட்ட பிரான்ஸ் நாட்டுச் சட்ட நிறுவனமும் அப்பிளின் தலைமை நிர்வாக அதிகாரி டிம் குக் கிடம் பதில்களைக் கோரின. இக் கேள்விகளுக்குப் பதிலளிப் பதற்கான கால அவகாசமாக மூன்று வாரங்களை அப்பிள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது, ஆனால் காலக்கெடு முடிந்த நிலையில் 'பதில் இல்லாதது, நாங்கள் கேட்ட கேள் விகள் பொருத்தமானவை என்பதை அப்பிள் நிறுவனம் மறை முகமாக ஒப்புக்கொள்கிறது,' என இரு சட்ட நிறுவனங்களும் தெரிவித்தன.

இதைத் தொடர்ந்து டிசம்பர் 16 அன்று, கொங்கோவின் வழக் கறிஞர்கள் பிரான்ஸில் அப்பிள் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தனர், அதைத் தொடர்ந்து டிசம்பர் 17 அன்று பெல்ஜியத்தில் மற்றொரு வழக்கு தொடரப்பட்டது. இது புதியதொரு தொடக்கமாகக் கருதப்படுகிறது. இந்தப் பின்புலத்தில் கொங்கோவில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்ப டுத்துவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது மேலதிக தகவல். இன்றைய கள நிலவரம் யாதெனில் அரசுகளை விட பல்தேசிய நிறுவனங்கள் பெரியனவாயும் செல்வாக்குள்ளனவாயும் மாறியுள்ளன. அதன் ஆபத்துக் களை இயற்கை வளங்களைக் கொண்ட நாடுகள் எதிர்நோக் குகின்றன.

## முடிப்பு:

இன்று கொங்கோவில் நிகழும் வளக்கொள்ளை பற்றிய உல களாவிய சித்திரம் என்ன என்ற கேள்வியை நாம் எழுப்பியாக வேண்டும். உண்மையை, நெறிமுறை மற்றும் மனிதாபிமான ஆடுகளங்களால் கவசம் செய்த, மேற்குலகப் பிரச்சாரகர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் காலனித்துவ சிந்தனை மர பின் தொடர்ச்சியிலேயே இதை மொழி பெயர்க்கின்றனர். ஆபிரிக்கர்கள் மற்ற ஆபிரிக்கர்களைக் கொல்லும் ஒரு இருண்ட போர் மண்டலத்தின் படத்தை அவர்கள் வரைந்த னர். இதனால் படுகொலைகளை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியைக் கட்டியெழுப்ப வெளிநாட்டு நல்லெண்ணம் தேவைப்படுகிறது. இது சர்வதேச தலையீட்டாளர்களுக்கு ஒரு ஆழமான அரசியல் சிக்கலைச் சமாளிப்பதற்கு அரசியல் சார்பற்ற மற்றும் வரலாற்று ரீதியான அணுகுமுறையை உரு வாக்குவது மட்டுமல்லாமல், உலகளாவிய விநியோகச் சங் கிலி முதலாளித்துவத்தின் தொலைதூரப் புறநகரில் அமைந் துள்ள ஒரு பிரச்சினைக்கு ஒரு நவதாராளவாத மற்றும் இலா பம் சார்ந்த தீர்வை நியாயப்படுத்தவும் அனுமதித்தது. இது உலகளாவிய கொள்கை வகுப்பிலும் இன்னும் பரந்த அள வில் நிகழும் அபிவிருத்திகளை எதிரொலிக்கிறது. இதே பாணியில், இவையும் பெரும்பாலும் மூலதனம் மற்றும் சந்தை களின் தேவைகளால் இயக்கப்படுகின்றன.

எங்கள் மின்னணு சாதனங்களுக்குத் தேவையான கனிமங்க ளில் கணிசமான பகுதி ஆபத்தான மற்றும் பயங்கரமான நிலைமைகளை எதிர்கொள்ளும் கொங்கோ தொழிலாளர்க ளால் பிரித்தெடுக்கப்படுவதால், கொங்கோவில் உள்ள மோதலுக்கு நாம் அனைவரும் பங்களிக்கிறோம். இந்த கனி மங்களுக்கான விநியோகச் சங்கிலிகள் ஊழலால் பாதிக்கப் பட்டுள்ளன மற்றும் கொங்கோவில் நடந்துவரும் ஆயுத மோதல்களுக்கு எரிபொருளாக உள்ளன. தொழில்நுட்ப நிறு வனங்கள் இந்த யதார்த்தத்தை அறிந்திருந்தாலும், நுகர் வோர் என்ற முறையில் நாங்கள் கண்மூடித்தனமாக இருக்கி றோம், இதனால் நிலைமையை மோசமாக்குகிறோம். கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கதை தொலைதூர சோகம் மட்டுமல்ல, நமது கூட்டுத் தேர்வுகள் மற்றும் பொறுப் புகளின் பிரதிபலிப்பாகும். நமது சமூகம் உட்பட சர்வதேச சமூகத்தின் மௌனமும் அலட்சியமும் இதற்கு முழுப் பொறுப்பு.

கொங்கோவின் தற்போதைய நெருக்கடிக்கு மேற்கு நாடுக ளின் அமைதியான அலட்சியம் முக்கிய காரணம். பல்தேசிய தொழில்நுட்ப நிறுவனங்களின் நலன்களை அவை முன்னி றுத்துகின்றன. அதேவேளை அதற்கு இசைவாக ஊடகங்க ளும் நடந்து கொள்கின்றன. கொங்கோவின் அவலம் பெரு கிய முறையில் மக்களை, இன்னும் தெளிவாகச் சொன்னால் நுகர்வோரைச் சென்றடையாத வண்ணம் பார்த்துக் கொள்ளப் படுகிறது.

பல மேற்கத்திய தொழில்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆதாரமாக இருக்கும் வளங்களைப் பிரித்தெடுப்பதில் உள்ள கடுமையான உண்மைகளை அம்பலப்படுத்துவதற்கு சிறிய ஊக்கம் சில ஊடகவியலாளர்களுக்கு இருந்தாலும் அமைதி காக்கப்படுகிறது. பெருநிறுவன நலன்கள் இந்த அமைதியைப் பேணுவதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண் டுள்ளன.

விநியோகச் சங்கிலிகளில் வெளிப்படைத்தன்மை இல்லாமை குறித்து யாரும் கேள்வி கேட்பதில்லை. இதனால் மேற்கத்திய நுகர்வோருக்கும் கொங்கோ மக்களின் துன்பங்களுக்கும் இடையிலான தொடர்பை இலகுவாக மறைக்க இயலுகிறது. நமது மின்னணு சாதனங்கள் மற்றும் மின்சார வாகனங்களை இயக்கும் கனிமங்கள், கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் சுற்றுச்சூழல் பேரழிவுகளின் நிலைமைகளின் கீழ் பிரித்தெடுக்கப்படுகின்றன என்ற தகவலே தெரியாதவர்களா கவே பலர் இருக்கிறார்கள். அதிலும் சுற்றுச்சூழல் பாதுகாவ லர் என்று புதுப்பிக்கத்தக்க சக்தி குறித்து பேசும் பலர் இந்த விடயத்தைக் கணிப்பில் எடுப்பதில்லை.

இன்று இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தும் நாமனைவரும் கொங்கோவில் வழியும் குருதியின் பங்காளி கள். இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு, இந்த சங்கடமான உண் மைகளை எதிர்கொள்வது பிரதானமானது. நுகர்வோர் இன்றி வர்த்தகம் இல்லை. எனவே இது குறித்து ஒவ்வொருவரும் கவ னம் கொள்ள வேண்டும். வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரங்காடி களிடமிருந்து தொடர்ந்து கோருவது அவசியம். அப்போது தான், கொங்கோ மற்றும் பிற வளங்கள் நிறைந்த ஆனால் உலகின் ஏழ்மையான பகுதிகளை நீண்டகாலமாகப் பாதித்தி ருக்கும் சார்பு மற்றும் சுரண்டலின் சுழற்சிகளை உடைக்க முடியும். இது நாம் அனைவரும் சுமக்கும் பொறுப்பாகும்.



meenilankco@thaiveedu.com




இன்றைய உலகின் எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் மூல வேராக இருப்பது ஒழுக்க விழுமிய இழப்புத்தான். ஒழுக்க விழுமியங்கள் மீதான பார்வை இல்லாமல் போனதன் விளைவாகவே ஒருவர் மற்றவரை அடித்துத் துன்புறுத்தி இன்பம் காண முனைகின்றனர். இது பாடசாலைகளிலும் வளரிளம் தலைமுறையிடமும் சர்வ சாதாரணமாக மேலோங்கி இருக்கின்றது.

பிறரைப் புறக்கணிக்கின்ற, விமர்சிக்கின்ற அவமானப்படுத்துகின்ற, மட்டம் தட்டுகின்ற அனைத்துமே அற்பமாக நடந்து முடிகின்றன. தனது சுயநலத்திற்காக யாரை வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ள முடியும். பார்த்து கேட்க யார் உள்ளனர்? கையிலே பணம் இருந்தால் சட்டத்தின் முன்னால் அதனை வீசி எறிந்துவிட்டுத் தப்பிக்கலாம் என்ற கேவலமான மனப்பான்மை மேலோங்கி இருக்கின்றது.

இந்த நிலையிலிருந்து அடுத்த தலைமுறை முழுமையாக மாற வேண்டும். பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களும் ஒழுகலாறும் எனும் பாடப்பரப்பினூடாக மாத்திரமே இத்தகைய மிகச்சிறந்த மனப்பாங்கினைக் கொண்டுவர முடியும். வெறுமனே பாட போதனைகளாக, உபதேசங்களாக மாத்திரம் அமையாமல் இதனது உள்ளார்ந்த அர்த்தத்தை உணர்வு பூர்வமாக உள்வாங்கச் செய்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

இன்று கல்வி, பணத்திற்கான பண்டமாக மாற்றப்பட்டுள்ளது. பெருந்தொகைப் பணம் கொடுத்துப் பெறப்படக்கூடிய கல்வியே பெறுமதியான கல்வியாகக் கணிப்பிடப்படுகிறது. பெருந்தொகைக் கட்டணத்தைப் பெற்றுக் கல்வியைக் கொடுக்கின்ற தனியார் நிறுவனங்களின் கல்வி மாத்திரமே சிறந்த கல்வியாகக் கருதப்படுகின்றது. அங்கு கற்பதே பெருமிதமாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் கல்வி மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற மனப்பாங்கு மாற்றமோ, நடத்தை மாற்றமோ, சமூக மாற்றமோ ஏற்பட்டதாக உணர முடியவில்லை. அவ்வாறு காணக் கிடைப்பது அரிதாயுள்ளது.

குடும்பச் சூழலில் கண்டு அலுத்துப்போன பண்பாட்டு வறுமையை, ஒழுக்க விழுமிய இழப்பை வகுப்பறைகளிலும் கண்டுகொள்ள முடிகின்றது. வயது வேறுபாடு இன்றி, பாலின வேறுபாடு இன்றி, சமய வேறுபாடு இன்றி இப்பொழுதும் முறுகலும் மோதலும் முரண்பாடும் பகைமையும் வைராக்கியமும் வளர்த்துவிடப்படுகின்றன. ஒவ்வொன்றையும் காரணம் காட்டி அதற்கு தீனி போடப்படுகின்றது. ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றது.

ஆசிரிய - மாணவர் உறவு, ஆசிரியர் - பெற்றோர் உறவு, மாணவர் - மாணவர் உறவு என்பனவும் தொடர்ந்தும் மிக மோசமான விரிசலையே கண்டு வருகின்றன.

எண்ணங்களில் மனப்பாங்கில் வார்த்தைகளில் நடத்தைகளில் என்று மிக மோசமான கலாசாரம் ஒன்றையே மாணவர்கள் கட்டியெழுப்ப முனைகின்றனர். இதற்குச் சினிமாவும் மிகப் பிரதான காரணி எனில் பிழையாகாது. எந்தளவுக்குப் பிறரைத் தாம் மோசமாக நடத்துகின்றோமோ அந்த அளவுக்குத் தாம் உயர்ந்தவர்கள், சிறந்தவர்கள் என்ற மனப்பாங்கு மிகுந்திருக்கின்றது. அதேபோல திறந்து விடப்பட்டிருக்கின்ற திறன்பேசிகளும் அதன் ஊடாக வரக்கூடிய சமூக ஊடகச் செயலிகளும் கட்டற்ற பாலியல் கலாசாரங்களும் அதற்குத் துணை போகும் விளம்பரங்களும் மாணவர்களை இன்னொரு திசைக்கு அழைத்துச் செல்வதனைக் காணலாம்.

எழுதவும் வாசிக்கவும் மாத்திரம்தான் பாடசாலைகளும் வகுப்பறைகளும் அது சார்ந்த நடவடிக்கைகளும் பரீட்சைகளும் என்று மட்டும் அமைந்துவிடக் கூடாது. மாணவர்களது உள்ளார்ந்த ஒழுக்கத்தில், விழுமியத்தில், சமூகம் பற்றிய பார்வையில், பதிவில் மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

***'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்***
***உயிரினும் ஓம்பப் படும்'***

என்பது வள்ளுவர் வாக்கு.

ஆனால் ஒழுக்கத்தை தூக்கி எறிந்துவிட்டு, பண்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு விழுமியங்களை வேண்டாத ஒன்றாக பார்க்கக்கூடிய ஒருவித மனோநிலைதான் இன்றைய தலைமுறையினரிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது. இந்நிலைமை சீரமைக்கப்பட வேண்டும்.

சக பாடிகளை, சக மாணவர்களை, சக சமயத்தினரை, ஆசிரியர்களை, மூத்தவர்களை அவமரியாதைக்கு உட்படுத்துகின்ற பாடசாலை சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கின்ற ஒரு தலைமுறையைத்தான் இன்று பார்க்கின்றோம்.

Moral ethical environment கொண்ட அதாவது நற்குணங்கள், விழுமியங்கள், பண்பாடுகள் போசிக்கப்படுகின்ற, நடைமுறைப்படுத்தப்படுகின்ற சூழமைவுள்ளதாகப் பாடசாலைகள், வகுப்பறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். வெற்றுக் கோஷங்களாக, பதாகைகளாக மாத்திரம் இவை காட்சிப்படுத்தப்படாமல் நடைமுறையில் பேச்சில் நடையில் உடையில் என அனைத்திலும் இவை வெளிப்பட வேண்டும். அதேபோல சிறுவர்நேயத் தன்மை கொண்ட (child friendly environment) சூழலாகவும் பாடசாலைகள் மாற வேண்டும்.

குறிப்பாக வீட்டுச் சூழலில் இருந்து மன அழுத்தங்களோடு (emotional stress) மாணவர்கள் பாடசாலை வந்தாலும்கூட



அவை எல்லாவற்றையும் மறந்து உல்லாசமாக, உற்சாகமாக ஆர்வத்தோடு (curiosity) கற்கக் கூடிய சூழமைவு கொண்ட இடங்களாகப் பாடசாலைகள் மாற வேண்டும்.

வகுப்பறைகள் கண்ணுக்கும் மனதுக்கும் குளிர்ச்சி தரக்கூடிய இடங்களாக மாற வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களது கற்றலையும் பரீட்சையையும் மாத்திரம் நோக்காகக் கொண்டவர்களாகச் செயற்படாமல் மாணவர்களது மன அழுத்தங்களுக்கும் ஒத்தடம் போடக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய ஆளுமை, மேம்பாட்டு விருத்தி போன்றவற்றோடு சிந்தனை விருத்தி, ஒழுக்க விருத்தி, சமயவிருத்தி என்ற அனைத்துத் துறை சார்ந்த விருத்திகளுக்கும் பங்களிப்புச் செய்யக்கூடிய, அனைத்தையுமே ஒளிவு மறைவின்றிப் பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றுப்படுத்துநராக ஆசிரியர்கள் மாற வேண்டும்.

இத்தகைய ஆசிரியர்கள் மூலம் அனைத்துத் தலைமுறையையும் ஒழுக்க ரீதியாகச் சிறப்பாக வழி நடத்த முடியும். இத்தகைய முன்மாதிரி ஆசிரியர்களது வார்த்தைகளுக்குக் கட்டுப்படக்கூடிய இயல்பான தன்மை அந்த மாணவர்களிடம் நிச்சயம் உருவாகும்.

அதற்கேற்றாற்போல் ஆசிரியர்களும் மாணவர்களது மனோநிலையைப் புரிந்துகொண்டு அவர்களுடைய பிரச்சினைகளைப் புரிந்து அதன் ஊடாகக் கல்வியை வழங்கும்பொழுது மாணவர்களது கலை, சமூக, சமய திறன்கள், ஈடுபாடுகள் எல்லாம் மேம்பாடடையும்.

இத்தகைய மாணவர்கள், சமூகத்துக்குச் சுமையாக மாறாமல் சமூகத்திற்குச் சுகமான மனிதர்களாக மாறுவார்கள்.

Think locally to act globally என்பதற்கிணங்க தன் சமூகம் சார்ந்து சிந்தித்தால்தான் அகிலம் சார்ந்து செயற்பட முடியும் என்பதற்கு ஏற்றாற் போல சர்வதேச பிரஜைகளை (global citizens), இணைய பிரஜைகளை (digital natives) கோளமயப்பட்ட பிரஜைகளை உருவாக்க முடியும்.

இன்றைய கல்விமுறை பரீட்சைகளைக் கடந்து புள்ளிகளைக் கடந்து மனித மாண்புகளை காக்கக்கூடிய தன்மை பெற்றவர்களாக, சுபாவம் கொண்டவர்களாக உள்ளவர்களை உருவாக்க வேண்டும். அவர்களால்தான் சகவாழ்வும் சமாதானமும் சாத்தியப்படும்.

முரண்பாடுகளின்பொழுது முரட்டுத்தனமாக நடக்காமல் மென்மையாக, மிருதுவாக பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து விட்டுக் கொடுத்து நெகிழ்வுத் தன்மையுடன் நிலைமையைச் சமாளித்துத் தீர்வுகளை நோக்கி நகரக்கூடிய பண்புகளை அவர்கள்தான் வளர்த்துக்கொள்வார்கள்.

இதற்கு அறிவு மாத்திரம் போதாது. அறிவோடு உணர்வையும் ஒன்றிணைத்து அன்பையும் சேர்த்து கல்வியை நடைமுறை வாழ்க்கைக்கு உகந்ததாகக் கொடுத்தால் மாத்திரமே இந்த உயர்ந்த இலக்கை அடைய முடியும்.

கல்வி மனித பண்பாட்டு விழுமியங்களை, மானுட நேயத்தை உருவாக்கக் கூடியதான வகுப்பறைகளை அடுத்த தலைமுறைக்குக் கையளித்தால் மாத்திரமே உயர்ந்த மேலான சமுதாயமொன்றைக் கல்விக்கூடாக உருவாக்க முடியும். அவர்களிடம் தான் மிகச்சிறந்த மனப்பாங்கு மாற்றமும் நடத்தை மாற்றமும் உருவாகும்.



bisthamy.ahamed@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***




பிரபஞ்சம் தொடர்பான மனிதரின் தேடல் வேட்கை நாளுக்கு நாள் காட்டுத் தீயைப் போன்று கட்டுக்கடங்கா வேகத்தில் பரவி வியாபித்து விஸ்வரூபம் எடுத்துள்ளது என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் பிரபஞ்சத்தின் கோடான கோடி இரகசியங்களைத் தேடிக் கண்டுபிடித்து உலகிற்கு உரக்கச் சொல்லும் விஞ்ஞானத் தொழில்நுட்ப ஆய்வுகளுக்குச் செயற்கை நுண்ணறிவுடன் கூடிய மனித வடிவிலான ரோபோக்களின் வகிபாகமானது இன்றியமையா அங்கமாக மாற்றமடைந்துள்ளது. மனித விண்வெளி வீரர்கள் நிலவில் கால் பதித்த காலம் கடந்து சூரியனுக்கு அருகே சென்று ஆய்வு செய்து திரும்பும் இயந்திர மனிதர்களின் காலம் உதயமாகியுள்ளது. விண்வெளியில் ஆய்வுகளுக்கு மனிதர்களை அனுப்பி வைக்கும் காலம் மருவத் தொடங்கி, இயந்திரங்கள் அந்த இடத்தை நிரப்பும் புதுயுகம் பற்றிய ஊடாடலாக இந்தப் பத்தி அமைந்துள்ளது.

கடந்த நத்தார் பண்டிகைக் காலப் பகுதியில் ஒரு தானியங்கி விண்கலமொன்று சூரியனை நெருங்கி ஆய்வு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. இதற்கு முன்னர் மனிதரால் உருவாக்கப்பட்ட எந்த சாதனங்களையும் விட நெருக்கமாக, வளிமண்டலத்தின் வழியாகச் சென்று, நாசாவின் பார்க்கர் சோலார் ப்ரோப் (Parker Solar Probe) சூரியனைப் பற்றி மேலும் கண்டறியும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. விண்வெளியின் வானிலை எவ்வாறு இந்தப் பூமியில் தாக்கம் செலுத்துகின்றது என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆய்வு மனிதகுல வரலாற்றில் ஒரு சரித்திர மைல் கல்லாகவே நோக்கப்பட வேண்டும், இது ஒரு விசேட தருணமாகும். குறிப்பாக இந்த ஆய்வு நடவடிக்கையானது மனிதரின் நேரடியான பங்கேற்பு இன்றி நடைபெறும் ஆய்வு என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். ஏற்கனவே திட்டமிட்டபடி தானியங்கி அடிப்படையில் பூமியுடன் தொடர்பு இன்றி இந்த விண்வெளி ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஆறு தசாப்தங்களாகவே சூரிய குடும்பத்தின் பல்வேறு இடங்களுக்குத் தானியங்கி இயந்திர விண்வெளி ஆய்வுக் கலங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக மனிதரால் நெருங்க முடியாத இடங்களுக்கு இந்த விண்கலங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பார்கர் விண்கலம் சூரியனுக்கு அருகாமையில் ஆய்வில் ஈடுபட்ட போது அது சுமார் ஆயிரம் பாகை செல்சியஸ் அளவிலான வெப்பநிலையை எதிர்கொள்ள நேரிட்டது.

அதி உயர் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப மேம்படுத்தல்களைக் கொண்ட இந்தத் தானியங்கி விண்கலங்களின் எழுச்சியானது எதிர்கால விண்வெளி ஆய்வுகளில் மனிதர்களின் வகிபாகம் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது என்பது மறுக்கப்பட முடியாததாகும்.

எதிர்வரும் காலங்களில் விண்வெளி குறித்த ஆய்வு நடவடிக்கைகளுக்கு மனித விண்வெளி வீரர்கள் தேவைப்படுவார்களா ? என்று சில விஞ்ஞானிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

‘ரோபோக்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன, மேலும் மனிதர்களை அனுப்புவதற்கான தேவைப்பாடு தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்கின்றது.’ எனக் குறிப்பிடும் பிரபல வானியலாளர் மார்ட்டின் ரீஸ் பிரபு (Lord Martin Rees) மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனத் தாம் கருதவில்லை எனவும் விண்வெளி ஆய்வுகளுக்குச் செல்லும் விண்வெளி ஆய்வாளர்களுக்கு ஏற்படும் அபாயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டுகிறார்.

மேலும், மனிதர்கள் விண்வெளிக்குச் செல்வதானது சாகசப் பயணங்களாக இருக்க வேண்டுமெனவும் பணம் படைத்தவர்களுக்கு அது ஒரு சாகச அனுபவமாக அமையக் கூடும் எனவும் அதற்காக அவர்கள் சொந்தப் பணத்தைச் செலவிட்டு இந்த விண்வெளிப் பயணங்களின் சாகச அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் கருதுகிறார்.

‘மிகவும் பாரதூரமான விண்வெளி ஆய்வு நடவடிக்கைகளுக்கு, ரோபோ தொழில்நுட்பத்தை அதிகம் விரும்புவதாக லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் இயற்பியலாளர்

ஆண்ட்ரு கோட்ஸ் (Andrew Coates) ஒப்புக்கொள்கிறார்.' எனக் குறிப்பிடும் அவர், 'ரோபோக்கள் அதிக தூரம் சென்று மேலும் பல ஆய்வுகளை மேற்கொள்வதாகவும் அவை, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பி வைப்பதை விடவும் செலவு குறைந்தவை எனவும் செயற்கை நுண்ணறிவு



தொழில்நுட்பத்தினால் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு ரோபோக்கள் மதிநுட்பத்துடன் செயற்பட்டு வருவதாகவும் இவை நாளுக்கு நாள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும்' கருத்துரைக்கிறார்.

எது எவ்வாறிருப்பினும் வளர்ந்து வரும் இளம் விண்வெளி வீரர்களுக்கு இந்த ரோபோக்கள் எவ்வாறு சவால் மிக்கதாக மாறக்கூடும் என்ற கேள்வி எழுகிறது. 'மனிதர்களினால் செய்யக்கூடிய சில விடயங்களை ரோபோக்களினால் செய்ய முடியாது, ரோபோக்கள் எவ்வளவு அதி நவீன மேம்படுத்தல்களைக் கொண்டமைந்தாலும் சில கருமங்களைச் செய்ய முடியாது' என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

## மனிதகுலம் எதிர் ரோபோக்கள்:

ரோபோடிக் விண்கலம் ஞாயிற்றுத் தொகுதியில் காணப்படும் ஒவ்வொரு கிரகத்தையும், பல சிறு கோள்கள் மற்றும் வால் மீன்களையும் பார்வையிட்டுள்ளது.

ஆனால், பூமியின் சுற்றுப்பாதை மற்றும் சந்திரன் ஆகிய இரண்டு இடங்களுக்கு மட்டுமே மனித விண்வெளி வீரர்கள் சென்றுள்ளனர்.

1961-ல் அப்போதைய சோவியத் யூனியனைச் சேர்ந்த விமானியும், விண்வெளி வீரருமான யூரி ககாரின் (Yuri Gagarin) பூமிக்கு வெளியே விண்வெளிப் பயணம் மேற்கொண்ட முதல் விண்வெளி வீரராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். அன்று முதல் இதுவரையில் சுமார் 700 பேர் மொத்தமாக விண்வெளிப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர். அவற்றில் பெரும்பாலானவர்கள் சுற்றுப்பாதையில் (பூமியைச் சுற்றி) அல்லது துணைச் சுற்றுப்பாதைகளில் பயணம் செய்துள்ளனர்.

'விண்வெளிக்கு மனிதர்கள் பயணம் செய்வதற்கான பிரதான ஏதுக்களில் ஒன்றாக, பெருமிதம் காணப்படுகிறது. தங்கள் அரசியல் அமைப்பு சிறந்தது, தங்கள் மக்கள் புத்திசாலிகள் என்பதை வெளிக்காட்டுவதற்கு விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி வைப்பது ஒரு சிறந்த வழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது' என டெக்சாஸின் ரைஸ் பல்கலைக்கழகத்தின் (Rice University) உயிரியலாளரும் 'செவ்வாய்க் கிரகத்தில் நகரம்' என்ற நூலின் இணை ஆசிரியருமான டாக்டர் கெல்லி வீனர்ஸ்மித் (Dr. Kelly Weinersmith) தெரிவிக்கிறார்.

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி வைத்த நாடு என்ற கௌரவத்தையும் மனிதர்களுக்கான உள்ளார்ந்த ஆசையையும் அடிப்படையாகக்கொண்டு விண்வெளி ஆய்வுகளில் மனிதர்களின் பங்களிப்புக் காணப்படுகிறது. மறுபுறத்தில், சர்வதேச விண்வெளி நிலையத்திலும் அதி நவீன விஞ்ஞான ஆய்வுகளுக்காவும் மனிதர்கள் பூமியின் சுற்றுப் பாதையில் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

மனிதர்கள் வசிக்க முடியாத அல்லது மனிதர்களினால் செல்ல முடியாத இடங்களுக்குப் பயணிக்கும் திறனுடன், வளிமண்டலங்கள் மற்றும் மேற்பரப்புகளை ஆய்வு செய்யவும் ரோபோக்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

'மனிதர்கள் பல்துறைத் திறன் கொண்டவர்கள் என்பதுடன் சில சந்தர்ப்பங்களில் ரோபோக்களை விடவும் விரைவாக சில விடயங்களைச் செய்யக்கூடிய வல்லமையும் மனிதர்களுக்கு உண்டு, ஆனால் விண்வெளியில் உயிர் வாழ்வது மிகவும் சவால் மிக்கது என்பதுடன் அதிக செலவினை ஏற்படுத்தக் கூடியது' என கலாநிதி வீனர்ஸ்மித் கூறுகிறார்.

2024-ம் ஆண்டு புக்கர் பரிசு பெற்ற தனது நாவலான ஆர்பிட்டலில், எழுத்தாளர் சமந்தா ஹார்வி (Samantha Harvey) இதைப் பாடல் வரிகளாக வெளிப்படுத்தியுள்ளார். 'ஒரு ரோபோவுக்கு நீரேற்றம், ஊட்டச்சத்துகள், வெளியேற்றம், தூக்கம் தேவையில்லை... அது எதையும் விரும்பிக் கேட்காது.' என்பதே அப்பாடல் வரியாகும்.

ஆனால் ரோபோக்களிடம் குறைபாடுகள் உண்டு என்பதனை மறுத்து விட முடியாது. பல ரோபோக்கள் மெதுவான, ஒழுங்கமைக்கப்பட்ட கட்டளைகளை மட்டும் செயற்படுத்தக்கூடியவை. உதாரணமாக, செவ்வாய் கிரகத்தில், ரோவர்கள் (ரிமோட்-கண்ட்ரோல்ட் மோட்டார் வாகனங்கள்) மணிக்கு 0.1 மைல் வேகத்தில் நகரக் கூடியவை.

'சதுரங்கத்தில் செயற்கை நுண்ணறிவைக்கொண்டு ஆரம்ப நிலை மனித பயிலுனர்களை இயந்திரங்களினால் வெல்ல முடியும், ஆனால் சுற்றுச்சூழலை ஆராய்வதில் ரோபோக்களினால் மனிதர்களுக்கு ஈடுகொடுக்க முடியுமா என உறுதிபடக் கூற முடியாது. இருந்தாலும் செயற்கை நுண்ணறிவுப் படிமுறைத் தீர்வுகளைக் கொண்டு ரோபோக்களை மிகவும் திறமை

யாகச் செயற்படுத்த முடியும்' என நம்பிக்கை வெளியிட்டுள்ளார் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கோள்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபடும் விஞ்ஞானி கலாநிதி இயன் க்ராஃபோர்ட் (Dr. Ian Crawford).

## செயற்கை நுண்ணறிவு உதவிகள் மற்றும் மனித உருவ ரோபோக்கள்:

விண்வெளிப் பயணங்களின் போது விண்வெளி வீரர்களை சில பணிகளில் இருந்து விடுவிப்பதன் மூலம் விண்வெளிப் பயணங்களையும் ஆய்வுகளையும் மேலும் காத்திரமானதாக நிறைவு செய்வதில் தொழில்நுட்பம் ஒரு முக்கிய பங்கினை வகிக்க முடியும்.

கலிபோர்னியாவில் உள்ள நாசாவின் ஜெட் ப்ராபல்ஷன் (Jet Propulsion) ஆய்வு கூடத்தில் முன்னர் பணியாற்றிய அமெரிக்க கணினி மற்றும் கோள் விஞ்ஞானி டாக்டர் கிரி வாக்ஸ்டாஃப் (Dr. Kiri Wagstaff) இந்த விடயத்தை பின்வருமாறு விளக்குகிறார்.

'கடினமான பணிகளைத் தானியக்கமாக்குவதற்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும். ஒரு கிரகத்தின் மேற்பரப்பில், மனிதர்கள் சோர்வடைகிறார்கள் மற்றும் கவனத்தை இழக்கிறார்கள், ஆனால் இயந்திரங்கள் அவ்வாறு செயற்படுவதில்லை.'

மனித மொழியைப் புரிந்துகொண்டு உருவாக்கக்கூடிய பெரிய மொழி மாதிரிகள் (large language models-LLM) போன்ற அமைப்புகளை இயக்குவதற்கு அதிக அளவு சக்தி தேவைப்படும் என்பதே இந்தத் தொழில்நுட்பத்தின் மிகப் பெரிய சவாலாகக் காணப்படுகிறது.

இந்தப் பெரிய மொழி மாதிரிகள் மனித மொழியைப் புரிந்து கொள்ளக்கூடிய பரந்த அளவிலான உரைத் தரவுகளைச் செயற்படுத்தக் கூடிய ஆற்றல் கொண்டவை.

'செவ்வாய் கிரக ரோவரில் பெரிய மொழி மாதிரிகளை இயக்கக் கூடிய அளவிற்கு இன்னமும் தொழில்நுட்பம் வளர்ச்சி பெறவில்லை' எனக் குறிப்பிடும் டாக்டர் வாக்ஸ்டாஃப் 'ரோவர்களில் காணப்படும் செயலிகள் நாம் பயன்படுத்தும் திறன்பேசிகளுடன் (smartphone) ஒப்பீடு செய்யும் போது, பத்தில் ஒரு பங்கு வேகம் என்ற குறைந்த வேகத்தில் இயங்குகின்றன. அதாவது LLM-ஐ இயக்குவதற்கான தீவிர கட்டளைகளை அல்லது கோரிக்கைகளை ரோபோக்களினால் சமாளிக்க முடியவில்லை எனவும் கருத்துரைக்கிறார்.

ரோபோ கைகள் மற்றும் கை, கால்கள் கொண்ட சிக்கலான மனித உருவ இயந்திரங்கள், விண்வெளியில் அடிப்படைப் பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய தொழில்நுட்பத்தின் மற்றொரு வடிவமாகும், குறிப்பாக அவை மனிதர்களின் உடற்திறன்களை மிகவும் நெருக்கமாகப் பிரதிபலிக்கின்றன.

நாசாவின் வால்கெய்ரி ரோபோ ஜோன்சன் விண்வெளி மையத்தால் 2013-ல் ரோபோட்டிக்ஸ் சவால் சோதனையில் போட்டியிட உருவாக்கப்பட்டது. இது 300 பவுண்ட் எடையும், 6 அடி 2 அங்குலம் உயரத்தையும் கொண்டமைந்தது. இது ஸ்டார் வார்ஸ் திரைப்படத்தில் காண்பிக்கப்படும் ஸ்டோர்ம்ட்ரூப்பர் (Stormtrooper) ரோபோ அளவிற்கு மேம்படுத்தப்பட்டதல்ல, ஆனால் மனிதருக்கு அப்பாற்பட்ட திறன்களைக் கொண்ட மனிதரைப் போன்று செயற்படும் இயந்திரங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பதனையே இது வெளிப்படுத்துகிறது. ஆனாலும், இவ் ரோபோ உருவாக்கப்படுவதற்கு முன்னர் விண்வெளியில் பயன்படுத்துவதற்காக நாசாவின் ரோபோனாட் (Robonaut) என்ற மனித உருவத்தை ஒத்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த ரோபோவின் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கைகள், விண்வெளி வீரர்கள் பயன்படுத்தும் அதே கருவிகளைப் பயன்படுத்துவதோடு, பிற ரோபோக்களைவிட மிகவும் சவாலான பொருட்களைப் பிடிப்பது அல்லது சுவிட்ச்களை இயக்குவது போன்ற சிக்கலான, நுட்பமான பணிகளைச் செய்யக் கூடியதாகவுள்ளமையும் சிறப்பானதாகும்.

ரோபோனாட்டின் பிற்கால மாதிரியானது 2011-ல் டிஸ்கவரி



என்ற விண்கலத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் பறக்கவிடப்பட்டது, அங்கு அது பராமரிப்பு மற்றும் பொருத்தும் பணிகளுக்கு உதவியது.

டெக்சாஸில் உள்ள நாசாவின் ஜொன்சன் விண்வெளி மையத்தில் உள்ள திறமையான ரோபாட்டிக்ஸ் குழுவின் தலைவர் டாக்டர் ஷான் அஸிமி (Dr. Shaun Azimi) 'நாம் ஒரு பாகங்களை மாற்ற வேண்டும் அல்லது சோலார் பேனலை சுத்தம் செய்ய வேண்டும் என்றால், அதை ரோபோ மூலம் செய்யலாம். மனிதர்கள் இல்லாதபோது அவர்களின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு வழியாக ரோபோக்களை நாங்கள் பார்க்கிறோம்.' எனக் குறிப்பிடும் அவர் 'ரோபோக்கள் மனித ஆய்வாளர்களை மாற்றுவதற்கு அல்ல, ஆனால் அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்குப் பயனுள்ளதாக இருக்கும்' என வாதிடுகிறார்.

சில ரோபோக்கள் ஏற்கனவே மனிதர்கள் இல்லாத பிற கிரகங்களில் வேலை செய்கின்றன, சில சமயங்களில் தாங்களாகவே முடிவெடுக்கின்றன. உதாரணமாக, நாசாவின் கியூரியாசிட்டி ரோவர் (Curiosity rover) செவ்வாய்க் கிரகத்தில் கேல் க்ரேட்டர் (Gale Crater) என்ற பகுதியை ஆராய்ந்து, அதன் சில அறிவியலை மனித உள்ளீடு இல்லாமல் தன்னாட்சி முறையில் மேற்கொள்கிறது.

‘ஒரு காட்சியின் படங்களை எடுக்க நீங்கள் ரோவரை இயக்க லாம், பணிக்கான அறிவியல் முன்னுரிமைகளுக்குப் பொருந் தக்கூடிய பாறைகளைத் தேடலாம், பின்னர் ஏதாவது இலக் கில் அதன் லேசர்க் கதிர்களைத் தானியங்கி முறையில் பாய்ச்சலாம்’ எனவும் ‘ஒரு குறிப்பிட்ட பாறையின் உள்ளடக் கங்களைப் பெற்று, பூமியில் மனிதர்கள் உறங்கிக்கொண்டி ருக்கும் தருணத்தில் அவற்றை அனுப்பக் கூடிய ஆற்றலைக் கொண்டவை’ எனவும் டாக்டர் வாக்ஸ்டாஃப் குறிப்பிடுகிறார்.

எனினும், கியூரியாசிட்டி (Curiosity) போன்ற விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படும் ரோவர்களின் திறன்கள் அவற்றின் மெதுவான வேகத்தால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், அவைகள் போட்டியிட முடியாத வேறு ஒரு முக் கிய விடயமும் உண்டு. இயந்திரங்களால் முடியாத வகையில் பூமியில் உள்ள மக்களை ஊக்கப்படுத்தும் இயலுமை மனித விண்வெளி வீரர்களுக்குக் காணப்படுகிறது என்பதே அதுவாகும்.

‘உத்வேகம் என்பது அருவமான ஒன்று எனவும் அதனை இயந்திரங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது’ என பேராசிரி யர் கோட்ஸ் வாதிடுகிறார்.

‘மனிதர்கள் ஏதாவது ஒன்றைச் செய்யும் போது மனிதர்கள் அதனுடன் தொடர்பு கொள்கிறார்கள்’ என 1990-கள் மற்றும் 2000-ம்களில் நாசாவின் விண்கலம் மற்றும் சர்வதேச விண் வெளி நிலையத்திற்கு மூன்று விண்கலங்களில் விண்வெளிக் குப் பயணங்களை மேற்கொண்டுள்ள, ஓய்வுபெற்ற நாசா விண்வெளி ஆய்வாளரான லெராய் சியாவோ (Leroy Chiao) ஒப்புக்கொள்கிறார்.

‘பொது மக்கள் ரோபோட் பயணங்கள் பற்றி உற்சாகமாக உள்ளனர். எனினும், செவ்வாய் கிரகத்தில் முதல் மனிதர் தரையிறங்குவதானது சந்திரனில் மனிதர் இறங்கியதை விடப் பெரியதாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.’ என சி யாவோ குறிப்பிடுகிறார்.

## செவ்வாய் கிரகத்தில் வாழ்க்கை?

1972-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அப்பல்லோ விண்கலத்தின் ஊடாக சந்திரனில் தரையிறங்கி ஆய்வாளர்கள் பார்வையிட் டதன் பின்னர், மனிதர்கள் பூமியின் சுற்றுப்பாதையை விட அதிக தூரம் பயணிக்கவில்லை. நாசா தனது ஆர்ட்டெமிஸ் திட்டத்துடன் இந்த தசாப்தத்தில் மனிதர்களைச் சந்திரனுக் குத் திருப்பி அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2026-ம் ஆண்டில் நான்கு விண்வெளி வீரர்கள் சந்திரனைச் சுற்றிப் பறக்கும் விண்வெளிப் பயணத்தில் இணைந்து கொள் வார்கள். இதேவேளை, 2027-ம் ஆண்டு நாசா விண்வெளி வீரர்கள் சந்திரனின் மேற்பரப்பில் தரையிறங்குவதற்குத் திட்ட மிட்டுள்ளனர்.

இதற்கிடையில், சீன விண்வெளி நிறுவனமும் சந்திரனுக்கு விண்வெளி வீரர்களை அனுப்ப விரும்புகிறது.

மேலும், அமெரிக்க நிறுவனமான SpaceX-இன் தலைமை நிர் வாக அதிகாரியான எலோன் மஸ்க் விண்வெளி தொடர்பான தனது சொந்தத் திட்டங்களைக் கொண்டுள்ளார். செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் தரையிறங்கக்கூடிய குடியேற்றத்தை உருவாக்குவதே தனது நீண்டகாலத் திட்டம் என்று அவர் கூறி யுள்ளார்.

20 ஆண்டுகளில் செவ்வாய்க் கிரகத்தில் ஒரு மில்லியன் மக் கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், ஒரே நேரத்தில் 100 பேரை அங்கு ஏற்றிச் செல்ல, தனது நிறுவனம் உருவாக் கிவரும் ஒரு பெரிய புதிய விண்கலத்தைப் பயன்படுத்துவதே தனது திட்டம் என மஸ்க் குறிப்பிடுகிறார்.

‘பூமியில் ஏதேனும் பேரழிவு ஏற்பட்டால் அது மனிதகுலத் திற்கு ஒரு காப்புப் பிரதியாக இருக்கும் என்பதால், நாம் செவ் வாய் கிரகத்திற்குச் செல்ல வேண்டும் என்று மஸ்க் வாதிடுகி றார். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டால், மனிதர்களை விண் வெளிக்கு அனுப்புவது இன்றியமையாதது’ என்று டாக்டர் வீனர்ஸ்மித் விளக்குகிறார்.

இருப்பினும், செவ்வாய் கிரகத்தில் வாழ்வது தொடர்பில் எண் ணற்ற கேள்விகளுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை, இதில் எண்ணற்ற தொழில்நுட்ப சவால்கள் இன்னமும் தீர்க் கப்படாமல் இருப்பதாகவும் அதற்கான தீர்வு தங்களிடம் இல்லை என்றும் நாங்கள் மெதுவாகப் பயணிக்க வேண்டும் எனத் தாம் கருதுவதாகவும்’ அவர் தனது கருத்தை முன்வைக் கிறார்.

விண்வெளியில் இயந்திரங்களின் பங்களிப்பு அல்லது ஆளில்லா விண்வெளி ஆய்வுகள் தொடர்பில் ரீஸ் பிரபு (Lord Rees) தனக்கென ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்து கிறார்.

எனினும், மனித மற்றும் ரோபோ ஆய்வுகள் ஒன்றிணைந்து, தீவிர சூழல்களைச் சமாளிக்க மனிதர்களே ஒரு பகுதி இயந் திரமாக இருக்கிறார்கள். ‘மரபணு மாற்றம், சைபோர்க் ஆட்-ஆன்கள்’ மற்றும் பலவற்றின் அனைத்து நுட்பங்களையும் அவர்கள் பயன்படுத்துவார்கள் என்று தம்மால் கற்பனை செய்ய முடிவதாகத் தெரிவிக்கிறார்.

‘செவ்வாய் கிரகத்தில், புதிய உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடிய சாத்தியங்கள் உருவாகலாம், அந்த நாள் வரும் வரையில் மனிதர்கள் தங்களது சிறிய வழித்தடங்கள் மூலம் விண்வெளியை ஆய்வு செய்யும் நகர்வுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பார்கள்’ எனவும் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

பிரபஞ்சத்தின் வேறு இடங்களிலும் மனிதரின் தேடல் தீவிரப்ப டுத்தப்பட்டுள்ள நிலையில், வேறு புதியதோர் வாழ்விடத் தைக் விரைவில் மனிதர் கண்டுபிடித்து மகிழும் காலம் தொலைவில் இல்லை.

இந்த ஆய்வு முயற்சிகளில் மனிதருக்கு நேரடியாக சவால் வி டுக்கும் மனித வடிவிலான ரோபோக்களின் வகிபாகம் ஆழமா னதும் அர்த்தபூர்வமானதும் என்பது நிதர்சனம்.



jeyaseelan.s@thaiveedu.com




சென்ற இதழில் எனது கட்டுரையில் ஒளியாண்டு என்று ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டிருந்தேன். அறிவியலில் ஆர்வமுள்ள பணி ஓய்வு பெற்ற நண்பர் ஒருவர் ஒளியாண்டு என்றால் என்ன? அதைப்பற்றி விளக்கமாக சொல்ல முடியுமா என்று கேட்டிருந்தார். உண்மையிலே இளைய தலைமுறையினர் வானியல் பற்றி அறிந்து கொள்ள வேணடும் என்ற நோக்கத்தோடுதான் அறிவியல் சார்ந்து எழுதத் தெடங்கினேன். ஆனால் எல்லா வயதினரும் இதை ஆர்வத்தோடு வாசிக்கிறார்கள் என்பதை அறிந்தபோது மகிழ்ச்சியாக இருக்கின்றது. எமது இனத்தவர்கள் எல்லோரும் வான்வெளிபற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும், ஏனைய இனங்களைவிட எமது இனம் இத்துறையில் பின்தங்கிவிடக்கூடாது என்பதுதான் எனது விருப்பம். தற்போது மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் துறை என்று பார்த்தால், முன்னேறிய நாடுகள் எல்லாம் போட்டி போடும் வானியல் துறைதான் எதிர்காலத்தில் பேசுபொருளாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதனாலே அதைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

இந்த ஆங்கில வருடம் 2025-ம் ஆண்டு பிறந்தபோது, நாங்கள் அன்று ஒரு தடவைதான் சூரிய உதயத்தைப் பார்த்திருப்போம், ஆனால் ஒரு குழுவினர் அன்று 16 தடவைகள் சூரிய உதயத்தை எதிர்கொள்ள வேண்டி வந்தது என்றால் நம்புவீர்களா? நம்பித்தான் ஆகவேண்டும், காரணம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 400 கிலோ மீட்டர் உயரத்தில் பயணித்த எக்ஸ்பெடிசன் குழுவினர் அன்று 16 சூரிய உதயத்தையும், 16அஸ்தமனத்தையும் சந்தித்திருந்தார்கள். ஒளியாண்டு என்பதைப் பற்றிக் குறிப்பிடுமுன் தமிழில் சில சொற்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். தமிழ் மொழியைச் சிலர் நன்றாகப் பேசினாலும் சில சொற்களை உச்சரிக்கும்போது சரியாக உச்சரிக்காவிட்டால், அதன் கருத்து மாறிவிடக்கூடும். இதே தவறு எழுதும்போதும் வரலாம், எதைச் சொல்ல வந்தோமோ அது தவறாகப் போய்விடும். குறிப்பாக ல, ள, ழ என்ற எழுத்துகள் மற்றும் ன, ண என்ற எழுத்துக்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஒலி என்பது சத்தத்தைக் குறிப்பது, ஒளி என்பது வெளிச்சத்தைக் குறிப்பது, ஒழி என்பது ஒன்றை இல்லாமல் செய்வது, ஒரு ஆசிரியர் என்ற வகையில் நான் இப்படியான தவறைச் சில மாணவர்களிடம் அவதானித்ததால்தான் அதைப்பற்றி இங்கே குறிப்பிடுகின்றேன். குறிப்பாக மேலை நாடுகளில் உள்ள தமிழ் சிறார்கள் சிலர் இப்படியான உச்சரிப்பில் கவனம் செலுத்த வேண்டும். தவறாக உச்சரித்தால் கருத்து மாறிவிடும். வானம் என்பதற்கும், வாணம் என்பதற்கும் கருத்து வித்தியாசம் உண்டு. வானம் என்பது பூமிக்கு மேலே தெரியும் நீலவானம், வாணம் என்பது மேலே சென்று வெடிக்கும் ஒருவகைப் பட்டாசு. எனவே உச்சரிக்கும்போது இதுபோன்ற சொற்களில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

இலங்கை பிரித்தானியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால், அவர்கள் தூரத்தை அளவிடுவதற்கு அங்குலம், அடி, யார், மைல் என்று அளவிட்டனர். 1970-களில் இலங்கையில் மெட்ரிக் முறை ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அளவிடுவது பல இடங்களில் மெட்ரிக் முறைக்கு மாற்றப்பட்டது. உதாரணமாக இலங்கையின் வடபகுதியில் உள்ள காங்கேசந்துறையில்




இருந்து தொடர்வண்டி மூலம் கொழும்பிற்குச் செல்வதானால் 418 கி. மீட்டர் செல்லவேண்டும். தொடர்வண்டி நிலையத்தில் இருந்த பழைய நடுகல்லில் 259 மைல் என்று எழுதியிருந்தது. இதன் படி பின்னாளில் தூரத்தை அளவிடுவதற்கு மீட்டர் முறை பாவிக்கப்பட்டது தெரியவந்தது. இம்முறையே உலகம் முழுவதும் இப்பொழுது பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த அளவீடுகள் தொழில் மற்றும் அன்றாட அளவீடுகளை எளிதாக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை அதிக அளவு தூரத்தைக் கணக்கிடுவதற்குப் போதாது என்பதால், அறிவியல் சார்ந்து சில புதிய அளவீடுகளை இப்பொழுது விண்வெளி ஆய்வுக்காகப் பயன்படுத்துகின்றார்



கள். கற்பனைக்கு எட்டாத தூரம் என்று நாங்கள் முன்பு குறிப்பிட்டதை அறிவியல் சார்ந்த ‘ஒளி’ அளவீட்டால் இப்போது ஆய்வாளர்களால் தூரத்தை ஓரளவு கணிக்க முடிகின்றது.

பிரபஞ்சம் என்பது இப்போது எங்களிடம் இருக்கும் தொழில் நுட்ப வசதிகளைக் கொண்டு அளவிடமுடியாத பரந்து விரிந்த பகுதியாகும். இதை எல்லையில்லா வானம் என்றும் அழைப்பர். இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள நட்சத்திரங்கள் எங்கே, எவ்வளவு தொலைவில் இருக்கின்றன என்ற தூரத்தை அளப்பதற்குத்தான், ஒளியாண்டை ஆய்வாளர் தற்போது பயன்படுத்துகின்றனர். ஒளியாண்டு என்றால் அது நேரத்தைக் குறிக்கவில்லை, தூரத்தைக் குறிக்கின்றது. பல கோடிக்கணக்கான தூரத்தைக் கணிப்பிடவே ஒளியாண்டு பாவிக்கப்படுகின்றது. இப்போது எம்மிடம் உள்ள தொழில் நுட்ப வேகத்தில் மனிதானால் ஒரு நட்சத்திரத்தைச் சென்றடைய முடியாது. ஆனால் ரோபோக்களால் செல்ல முடியும் என்பதால்தான் ஏஐ என்று சொல்லப்படுகின்ற செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் முதற்தடவையாக சூரியக்குடும்பத்தை விட்டு நாசாவால் அனுப்பப்பட்ட வாயேஜர் - 1, வாயேஜர் - 2, நியூ ஹொரைசன்ஸ் மற்றும் பயனியர் - 10 பயனியர் - 11 ஆகிய செயற்கைக் கோள்கள் தகவல் சேகரிக்கும் நோக்கத்தோடு சூரியக்குடும்ப ஈர்ப்பு விசையைக் கடந்து வெளியேறியிருப்பதால், அவை இனி திரும்பி வரப்போவதில்லை.

தமிழில் ஒலிக்கும், ஒளிக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று உங்களுக்குத் தெரியும். ஒலியை விட ஒளி வேகமானது. ஆதனால்தான் வானத்தில் மின்னலும், இடியும் ஒரே நேரத்தில் புறப்பட்டாலும், மின்னல் எங்களுக்கு முதலில் தெரிகின்றது, அதன் பின்தான் இடியோசை கேட்கின்றது. ஒலி அலைகளைப் போலன்றி, ஒளி என்பது கண்களுக்குப் புலப்படக்கூடிய மின்காந்த அலைகளாகும். இதனால்தான் ‘மின்னல் வரும் முன்னே இடியோசை கேட்கும் பின்னே’ என்றொரு பழமொழியும் எங்களிடம் உண்டு. இங்கே வானியல் அளவீட்டுக்கு நாங்கள் எடுப்பது ஒளி என்ற வெளிச்சத்தையாகும். ஆங்கிலத்தில் இதை ‘லைட்’ என்று சொல்வார்கள்.

ஒளி ஆண்டு என்பது நேரத்தின் அலகு அல்ல, இது ஆய்வாளர்களால் வானியலில் அளவீட்டு அலகாக பாவிக்கப்படுகின்றது. இப்போது எங்களிடம் பாவனையில் இருக்கும் அளவீட்டை வைத்து தொலைதூரத்தில் பில்லியன் கணக்கான கிலோமீட்டர் தூரத்தை அளவிடுவது என்பது இயலாத காரியமாகும். அப்படிக் கணக்கிட்டாலும் அதைச் சாதாரண மக்களால் புரிந்து கொள்வது கடினமானதாகும். எனவேதான் சர்வதேச வானியல் ஒன்றியம் ஒளியாண்டை அறிமுகம் செய்திருக்கின்றது.

இந்த ஒளியாண்டு அறிமுகத்தால் ஆய்வாளர்கள் இலகுவாக நட்சத்திரங்களுக்கு இடையில் உள்ள தூரத்தைக் கணக்கிட முடிகின்றது. துல்லியமாகக் கணக்கிட முடியாவிட்டாலும், ஓரளவு அண்டவெளியில் அந்த இடம் எங்கே இருக்கிறது, தற்போது உள்ள தொழில் நுட்பவசதிகளைக் கொண்டு அதைச் சென்றடைய எவ்வளவு காலம் எடுக்கும் என்பவற்றை கணிக்க முடிகின்றது. வெற்றிடத்தில் ஒளி ஒரு விநாடியில் 299,792,458 மீட்டர் தூரத்தைக் கடக்கக்கூடியது. ஆகவே ஓர் ஆண்டில் அதன் வேகம் என்ன என்பதைக் கணிக்க வேண்டும்.(சமன் 365x24x60x60 சமன் 3.153.)ஆகவே ஒரு ஒளி ஆண்டு என்பது ஒரு வருடத்தில் ஒளி பயணிக்கும் தூரமான சுமார் 9.5 லட்சம் கோடி கிலோ மீட்டராகும் (9.5 trillion kilometers). மைல்களில் சொல்வதானால் 5.879 ட்ரில்லியன் மைல்களாகும். இப்போது ஒளியாண்டு என்றால் என்னவென்று உங்களுக்குப் புரிந்திருக்கும்.

இதைவிட வானியல் அலகு (astronomical unit) AU என்று ஒரு அளவு முறையும் நடைமுறையில் இருக்கின்றது. 1976-ம் ஆண்டு பன்னாட்டு வானியல் கழகம் வானியல் அலகுக்கான இந்தப் புதிய முறையை அறிமுகப்படுத்தியது. இதன் படி, ஒரு ஏயூ என்பது பூமியில் இருந்து சூரியனின் நடுப்புள்ளி வரையுமான சராசரித் தூரமாகும். இதை ஒரு வானியல் அலகு என வரையறுக்கப்பட்டது. இந்த அளவின்படி 1 AU சமன் 149.6 மில்லியன் கி. மீட்டராகக் கணிக்கப்பட்டது. சில வானியல் ஆய்வாளர்கள் இந்த அலகு முறையைப் பாவிக்கின்றார்கள். இதன்படி பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் எங்களுக்குத் தெரியும் என்பதால், இந்த அளவை வைத்துக் கொண்டு ஏனைய நட்சத்திரங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதை ஓரளவு கணிக்க முடிகின்றது.

சுமார் 150 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் இருந்து சூரியனின் ஒளி பூமியை வந்தடைய சுமார் 8.3 நிமிடங்கள் எடுக்கின்றன. அதாவது நாங்கள் 8.3 நிமிடங்களுக்கு முன் இருந்த சூரியனைத்தான் பார்க்கிறோம். இதே போலத்தான், ஒரு நட்சத்திரம் 9.5 டிரில்லியன் கிலோ மீட்டருக்கு அப்பால் இருப்பதாக எடுத்துக் கொண்டால், நாங்கள் பூமியில் இருந்து அந்த நட்சத்திரத்தைப் பார்க்கும்போது சென்ற வருடம் இதே நாளில் அந்த நட்சத்திரத்தில் இருந்து வெளிப்பட்ட ஒளியைத்தான் நாங்கள் பார்க்கின்றோம் என்பதையும், அந்த நட்சத்தி

ரம் அந்த இடத்தைவிட்டு ஓராண்டுக்கு முன்பே விலகிச் சென்று விட்டது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். எமது முன்னோர்கள் சொன்ன 'கண்ணால் காண்பதும் பொய்' என்பதற்கு இது நல்லதொரு உதாரணமாக இருக்கின்றது.

கோடிக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு மேல் பரந்து விரிந்திருக்கும் தொலைதூரத்தை அளவிடுவதற்கும் அதைப் புரிந்து கொள்வதற்கும் அளவீட்டு அலகு ஒன்று தேவைப்பட்டது. எனவேதான் அதிவேகமான ஒளியை வைத்துத் தூரத்தை அளவிடும் புதிய முறை அறிமுகமானது. ஒளியை வைத்து தூரத்தை அளக்க முடிவதால், எமக்கு இதுவரை தெரியாத பல முக்கியமான சில நட்சத்திரங்களின் தூரத்தை ஆய்வாளர்களால் ஓரளவு கணிக்க முடிந்திருக்கின்றது. சூரியனுக்கு மிக அருகே இருக்கும் ஆல்பா சென்டாரி என்ற நட்சத்திரம் 4.2465 ஒளியாண்டு தொலைவில் இருக்கின்றது. இதுதான் சூரியக் குடும்பத்திற்கு மிக அருகே இருக்கும் நட்சத்திரமாகும். இன்று இருக்கும் தொழில்நுட்ப வசதிகளின்படி மனிதனால் இந்தத் தூரத்தைக் கடக்க முடியாது. இதுவரை எம்மிடம் இருந்த தொழில் நுட்பவசதிகளின் உதவியுடன் கணித்தபடி பிரபஞ்சத்தின் அகலம் 9,000 கோடி ஒளியாண்டுகளாகும். ஆனால் பிரபஞ்சம் விரிந்து கொண்டே செல்வதாகச் சில ஆய்வார்கள் கருத்துத் தெரிவித்திருப்பதால், இந்த அளவுகளில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படலாம்.

தற்போது விஞ்ஞானிகள் பூமியில் இருந்து சுமார் 8,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் பிளாக்கோல் ரிப்பிள் black hole triple என்ற கருந்துளை அமைப்பு ஒன்று இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இரண்டு நட்சத்திரங்கள் இதைச் சுற்றி வருவதாகவும், இதில் ஒன்று மிக அருகே இருப்பதால் எந்த நேரமும் கருந்துளையால் கவரப்படலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கருந்துளை என்பது அதிக ஈர்ப்பு விசை கொண்ட ஒரு வெற்றிடமாகும். தனக்கு அருகே வரும் எந்தப் பொருளையும் தனக்குள் கவர்ந்து கொண்டுவிடும். சூரியனைவிட 40 லட்சம் மடங்கு பெரிதான இது ஒரு நட்சத்திரத்தையே உள்வாங்கக் கூடியது. பால்வெளி மண்டலத்தின் நடுவே மிகப்பெரிய கருந்துளை ஒன்று சுமார் 26,000 ஒளியாண்டுகள் தொலைவில் இருப்பதாக வானியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். கருந்துளையால் கவரப்பட்டு உள்வாங்கப்படும் பொருட்களுக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

ஒளியின் வேகத்தை வைத்து இந்த நட்சத்திரங்களின் தூரத்தைக் கணிக்க முடிவதால் சாதாரண மக்களும் வானியல் பற்றி ஓரளவு புரிந்து கொள்ள முடிகின்றது. ஒவ்வொரு வான் பொருட்களும் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதை ஒளியாண்டைக் கொண்டு ஓரளவு அனுமானிக்க முடிகின்றது. ஒளியாண்டு என்பதன் அர்த்தமும், அதை ஏன் அறிமுகம் செய்தார்கள் என்பதும் இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். ஆதித்தமிழன் இத்துறையில் முன்னேறி இருந்தாலும், ஆவணப்படுத்தாததால் எதையும் ஆதாரபூர்வமாக நிருபிக்க முடியவில்லை என்பது எமக்கு ஒரு பாடமாக அமைந்திருக்கிறது.

**உசாத்துணை:**

- https://spaceplace.nasa.gov/light-year/en/



kuruaravindan@thaiveedu.com



# குளிர் காலத்துக்கான ஆறு செயற்பாடுகள்

– செந்தூரன் புனிதவேல்

குளிரில் நாங்கள் துன்புற்று இருக்கும் வேளையிற்றான் பெரும் இழப்புகளும் எம் வீடுகளுக்கு ஏற்படுகின்றது. இவ்வி ழப்புகளுக்கான காப்புறுதிக் கேட்பனவுகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், இவை வருமுன் காத்துக் கொள்வ தும் அறிவுடைமையாகும் என்பதால், இழப்புகளைத் தவிர்க் கக்கூடிய சில வழிவகைகளை உங்களுடன் பகிரலாம் என எண்ணுகிறேன்.

**முதலாவது செயற்பாடு:** குளிர் அதிகரிக்கும் வேளையில், கொட்டிக்கிடக்கும் பனி, பனியாக இருந்தது பனிக்கட்டியாக மாறும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். வீட்டின் கூரை யில் உள்ள தாழ்வாரத்தில் (eaves) விழுந்து வெளியேற்றம் தடைப்படும் வேளைகளில் அங்கு பனி பனிக்கட்டியாவது திண்ணம். நீர் பனிக்கட்டியாகும் வேளையில் விரிவடையும் என்பதால், கனடாவில் கூரையில் பாவிக்கும் சிங்கிள்ஸ் எனும் ஓடுகள் உடைந்துவிடவும் கூடும். அத்துடன் கூரை ஒழு கவும் தொடங்கும்.

இவற்றைத் தவிர்ப்பதற்கு அனுபவமுள்ள ஒருவரை அமர்த்தி, ஏணி மூலம் ஏறி கூரையின் சுற்றுவாரியில் உள்ள இலை சரு குகளை வெளியேற்றி விடுங்கள். மேலும் இம் முயற்சியில் ஈடு படும் வேளையில் மிகவும் அவதானமாக ஏணிகளில் ஏறி இறங்க வேண்டும். இவ்வேளைகளில் கூரையில் ஏறும் பலருக் குக் கை கால்கள் முறிவுகள் ஏற்படுவதும் உண்டு.

**இரண்டவாது செயற்பாடு:** குளிர் காலத்தில் வீட்டின் வெளி மதிற் சுவரில் உள்ள குழாய் வாய்களில் நீர் உறைந்து பனிக் கட்டியாகி குழாயை உடைப்பதும் உண்டு. பொதுவாக இத்த கைய குழாய் வாய்களுக்கு வீட்டின் உள்ளே நில அறையில் தடைக்குழாய் அடைப்புகள் இருக்கும். அவற்றை இறுக்க மாக மூடிவிட்டு வீட்டிற்கு வெளியே இருக்கும் குழாயைத் திறந்து வையுங்கள்.

**மூன்றாவது செயற்பாடு:** வீட்டில் உள்ள புகை மற்றும் காப னோரொக்சைட் (Corton Monoxide) ஆகியவற்றை அறிவிக் கும் கருவிகள் சரியாகச் செயற்படுகின்றனவா என்பதைக் கட் டாயம் கவனியுங்கள். இவை காலப்போக்கில் இயக்கத்தன் மையை இழந்து வெறும் காட்சிப் பொருளாக மட்டும் இருக் கும். ஆனால், வீட்டில் தீ விபத்து ஏற்படின் இதுவே முதல் ஆபத்து ஒலி எழுப்பும். எனவே கட்டாயம் இதன் செயற்பாடு சரியாக உள்ளதா எனக் கவனியுங்கள்.

**நான்காவது செயற்பாடு:** வீடுகளில் யன்னல்கள், கதவுகள் ஏன் சுவர்களில் கூட சிறு வெடிப்புகள் ஏற்படலாம். இவற்றி னூடாக குளிர் காற்று உள்வந்து வீட்டை சூடுகாட்டும் செலவு கள் பெரிதளவில் அதிகரிக்கலாம். இத்தகைய வெடிப்பு களை மூடி வைப்பதற்கு கோக்கிள் (Gaulking) எனும் பசை கட்டட அமைப்பு பொருள் விற்கும் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். இந்த அடைப்புகளைச் செய்வதற்கு பெரும் கட்டடப் பொறியாளர் தேவை இல்லை. நீங்களே குறைந்த செலவில் செய்யலாம்.

**ஐந்தாவது செயற்பாடு:** வீடுகளில் புகைபோக்கிகள் இருப் பது இயல்பு. குறிப்பாக எரிவாயு மூலம் உஷ்ணப்படுத்தும் வீடுகளிலும், அழகாக விறகால் எரித்து சமைக்கும் வீடுகளி லும் இத்தகைய புகைபோக்கிகள் இருப்பது இயல்பு. இத னைக் காலத்துக்குக் காலம் துப்புரவு செய்வதவசியம். இதற்கு நீங்கள், இவ்விடயம் தெரிந்த வல்லுநர் ஒருவருடைய உதவியை நாட வேண்டும். அவர்களை Certified Chimney Inspector என குறிப்பிடுவர்.

**ஆறாவது செயற்பாடு:** வழுக்குதலும் விழுதலும். சட்டப்படி உங்களுக்கு சில பொறுப்புகள் உண்டு. விபத்தைத் தவிர்ப் பதற்கு உங்கள் வீட்டுச் சுற்றாடலில், பாவனையில் உள்ள பகுதியில் கொட்டிக்கிடக்கும் பனியை அகற்றுவது உங்க ளின் தலையாய பொறுப்பு. அத்துடன் உங்கள் வீட்டுக் கூரை யில்கூட அளவுக்கதிகம், பனி அல்லது பனிக்கட்டி நிறைந்து விபத்து ஏற்படும் பட்சத்தில் உங்கள் மீது வழக்கு தொடரப்ப டலாம்.

உங்கள் வீட்டுக் காப்புறுதி வல்லுநருடன் கதைத்து, பொறுப் புக்கூறல் கேட்பனவை அறிந்து வைத்தல் அவசியமே.



senthuran.p@thaiveedu.com

# காபனோரொக்சைட்

## ஓசையின்றி உயிரைப் பறிக்கும் மாயப்பிசாசு

– கந்தசாமி கங்காதரன்

ய2025 ஜனவரியில், ரொறன்ரோப் பெரும்பாகத்து நகரொன்றில், குளிரான ஓர் இரவுப் பொழுதில் வீட்டு வாகனத் தரிப்பிடக் கதவை மூடிவைத்துக்கொண்டு வாகனத்தைத் திருத்திக்கொண்டிருந்த 22 வயதுத் தமிழ் இளைஞர் ஒருவர், வாகனத் தரிப்பிடத்தினுள் காரின் எந்திரத்திலிருந்து வெளியேறிய காபனோரொக்சைட் வாயுவினால் காவுகொள்ளப்பட்டார்.

2024 டிசம்பரில், கருங்கடலுக்கும் கஸ்பியன் கடலுக்குமிடையே உள்ள, முன்னாள் சோவியத் குடியரசுகளுள் ஒன்றாக இருந்த ஜோர்ஜியாவில், பனிச்சறுக்கு விளையாட்டுக்குப் பெயர் பெற்ற Gudauri எனும் ஊரில் தாம் பணியாற்றும் இந்திய உணவகத்தின் மாடி அறையொன்றில் உறங்கச் சென்ற பணியாளர்கள் 12 பேரும் டிசம்பர் 14-ம் நாள் காலையில், உரிய நேரத்துக்குத் துயிலெழவில்லை. 11 இந்தியர்களும் ஓர் உள்ளூரவருமாக, 12 பேரும் மீளாத்துயில் கொண்டுவிட்டிருந்தனர்.

மின் தடை ஏற்பட்டிருந்ததால் இரவு முழுவதும் பெற்றோலில் இயங்கும் மின் பிறப்பாக்கி (Generator) பயன்படுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து வெளியேறிய காபனோரொக்சைட் இந்த 12 பேரையும் பலி கொண்டிருந்தது.

2024 டிசம்பர் 3-ம் நாள், அல்பேட்டா மாகாணத்தின் கல்கரி நகரத்தில், ஒரு வீட்டின் நிலக்கீழ்த் தளத்தில், வீட்டை வெப்பமேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் எரி உலை உள்ள அறையில் (Furnace room) 50 வயதைக் கடந்த ஆண் ஒருவர் வீழ்ந்து கிடக்கக் காணப்பட்டார்.

தீயணைப்புப் படையினர் வந்து வீட்டுக்குள் நுழைந்த போது அவர்களுடைய சீருடைகளில் பொருத்தப்பட்டிருந்த காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகள் ஒலியெழுப்பின. சுவாசிப்பதற்கான கருவிகளோடே தீயணைப்புப் படையினர் வீட்டினுள் நுழைய முடிந்தது. வீட்டினுள் வீழ்ந்து கிடந்த அந்த ஆண் ஏற்கனவே இறந்துவிட்டிருந்தார்.

காபனோரொக்சைட் பாதிப்புக்குள்ளாகியிருந்த மேலும் மூவர் உடனடியாக அவசர சிகிச்சைகளுக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அந்த வீட்டில் ஒரு மில்லியன் துணிக்கைகளுக்கு 270 என்கின்ற அளவில் காபனோரொக்சைட் செறிவு இருந்தது. ஒரு மில்லியனுக்கு 70 துணிக்கைகளுக்கு மேல் உள்ள சூழலில் மனிதர்கள் இருந்தால் காபனோரொட்சைட் பாதிப்பின் அறிகுறிகள் தோன்றும்.

அந்த வீட்டில் எங்குமே காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

2006 ஒக்ரோபரில், தமிழ்நாட்டின் சென்னையில் கடும் வெள்ளத்தில் மாட்டிக்கொண்ட காரினுள் இருந்த மூன்று கணினிப்




பொறியியலாளர்கள் காருக்குள் காபனோரொக்சைட் நிறைந்ததால் இறந்துபோயினர்.

2024 ஏப்பிரலில், கனடாவின் சஸ்காச்சுவான் மாகாணத்தின் தலைநகர் ரெஜைனாவிலிருந்து 235 கி.மீ. வடகிழக்கேயமைந்துள்ள Canora எனும் சிறுநகர அங்காடியொன்றின் இறைச்சிப் பிரிவில், பெற்றோலில் இயங்கும், நீரை வேகமாகப் பீய்ச்சியடிக்கும் கருவியைப் (Pressure washer) பயன்படுத்தி நிலத்தைக் கழுவிக்கொண்டிருந்த 14 வயதுப் பணியாளர், சற்றுத் தலை வலிப்பதாக உணர்ந்ததும் வெளியே ஓடிச்சென்று மயங்கி வீழ்ந்தார். பக்கத்து அல்பேட்டா மாகாணத்தின் எட்மன்டன் நகர மருத்துவமனையொன்றுக்கு அவசர அவசரமாக வான் வழியாகக் கொண்டுசெல்லப்பட்டதால் உயிர் பிழைத்துக்கொண்டார் அவர்.

அந்த இறைச்சி அறைக்குள்ளே காபனோரொக்சைட் நிறைந் திருந்ததாம். காபனோரொக்சைட் பற்றிய தெளிவு அவருக்கு இருந்ததால், வெளியே ஓடினார். அவர் வெளியே ஓடிச்செல் லாமல் உள்ளேயே மயங்கி வீழ்ந்திருந்தால் நிலைமை விபரீத மாயிருக்கும்.

மேற்கூறப்பட்ட ஐந்து சம்பவங்களும், இங்கு சொல்லப்படாத இன்னும் பல சம்பவங்களும் காபனோரொக்சைட் வாயு தொடர்பில், நாம் எவ்வளவு தூரம் விழிப்புடன் இருக்கவேண் டுமென்பதை எடுத்துக்காட்டும் அதே வேளை, உலகின் எல் லாப் பகுதிகளிலும் இந்த வாயுவினால் ஆபத்து ஏற்படக்கூ டிய சூழ்நிலை இருப்பதையும் சுட்டிக்காட்டி எச்சரிக்கின்றன. குளிரான காலநிலை நிலவும் நாடுகளில் மட்டுமே காபனோ ரொக்சைட் ஆபத்து விளைவிக்கும் என்றில்லை.

எங்களில் பலர் காபனீரொக்சைட் பற்றி நன்கறிந்துள்ளோம். இரவில் புளிய மரத்துக்குக் கீழே படுத்தால், புளியமரம் இர வில் அதிகமாக வெளியிடும் காபனீரொக்சைட் வாயுவினால் உயிரிழப்பு ஏற்படலாம். இதைத்தான் ஊரில் 'புளிய மரத்து முனி' அடித்ததாகச் சொல்வார்கள்.

காபனீரொக்சைட் முனியென்றால் இந்த காபனோரொக்சைட் மகா முனி. அவ்வளவு ஆபத்தானது இது.

## காபனோரொக்சைட் எங்கிருந்து வீட்டுக்குள் வருகிறது?

பெரும்பாலும் உங்கள் வீட்டுக்குள்ளிருந்துதான் வருகிறது.

விறகு, நிலக்கரி, பெற்றோலிய எரிபொருட்கள் போன்றவை எரியும் போது காபனோரொக்சைட் உருவாகும் வாய்ப்பு அதி கம். எரி உலை (Furnace) எரிவாயுவால் இயங்கும்போது, வீடு களில் சுடுநீர்க் கொள்கலன் (Boiler) எரிவாயுவால் சூடாக்கப் படும்போது, வீட்டின் கணப்பில் (Fire place) விறகு போன் றவை எரியும்போது, எரிவாயு அடுப்புகளிலிருந்து, Barbeque அடுப்பிலிருந்து... என்று பல்வேறு வழிகளிலும் எங்கெல்லாம் எரிதல் நிகழ்கின்றதோ அங்கெல்லாம் காபனோரொக்சைட் உருவாகக்கூடும். வீடுகளின் மூடிய வாகனத் தரிப்பிடத்தி னுள் (Garage) இறைச்சி வாட்டும் போதும் வாகனத்தை இயங்கு நிலையில் வைத்திருக்கும் போதும் காபனோரொக் சைட் அதிகம் தேங்கலாம். வீடுகளின் நிலக்கீழ் தளத்திலும் (Basement) போதிய காற்றோட்டமில்லாது போனாலும் காப னோரொக்சைட் தேங்கும் வாய்ப்புண்டு.

வீடுகளில் வழிபாடு என்று விளக்கையும் கற்பூரத்தையும் எரித்துத் தள்ளி வீட்டைப் புகை மண்டலமாக்கும் போதும் காபனோரொக்சைட் தேக்கம் ஏற்படும்.

**காபனோரொக்சைட் பாதிப்பு அறிகுறிகள்:**

- Dizziness - தலைச்சுற்று
- Chest pain - நெஞ்சுவலி
- Confusion - மாறாட்டம்
- Blurred vision - பார்வை மந்தம்
- Headache - தலைவலி
- Shortness of breath - மூச்சுவிடக் கடினம்
- Nausea - குமட்டல்

## எல்லாம் சரி, இந்த காபனோரொக்சைட் எப்படி உருவாகிறது?

காபன் போதுமான ஒட்சிசனுடன் சேர்ந்து எரியும்போது ஒரு காபன் அணுவும் இரண்டு ஒட்சிசன் அணுக்களும் இணைந்து காபனீரொட்சைட் ($CO_2$ – Carbon dioxide) உருவாகின்றது. ஆனால் போதுமான ஒட்சிசன் இல்லாதவிடத்து ஒரு காபன் அணுவும் ஓர் ஒட்சிசன் அணுவும் சேர்ந்து காபனோரொக் சைட் (CO – Carbon monoxide) உருவாகின்றது.

## காபனோரொக்சைட்டை எவ்வாறு அடையாளம் காண்பது?

அடையாள அணிவகுப்பெல்லாம் நடத்தி இதனை அடையா ளம் காணமுடியாது. பாதிப்பு ஏற்படத் தொடங்கும்போது மட் டுமே இதுவாக இருக்கலாமென உணரமுடியும்.

இந்த காபனோரொக்சைட் ஆனது மணம், நிறம், சுவை எது வுமே இல்லாதது. பார்க்கவோ சுவைக்கவோ நுகரவோ முடி யாதது. சுவாசத்தொகுதியில் கலந்துவிட்டால் குருதியிலுள்ள ஈமோகுளோபின்கள் உடற்கலங்களுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லும் ஆற்றலை முடக்கிவிடும். செறிவு அதிக மாக இருப்பின் மிக விரைவாகவும் குறைவாக இருப்பின் மெதுமெதுவாகவும் தன் வித்தையைக் காட்டவல்லது.

அதேவேளை இதைச் சுவாசிப்பவருக்கு இனம்புரியாத ஒரு போதையைத் தருவதால் அந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்ற எண்ணத்தைத் தராமல் ஓசையின்றி உயி ரைப் பறிக்கும் மாயப்பிசாசு இந்த காபனோரொக்சைட்.

காபனோரொக்சைட் தேங்கியுள்ள இடத்தில் இருப்போருக்கு தலைவலி, தலைச்சுற்று, கண் எரிவு, மந்தம், குமட்டல் போன்ற அறிகுறிகள் இருக்கும். காபனோரொக்சைட் அதிக மாக சுவாசிக்கப்பட்டால் வாந்தி, நினைவிழப்பு, மூளைச் சிதைவு, மரணம் கூட ஏற்படும். இதய, சுவாசம் தொடர்பான நோயுள்ளோரும் முதியோரும் சிறுவர்களும் விரைவா கப் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்.

சுருங்கச் சொன்னால், குளிர் காலத்தில் பலரையும் தாக்கும் ஃபுளூ (Influenza) காய்ச்சலுக்கான பல அறிகுறிகள் இருக் கும். உடல் வெப்பநிலை மட்டும் இயல்பாகவே இருக்கும்.

## எப்படி காபனோரொக்சைட் ஆபத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வது?

- வீட்டின் எரிஉலை (Furnace), நீர்சூடாக்கி (Boiler), கணப்பு

(Fire place) போன்றவை ஆண்டுக்கொரு தடவை தகைசார் பொறியாளர்களால் பரிசோதனை செய்யப்படவேண்டும்.

- வீட்டை வெப்பமாக்குவதற்கு எக்காரணம் கொண்டும் வாயு அடுப்புகளைப் பயன்படுத்தவே கூடாது. எரிதல் நிகழும் வேறு எந்தவொரு கருவியையும் வீட்டினுள் பயன்படுத்தவே கூடாது.
- வீட்டின் புகைப்போக்கியிலும் தடைகள் இல்லாதிருக்க வேண்டும்.
- வீட்டின் மூடிய வாகனத் தரிப்பிடத்தினுள் வாகனங்களை இயங்குநிலையில் வைத்திருக்கக்கூடாது.
- வாகனத் தரிப்பிடத்தின் கதவுகள் திறந்திருந்தாலும், தரிப்பிடத்திலிருந்து வீட்டுக்குள் வருவதற்குக் கதவு இருந்தால் வாகனங்களை இயங்குநிலையில் வைத்திருப்பது ஆபத்தானது.

### காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகள்:

ஒன்ராறியோவில் குடியிருப்புகளில் காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளைப் (CO Alarms) பொருத்தவேண்டும் என்பது சட்டம்.

ஒரு மில்லியன் துணிக்கைகளுக்கு 70 என்ற எல்லையைத் தாண்டும்போது இக்கருவிகள் எச்சரிக்கை ஒலி எழுப்பும்.

வீட்டின் ஒவ்வொரு மாடி/தளத்திலும், படுக்கை அறைகளுக்கருகே ஒவ்வொன்று இருப்பது மிக நல்லது என வலியுறுத்தப்படுகின்றது.

காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளைப் பொருத்துவதோடு உங்கள் வேலை முடிந்துவிடுவதில்லை. ஆண்டுக்கொரு தடவையேனும் அவை ஒழுங்காக இயங்குகின்றனவா என்று பரிசோதனை செய்வதிலும் கவனமாக இருக்கவேண்டும்.

நுகர்வோர் கையேட்டில் பரிசோதனை செய்வது பற்றிய விளக்கம் இருக்கும். ‘எல்லாம் எமக்குத் தெரியும்’ என்று கையேட்டைக் குப்பையில் போடாமல், உயிர்காப்புத் தகவல்கள் அடங்கிய இவ்வாறான கையேடுகளைக் கவனமாக ஒரு தடவையேனும் வாசிப்பது உங்கள் உயிருக்கான உத்தரவாதத்தை நீடிக்கும்.

உங்கள் உறவினர், நண்பர்கள், அயலவர்களுள் முதியவர்கள் தனித்து வாழ்ந்தால், அவர்களுக்காக காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளைப் பொருத்துவதிலும், பரிசோதிப்பதிலும் நீங்களும் உதவலாம்.

வாடகைக் குடியிருப்புகளில் காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளைப் பொருத்துவது வீட்டு உரிமையாளரின் பொறுப்பு. பொருத்தவைப்பது குடியிருப்போரின் பொறுப்பு.

CSA (Canadian Standards Association) சான்றிதழ் பெற்ற, கனடியத் தர, பாதுகாப்பு நியமங்களுக்கமைவான காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகள் விற்பனைக்குள்ளன.

கண்ட கண்ட பொருள்களையும் கண்ட கண்ட இணையத்தளங்களூடாகவும் வாங்குவது போலல்ல இவற்றை வாங்குவது. இணையத்தளங்களில் வாங்கும்போது அதிக கவனம் தேவை.

பலருடைய வீடுகளிலும் இருக்கும் பழைய காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளின் மின்கலங்கள் வலுவிழக்கும்போது எச்சரிக்கை ஒலி 2-3 நாள்களுக்கு விட்டு விட்டு எழும். வீட்டில் யாருமே இல்லாதபோது கருவிகள் எச்சரிக்கை ஒலியெழுப்பி அடங்கிவிட்டால் மின்கலம் வலுவிழந்தது யாருக்குமே தெரிய வராது. அதனால் மின்கலம் ஆறு மாதங்களுக்கொரு தடவை மாற்றப்படவேண்டும் என்கின்றனர் துறைசார் நிபுணர்கள்.

இவ்வகைக் கருவிகள் இப்போது வழக்கொழிந்து வருகின்றன..

இப்போதெல்லாம் ஆறு மாதங்களுக்கொருதடவை மின்கலம் மாற்றத் தேவையில்லாத கருவிகள் வந்துவிட்டன. ஒரு தடவை பொருத்தினால் அதன் மின்கலம் 10 ஆண்டுகள் வரையில் வலுவிழக்காது. 7-10 ஆண்டுகளுக்குப் பிறகு கருவியையே கழற்றிவிட்டு, புதிதாக ஒன்றை மாற்றுவது சிறந்தது எனப் பரிந்துரைக்கப்படுகின்றது.

‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே’ என்று சொல்கிறது நன்னூல்.

மின்சார இணைப்புடனான காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளும் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. ஆனால் அவற்றுள்ளும் நீண்ட நேர மின்வெட்டுப் போன்ற நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, கருவி இயங்கும்போதே மின்னேற்றப்படக்கூடிய மின்கலங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

சில கருவிகளில் உள்ள திரையில், வீட்டினுள் காபனோரொக்சைட் செறிவு எந்த அளவில் இருக்கின்றது என்று பார்க்கக்கூடிய வசதியும் உண்டு.

காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவி, புகை எச்சரிக்கைக் கருவி (Smoke detector) இணைந்த ஒரே கருவியும் சந்தையில் கிடைக்கின்றது.

‘வாகனத் தரிப்பிடத்தினுள்ளே காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவியைப் பொருத்தலாம் தானே?’ என்று ஒரு கேள்வி எழும். பொதுவாக வாகனத் தரிப்பிடத்தினுள்ளே இவற்றைப் பொருத்துவது பரிந்துரைக்கப்படுவதில்லை.

குளிர்காலத்திலேதான் வாகனத் தரிப்பிடத்தினுள்ளே அது தேவை. நான்கு பாகை செல்சியசுக்குக் குறைந்த வெப்பநிலையில் கருவி இயங்காது.

கனடாக் குளிரை நம்ப முடியாது. எனவே வாகனத் தரிப்பிடத்தினுள்ளே காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவியைப்

பொருத்திவிட்டு அதனை நம்பிக்கொண்டிருக்க முடியாது.

2014-லிருந்து, ஒன்ராறியோ மாகாணத்தில் நவம்பர் முதலாம் நாள் தொடக்கம் ஏழாம் நாள் வரையில் 'காபனோரொக்சைட் விழிப்புணர்வுக் கிழமை' (Carbon Monoxide Awareness Week) எனக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மாகாண, உள்ளூராட்சி மன்றங்களின் காபனோரொக்சைட் ஆபத்துகள், வருமுன் காப்பு நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் பரப்பப்பட்டு வருகின்றன. தீயணைப்புப் படையினரும் இந்த நடவடிக்கைகளில் பங்கேற்று பாதுகாப்பு அறிவுறுத்தல்களை விடுக்கின்றனர். ஆனால், இவற்றைக் கணிசமானோர் கவனத்தில் எடுப்பதில்லை என்றே கருதத் தோன்றுகிறது.

ஒன்ராறியோவில் காபனோரொக்சைட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள், மரணங்களுள் 65% வீடுகளிலேயே நிகழ்கின்றன என மாகாண இணையத்தளமொன்று சொல்லும் தகவல் வெறுமனே பார்த்துவிட்டுக் கடந்துசெல்லக்கூடியதல்ல..

2015-ல் கனடாவின் பல்வேறு பகுதிகளிலும் 2000 வீட்டு உரிமையாளர்களிடம் இணைய வழியாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பொன்றில், 84 விழுக்காட்டினர் தங்கள் வீடுகளில் ஒரு காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவியேனும் இருப்பதாகக் கூறியிருந்தனர்.

இதே கணிப்பு, மாகாண மட்டத்தில், ஒன்ராறியோவில் 94% வீடுகளில் காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவி பொருத்தப்பட்டிருந்ததாகச் சொன்னது.

இந்த அதிகரிப்புக்கு, ஒன்ராறியோவில் 2014-ல் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டம் ஒரு முக்கியமான காரணம்.

ஆனால், கனடாவில் கிழக்குக் கரையோர அத்திலாந்திக் மாகாணங்களில் 69% வீடுகளில் மட்டுமே காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவி பொருத்தப்பட்டிருந்தது.

பெருங்கொடுமை என்னவென்றால், காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளைப் பொருத்தியிருந்தாலும், 61 விழுக்காட்டினருக்கு எப்போது கருவிகளை அல்லது மின்கலங்களை மாற்றவேண்டும் என்ற தெளிவு இல்லை. 78 விழுக்காட்டினருக்கு கருவியிலிருந்து வரும் ஒலி, மின்கல வலுவிழப்பு அறிவுறுத்தலா? அல்லது காபனோரொக்சைட் எச்சரிக்கையா? என்ற குழப்பம் இருந்தது.

நிறையப்பேர் தம்மிடம் உள்ள எதைப் பற்றியும் தெளிவாக அறிந்திருப்பதில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

பத்தாண்டுகள் கடந்திருக்கின்றன. நிலைமை முன்னேற்றமடைந்திருக்கும் என்று நம்புவோம்.

### வீட்டில் காபனோரொக்சைட் இருப்பதற்கான அறிகுறிகள் இருந்தாலோ காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவி எச்சரிக்கை ஒலியெழுப்பினாலோ என்ன செய்யலாம்?

- தொலைபேசியில் யாரேனும் WhatsApp வல்லுநர்களை அழைத்து ஆலோசனை பெறுவதை விடுத்து உடனடியாக வெளியே போய்விட வேண்டும். காபனோரொக்சைட் எச்சரிக்கை ஒலி கேட்டால், வீட்டில் விளக்கெரியும்போதோ கற்பூரம் எரியும்போதோ அப்பளம், மிளகாய், மீன் பொரிக்கும் போதோ புகை எச்சரிக்கைக் கருவிக்கு விசிறி விடுவது போல விசிறிவிட முனையாமல் உடனேயே வீட்டிலிருந்து வெளியேறவேண்டும். சொற்ப நேரத்திலேயே மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் இந்த காபனோரொக்சைட்.
- வீட்டிலிருந்து குறைந்தது 15-20 அடி (5-6 மீற்றர்) தூரத்துக்கு அப்பால் போகவேண்டும். செல்லப்பிராணிகளையும் மறக்கக்கூடாது. 'வீட்டினுள் இருந்த எல்லோருமே வெளியே வந்துவிட்டார்களா ?' என்று பார்க்கவேண்டும்.
- காபனோரொக்சைட் எளிதில் தீப்பற்றக்கூடியது. கண் மூடித் திறப்பதற்குள் தீ விபத்தை அல்லது வெடி விபத்தை ஏற்படுத்த, மின் ஆளிகள் (Switches) செயற்படும்போது ஆளியினுள் ஏற்படும் மிகச் சிறுபொறி (Spark) மட்டும் போதும். எனவே மின் ஆளிகள் எதையுமே தொடவும் கூடாது.
- வெளியே செல்லும்போது கதவுகளைத் திறந்தே விட வேண்டும்.
- மறக்காமல் கைத்தொலைபேசியையும் வெளியே கொண்டு சென்றிருந்தால் கைத்தொலைபேசியிலிருந்தோ அல்லது அயலவரின் தொலைபேசியிலிருந்தோ 911-ஐ அழைக்கவும். கைத்தொலைபேசியை வீட்டினுள் மறந்துவிட்டிருந்தால், 'அதை எடுத்து வருகிறேன்' என்று மீண்டும் வீட்டினுள் நுழையவே கூடாது.

எல்லோரும் வீடுகளில் காபனோரொக்சைட் எச்சரிக்கைக் கருவிகளைப் பொருத்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

உங்களுடைய, உங்கள் உறவுகளுடைய உயிர்களின் பாதுகாப்பை அதிகரிக்க ஒரு கருவிக்கு 30-100 டொலர் ஒன்றும் பெரிய தொகையில்லை.

**உசாத்துணை:**

www.oafc.on.ca
www.hc-sc.gc.ca
www.ontla.on.ca
www.endthesilence.ca
www.cbc.ca, www.bbc.com
www.theguardian.com
www.newindianexpress.com

குறிப்பு: காபனோரொக்சைட் ஆபத்துக் குறித்து தாய்வீடு இதழில் கடந்த 15 ஆண்டுகளில் 12-க்கும் மேற்பட்ட கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இந்த இதழிலும் வேலா. சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய, 'மௌனக் கொலையாளி' என்ற கட்டுரையும் காபனோரொக்சைட் ஆபத்து பற்றியதே.



gangatharan.k@thaiveedu.com




வீட்டிற்குள் உருவாகும் காபனோரொட்சைட் அல்லது காபன்மொனோக்சைட் வாயு எவ்வளவு ஆபத்தானது? என்ற கேள்வி எல்லோர் மத்தியிலும் எழலாம். மணம், நிறம், சுவை இல்லாத இந்த நச்சு வாயு மிகவும் ஆபத்தானது. கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வீடுகளிலும் தொடர்மாடிக் கட்டிடங்களிலும் வசிக்கும் பலரும் இதனால் பாதிக்கப்படுகி றார்கள். கனடாவில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் பத் தாயிரம் பேர் வரை பாதிக்கப்படுவதாக சில புள்ளி விபரங் கள் கூறுகின்றன. குறிப்பாக, கனடாவில் ஒவ்வொரு ஆண்டும் இந்த நச்சு வாயுவின் தாக்கத்தினால் சராசரியாக 300 பேர் உயிர் இழக்கின்றனர்.

## Carbon Monoxide Detectors:

பொதுவாக வீடுகளில் புகை அறிவுறுத்தும் கருவி பொருத் தப்பட்டிருப்பது வழமை. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கும் இறப்புகளையும் அனர்த் தங்களையும் கருத்திற் கொண்டு Carbon Monoxide Detector ஒவ்வொரு வீட்டிற்கும் பொருத்தப்பட வேண்டும் என்ற நிலை உருவாகி உள்ளது. குறிப்பாக, கனடா நாட்டில் ஒன்டாரியோ மாநிலத்தில் இது கட்டாயச் சட்டமாக்கப்பட்டிருக்கிறது. புதிய வீடுகள் தொடக்கம் பழைய வீடுகள் வரை Carbon Monoxide Detector பொருத்தத் தவறுபவர்களுக்கு இரண்டாயிரம் டொலர் வரையான அபராதம் விதிக்கப்படும் அளவிற்கு ஒன் டாரியோ மாகாண அரசு இதற்கு முக்கியத்துவம் அளித்திருக் கிறது. கனடாவின் மற்றும் சில மாகாணங்களிலும் இது படிப்ப டியாக அறிமுகப் படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடிய தாக உள்ளது.

2009-ம் ஆண்டு பெப்ரவரியில் அல்பேட்டா மாகாணத்தில் சுமார் 7 பேர் ஒரே நாளில் இத்தகைய பாதிப்பிற்கு உள்ளாகி முதியோர் இல்லத்தில் இருந்து வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிந்தது. 2009-இல் சுமார் 414 கனடியர்கள் இவ்வாயுவினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளதாகக் கனடிய சுகாதாரப் பகுதியினரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

இத்தகைய பாதிப்புக்கள் பொதுவாகக் குளிர் காலத்திலேயே அதிகமாக ஏற்படுகிறது. வீட்டினை வெப்பமாக வைத்திருப்ப தற்காக வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் வெப்பமாக்கி மூலம் (Gas Furnace) அளவுக்கு அதிகமான Carbon Monoxide உருவாக்கப்பட்டு அது வீட்டிற்குள் தங்கிவிடுவதே இதற்குக் காரணம் ஆகும். அது தவிர Gas அடுப்பு, Gas துணி உலர்த்தி, தீவறை (Fire Place), புகைப்பிடித்தல், (Tobacco smoke) என்பவற்றின் மூலமும் மேற்குறிப்பிட்ட வாயு உரு வாக்கப்படலாம். பொருத்தப்பட்ட உபகரணங்கள் முறையாக இயங்கினால், முறையாகப் பராமரிக்கப்பட்டால் இத்தகைய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பில்லை.

கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கார் தரிப்பிடங்கள் (Car Garage) வீடுகளுடன் இணைக்கப்பட்டிருப்பதும் காரை




நிறுத்திய பின்னர் வீட்டின் உட்கதவைப் பயன்படுத்தி வீட்டிற் குள் போவதும் பொதுவான அம்சமாகக் காணப்படுகிறது. மாரி காலத்தில் பனியின் கெடுபிடியில் இருந்து ஒவ்வொருவ ரையும் பாதுகாக்க இது ஒரு சிறந்த வழி என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் இந்த நடை முறையில் இருக்கும் உயிர் ஆபத்தையும் கவனத்தில் எடுக்கவேண்டியது மிக முக் கியமானது. வீட்டின் உட்கதவு எப்போதும் இறுக மூடப்பட்டி ருக்கவேண்டும் என்பது நியதி. இதற்காக, தானே மூடக்கூடிய

(Auto Closer) ஒரு பொறி பொருத்தப்பட்டிருக்கும். ஆனால் சில வசதிகளுக்காக அவற்றை சிலர் கழற்றி விடுவதும் வழமையாக உள்ளது. உண்மையில் என்ன நடக்கிறதென்றால் காரை நிறுத்திய பின்னர் engine-ஐ off பண்ணப் பலரும் மறந்து விடுவதோடு உட்கதவை இறுகமூடுவதிலும் கவனம் எடுப்பதில்லை. வெளியில் போவதற்குச் சில மணிநேரத்திற்கு முன்பு அதி சொகுசு கருதி இருந்த இடத்தில் நின்றபடியே காரை ஸ்டார்ட் செய்து விடுவதும் வழமை. ஆனால் கராஜின் வெளிக் கதவைத் திறந்து வைக்க வேண்டும் என்பதைச் சிலர் சிந்திப்பதில்லை. முதுமையின் விளைவால் ஏற்படும் மறதி காரணமாக முதியவர் பலர் காரை ஆப் செய்ய மறப்பதும் படுக்கையிலேயே மரணத்தைத் தழுவிக் கொள்வதும் வருடா வருடம் நடைபெறும் நிகழ்வுகளாக உள்ளன. சொகுசு வாழ்க்கையை அனுபவிக்கும்போது சில முன் எச்சரிக்கைகளையும் கவனத்தில் கொண்டால் மட்டுமே பூரண பலனை அடைய முடியும். தவறினால் ஏற்படும் விளைவு மரணத்திலும் முடியலாம்.

Carbon monoxide-ன் அளவு கூடினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பல மட்டத்தில் இருக்கும். ஓரளவு கூடினால் தலையிடி, வாந்தி, மயக்கம் போன்ற அறிகுறிகள் தென்படும். அளவுக்கு அதிகமாகக் கூடினால் அது நச்சுவாயுவாக மாறிக் கொல்லும் அளவிற்கு ஆபத்தானதாக மாறிவிடும் அல்லது உடலில் நிரந்தரப் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். பொதுவாக வீடுகளில் Count 2-4 அளவில் இத்தகைய வாயு இருப்பது பொதுவானது. இதனால் பாதக விளைவு ஏற்படப் போவது இல்லை. ஆனால் Count 10-இற்கு மேல் போனல் Co Detector அபாயத்தை அறிவுறுத்தத் தொடங்கிவிடும். 20-ற்கு மேற்போனால் வீட்டை விட்டு வெளியேறி மாற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

புதிய வீடுகளில் கட்டிட அமைப்பாளர்கள் படுக்கை அறைக்குச் சமீபமாக குறைந்தது ஒரு Co Detector-ஐ ஆவது போடுதல் வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. அத்தகைய கருவிகள் தற்போது பிரதான மின் இணைப்போடு பொருத்தப்பட்டிருக்கும். நிலக்கீழ் அறைகளிலும் இத்தகைய ஒரு கருவியினைப் பொருத்தி விடுவது வரவேற்கத்தக்கது. கட்டட அமைப்பாளர்களினால் பொருத்தப்படும் இக்கருவிகள் பொதுவாக 2 in 1 ஆக இருக்கும். அதாவது புகைக்கும் காபனுக்கும் பொதுவானதாக இரண்டையும் கண்டுபிடிக்கக்

## முக்கிய குறிப்பு:

Ontario is taking another step to keep families and homes in Ontario safe by making carbon monoxide alarms mandatory in all residential homes.

The new regulation, which comes into effect October 15, 2014 updates Ontario's Fire Code following the passage of Bill 77 last year. These updates are based on recommendations from a Technical Advisory Committee which was led by the Office of the Fire Marshall and Emergency Management and included experts from fire services, the hotel and rental housing industries, condo owners and alarm manufacturers.

Carbon monoxide detectors will now be required near all sleeping areas in residential homes and in the service rooms, and adjacent sleeping areas in multi-residential units. Carbon monoxide alarms can be hardwired, battery-operated or plugged into the wall.

Quick Facts:

- Between 2000 and 2013, in Canada, there were 4,990 deaths associated to CO poisoning.
- In total, there were 3,027 hospitalizations related to CO poisoning in Canada between 2002 and 2016, and 14.3% of CO-related hospitalizations in Canada were for people 65 years old or older
- There are more than 300 CO-related deaths per year in Canada, and more than 200 hospitalizations per year in Canada.
- Bill 77, an Act to Proclaim Carbon Monoxide Awareness Week and to amend the Fire Protection and Prevention Act, 1997, received royal assent in December 2013.
- The Ontario Building Code requires the installation of carbon monoxide alarms in homes and other residential buildings built after 2001.

Below are some carbon monoxide safety tips, provided by the Hawkins-Gignac Foundation for CO Education:

- Install at least one CSA-6.19.01 approved carbon monoxide detector outside bedrooms. However, it is advised to install one on every floor. n Check the expiry date of existing detector and replace any devices built before 2008. Alarms need to be replaced every 7-10 years depending on the brand.
- Have a licensed technician inspect your fuel burning appliances (re. furnace, range, fireplace, water heater) annually, to ensure they are in proper working order and vented correctly.
- For families with older parents or relatives, help them inspect their detectors.
- Replace batteries in your detector annually, or opt for models with 10-year sealed lithium batteries that never need to be changed.
- When a detector sounds, make sure everyone is out of the house and call 911. Exposure to carbon monoxide reduces a person’s ability to think clearly, so don’t delay clearing out.

கூடியதாக இருக்கும்.

பொதுவாகக் கட்டட அமைப்பாளர்களினால் பொருத்தப்படும் இத்தகைய அறிவுறுத்திகள் சரியாக இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. அதில் உண்மையும் இல்லா மல் இல்லை. இவை தானாக இயங்குவதும் பிழையாக இயங் குவதும் (Malfunction) பொதுவான குறைபாடாகக் காணப்படு




கிறது. ஒரு வருடத்திற்குள் இத்தகைய குறைபாடுகளை உத் தரவாதத்தின் கீழ் தீர்த்துவிட வாய்ப்பு இருக்கிறது. புள்ளிவிப ரங்களின் படி முதல் ஐந்து வருடத்திற்குத்தான் இவை சரி யாக இயங்கும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. அதன் பின்னர் இவை செயலிழந்து போவதால் வீட்டுரிமையாளர்கள் அவற்றைப் பிரதியீடு செய்வதை மனதில் வைத்திருத்தல் வேண்டும்.

## பராமரித்தல்:

இத்தகைய உபகரணங்களை நாம் சரிவரப் பராமரிக்காவிட் டால் ஏற்படக்கூடிய இடர்கள், பாவனை முடியும் காலத்திற்கு முன்னரே வரத் தொடங்கிவிடும். வீட்டில் vacuum செய்யும் போது மாதம் ஒருமுறையாவது இதனைச் சரிவர vacuum செய்வதன் மூலமும் அதில் இருக்கக்கூடிய test பொத் தானை அழுத்திப் பரீட்சிப்பதன் மூலமும் இதன் இயக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இக்கருவியானது பிரதான மின் இணைப்புடன் இணைக்கப்பட்டிருப்பதால் தொடர்ச்சி யான மின் இணைப்பை சில மணித்தியாலங்களிற்குத் துண் டித்து விடுவதும் இதனது பிழையான இயக்கத்தைச் சரிப்ப டுத்த எடுக்கக்கூடிய ஒரு யுக்தியாகும். slide in செய்யக்கூடிய முறையிலேயே இக்கருவி பொதுவாக இருக்கும். எனவே அதனை ஒருதரம் கழற்றிச் சுத்தம் செய்வதும் மின் இணைப் பில் ஒரு இடைவெளியை ஏற்படுத்துவதும் மிக இலகுவானது. ஆபத்தானது அல்ல.

Carbon Monoxide Detectors என்பது மிக அவசியமானதாக இருப்பதாலும் உயிர்காக்கும் தோழனாக அது செயற்படுவ தாலும் - ஒரே ஒரு கருவி புத்தம் புதிதாகவே இருக்கிறது என்று காலாதிகாலமாக நம்பி இருக்காது மேலதிகக் கருவி ஒன்றையோ, இரண்டையோ வாங்கிப் பொருத்திவிடுவது (Plug in) மிக அவசியமானது என்பதே எனது ஆணித்தரமான சிபாரிசாகும். இதற்கு 30-35 டொலர்கள் மட்டுமே செலவாகும்.

Carbon Monoxide அறிவுறுத்தி சத்தம் இடத் தொடங்கினால் தயக்கமின்றி 911 இலக்கத்தை அழுத்தி தீயணைக்கும் படை யின் உதவியை நாடினால் அவர்கள் விரைந்து வந்து உண்மை நிலையைக் கண்டு உரிய நடவடிக்கைகளை எடுப் பார்கள். இதற்குக் கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது. முற்றிலும் இலவசம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## குறிப்பு:

பழைய வீடுகளில் Furnace-இல் இருக்கக் கூடிய Heat Ex-changer துருப்பிடித்ததன் காரணத்தால் மேலதிக காபன் மொனோக்சைட் உருவாக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட் டாலோ அல்லது வேறு வழிகளினால் அதன் தொழிற்பாட்டில் இருந்து இத்தகைய பாதிப்பு வருவதாகக் கண்டுபிடித் தாலோ, அதனைச் சரிப்படுத்தும் வரை Gas-ஐ (Shut Down) முற்றாக நிறுத்தி விடுவதற்குரிய உரிமையும் கடப்பாடும் தீய ணைக்கும் பிரிவினருக்கு உண்டு என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

மௌனக் கொலையாளியாகச் செயற்படும் Carbon monox-ide-ன் உக்கிரத்தைக் கருத்திற் கொண்டு முக்கிய சில பகுதி கள் ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளன.

## How dangerous is carbon monoxide?

Consider these facts: Carbon Monoxide (CO) is the number one cause of accidental poisoning deaths in the United States. According to the Consumer Products Safety Commission. It's estimated approximately 500 deaths occur each year from accidental CO poisoning. Carbon Monoxide also results in approximately 10,000 illnesses each year, for which people are treated in hospital emer-gency rooms, a number which is underestimated.

Carbon Monoxide is totally undetectable by human senses; it is an odorless, colorless and tasteless poison and is so deadly that it has earned the name, 'The Silent Killer'. Car-bon Monoxide is highly toxic and can act on the body quickly in high concentrations, or slowly over long periods of time.



velasubramaniam@thaiveedu.com

# பெற்றோரின் விவாகரத்தும் பிள்ளைகளின் நடத்தையும்

– த. சிவபாலு

திருமண முறிவுபற்றி நான் கனடாவிற்கு வந்த சில வாரங்களில் 'உதயன்' பத்திரிகையில் தொடர் கட்டுரை ஒன்றை எழுதி, அதனைப் பின்னர் நூலாகவும் வெளிக்கொண்டு வந்தேன். இதற்குக் காரணம் விவாகரத்து தமிழர் மத்தியிலும் அதிகரித்திருப்பதைக் கேள்வியுற்றமையாகும். எமது நாட்டில் கேள்விப்படாததை இங்கே சாதாரணமான ஒரு விடயமாகக் கேள்விப்படும் போது மிக மனவலியைத் தந்தது.

நான் நண்பன் ஒருவரின் மகனின் திருமண விழாவிற்குச் சென்று வாழ்த்து மடலை வாசித்து வந்த ஒரு மாதத்தில் கணவனும் மனைவியும் பிரிந்துவிட்டார்கள் என்ற செய்தி என்மனதில் கசப்பான அனுபவமாகப்பட்டது, 'ஆசை அறுபது நாள் மோகம் முப்பதுநாள்' என்னும் முதுமொழி நினைவில் வந்தது. எமது பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கங்கள், நடத்தைகள், மதிப்பார்ந்த குடும்ப வாழ்க்கை மாற்றமடைந்து செல்வதைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். இதுதான் 'பண்பாட்டதிர்ச்சி' (Cultural Shock) என்பதாக என் மனதில் ஒரு எண்ணப்பதிவை ஏற்படுத்தியிருந்தது. வெள்ளையினத்தவரைத் திருமணம் முடிப்பதையும் கலப்பு மணமாகத் தொடர்வதையும் சேர். பொன். இராமநாதன் காலத்தில் இருந்தே பிரபலமானதாக அறிய முடிகின்றது. கலாசார மாற்றத்தின் ஓரங்கமாக இதனைக் கொள்ளலாம். பல்வேறு நடைமுறை மாற்றங்களை வெளிநாட்டில் வாழும் மக்கள் ஏற்றுக்கொண்டு வாழ வேண்டிய நியதி காணப்படுகிறது. 'ஊரோடு ஒத்தோடு' என்னும் கோட்பாடுக்கமைய குடியேற்ற நாட்டுப் பண்பாடோடு இணைந்து வாழும் நிலை காணப்படுகின்றது. குடியேறியவர்கள் பரம்பரையாகத் தொடர்ந்து வந்த வாழ்வியலை மாற்றிக் கொண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தந்திற்கு முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பது மறுப்பதற்கில்லை. எமது பண்பாட்டை உதறித்தள்ளிவிட்டுப் பிள்ளைகளின் எதிர்காலத்தை உதாசீனப்படுத்தி அவர்களைக், குற்ற உணர்வுக்கு இட்டுச் செல்வதைத் திருமண முறிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கணவனும் மனைவியும் இணைந்ததே இல்வாழ்க்கை. அவ்விதமன்றி சிறுசிறு கருத்து வேறுபாடுகளுக்காகத் தனித் தனியாகப் பிரிவதும் பின்னர் பிள்ளைகளைத் தாயோ தந்தையோ தனிதனியாக வளர்க்கும்போது அக்குடும்பங்களில் வளரும் பிள்ளைகளின் மனநிலை எத்தகையதாக அமையும் என்பதை விவாகரத்துக்கு முன்னர் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசிய மாகின்றது, விவாகரத்துச் செய்த பின்னர் நான் அவசரப்பட்டுவிட்டேன் என்பதால் வரும் பயன் ஏதும் இல்லை. 'வெள்ளம் வருமுன்னே அணைகட்ட வேண்டும்.'

மணமுறிவு என்பது குடும்பத்தினை இக்கட்டான நிலைக்குத் தள்ளும். தனியே இருந்து பிள்ளைகளைக் கவனிப்பதோ அவர்களின் அற்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்வதோ கடினமானது. பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இணைந்து வாழ்வதே சிறப்பானது. குடும்பத்தில் பிணக்குகள் தோன்றும் போது கணவன் - மனைவி இருவரும் நடந்தவற்றை மறந்து எதுவும் நடக்காதது போன்று வாழ்வதே வாழ்க்கை. தாய், தந்தை இருவரும் இணைந்து பிள்ளைகளுக்கு நல்ல நடத்தைகளைப் பின்பற்ற வைக்கும் போது அவர்கள் பெற்றோரிடமிருந்து திறன்களையும், நல்ல நடத்தைகளையும், நல்லொழுக்கத்தையும் கற்றுக்கொள் கிறார்கள். பெற்றோர் மணமுறிவைப் பெற்றுக்கொண்டால், அதனால் குழந்தைகளின் மனோநிலை பாதிக்கப்படலாம். இழக்கக்கூடாததை இழந்துவிட்ட சோகம் அவர்களைக் கௌவிக்கொள்ளலாம். சில குழந்தைகள் விவாகரத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள். தாய் - தந்தையரின் பிரிவு அவர்களைக் கடுமையாகப் பாதிக்கின்றது. மணமுறிவு என்பது பிள்ளைகளின் நடத்தைகளில் மாற்றதை எற்படுத்துவதோடு உள்ளத்திலும் அழிக்க முடியாத வடுவை ஏற்படுத்தி விடுகின்றது. இவ்வித மன ஏக்கங்களுக்கு அல்லது தாக்கங்களுக்கு உள்ளாகும் பிள்ளைகள் வளர்ந்து வரும்போது வன்முறையாளர்களாக மாறிவிடுகின்றனர் என்பது உளவியலாளர்களின் கருத்தாக உள்ளது.

குழந்தைகளைத் தன்னம்பிக்கையுள்ளவர்களாக வளர்க்க வேண்டும். திருமண முறிவால் வரும் மாற்றம் ஒரு நெருக்கடி அல்ல என்பதைக் குழந்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் தந்தையோ அன்றித் தாயோ புரியவைக்கவேண்டும். வாழ்க்கை என்பது நெருக்கடி அல்ல, என்பதை அவர்களுக்கு உணர வைத்தல் வேண்டும். மாற்றத்தை அட்ஜஸ்ட்மெண்டாகக் கருதலாம். இதன் அடிப்படையில், குடும்பத்தில் திருமண முறிவு ஏற்படும்போது குழந்தைகளின் பொதுவான விளைவுகளைப் பற்றி விவரமாக ஆய்வது பொருத்தமாக அமையும். திருமண முறிவு குடும்பத்தினருக்கு மாத்திரமன்றிக் குழந்தைகளுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும். கூட இருந்தவரின் பிரிவு, பிரிவினால் உண்டாகும் துன்பம் மற்றும் குழப்பம் போன்றவை குழந்தைகளின் மனநிலையைப் பாதிக்கின்றன.



## பாடசாலைகளில் நடத்தைகளில் மாற்றம்:

திருமண முறிவு என்பது குடும்பத்தினர் அனைவருக்கும் கடினமானது. குடும்பத்தின் மாறும் செயற்பாடுகளைப் புரிந்து கொள்வதில் குழந்தைகள் குழப்பத்தையும் கவனக் குறைவையும் சந்திக்கலாம். இதனால் அவர்கள் கல்விச் செயற்பாடுகளில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியாது போகும். சோகம் நிறைந்த உள்ளத்தோடு இருக்கும் பிள்ளைகள் தமது முழுக் கவனத்தையும் கல்வியில் செலுத்த முடியாத நிலைமை காணப்படும். அத்தோடு அவர்களின் செயல்திறனும் குன்றும். பிள்ளைகள் வீட்டுப் பிரச்சினைகள் காரணமாகப் பள்ளிப் பணியில் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படும். கல்வி அடைவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுப் பின்தங்கும் நிலை ஏற்படும். குழந்தை வகுப்பறையில் ஒதுங்கி இருப்பதோடு, முன்பிருந்த கலகலப்பும் துடிதுடிப்பும் குழந்தையிடம் இருந்து காணாமல் போகும்.

## இணைந்த செயற்பாட்டு நடத்தை மாற்றங்கள்:

திருமண முறிவு குழந்தைகளின் சமூக வாழ்வைப் பாதிக்கலாம். குடும்பத்தில் மணமுறிவு ஏற்பட்டு தந்தை அல்லது தாயுடன் தங்கி வாழும் குழந்தைகள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளப் பின் நிற்பதையும், தயக்கம் காட்டுவதையும், சில வேளைகளில் சிரமப்பட்டு, குறைந்தளவில் சமூகத் தொடர்புகளை உருவாக்கவும் கூடும். சமூக ஊடாட்டம் குறைவடைகின்ற போது, தனிமையில் இருந்து சிந்திக்கும் நிலையால் மனவழுத்தம், மனநெருக்கடி என்பன குழந்தைகளுக்கு உருவாகலாம்.

திருமண முறிவு மூலம், குழந்தைகளின் வாழ்க்கை முறைகளில் ஏற்படும் மாற்றங்கள், புதிய வீடு மற்றும் புதிய பாடசாலை போன்றவற்றுக்கு அடையாளம் கொடுக்க முயற்சி செய்வர். அத்தோடு தமது நடத்தைகளிலும் மாற்றங்களைக் கொண்டிருப்பர், புதிய சூழ்நிலைக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொள்ள மிகவும் சிரமப்படுவர்.

## தடுமாற்றமான நடத்தைகள்:

கணவன் மனைவி இருவருக்கும் இடையிலான விரிசல், சில நேரங்களில் குழந்தைகளை நெருக்கடிக்குள்ளாக்கும். மணமுறிவின் காரணமாகத் தாயோ, தந்தையோ கோபம் அல்லது மனத் தடுமாற்றம் முதலான தத்தம் உணர்ச்சிகளைக் குழந்தைகளிடம் பிரயோகிக்கும் சமயத்தில் குழந்தை நெருக்கடிக்குள்ளாகும். இதனால் குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம், தங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் அல்லது பிறரிடம் கோபத்தை வெளிப்படுத்தலாம். சில வாரங்களுக்குப் பிறகு இது மங்கிவிடும். இச்செயற்பாடு குழந்தைகளிடம் தொடர்ந்து நீடித்தால், அதனை மனமுறிவின் தீவிர அறிகுறியாகக் கருதி உடனடியாக வைத்தியரை நாடவும்.

## தவறு செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வு:

ஒருவருக்கொருவர் அன்பைச் செலுத்திய தம்பதியினர் மணமுறிவு ஏற்பட்ட பின் நடந்த செய்கையை எண்ணி வருந்த நேரிடலாம். தாம் தவறு செய்துவிட்டோமே என்ற பெற்றோரின் குற்ற உணர்வு குழந்தைகளுக்கு அதிக மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம். தொடர் மன அழுத்தத்தால் குழந்தையின் மனநிலை பாதிப்பு அடையலாம். இந்த மன அழுத்தம் காரணமாகத் தூக்கமின்மை, உடச்சோர்வு, உணவில் ஆர்வமின்மை, வயிற்றுக்கோளாறு, இனம்புரியாத பயம் ஆகியன ஏற்படுகின்றன. கூடுதலான மன அழுத்தம் உடல் ஆரோக்கியத்தின் மீதான எதிர்மறைத் தாக்கத்தை அதிகரிக்கிறது. இந்நிலையில் குழந்தைகளுக்கு ஆலோசனையோ அல்லது உரிய விளக்கமோ வழங்கினால், இந்த உணர்வுகளைக் குறைக்கலாம். இவ்வித நடத்தை மாற்றங்களை மண முறிவுகள் எடுத்துச் செல்கின்றன என்பதைப் பெற்றோர் சிந்திக்கத் தவறுவதும் திருமண முறிவுக்குக் காரணமாகின்றது.

## பிள்ளைகளைச் சீரழிக்கும் நடத்தைகள்:

திருமண முறிவின்போது தீர்க்கப்படாத பிரச்சினைகள் எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தலாம். கடந்த 20 ஆண்டுகளில் விவாகரத்தை எதிர்கொண்ட குடுபத்தினரின் குழந்தைகள், குற்றச்செயலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டிருந்தனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புகை பிடிக்கும் பழக்கம் அல்லது மது அருந்தும் பழக்கம் அவர்களைச் சீரழிக்க அவர்களிடம் ஏற்பட்ட நடத்தை மாற்றங்களே காரமாகின்றன. தாயிடமோ அன்றித் தந்தையிடமோ இழந்த அன்பைப் பெற்றுக்

கொள்ள யாரையாவது தேடும் நிலைமைகள், உள்ளத்தில் தடுமாற்றத்தை ஏற்படுத்திச் செய்வதறியாது இருக்கும் வேளை தங்களுடன் நெருங்கிப் பழகுவோருடன் அன்பைத் தேடுவது, தவிர்க்க முடியாத உளத் தேவையாகக் காணப்படும். இதனால் பல இளைஞர்கள் தவறான நடத்தை உள்ளவர்களுடன் சேர்ந்து தங்கள் வாழ்வைப் பாழடித்துக் கொள்ளும் நிலையும் ஏற்படுகின்றது. சில நேரங்களில், குழந்தைகள் நெருக்கடிக்குள்ளாகி, தங்கள் உணர்ச்சிகளை எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதை அறியாமல் இருக்கலாம். இது கோபமாக அல்லது மனத் தடுமாற்றமாக வெளிப்படக்கூடும். குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம், தங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் அல்லது பிறரிடம் கோபத்தை வெளிப்படுத்தலாம். சில வாரங்களுக்குப் பிறகு இது மங்கிவிடும். ஆனால் நீடித்தால், இது விவாகரத்தின் தீவிர விளைவாக இருக்கலாம்.

## திருமணத்தில் நம்பிக்கையின்மை:

இன்று உள்ள இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் திருமுணத்திற்கு உடன்படாது காலத்தைக் கழிப்பதோடு, திருமணம் பற்றிய ஒரு நம்பிக்கையீனத்தையும் கொண்டுள்ளனர். திருமண முறிவு ஏற்பட்டால் என்ன செய்வது. குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்ற ஐய உணர்வுக்கு அடிமையாகின்றனர். தங்கள் உறவுகள் நிலைத்திருப்பதை எதிர்பார்க்கும் போது கூட, விவாகரத்தாகித் தாய் அல்லது தந்தையுடன் தனித்து வாழும் குழந்தைகள் திருமண வாழ்க்கையில் அவ நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இந்த அனுபவம், இவர்கள் தாங்கள் திருமணமான பின்னர் விவாகரத்துக்குள்ளாகும் வாய்ப்பை அதிகரிக்கக்கூடும் என்ற மனப்பயத்தைக் கொண்டுள்ளனர்.

இந்த விளைவுகள் குழந்தைகளின் மீது வெளிப்படையாகத் தோன்றும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. எனினும், பிள்ளைகள் வளர்ந்து வரும்போது இதன் தாக்கம் வெளிப்படவும் கூடும். திருமண முறிவின்போது குழந்தைகள் சந்திக்கும் மன அழுத்தங்களைப் பெற்றோர் நன்கு உணர்ந்துள்ளனர். ஆதரவு மற்றும் ஆலோசனை மூலம் இந்த மாற்றத்தை கடந்து போக முயல்கின்றனர். கனடா போன்ற மேற்குலக நாடுகளில் திருமண முறிவு சாதாரணமானதாகக் காணப்படுகின்றது. துணையை இழந்த அல்லது திருமண முறிவு ஏற்பட்டுத் தனியாக வாழும் தாய் அல்லது தந்தையருடன் வாழும் குழந்தைகளுக்குச் சிறப்பான வழிகாட்டுதலை அரசாங்கம் வழங்குகிறது. இவ்வழிகாட்டல், பிரிந்து வாழும் பெற்றோருக்கும் வழங்கப்படுகிறது. இந்நடவடிக்கைகள் திருமண முறிவின் தாக்கத்தை அமைதியான முறையில் எதிர்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

## குழந்தைகளுக்கான தீர்வுகள்:

- விவாகரத்தான தாய், தந்தையர் தம் குழந்தைகளின் நலனுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அவர்களின் கல்வி, உடல் மற்றும் மன விருத்தி, சமூக உத்தேசங்களைக் கருத்தில் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வது முக்கியமானது.
- குழந்தைகளுக்கு விவாகரத்துக்கான காரணங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றோர்கள் வழங்க வேண்டும். இது அவர்களின் குழப்பம் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்.
- பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் அன்பாகவும் மிக நுணுக்கமாகவும் பேசுதல்.
- நம்பகத்தன்மையான உறவை மேம்படுத்துதல்.
- பெற்றோர் சமமான அன்பையும் ஆதரவையும் வழங்குதல் மற்றும் வழிநடத்துதல்.
- பிள்ளைகளிடம் குறைகூறாது இருத்தல்.
- குழந்தைகளின் வாழ்க்கையில் அதிகமான மாற்றங்களை ஏற்படுத்தாதுவிடல்.
- பாடசாலை, நண்பர்கள், மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் குழந்தைகள் கொண்டிருக்கும் உறவுகளைப் பாதுகாத்தல்.

## குழந்தைகளின் மனநலப் பாதுகாப்பு:

- குழந்தைகளுக்குச் சரியான தகவல் மற்றும் உரிய விளக்கங்களை வழங்குதல்.
- அவர்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்த அனுமதிக்கும் சூழ்நிலையை உருவாக்குதல்.
- திறமையான ஆலோசகர்களின் ஆதரவைப் பெறுதல்.

## சமூக நலத்திற்கான ஊக்கவுரை:

- குழந்தைகளின் சமூக மற்றும் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்குதல்.
- புதிய உறவுகளை உருவாக்க ஊக்குவித்தல் மற்றும் தொலைந்து போன உறவுகளைப் புதுப்பித்தல்.

## சமரசமான தீர்வு முறை:

- Family Means போன்ற அமைப்புகளின் ஆதரவைப் பெற்று, சமரசமான விவாகரத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
- குழந்தைகளின் நலனை முன்னிறுத்தி முடிவுகளை எடுப்பது.

விவாகரத்துப் பெற்ற தாய் அல்லது தந்தை தம் குழந்தைகளை அவர்களின் பருவத்தில் இருந்து முதிர் அகவையர் ஆகும் வரை உடல் உள ஆரோக்கியத்தைப் பேணியும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தும் அவர்களின் சமூக மற்றும் அறிவார்ந்த வளர்ச்சியை ஊக்குவித்தும், ஆதரவளித்தும் வளர்க்கவேண்டும். ஒவ்வொரு தாயும் தந்தையும் குழந்தைகளைச் சமூக விழுமியங்களுடன் வளர்த்து வளமான எதிர்காலத்தை உருவாக்குவது
அவசியமாகும்.



sivapalu@thaiveedu.com

# நாட்டைச் சிறக்க வைக்கும் அணிகலன்கள்

– குமார் புனிதவேல்

மக்கள் தனித்தனியாக வாழ்வதைவிட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதேசங்களை நாடிச் சென்று நிரந்தரமாக வாழத் தொடங்கியவேளை அவ்விடத்தை ஊர் என அழைத்தனர். மிக முந்திய குடிகளின் ஒன்றான சுமேரியர்கள் தமது தலைப்பட்டினத்தை ஊர் என்று அழைத்தனர்.

அதேவேளை தாம் இருந்த இடங்களை விட்டு நகர்ந்து சென்று, கூடி வாழ முற்பட்டவேளை உருவாக்கப்பட்டது தான் நகரம் என்றார்கள். இதில் தவறு கூறுவதற்கொன்றுமில்லை. நாடு என்பதற்கான வரைவிலக்கணம் வள்ளுவப்பெருந்தகை நுட்பமாகச் சொல்லி இருக்கிறார். அந்த வரைவிலக்கணத்தைக் கவனித்துவிட்டு பின் நாம் அப்படிப்பெற்ற நாட்டின் அழகைச் சிறக்க வைக்கும் அணிகலன்கள் ஐந்தையும் நோக்கலாம்.

திருவள்ளுவப் பெரியார் தனது படைப்பான திருக்குறளில் எழுநூற்று முப்பத்தி மூன்றாவது குறளில், நாடு குறித்து தெளிவாகத் தந்துள்ளார்.

***‘பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு***
***இறையொருங்கு நேர்வது நாடு’***

இக்குறளின் விளக்கத்தையும் சிறப்பையும் எனக்கு ஏற்பட்ட சொந்த அனுபவத்தால் தெளிவுபடுத்துவது சிறப்பு எனக் கொள்வேன். இக்குறளின் அர்த்தம் வேறு. பிறநாடுகளிலிருந்து போர், இயற்கை அழிவு ஆகியவற்றால் மக்கள் வந்தால், அந்தச் சுமையைத் தாங்கிக்கொண்டு, தான் அரசிற்கு, தான் தரவேண்டிய வரியை மகிழ்வோடு தருவது தான் நாடு என்றார்.

என் சொந்த அனுபவத்தை இங்கு பகிர்வது தகும் என்று நம்புகிறேன். 1983-ம் ஆண்டில் தமிழர் பாரம்பரிய பூமியான இலங்கையில் அரசாங்க அனுசரனையுடன் நடந்த இன அழிப்பு கலவரத்திற்கு அஞ்சி கடவு அனுமதி ஏதும் இல்லாமல் நாட்டு எல்லையில் நாதி அற்று ஆதரவு வேண்டி நின்றவேளையில் என்னை இருகரம் கூட்டி வரவேற்றது இந்தக் கனடா நாடு. அதனை என்னால் மறக்க முடியாது. மறந்தால் அதற்கு உய்வே கிடையாது.

***‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்ந்நன்றி கொன்ற மகற்கு’***

நான் செல்வதற்கு இடம் இல்லாது தேடி அலைந்த வேளையில் எனக்கு அபயம் அழித்த நாடு இது. அதற்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன் என்பதால் அதனை இங்கு ஆவணப்படுத்துவதுடன், அதுவே நாடு என்பதற்கு வரைவிலக்கணமாக கொள்வேன். கனடா ஒரு சிறந்த நாடு. கிழக்கு ஐரோப்பியாவில் ஏற்பட்ட யுத்தத்திலும், மத்திய கிழக்கில் ஏற்பட்ட யுத்தங்களிலும் அகதியாக வந்தவர்க்கும், நான் பிறந்த நாடான இலங்கையில் இருந்து வந்த அகதிகளுக்கும் வாழ்வதற்கு இடம் கொடுத்த நாடு கனடா ஆகும்.

அடுத்ததாக, ஒருவரை அழகாகக் காட்டுவதற்கு அணிகலன்கள் பயன்படுவதுபோல் ஒரு நாட்டை அழகாகக் காட்டுவதற்கு சிறந்த அணிகள் என்ன என்பதை திருவள்ளுவர் அழகாக எடுத்தியம்புகிறார். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்ப்போம்.

ஒரு நாட்டின் முக்கிய அழகு எதுவெனின், அது நோயின்மை ஆகும். நாட்டில் நோய்கள் இல்லாதிருப்பதவசியம். சில வருடங்களுக்குமுன் கொரோனா தொற்று பரவிய வேளையில் அதன் கொடுமை அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விடயம். அங்கு நோய்கள் இருக்கக் கூடாது. நாம் எங்கு சென்றாலும் சென்ற இடத்தில் நோய் தொற்றிவிடக்கூடாது என அவதானமாய் இருப்போம். எனவே நோயின்மைதான் ஒரு நாட்டிற்கு வேண்டிய முதல் அணிகலன்.

இன்று வல்லரசு என்று கூறப்படுகின்ற நாடுகள் அனைத்தும் செல்வம் கொழிக்கும் நாடுகளாக இருப்பதவசியம். செல்வத்தின் சிறப்பை பிற இடங்களில் வள்ளுவர் குறிப்பிட்டாலும் செல்வம் இல்லாதவர் நிலையை நல்வழியில் ஒளவைப்பாட்டி அழகாகச் செல்லியுள்ளார்.

***கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்றுண்டா யின்***
***எல்லாரும் சென்றங்கு எதிர்கொள்வர் - இல்லானே***
***இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள்***
***செல்லாது அவன்வாயிற் சொல்.***

ஒருவன் கல்வி கற்கவில்லை என்றாலும், அவன் கையில் பொருள் இருந்தால் அவனுடன் எல்லாரும் சென்று உறவாடுவர். கையில் பணம் இல்லாதவனை வீட்டில் இருக்கும் மனைவியும் மதிக்கமாட்டாள், பெற்றெடுத்த தாயும் வேண்டாள். அவன் சொல்லும் வார்த்தையும் சபையில் எடுபடாது என்பதே இதன் பொருளாகும்.

அதேபோன்று திருவள்ளுவரும் தனது 247-வது குறளில்

***'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.***

எனக்கூறுவார். அதாவது பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதது போல உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம். எனவே ஒரு நாட்டை அழகுபடுத்தும் இரண்டாவது அணிகலன் செல்வம். அது இல்லாவிடில் உலக நாடுகள் மத்தியில் அவர்கள் வாக்கு எடுபடாது.

மூன்றாவது அணிகலனாக வள்ளுவன் விளைச்சலைக் குறிப்பிடுகிறான். ஒரு நாட்டிற்கு விளைச்சல் அவசியம் ஆகும். பையில் எவ்வளவு கோடி பணம் இருந்தாலும், அன்றைய வேளை உணவு இல்லை என்றால் அப்பணத்தால் பயன் எதுமில்லை. ஒரு நாட்டை கைப்பற்ற வேண்டுமானால் அந்நாட்டின் உணவுப்பற்றாக்குறையை ஏற்படுத்துவது இயல்பு. 1943-44 வருடங்களில் உணவை அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பி வைத்து இந்தியாவில் உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்திய அப்போதைய பிரித்தானிய பிரதமர் சார் வின்ஸ்டன் சேர்சில்லை இன்றும் குறிப்பிடுவர். ஒரு நாட்டின் சிறப்பிற்கு அந்நாட்டில் விவசாய விளைச்சல் சிறப்பாக அமையவேண்டும். அதனால் தான் ஒரு நாட்டை அழகுபடுத்தும் அணிகலனாக திருவள்ளுவர் விளைச்சலைக் குறிப்பிடுகிறார்.

வள்ளுவர் மகிழ்ச்சியுடன் வாழ்வது நாட்டினை சிறப்பிக்கும் நான்காவது அணிகலனாகக் கூறுகிறார். நாடு என்பது நாடிச் செல்வதால் என முன்பே குறிப்பிட்டேன். அப்படி நாடிச் செல்வதன் இலக்கு மகிழ்ச்சி, செல்வம் அல்ல. செல்வத்தை பெருக்குவது மகிழ்ச்சியை பெறுவதற்காகவே. எனவேதான் நான்காவது அணிகலனாக மகிழ்ச்சியை குறிப்பிடுகின்றார். அண்மைக்காலத்தில் மக்கள் மகிழ்ச்சியாக வாழும் பட்டியலில் முதல் இடத்தைப் பின்லாந்தும் இரண்டாம் இடத்தை டென்மார்க்கும் பெற்று உள்ளது. ஆனால் அவை செல்வந்த நாடுகள் பட்டியலில் முன்நிலையில் இல்லை. நாம் நாடி ஓர் இடத்திற்கு ஓடிச்செல்வது அங்கு இன்பமாக இருக்கலாம் என்பதனால். நான் நாடி வந்த கனடா நூற்று நாற்பத்தெட்டு நாடுகளில் செய்த கணிப்பில் பத்தாவது இடத்தில் இருப்பதை மகிழ்ச்சியுடன் கவனித்தேன்.

ஒரு நாட்டின் ஐந்தாவது அணிகலனாக பாதுகாப்பைக் குறிப்பிடுகிறார். பாதுகாப்பு இல்லாத இடத்து மகிழ்ச்சி இருக்காது. பாதுகாப்பு இல்லாத நாட்டில் செல்வம் நிலைக்காது. எனவே ஒரு நாட்டின் முக்கிய அணிகலனாக வள்ளுவர் பாதுகாப்பை தெரிவிக்கிறார். எத்தனையோ மக்கள் பாதுகாப்பு வேண்டி பிறந்த மண்ணை விட்டு வெளியேறுகிறார்கள். நானும் பாதுகாப்பு இன்மை என்ற ஒரே காரணத்திற்காக கனடா நாட்டிற்கு புலம்பெயர்ந்தேன். ஒரு நாட்டை விரும்புவதற்கு அந்நாட்டில் போதிய பாதுகாப்பு அவசியமாகும். எல்லோராலும் விரும்பப்படும் நாடு பாதுகாப்பான நாடாகும். அதுவே அந்நாட்டிற்கு சிறந்த அணிகலன்.

நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள், இன்ப வாழ்வு, நல்ல காவல் இந்த ஐந்தும் நாட்டிற்கு சிறந்த அணிகலன்களை என்பதை வள்ளுவரின் 738-வது குறள் விளக்கி நிற்கிறது.

***'பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிவ் வைந்து'***

நாட்டிற்கு ஐந்து அணிகலன்கள் சிறப்பாக இருக்குமானால் அந்நாடு சிறப்புற்று அமையும். அவ்வாறான நாட்டில் நாம் வசிப்போமானால் அது நாம் செய்த பாக்கியமாகும். அவ்வாறான ஒரு இனிய தேசமாக எமது இலங்கை நாடு வரும் என நம்புவோம்.



kumar.punithavel@thaiveedu.com



# தாய்மொழி உயிர்ப்பாதை

**- சி. நற்குணலிங்கம்**

ஒவ்வொரு மொழிக்கும் அந்த மொழிக்கே உரிய சிறப்புத் தன்மைகள் உண்டு. ஒவ்வொரு இனக்குழுவிற்கும் அடையாளமாக இருப்பது அவர்களின் தாய்மொழிதான். கருவில் இருக்கும்போதே தாய்மொழிச் சொற்களைக் குழந்தை கேட்கத் தொடங்கி விடுகிறதாம். தாய்மொழியின் சிறப்புப் பற்றிப் பேசும்போது நெல்சன்மண்டேலா 'நீங்கள் ஒரு மனிதரிடம் அவருக்கு புரியும் மொழியில் பேசினால் நீங்கள் பேசுவது அவர் மூளைக்குச் செல்லும், ஆனால் நீங்கள் அவரது தாய் மொழியில் பேசும்போது அது அவரது இதயத்திற்குச் செல்லும்' என்று கூறினார். 'எனது தாய்மொழியில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தபோதும் தாயின் மார்போடு ஒட்டிக்கொள்வதுபோல எனது தாய்மொழியைப் பற்றிக்கொள்ள வேண்டும். அது மட்டுமே என்னை உயிரோடு வைத்திருக்கும்' என்றார் மகாத்மாகாந்தி.

மொழிகள் நம் அக, புற மரபைப் பேணி வளர்க்கும் திறன் வாய்ந்த கருவிகளாகும். தாய்மொழிகளை மேம்படுத்திப் பரப்பித் தன்வயப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் மொழிப் பன்மையையும் பன்மொழிக் கல்வியையும் ஊக்கிவிப்ப தோடு மொழி, பண்பாட்டு மரபுகளுக்கான விழிப்புணர்வை வென்றெடுத்து உலக மக்களிடையே புரிந்துணர்வையும் உரையாடலையும் ஒற்றுமையையும் வளர்த்தெடுக்கும். அத்துடன் தகவல் பரிமாற்றத்தின் அடித்தளம் மொழிதான். ஒவ்வொருவரும் மற்றவர்களின் மொழிக்கு மரியாதை கொடுப்பது, தகவல்களை சிறப்பான முறையில் பரிமாற்றம் செய்யும் வழியினை இலகுவாக்குகின்றது.

ஆய்வுகளின்படி இந்தியாவில் மொத்தம் 780 மொழிகள் பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. உலகளவில் அதிக மொழிகளைப் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. முதலிடத்தில் பப்புவா நியூகினி உள்ளது. இந்த நாட்டில் மொத்தம் 840 மொழிகள் பயன்பாட்டில் உள்ளதாகக் கூறப்படுகிறது. உலகில் ஏராளமான மொழிகள் பயன்பாட்டில் இருந்தாலும் தாய்மொழி வாயிலாகவே ஒருவர் தகவல் பரிமாற்றம் செய்ய விரும்புவார். மக்கள் எத்தனை மொழிகளைத் தங்கள் ஆர்வத்தின் காரணமாக கற்றுக்கொண்டாலும் தாய்மொழிப் பற்று இருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

ஒரு மொழி அழிக்கப்படுகிறது எனில் அந்த மொழியைப் பேசுகின்ற சமூகத்தின் அடையாளங்கள் அழிக்கப்படும் முயற்சிகள் தொடங்கிவிட்டன என்பதே உண்மை. மொழி என்பது மனிதர்களின் கல்வி மற்றும் மேம்பாட்டுக்கு உதவும் தகவத் தொடர்புக் கருவி மட்டும்தான் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மொழி என்பது நம் பண்பாட்டு அடையாளம். இன்றைய உலகமயமாதலினால் மொழிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவது மட்டுமல்ல, கலாசார பன்முகத்தன்மையும் இல்லாமல் போய்விடும் ஆபத்தும் உள்ளது. மொழி அழிந்தால் மக்களின் பண்பாட்டு அடையாளம் அழியும். பண்பாட்டு அடையாளம் இல்லாத மக்கள் வரலாறு அற்றவர்களாகப் போவார்கள். மொழி எவ்வளவு தொன்மையானதாக இருந்தாலும்சரி அது எவ்வளவு உன்னதமான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும்சரி வழக்கொழிந்து போய்விட்டால் இலக்கியங்கள் எல்லாம் வெற்றுக் கிறுக்கல்களாகிவிடும்.

தாய்மொழிக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படவேண்டும் என்பதற்காக வரலாற்றினை மாற்றியமைத்த சம்பவங்கள் நிறையவே உண்டு. 1947-ம் ஆண்டில் கிழக்குப் பாகிஸ்தான் (தற்போது வங்காளதேசம்) மேற்குப் பாகிஸ்தான் (தற்போது பாகிஸ்தான்) இணைக்கப்பட்டு பாகிஸ்தான் எனும் நாடு உருவாக்கப்பட்டது. இந்தியாவிற்கு இடையில் மேற்கிலும், கிழக்கிலும் பிரிக்கப்பட்ட இரு பகுதிகளும் மொழியிலும், பண்பாட்டிலும் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டிருந்தன. கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள (வங்காளதேசம்) பெரும்பான்மை மக்களால் வங்காளமொழி பேசப்பட்டாலும் 1948-ம் ஆண்டின் அப்போதய பாகிஸ்தான் அரசு உருது மொழியை ஒருமித்த பாகிஸ்தான் நாட்டின் ஒரே தேசிய மொழியாக அறிவித்தது. இதற்குக் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் அவர்களது தாய்மொழியான வங்காள மொழியைக் குறைந்தது தேசிய மொழிகளில் ஒன்றாக அறிவிக்கவேண்டும் என்று கோரினார்கள். இந்தக் கோரிக்கை முதலில் தேரேந்திரநாத் தத்தா அவர்களால் 1948 பெப்பிரவரி 23-ம் நாளன்று பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

இதற்காக தாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் பொதுமக்க

ளின் ஆதரவுடன் மாபெரும் பேரணிகளையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்தனர். போராட்டத்தை முடக்க பாகிஸ்தான் அரசாங்கம் பொதுக்கூட்டத்தையும் பேரணிகளையும் தடை செய்தது. 1952 பெப்ரவரி 21-ம் திகதி நடைபெற்ற பேரணியில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டினால் மாணவர்கள் சிலர் கொல்லப்பட்டதுடன், காயமும் அடைந்தனர். தாய்மொழிக்காகத் தம் இன்னுயிரை ஈந்த நிகழ்ச்சி, வரலாற்றில் பதியப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். இதற்குப் பிறகு வங்காள தேச மக்கள் பன்னாட்டுத் தாய்மொழி நாளை ஒரு துயரம் தோய்ந்த நாளாக ஆண்டு தோறும் கொண்டாடி வருகின்றனர். அவர்கள் தாய்மொழிக்காக உயிர்நீத்த மாணவர்களின் நினைவிடமான சாகிதுமினாரை அடைந்து ஒவ்வோர் ஆண்டும் தம் ஆழ்ந்த அவலத்தையும் மதிப்பையும் நன்றிக் கடப்




பாட்டையும் நினைவேந்தலூடாக வெளிப்படுத்தி வருகின்றனர். வங்காள தேசத்தில் பன்னாட்டு தாய்மொழி நாள் ஒரு தேசிய நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானம் கனடாவில் வன்கூவரில் வாழும் வங்கதேச நாட்டவரான இரபுக்குல் இசுலாமாலும் அப்துசுசலாமாலும் முதலில் முன்மொழியப்பட்டது. இவர்கள் 1998 ஜனவரி ஒன்பதில் கொபி அனானுக்கு ஒரு கடிதம் உலக மொழிகள் மறையாமல் காத்திடப் பன்னாட்டுத் தாய்மொழி நாளைக் கொண்டாடுவதற்கான தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொண்டனர். இதற்கு இரபிக்குல் இசுலாமா 1952-ல் நடந்த மொழி இயக்கத்தின்போது தாக்காவில் கொல்லப்பட்ட பெப்பிரவரி 21-ம் நாளை முன்மொழிந்தார். இரபிக்குல் இசுலாமின் முன்மொழிவு வங்கதேச நாடாளுமன்றத்தில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. நாளடைவில் இந்த முன்மொழிவு அந்நாட்டு முதன்மை அமைச்சரான சேக் அசீனாவால் வங்கதேச அரசுவழி யுனெஸ்கோவிற்கு அனுப்பப்பட்டது. இந்த மொழியை அன்றைய பிரான்ஸ் நாட்டுக்கான வங்கதேச தூதுவரும் யுனெஸ்கோவுக்கான நிலையான பேராளருமான சையத்முவாசெம்அலி யுனெஸ்கோ ஒழுங்குமுறை அமைப்பினூடாக வழிப்படுத்தினார். இப் பணியில் முன்னாள் யுனெஸ்கோ பொதுச் செயலாளராக இருந்த பெதரிக்கோவுக்கு சிறப்பு அலுவலராக இருந்த தோசெம்மல்தோணிக்கும் உடன்துணை புரிந்துள்ளார். இறுதியாக யுனெஸ்கோ 20-ம் பொதுமன்றம் 1999-ம் ஆண்டு நவம்பர் 17-ம் நாளன்று ஒருமனதாக ஒவ்வோராண்டும் பெப்பிரவரி 21-ம் நாளன்று 1952-ல் தாய்மொழிக்காகத் தம் உயிர் நீத்த மாணவர்களது நினைவாகப் பன்னாட்டு தாய்மொழி நாளாக (INTERNATIONAL MOTHER LANGUAGE DAY) உலகம் முழுவதும் கடைப்பிடிக்கலாம் எனத் தீர்மானித்தது. இது மொழி, பண்பாடுப் பன்மையையும் உலகின் பல மொழிகளையும் மேம்படுத்தலுக்காக விழிப்புணர்வை வென்றெடுக்க கொண்டாடப்படுகிறது. இந்நாள் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூரப்படும் சிறப்பு நாளாகும்.

உலகில் பேசப்படும் ஆறாயிரம் மொழிகளில் 1500 மொழிகள் 1000 பேருக்குக் கீழானோர் பேசுபவை. மூவாயிரம் மொழிகள் 10000 பேருக்குக் குறைவானோர் பேசுபவை. எனினும் இவற்றில் எல்லா மொழிகளும் எல்லோருக்கும் புரிவதில்லை. உலகில் 94 நாடுகளில் கிட்டத்தட்ட எட்டுக்கோடிப் பேர் தமிழ் மொழியை பேசுபவர்களாக உள்ளனர். எனினும் தமிழ் பேசுபவர்கள் வசிக்கும் நாடுகள் அனைத்திலும் அரச மொழியாகத் தமிழ் அங்கீகாரம் பெறவில்லை. ஆனால் இலங்கை தமிழை அரசகரும மொழியாக அங்கீகரிக்கும் நாடு என்ற வகையில் தனிச்சிறப்பு பெறுகிறது. இலங்கையில் மாத்திரமன்றி சிங்கப்பூரிலும் தமிழ் மொழியானது அரச மொழிகளில் ஒன்றாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பிரதேசம், மாவட்டம், மாகாணம், மாநிலம், நாடு, கண்டம் எங்கும் சுமார் 6000 மாறுபட்ட மொழிகள் பேசப்பட்டாலும் மனிதர்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு தாய்மொழி உண்டு. ஒவ்வொரு தனிநபரும் அவரது தாய்மொழியைப் போற்றிப் பேணுவதும் அதன் தனித்தன்மையைப் பாதுகாப்பதும் தலையாய கடமை என்பதையே சர்வதேச தாய்மொழி தினம் உணர்த்துகிறது.

2024-ம் ஆண்டின் சர்வதேச தாய்மொழித் தினத்தின் கருப்பொருள் ‘பல மொழிக் கல்வி’ ஆகும். பாரம்பரியம் பற்றிய அறிவு மற்றும் கலாசார பாரம்பரியத்திற்கான வழித்தடங்களாகச் செயற்படும் தங்களது மொழிகளைப் பாதுகாப்பதன் மூலம் பன்மொழி மற்றும் பன்முக கலாசார சமூகங்கள் செழித்து வளர முடியும். பல்வேறு மொழிகள் அழிந்து வருவதால் மொழியியல் பன்முகத்தன்மை அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது. தற்போது உலக மக்கள் தொகையில் 40% பேர் தங்கள் தாய்மொழி யில் கல்வி பெறுவதற்கான வசதிகளைப் பெறமுடிவதில்லை. மேலும் இது குறிப்பிட்ட பகுதிகளில் 90%-த்தைத் தாண்டியுள்ளது என ஐ.நா. சபையின் வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று உலகளவில் 250 மில்லியன் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பள்ளி செல்லவில்லை. 763 மில்லியன் வயதா

னோருக்கு அடிப்படை எழுத்தறிவுகூடத் தெரியவில்லை. தாய்மொழிக் கல்வி என்பது கல்வி கற்றல், பிற மொழிக ளைக் கற்றல் என்பவற்றுக்கு உதவுகிறது. 'சர்வதேச தாய் மொழித்தினம்-2024' பல மொழிக் கல்விக் கொள்கையை செயற்படுத்துவதன் தேவையை முன்னிலைப்படுத்துகிறது. இதன் மூலம் அனைத்துக் குழந்தைகளும் தரம், அனைத்தை யும் உள்ளடக்கிய கல்வி மற்றும் அவர்களின் நினைவாற்றல் தவிர்த்த பிற திறன்களை வளர்த்துக்கொள்ளலாம். இந்தக் கொண்டாட்டங்கள் பல மொழிக் கல்விக்குப் பல சூழ்நிலைக ளிலும் தாய்மொழியின் அடிப்படையில் முக்கியத்துவம் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கல்வி தாய்மொழியில் கற்பிக்கப்படுவதுதான் மிகவும் முக்கி யம். திறன்களை அறிவாக்க தாய்மொழிக் கல்வியால் மட்டும் தான் முடியும். தாய்மொழியில் கற்பது ஒருவருக்குப் புரிதலை யும், உரையாடலையும் வலியுறுத்துகிறது. அதுதான் சிந்த னையையும் மேம்படுத்துகிறது. அது தன்னம்பிக்கையைக் கொடுக்கிறது. அது நல்ல பங்களிப்பைச் செய்ய உதவுகிறது. கற்றலை ஊக்குவிப்பதுடன், பலமொழிக்கல்வி தலைமுறை கடந்த கற்றலையும் ஊக்குவிக்கிறது. யுனெஸ்கோவின் அறிக்கையில் தாய்மொழி வழியிலான பன்மொழிக் கற்றலை வலியுறுத்துகிறது, தாய்மொழியில் கற்பது அடிப்படை உரிமை என்றும் தெரிவித்துள்ளது. ஆனால் அனைத்துத் தரப்பும் தாய்மொழியில் கல்வி கற்பதை உறுதி செய்ய இன் னும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டி உள்ளது. பெரும்பான் மையானவர்கள் தாய்மொழி தவிர பிற மொழிகளில் கற்பிக் கப்படுகிறார்கள். இது தாய்மொழி யைக் கவலைப்படுத்துவ தாகும்.

இன்றைய டிஜிற்றல் உலகில் மொழிகளை இணைப்பதும் கற் றல் உள்ளடக்கத்தை உருவாக்குவதும் இன்றியமையாதது. தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட தொலைநிலைக் கல்விக் கற்றல் முறைகள் இணைக்கப்படவேண்டும் என யுனெஸ்கோ தெரிவித்துள்ளது. தாய்மொழியும் தாய்ப்பாலும் உயிப்பானவை. தாய்மொழி என்பதும் ஒரு மொழிதானே என கடந்துபோய்விட முடியாது. நம்முடைய எண்ணம், படைப்பாற் றல் தாய்மொழி வழியாகவே நடக்கிறது. அடிப்படைக்கல்வி என்பது தாய்மொழியில் கற்பிக்கப்படவேண்டியது கட்டாயம். அதுதான் ஒரு அறிவார்ந்த சமூகத்தைத் தொடரச் செய்யும். தாய்மொழி அடிப்படை வலுவாக அமையும்போது எத்தனை மொழிகளையும் எளிதில் கற்றுக்கொள்ள முடியும். எனவே உயிப்பான தாய்மொழிக்கு என்றும் உயிர் கொடுப்போமாக.



natkunalingam@thaiveedu.com


# சிந்தனைக் களம்
(இசை , நடனம்)

## இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்
Zoom ID: 845 5391 3078 Passcode: 024 094



உரைத்தொடர் - 48

உரைப் பொருள்
'இசை வளர்ச்சியில்
கோயில்களின் வகிபாகம்'

உரையாளர்
திரு. ந. பரந்தாமன் M.A. , M.Phil
(முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)

22 பெப்ரவரி 2025 சனிக்கிழமை 8:00pm-10:30pm (கனடா-ரொறன்ரோ)

23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை 6:30am- 9:00am (இலங்கை, இந்தியா)

23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை 12:00am-2:30pm (சிட்னி)

Website: www.chinthanaikkalam.org

E-mail: chinthanaikkalam@gmail.com



# நாம் ஒளியென்று கற்பனை செய்ததெல்லாம்

**- ஓவியர் ஜீவா**

பெருநகரங்களின் பின்னணியில் ஏராளமான திரைப்படங்கள் உலகெங்கும் தயாரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. வுடி ஆலனின் 'மன்ஹாட்டன்' மற்றும் மாஸ்கோ டஸ் நாட் பிலீவ் இன் டியர்ஸ், நியூ யார்க் நியூ யார்க், சிகாகோ, ஸ்லீப்லெஸ் இன் சியாட்டில், பாரிஸ், ஐ லவ் யு போன்ற படங்கள் நினைவுக்கு வருகின்றன. கல்கத்தாவை களமாகக்கொண்ட சிட்டி ஆப் ஜாய், பிமல் ராயின் 'தோ பிகா ஜமீன், சத்யஜித் ராயின் கல்கத்தா ட்ரைலாஜி படங்களான 'பிரதித்வந்தி, சீமபத்தா,




ஜன அரண்யா' மற்றும் 'மஹாநகர்', மேலும் மிருணாள் சென்னின் 'இன்டெர்வியூ, கல்கத்தா 71, பதாதிக் அனைத்துமே புகழ் பெற்றவை. புதுடெல்லியை பின்புலமாக வைத்து வெளியான திரைப்படங்கள் ஏராளம். அவற்றில் எனக்கு பிடித்தது சாய் பரஞ்ச்பேயின் 'சஷ்மே பத்தூர்' தமிழில் மதுரை என்றால் அரிவாள் கலாசாரம், சென்னை என்றால் வடசென்னை ரவுடித்தனம் என்று படங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. மலையாளத்தில் 'புன்னப்பர-வயலார், நாடோடிக்காற்று, கம்மாடிப்பாடம்' என ஒரு நகரத்தையோ பகுதியையோ களமாகக் கொண்ட திரைப்படங்கள் நிறைய வந்திருக்கின்றன. சென்னை மற்றும் சுற்றுப்புறங்களை அழகியலோடு சொன்ன திரைப்படங்கள் ரஞ்சித் இயக்கியவை. 'அட்டைகத்தி, மெட்ராஸ், சார்பட்டா பரம்பரை' போன்ற படங்கள் முக்கியமானவை. இந்த பட்டியலில் வெங்கட் பிரபுவின் 'சென்னை 600028', விஜயின் 'மதராசப்பட்டணம்', புஷ்கர் காயத்ரியின் 'ஓரம் போ, வ - குவாட்டர் கட்டிங்' போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்!

மும்பை நகரம் பல திரைப்படங்களில் ஒரு முக்கிய பாத்திரமாகவே வந்திருக்கிறது. குரு தத் தயாரித்த சி.ஐ.டி. திரைப்படத்தில் நகைச்சுவை நடிகர் ஜானி வாக்கருக்கு ஒரு புகழ் பெற்ற பாடல் மும்பையை பற்றி இடம் பெற்றது. ஏ தில் ஹை முஷ்கில் ஜீனா யஹான். (மனமே, இங்கு வாழ்தல் கடினம் கொஞ்சம் தள்ளு கொஞ்சம் நில்லு... இது பம்பாய் என் அன்பே) எழுத்தாளர் கே.ஏ. அப்பாஸ் இயக்கிய பல படங்களில் மும்பை நகரத்திற்குத் தனி இடம் உண்டு. அவரது 'ஷெஹர் அவுர் சப்னா' (நகரமும் கனவும்), 'பம்பாய் ராத் கி பாஹோன் மெய்ன்' (இரவின் மடியில் மும்பை) போன்ற திரைப்படங்களை பார்த்திருக்கிறேன். கருப்பு வெள்ளையில் மும்பையின் சாம்பல் நிறத்தையும் சித்தரித்த படங்கள். இந்த வரிசையில் பின்னர் நிறைய திரைப்படங்கள் வெளிவந்தன. ராஜ்கபூர் இயக்கிய 'ஸ்ரீ 420', கிஷோர் குமார் நடித்த 'பம்பாய் கா சோர்', (அவர் நடித்த இன்னொரு படத்தின் டைட்டில் - 'டில்லி கா தக்') ரபீந்திர தர்மராஜ் இயக்கிய 'சக்ரா', மீரா நாயர் இயக்கிய 'சலாம் பாம்பே' , என். சந்திரா இயக்கிய 'அங்குஷ்', மணிரத்னம் இயக்கிய 'நாயகன்', 'பம்பாய்', மும்பை வாழ்வியலை ரசனையுடன் சொன்ன பாசு சட்டர்ஜியின் 'பியா கா கர்', 'ரஜனிகந்தா', 'சோட்டி சி பாத்', குந்தன் ஷாவின் 'ஜானே பி தோ யாரேன், சயீத் மிர்சாவின் 'ஆல்பர்ட் பிண்டோ கோ குஸ்ஸா க்யூன் ஆத்தா ஹை' , பரா கானின் 'ஓம் ஷாந்தி ஓம்', ஆஸ்கர்களை அள்ளிய டேனி பாயிலின் 'ஸ்லம்டாக் மில்லியனர்' மற்றும் ஏராளமான திரைப்படங்கள் மும்பையின் ஆன்மாவைத் தேடியிருக்கின்றன. கோவிந்த் நிஹலானியின் அரசியல் நெடி வீசிய 'பார்ட்டி' , மற்றும் தொழிற்சங்க வன்முறையை சொன்ன 'ஆகாத்' வீரியம் மிக்க மும்பை திரைப்படங்கள்! பீம்சென் இயக்கிய 'கரோண்டா ' படத்தில் இடம் பெற்ற 'இக் அகேலா இஸ் ஷெஹர் மெய்ன்' (ஒரு தனியன் இந்நகரத்திலே) பரந்த நகரத்தில் தனித்து விடப்பட்டவனின் குரல்!

மும்பை நகரம், கதையில் கணிசமான அளவை ஆக்கிரமித்த சமீபத்தில் வெளியான ஒரு திரைப்படம் All We Imagine as Light (நாம் ஒளியென்று கற்பனை செய்ததெல்லாம் ) மலையாளம் பேசும் மலையாள கதாபாத்திரங்கள், மராத்தி,



இந்தி மொழி பேசுபவர்கள் அனைத்தும் கலந்த கலவை இந்த திரைப்படம். மும்பையில் பணிபுரியும் இரண்டு மலையாள செவிலிகள் பிரபாவும் அனுவும் முக்கிய கதாபாத்திரங்கள். பிரபா எப்போதும் சோர்ந்த முகத்துடன், பல கவலைகளை தேக்கி வைத்திருக்கும் பெண். ஆனால் அவள் பணியில் சோடை போகாதவள். திருமணம் செய்த கையோடு, ஜெர்மனி கிளம்பிப்போன கணவனிடமிருந்து எந்த தகவலும் வருவதில்லை. இவள் தனியாக அனுவுடன் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து வாழ்ந்துகொண்டிருக்கிறாள். அனு இளைய வயதினள். கொஞ்சம் துணிச்சலானவள். ஒரு மலையாள இஸ்லாமிய இளைஞன் ஒருவனுடன் காதலில் வீழ்ந்து, அவனுடன் வேலை நேரம் முடிந்து சுற்றிக்கொண்டிருக்கிறாள். வீட்டு வாடகையைக்கூட பகிரமுடியாமல் அதையும் பிரபாவின் கணக்கில் சேர்த்துக்கொண்டிருக்கும் கடனாளி. மருத்துவமனையில் பணிபுரியும் ஒரு இளம் கேரள டாக்டருக்கு பிரபா மீது ஒரு மென்மையான காதல், அவள் மணமானவள் என்று தெரிந்திருந்தும். மருத்துவமனையில் சமையல்காரியாக பணிபுரியும் ஒரு வயதான ஆயா, தனியாக ஒரு வீட்டில் வாழ்பவள். அவள் வாழும் பகுதியை ஒரு பெரிய கட்டட நிறுவனம் விலைக்கு வாங்கி ஒரு பிரம்மாண்டமான அடுக்ககம் கட்டும் திட்டத்தில் செயல்படுகிறது. இவளிடம் இவளது உரிமைக்கான எந்த ஆதார ஆவணங்களும் இல்லாததால், நஷ்ட ஈடு எதுவுமின்றி இவளை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கிறது. இந்த பார்வதிக்கு ஆதரவாக பிரபா வக்கீலை சந்திக்கிறாள், எந்த பிரயோஜனமும் இல்லை. ஒரு இரவில் அடுக்கக விளம்பர பதாகை மீது கல்லெறிவது மட்டுமே இவர்களால் செய்ய முடிந்த எதிர்ப்புச் செயல்.

பிரபாவுக்கு ஒரு நாள் ஒரு பார்சல் வருகிறது. அது ஒரு எலக்ட்ரானிக் குக்கர். யார் அனுப்பியது என்ற முகவரி இல்லை. அது ஒரு ஜெர்மன் தயாரிப்பு என்பதால் அவளுடைய கணவன் அனுப்பியிருக்கலாம் என்று ஒரு சந்தேகம். பின்னர் தனிமையில் குளியலறையில் அந்தக் குக்கரை தன் கால்களுக்கிடையில் வைத்து வருடித்தரும்போது, கணவனைப் பிரிந்திருக்கும் அவளது தனிமை நம்மை சுடுகிறது. துணிச்சலும் இளமையும் மிக்க அனு, காதலனுடன் சுற்றித்திரியும்போது வரம்புகளை மீறத் தவறுவதில்லை. கிடைத்த சந்தர்ப்பங்களில் முத்தமிடவும் தவறுவதில்லை.

பார்வதிக்கு போராடி கழித்தபின், சொந்த ஊருக்கே திரும்பிச் செல்லும் எண்ணம் வருகிறது. பிரபாவும் அனுவும் அவளைச் சொந்த வீட்டில் குடியமர்த்த உதவுவதற்காக அவளுடன் ரத்னகிரி செல்கிறார்கள். அது ஒரு ஓட்டை உடைசல் குடிசைதான். அங்கு ஓரிரு நாட்களை கழிக்கும் எண்ணம் இருக்கிறது, இதற்கிடையில் அனுவின் காதலன் ஷியாஸ் இவர்களைப் பின்தொடர்ந்து கிராமத்திற்கே வருகிறான். காதலர்களுக்கிடையே ரகசிய சந்திப்புகள் நடைபெறுகின்றன. உடலுறவும் கொள்கின்றனர். அந்த கிராமத்தில் நடுத்தர வயது நபர் ஒருவர் நீரில் மூழ்கி தவிக்கும் தருவாயில் ஊர்



மக்கள் காப்பாற்றிக் கரை சேர்க்கின்றனர். செயற்கை முறையில் சுவாசம் தந்து அவனை மீட்கிறாள் பிரபா. அவனுடன் உரையாடல் தொடர்கிறது. தன் கணவனாக இவனை கற்பனையில் விரித்துக்கொண்டு பணிவிடை செய்து அவன் உடல் நிலையை தேற்றுகிறாள். அந்த 'கணவனும்' இவளை தவிக்க விட்டதற்காக மன்னிப்புக் கேட்கிறான். இவள் போதும் என விலகிச் செல்கிறாள்.

படம் முடியும்போது பிரபா, அனுவிடம் ஷியாசை அழைத்துவரும்படி சொல்கிறாள். அனைவரும் மகிழ்ச்சியுடன் பேசிக் களிக்கிறார்கள்.

திரைக்கதையோட்டத்தை படிக்கும்போது இந்த படம் என்ன



தான் சொல்லவருகிறது என்ற கேள்விகள் எழலாம். படம் மிக மெதுவாகச்செல்கிறது, உள்ளே ஒன்றும் விஷயங்கள் இல்லை என்றெல்லாம் கடுமையான விமர்சனங்களை சந்தித்துவருகிறது. கான் திரைப்படவிழாவில் எல்லாம் திரையிடப்பட்ட இந்த திரைப்படம் என்ன அவ்வளவு மோசமாகவா இருக்கிறது என்றால், இல்லை. பரிசோதனை முயற்சிகள் எப்போதுமே பாராட்டுக்குரியவை. இந்தத் திரைப்படம் பிரெஞ்சு நியோ ரியலிச பாணியை நினைவூட்டுகிறது. ஒளியும் ஒலியும் பயன்படுத்தப்பட்ட விதங்கள் நிஜ யதார்த்தத்துக்கு அருகில் இருக்கின்றன. தோலின் நிறங்களும் பரப்பும் மெருகூட்டப்படாமல் தத்ரூபமாகத் தெரிவது, பார்வையாளனை ஒன்றிடச் செய்கிறது. வாழ்க்கைப்போராட்டத்தை எளிமையாகச் சொல்லும் திரைப்படம் போர் அடிக்கத்தான் செய்யும், இவைகளை அனுபவிக்காத வர்களுக்கு.

இந்த படத்தின் பெரிய பலம் நடிகர்கள். கனி குஸ்ருதி சமீப காலங்களில் இத்தகைய திரைப்படங்களுக்கு மிகப் பொருத்தமானவராகத் தெரிகிறார். பிரபாவாக அவரது பார்வையும், உடல்மொழியும் வெகு பொருத்தம். ஏராளமான மலையாள மற்றும் தமிழ்த் திரைப்படங்களில் சிறு வேடங்களில் நடித்துள்ள கனிக்கு 2020-ல் வெளியான 'பிரியாணி' என்ற திரைப்படம் ஒரு திருப்புமுனை. பலரது கவனத்திற்கு அவரை கொண்டு சென்றது. அதில் ஒரு இளம் இஸ்லாமிய மனைவியாக நடித்திருந்தார். பல துணிச்சலான காட்சிகளும் ஒரு ஜீரணிக்கமுடியாத கதைத் திருப்பமும் நிறைந்த அந்தப்படத்தில் கனிக்கு பதில் வேறு யாரையும் நினைத்துக் கூட பார்க்க முடியாது. சுருங்கிய கண்கள், ஒல்லியான தேகம், எந்த கவர்ச்சியும் அற்ற தோற்றம். இத்தனையும் வைத்துக்கொண்டு திரைப்பட உலகில் சமாளிப்பது சாதாரண காரியமல்ல. வெகு சமீபத்தில் அவர் நடித்த இந்திப்படமான 'Girls are always Girls' மற்றும் மலையாளப்படமான 'முற' படங்களையும் பார்த்தேன்.

அனுவாக நடித்திருக்கும் திவ்ய பிரபாவுக்கும் இந்தத் திரைப்படம் முக்கியமானதொன்று. இளம் நர்ஸாக எந்த வித ஒப்பனையும் இல்லாமல், இயற்கை நிறத்துடனும் நடித்திருக்கும் இவர் காட்டும் பாவனைகள் அற்புதம். துணிச்சல், மிரட்சி அனைத்தையும் கண்களாலும் உதடுகளாலும் நடித்துக் காட்டியிருக்கிறார் .

பார்வதியாக நடித்திருப்பவர் சாயா கதம். பிரபல மராத்தி புதிய அலை இயக்குநர் நாகராஜ் மஞ்சுளே இயக்கிய திரைப் படங்களான 'பான்ட்ரி', 'சாய்ராட்', 'ஜுன்ட் ', மற்றும் புகழ் பெற்ற திரைப்படங்களான 'ரேடு', 'நியூட் ' மற்றும் 'லாபட்டா லேடீஸ் ' படங்களில் நடித்தவர். 'லாபட்டா லேடீஸ்' படத்தில் ரயில் நிலைய நடைமேடையில் ஒரு சிற்றுண்டிக்கடை நடத்துபவராக வந்து அபார நடிப்பை வெளிப்படுத்தியவர். இந்த திரைப்படத்திலும் அப்படியே!

ஷியாஸ் வேடத்தில் தோன்றும் இளைஞர் ஹ்ரிது ஹாரூன் ஒரு சில படங்களிலே நடித்த புதுமுகம். சமீபத்தில் வெளியான 'முற ' படத்தில் நடித்திருந்தார். மலையாள நகைச்சுவை நடிகர் அசீஸ் நெடுமங்காடு, முற்றிலும் வேறு பாணியில் டாக்டர் மனோஜ் ஆக நடித்திருந்தார். இன்னொரு ஆச்சரியம் நீரில் மூழ்கி காப்பாற்றப்படும் மனிதனாக தமிழ் நடிகர் ஆனந்த் சாமி தோன்றுகிறார்.

ஒளிப்பதிவும் இசையும் இப்படத்தின் சிறப்பு அம்சங்கள். எந்த இடத்திலும் செயற்கை நெடியற்ற ஒளிப்பதிவு என்றுதான் சொல்லவேண்டும். படத்தை இயக்கியவர் பாயல் கபாடியா என்ற பெண்மணி. ஓரிரு குறும் படங்களை எடுத்தவரின் முதல் புதின திரைப்படம் இது. Cannes Grand Prix விருது உட்பட உலகெங்கும் உள்ள பல்வேறு திரைப்படவிழாக்களில் இந்த படத்துக்கான ஏராளமான விருதுகளை அள்ளிக் கொண்டு வந்திருக்கிறார் இந்த பெண்மணி.

டிஸ்னி ஹாட் ஸ்டார் தளத்தில் இந்தத் திரைப்படம் காணக்கிடைக்கிறது!



jeeva@thaiveedu.com



# சமூக மாற்றத்துக்கான அரங்கு: ஒஸ்லோவில் நடந்த 'ஒரு கல்யாணக்கதை' நாடகம்

ராஜன் செல்லையா

கடந்த டிசம்பர் இறுதியில் (08.12.24) ஒஸ்லோவின் Rommen scene அரங்கில் 'ஆற்றுகைத் திருவிழா' என்ற பெயரில் 'அரங்கப் பாடல்' இசை நிகழ்ச்சியும் 'ஒரு கல்யாணக் கதை' நாடகமும் இடம்பெற்றன. நாடகமானது இறுதியில் ஓர் அரங்க உரையாடலை உள்ளடக்கிய Forum Theater ஆக வடிவமைக்கப்பட்டிருந்தது. நாடகத்திற்கான எழுத்துருவை ரூபன் சிவராஜா எழுதியிருந்தார். நாடகத்தில், ரூபனின் இயக்கத்துடன் ஒஸ்லோ அரங்கங்களிற்கு நன்கு அறிமுகமான சர்வேந்திராவும் இணைந்திருந்தார்.

### கதைக்களம்:

நாடகத்திற்கான கதைக்களமாக ஒரு திருமண நிகழ்வு அமைந்திருந்தது. நிகழ்விற்கு வந்திருந்தவர்கள் மகிழ்வித்தலுடன் கூடிய தமிழ்க் கலாசாரக் கூறுகளுடன் உணர்வுவயப்படக்கூடிய கதையை, உள்வாங்கக்கூடிய வகையில் இயக்குநர்கள் அரங்கத்தை வடிவமைத்திருந்தனர். அரங்கத்தின் நுழைவாசலிலேயே மங்கள வாத்தியத்துடன் 'மணமக்களின் பெற்றோர்' வந்தோரை வரவேற்க, மண்டபமானது மணவறை மற்றும் அலங்காரங்களுடன் அச்சொட்டாக ஒரு திருமண நிகழ்விற்குள் இருப்பது போன்ற உணர்வைப் பெறும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

மணமகன்-மணமகள் வீட்டார், அவர்களுடன் மண்டபத்தில் முகூர்த்த நேரம் நெருங்குவது பற்றி ஆளாளை விரட்டிக்கொண்டு அவசரப்படும் நபர்கள், போட்டோ-செல்ஃபி எடுத்துக்கொண்டு திரிபவர்கள், ஓடித்திரிந்து உபசரிப்போர் என்று அரங்கத்திற்கு வந்திருந்தவர்கள் தம்மை அந்தக் கதை மாந்தர்களுடன் இனங்காணக்கூடிய வகையில் 'செட்' போடப்பட்டிருந்தது.

### கையாளப்பட்ட பிரச்சினை வடிவங்கள்:

மணவறை அருகில் நின்று திருமணத்தை நடத்தி வைக்கின்ற மணமகன்-மணமகளின் உறவினர் பாத்திரங்களே தமது பாத்திரங்களிலிருந்து விலகி இடையிடை கதைசொல்லிகளாக மாறி மணமகன்-மணமகளின் கதைகளிற்குள் பார்வையாளர்களை ஃப்ளாஷ்பேக் முறையில் அழைத்துச் சென்றனர்.

இந்தப் ஃப்ளாஷ்பேக் கதைகளிலே முக்கியமாக கீழ்வருகின்ற பிரச்சினை வடிவங்கள் கையாளப்பட்டிருந்தன:

- ஊர் உலகத்தின் அவதூறிற்கு அஞ்சி மகளின் காதலைச் சிதைக்கின்ற தனித்தாய்.
- சாதியைக் காரணம் காட்டி மகனின் காதலையும் தெரிவையும் மறுதலிக்கின்ற ஒரு தந்தை.

இந்தக் கதைகளை இணைக்கின்ற இடைவெளிகளில் ஆடல், பாடல், சொல்லிசை (Rap) என்பன அழகாக இணைக்கப்பட்டிருந்தன. இந்த இடத்தில் 'பூவாகிப் பிஞ்சாகிக் கனியாகி விதையாகிப் பல காலம் வாழ்கின்ற மரமாகி எங்கும் மலர் தூவுமோ-வாழ்வு' என்கின்ற அந்த அழகிய கருப்பாடலைப் (Theme song) பிரத்தியேகமாகக் குறிப்பிட்டேயாகவேண்டும்.



### மக்கள் அரங்கம்:

திருமணம் முடிவடைந்த பின்னர் நாளாந்த வாழ்விற்குத் திரும்புகின்ற மணமக்களின் வாழ்வில் உறவுச்சிக்கல் உருவாகிறது. இந்தப் பகுதியில் இளையோர்களிடையே நிலவும் போதைவஸ்த்துப் பாவனை பேசுபொருளாகப்பட்டது. இளம் கணவனின் போதைவஸ்துப் பிரச்சினை மற்றும் அவருடைய கிரிமினல்-குற்றவியல்சார் கடந்த காலம் அவரது மனைவிக்கு நம்பிக்கை முரண்சார் பிரச்சினையாகி கணவனிடமிருந்து அவர் பிரிய எத்தனிக்கிறார். இந்த இடத்தில் நாடகம் முடி

விற்கு வந்து அரங்கத்தில் கூடி இருந்த மக்கள் இந்த நிலைமை சார்ந்து கருத்துகளை வழங்க அழைக்கப்பட்டனர்.

இந்த நாடகம் முற்றுமுழுதாக 'மக்கள் அரங்கம்' (Community Theater) எனும் வகைக்குள் அடங்குகிறது. நேரத்தை ஒதுக்குவதற்குச் சிக்கல் நிறைந்ததொரு வாழ்க்கைச் சூழலில் தொழில்சார் நடிகர்களல்லாத பலரையும் இணைத்து பல



நாட்களாக ஒத்திகை பார்க்கப்பட்டு இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. ஒஸ்லோவில் வாழுகின்ற பல இசை விற்பனர்கள், பாடலாசிரியர்கள், பாடகர்கள், நடன ஆளுமைகள், ஒலி-ஒளி வடிவமைப்பாளர்கள், மேடை நிர்வாகிகள், உடையலங்காரம் மற்றும் ஒப்பனையாளர்களெனப் பலரும் பங்களித்த ஒரு பிரமாண்டமான படைப்பென இதனைச் சொல்லலாம். முக்கியமாக பெருமளவில் இரண்டாம் தலைமுறை இளையவர்கள் கலந்துகொண்டதும், அவர்கள் தமிழுடன் சேர்த்து இயல்பாக நோர்வே மொழி பேசி நடித்ததும் குறிப்பிடக்கூடியவை.

நாடகத்தின் பார்வையாளர்கள் 'திருமணம்' நிகழ்த்திக் காட்டப்பட்ட வேளை சிரிப்புடன் கூடிய குதூகல மனநிலையில் நாடகத்தை இரசித்ததைக் காணமுடிந்தது. தமக்குப் பரிச்சயமானதொரு சூழலின் பிம்பத்தை உள்வாங்கிய தன்மை இதில் தெரிந்தது. இதுவே மணமக்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த பின்னணிக் கதைகளிற்கு அரங்கம் செல்கையில் கடும் அமைதியுடன் பார்வையாளர்கள் இருந்ததையும் உணரக்கூடியதாக இருந்தது. இந்தச் சடுதியான அரங்கமாற்றம் மூலம் கையாளப்பட்ட விடயங்கள் சமூக மாற்றத்திற்கான கூறுகளை தமது படைப்பில் ஆழமாக இயக்குநர்கள் பதித்திருந்தமையைக் காட்டியிருந்தது. இந்தப் பத்தியில் கூறப்படாத, சமூக விமர்சனத்திற்குரிய தமிழர் வாழ்வியலுடன் பிணைந்த அம்சங்கள் பல அரங்கத்தில் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டதுடன், பல முற்போக்குச் சிந்தனைகளும் பாத்திரங்கள் மூலம் எடுத்தியம்பப்பட்டிருந்தன.

### நிலைக்கண்ணாடி:

நாடகத்தின் போக்கில் கையாளப்பட்ட விடயங்களான அதிகாரம், தாக்கம் செலுத்தும் தன்மை, சமரசம், கிளர்ச்சி, மாற்றம் என்பவை பார்வையாளர்களைச் சென்றடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த வகையில் நாடகத்தின் பார்வையாளர்கள் சமூகத்தில் கட்டமைக்கப்பட்ட விடயங்களையும் அதற்கான எதிர்வினைகளையும் உள்வாங்கித் தமது அன்றாட சிக்கல் நிறை வாழ்க்கையுடன் அவற்றைப் பொருத்தி விளக்கம் கொண்டிருந்திருப்பார்களென நம்பலாம்.

இந்த வகையில் எழுத்துருவிலும் இயக்கத்திலும் பங்காற்றிய ரூபனும் சர்வேந்திராவும் மாற்றம் தேவையான எமது சமூகத்திற்கு முன் இந்த நாடகத்தின் மூலம் ஒரு நிலைக்கண்ணாடியை வைத்திருந்தனர் எனலாம். பார்வையாளர்கள் ஒவ்வொருவரும் நாடகத்தில் காட்டப்பட்ட பிரச்சினை வடிவங்களில் தாம்சார்ந்து எவ்வகை முடிவுகளை எடுக்கலாம் என்கின்ற சிந்தனைக்கு உட்பட்டிருப்பர். இந்தக் 'கல்யாணக்கதை' மூலம் சிந்தனைவயப்பட்ட பார்வையாளர்கள் சமூகத்தில் மாற்றத்தை வலியுறுத்தக்கூடிய உரையாடல்களிற்கு ஏதுகோலாகவும் இருப்பரென நம்பலாம்.

இருந்தபோதிலும் நாடகத்தில் பேசப்பட்ட சாதியப் பிரச்சினை மற்றும் ஊர் உலகத்திற்காகப் பிள்ளைகளின் காதலைச் சிதைப்பது என்கின்ற கனதியான விடயங்களில் ஒன்றை விட போதைப் பிரச்சினை மக்கள் அரங்கத்திற்கு (Forum teater) உரையாட ஏன் எடுக்கப்பட்டது என எண்ணியபடி வீடு வந்தேன். இதன் அர்த்தம் போதைப் பிரச்சினை இளையோர் சார்ந்து கரிசனை காட்டத் தேவையற்ற பிரச்சினை என்பதல்ல. சமூக மாற்றத்திற்கான கனதியான உரையாடலின் தேவை என்ற வகையில் முன்னையது தாக்கமுள்ளதாக இருந்திருக்கலாம். இவைகள் எழுத்துருவாக முன்னர் நிச்சயம் உரையாடப்பட்ட விடயங்களாக இருந்திருக்கலாம்.



ஒருவேளை அரங்காற்றுகையின் கட்டமைப்பின் போக்கில் போதைப் பிரச்சினையை முடிவில் பேணுவது இலகுவானதாகவும் இருந்திருக்கக்கூடும்.

சாதியப் பிரச்சினையை அரங்க உரையாடலிற்கு எடுத்திருந்தால் பலர் கருத்துச் சொல்லாமற் போயிருப்பார்களோ என்றும் மனம் அலசியது.

நாடகத்தின் போக்கில் கையாளப்பட்ட விடயங்களான அதிகாரம், தாக்கம் செலுத்தும் தன்மை, சமரசம், கிளர்ச்சி, மாற்றம் என்பவை பார்வையாளர்களைச் சென்றடைந்திருக்கும். நாடகத்தின் பார்வையாளர்கள் சமூகத்தில் கட்டமைக்கப்பட்ட விடயங்களையும் அதற்கான எதிர்வினைகளையும் உள்வாங்கித் தமது அன்றாட சிக்கல்நிறை வாழ்க்கையுடன் அவற்றைப் பொருத்தி விளக்கம் கொண்டிருந்திருப்பார்களென நம்ப லாம்.



(ஒளிப்படங்கள்:
தீபன் கணேஸ்)

rajan.s@thaiveedu.com




# சிறு துளிகளால் சிறைப்பிடிக்கப்படும் பெரும் சூரியன்கள்

## மைக்கல் கொலின் கவிதைகள்

– 'ஆகவே' ஜபார்

எடுத்த எடுப்பிலேயே மைக்கல் கொலினையும் அவரின் இத் தொகுப்பையும் பற்றி மட்டும் இவ்வுரையில் நான் பேச விழைந்தால் இயல்கள் பற்றிய வியாபித்த பெருவெளி யொன்றை இருள்மயப்படுத்தி என்னால் உருவகித்துக் காட் டப்படும் மிகச் சிறிய வட்டத்துக்குள் பேர் பிரகாசத்தைக் குறுக்கி வழங்கிவிடும் ஆபத்தைச் செய்தவனாகிவிடுவேன். அதனால் கொலினின் இத் தொகுப்பு மற்றும் அவருடைய பிற படைப்புகள் என்பவற்றை மையப்படுத்தி முடிந்தவரை முடிந் தவற்றைப் பற்றிப் பேசுதல் காலக் கடமையும் சாலக் கடமை யுமெனக் கருதுகிறேன். ஆகையால் இவ்வுரையை அணிந் துரை என அழைக்காமல் எனது மொழிப் பிரயோகத்தில் உரையணி என்று பெயரிட்டுப் பேசத் துணிகிறேன்.

மனிதகுலத்தின் தோற்றத்திற்குப் பின்னிருந்தே மொழி பற் றிய பிரக்ஞை நம்முள் பதிவு செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஒற்றை மனிதனின் வருகையுடன் சிந்தனையும் ஒற்றை, இரட் டையாகிப் பல்வகையானபோது சைகைகளும் சைகையொலி வடிவம் பெற்றுப் பேச்சாகி, எழுத்து மற்றும் குறியீடுகளாகிச் சொற்களாகி, வாக்கியங்களாகிப் பந்தியாகி, முதிர்ந்து மொழிகளாகி நீட்சி பெற்றிருப்பது நம் பொதுப்புத்திக்கும் உறைக்கும் விடயம்.

ஆயினும் மனிதக் கூர்ப்புச் சிறப்புக்கு முன்னமே உயிரினங் கள் தோன்றிவிட்டன. நீரிலிருந்தே முதல் உயிரினம் தோற்றம் பெற்றது என்பது துலாம்பரமான மெய். நீர் ஊற்றெடுக்கிற போது ஓர் ஓசை. அருவியாய்க் கொட்டுகிற போது ஓர் ஓசை. சலசலத்து ஓடும்போது இன்னோர் ஓசை. நதியாய், குட்டை யாய், குளமாய், ஏரியாய், வாவியாய், கேணியாய், களப்பாய் நிரப்பும் போது வெவ்வேறு ஓசைகள். கடலில் சங்கமிக்கை யில் பிறிதோர் ஓசை. ஒவ்வொரு ஓசையும் தனக்குள் ஒவ் வொரு வகைப் பிரபஞ்சத்தை உருவாக்கி, உள்ளார்ந்த தன் மையுடன் அனைத்தையும் தன்னுள் உள்வாங்கி, அலையு யர்த்தி ஆர்ப்பரித்துக் கரை தழுவும் கடலே நீரினதும் ஓசையி னதும் முழுமுதல். படைப்பினங்களின் மூலமும் பாழியும் அதுவே. நீரையுயர்த்தி முகிலைப் படைப்பதும் அதுவே. மின் னலதும் இடியினதும் மழையினதும் படைப்பாளி கடலல்லவா. மழைக்குப் பின் மீண்டும் ஊற்று. இது நீரினதும் ஓசையினதும் இடையறாத் தொடர்ச்சியும் சுழற்சியும். இது படைப்பாளிக்கும் படைப்புகளுக்கும் என்னே பொருத்தம்.

ஆக ஓசை, சைகை, குறி, பேச்சு, சொல், எழுத்து, வாக்கியம், பத்தி என்பன கோடான கோடிப் பிரபஞ்சங்களை உட்பொ தித்துப் பிரதிபலிக்கும் உள்ளார்ந்த சக்தியைக் கொண்டிருப் பது நமது சிற்றறிவுக்கும் புலப்படும் விடயமே. இதையே 'ஓம் காரமே முழுமுதல்' என சைவமும் 'சைகைகள் வெகுவாற்றலு டையவை' என சாக்தமும் 'மூச்சும் பேச்சும் முன்னமேயுள் ளவை' என வைஷ்ணமும் 'எல்லா உணர்ச்சிகளுக்கும் மொழி யில்லை' என பௌத்தமும் 'சரீரம் சுமக்கும் ஆன்மா அதிசத் தமுடையது' என சமணமும் 'ஆதியில் வார்த்தை இருந்தது' என கிறிஸ்தவமும் 'தூரிகை/எழுதுகோலே முதலில் படைக் கப்பட்டது.' என இஸ்லாமும் எடுத்தியம்புகின்றன.

பேசும் பொருட்டும் விபரிக்கும் பொருட்டும் புரிந்து கொள்ளும் பொருட்டும் படைப்புகளைப் பல்வகையாகப் பாகுபடுத்திப் பார்ப்பினும் அவை மூவகைப் பிரதான வடிவங்களுக்குள் வந் தமர்கின்றன. ஒரு விதை தன்னைப் பகுதியாகவோ, முழு மையாகவோ அழித்துக் கொண்டு மரமாகவோ, செடியா கவோ, கொடியாகவோ படைத்துக் கொள்வது அல்லது உரு வாக்குவது முதல் வகை.

ஒரு பொருள் அல்லது பருண்மை தன்னுடைய வடிவத்தை மாற்றிக்கொண்டு தானிருக்க இன்னொன்றாகத் தன்னைப் படைத்துக் கொள்வது அல்லது உருவாக்கிக் கொள்வது இரண்டாவது வகை. தங்கம் நகைகளாகுவதனை உதாரண மாகக் கொள்ளலாம்.

ஒரு ஆக்கி அல்லது ஒரு படைப்பி தன்னை அழித்துக் கொள் ளாது, தன் வடிவத்தை மாற்றிக் கொள்ளாது தான் இருந்து கொண்டே பிறிதொன்றை உருவாக்குவது அல்லது படைப் பது மூன்றாவது வகை. இதற்கு ஓர் உதாரணமாக நமது தரி சிப்புக் குள்ளான இடத்தை அல்லது காட்சியை அசைபோடு கின்றபோது அல்லது கற்பனை செய்யும் போது அது நம் மனத்திரையில் உருவாகிவிடும் அல்லது படைக்கப்பட்டுவி டும். நமக்கு நன்கு பரிச்சயப்பட்ட மட்டக்களப்பு வாவியையும் அது கடலில் கலப்பதற்காக நுழைந்து கடக்கும் கல்லடிப் பாலத்தையும் அதில் பயணம் செய்யும் வாகனங்களையும் நடமாடும் மனிதர்களையும் ஒரு அறைக்குள்ளிருந்து அல் லது அத்தரிசிப்புக்குரிய இடமல்லாத இன்னோர் இடத்திலி ருந்து கற்பனை செய்து பார்த்தால் அது நம் மனத்திரையில்

உருவாகிவிடும் அல்லது படைக்கப்பட்டுவிடும்.

இது ஒரு படைப்பாளிக்கும் அவனது படைப்புக்கும் அப்பழுக் கற்றுப் பொருந்திப் போவதைப் புலப்படுத்துகிறது அல் லவா ? இப் படைப்புருவாக்கத்தைப் புறப்புலக் காட்சி நிர்ண யிக்குமிடத்து அதை விஞ்ஞானமென்றும் அகப்புலக் காட்சி நிர்ணயிக்குமிடத்து மெஞ்ஞானம் என்றும் வகை பிரித்துக் கொள்கிறோம். தத்துவார்த்தப் பிரயோகம் கருதி அல்லது சித்தாந்தப் பிரயோகம் கருதி லௌஹீகம் மற்றும் ஆன்மீகம் என்பர். அருஞ்சொற்பதப் பயன்பாட்டிற்காக நவதத்துவவிய லாளர்கள் அகவயப் படைப்பு மற்றும் புறவயப் படைப்பு என இச்சொல்லாடல்களைக் கையாளுகின்றனர். இவ்விருமைகள்




அடிப்படைப் பண்பில் ஒத்தவை. உண்மையில் ஒன்றின்றி மற் றொன்றில்லை. இரண்டும் இரண்டறக் கலந்த ஒன்று. இதைப் பின்நவீனத்துவத்திற்குப் பின்னைய நவீனத்துவவாதிகள்-Meta Modernists- அதாவது பின்-பின்நவீனத்துவவாதிகள் - Post-Post Modernist விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் வசதி கருதல் வகையினங்களில் வேறுபட்டாலும் பரஸ்பர ஊடாட் டம் மற்றும் தங்கியிருப்பில் ஒன்றான பூரணத்துவம். இரண்டுக் கும் தனித்த இருப்பு அல்லது உள்ளமை கிடையாது என அழுத்தி உரைக்கின்றனர்.

இவ்வகைப் பின்னணிகள் ஊடாகக் கொலினின் இத் தொகுப் புக்குள் நுழையலாம். நான் அவர் கவிதைகள் பற்றிய கட்டு ரையொன்றில் ஈண்டு குறிப்பிட்டது போல கொலினின் கவி தைகள் அதிகபட்சம் எளிமையால் போஷிக்கப் பெற்றவை. இருண்மையுற்று வியாக்கியானம் வேண்டி நுகரிகள் யாரை யும் தொந்தரவு செய்யாதவை. அதிர்வை ஏற்படுத்துபவை. அதிர்ச்சியுறச் செய்யாதவை. ஒற்றை வாசிப்பில்கூடப் புரிந்து கொண்டு அனுபவிக்கத்தக்கவை. அவர் தேர்ந்து கொள்ளும் சொற்கள் எளிமையானவை. வரிகள் இயல்பானவை. அத னால் அவைகள் அழகானவை. சிணுங்கியும் முணுங்கியும் சிணுங்காமலும் முணுங்காமலும் அலுங்கியும் குலுங்கியும் அலுங்காமலும் குலுங்காமலும் எளிமையாய் இயல்பாய் அழ காய் நமக்குத் தரிசிக்கக் கிடைப்பவை. நம் கிராமியப் பெண் களைப் போல எளிமையையும் இயல்பையும் மேவி இவ்வுல கில் ஏது அழகு ?

திரு. விவிலியத்தின் அதிகாரங்களிலிருந்தோ, சங்கீதங்களி லிருந்தோ ஒரு ஒற்றைப் படிமத்தை எடுத்துக்கொண்டு அவர் கவிதையுலகத்திற்குள் ஒரு சர்யலிஸ்ட்டைப் போல நுழைந்து, மறுவாசிப்புச் செய்வதும் கேள்விகள் எழுப்புவதும் மிகு அலாதியானது. நம்மை இப்படியுமா என்று வியக்கவைப் பது. உடன்பாடுகளின் ஒளிவெள்ளத்தில் ஓரமாய் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு சிறு முரண்பாட்டையும் மறுவாசிப்புச் செய்து, கேள்வி கேட்டு, வெளிச்சம் போட்டுக் காட்டுவது அவ ரின் மிகுந்த நுட்பம். வகை மாதிரிக்கு 'தேவமைந்தன் பேசி னால்', 'சாத்தானின் வேதங்கள்', 'முத்தமிட்டோ காட்டிக் கொடுத்தாய்' போன்ற தலைப்புக்குரிய கவிதைகளை ஒன்றோ அல்லது இரண்டு மூன்று தடவைகளோ வாசித்து, அனுபவிக்கும் போது இந்நுட்பம் நமக்குப் புரியும். இப் பண்பை 'அன்பின் முத்தங்கள்' கவிதையிலும் அவதானிக்க லாம்.

கொலின் அடிப்படையில் ஒரு தூய கத்தோலிக்கர். தனது விசுவாசத்தைப் போல மற்றவர்களின் விசுவாசத்தின் மீதும் மதிப்புக் கொண்டவர். அதனால்தான் அவரால் தூய நார்த்தி கஞானி கௌதமன் மீதும் தீர்க்கதரிசி இயேசுவின் மீதும் கேள்விகள் தொடுக்க முடிகிறது.

'தேவமைந்தன் பேசினால்' என்ற கவிதையில்

***'காலா காலமாய் பசியிலும் தாகத்திலும்***
***நான் இருக்க எத்தனை காலம்தான் நீங்கள்***
***என் சதையைத் தின்றும் இரத்தத்தைப்***
***பருகிக் கொண்டும்***
***இருப்பீர்கள்***
***இன்னும் நான் தாகமாய்த்தான் இருக்கிறேன்'***

என வரும் வரிகள் இயேஷீவாவின் பேச்சாக இருப்பினும் அது கவிஞருடைய பேச்சுமாகவே இருக்கிறது. செய்தியாளர், பத்திரிகையாளர், ஊடகவியலாளர், திரைச் செயற்பாட்டாளர், கவிஞர், கதைஞர், பதிப்புநர் என எவ்வகை மகுடங்களை நாம் அவருக்கு அணிவித்தாலும் தாகத்துடன் தொடங்கியதே அவரின் பயணமும் செயற்பாடும், அவர் இன்னும் தாகமாய்த் தான் இருந்து வருகிறார்.

இங்கே நான் இயேஷீவா என்று குறிப்பிட்டது இயேசுவைத் தான். அரமேய மொழியில் இயேஷீவா என்றால் தீர்க்கதரிசி என்று பொருள். இதுவே அவர் பேசிய மொழி. எபிரேய மொழி யில் ஜோஷுவா என்றும் அராபிய மொழியில் அன்ஃபியா என்

றும் அழைக்கிறார்கள், மூன்றும் செமித்திக் மொழியின் மூத்த மொழிகள். 'முத்தமிட்டோ காட்டிக் கொடுத்தாய்' என்ற கவிதையில்

*'கால காலமாய்*
*துரோகத்தின்*
*எச்சங்களுடன்*
*முத்தங்கள்*
*தொடரத்தான் செய்கின்றன'*

என்று மொழிகையில் நமக்குள் ஓர் எச்சரிக்கையையும் அதிர்வையும் ஏற்படுத்திவிடுகிறார். சமாதானிகள் போல், அமைதி காப்போர் போல், ஆறுதல் ஆற்றுவோர் போல் பாவனை செய்தோர், செய்வோர், செய்ய இருப்போர் இவ்வரிகளை ஒன்றுக்கு ஆயிரம் தடவைகள் படித்துக் கவனத்திற் கொள்ளலாம். (அடிக்கோடு என்னுடையது,) குறித்த கவிதை தொடர்கையில்

*'முத்தங்களுக்கு*
*கெத்சமனியும்*
*ஒன்று தான்*
*முள்ளிவாய்க்காலும்*
*ஒன்றுதான்*
*இடங்களும்*
*முத்தங்களின்*
*எண்ணிக்கையும் தான்*
*வேறு வேறாய்'*

என எடுத்துரைக்கிறது. இந்த இடத்தில் கவிஞர் பல்வகைத் துரோகிகளின் முகத் திரைகளைக் கிழித்து துரோகங்களை நாசூக்காக வெளிச்சமிட்டுக் காட்டித் தன் முத்திரையைப் பதித்து விடுகிறார். இக் கவிதை, இத்தொகுப்பிலுள்ள ஒரு நட்சத்திரக் கவிதையென்று துணிந்து நான் கூறுவேன். அது ஒன்று போதாதா இவரின் கவித்துவத்திற்குச் சான்று பகர.

கொலின் தன்னிலும் தான் கொண்ட விசுவாசத்திலும் தன்னினத்திலும் பிற இனத்திலும் மொத்தத்தில் முழு மனுக்குலத்தின் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவர். அதனால்தான் 'இரத்தம் ஒரே நிறம்' என்ற கவிதையில்

*'நந்திக் கடலில்*
*கலந்த இரத்தமும் சிவப்பு*
*உக்ரேன் தேசத்தில்*
*வழியும் இரத்தமும்*
*சிவப்பு*
*காசாவில் உயிர்கருகி*
*ஒழுகும் இரத்தமும்*
*சிவப்பு'*

என்று மீயுயர் கழிவிரக்கத்துடன் இவரால் பேசமுடிகிறது, அவர் பார்வையில் எரியும் தீ எத்திசையில் எரித்தாலும் எரிக்கும் தீ ஒன்றே.

மெல்லிதயம் இன்றி ஒரு கவிஞன் இருக்கமுடியாது என்பது என் தரப்பு நியாயம். அதி முரட்டுத்தனத்திற்குள்ளும் எங்கோ ஒரு மூலையில் அன்பும் நேசமும் பாசமும் கருணையும் பற்றுதலும் அக்கறையும் எஞ்சியிருக்கும் அல்லது ஒழிந்திருக்கும். கொலின் இயல்பிலேயே இரக்கமுள்ள மனிதர். அவர் இதுவரை எழுதி என்னால் வாசிக்கப்பட்ட அனேக கவிதைகள் காதல் கவிதைகள்தான். அல்லது காதல் விரவி இழையோடுகிற கவிதைகள்தான். ஆயினும் அவை தனித்துக் காதலை மட்டும் பேசுவதில்லை. காதலில் தொடங்கி அரசியல், சமூகம், எரியும் பிரச்சினைகள், தத்துவம், அங்கதம், எள்ளல் என கவிஞர் காண்பிக்க விரும்பும் உலகங்களுக்குள் நம்மை அழைத்துச் செல்லும் பாதையாக அல்லது வாகனமாகக் காதலை அவர் தேர்ந்தெடுப்பது கவிஞரின் கவித்துவத்தின் அழகை வெளிப்படுத்துவதோடு கவிதைகளின் அழகையும் மெருகேற்றி விடுகிறது. இதற்குப் பொருத்தமான உதாரணமாக இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'நியூட்டனின் மூன்றாவது விதி' என்ற கவிதையைக் குறிப்பிடலாம். காதலில் தொடங்கும் இக் கவிதை மயக்கம், முயக்கம், கனவுவயமாதல் எனத் தொடரும். கனவில் வரும் குதிரையில் காதலி காதலனை ஏற்றிக்கொண்டு மாவலி நதியோரமாகப் பயணத்தைத் தொடங்குகிறாள். அத்துடன் கவிதையின் இடம் மாறுகிறது. கவிதையும் இடம் மாறுகிறது. பயணிக்கப் பயன்படும் குதிரை மேகநாதன் இந்திரஜித்தின் குதிரையாகிவிடுகிறது. கவிதையின் இடம் மாறிக் கவிதையும் இடம் மாறிக் கவிதையின் மாந்தர்களும் மாறிவிடுகிறார்கள். இராவணன் வருகிறான். இந்திரஜித்தின் அஸ்திரங்கள் வருகின்றன. இராவணனையும் இந்திரஜித்தையும் யாரோ இருவரின் பெயர்கள் என நினைத்து இலகுவாகக் கடந்து சென்றுவிட முடியுமா? இராமாயணம் எனும் பெரும் புதினமும் அது உட்பொதித்து வைத்திருக்கும் தொன்ம உலகமும் நம்முள் அகல விரிவது தவிர்க்கவொண்ணாததாகி விடுகிறதல்லவா? இராவணனின் நேர்மையும் சுய ஒழுக்கத்தின் பெறுமதியும் இந்திரஜித்திற்கு இழைக்கப்பட்ட துரோகமும் நம் நினைவை ஆட்கொள்கிறதல்லவா? இவற்றைத் தரிசிக்க இவ்வடர்த்திமிகு தொன்மம் நமக்கும் வசப்பட்டிருந்தால் போதுமானது. இனிக் கவிதையில் இடங்களும் காட்சிகளும் மாறுகின்றன. குதிரை தென்னவன் மரவாடி கடந்து முள்ளிவாய்க்காலை முத்தமிட்டு நந்திக் கடலைச் சந்திக்கிறது. இதனூடே கவிஞர் நில ஆக்கிரமிப்பு, எழுச்சி, போர், வீரம், மண்டியிடாமை, தற்கொடை, பெயர்வு, துயரம் என்பவற்றை நமக்குள் கிளர்த்திக் காட்சிப்படுத்துகிறார். அதை

*'நந்திக் கடல் காற்று என் மேனி தழுவியது*
*இன்னமும் மாறாத எம் மக்களின்*
*ரத்தவாசம்*
*காற்றின் மூச்செங்கும்*
*இன்னமும் மாறாத*
*மரண ஓலத்தின் வீச்சம்'*

என்ற வரிகள் ஊடு ஒருதேர்ந்த நிழற்படமாகத் தன் கவித்துவக் கமெராவில் 'கிளிக்' செய்து நம்மிடம் ஒப்படைக்கிறார். இந்நிகழ்வுகளுக்குக் காரணனான தேசத் தலைவன் நிரந்தரிக்கத் தலமொன்றின்றி ஈற்றில் அலைவதையே கவிஞர் நியூட்டனின் மூன்றாவது விதி என்கிறார். உண்மைதான். ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமும் எதிருமான மறு தாக்கம் உண்டு தானே. காதலையும் பல்வகையுலகங்களையும் பொருந்தத் தக்க விகிதத்தில் கலந்து ரஸவாதம் செய்துள்ளது கவிஞருக்கு வாய்த்த நுட்பபூர்வத்திறன்.

'புன்னகையைக் கடன் கேட்கும் கடவுள்' என்ற கவிதையில்

*‘நீ ஒரு துளி*
*நான் ஒரு துளி*
*வா நாம் இணைந்து*
*அன்பெனும் ஒரு கடல் செய்வோம்*
*காலத்துக்கும் காதல் செய்வோம்’*

என்று தன் காதலியோடு சேர்த்து நமக்கும் அழைப்பு விடுக்கிறார். அதன் பொருட்டு ‘இரவின் யுத்தத்தை முன்னிருத்தி’ என்ற கவிதையில்

*‘அன்பெனும் பெருவெளியின்*
*காதல் மலை நீ*
*உனைச் செதுக்கும்*
*நேச உளி நான்’*

என மொழிந்து காதலின்பால் நம் கவனத்தைத் திசைதிருப்பி விடுகிறார். அக்கவனம் சிதறிவிட முன்னர் நம்மை ‘அலாவுதீ-னின் அற்புத விளக்கு’ என்ற கவிதையில்

*‘காலமெல்லாம் சுமந்தலையும்*
*உன்மேலான காதலின் தீ*
*ஒரு பாவத்தைப் போல்*
*என் ஆத்மாவெங்கும்*
*வியாபித்துக் கிடக்கிறது’*

என அழுத்திக் கூறி காதலியின் பாலான ஒரு தியான நிலைக்குத் நம்மைக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறார். அதனால் தான் அவரால் ‘காதலின் கடவுச் சொல்’ என்ற கவிதையில்

*‘ஆனாலும் அன்பே*
*உன் முன்னே*
*மண்டியிட்டுக்கிடக்கத்தான்*
*தாவுகிறது மனசு*
*கடலளவு பிரியமுடன்*
*வர்ணமீன்களின் அழகுடன்’*

எனக் கூற முடிகிறது. மீன்களே கொள்ளை அழகு, வர்ண மீன்கள் எனும் படிமத்தால் அவரின் காதல் எந்தளவு மெருகேறியது என்பது புலப்படுகிறது. காதல்வயப்பாடு என்பது சூக்கும உறவிலிருந்து தூல உறவு வரை அழைத்து வருவது. ‘நியூட்டனின் மூன்றாம் விதி’ என்ற கவிதையில்

*‘எங்கள் படுக்கையறையில்*
*தொங்கிய படச் சட்டகத்தில்*
*திமிறிப் பாயும் குதிரை*
*எம் கட்டிலுக்கு அருகில் வந்து*
*கனைத்தது’*

என்ற வரிகள் இவ்விரு உறவுகளின் சிக்கலற்ற பின்னலை உணர்த்த வல்லவை. இவ்வனுபூதி வயப்பட்ட நிலை நோக்கிக் கடவுளையும் இழுத்து வருவதைக் காணலாம். ‘புன்கையைக் கடன் கேட்கும் கடவுள்’ என்ற கவிதையில்

*‘கடவுள்*
*வெட்கப்பட்டு*
*வெட்கப்பட்டு*
*என்னிடம் கேட்டார்*
*காது மடல்கள் சிலிர்க்கும்*
*கால் கொலுசுகள் கதறும்*
*நாடி நரம்புகள் அதிரும்*
*இரவின் புன்னகையையும் தருவாயா’*

என்ற கடவுளின் கோரிக்கை நமக்குச் சிரிப்புடன் சேர்த்து காதலின் சூக்கும, தூல உறவுக்கு முன்னால் கடவுளும் விதிவிலக்கில்லை என்ற உணர்வையும் தரவில்லையா? ‘தாகித்துத் தகித்தடங்காக் காதலை ‘இரவின் யுத்தத்தை முன்னிருத்தி’ என்ற கவிதையில்

*‘நாம் தவறவிட்ட மழை நாட்களின்*
*குளிர்மை இன்னமும்*
*மேகங்களுக்குள்*
*ஒளிந்து கிடக்கிறது’*

என்ற வரிகளில் அழுத்திக் கூறி காதலியிடம் மட்டுமல்ல நம்மிடமும் ஒரு ஆழ்ந்த கேள்வியையும் முன்வைக்கிறார். ‘இறகுகளின் பாடல்’ என்ற கவிதையில்

*‘ஆனால்*
*இப்போதெல்லாம்*
*நாம் தேடாமலேயே*
*கிடைத்து விடுகின்றன*
*அட்டைப் பெட்டிகள்*
*நாம் தேடினாலும்*
*காணக்கிடைக்குதில்லை*
*சிட்டுக் குருவிகள்*
*மனிதத்தைப் போல’*

என்று கூறி இருப்புக்கு இடமிருந்தும் இருக்க வேண்டியவை இல்லை என்பதை ஒன்பது வரிகளுக்குள் சிறைப்பிடித்து விடுகிறார் கவிஞர். அதாவது கூடுகள் இருந்தும் குருவிகள் இல்லை. மனிதர்கள் இருந்தும் மனிதமென்பதில்லை என்பதை நமக்குத் தொக்கி நிற்கும் ஒருவித தத்துவச்சாயலுடன் போதித்துவிடுகிறார். ‘இங்கே இதயங்கள் விற்கப்படும்’ என்ற கவிதையில்

*‘கனவு கலைந்து*
*விழித்த என்*
*இதயம் இருந்த*
*இடத்திலும்*
*ஒரு நவீன*
*கைபேசி*
*சிணுங்கிக் கொண்டிருந்தது’*

என்று இன்றைய இணைய உலகத்தைக் கிண்டல் செய்யும் கவிஞர் ‘இது கவிதை அல்ல’ எனும் கவிதையில்

*‘நாளை அவன்*
*வெளியே செல்கையில்*
*இந்தக் கல்லை*
*வீதியில் வீசி எறியலாம்*
*வரும் போது*
*புதிய கல்லொன்றை*
*காலால் தட்டி வந்து*
*வீடு சேர்க்கலாம்’*

என்று பழையனவற்றின் மறுப்பையும் புதியனவற்றின் நுழைப்பையும் 'கல்' என்ற சொல்லை வைத்து உணர்த்தி நிற்கிறார். எந்தவொரு மனிதனும் அரசியலிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. கவிஞரும் அதற்குப் புறம்பானவரல்லர்.

*'கால காலமாய்*
*கல்வாரி மலைமீது*
*ஆணிகளுடன்*
*காத்துக்கிடக்கிறது*
*சிலுவை மரம்*
*புதிய இயேசுவுக்காய்'*

என்று ஓர் இரட்சக வருகைக்காய் ஆதங்கம் கொள்ளும் அவர். 'காய்க்காத திராட்சைத் தோட்டம்' என்ற கவிதையில்

*'இன்னமும் நரிக்கதை சொல்லி*
*தம் குழந்தைகளுக்கு சோறூட்டும்*
*அப்பாவித்தாய்களாய்*
*தமிழ் மக்கள்'*

என்று வருத்தப்பட்டுச் சலித்துக் கொள்கிறார். இது நமக்குத் தலைவர்களாகத் தம்மைச் சொல்லிக் கொள்பவர்களுக்கு அச்சொட்டாகப் பொருந்திப் போவதை நீங்கள் அவதானிக்க வேண்டும். ஆயினும் கவிஞர் அதீத நம்பிக்கையுடனிருப்பதை 'ஆட்டாமா ரொட்டியும் ஆட்டிறைச்சிக் கறியும்' என்ற கவிதையில்

*'ரத்தத்தால் குளித்த எம்மண்*
*மீண்டெழும்*
*எழுந்து வருவர் எம் மறவர்*
*முறிந்தாலும்*
*வளையாது பனைகள்'*

என்ற வரிகள் மூலம் வெளிப்படுத்துகிறார். ஒரு கவிதைத் தொகுப்பில் கவிஞரால் ஒரு கவிதையில் எழுப்பப்படும் கேள்வி யொன்றுக்கு இன்னொரு கவிதையில் பதிலிருக்கும். குறுகத்தறிக்கப்பட்ட கவிதையொன்றின் நீட்சி பிறிதொரு கவிதையிலிருக்கும். ஒரு தொகுப்புக்குள் முழுமையாக நுழைந்து ஊடாடித் தேடிப் பொருத்திப் பார்ப்பது வாசகக்கடமை. ஒரு அகன்ற மலர்வனத்தில் வரிசைக் கிரமமின்றி அங்குமிங்கும் தாவித் தாவித் தேனெடுக்கும் ஒரு பட்டாம் பூச்சியின் மனோபாவமும் சோர்வற்ற படபடப்பும் தேர்ந்த வாசிப்பின் சிறப்புப் பண்பு. இப்பண்பை கொலினின் இத்தொகுப்புக்குள் பிரயோகித்துப் பார்க்க முடியும். ஈற்றில் அவர் இத்தொகுப்பில் நமக்குச் சொல்லும் செய்திகளாக

*'நல்ல கனவுகள் நாளும்*
*கண் திறக்க வேண்டும்'*

(நிஜம் எனும் கவிதையில்)

*'நேசத்தை விதைத்தால்*
*நேசம்தான் முளைக்கும்'*

(உன் கூந்தல் கரையோரம் எனும் கவிதையில்)

இவற்றைக் குறிப்பிடலாம். நாமும் நல்ல கனவுகளைக் கண்திறக்க வைப்போம். நேசத்தையே நிதமும் விதைப்போம்.

இனி கொலின் பற்றி பேசுவதற்கு நிறையவே இருந்தாலும் கொஞ்சமாவது பேசியாக வேண்டும். எண்பதுகளின் பிற்பகுதியில் அவருடைய நட்பு எனக்குக் கிடைக்கிறது. எந்தவொரு பங்கமுமின்றி இன்று வரை தொடரும் நட்பு அது. எங்கள் நட்பு துளிர் விடத் தொடங்கிய காலம் அவருடைய பாடசாலைக் காலத்தின் பிற்பகுதி, பாடசாலைக் காலத்திலேயே அவருடைய எழுத்து முயற்சிகளும் இலக்கிய ஈடுபாடும் முளைவிட்டிருந்தன. கையெழுத்துச் சஞ்சிகை, கவிதை, கட்டுரை, கதையென அவை வெளிப்பட்டன. அப்போதே அவர் 'தாகம்' சஞ்சிகையை ரோணியோ அச்சில் கொணர்ந்துவிட்டார். அது அவருடைய செயற்பாட்டின் தொடக்க வெற்றி எனலாம். பின்னாளில் அது அச்சு வாகனமேறித் தொடர்ந்து வெளியாகி அவருக்கு ஓர் அடையாளத்தைக் கொடுத்தது. 'தாகம்-மைக்கல் கொலின்' என்றே எம் போன்றவர்களால் அட்டவணைப்படுத்தப்பட்டார். பிறராலும் அறியப்பட்டார். அச்சஞ்சிகை மீண்டும் வருவது வரவேற்புக்குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். அவரைப் பற்றி அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமின்றி உலகளாவிய ரீதியில் கவிஞராகக், கதைஞராகத், திரைச் செயற்பாட்டாளராக, இதழாளராக, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பதிப்புநராக இன்று பரிணமித்து நிற்கிறார். அவர் ஒரே காலத்தில் திருமலை மண்ணினதும் மட்டு நிலத்தினதும் இலக்கியச் செயற்பாட்டின் குறியீடாக நமக்குக் காட்சி தருகிறார். தான் வரித்துக்கொண்ட கொள்கையுடனும் எந்தவொரு 'இஸங்களுக்குள்ளும்' சிக்குண்டு போகாத தன்மையுடனும் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகிறார். தன் பாதையில் நடக்கையில் நூறு நாய்கள் குரைக்கத்தான் செய்யும். நாம் திரும்பிப் பார்த்தாலோ, தாமதித்தாலோ, கற்களைத் தேடினாலோதான் கலவரம். நம் பாட்டில் நாம் நடப்போம் என்பதே அவரது தளராத பயணம். ஒரு சிறு கோரிக்கையோடு கொலினின் தனித்துவமான பயணிப்பு நீட்சிபெற ஆத்மார்த்தமாக ஆசிப்போம்.

### கோரிக்கை:

இது வரையில் எழுதப்பட்ட கவிதைகள் அனைத்தையும் அல்லது இதுவரை வெளிவந்த தொகுப்புகள் அனைத்திலும் உள்ள கவிதைகளை ஒருசேரத் தொகுத்து ஒற்றைக் கவிதை நூலாகக் கொலின் நமக்குத் தரவேண்டும். அவருடைய கவிதையுலகை முழுமையாக நாம் தரிசிக்க அது உதவும்.

முடிவாக - வழக்கமான பரிச்சயப்பட்ட உலகங்களை விட்டு விலகி நானறிந்த உலகங்களில் ஓர் உலகத்தின் நுழைவாயில் வரை சுருக்க வழிகள் ஊடாக முடிந்தவரை மிக வேகமாக அழைத்து வந்திருக்கிறேன். நுழைந்து எதிர்ப்படுகின்ற திரைகளை விலக்கி விலக்கிப் பயணிப்பது உங்கள் விருப்புக்குரியது, மற்றும் என்னால் இயன்றவரை கொலின் பற்றியும் அவரது கவிதைகள் பற்றியும் அவரது படைப்புலகம் பற்றியும் ஒரு படம் வரைந்து ஒப்புவித்துள்ளேன். அதற்கு சட்டகமொன்றை இட்டுக் கொள்ள மரத்தையா அல்லது வெள்ளி, பித்தளை, பொன் போன்ற உலோகத்தையா தேர்ந்தெடுப்பது என்பதை வாசகர்களாகிய, சக படைப்பாளர்களாகிய, ஆய்வாளர்களாகிய உங்களிடமே விட்டுவிடுகின்றேன்.



jaffar@thaiveedu.com



# யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாரம்பரியம்:

## 118-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை

## ஆய்வுக் கட்டுரை - அறிமுகம்

அருண்மொழிவர்மன்

பல்வேறு துறைகளில் ஆழங்காற்பட்ட ஆளுமைகொண்டவராகக் குறமகள் விளங்கியிருந்தாலும்கூட அவரது மிக முக்கியமான பணி 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கல்வி - ஓர் ஆய்வு' என்கிற அவரது ஆய்வுநூலே. தனது டிப்ளோமா படிப்பிற்காக எழுதிய 'பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையிற் பெண்கல்வி' என்கிற கட்டுரை பெற்ற வரவேற்பும் மதிப்பீடும், பெண்ணியம் தொடர்பாக அவருக்கு இயல்பாக இருந்த அக்கறையுடன் இணைந்து இந்த நூலை எழுதுவதற்கான முதலாவது விதையாக அமைந்தது என்று குறமகள் தனது முன்னுரையில் பதிவுசெய்கின்றார்.

இந்த நூலானது...

- யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப்பாரம்பரியம்: 18-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை
- சைவமும் தமிழும் வளர்த்த செல்வி பார்வதியம்மையார்
- காந்திய வழி சமூக சேவையாளர் 'தமிழ் மகள்' மாசிலா-மணி மங்களம்மாள்

என்கிற மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றது. இதன் முதலாவது பகுதி ஐரோப்பியர் வருகையின் பின்னர் அவர்களால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட கல்விமுறை பற்றியும், பெண்களுக்கான கல்வி என்பது எத்தகைய விடாமுயற்சிகளூடாகச் சாத்தியமானது என்றும் ஆராய்கின்றது. இந்தக் கட்டுரை 'யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப்பாரம்பரியம்: 18-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை' என்கிற அந்த முதலாவது பகுதியைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துக்கூறி அந்தக் கட்டுரையையும், நூலையும் வாசிப்பதையும் அது குறித்து உரையாடுவதையும் ஊக்குவிக்கும் நோக்குடன் எழுதப்படுகின்றது.

போர்த்துக்கேயர் காலத்தில் பெண்கல்வி என்பது மிகச் சிறிய அளவிலேயே நடைபெற்றது என்ற போதிலும் இக்காலத்தில் மதமாற்றத்துக்காகத் தருவிக்கப்பட்டிருந்த கத்தோலிக்கத் திருச்சபையினருக்குப் போர்த்துக்கேய அரசு ஆதரவு அளித்தமையும், அதன் பலத்தால் இந்தத் திருச்சபையினர் நடைமுறைப்படுத்திய கட்டாய மதமாற்றமும், திருச்சபை நிகழ்வுகளில் பெண்களும் கலந்துகொள்ளவேண்டும் என்பது போன்ற வற்புறுத்தல்களும் சமூக ஒழுங்கில் ஒரு திறப்பை உருவாக்கின என்று குறமகள் குறிப்பிடுகின்றார். அவர் சொல்கின்ற முக்கியமான சில மாற்றங்களை இங்கே பட்டியலிடுகின்றேன்:

- பிரசங்கங்கங்களின் பின்னர் ஊர்வலமொன்று அமைக்கப்பட்டு முக்கிய வீதிகளில் உலாப்போகும்போது ஆண்கள் முன்னே வரிசையாக நடக்கப் பெண்கள் பின்னே வரிசையாகச் செல்வார்கள்.
- சிறுமிகளுக்குப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கப்பட்டது.
- எட்டு வயதின்மேல் பெண்களைப் பாடசாலைக்கு அனுப்பப் பெற்றோர் தயங்கியமையால் இரண்டாம் நிலைக்கல்வி நடை பெறவில்லை.
- காலையின் ஆண்களுக்கும் மாலையில் பெண்களுக்கும் தேவாலயங்களில் சமய வகுப்புகள் நடைபெற்றன.
- பெண்களுக்கென தனிப்பாடசாலைகள் நடைபெறவில்லை.

இன்று சமூகநீதி பற்றிய உரையாடல்களின்போது ஈழத்தவர்கள் பலரும், ஈழத்தில் இருந்த பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள், சாதியப் பாகுபாடுகள் பற்றிய உரையாடல்கள் வரும்போதெல்லாம், அதனைப் பூசி மறைத்து உரையாட முற்படுவதே வழக்கமாக இருக்கின்றது. ஆனால் அன்றை சமூகநிலை பற்றி, தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்ற மத குருவான போல்டியஸ் சுவாமிகள் (Baldeus) எழுதிய இலங்கை வர்ணனை (Description of Ceylon) என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதை குறமகள் மேற்கோள் காட்டியிருப்பது முக்கியமானது.

'மேல் சாதியினர் கீழ் சாதியினரை வெகு மேட்டிமையோடு நடத்தி வருகின்றார்கள். இப்படியே ஆண்களெல்லாம் பெண்களை மிகத் தாழ்வாக மதித்து நடத்துகிறார்கள். பெண்கள் ஆண்களோடு இருந்து உண்பதற்குக்கூட அனுமதிக்கப்படார். வீட்டின் பின்புறத்தேதான் அவர்கள் வதிவார்கள். தாம் உண்ட எச்சிற் கலத்திலேயோ இலையிலோதான் தனியேயிருந்து உணவருந்த விடப்படுவார்கள்'. அதுமட்டுமல்லாமல் ஒல்லாந்தர் கட்டாயக் கல்வி முறையை புகுத்தியிருந்தபோ

தும் சமுதாயம் பெண் கல்விக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வில்லை. சமூகத் தலைமைகளாக இருந்த ஆண்கள்கூட பெண்கல்விக்கு ஒத்துழைக்காமல் இருந்ததோடு, தமது வீட்டுப்பெண்கள் கல்வி கற்பதையும் தடுத்தே வந்துள்ளனர். குறமகள் தனது ஆய்வில் 1757-ம் ஆண்டுக்குரிய யாழ்ப்பாணப் பாடசாலை அறிக்கையில் வண. ஜோன்ஸ் பாதிரியார் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்'.

'தலைமைப் பதவிகளை வகிக்கின்ற பெயர்பெற்று விளங்குகின்ற சுதேசிகளது பெண்பிள்ளைகள் பாடசாலைகளுக்கோ, பரீட்சைகளுக்கோ சமூகமளிப்பது கிடையாது. அது மாத்திரமல்ல, தேவாலயங்களில் நடைபெறுகின்ற ஞானஸ்தானம், திருமணம் போன்றவற்றிற்கும்கூட சமூகமளிப்பதில்லை. பதிலாக அவர்களது அடிமைச்சிறுமிகள் அவர்களது பெயரில் அனுப்பிவைக்கப்பட்டு பங்குகொள்ளச் செய்யப்படுவார்கள்' (ஆதிக்கசாதியினருக்கு குடிமைகளாக இருந்தவர்களையே ஒல்லாந்தர்கள் அடிமைகள் என்று குறிப்பிடுகின்றனர்) போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் போலவே ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பெண்கல்வி தொடர்பாக முன்னேற்றமோ, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயங்களோ இடம்பெறவில்லையென்றாலும் மதமாற்றத்தாலும், அதன் நடைமுறை விளைவுகளாலும் சமூக இறுக்கத்தில் சிறிதளவிலான சில திறப்புகள் ஏற்பட்டே இருக்கின்றன.

அதேநேரம் 1734, 1739 ஆகிய இரண்டாண்டுகளில் பெற்றுக் கொண்ட தரவுகளின் படி அன்று இயங்கிய தனியார் பாடசாலைகளிலும் அனாதைப் பாடசாலைகளிலும் இருந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் குறமகள் இந்தக் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அந்தத் தரவுகளின் படி குறித்த இரண்டு வகைப் பாடசாலைகளிலும் கல்விகற்று வந்த ஆண்களும் பெண்களும் கிட்டத்தட்ட ஒரே எண்ணிக்கையானவர்கள் என்பதை அறிய முடிகின்றது.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய 34 கோவில் பற்றுப் பாடசாலைகளில் 20,000 மாணவர்கள் கல்விகற்றார்கள் என்கிற விபரம் கிடைக்கின்றது என்றாலும் அதில் ஆண்கள் எத்தனைபேர், பெண்கள் எத்தனைபேர் என்கிற விபரம் கிடைக்கவில்லை என்கிறார் குறமகள். இந்த எண்ணிக்கைகளை வைத்துப் பார்க்கின்றபோது ஒல்லாந்தர் காலத்தில் இந்தக் கட்டுரையில் குறமகள் குறிப்பிடுகின்ற 'ஒல்லாந்தர் பெண்கல்விக்கெனச் சிறப்பாக எதையும் செய்யாதுவிடினும் மதமாற்றம் மூலமும் வீட்டிலடைந்து கிடந்த பெண்ணை வெளியே கொண்டுவந்து சமூகப் பழக்கங்களூட்டி முன்னேற்றமடையச் செய்தனர். கிறித்தவப் பெண்களுள் நடுத்தர வகுப்பினர் கணிசமான நியமக்கல்வியைப் பெற்றிருக்கவேண்டும். பிற்காலத்தில் வந்த பாதிரிமார் இதனை மறுத்தாலும் ஆரம்பக் கல்வியைச் சிறிதளவாயினும் பெற்றிருக்க முடியுமென்பது ஒல்லாந்தக் குருமாரின் அறிக்கைகளிலிருந்து பெறக்கூடியதாக இருக்கின்றது'.

என்பது நுட்பமான ஓர் அவதானமாக அமைகின்றது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் அவர்கள் அறிமுகப்படுத்திய மகிழ்ச்சி வரி (Joy Tax)யின் தாக்கத்தினாலும், அப்போதைய தேசாதிபதி பிரடெரிக் நோத் பொருளாதார லாபத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தாரேயன்றி பெண் கல்வி குறித்து அக்கறைப்படவில்லை என்பதாலும், பெண் கல்வியில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. நோத்தைத் தொடர்ந்து தேசாதிபதியான தோமசு மெயிற்லண்ட் (Thomas Maitland) பெண்கள் கல்வி தொடர்பில் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களுக்குப் பாரபட்சம் காட்டி சிங்களப் பகுதிகளுக்கு சலுகைகளையும் புதிய வசதிகளையும் உருவாக்கிக் கொடுத்தார். 1806-ல் அவர் மகிழ்ச்சி வரியை வடக்கு மாகாணத்துக்கு மாத்திரமே வசூலித்துக்கொண்டு சிங்களவர் அதிகம் வாழ்ந்த மேற்கு மாகாணங்களுக்கு நீக்கிவிடுகின்றார். இதற்குக் காரணம் மேற்குப் பகுதியில் இருந்த பெண்களின் கல்வி ஆர்வமே என்று சிங்கள கல்வியாளர் ஒருவர் வியாக்கியாசனம் செய்தபோதும், அதனை மறுத்துரைத்து 1800-1805 வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் 10,000 ரிக்ஸ் டொலர் (Rixdollar) மகிழ்ச்சி வரியாக வசூலிக்கப்பட்டது. இது இதர மாகாணங்கள் அனைத்தையும் சேர்த்து அறவிடப்பட்ட மகிழ்ச்சி வரியைவிட அதிகமானதென்பதைச் சுட்டிக் காட்டி அந்த வருவாயை இழக்க விரும்பாததாலேயே வடக்கு மாகாணத்தில் மகிழ்ச்சி வரி நீக்கப்படவில்லை என்ற வாதத்தை குறமகள் முன்வைத்துள்ளார்.

1808-ம் ஆண்டிலேயே பெரும்பாலான பிரதேசங்களில் இந்த மகிழ்ச்சி வரி நீக்கப்பட்டபோதும் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, வன்னி ஆகிய இடங்களில் 1865 நவம்பர் 24 இலேயே இந்த வரி நீக்கப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். ஒப்பீட்டளவில் வடக்கு மாகாணத்தவரிடம் பணப்புழக்கம் அதிகமாக இருந்திருப்பதை மகிழ்ச்சி வரி குறித்த இந்தத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன, அதேநேரம் வடக்கு மாகாணத்தவரின் பணவருவாய் மூலங்கள், உள்நாட்டு உற்பத்திகள் எவை என்பன போன்ற கேள்விகளையும் இது எழுப்புகின்றது. வடக்கு மாகாணத்தவர்கள், குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அரச பதவிகளைப் பெற்றதன் மூலமே பணவசதியைப் பெருக்கிக்கொண்டார்கள் என்கிற ஒரு கருத்து புலமை வட்டத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுவருகின்றது. ஆனால் பிரித்தானியர் வந்திறங்கியபோதே வடக்கு மாகாணத்திலிருந்து வசூலிக்கப்பட்ட வரியானது ஏனைய பிற மாகாணங்களிலிருந்தும் வசூலிக்கப்பட்ட மொத்த வரியைவிட அதிகமாக இருந்தது என்பது புதிய ஆய்வுகளுக்கான வெளிகளைத் திறந்துவைக்கின்றது.

1812 முதல் 1820 வரை தேசாதிபதியாக இருந்த ரொபர்ட் பிரவுன்ரிக் (Robert Brownrigg) காலத்தில் காலி, மொறட்டுவ போன்ற பிரதேசங்களில் பெண் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் வடக்குக்குப் பாராமுகம் காட்டப்பட்டதாகக் குறிப்பிடும் குறமகள், ஆயினும் ரொபர்ட் பிரவுன்ரிக் தெரிந்தோ தெரியாமலோ யாழ்ப்பாணத்துக்குச் செய்த பெரும் சேவையாக, பிரபலமான பிற சமயக் குழுக்களோடு அமெரிக்க சமயக்குழுவையும் (அமெரிக்க மிஷனரி) யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியமையைக் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சியிலும் நவீனமயகாக்கத்திலும் மிகப்பெரும் செல்வாக்கைச் செலுத்திய அமெரிக்கன் மிஷனின் யாழ்ப்பாண வருகை திட்டமிடாமல் அமைந்ததோர் நற்பேறென்றே சொல்லவேண்டும்.

அமெரிக்கன் மிஷனரியினர் 6 மாதகாலமாகப் பயணம் செய்து இந்தியாவை அடைந்தபோதும், அவர்களுக்கு



அங்கே தரை யிறங்க அனுமதி மறுக்கப்பட்டது (அவர்கள் சென்றடைந்த பிரதேசத்தில் அப்போது கிழக்கிந்தியக் கம்பனியுடன் இணைந்த பிரித்தானியரின் கூட்டாட்சியே நடைபெற்றுக்கொண்டிருந்தது). இதனால் இலங்கையில் தரையிறங்க அமெரிக்கன் மிஷனரியினர் கேட்ட அனுமதியை பிரவுன்ரிக் 2 நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்கின்றார்.

- அமெரிக்கன் மிஷனரியினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமே சேவைசெய்யலாம்,
- யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அவர்கள் புதிய நிலையம் ஒன்றையும் அமைக்காமல் ஏற்கனவே ஒல்லாந்தக் குருமார்களால் அமைக்கப்பட்ட தேவாலயங்களில் மட்டுமே குடியேறலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நுழைந்த அமெரிக்கன் மிஷன் பெண்கள் கல்விக்குச் செய்த காத்திரமான பணிகள் குறித்து இந்தக் கட்டுரையில் குறமகள் விபரமாகவும் செறிவாகவும் கூறியுள்ளார். (அமெரிக்கன் மிஷன் இலங்கையில் செய்த கல்விப்பணிகள் குறித்து அறியப் படிக்கவேண்டிய முக்கியமான நூல் கலாநிதி எஸ். ஜெபநேசன் எழுதிய 'இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்கன் மிஷன்'. இந்நூல் குமரன் பதிப்பக வெளியீடாகும்.)

இந்த நூலில் குறமகள் மேற்கோள் காட்டியுள்ள அமெரிக்க மிஷனரியின் பாதிரியார் வண. மெயிக் யாழ்ப்பாணத்தில் அன்று (1816) நிலவிய பெண்களின் கல்விநிலை பற்றிய பின்வரும் கூற்று நாம் ஆழ்ந்த கவனிக்கவேண்டியதொன்று. கோவில்களில் பாட்டுக்கள் பாடி நாட்டியம் ஆடுகின்ற நாட்டியப் பெண்களைத் தவிர மற்றையோரில் தமிழை எழுத வாசிக்கத் தெரிந்த இரு பெண்களை மாத்திரம் யாழ்ப்பாணத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. இதில் வண. மெயிக் 'கோவில்களில் பாட்டுக்கள் பாடி நாட்டியம் ஆடுகின்ற நாட்டியப் பெண்களைத் தவிர' என்பதை அழுத்தமாகக் குறிப்பிட்டிருப்பதால் குறித்த சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கல்வியறிவு அதிகமானவர்களாகவும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகவும் இருந்துள்ளனர் என்பது புலனாகின்றது. ஈழத்துத் தேவதாசிகளில் ஒரு பிரிவினரான உருத்திர கணிகையர் பற்றி க. அஞ்சுகம் எழுதிய 'உருத்திரகணிகையர்' நூலிலும் தேவதாசிகளின் கல்வியறிவு பற்றிய விபரங்கள் பெரிதும் உள்ளடக்கப்படவில்லை. இது குறித்த மேலதிக ஆய்வுகளும் புலமை மட்டத்திலான உரையாடல்களும் அவசியம்.

பெண்களுக்குக் கல்வி தேவையில்லை என்றும், பெண்கள் கல்விகற்றால் அவர்களுக்கு திருமணம் செய்துவைப்பது கடின மாகிவிடும் என்றும் பழமைவாத எண்ணங்கள் குடிகொண்டிருந்த அன்றைய சூழலில் பெண்கல்விக்காக மிஷனரிமார் எடுத்த பெருமுயற்சிகளையும் எதிர்கொண்ட தடைகளையும் பற்றிய பல்வேறு செய்திகளை இந்நூலில் குறமகள் தொகுத்துள்ளார். ஆசியாவின் பெண்களுக்கு மாத்திரமான முதலாவது விடுதிப்பாடசாலையான 'Missionary Seminary

and Female Central School' இனை (தற்போதையை பெயரான உடுவில் மகளிர் கல்லூரி என்ற பெயரிலேயே இக்கட்டுரையில் தொடர்ந்து பிரயோகிக்கப்படுகின்றது) நிறுவிய ஹரியற் வின்சிலோ அம்மையாருடன் தொடர்புடைய சம்பவமொன்று பெண்கள் கல்விக்கு அன்றிருந்த தடைகளை எடுத்துக்காட்டுகின்றது. ஹரியற் வின்சிலோ அம்மையார் தங்கியிருந்த இடத்தினை வந்து எட்டிப்பார்ப்பது, விளையாடித் திரிவதுமாக இருந்த மல்லாகத்தைச் சேர்ந்த வைரவி வள்ளியம்மை, வைரவி சின்னாச்சி என்கிற இரண்டு சிறுமிகளின் தந்தையிடம், அச்சிறுமிகள் தனக்கு உதவியாக இருந்தால், தான் அவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பேன் என்கிறார். அதற்கு என்ன வேதனம் கொடுப்பீர்கள் என்று தந்தை கேட்க, உடுப்பும் படிப்பும் கொடுத்து தையல் பின்னலும் பழக்கி உணவுங்கொடுப்பேனென ஹரியற் வின்ஸ்லோ கூறுகிறார். அதற்குத் தந்தை 'அவர்கள் உங்களோடு உண்ண மாட்டார்கள். பசித்தால் பழங்கள் ஏதாவது கொடுங்கள், ஆனால் மாலையில் வீட்டுக்கு அனுப்பவேண்டும்' என்கிறார். (அவர்கள் உங்களோடு உண்ண மாட்டார்கள் என்பதற்குப் பின்னால் இருக்கின்ற சாதிய, பாலபாடத்தில் கற்பிக்கப்பட்ட சனாதன உணர்வே இருந்திருக்கின்றது)

ஆயினும் ஒருநாள் இடிமின்னல், பெருங்காற்றுடன் அடைமழை பெய்கின்றது. இதனால் இச்சிறுமிகள் இருவரும் வீடு செல்ல முடியாமல் ஹரியற் வின்சிலோவுடனேயே தங்கி மறுநாள் வீடுசெல்கின்றனர். இதற்காக அவர்களைக் கிராமமே சாதிப் பிரஷ்டம் செய்துவிட, ஜூன் 29, 1822 முதல் இந்தச் சிறுமிகள் இருவரும் ஹரியற் வின்சிலோவுடனேயே தங்கி வாழவேண்டிய நிலை உருவாகின்றது. 1824-ல் உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே நிகழ்ந்த இந்தச் சம்பவம் உடுவில் மகளிர் கல்லூரி ஒரு விடுதிப்பாடசாலையாக ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். தனது கட்டுரையில் குறமகள் சுட்டிக்காட்டுகின்ற இன்னொருவிடயம் சுவாரசியமானது. மிஷனரியில் சேர்ந்து கல்வி கற்ற முதலாவது பெண்ணாகிய மிராண்டா செல்லாத்தை ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவராக இருந்தபோதும், அவர் கல்விகற்று முடிந்த பின்னர் அவரது கல்வியையும் குணநலனையும் கருத்திற்கொண்டு ஆதிக்கசாதியைச் சேர்ந்த, கல்வி கற்ற ஒரு ஆணுடன் திருமணம் நடக்கின்றது. இது கல்வியால் விவாகம் தடைப்பட்டுவிடும் என்று ஐயுற்று வந்த மக்களுக்குத் தெளிவைத்தந்து பெண்கல்வியை ஊக்குவிக்கும் காரணிகளில் ஒன்றாக அமைந்தது என்கிறார் குறமகள். அதுமட்டுமல்லாமல் பெண்கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு 1825- ம் ஆண்டு முதல் உணவு, உடை, கல்வி ஆகியவற்றை இலவசமாக வழங்கியதுடன் அவர்கள் திருமணஞ் செய்யும் போது 75 ரூபாய் (4 பவுண்ட் 10 ஷில்லிங்) பெறுமதியான பணத்தை அல்லது அதற்கு நிகரான பொருட்களை சீதனமாகவும் வழங்கியது.

அமெரிக்க மிஷனரியின் நிர்வாகத்தினர் வெவ்வேறு காலப்பகுதிகளில் பாடசாலைகள் மதமாற்றத்தில் எவ்வளவு வெற்றிகரமாக இயங்கியுள்ளன என்பதை ஆராய்ந்து பாடசாலைகளின் வேலைத்திட்டத்தில் குறுக்கீடுகளைச் செய்தபோதும் அர்ப்பணிப்பும் சமூகநோக்கும் கொண்ட அதிபர்களும் ஆசிரியர்களும் வாய்க்கப்பெற்றதால் அவர்களால் சமூகமாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது. தொடக்ககாலங்களில் மொழி, மதக்கல்வி ஆகியவற்றுடன் மனையியலே (Home Science) கற்பிக்கப்பட்டாலும் 1846-ல் எலிசா அக்நியூ (Eliza Agnew) அதிபராக வந்த பின்னர் உடுவில் மகளிர் கல்லூரியிலும் வானசாஸ்திரம், பூமி சாஸ்திரம், சரித்திரம், சுகாதாரம், உடற்கூற்றியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் மிஷனரியினர் கூட உள்ளூர் மக்களின் அழுத்தத்துக்கும் அவர்களிடம் இருந்த சாதிய மனப்பான்மைக்கும் பல விடங்களிலும் அடிபணிந்துபோகவேண்டிய நிலையே நிலவியிருக்கின்றது. குறிப்பாக உடுவில் மகளிர் கல்லூரியின் தொடக்க காலத்தில் 'சொத்துடமையோடு கூடிய நல்ல குடும்பத்துப் பெண்கள்' தான் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக வேளாள சமூகம், கோவிய சமூகம், கரையார சமூகம் ஆகிய சமூங்களைச் சார்ந்த பெண்கள் மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்பட்டதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. 1897-ல் நளவ சமூகத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் பிரவேசப் பரீட்சை எழுதி வெற்றிபெற்று, நுழைவுக் கட்டணத்தையும் கட்டிவிடுகின்றார். மிஷனரியினரும் அவரை அனுமதிப்பதில் பரிபூரணமாக உடன்படுகின்றபோதும் இது பிற மாணவர்களின் பெற்றோரிடமும், மாணவர்களிடமும் அங்கு பணிபுரிந்த பிறரிடமும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. தாம் உண்ணும் உணவை அந்தப் பெண்ணும் உண்



பதா ? தமது புழங்குவெளிகளில் அந்தப் பெண்ணும் புழங்குவதா என்று அவர்கள் ஆத்திரம் அடைகின்றனர். பலர் பிள்ளைகளை வீட்டிலேயே மறித்துவிடுகின்றனர், சிலர் தமது பிள்ளைகளை வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்றிவிடுகின்றனர். அந்தப் பெண் அங்கு படிப்பதால் அங்கே படிக்கின்ற பிற பெண்களது உடைகளைச் சலவை செய்தாலும் கூட மக்கள் அவர்களது உடைகளைச் சலவை செய்வதற்குத் தம்மிடம் தரமாட்டார்கள் என்று 6,7 சலவைத்தொழிலாளர்களும் விலகிச் சென்றுவிடுகின்றனர். பாடசாலை வேலி கொழுத்தப்படுகின்றது. ஆயினும் மிஷனரியினர் அந்தப் பெண்ணுக்கு ஆதரவாக இருக்கின்றனர், அதனால் ஆசிரியர்களின் ஆதரவும் அந்தப் பெண்ணுக்குக் கிடைக்கின்றது. கிட்டத்தட்ட மூன்றாண்டுகளின் பின்னர் 1900 முதல் சகல சமூகங்களைச் சேர்ந்த பெண்களையும் உடுவில் மகளிர் கல்லூரி ஏற்றுக் கொள்ளத் தொடங்குகின்றது.

ஐரோப்பியர் இலங்கையில் அறிமுகப்படுத்திய கல்விமுறை

முதல், அவர்கள் ஆரம்பித்த பாடசாலைகள் உட்பட அனைத்தும் மதம் பரப்புதலை மூலநோக்காகக் கொண்ட வையாகவும், தமது நிர்வாகத்தை இலங்கையில் உறுதியாக நிலைநிறுத்த அந்தக் கட்டமைப்பின் கீழ் பணியாற்றவுமான வர்களை உருவாக்குவதை நோக்கிய கல்வி அது என்பதை யும் ஏற்றுக்கொள்கின்ற குறமகள், அதே நேரம் நாவலர் முன் னெடுத்த தேசியகல்வி முயற்சிகள் பெண்கள் பற்றிய எந்தக் கரிசனமும் இல்லாதவையாகவும், அதற்கு எதிரானவையாக வும் இருந்தன என்பதையும் எடுத்துரைக்கின்றார். கல்விகற்ற கிறித்தவ ஆண்கள் சைவப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளுகின்றபோது அந்தக் குடும்பங்கள் பின்னர் சைவக் குடும்பங்களாகவே தொழிற் படுவது வழமையாக இருந்த தால் ஒல்லாந்தர் காலத்தில் சைவப் பெண்களைத் திருமணம் செய்கின்ற கிறித்தவ ஆண்களுக்கு மரண தண்டனை வழங் கும் வழக்கம் இருந்தது. ஆயினும் கூட ஒல்லாந்தர்களால் நினைத்த அளவு கிறித்தவக் குடும்பங்களை உருவாக்கமுடி யவில்லை. இதனை ஒரு படிப்பினையாக எடுத்து பெண்க ளும் மதமாற்றம் செய்யப்பட்டு, கிறித்தவ பண்பாடு தெரிந் தும் இருந்தாலே கிறித்தவ குடும்பங்கள் உருவாகும் என்கிற திட்டமிடலே பெண்கள் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு மிஷனரியினருக்கு உந்துதலாக அமைந்தது. ஆனால் ஆறு முகநாவலர் போன்ற சுதேச சைவத்தலைவர்கள் தமிழ்ப் பெண்கள் மீது இன்னும் கடுமையான அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதன் மூலமே மதமாற்றத்தை எதிர்கொள்ளத் தொடங்கினர். பெண்கள் மீதான கடுமையான கட்டுப்பாடு களை ஒழுக்க விதிகளாக எழுதிய நாவலர் அவற்றைப் பரவ லாக்க பிரசாரம் செய்தார். அதன் பொருட்டு அதுவரை இலங் கையில் இல்லாமல் இருந்து இந்தியாவில் வழக்கத்தில் பிரா மணப் பெண்கள் மத்தியில் இருந்த அடக்குமுறைகளையும், அடிமைத்தனத்தையும் இலங்கைக்கு இறக்குமதி செய்தார். இந்தத் தரவுகளைத் தர்க்கபூர்வமாக முன்வைத்து விமர்சனப் பார்வையுடன் காத்திரமான தனது வாதத்தை குறமகள் முன் வைத்துள்ளார்.

அமெரிக்க மிஷனரியின் 1846-ம் ஆண்டு அறிக்கையில் ‘அது வரை உடுவில் பெண் பாடசாலையில் படித்து வெளியேறிய பெண்களுள் 70 பேர், 70 கிறிஸ்தவர்களை மணம் செய்து 70 கிறிஸ்தவக் குடும்பங்களை அமைத்துக்கொடுத்து கிறிஸ்து வுக்கு மகிமைகொடுக்கும் 70 தலைமுறைகளாக விளங்கின ரெனவும், ஒரு சிலரே தமது வீட்டுச் சூழலுக்குப் போனதும் அவ்விட நிர்ப்பந்தத்தை எதிர்க்கும் சக்தியின்றி விசுவா சத்தை விட்டு விட்டனரெனவும்’ குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் குறமகள் கட்டுரையின் பிறிதொரு இடத்தில் ‘ஆறு ஆண்களை மதம் மாற்றுவதிலும் பார்க்க ஒரு பெண்ணை மதம் மாற்றுவது தான் மிக முக்கியமானதும் பிர யோசமானதுமாகும் என 1820-களில் மிஷனரிமாருக்குத் தெரிந்த உண்மை சைவசமயப் புத்திஜீவிகளுக்கு ஏன் தெரி யாமல் போயிற்று’ என்றும், தமிழையும் சைவத்தையும் வளர்க் கவும் காக்கவும் என்று மிஷனரிமார்களிடமிருந்து புதிது புதி தாக நுணுக்கங்களை உள்வாங்கிக்கொண்டு செயற்பட்ட ஆறுமுகநாவலர், அந்த நோக்கத்துக்காகத் தன்னும் பெண் கள் கல்வியைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்தது ஏன் என்கிற பொருத்தமான கேள்வியையும் எழுப்புகின்றார். மிஷனரிமார் பெண்கள் கல்விவளர்ச்சிக்கு இத்தனை விடயங்களைச் செய்து, அதனூடாகக் கல்வி கற்ற முதற் தலைமுறைப் பெண்கள் ஆசிரியர்களாகவும், பாடசாலை நிர்வாகிகளாக வும், பாடசாலை விடுதி மேற்பார்வையாளார்களாகவும் கட மையாற்றத் தொடங்கிவிட்ட காலப்பகுதியில் கூட ஆறுமுக நாவலர் பெண்கள் கல்விகுறித்தும் எந்த அக்கறையும் எடுக் காமல் இருந்ததுடன் பெண்கள் மீது ஒடுக்குமுறைகளைப் பிர யோகிக்கும் விதமான சனாதனக் கருத்துகளைத் தனது பால பாடம் நூலிலும் வெளிப்படுத்திவந்துள்ளார். ஆறுமுகநாவலர் 1848-ம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடக்குகின்றார். அவரது கொள்கைகளை வரித்துக் கொண்ட அவரது மாணவர்கள் சில பாடசாலைகளைத் தொடங்குகின்றார்கள். 1885-ல் இவ்வாறு தொடங்கப்பட்ட 4 பாடசாலைகளில் 5000 மாணவர்கள் கற்றபோதும் அவற்றில் எந்த ஒரு பாடசாலையிலும் பெண்கள் கற்றதற்கான சான்று கள் ஏதுமில்லை என்று குறமகள் குறிப்பிடுவதையும் இதே கட்டுரையின் இன்னொரு இடத்தில் 1850-இல் அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளில் கல்விகற்ற 4000 மாணவர்களில் 1000 பேர் பெண்கள் என்று குறிப்பிடுவதையும் ஒப்புநோக்க வேண்டும். 1879-ல் ஆறுமுகநாவலர் இறக்கும் வரை யாழ்ப்பா ணத்தில் சைவப் பெண் பாடசாலைகள் எதுவுமே ஆரம்பிக் கப்படவில்லை என்பதையும் அவர் இறந்த அடுத்த ஆண்டே (1880)-ல் சைவப்பெண்பாடசாலை ஒன்றை உருவாக்க வேண் டும் என்று ஆலோசனைகளைத் தொடங்கி அப்போதைய சட் டமன்ற உறுப்பினராக இருந்த சேர்.பொன். இராமநாதனிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கின்றனர். இவை இரண்டு சுயாதீன மான நிகழ்வுகள் என்று பார்க்கமுடியாது என்றே நான் கருது கின்றேன். ‘யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப்பாரம்பரியம்: 18-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை’ என்கிற இந் தக் கட்டுரை

- 19-ம் நூற்றாண்டுவரை ஓர் ஆய்வு (1800-1900)
- பிரித்தானியர் ஆட்சியில் பெண் கல்வி (1810 வரை)
- பெண் கல்வி 1830 - 1865
- பெண் கல்வி நிலை 1865 - 1900 வரை
- 1800-1900 வரையிலான பெண் கல்வி ஏற்படுத்திய சமூகத் தாக்கம்
- பெண்கள் பாடசாலைகளின் அதிபர்கள் சிலர்

ஆகிய 6 கட்டுரைகளை உள்ளடக்கியது. இவற்றின் ஊடாக பெண் கல்வி வரலாற்றையும், அமெரிக்க மிஷன் பெண்கள் கல்விக்கு அளித்த பங்களிப்பையும் உள்ளூர் மக்களின் சாதிய மனப்பான்மையையும், பெண் கல்வி பற்றிய அக்கறை யின்மையையும் மிஷனரியினரின் கல்விக் கொள்கைகளுட னும் மதமாற்றம் என்கிற நோக்குடனும் இடைவெட்டி நிற் கின்ற பொருளாதாரப் பின்புலங்கள் குறித்தும் காத்திரமான வாசிப்பொன்றையும் அதனூடாகப் புதிய தேடல்களையும் தூண்டுகின்றது.



arunmozhivarman@thaiveedu.com

# ‘ஓர் அடிமைச் சிறுமியின் வாழ்க்கை நிகழ்வுகள்’

## அடிமை நிறுவனத்துக்கு எதிரான குரல் / மானுட விடுதலையின் அவாவுதல் / பெண்ணியப் போராட்ட உந்துதல்

– ரூபன் சிவராஜா

**இந்நூல் வெளிவந்த காலத்தில் அடிமை நிறுவன ஒழிப்பிற்கான அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்தியது என்ற வகையில் இதன் பெறுமதி முக்கியமானது. இதன் காலம் கடந்த தன்மை என்பது இந்நூலின் அடிநாதமாக இருக்கின்ற அடிமை நிறுவனத்திற்கும் அதிகாரத்திற்கும் எதிரான குரல் – மானிட விடுதலைக்கும் சமத்துவத்துக் குமான அவாவுதல் – பெண்களின் சுயமரியாதையும் சுதந்திரத்திற்குமான கோரல் – ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என இன்னும் பல பரிமாணங்களை வரிசைப்படுத்திக் கொண்டே செல்லலாம்.**

### மானிட வரலாற்றின் இழிவுகளும் பிறழ்வுகளும்:

அடிமை நிறுவனம், அடிமை உடைமையாளர்கள், உடைமைப்பொருள், அடிமை வியாபாரிகள், அடிமை விற்பனைப் பத்திரம். இத்தகைய சொற்கள் சமகால வழக்கில் பயன்பாட்டில் இல்லாதவைதான். ஆனால் மனித வரலாற்றின் இழிவான பல காலங்கள் இச்சொற்களால் நிறைந்திருந்திருக்கின்றன. இந்த நூல் மானிட வரலாற்றில் நிகழ்ந்த மிக மோசமான இழிவினதும் ஒடுக்குமுறையினதும் முக்கியமான சில பக்கங்களை ‘ஓர் அடிமைச் சிறுமியின் வாழ்க்கை நிகழ்வுகள்’ நூல் பேசுகின்றது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அடிமைநிறுவனம் சட்டரீதியாக இல்லாமற் செய்யப்பட்டு 150 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும் அளவுகளில் வேறுபட்டாலும் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இன்றளவும் நிறவெறியும் இனவெறுப்பும் உயிர்வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. ஜனநாயகம் - நல்லாட்சி, பல்லினக் கலாசாரம், மனித உரிமைகள், கருத்துரிமை என மேற்குலகம் தனது உயர் விழுமியங்களாக முன்வைக்கின்ற இன்றைய உலகமயமாக்கற் சூழலிலும் நிறவெறியும் பாரபட்சங்களும் ஒடுக்குமுறைகளும், சமூக நீதிக்கும் மானிடத்திற்கும் எதிரான போக்குகளாக உலகில் நிலவிக்கொண்டுதான் இருக்கின்றன. இவற்றுக்குப் பல்வேறு உலக நிகழ்வுகளைச் சுட்ட முடியும். 2020-இல் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் அமெரிக்கக் காவல்துறையினரால் கழுத்து நெரித்து மூச்சடக்கப்பட்டமை உலகை உலுக்கியதை நாம் மறந்துவிடலாகாது.

18-ம் நூற்றாண்டினுடைய ஆரம்பத்தில், சாரா பார்ட்மன் (Sarah Baartman) என்ற தென்னாபிரிக்கப் பெண், கொலனித்துவவாதிகளால் ஐரோப்பிய நாடுகளின் நகரங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார். அவருடைய உடல் அமைப்புக் காரணமாக, அதாவது அவருடைய பிட்டம் திரண்டும் நீண்டும், உடல் பெருத்தும் இருந்த காரணத்தால் ஒரு காட்சிப் பொருளாக்கப்பட்டார். வெள்ளையின ஆண்களின் கேளிக்கைகளின் பொருட்டு அவர் மேடைகளில் நடனமாடவும் பாடல் பாடவும் வைக்கப்பட்டார். நிர்வாணமாக்கப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டார். பொதுவெளியிலும் மேடைகளிலும் நிர்வாணமாக்கப்பட்டு கூண்டில் அடைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டார். இவ்வாறான மிக மோசமான வன்முறை, பாலியல் துன்புறுத்தல், அடிமை உடைமைச் சித்திரவதைகளால் கொலனியாதிக்கக் காலம் நிறைந்திருந்திருந்தது என்பதை வரலாற்றிலிருந்து நாம் அறிந்துகொள்கின்றோம்.

### அடிமைத்தனத்தின் கொடூரங்களை எதிர்கொண்ட பெண்ணின் கதை:

19-ம் நூற்றாண்டில் அமெரிக்கத் தென் மாநிலங்களில் நிலவிய அடிமை நிறுவனத்தின் ஒடுக்குமுறைகளை எதிர்கொண்ட பெண்ணின் போராட்டங்களே இந்த நூலின் கதை. காலச்சுவடு பதிப்பக வெளியீடாக (2022) வெளிவந்துள்ள ஓர் அடிமைச் சிறுமியின் வாழ்க்கை நிகழ்வுகள் Incidents in the life of a slave girl என்ற ஹாரியட் ஜேக்கப்ஸ் எழுதிய இந்நூலினை கமலா கிருஷ்ணமூர்த்தி, அ. சங்கரசுப்பிரமணியன், மு. சுதந்திரமுத்து ஆகியோர் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். எளிமையும் செறிவும் நிறைந்த மொழிபெயர்ப்பு.

அடிமை நிறுவனத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் மனிதர்களின் சுதந்திரதாகத்தினைப் பிரதிபலிக்கின்றது. பிறக்கும் போதே அடிமையாகப் பிறந்து - அடிமைச் சேவகம் செய்து - அடிமை நிறுவனத்தின் அத்தனை குரூரங்களுக்கும் முகம்கொடுத்த அதேவேளை, அதிலிருந்து தன்னையும் தன் பிள்ளைகளையும் விடுவிக்கப் பெரும் போராட்டத்தை முன்னெடுத்த Harriet Jacobs-இன் தன்னனுபவக் கதையாடல் இதுவாகும். ‘அடிமைமுறையின் கொடுமைகளைப் பற்றி நான் அதிகமாகச் சொல்லவில்லை, அவை இந்த நூலில் பதிவு செய்யப்பட்டவற்றைவிடக் கொடூரமானவை’ என, இந்நூலின் முன்னுரையில் Harriet இன் குறிப்பு இடம்பெற்றிருக்கின்றது. கதை நிகழ்ந்த இடங்களின் பெயர்கள் தவிர்க்கப்பட்டு, கதை

மாந்தர்களுக்குக் கற்பனைப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. காரணம் தன்னுடைய வாழ்வுடன் தொடர்புடைய மனிதர்கள், உறவினர்கள், நண்பர்கள் அடையாளப்பட்டுவிடக்கூடாது என்பதாகும். அத்தோடு அவர்கள் மீதான அன்பும் கரிசனையு மாகும். தனக்கான பாத்திரப் பெயரை 'லிண்டா பிரென்ற்' என்று குறிப்பிடுகின்றார். இந்நூலை வாசிக்கும்போது மனம் மிகுந்த வேதனைக்கு உட்படும். இவை கற்பனைகள் அல்ல. சம்பவங்களும் அனுபவங்களும் உண்மையானவை. வரலாற் றின் இழிவான, மானிட விரோதங்களின் ஒரு பகுதியை, மனி தர்கள் மீது அதிகாரம் செலுத்தி இன்பம் கண்ட பிறழ்வின் பக்கங்களைப் பதிவுசெய்கின்றது.




'நான் அடிமையாகவே பிறந்தேன். மகிழ்ச்சியான ஆறு ஆண் டுக் குழந்தைப்பருவம் கடந்துபோகும் வரையில் நான் அதை உணர்ந்திருக்கவில்லை' என்று தொடங்குகின்றன இந்நூலின் முதல் வரிகள். Harriet 1813-இல் பிறந்தார். இவருடைய தம்பி இவரிலும் 2 வயது இளையவர்.

பிள்ளைகளை அடிமை நிறுவனத்திடமிருந்து விடுவிக்க வேண்டும் என்பது இவர்களது தந்தையின் தீவிர ஆசை. அவர் ஒரு கட்டடநிபுணர். அவருடைய அறிவுக்கூர்மைக்காக வும் தொழில்நேர்த்திக்காகவும் அசாதாரணமான கட்டடங் களை எழுப்பும் பணிகளுக்கு மேஸ்திரியாகத் தொலைதூரப் பகுதிகளிலிருந்தும் அவர் அழைக்கப்பட்டார். அவர் தனது எஜமானிக்கு ஆண்டுக்கு 200 டொலர்கள் கொடுக்கவேண் டும், தனக்கான செலவுகளைத் தானே செய்துகொள்ளவேண் டும் என்ற நிபந்தனைகளுடன் தொழில் செய்யவும் தன்னைத் தானே நிர்வகித்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டார். தனது கடின உழைப்பால் சம்பாதித்த பணத்தையெல்லாம் பிள்ளை களை மீட்பதற்காகச் செலவிட்ட போதும் அவரது விருப்பம் நிறைவேறவில்லை.

## தனிமனிதப் போராட்டம்:

கதையின் மையம் என்பது லிண்டா முதற்கட்டமாகத் தனது பிள்ளைகளையும் அடிமைத்தன அதிகாரப் பிடியிலிருந்து மீட்டு – சுதந்திரமானவர்களாக வாழ்வை நிலைநிறுத்துவதற் கான உந்துதலில் மேற்கொள்கின்ற தொடர் போராட்டங்களு மாகும். தாயார் இறந்ததையடுத்து, அடிமைத்தனத்தின் பிடி இவரை இறுக்கத்தொடங்கியது. டொக்ரர் பிளின்ற் (Flint) என்ற அடிமை உடைமையாளனின் பாலியல் நோக்கத்திலான தொடர்ச்சியான நெருக்குதல்களை எதிர்கொள்கின்றார். பல சந்தர்ப்பங்களிற் தனது மனோபலத்தாலும், சாதுரியத்தாலும், எதிர்ப்பு மூலமும் தப்பித்துக் கொள்கிறார். வசதியான வசிப்பி டமும் பல பண்ணைகளும் வைத்திருந்த பெரும் செல்வந்தர் டொக்ரர் பிளின்ட். சொந்தமாகக் கிட்டத்தட்ட 50 அடிமைகள் அவரிடம் இருந்தனர். அத்தோடு புதிதாக ஆண்டுதோறும் பல அடிமைகள் வெவ்வேறு வேலைகளுக்கு அமர்த்தப்படுவ துண்டு.

நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், நல்லுள்ளம் கொண்ட மனிதர்களின் உதவிகளும் ஒத்தாசைகளும் உந்துதல்களும் லிண்டாவிற்குக் கிடைத்தபோதும், அடிப்படையில் அவரது போராட்டத்தைத் தனிமனிதப் போராட்டமாகவே மதிப்பிட வேண்டும். ஒரு பெரும் சட்ட அங்கீகாரம் கொண்ட அடிமை நிறுவனத்தின் கீழ் -உடைமைப்பொருளாகவும் - விற்பனைப் பொருளாகவும் இருந்த சூழல், அந்தச் சூழலுக்குள் இருந்து கொண்டு எதிர்கொண்ட துன்புறுத்தல்கள், நெருக்கடிகள் - அதற்கு எதிரான அவரது செயற்பாடுகள் எனும் அடிப்படை யில் அவரது போராட்டம் என்பது பல்வேறு வகைகளில் மாபெரும் சாகசங்களை உள்ளடக்கியவை.

டொக்ரர் பிளின்டினது அதிகாரம் மிக்க சமூக அந்தஸ்தி னைத் தாண்டி, லிண்டா நினைத்துப்பார்க்க முடியாத வகை யில் எதிர்ப்பைக் காட்டுகிறார். சாண்ட்ஸ் என்ற வெள்ளையி னத்தைச் சேர்ந்த அயல்வீட்டுக்காரருடன் காதல் வயப்படுகி றார். திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு-அனுமதி-சுதந்தி ரம் இல்லாத போதும், அவர் மூலம் இரண்டு குழந்தைகளுக் குத் தாயாகுகின்றார். இந்தக் காதல் உறவையும் லிண்டா கரு வுற்றதையும் அறிந்தபோது டொக்ரர் பிளின்ட் கடும்கோபம டைந்ததோடு, லிண்டாவை மிகவும் இழிவுபடுத்துகின்றான்.

## காதல் – குழந்தைகள் – விடுதலை வேட்கை:

எதிர்ப்பின் அடையாளமாகவே தனது காதலையும் தேர்ந்து கொள்கிறார் லிண்டா. அயல் வீட்டவரான வெள்ளையின சாண்ட் என்பவருடன் காதல் வயப்படுவதோடு, திருமணத் திற்கு வெளியில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகுகின்

றார். அவரது அந்தத் தெரிவிற்காககவும் எஜமானனின் இழிவு படுத்தல்கள் இன்னும் அதிகரிக்கின்றன. 'என்னைக் கட்டாயப் படுத்துபவனின் வல்லுறவுக்கு ஆளாகுவதுதான் என்னைப் பொறுத்தவரை இழிவான செயல். நான் தேர்ந்தெடுத்த ஒருவ னோடு உறவு கொள்வது இழிசெயல் அல்ல. என் மீது அவர் ஆதிக்கம் செலுத்தவில்லை. உறவாலும் பாசத்தாலும் அவர் என்னைப் பிணைத்துக் கொண்டிருக்கின்றார். அப்படிப்பட்ட காதலருடன் உறவுகொள்வது கிட்டத்தட்ட விடுதலையேதான்' என்கிறார் லிண்டா.

லிண்டாவைப் பொறுத்தவரை, அவரது இரண்டு குழந்தைக ளும் அடிமைத்தனத்திலிருந்து மீள்வதற்கான போராட்டத் தினை முன்னெடுக்க பெரும் உந்துதலாக இருந்துள்ளனர். அதாவது வாழ்வின் மீதான பிடிப்பு என்பது பிள்ளைகளை மீட்டெடுத்தல், அவர்களுக்காக வாழ்தல் என்பதாக உணர வைக்கின்றது. அவர்கள் அடிமையாக இருப்பதையோ, இரண் டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுவதையோ அவர் விரும்ப வில்லை. அவர்களையும் தன்னையும் அடிமை நிறுவனத்திலி ருந்தும் அதன் கொடுமைகளிலிருந்தும் விடுவிப்பதுவும் சுதந் திர மனிதர்களாக வாழ்வை அமைத்துக் கொள்வதும்தான் அவரது இலக்காக இருக்கின்றது. அந்த உந்துதலின் பொருட்டு வட மாநிலங்களுக்கு தப்பிச் செல்வதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்கிறார்.

வட மாநிலங்களுக்கான தப்பித்தல் அனுபவங்களும் வலிகள் மிகுந்தவை. வடக்கிலும் கறுப்பினத்தவர்கள் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்படுவதையும் - தப்பியோடிய அடிமை என்ற காரணத்தால் தெற்கிற்கு திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சத்திற் தொடர்ந்து வாழ வேண்டிய சூழலையும் அனுபவரீதியாக எதிர்கொள்கின்றார். வடக்கில் அடிமை நிறு வனம் நிலவவில்லையே தவிர, அங்கு நிறவேற்றுமை தீவிரமா கப் பின்பற்றப்படுவதைக் காண்கிறார். வடக்கின் நிலமைகள் அவரை 'கண்ணுக்குத் தெரியாத அல்லது திறந்தவெளிச் சிறைச்சாலை' வாழ்வை எதிர்கொள்ள வைத்தன. ஏனென் றால் சட்டப்படி அவர், அங்கு அடிமையாக இல்லை. ஆயி னும், நடைமுறையில், அவர் எந்த நேரத்திலும் தெற்கிற்குத் திருப்பி அனுப்பப்படலாம். அந்தநிலை அவரை எப்போதும் பயத்திலும், நம்பிக்கையீனத்திலும், யாரை நம்புவது, யாரோடு பழகுவது, தவிர்ப்பது என்ற எச்சரிக்கை உணர்வோடு வாழ நிர்ப்பந்தித்தன. மேலும் அங்கு அவர் ஒரு கடுமையான சமூக மற்றும் இனப் பிரிவினையைக் காண்கிறார். வெள்ளை மக்கள் கறுப்பின மக்களை விட உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின் றனர் என்பதை அனுபவரீதியாகக் கண்டுகொள்கின்றார்.

தென் அமெரிக்க மாநிலத்திற்குத் தப்பி வந்த பின்னரும் தனக்காகவும் பிள்ளைகளுக்காகவும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கின்றது. இளமைக் காலத்தில் அடிமை வாழ்வு அவருக்கு கல்வியுரிமையை மறுத்தது. ஆனால் பெரிய எஜ மானி எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொடுத்திருக்கின்றார். விடுதலை அடைந்த பின், வீட்டு வேலைகள், வாழ்வாதாரத் திற்கான உழைப்பு என்பனவற்றிற்கு நடுவில் கிடைத்த சிறு சிறு ஓய்வுநேரங்களில் அவ்வப்போது எழுதியதே இந்நூல். இந்நூலை எழுதுவதற்கு அவருக்கு ஏழு ஆண்டுகள் எடுத் துள்ளன.

**பாத்திரங்கள்:**

பாட்டி: அநுபவ முதிர்ச்சியும் மிடுக்கும் கொண்ட பலரால் மதிக்கப்படும் ஒரு பாத்திரம். லிண்டா, குடும்பத்தினர், உறவி னர், நண்பர்கள் மீது அன்பும் கருணையும் செலுத்துபவர். வழிகாட்டியாக, தோளணைத்து ஆறுதலும் அடைக்கலமும் பாதுகாப்பும் கொடுக்கும் இயல்புடையவர்.

லிண்டாவின் தம்பி: போர்க்குணம் கொண்ட மனிதன்.

லிண்டாவின் சித்தியான நான்சி: அடிமை நிறுவனத்தினால்




தனது பிள்ளைகளைச் சாகக்கொடுத்தவர். எனினும் மனோதி டம் கொண்ட பெண். நோயுற்று மரணப்படுக்கையில் இருக் கும்போதும் புன்னகையை இழக்காதவர். லிண்டாவிற்கு எப் போதும் வார்த்தைகளால் உற்சாகமும் உந்துதலும் அளிப்ப வர்.

பிலிப்: லிண்டாவின் தாய் மாமன். இவரும் இறுதிவரை லிண் டாவிற்கும் அவரது குழந்தைகளுக்கும் அரணாகத் தன்னை அர்ப்பணித்த மனிதர்.

அடிமை நிறுவனம்: அடிமை நிறுவனம் எல்லா விதமான

சுரண்டல்களையும், வன்முறைகளையும் பிரயோகிக்கின்றது என்பது ஒருபுறம். அத்தோடு கல்வி, தொழில், சட்ட ரீதியான உரிமைகள், பாதுகாப்பு, குடும்பமாக வாழும் உரிமை எனச் சகல அடிப்படை உரிமைகளையும் மறுக்கிறது. அடிமையாக்கப்பட்ட மனிதர்கள் விற்றல் - வாங்குதல் என்ற வணிகப்பொருளாகக் கையாளப்படுகின்றனர். தாய் அடிமையெனில் - தன்னியல்பாகப் பிள்ளைகளும் அடிமை எனச் சட்டம் செய்து வைத்திருந்திருக்கின்றது. அடிமை உடைமையாளர் தாயின் அனுமதி பெறாமற் பிள்ளைகளை எப்போதும் யாருக்கும் விற்கலாம்.

சக அடிமைகளுக்கு வழங்கப்பட்ட உடல் - உள ரீதியான தண்டனைகளை அநுபவரீதியாக (தான் நேரிற்கண்டவற்றை) விபரிக்கின்றார். மனிதகுலத்தை வெட்கித் தலைகுனிய வைக்கின்ற தண்டனை முறைகள் அவை. ஒப்பீட்டளவில் லிண்டா உடல் ரீதியாக அதிகளவில் எஜமானனாற் துன்புறுத்தப்படவில்லை. காரணம் அவனது முழு இலக்கும் தனது பாலியல் இச்சைக்கு இவரை இணங்க வைப்பதாகும். தனியாக ஒரு வீடு கட்டி, அதிற் குழந்தைகளுடன் லிண்டா வசிப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்து, அவளை இணங்கவைக்க முயல்கின்றான். இணங்கவில்லையெனில் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும், பிள்ளைகளை அடிமை வணிகர்களிடம் விற்றுவிடுவேன் என்று அச்சுறுத்தியும், இரண்டு வயதுப் பெண்குழந்தை உட்படக் குழந்தைகளையும் லிண்டா அதிகம் பாசம் வைத்திருந்து தம்பி வில்லியம் உட்பட்ட உறவினர்களைச் சிறையில் இட்டபோதும் அவனது இலக்கு ஈடேறவில்லை.

அடிமைப் பெண்கள் எஜமானர்களின் காமச் சுரண்டலுக்கு உள்ளாகிக் கருத்தரிப்பதுவும் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதுவும் அதிகமாக நிகழ்ந்திருக்கின்றன. பிள்ளைகள் வளர்ந்து வரும்போது தமது சாயலிலும் கறுப்பினம் அல்லாத கலப்பு நிறமாகவும் உள்ளமை தந்தை யார் என்பதை இலகுவிற் காட்டிக் கொடுத்துவிடும். அத்தகைய சூழல்களில் தாய்மாரிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து அடிமை வணிகர்களிடம் விற்றுக் - கண்காணாத் தூரதேசங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பிவிடுகின்ற கொடுமைகள் சாதாரண நிகழ்வுகளாக அடிமைநிறுவனத்தில் நிகழ்ந்திருக்கின்றன என்பதை இந்நூலிற் கண்ணீரோடு பதிவுசெய்திருக்கின்றார்.

## தண்டனை முறைமைகள்:

தண்டனை முறைமைகள் மிகக் கொடூரமானவை: சாட்டையடி, காலிற் சங்கிலியால் கட்டப்பட்டு வயல்வெளிகளில் இழுத்துச் செல்லப்படுதல், சிறை வைத்தல், தலைகீழாகத் தொங்கவிட்டு சாட்டையாலடித்தல் எனவாக வாசிப்போர் உயிரை நடுங்கவைக்கும் தண்டனை முறைமைகள் விபரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதலாம் நாள் அடிமைகளை வீட்டு மற்றும் பண்ணை வேலைகளுக்கு எடுக்கின்ற நாள். ஒரு ஏலத்திடலில் இந்த நிகழ்வு இடம்பெறும். மனிதர்களை ஏலத்தில் விற்கும் இடம். ‘ஏலத்திடலில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் குற்றவாளிகளைப் போல, தங்களின் நிலை என்னவாகுமோ என்ற திகிலுடன் காத்திருப்பார்கள்’ சுற்றுவட்டாரங்களிலுள்ள எஜமானர்களும் அடிமை வணிகர்களும் முகவர்களும் அவர்களை ஏலத்தில் வாங்கிச் செல்வார்கள். அந்த நாள் குறித்த அடிமைகள் மற்றும் குறிப்பாக அடிமைத்தாயின் மனநிலை குறித்து, அதாவது தன்னிடமிருந்து பிரிக்கப்படப் போகும் குழந்தைகளை நினைத்தபடி தாய்மாரின் மனம் கையறு நிலையில் துவளுவதை இப்படி விபரிக்கின்றார்:

‘விடிவதற்கு முன்னால் தானும் தன் குழந்தைகளும் செத்துப் போய்விட்டால்கூட நல்லது என்று பல சமயங்களில் ஒரு தாய் நினைப்பாள்.’

மரணம் ஒன்றுதான் விடுதலை என்று நம்பும் அளவிற்குக் கொடுமைகளைத் தான் அனுபவித்ததாகக் கூறுகின்றார். அடிமை உடைமையாளர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து




தப்பியோட முயல்பவர்கள் மற்றும் தப்பியோடியவர்கள் பிடிபடும்போது அவர்களுக்கு நேரும் கதி குறித்த விபரிப்புகளும் இடம்பெற்றுள்ளன. லிண்டாவின் தாய்மாமனான பெஞ்சமின் என்பவருக்கு நேர்ந்த கதி விபரிக்கப்படுகின்றன. நினைத்துப் பார்க்க முடியாத ஆபத்தான பாதைகளைக் கடந்திருக்கின்றார். அடிமையாக வாழ்வதிலிருந்து விடுபட்டுச் சுதந்திர மனிதராக ஆகுவதற்கான முயற்சிகளில் அவர் கொடுக்க நேர்ந்த விலை மிக மிக அதிகம்.

‘அடிமைத்தனமானது முதிராப் பருவத்திலேயே உலகின் தீமைகளையெல்லாம் பற்றி என்னை அறிந்துகொள்ளச் செய்திருக்கின்றது.’

அடிமை நிறுவனத்தினைப் பேணவும் பாதுகாக்கவும் தேவாலயங்களும் பங்களித்துள்ளன. எஜமானர்களுக்கு விசுவாசமாக இருப்பது தொடர்பாக அடிமைகளுக்கு கிறிஸ்தவ மதகுருமாரால் போதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஜமானர்களுக்குக் கீழ்ப்படியாமை பெரும் பாவச்செயல், அதனைத் தேவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என ஒருவகையான உளவியல் அச்சுறுத்தல் மதபோதனைகளின் வழியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அடிமை நிறுவனம் எப்படி இயங்கியது, அதன் சட்டங்கள், அது எதனை மறுத்தது, எதனை அனுமதித்தது என்ற தகவல்களும் ஆங்காங்கே நிகழ்வுகளின் பின்னணியில் பேசப்படுகின்றன.

## எதிர்ப்பின் முழு வடிவம்:

போர்க்குணம் அவருடைய வாழ்வின் முதன்மை இயல்பாக இருந்திருக்கின்றது. சகல அதிகாரங்களுடனும் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடிமை நிறுவனத்திற்குள் இருந்து கொண்டு போராளியாக வாழ்ந்திருக்கின்றார் என்பது அசாதா ரணமானதும் சாகசமானதுமான அம்சம். எதிர்ப்பு அவருடைய அடையாளமாகவும் வாழ்வு முறையாகவும் இருந்திருக்கின் றது. பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு போராட வில்லை. பாதுகாப்புக்கான உத்தரவாதங்கள் ஏதுமற்ற, அச் சுறுத்தலும் நெருக்கடிகளும் மிகுந்த சூழலுக்குள் வாழ்ந்து




கொண்டு போராடியிருக்கின்றார் என்பதே அவரின் வாழ்வை யும் போராட்டத்தையும் தனித்துவமானதாக ஆக்குகின்றது.

அடிமை நிறுவனத்தின் அங்கமாக இருந்தாலும் இரக்ககுணம் கொண்டிருந்த அடிமை உடைமையாளர்கள், ஆபத்திலி ருந்து காப்பாற்றிய எஜமானிகள் குறித்தெல்லாம் பதிவுசெய் திருக்கின்றார். மனித மனங்களினதும் இயல்புகளினதும் பல் பரிமாணங்களை மிக இயல்பாகவும் உணர்வுபூர்வமாகவும் வெளிப்படுத்துகின்றார். சாண்ட்ஸ், தன்மூலம் லிண்டாவிற்குப் பிறந்த இரண்டு குழந்தைகளையும், லிண்டாவின் தம்பியான வில்லியத்தையும் டொக்ரர் பிளின்டிட மிருந்து விலைக்கு வாங்கியதன் மூலம் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்கான சூழலை ஏற்படுத்துகின்றார். ஆனால் அது முழு மையான விடுதலை இல்லை. குழந்தைகளைப் பெரும் போராட்டங்களின் பின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்த போதும் தனது விடுதலை சாத்தியமாகாமல் பிள்ளைகளுக் குச் சிறந்த எதிர்காலத்தினை அமைத்துக் கொடுக்க முடி யாது என்ற யதார்த்தத்தில் தனது விடுதலைக்கான அவரது முயற்சிகள் மிகவும் கடுமையான சவால்களைச் சந்திக்கின் றன.

## தலைமறைவு வாழ்வின் இருண்ட பக்கங்கள்:

டொக்ரர் பிளின்ட்டின் பிடியிலிருந்து தப்பி முதலிற் சில மாதங்கள் வெவ்வேறு இடங்களில் தலைமறைவாக வசிக்கி றார். இறுதியாகப் பாட்டியின் வீட்டில் ஒளிந்து கொள்கின்றார். கொஞ்சநஞ்சக் காலம் அல்ல. ஏழு ஆண்டுகள். ஒளிந்த இடம் நினைத்துப் பார்க்க முடியாத வீட்டின் களஞ்சிய அறைக்கு மேல் உள்ள ஓர் இருட்டுப் பரண். ஒளி புக இடமில் லாத இருட்டு. காற்று நுழையமுடியாத, கால்கைகளை அசைக்கவோ நீட்டி நிமிர்ந்து படுக்கவோ எழுந்து நிற்கவோ முடியாத ஒடுக்கமான ஒரு பொந்து அது.

அடிமையாக அனுபவித்த உடல்-உளத் துன்பங்களிலும் பார்க்க இந்த பரண் வாழ்வு கொடுமையானது என்கிறார். அந்த வாழ்வின் வலிகளை வாசகர்கள் உணர்ந்துகொள்ளும் அளவிற்கு அது விபரிக்கப்படுகின்றது. நிரந்தர விடுதலை இலக்கிற்கான அதீத அர்ப்பணிப்பாக அந்தக் காலங்கள் அமைகின்றன. அடுத்த கட்டத்திற்கான, அதாவது விடுத லைக்கான திட்டமிடல்களை அந்த மறைவு வாழ்விலிருந்தப டியே முன் னெடுக்கின்றார். அடிமை நிறுவனம் இல்லாத வட அமெரிக்க மாநிலங்களுக்குப் பிள்ளைகளை அனுப்புவதும் அதனைத் தொடர்ந்து தானும் அங்கு சென்று பிள்ளைகளு டன் சேர்ந்து வாழ்தலும் - அவர்களுக்கு நல்ல எதிர்காலத் தையும் கல்வியையும் அமைத்துக்கொடுப்பதே இறுதி இலக்கு.

சவால் மிக்க பயணங்களின் மூலம் வடக்கிற்குத் தப்பிச் சென் றாலும் பாதுகாப்பின்மையும், நிச்சயமற்ற எதிர்காலமும் தொடர்ந்து துரத்திக்கொண்டே இருக்கின்றன. வட மாகாணங் கள் அடிமைத்தனம் இல்லாத சுதந்திர மாநிலங்களாக இருப் பினும் கறுப்பின மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வும் நிற வெறியும் பாரபட்ச அணுகுமுறைகளையும் கண்டு கலங்கு கின்றார். ஈற்றில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு தனது நிரந்தரவிடுதலையையும் சாத்தியப்படுத்தி பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் தான் நினைத்ததுபோல் வழிசமைத்தார். அடிமை ஒழிப்புப் போராளிகளுடன் இணைந்து இவரும் இவ ரது தம்பியும் செயற்பட்டிருக்கின்றனர்.

எத்தனையோ தடவைகள் மீண்டும் மீண்டும் அவரது விடு தலை முயற்சிகள், திட்டங்கள் தூள்தூளாகத் தகர்க்கப்பட்டு நம்பிக்கை சிதைக்கப்பட்டன. அவற்றிலிருந்தெல்லாம் மீண் டும் மீண்டும் முயன்று கொண்டே இருந்தார். அதிலெல்லாம் ஒரு சுதந்திர உணர்வும் சுயமரியாதையும் கொண்ட- தன்மீது வலிந்தும் அதிகாரத்தின் ஊடாகவும் திணிக்கப்பட்ட இழிவுக ளைச் சுமக்க விரும்பாத ஒரு பெண்ணின் எதிர்ப்புணர்வின் வலிமையும் சக்தியும் வெளிப்படுகின்றன.

## தன்னனுபவக் கதையாடல் – பேசுபொருளின் பரப்பு:

இந்நூல் ஒரு தன்னனுபவக் கதையாடல் என்பதனை ஆரம் பத்திற் குறிப்பிட்டிருந்தேன். வாசகர்களுடன் நேரடியாக உரையாடுகின்ற சொல் முறையினைப் பல இடங்களிற் கொண்டுள்ளது. குறிப்பாகப் பெண்களை நோக்கிய உரையா டலாகவும் பகிர்வாகவும் காணலாம். தான் விபரிக்கும் நிகழ்வு கள், அநுபவங்களை அடிமையாக இல்லாத ஒருவரால் உணர்ந்துகொள்வதும் நம்புவதும் கடினமென்றும் ஹரியட் குறிப்பிடுகின்றார். இந்நூல் உள்ளடக்கியுள்ள கதையாடல் காலகட்டங்களை மூன்று பகுதிகளாகப் பார்க்கலாம். முதலா வது அடிமை உடைமையாளரின் நேரடிக் கட்டுப்பட்டில்

இருந்த போதானதும் பிள்ளைகளை மீட்கின்ற போராட்ட விபரிப்புகளையும் கொண்டுள்ளது. இரண்டாவது, அடிமை உடைமையாளரிடமிருந்து பிள்ளைகளை விடுவித்த பின், தான் தப்பி, தலைமறைவாக வாழ்கின்ற கால அனுபவங்களும்- அந்தக் காலகட்டங்களில் அவருக்கும் அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கும் நேர்கின்ற சம்பவங்களையும் கொண்டுள்ளது. மூன்றாவதும் தலைமறைவு வாழ்வின் ஒரு அங்கம் தான். அது தப்பித்தலும் விடுதலை இலக்கு நோக்கிய பயணங்களாலதுமான காலகட்டம்.

## நூலின் நோக்கமும் இலக்கியத்தில் அதன் இடமும்:

இத்தகையதொரு வாழ்வனுபவத்தினை மிகைப்படுத்தலோ- வலிந்த திணிப்புகளோ இல்லாமல் எழுத்தில் பதிவு செய்திருக்கின்றார். வெறுமனே ஒரு அறிக்கையிடலாகவோ, தகவல்கள் அடுக்கப்பட்ட தொகுப்பாகவோ இல்லாமல் - இலக்கியத்திற்குரிய தன்மையுடனும் விபரிப்புகளுடனும் எழுதப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய பணியும் திறமையும் என்றால் அது மிகையல்ல.

இதனை எழுதியதன் நோக்கம், அநுதாபம் தேடுவதற்கானது அல்ல. அடிமைத்தனத்தில் சிக்கியிருந்த(2 மில்லியன்) பெண்கள், தமது நிலையை உணர்ந்து, எழுச்சி பெறுவதற்கான தூண்டுதலாக அமைய வேண்டுமென்ற எண்ணம்தான் இதற்கான முதன்மை உந்துதல் என்கிறார். இது அநுதாபம் தேடுவதற்கான நோக்கம் கொண்டதல்ல என்பதை அவர் சொல்லாமலே, இந்த நூலை வாசிக்கும்போது நாம் உணரத் தலைப்படுகின்றோம். ஏனெனில் அவரது இயல்பும் மனோதிடமும் அத்தகைய அசாத்தியமானவை. அவர் தனது வாழ்வின் கொடுரங்களை எப்படி எதிர்கொண்டார், அவர் எத்தகைய மனவுறுதி கொண்ட பெண் - அவருடைய போராட்டகுணம் எத்தகையது என்பதை உணரும்போது அவர் அநுதாபத்தை எதிர்பாராத, அதீத சுயமரியாதை மிக்கவர் என்பதை நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

அடிமைத்தனம் என்பது அதிகாரமும் ஒடுக்குமுறையும் இரண்டறக்கலந்த ஒன்று. அதற்குள் ஆணாதிக்க அம்சங்கள் நிறையவே உள்ளன. அடிமை நிறுவனம் ஆண்களையும் துன்புறுத்தியிருக்கின்றது. எனினும் பெண் மீது அடிமை நிறுவனம் பிரயோகிக்கும் சுமைகள் உடல் உழைப்பினைச் சுரண்டல், பாலியல் சுரண்டல், உள ரீதியான துன்புறுத்தல்கள், இழிவுபடுத்தல்கள் கொடுமையானவை. பாலியல் சுரண்டல்களைப் பற்றி நுணுக்கமான விபரிப்புகளை அவர் இந்நூலிற் தவிர்த்திருந்தாலும் எஜமானனின் அத்தகைய தொந்தரவுகளிலிருந்து தப்புவதற்குத் தான் பட்டபாட்டினை இந்நூலின் முதற்பகுதியில் அதிகம் விபரித்திருக்கின்றார். அதுவே அவருடைய போராட்டத்தின் முதற்கட்டமுமாகும். அதற்குத் தீர்வுகாணும் முதற்படியாகவே அவரது காதல் தேர்வு அமைகின்றது. எஜமானனின் தொந்தரவுகளை எதிர்த்தலின் அங்கமாக-ஆனால் மனம் ஒத்து- ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு - காதலைப் பகிர்ந்து- பிள்ளைகளைப் பெற்றுக் கொண்ட அனுபவ நிகழ்வுகள் முன்வைக்கப்படுகின்றன.

மனிதர்களையும் அவர்களின் இயல்புகளையும் 'நல்லவர்கள் -தீயவர்கள்' என்ற 'கறுப்பு - வெள்ளை'யாக நூலாசிரியர் எந்த விடத்திலும் முன்வைக்கவில்லை. வெள்ளையர்கள் மீதான வெறுப்பினை அவர் கக்கவுமில்லை. வெள்ளையின மனிதர்களில் நல்ல இதயம் கொண்ட, மனிதாபிமானமுடையவர்களை நன்றியோடு பதிவுசெய்திருக்கின்றார். தன்னைச் சக மனிசியாக மதித்துப்பழகியவர்கள், உதவி செய்த வெள்ளையின மனிதர்களை நன்றிப்பெருக்கோடு பதிவு செய்திருக்கின்றார்.

## பங்களிப்பு – வரலாற்று வகிபாகம் – எதிர்காலத்திற்கு வழிகாட்டும் தன்மை:

அடிமை நிறுவனத்தினால் உடைமையாக்கப்பட்ட பெண்ணின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைப் பேசுவதன் மூலம் நிறுவனமயப்பட்டிருந்த அடிமைத்தனத்தின் கொடூரங்கள் பற்றிய மிக நெருக்கமானதும் நுணுக்கமானதுமான பிரதிபலிப்பினை இந்நூல் வழங்குகிறது. அந்த அனுபவங்களைப் படிக்கும்போது, அவர் மிகவும் சொல்லொணாத் துயரங்களையும் இழிவுபடுத்தல்களையும் அனுபவித்தாலும், சுயமரியாதை யுடனும் சுதந்திர உணர்வுடனுமான ஒரு வாழ்வுக்காக தளராது போராடியிருக்கின்றார் என்பதை உணர முடிகின்றது. எண்ணற்ற தடவைகள் தப்பித்தல், விடுதலையடைதல் முயற்சிகள் தோல்வியுற்றபோதும் தகர்க்கப்பட்டபோதும் மீண்டும் மீண்டும் புதிய முயற்சிகளில் இறங்கி தனது இலக்கில் வெற்றியடைகின்றார். அடிப்படையில் அது அவருடைய வெற்றி மட்டுமல்ல. அவர் தனது தனிப்பட்ட வாழ்க்கைக் கதையை எழுதியதன் மூலம் வரலாற்றுக்குப் பங்களித்துள்ளார். அடிமைத்தனத்தினதும் அதன் முதன்மை அங்கமான சுரண்டல்களினதும் பரிமாணங்களைப் பற்றியும் அறிய இந்நூல் உதவுகின்றது.

## பெண்ணியப் போராட்டத்திற்கும் மானிட விடுதலைக்குமான உந்துதல்:

தன் உடல் தன் உரிமை என்பதை ஒரு விடாப்பிடியான தனிமனித போராட்டத்தின் மூலம் நிறுவியவர். அடிமை ஒழிப்புப் போராட்டம் என்பதாகவும் தன் வாழ்வின் மூலமும் இந்த நூலின் மூலமும் அவருடைய பங்களிப்பு காலம் கடந்தது. வரலாற்றிற்கும் பெண்ணியப் போராட்டங் களுக்கும், அனைத்து விதமான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கும் வழிகாட்டக்கூடிய பெறுமதி இந்தப் புத்தகத்திற்கு உள்ளது. 1867-ல் வெளிவந்த புத்தகம் இது. இதன் பெறுமதியை காலம் சார்ந்து இரண்டு அடிப்படைகளில் அளவிடமுடியும். வெளிவந்த காலத்தில் இது ஏற்படுத்திய விளைவுகள் சார்ந்த பெறுமதி ஒன்று. மற்றையது காலம் கடந்த இதன் ஆவண மற்றும் வரலாற்றுப் பெறுமதி. வெளிவந்த காலத்தில் அடிமை நிறுவன ஒழிப்பிற்கான அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்தியது என்ற வகையில் இதன் பெறுமதி முக்கியமானது. இதன் காலம் கடந்த தன்மை என்பது இந்நூலின் அடிநாதமாக இருக்கின்ற அடிமைநிறுவனத்திற்கும் அதிகாரத்திற்கும் எதிரான குரல் - மானிட விடுதலைக்கும் சமத்துவத்திற்குமான அவாவுதல் - பெண்களின் சுயமரியாதையும் சுதந்திரத்திற்குமான கோரல் - ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் என இன்னும் பல பரிமாணங்களை
வரிசைப்படுத்திக்கொண்டே செல்லலாம்.



rooban.s@thaiveedu.com

## முற்போக்கு இலக்கிய ஆளுமை

# கே. கணேஷ் மொழிபெயர்ப்புகள்

## ஓர் அறிமுகக் குறிப்பு

– அன்னலட்சுமி இராஜதுரை



தமது மாணவப் பருவ காலத்தில் இருந்து அதாவது 1930-களில் இருந்து மார்க்ஸியக் கருத்துகளால் ஆகர்ஷிக்கப்பட்ட ஒருவராக முகிழ்ந்து, ஒடுக்குமுறைக்கும் மேலாதிக்கத்துக்கும் சுரண்டலுக்கும் எதிரான ஓர் எழுத்தாளராகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் விளங்கியவர் கே. கணேஷ் அவர்கள்.

எழுத்தின் ஊடாக சமூகச் செயற்பாடு, அவரது இலக்காக இருந்த அதேவேளை, சமூக நிலைமைகளைச் சித்திரிப்பதோடு அவல நிலையில் உள்ள சமூகத்தை மாற்றியமைப்பதற்குரிய சோஷலிஸக் கருத்துகளைத் தமது எழுத்து வழியாக வடிவமைத்த தனித்துவம் அவரிடம் நிலைத்திருந்தது என இலக்கிய ஆய்வாளர்கள் விதந்துரைப்பர். கவிதை, புனைகதை, கருத்தாக்க எழுத்து, திறனாய்வு, மொழிபெயர்ப்பு என பன்முகத் தளத்தில் இயங்கிய கே. கணேஷ் அவர்கள் தமது இலக்கையும் எழுத்து நேர்த்தியையும் திறம்பட வெளிப்படுத்தியவர். மலையக இலக்கியத்துக்கு ஒளி பாய்ச்சி சிறப்புற்று விளங்கிய இந்த முற்போக்கு இலக்கிய ஆளுமையின் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் கே.கணேஷ் நூற்றாண்டு விழாக் குழு ‘முற்போக்கு இலக்கிய ஆளுமை கே. கணேஷ் மொழிபெயர்ப்புகள்’ என்னும் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளது.

மலையகத்தில் கண்டி, அம்பிட்டிய என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கே. கணேஷ். இவரது மூதாதையரும் பெற்றோரும் தமிழ்நாடு, திருச்சி மாவட்டம், தத்தமங்கலம் என்னும் சிற்றூரில் இருந்து இங்கு குடியேறியவர்கள். தமது ஆரம்பக் கல்வியை உள்ளூரிலும் பின் கண்டி சென்ற். அந்தனீஸ் கல்லூரியிலும் கற்ற இவர், தமிழ்மொழி மீது கொண்டிருந்த விசேட திறமை காரணமாக மதுரைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிக்குச் சென்று கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். இதற்கு அவரது ஆசிரியர்கள் வழிகாட்டியாகவும் விளங்கினர்.

இவர் தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த காலம், இந்திய சுதந்திரப் போராட்ட உணர்வு, எழுச்சி பெற்ற ஒன்றாக விளங்கி இருந்ததோடு, மார்க்ஸிய சிந்தனைகளும் சோஷலிஸ உணர்வும் ஆங்காங்கு தோன்றி கம்யூனிஸக் கட்சியும் தலையெடுத்த ஒரு காலமாக விளங்கியது. சந்தர்ப்ப சூழ்நிலைகளும் சுதந்திர வேட்கையும் மார்க்ஸிய சிந்தனையும் கொண்ட இலக்கிய நண்பர்களது ஆதரவும் தூண்டுதல்களும் தமிழைக் கற்கச் சென்ற கணேஷையும் பாதிக்கவே செய்தன. இதன் விளைவாக சிறிது காலமே அக்கல்லூரியில் கற்கும் நிலைமை தோன்றியது. பின்னர், வேறிடத்தில் இருந்து தமது கல்வியைத் தொடர்ந்த அவர், சோஷலிஸக் கருத்துக்களில் மூழ்கிய ஓர் எழுத்தாளராகவும் நடவடிக்கையாளராகவும் முற்றாக மாறிவிட்டதைக் குறிப்பிட வேண்டும்.

இத்தகையதொரு பின்னணியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த கணேஷ், நண்பர்களின் ஆதரவினால் ஜெயப்பிரகாஷ் நாராயன் எழுதிய ‘Why Socialism’, ஜவஹர்லால் நேரு எழுதிய ‘Whither India’, சுபாஷ் சந்திர-போஸ் எழுதிய ‘சம்யவாதம்’ ஆகிய அரசியல் சார்ந்த நூல்களுடன் உலகப் புகழ் பெற்ற நாவல்கள் மற்றும் பெயர்பெற்ற இந்திய முற்போக்கு நாவல்கள் போன்ற ஏராளமான இலக்கியப் படைப்புகளையும் வாசித்ததன் மூலம் முற்போக்கு சிந்தனை பெற்ற ஒருவராகவும் விளங்கினார்.

ஆரம்பத்தில் (1939) தத்தமங்கலம் கணேசன் என்னும் பெயரில் ‘மணிக்கொடி’ மற்றும் சஞ்சிகைகளில் சொந்தமாக சிறுகதைகளைப் படைத்தவர், பின், கே.ஏ. அப்பாஸின் சிறுகதைகளைக் ‘கல்கி’யில் அப்போது மொழிபெயர்த்து வெளியிட்டதைத் தொடர்ந்து ஏராளமான அந்நிய இலக்கியப் படைப்புகளையும் கவிதைகளையும் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்த வகையில், பெயர்பெற்ற எழுத்தாளரான டாக்டர். முல்க்-ராஜ் ஆனந்துடன் தொடர்புகொண்டவராய், அவரது சம்மதத்துடன் அவரது பெயர்பெற்ற நாவலான ‘தீண்டாதான்’ என்னும் படைப்பினைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். கம்யூனிஸ நாட்டு எழுத்தாளர்களுடனும் தொடர்புகளைப் பேணி வந்த கணேஷ், சோவியத் ரஷ்யா, ரூமேனியா, பல்கேரியா,

உக்ரேன் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்திருக்கிறார். பல்கேரிய, உக்ரேனிய எழுத்தாளர்களின் படைப்புகளையும் மொழிபெயர்த்ததினால் அந்தந்த நாடுகளில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாடுகளிலும் பங்குபற்றும் வாய்ப்பினையும் இவர் பெற்றிருக்கிறார்.

இந்த வகையில், கணேஷ் அவர்கள் 22 மொழிபெயர்ப்பு நூல்களை எழுதி வெளிக்கொணர்ந்த சிறப்புக்குரியவர். 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்னும் பாரதியின் கட்டளையை நிறைவேற்றும் ஒரு நோக்கில்தான் மொழிபெயர்ப்புகளில் ஈடுபட்டதாக இவர்




குறிப்பிட்டிருக்கிறார். 'ஞானம்' கலை இலக்கிய சஞ்சிகைக்கு வழங்கிய முழுமையான நேர்முகத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். 'ஞானம்' சஞ்சிகையின் இந்த முழுமையான நேர்காணல் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டிருப்பதானது வாசகர்கள் கே. கணேஷ் அவர்களைப் புரிந்துகொள்ள உதவுவதாக உள்ளது என்பதனையும் குறிப்பிட வேண்டும்.

'தீண்டாதான்' (முல்க்ராஜ் ஆனந்த்), 'குங்குமப்பூ' (கே.ஏ. அப்பாஸ்), 'ஹோ சி மின் சிறைக் குறிப்புகள்', 'போர்க்குரல்' (லூ சுன்), பல்கேரியக் கவிதைகள், 'சீன எழுத்தாளர் லூ சுன் சிறுகதைகள்', 'எத்தனை நாள் துயின்றிருப்பாய் எனதருமைத் தாய்நாடே' (சாந்தோர் பெட்டோவ்ஃபி) 'பாரதி பக்தன் பார்பரா கவிதைகள்', 'ஒரு சோவியத் கவிஞரின் புதுக்கவிதைகள்', 'மூங்கிற்பள்ளம்' (வியட்னாமியக் கதைகள்), 'உக்ரேனிய மகாகவி தாரஸ் ஷெவ்சேன்கோ கவிதைகள்', 'உக்ரேனிய அறிஞர் இவன் ஃபிரான்கோ கவிதைகள்' ஆகியன இவர் வெளியிட்ட மொழிபெயர்ப்பு நூல்களில் சிலவாகும். சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் சில காலம் பணிபுரிந்த இவர் பின்னர் முற்போக்கு எழுத்தாளர் கே. இராமநாதனுடன் இணைந்து கொழும்பில் 'நவசக்தி', 'தேசாபிமானி' ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியதையடுத்து, கே. இராமநாதனுடன் இணைந்து 'பாரதி' என்னும் சஞ்சிகையையும் சில காலம் வெளியிட்டார்.

முற்போக்கு இலக்கிய நடவடிக்கையாளராகவும் மிளிர்ந்த இவர் 1945-ல் இந்தியாவில் அப்பாஸ், தி.க.சி. போன்றோருடன் இணைந்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கியதும் இரண்டாவது உலகப்போர் காலத்தில் முல்க்ராஜ் ஆனந்த், இலங்கைக்கு வந்திருந்த வேளை முதன்முதலில் இலங்கையில் ஓர் அகில இலங்கை எழுத்தாளர் சங்கம் உருவாக பின்னணியில் இருந்து உழைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்க விடயங்களாகும். சுமார் எழுபது வருட காலம் தமிழகத்திலும் இலங்கையிலும் இருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என எழுதிக்குவித்த தமிழ் ஆங்கிலப் புலமைமிக்க முற்போக்குப் படைப்பாளி, இலக்கியச் செம்மல் கணேஷின் படைப்புகள் இத்தனை என்று கூறிவிடுதல் சாத்தியமில்லை.

அன்னாரின் நூற்றாண்டினை முன்னிட்டு கொழும்பு தெஹிவளையில் உள்ள கே. கணேஷ் நூற்றாண்டு விழாக்குழு 'முற்போக்கு இலக்கிய ஆளுமை கே. கணேஷ் மொழிபெயர்ப்புகள்' என்ற தொகுப்பு நூலை மிகச் சிறப்பாக வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. திரு. கே. பொன்னுத்துரை அவர்களால் அழகாகத் தொகுத்து வெளியிடப்பட்ட இந்நூல் 350 பக்கங்களைக் கொண்டது. ஆங்கிலத்தில் எழுதி உலகப் புகழ் பெற்ற இந்திய நாவலாசிரியர் முல்க்ராஜ் ஆனந்தின் 'தீண்டாதான்' நாவல் இத்தொகுப்பில் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் சமூக ரீதியாகப் பின்தங்கி வாழும் மக்களது வாழ்வுக் கோலங்களைச் சித்திரிக்கும் விதமாக எழுதிவந்த இந்த நாவலாசிரியரின் 'தீண்டாதான்' என்னும் இந்நாவல், இந்திய நகரமொன்றில் துப்புரவுத் தொழில் செய்யும் சிறுவன் ஒருவனைப் பற்றியதாக அமைகிறது. சிறுவனாக இருந்தவன் இளைஞனாக மாற்றுகின்ற ஒரு நாள் அனுபவத்தை முல்க்ராஜ் ஆனந்த், தத்ரூபமாகச் சித்திரிக்கிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் பரிதாபமான வாழ்வுநிலை, ஏக்கங்கள், ஆசாபாசங்களை இந்நூலில் தத்ரூபமாகச் சித்திரிக்கிறார். அதனைக் கணேஷ் அவர்கள், உணர்வு மாறாமல் மொழிபெயர்த்துள்ளார்.

அடுத்து, பஞ்சாப் மாநில பிரபல நாவல் எழுத்தாளர், திரைப்பட இயக்குநர், பத்திரிகையாளர் குவஜா அகமது அப்பாஸ் அவர்களது 'குங்குமப்பூ' என்ற சிறுகதை, கணேஷின் மொழி

பெயர்ப்பில் இடம்பெற்றிருக்கிறது. சமூக விழிப்புணர்வையும் தேசிய ஒருமைப்பாட்டினையும் பிரதிபலிக்கும் அப்பாஸின் சிறுகதைகளை கணேஷ் மொழிபெயர்த்து, கல்கியில் வெளியிட்டபோது, 'குங்குமப்பூ' சிறுகதையும் அவ்விதமே இடம்பெற்றது. அப்பாஸின் 'என் குடை', 'சிட்டுக்குருவிகள்', 'அநாம தேய அகதி', 'சில்வியா சில்வியா', 'கொடி', 'பிரதிபிம்பம்', 'அரிசி', 'பாதகமலம்', 'ஒரு வேடிக்கை' ஆகிய சமூக விழிப்புணர்வுக் கதைகளின் மொழிபெயர்ப்புகளும் இடம்பெற்று வாசிக்கத் தூண்டுகின்றன.

இவற்றுள் ஒரு சில சிறுகதைகளை எடுத்து நோக்கினால், பஞ்சாப் மாநிலத்தில் நடந்த இந்து, முஸ்லிம், சீக்கியர், இனப்படுகொலைகளில் சிக்கிய ஒரு மனிதனின் கதையாக 'அநாம-தேய அகதி' அமைகிறது. தனது குடும்பத்தை இழந்து, நினைவிழந்து, தட்டுத் தடுமாறி, அகதியாக அலைந்து, தான் இந்துவா, முஸ்லிமா என்று உணர முடியாமல், பல இடங்களுக்கும் போய், 'நீ இந்துவா? முஸ்லிமா?' என்று வினவப்படும் போது, பதில் சொல்லத் தெரியாமல் தவித்து நிற்கும் ஒரு அகதியின் கதையாக இக்கதை உள்ளத்தை உறுத்துகிறது.

'கொடி' - உடுக்க உடை இல்லாமல் அவதிப்பட்ட ஓர் ஏழையின் பரிதாபக்கதை. ஒருவாறாக வீதியில் கிடந்த கொடிச் சீலையை எடுத்துக் கட்டிக்கொண்ட அவனுக்கு நேர்ந்த நிலையை இக்கதை விபரிக்கிறது. திருமணம் செய்து குடும்பமாய் வாழ ஆசைப்பட்ட நர்ஸ் ஒருத்தியின் தியாக வாழ்வைச் சித்திரிக்கும் ஒன்றாக 'சில்வியா சில்வியா' என்னும் கதை அமைகிறது.

அடுத்து, கணேஷ் அவர்களின் மொழிபெயர்ப்பில் சீனாவின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான லூ சுன் (Lu xun) அவர்களின் 'பைத்தியக்காரனின் குறிப்புகள்' என்னும் சிறுகதை தரப்பட்டிருக்கிறது. சீனாவின் பண்பாட்டுப் புரட்சியின் தலைமைத் தளபதியாக மட்டுமன்றி, ஒரு சிறந்த சிந்தனாவாதியாகவும் புரட்சியாளராகவும் லூ சுன் திகழ்ந்தவர். 'போர்க்குரல்' என்ற புகழ்பெற்ற சிந்தனைத் தொகுப்பில் பத்து சிறுகதைகளை எழுதியிருக்கிறார். அவற்றில் ஒன்றான 'பைத்தியக்காரனின் குறிப்புகள்' என்னும் சிறுகதையை கணேஷின் மொழிபெயர்ப்பில் தேசிய கலை இலக்கியப் பேரவை பிரசுரித்துள்ளது என்ற குறிப்புடன் இக்கதை இங்கு தரப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து உக்ரேனியக் கவிஞர், எழுத்தாளர், கலைஞர் தாரஸ் ஷெவ் சேன்கோ, வியட்னாமியக் கவிஞர் ஹோ சி மின், சோவியத் கவிஞர்கள் - அல்தாய் முகம்மதோவ், அனதோலி பார்ப்பரா, வியச்சிஸ்லாவ் குப்ரியானோவ், உக்ரேனியக் கவிஞர் இவன் ஃபிரான்கோ, சீன எழுத்தாளர்கள் - லாவ் ஷ ஜௌ சூலி, ஜியாங் ஷென்லி, சிங்கள எழுத்தாளர் நந்தன வீரசிங்க ஆகியோரின் கவிதை மொழிபெயர்ப்புகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில கதைகள் ஓரிரு பந்திகளுடன் நிறுத்தப்பட்டுள்ளதையும், வூ வான் பாவ் அவர்களின் 'மூங்கிற் பள்ளம்' (வியட்னாமியக் கதைகள்) முழுமையாகத் தரப்பட்டிருப்பதையும் நோக்கலாம். அத்துடன், பின்னிணைப்பாக கணேஷ் அவர்களின் 'சத்திய போதிமரம்', 'அதிர்ஷ்டசாலி' ஆகிய சிறுகதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், இந்த எழுத்தாளுமையின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த சில நூல்களின் முகப்பு அட்டைப் படங்களும் தகவலின் பொருட்டு தரப்பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. 'பல்கேரியக் கவிதைகள்', 'ஹோ சி மின்னின் சிறைக் குறிப்புகள்', 'பாரதி பக்தன் பார்பரா கவிதைகள்', 'குங்குமப்பூ' (கே.ஏ. அப்பாஸ்), 'லூ சுன் - போர்க்குரல்' உட்பட மொத்தமாக 19 நூல்களின் அட்டைப்படங்களும் இத்தொகுப்பில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தொகுப்பில் முற்போக்கு ஆளுமை கே. கணேஷ் குறித்து பி.பி. தேவராஜ் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக விபரமான குறிப்புகளைத் தந்துள்ளார். 'உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலருடைய நூல்கள் கணேஷினால் மொழிபெயர்க்கப்பட்டன. மொத்தமாக இதுவரை அவரின் இருபத்திரெண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. இது தவிர சிறுகதைகள், கவிதைகள் என இலக்கியப் படைப்புகள் பல அவரிடமிருந்து தோன்றின. இது அவருக்கு ஒரு சவாலாக இருந்தது மட்டுமல்லாமல், மிகுந்த ஆத்ம திருப்தியையும் ஏற்படுத்தியிருந்தது' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

பேராசிரியர் சபா. ஜெயராசா, கணேஷ் அவர்கள் பற்றி குறிப்பிடுகையில், 'மலையகத் தளத்திலிருந்து பெரும் உலக நெறியைத் தரிசித்தவர் கே. கணேஷ். மலையகத்தின் சமூக இருப்பில் இருந்து மேலெழுந்த எதிர்வினைகளை இலக்கிய வாழ்வில் ஏற்றிய எழுத்தாளராகவும் புலமையாளராகவும் விளங்கியவர். இலக்கிய ஆக்கங்களுக்கும் சமூக வினைப்பாடுகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளை ஆழ்ந்து நோக்கிய அவரது தரிசனம் முற்போக்கு என்ற சிந்தனை வீச்சுக்கு சென்றது. பன்முக ஆளுமையும் சமூக ஆளுமையும் ஒடுக்குமுறைகளை விடுவிப்பதற்கான புரட்சி ஆளுமையும் கொண்ட அகல்வரி வடிவமாக விளங்கியவர் கே. கணேஷ்' என விபரித்திருக்கிறார்.

பேராசிரியர் க. சிவத்தம்பி, கே. கணேஷ் குறித்து தெரிவித்த கருத்தும் இங்கு தரப்பட்டுள்ளது. 'நண்பர் கணேஷ் பற்றி சிந்திக்கின்றபோது, துரோணர் போன்ற ஒரு படிமம்தான் என் மனதில் சுற்றி வருகிறது. இன்று நம் ஈழத் தமிழ் இலக்கியத்தின் சிறப்பான சில அம்சங்கள் என வளர்த்து எடுத்துக்கொண்டுள்ள பண்புகளுக்கு நாம் அவரைத் தான் ரிஷிமூலம், நதிமூலமாகக் கொள்ள வேண்டும். கணேஷோடு பழகியவற்றையும் பேசியவற்றையும் ஒருங்குசேர நினைவுறுத்திக்கொள்ளும் போது அவருடைய ஆளுமை முகில்களுக்கு மேலே செல்லும் படிமம் போன்றது' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்நூல் முற்போக்கு இலக்கிய ஆளுமை கே. கணேஷ் அவர்களின் மேலான தகைமைகளை அறிய உதவுவதுடன் அன்னாரின் மொழிபெயர்ப்பு ஆற்றலையும் புரிந்து, வாசிக்கத் தூண்டுகிறது.



annaluxmi.rajadurai@thaiveedu.com

# இலங்கை வந்த நடேசரும் இந்தியா சென்ற கணேஷும் நூற்றாண்டை மீட்டும் ஒப்பீட்டுப் பார்வை

மல்லியப்புசந்தி திலகர்

ஒரு சமூகத்தில் கலை, இலக்கிய, அரசியல் செயற்பாட்டாளர்கள் அந்தந்தக் காலகட்ட நகர்வுகளுக்குப் பொறுப்பாகிறார்கள். அது தன்னார்வமாகவோ, தற்செயலானதாவோ, நிர்ப்பந்திக்கப்பட்டதாகவோ நிகழ்ந்து விடுகின்றது. சில நேரங்களில் அத்தகைய பொறுப்புகளைச் சுமந்தவர்களாக அல்லது சுமத்தப்பட்டவர்களாகத் தங்களது வாழ்வை அர்ப்பணித்த சிலர், பலரது வாழ்வுக்கு ஆதாரமாகத் திகழ்ந்துமுள்ளனர். அது அவர்கள் அறியா வகையில்கூட நிகழமுடியும். மலையகச் சமூகத்தில் கோ. நடேசய்யரின் பங்களிப்பைப் பலவகைகளில் அடையாளங் காணலாம்.

கோ. நடேசய்யர் மறைந்து 75 ஆண்டுகள் (1947) கடந்துவிட்ட நிலையில் அவரது சமூகப் பணிகளை இன்று மீளாய்வு செய்யும்போது பல்வேறு அற்புதமான தகவல்களை மீட்டுப்பார்க்க முடிகிறது. பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பெ. சரவணகுமாரால் தொகுக்கப்பட்டு அண்மையில் வெளிவந்த கோ. நடேசய்யரின் சில படைப்பாக்க முயற்சிகள் பற்றிய நூல் அத்தகைய ஆச்சரியத்தை நமக்குள் ஏற்படுத்துவதாக உள்ளது.

நூறு ஆண்டுகளுக்கு (1922) முன்பதாக கோ. நடேசய்யர் வழங்கிய நேர்காணல் ஒன்றில், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் நாட்கூலி, குடியிருப்பு பிரச்சினைகளைப் பற்றி பேசியிருக்கிறார் என்பது ஆச்சரியங்கொள்ளத்தக்கதாக உள்ளது. அதே விடயங்கள் இன்றும் இலங்கை மலையகச் சமூகத்தில் பேசுபொருளாகத் தொடர்கின்றன. மறுவடிவில் கூறினால், நூற்றாண்டு கடந்தும் இந்த பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன என்பதை நினைவூட்டுவதாகவும் அந்த நினைவே ஒரு துயரச் சுமையாகவும் பதிவாகிறது. அதற்குத் தீர்வு தேடும் எழுச்சியை, இயக்கத்தை, செயல்முனைப்பை இப்பதிவுகள் வலியுறுத்துகின்றன.

பெ. சரவணகுமார் மறுபதிப்பு செய்திருக்கும் கோ. நடேசய்யரின் இன்னுமொரு நூலான 'இலங்கை - இந்திய ஒப்பந்தம்' எனும் வியாக்கியான நூல் மலையக மக்கள் மத்தியில் இன்று உரையாடல் புள்ளிகளாக இருக்கும் அவர்களது தேசிய இன அடையாளம், அரசியல் அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்கள் குறித்தான மீள்பார்வையை வேண்டி நிற்கின்றன. அன்றைய காலகட்டத்தில் இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கு (அதிகாரிகளுக்கு) இடையே செய்து கொண்ட உத்தியோக பூர்வ ஒப்பந்தம்மீது தனது பார்வையைச் செலுத்தி, அத்தகைய ஒப்பந்தம் ஒரு மக்கள் சமூகத்தின் மீது ஏற்படுத்தப் போகும் தாக்கம் எவ்வாறானதாக இருக்கப்போகிறது? மக்கள் எத்தகைய தீர்மானம் எடுத்தால் நலமாகும் தவறின் எவ்வாறு பாதகமாகும்? எனும் ஒரு கணிப்பை நடேசய்யர் அந்த நூலில் வலியுறுத்தி உள்ளார்.

இதிலும் கூட வெளிப்படும் ஆச்சரியம் நடேசய்யரின் அந்தக் கால கட்ட அரசியல் புரிதலும் தூரநோக்கும் நூற்றாண்டு கடந்து நிதர்சனமாகி நிற்பதுதான். மலையக மக்கள் இலங்கை அடையாளத்தை ஏற்கவேண்டும் அல்லாதவிடத்து எதிர்காலத்தில் நாதியற்று நிற்க நேரிடும் எனும் கருத்துப்பட அவர் கூறிவைத்த எதிர்வு கூறல் இன்று யதார்த்தமாகியுள்ளது. இத்தகைய ஒப்பீட்டாய்வுகளை மீட்டிப் பார்க்க உதவுவன, கிடைப்பதற்கரிய நூல்களைத் தேடி அவற்றை மறுபதிப்பு செய்யும் முயற்சிகளே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அந்த வகையில் மறைந்த எழுத்தாளர் தலாத்துஓயா கே. கணேஷ் அவர்களின் நூற்றாண்டை ஒட்டியதாக 'கே. கணேஷ் நூற்றாண்டு நினைவுக் குழுவினர்' வெளியிட்டு இருக்கும் 'முற்போக்கு இலக்கிய ஆளுமை கே. கணேஷ் மொழிபெயர்ப்புகள்' எனும் நூல் இன்னுமோர் வரலாற்று மீட்பைச் செய்கிறது.

கோ. நடேசய்யர் இலங்கை வந்து இந்திய வம்சாவளி மலையக சமூக மட்டத்தில் எழுத்தாளராக - செயற்பாட்டாளராக இயங்கத் தொடங்கிய 1930-களில்; பதின்ம வயதுப் பள்ளி மாணவராக தலாத்துஓயா கே. கணேஷ் இந்தியா (தமிழ்நாடு) சென்று சேர்கிறார். இருவரினதும் வயது வேறுபாட்டில் நடேசய்யர் மூத்தவர் என்றபோதும் இருவரது செயற்பாட்டுக் கால கட்டம் ஒன்றாக இருந்துள்ளது. நடேசய்யர், தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் பிறந்து, தொழிலுக்காகப் புலம்பெயர்ந்து இலங்கை நோக்கிப் பயணித்துள்ளார். அது ஊடகவியல் தொழில் சார்ந்து இடம்பெற்ற ஒன்று. மாறாக இந்திய பூர்வீகம்

கொண்ட இலங்கை இந்திய வம்சாவளி குடும்பத்தில் பிறந்த கே. கணேஷ் தமிழ்நாடு நோக்கி நகர்கிறார். இவரது நோக்கம் உயர் கல்வியைத் தொடர்வது. ஆனால், அந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக சூழமைவுகள் இந்த இருவரையும் வேறுபட்ட ஆளுமைகளாக மாற்றி அமைக்கின்றன.

இந்திய சுதந்திர போராட்டம் உச்சம் பெற்றிருந்த அந்தக் காலத்தில் அதில் தீவிரமாக இயக்கியிருக்கக்கூடிய இந்திய ரான நடேசய்யர் இலங்கை வந்து, பூர்விக இந்திய வம்சாவளி மக்கள் சார்ந்து தீவிரமாகச் செய்யப்பட்டுள்ளமையும், இலங்கையில் தமது இந்திய வம்சாவளி மக்கள் சார்ந்து செயற்பட்டு இருக்கக்கூடிய கே. கணேஷ் இந்தியா சென்று, இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கங்களின் தாக்கத்தில் ஓர் இடது சாரி சமூகச் செயற்பாட்டாளராகவும் முற்போக்கு எழுத்தாளராகவும் மாறியமையும் சுவாரஷ்யமான ஒப்புமைகளாகின்றன. கே. கணேஷின் இந்த மாற்றத்தை, 'அவருக்குக் கிடைத்த அனுபவங்கள் அவரை இந்திய சுதந்திர இயக்கம் என்ற பெரும் பிரளயத்திலே மூழ்கி, அவரை அடியோடு மாற்றியது' எனக் குறிக்கின்றார் பி.பி. தேவராஜ். (கே. கணேஷ் மொழிபெயர்ப்புகள் - பக் 6).

நடேசய்யரின் நேர்காணல் ஒன்று எவ்வாறு இலங்கை மலையக மக்களின் அந்தக் கால நிலையை விளக்கியதோ, அதே போல இந்த நூலில் இடம்பெறும் கே. கணேஷின் நேர்காணல் ஒன்று (ஞானம் இதழில் வெளிவந்தது) கணேஷ் இந்தியாவில் வாழ்ந்த காலத்துச் சூழமைவுகளையும் அவரது செயற்பாடுகளையும் பதிவு செய்கின்றது. ஆனாலும் நடேசய்யரின் நேர்காணல் 1922-ம் ஆண்டு சுதேச மித்திரன் இதழில் 'சிலோன் தூது' என்ற தலைப்பின் கீழ் வெளியானது எனக்குறிப்பிட்டு இருப்பதுபோல, கணேஷுடனான 'ஞானம்' நேர்காணலை தி. ஞானசேகரன் எப்போது நிகழ்த்தினார் எனப் பதிவு செய்யவில்லை. அது தற்செயலாக தவறவிடப்பட்டு இருந்தாலும் ஒரு வரலாற்றுப் பதிவு என்ற வகையில் அந்தத் திகதி அவசியமானது. அதே போல் 1990- களில் வெளியான கணேஷுடனான 'நந்தலாலா' நேர்காணலும் இந்த நூலில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டியதொன்று.

தவிரவும் கே. கணேஷ் அவர்களின் மொழிபெயர்ப்பு கதைகளையும் கவிதைகளையும் அவரது சுய ஆக்கமான சிறுகதைகளையும் இந்த இதழ் தாங்கி வந்திருப்பது பெரும் பாராட்டுக்குரியது. இந்த முயற்சியூடாகத் தொகுப்பாசிரியர் கே. பொன்னுத்துரை ஒரு வரலாற்றுப் பணியை நிறைவு செய்துள்ளார் எனலாம். கே. கணேஷ் போன்ற மலையக ஆளுமைகள் மலையகத்துக்கு வெளியே சென்று உலக இலக்கிய செல்நெறியில் சேர்ந்து அவற்றை உள்ளே கொண்டு வந்தவர்கள் என்ற அடிப்படையில் ஈழத்து இலக்கியப் பரப்பில் பெரிதும் மதிக்கப்படுபவர்கள். இது குறித்து பேராசான் கா. சிவத்தம்பியின் பதிவு பின்வருமாறு அமைகிறது. 'ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் சிறப்பான சில அம்சங்கள் என வளர்த்து எடுத்துக் கொண்டுள்ள பண்பு ளுக்கு நாம் அவரைத் (கே. கணேஷை) தான் ரிஷிமூலம் நதி மூலமாகக் கொள்ள வேண்டும். கணேஷோடு பழகியவற்றையும் பேசியவற்றையும் ஒருங்குசேர நினைவுறுத்திக் கொள்ளும்பொழுது அவருடைய ஆளுமை முகில்களுக்கு மேலே செல்லும் படிமம் போன்றது'. (பக்:10) கா. சிவத்தம்பியின் இந்தப் புகழாரத்துக்குக் காரணமே இலங்கையில் முற்போக்கு இலக்கிய உரையாடல் புள்ளியின் தொடக்கம் கணேஷின் இந்திய ஊடாட்டத்தினின்றும் எழும்புவதனாலாகும்.

இது குறித்துப் பதிவிடும் பேராசிரியர் சபா. ஜெயராசா இவ்வாறு எழுதுகிறார்: 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலங்கையிலே உருவாக்கம் பெறுவதற்குரிய மாதிரிகை வடிவமாக கே. கணேஷ் அவர்கள் உருவாக்கிய அகில இலங்கை எழுத்தாளர் சங்கம் அமைந்தது. தெளிந்த சமூக நோக்கத்துடன் எழுத்தாக்கங்களை முன்னெடுக்க வேண்டிய லட்சியத்தை அவர் வலியுறுத்தினார் பேராசிரியர் சபா. ஜெயராசாவின் இந்தக் கூற்று அடங்கிய அணிந்துரைக்கு அவர் இட்டிருக்கும் தலைப்பு கவனத்தில் கொள்ள வேண்டியது. 'மலையகத் தளத்திலிருந்து பெரும் உலக நெறியைத் தரிசித்த கே. கணேஷ்' என்பதே அந்தத் தலைப்பாகும். இது குறித்து அவர் விபரித்துச் செல்கையில் 'மலையகத்திலுள்ள கண்டி, தலாத்து ஓயாவைச் சேர்ந்த கே. கணேஷ் ஒடுக்குமுறை விடுவிப்பின் உலக விசையோடு சங்கமமானார். அதன் தொடர்ச்சியாகவே அவருக்கு மொழிபெயர்ப்பு முயற்சிகள் மீது ஆழ்ந்த ஈடுபாடு ஏற்பட்டது. ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமை கொண்டிருந்த அவர் உலகின் புரட்சிகர முற்போக்கு இலக்கியங்களைச் செவ்விதான தமிழ்ப்பரப்புக்குள் கொண்டுவந்தார்' கே. கணேஷ் குறித்தான சபா. ஜெரயாசாவின் இந்த மதிப்பீடு இளம் மலையக இலக்கியச் செயற்பாட்டாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டியதும் புரிந்து கொள்ள வேண்டியதும் ஆகும்.

கணேஷ் அவர்களின் மொழி பெயர்ப்பும் சக்தி. அ. பாலஜயா அவர்களின் மொழி பெயர்ப்பும் ஆக்க இலக்கியத் தளத்தில் ஊறி நின்றமையால் இவ்விருவரும் இலக்கியக் கனதியை தமது மொழிபெயர்ப்புகளில் கலைச் சுவையோடு பராமரித்தனர் என்றும் சபா. ஜெயராசா குறிப்பிடுவது அந்நாளைய மலையக எழுத்தாளர்களின் தமிழ், ஆங்கில மொழி ஆளுமையை மாத்திரமல்லாது இலக்கியச் செழுமையையும் எண்ணிப் பார்க்க வைக்கிறது. இந்த வரிசையில் சி.வி. வேலுப்பிள்ளை, பொன். கிருஷ்ணசாமி போன்றவர்களையும் இணைத்து நோக்க முடியும். மொழிபெயர்ப்புக்காக கே. கணேஷ் தெரிவுசெய்துகொண்ட அல்லது அவருக்குக் கிடைக்கப் பெற்ற ஆக்கங்களையும் அதன் படைப்பாளிகளின் வரிசையையும் பார்க்கும்போது ஆச்சரியம் மேலோங்குகிறது. இங்கிலாந்தில் வாழ்ந்த பிரபல இந்திய எழுத்தாளர் முலக்ராஜ் ஆனந்த், கே.ஏ. அப்பாஸ், லூசுன், தாராஸ் ஷெவசென்கோ, ஹோசிமின், அல்தாய் முகம்மதோவ், சாந்தோர் பெட்டவ்ஃபி, க்ரிஸடோ பொட்டேவ், அனதோலி பார்ப்பதா, இவான் ஃபிராங்கோ, ஷாங் சியாங் லியாங், வியச்சிஸலாவ் சுபரியானோவ், லாவ்ஷ், ஜெளசூலி, வூ வான் பாவ், ஜியாங் ஷென்லி, நந்தன வீரசிங்க என பல முக்கிய எழுத்தாளுமைகளின் படைப்புகளையே அவர் மொழி பெயர்ப்புச் செய்துள்ளார்.

இதில் சிங்களத்தில் எழுதப்பட்ட ஒரு படைப்பை கே. கணேஷ் தமிழில் தந்திருப்பதான ஒரு பதிவும் உள்ளது. அது நேரடியாகச் சிங்களத்தில் இருந்து தமிழுக்கு வந்ததா அல்

லது சிங்களத்தில் இருந்து ஆங்கிலத்துக்குச் சென்று பின்னர் கணேஷ் தமிழாக்கம் செய்தாரா என்பது பற்றிய தெளிவு இல்லை. இல்லாதவிடத்து கே. கணேஷ் சிங்கள - தமிழ் மொழி பெயர்ப்பும் செய்துள்ளாரா, அவருக்கு ஆங்கிலம்



போல சிங்கள மொழியிலும் பரிச்சயம் இருந்ததா எனும் கேள்வி இங்கே எழுகின்றது. முல்க்ராஜ் ஆன்ந்த் உடனான தொடர்புகளின்போது அவரது இரண்டு நூல்களைத் தமிழாக்கம் செய்யும் வாய்ப்பு கிடைத்து என்றும் Untouchables எனும் நாவலை 'தீண்டாதான்' என கே. கணேஷ் மொழிபெயர்க்க, அவரது சகாவான 'தேசாபிமானி' ராமநாதனுக்கு Two leaves and a bud (ஈரிலையும் ஒரு தளிரும்) எனும் நாவலை மொழி பெயர்ப்பினைச் செய்ய வழங்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. untouchables எப்படி ஒரு சேரிப்புற தோட்டி இளைஞனின் வாழ்வியல் பற்றியதோ அது போல Two leaves and a bud அஸ்ஸாம் தேயிலைத் தோட்ட மக்களின் வாழ்வியல் பற்றியது. சிலவேளை இந்தியத் தேயிலைத் தோட்ட மக்களின் வாழ்வியலைக் கூறும் முல்க்ராஜ் ஆனந்தின் நாவலை கே. கணேஷ் மொழி பெயர்த்து இருந்தால் கே. கணேஷிடம் இருந்து மலையக மண்வாசனை வீசும் ஓர் இலக்கியப் படைப்பையும் வாசித்திருக்க முடியும்.

ஏனெனில் மலையகத்தவரான கே. கணேஷ் 'மலையக இலக்கியம்' என வரையறுக்கப்படக்கூடிய இலக்கிய பரப்பில் நின்று எழுதியவரல்ல. எனும் அவரது ஒரு சில கவிதைகள் தேயிலைத்தோட்ட மக்களின் வாழ்வியலைக் குறிப்பதே. ஆனாலும் பொது இலக்கிய வெளியில் தாகூரின் தாக்கத்தில் ஆங்கிலத்தில் எழுதி, பின்னர் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதும் மலையக மண்வாசனை எழுத்தாளராக மாறிய சி.வி. வேலுப்பிள்ளையிடம் எழுந்த மாற்றத்தை கே. கணேஷிடம் காணக்கிடைக்கவில்லை. அவர் முற்போக்கு எழுத்தாளராக உலக மாந்தரின் விடுதலையை வலியுறுத்தும் உயர் இலக்கியங்களை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்குக் கொண்டுவரும் மொழிபெயர்ப்புப் படைப்பாளியாகவே தன்னை முன்னிறுத்தி உள்ளார். இந்தத் தொகுப்பு நூலிலும் அதன் பிரதிபலிப்பைப் பார்க்கலாம். நூலில் இருபதுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவரது சுய சிறுகதைகளாக, சத்திய போதிமரம், அதிஷ்ட்டசாலி ஆகிய இரண்டு சிறுகதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை இரண்டுமே கூட மலையகத் தளம் சார்ந்தன அல்ல. ஆக, சபா. ஜெயராசா கூறுவதுபோல மலையகத் தளத்தில் இருந்து உலகைத் தரிசித்த இலக்கிய ஆளுமையாக கே. கணேஷ் அவர்களைப் பதிவு செய்வது பொருத்தமானதே. ஆனாலும், கே. கணேசின் இந்தப் பண்பை இந்திய வம்சாவளி அடையாளமாகக் காட்ட முயல்வதும் அல்லது பெருந்தோட்டங்களைச் சார்ந்த தொழிலாளர் வர்க்கப் பரம்பரையினர்தான் மலையகம் எனும் கருத்தியலைக் கொண்டவர்கள் போலவும் அவர்கள் அல்லாத வேறு தொழில் நோக்கங்களுக்காக இந்தியாவில் இருந்து இலங்கை வந்தவர்களை மலையக அடையாளத்துக்குள் கொண்டு வருவதைத் தவிர்ப்பது போன்ற பாணியிலான கே.கணேஷ் குறித்து பி.பி. தேவராஜ் எழுதியுள்ள அறிமுகக் குறிப்பு நோக்கில் இருந்து இடைவிலகிச் செல்வதான ஒரு படிமத்தையே காட்டுகிறது.

கே. கணேஷ் குறித்த அறிமுகத்துக்காக எழுதப்பட்ட குறிப்பில் மலையகத் தமிழர் - இந்தியத் தமிழர் நியாயப்படுத்தல் அதிக பங்கை எடுத்துக் கொள்ள, கணேஷ் குறித்தான பதிவுகள் குறைந்தது போன்ற ஒரு தோற்றப்பாட்டை பி.பி. தேவராஜின் தமிழ் மொழிக் குறிப்பு தருகிறது. ஆனாலும் அதனைத் தொடர்ந்து வரும் ஆங்கிலக் குறிப்பு அதனைச் சரி செய்துவிடுகிறது. எது எவ்வாறெனினும் கே. கணேஷிற்கான மலையக அடையாளத்துக்கு புதிய வியாக்கியானங்கள் அவசியமற்றவை. கே. கணேஷ் இந்தியாவில் படிக்கப்போய் இந்திய சுதந்திர போராட்ட பிரளயத்தில் கலந்து முற்போக்கு எழுத்தாளராக இலங்கை வந்து இடதுசாரியாக இயங்கிய போதும் அவரை மலையகம் சார்ந்தவராக உள்வாங்கிக் கொள்வதில் தயக்கம் காட்டத் தேவையில்லை. அல்லது இலங்கையில் 'இந்திய வம்சாவளி தமிழ் இலக்கியம்' என்ற இல்லாத ஒன்றை அடையாளம் காணும் எத்தனிப்பும் அவசியமற்றது. இந்தப் புள்ளியில்தான் இலங்கையில் கோ. நடேசய்யரின் வகிபாகமும் அவர் முன்னெடுத்த மலையகத் தேசிய கருத்தியலும் இங்கு ஒப்பீட்டாய்வுக்குரிய நியமங்களாகிறது.

இந்திய பூர்விக மக்கள் இலங்கை வந்து நூறாண்டுகள் வாழ்ந்த பின்னரும் இந்தியாவை தமது தேசமாகக் கொள்வதா? அல்லது இலங்கையைத் தமது தேசமாகக் கொள்வதா? எனும் விவாதப் புள்ளியைத் தொடங்கி வைத்து அதற்குப் பதிலாக இந்தியாவில் இருந்து இலங்கை வந்து வாழும் இந்தியர்கள் தம்மை இலங்கையர்களாக வரித்துக் கொள்

ளல் வேண்டும் எனும் வலியுறுத்தலை பிறப்பிலேயே இந்திய ரான கோ. நடேசய்யர் தொடர்ச்சியாக முன்வைத்துள்ளார். அவர் எப்போதும் மலையகம் எனும் நேரடி சொற்பதத்தால் அதனை வலியுறுத்தவில்லை. மாறாக இலங்கையைத் தேச மாக ஏற்றுக் கொள்வதே இந்திய வம்சாவளியினரின் எதிர்கா லத்துக்குச் சிறப்பாக அமையும் என்பதே அவரது வலியுறுத்த லாக அமைந்தது. அதுவே அடுத்த தலைமுறையினரால் மலையகத் தேசியம் என்பதாக இலக்கியம், கலை, கலாசார, பண்பாட்டு கூறுகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்குக் கே. கணேஷ் போன்ற ஆளுமைகளின் செயற்பாட் டுத் தளங்களும் நிச்சயமாக வளம் சேர்த்து இருக்கும்.

'மலையகத்தின் சமூக இருப்பில் இருந்து மேலெழுந்த எதிர்வி னைகள் இலக்கிய வாழ்வில் ஏற்றிய எழுத்தாளராகவும் புல மையாளராகவும் விளங்கியவர் கே. கணேஷ். இலக்கிய ஆக் கங்களுக்கும் சமூக வினைப்பாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை ஆழ்ந்து நோக்கிய அவரது தரிசனம் முற் போக்கு என்ற சிந்தனை வீச்சுக்குள் சென்றது' என பேராசிரி யர் சபா. ஜெயராஜா முன்வைக்கும் கே. கணேஷ் குறித்த மதிப்பீடு மிகுந்த கவனத்தைப் பெற வேண்டியது.

இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்த கோ. நடேசய்யர் இலங்கை நோக்கி வந்து அவரது எழுத்துகள் செயற்பாடுகள் ஊடாக மலையகத் தேசியத்துக்கான அடித்தளத்தை இட, அதே காலப்பகுதியில் இலங்கை மலையகத்தில் பிறந்து இந் தியா சென்ற கே. கணேஷ் ஒரு முற்போக்கு சமூக, கலை, இலக்கியப் பார்வையுடன் இலங்கை வருகிறார். அதே முற் போக்கு சமூக, கலை, இலக்கிய, பார்வையுடன் இயங்கியதா லேயே நடேசய்யரால் ஒடுக்கப்படும் தேசத்தின் பிரதிநிதியாக இயங்க முடிந்திருக்கிறது.

நடேசய்யர் தொழிலாளர் வர்க்கத் தளத்தில் நின்று தனது செயற்பாட்டை விஸ்தரிக்க, கே. கணேஷ் அவர்கள் முற் போக்கு தளத்தில் நின்று இடதுசாரி அரசியல் செயற்பாடுக ளால் முன்னகர்ந்திருக்கிறார். இலங்கையில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த தமிழக இடதுசாரி முன்னோடியான ப. ஜீவானந்தம் அவர்களை இந்தியாவுக்கு படகு மூலம் அழைத் துச் சென்றவர் கே. கணேஷ் என்கின்ற தகவலில் இருந்தே அவரது சமூக இயக்கச் செயற்பாடுகளின் வீரியத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதனைத் தனது நேர்காணலில் திறம்பட வெளியே கொண்டு வந்திருக்கும் தி. ஞானசேகரன் பாராட்டுக்குரியவராகிறார். இந்தத் தொகுப்பின் மிக முக்கிய மான அம்சமாக அந்த நேர்காணல் அமைகிறது.

மலையகப் பண்பாட்டு இயக்கத்துக்குள் தமது செல்வாக்கி னைச் செலுத்திச் சென்றுள்ள, இந்தியாவில் இருந்து இலங்கை வந்த நடேசர் (கோ. நடேசய்யர் ) இலங்கையில் இருந்து இந்தியா சென்ற கணேசர் (கே. கணேஷ்) ஆகிய இரு ஆளுமைகள் குறித்த மீள்பார்வையாக, மலையக நிலையில் அண்மைக்காலத்தில் (2024) வெளிவந்த தொகுப்புகள், பதிப் புகள் என்ற வகையில் கோ. நடேசய்யர் குறித்தும் கே. கணேஷ் குறித்ததுமான நூல்கள் ஒரு நூற்றாண்டு மீட்பைச் செய்திருக்கின்றன எனலாம். இவை இரண்டும் இருபெரும் மலையக ஆளுமைகளின் செயற்பாட்டுப் பக்கங்களை இளைய தலைமுறையினருக்கு வழங்குவனவாக அமைந்துள் ளன. அதே போல படைப்புகளின் மறுபதிப்பாக சரவணன் - பிரமிளா இணைந்து பதிப்பித்த ஆபிரஹாம் ஜோசப்பின்



கோப்பிக் கிருஷிக் கும்மி, மு. நித்தியானந்தன் மறுபதிப்பு செய்து இருக்கும் சி.வி. வேலுப்பிள்ளையின் 'விஸ்மாஜினி' ஆகிய படைப்புகளும் இந்த நூற்றாண்டு மீட்பைச் செய்வ னவே. (அவை குறித்து தனியான பார்வையும் பதிவும் அவசிய மானது).

மலையகம் 200 எனும் மைல்கல் நிகழ்வுகளின் பகுதியாக இத்தகைய இலக்கியங்களை, அவற்றைப் படைத்த ஆளு மைகளை மீள நினைவுகொள்ள வழிசமைப்பது காலப்பெறு மதி மிக்க பணியாகும். கலாநிதி பெருமாள் சரவணகுமாரின் அர்ப்பணிப்பையும், கே. கணேஷ் அவர்களின் குடும்பத்தின ருடன் இணைந்து ஊடகவியலாளர் கே. பொன்னுத்துரையின் அர்ப்பணிப்பையும் மலையக இலக்கிய உலகும் ஆய்வுச் சமூகமும் ஆழ்ந்த நன்றியுடன் போற்ற வேண்டியுள்ளது.



thilagar@thaiveedu.com



# ஆதிலட்சுமி கப்பலும் இன்றைய இலங்கையும்

– கே.ஜி. பாஸ்கரன்

தோழர் ஜெயசிங் வங்கிப் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர். அவர் நீண்ட காலமாக திருநெல்வேலியில் குடியிருந்து வருகிறார். அவரை எனக்கு பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தெரியும். மிக அமைதியான சுபாவம் கொண்டவர். அந்த அமைதிக்குப் பின்பு ஆழமான சோகமும் உண்டு என்பதைப் பின்னர் அறிந்தேன்.

அவர் பிறந்து வளர்ந்தது, படித்தது எல்லாம் இலங்கையில். இலங்கையில் நடந்து வரும் பாரிய மாற்றங்கள் குறித்து அவ




ரிடம் விவாதிப்பது உண்டு. ஏராளமான விடயங்களை அவர் என்னோடும், சிறு கூட்டங்களிலும் விரிவாக எடுத்துரைத்ததும் உண்டு. இதுவரை அவர் சொல்லாத கதைகளையும் இலங்கையில் நடந்து வரும் மாற்றங்களையும் விரிவாகச் சொல்லும் வகையில் தனது 'மீண்டும் தேயிலை வாசம்' எனும் நூலை தமிழ் வாசகர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். அவர் 2024-ம் ஆண்டு, மே மாத வாக்கில், பதினைந்து நாட்கள் இலங்கையைச் சுற்றி வந்த பயண அனுபவத்தை தனது நூலில் பதிவு செய்துள்ளார். அதனை வெறும் பயண நூலாக மட்டும் சுருக்கி விட முடியாது. அது ஒரு அரசியல் - இலக்கிய பயண நூல் என்றுதான் சொல்ல வேண்டும். ஏராளமான தரவுகள், உணர்வுமிக்க நிகழ்வுகள், ஆதிக் கதைகள், வரலாற்றின் சாட்சியங்களாகப் பல மனிதர்கள் என்று உணர்ச்சி ததும்பும் சித்திரமாக வடித்து எடுத்திருக்கிறார் தோழர் ஜெய-சிங். நாமும் அவர் கைபிடித்து இலங்கையைச் சுற்றி வந்த அனுபவத்தை தந்து விடுகிறது 'மீண்டும் தேயிலை வாசம்'. இலங்கையைப் புரிந்து கொள்ள வேண்டும் எனில் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல் என்று நான் இதைச் சொல்வேன்.

தோழர் ஜெயசிங் மலையகத்தில் பிறந்து வறுமையான பின்னணியில் கல்வி பயின்று, பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராக பணியாற்றினார். மலையக மக்கள் இந்திய வம்சாவளியினர். இலங்கை பிரிட்டிஷாரின் ஆளுகையின் கீழ் இருந்த போது, தேயிலைத் தோட்டங்களை உருவாக்க இந்தியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள். டாக்டர் பி.எச். டேனியல் எழுதிய 'எரியும் பனிக்காடு' சிலருக்கு நினைவுக்கு வரக்கூடும். இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அவ்வாறு இலங்கை சென்ற இந்தியர்கள், மலையகத் தமிழர்கள். பல தலைமுறைகளாக அங்கேயே வாழ்பவர்கள். தோழர் ஜெயசிங் மலையகத் தோட்டப் பாடசாலை ஆசிரியரின் மகனாகப் பிறந்தவர்.

இந்தியாவில் இருந்து இலங்கை செல்லும் போது கடலில் மாண்டவர்கள் பல ஆயிரம் பேர். அப்படி இந்தியாவில் இருந்து இலங்கை சென்ற ஆதிலட்சுமி கப்பல் 1864-ம் ஆண்டு கடலில் மூழ்கிய வரலாறும் உண்டு. எங்கோ கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலை அறிந்த நாம், இதோ நமக்கு மிக அருகில் கடலில் மூழ்கிய ஆதிலட்சுமி கப்பலையும் ஜல சமாதியான மக்களையும் அறிந்திருக்கவில்லை என்பது ஒரு வித அரசியல் தான். மலையகம் சென்ற மக்கள் காடுகளைச் செம்மை செய்து தேயிலைத் தோட்டங்களாக உருவாக்கினார்கள். தமது உரிமைக்காகத் தொழிற்சங்கங்களில் இணைந்தார்கள். இடதுசாரி அரசியல் மலையகத்தில் செல்வாக்குப் பெற்ற இயக்கமாகும். அறுபதுகளிலும் எழுபதுகளிலும் இலங்கையில் இடதுசாரி இயக்கங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அதன் நீட்சியாகவே சமீபத்திய ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அவதானிக்க முடிகிறது.

கூலிகள் மற்றும் இடதுசாரி செல்வாக்கு ஆகியவற்றின் காரணமாக மலையக மக்கள் சந்தித்த துயரங்கள் ஏராளம். அவர்களது பிரஜாவுரிமை கூடப் பறிக்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக சாஸ்திரி-சிறிமா ஒப்பந்தம் ஏற்பட்டு, மலையகத் தமிழர்களை இந்தியா திரும்ப அழைத்துக் கொள்வது என முடிவானது. பல ஆயிரம் மலையகத் தமிழர்கள் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர். 1977-ல் தான் பிறந்து, சொந்த நாடெனக் கருதி வளர்ந்த மண்ணில் இருந்து, கண்ணீர் மல்க, அடுத்தது என்ன என்பது குறித்து எந்தத் தெளிவான பாதையும் கண்ணுக்குத் தெரியாத நிலையில் தலைமன்னாரில் இருந்து கப்பலேறி இந்தியா வந்தார் தோழர் ஜெயசிங். 47 ஆண்டுகளுக்குப் பின் அதே தலைமன்னார் சென்று, எதுவும் எனக்குத் தெரியாது என அலைபாயும் கடலில் நின்று இலங்கையைத் திரும்பிப் பார்க்கிறார். மன்னிப்புக் கோருவது போல கடலலை அவரது கால்களைத் தழுவுகிறது. அது தான் 'மீண்டும் தேயிலை வாசம்'.

அத்தியாயம் இரண்டும் மூன்றும் நமக்கு இலங்கையை அறிமுகம் செய்கிறது.

இராமேஸ்வரத்தில் இருந்து 25 மைல் தொலைவு. அந்தக் காலத்தில் படகுகளில் தமிழகம் வந்து புதிய திரைப்படங்களைப் பார்த்துச் செல்வது இலங்கைத் தமிழர்களின் வழக்கமாம்.

ஒன்பது மாகாணங்கள், 25 மாவட்டங்கள் உள்ளடங்கியது இலங்கை. 74.9% சிங்களவர், 11.1% இலங்கைத் தமிழர், 9.3% இஸ்லாமியர்கள், 4.1% மலையகத் தமிழர். 12 சதவீதமுள்ள இந்து மக்கள் மத்தியில் ஆர்.எஸ்.எஸ் மிக வேகமாக ஊடுருவி வருவதை எச்சரிக்கை செய்கிறது இந்த நூல்.

இலங்கைத் தமிழர் மற்றும் மலையகத் தமிழர் இடையே உள்ள முக்கிய வேறுபாடு, சாதிய ஏற்றத்தாழ்வு என்கிறார் நூலாசிரியர். மலையகத் தமிழர் மற்றும் சிங்கள மக்களிடையே திருமண ஏற்பாடுகள் ஓரளவு சகஜமாக நடந்து வருகிறது. இது வடக்குப் பகுதியில் மிகக் குறைவு. வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மருமகள்கள் சிங்களவர். ராஜபக்சேயினுடைய தங்கையின் கணவர் தமிழர். இப்படி சில உதாரணங்கள் இருந்தாலும் தமிழகத்தைப் போல் ஆணவக் கொலைகள் இல்லை என்பது ஆறுதலான விடயம் தான். ஆசிரியர் இந்நூலை சிங்கள சமூகத்தவரான பெரேராவுக்குத் தான் சமர்ப்பணம் செய்துள்ளார். அவர் நூலாசிரியருடைய சகோதரியின் கணவர். சகலத்தையும் சாதிக்க வல்லது காதல்.

இலங்கையின் சமீபத்திய அரசியல் சமூக-பொருளாதார சூழல் குறித்து ஏராளமான விடயங்கள் நூலில் கொட்டிக் கிடக்கிறது. கொழும்பு நகரில் இருந்து வவுனியா நகருக்கும் அங்கிருந்து யாழ்ப்பாணம், அங்கிருந்து தலைமன்னார், பின்னர் மட்டக்களப்பு, அதன் பின் முல்லைத்தீவு, பிறகு மலையக நகரங்கள், கடைசியில் தலப்பாக்கட்டி பிரியாணிக் கடைக் கிளை இருக்கும் கொழும்பு நகரம் என அவர் சுற்றித் திரிந்த நகரங்கள், அந்நகரங்களில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள், அங்கு வாழும் மக்கள், அம்மக்களின் பிரச்சினைகள் என்பவற்றினை நாமும் இந்நூலின் ஊடாக அனுபவித்து அவதானிக்க முடிகிறது.

மலையக மக்கள் தற்போது வடக்குப் பகுதியிலும் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு பகுதியாகச் சென்று அவர்களைச் சந்தித்த சம்பவம், அவர்களது வாழ்நிலை என விரிகிறது இந்நூல். ஒவ்வொரு ஊரில் இருந்தும் மற்றொரு ஊருக்குப் பயணப்படுகிற போது, அதன் திசை, தூரம், அதன் வரலாறு என நூல் முழுவதும் தகவல்கள் கொட்டிக் கிடக்கிறது. முல்லைத்தீவு நகருக்கு ஒரு நாள் பயணம். யுத்தம் நடந்த தடமே இப்போது இல்லை. யுத்த களத்தில் இறந்த மாவீரர்களின் குடும்பங்கள், இலங்கை சந்தித்த பொருளாதார நெருக்கடி, சிங்கள - தமிழ் மக்களின் இன மறுப்புத் திருமணங்கள் என பல அம்சங்களை நூலில் காண முடிகிறது.

உடன்குடி கருப்பட்டி போல கித்துள் கருப்பட்டி நமக்கு அறிமுகமாகிறது. இடியப்பம், அப்பம், பிட்டு என நமக்குப் பரிச்சயமான உணவு தான் அங்கும். ரொட்டி, பிரட், சொதி, பலாக் குழம்பு அங்கு பிரசித்தி என்கிறார். சொதிக் குழம்பு நெல்லையில் மிகப் பிரபலம். இலங்கை உணவு தமிழக, கேரள உணவுகளைப் போன்று இருப்பதாக சொல்லலாம்.

கொழும்பு நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்கம், கொழும்பு மக்களின் பழமை வாய்ந்த பண்பாட்டு அமைப்பு. இது 1942-ல் ஆரம்பிக்கப்பட்டதாம். தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, கலைகள் போன்றவற்றின் வளர்ச்சி சார்ந்து இத்தமிழ்ச் சங்கம் இயங்கி வருகிறது. அங்கு ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் அடங்கிய நூலகம் இருப்பதையும் சுட்டுகிறார் நூலாசிரியர். இது போல நிறைய தகவல்கள் விரவிக் கிடக்கின்றன இந்நூலில். அத்தோடு திலகர், வாமதேவம், சடகோபன் என பல ஆளுமைகளையும் அறிமுகம் செய்கிறார்.

சமீபத்திய தேர்தல் முடிவுகள் இலங்கை மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை உருவாக்கி உள்ளது எனலாம். 'அனைவரையும் உள்ளடக்கிய இலங்கை' என அதிபர் அனுர குமார திசாநாயக்க அறிவித்து இருப்பது நல்ல அரசியலுக்கு வெளிச்சம் பாய்ச்சுவதாக உள்ளது. யாழ்ப்பாணப் பகுதியைச் சார்ந்த சந்திரசேகரன் கடற்தொழில் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருக்கிறார். தேசிய மக்கள் சக்திக் கூட்டணி வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு என அனைத்து பகுதிகளிலும் வாக்குகளைப் பெற்றிருக்கிறது. புதியதொரு வரலாற்று திசைவழியில் இலங்கை மக்கள் அடியெடுத்து வைத்திருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்போரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இலங்கையில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்களை பின் இணைப்பாக இணைத்துள்ளமை சிறப்பு. கதிர்காமம் முருகன் கோவில், கண்டி தலதா மாளிகை, மடு மாதா ஆலயம், அல் அப்ரார் பள்ளிவாசல், திருகோணமலை கோணேஸ்வரர் கோவில், இராவணன் வெட்டு, நுவரெலியா, யாழ்ப்பாணம், மிகிந்தலை என இன்னும் நீள்கிறது பட்டியல். வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்கள், இலங்கையின் பன்முகத் தன்மை மற்றும் ஒற்றுமையைப் பறைசாற்றுகிறது. அந்த அழகிய நாட்டில் அமைதியும், வளர்ச்சியும் ஒருசேர நீடிக்க வேண்டும் என்று அனைவரும் விரும்புகிறோம்.



baskaran.kg@thaiveedu.com

# ஈழத்தின் சிறார் இலக்கியம் குறித்த மதிப்பீட்டில் கவிஞர் இக்பால் அலியின் வகிபாகம்: ஓர் ஆய்வு!

– பீ.எம். ஜமாஹிர்



ஈழத்தின் சிறார் இலக்கியப் பரப்பில் கவிஞர் இக்பால் அலியின் வகிபாகத்தைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 'இக்பால் அலியின் சிறார் இலக்கியத்தின் பாடுபொருள் மற்றும் எடுத்துரைப்பு பிற சிறார் இலக்கியங்களிலிருந்து வேறுபடுகிறது.' என்ற கருதுகோளினைக் கொண்டு இக் கட்டுரை அமைகிறது. இக்கட்டுரைக்கு இதுவரை வெளிவந்துள்ள இக்பால் அலியின் சிறார் பாடல்கள் கொண்ட நூல்களை முதன்மைத் தரவுகளாகவும் இப்பாடல் நூல்களுடன் தொடர்புடைய திறனாய்வுகள், கட்டுரைகள் மற்றும் ஆய்வேடுகள் துணைத் தரவுகளாகவும் அமைகின்றன. கட்டுரையானது விபரிப்பு மற்றும் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையியல்களைப் பின்பற்றியும் விளக்கப்படுகிறது. ஈழத்துச் சிறார் இலக்கியத்தின் வழி மனித குலத்தின் மேம்பாடுதான் இக்பால் அலியின் வலியுறுத்தல் என்பதே இக்கட்டுரையின் முடிவாகும்.

பிரதான சொற்கள்: சிறார் இலக்கியம், அன்பு பெருக, மூன்று சக்கரக்காரன், குரங்குத் தம்பி, செல்லக் குட்டி

## அறிமுகம்:

இக்பால் அலி 1984-ஆம் ஆண்டுமுதல் இலக்கியப் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபட்டு வரும் ஒரு கவிஞர், எழுத்தாளர், ஊடகவியலாளர், மானுட சமத்துவச் சிந்தனையை கலை இலக்கியங்களின் வழி முன்னெடுத்து வருபவர். இவர் இலங்கை சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகவும் தொழில் நிமித்தம் பறகஹதெனிய மற்றும் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்டவர். இலக்கிய உலகிற்கு இக்பால் அலியை அறிமுகம் செய்தவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரைமனோகரன் ஆவார். குறிப்பாக, பேராசிரியர் துரைமனோகரன் எழுதிய 'இலங்கையின் இலக்கிய வளர்ச்சி' என்ற நூலின் ஊடாகவும் இக்பால் அலி வெளிக்கொணர்ந்த பல நூல்களுக்கு பேராசிரியர் துரைமனோகரன் எழுதிய அணிந்துரைகள் ஊடாகவும் இதனை அறிந்து கொள்ளமுடிகிறது.

சமகாலத்தில் சிறார் குறித்து அதிகம் பேசுகின்ற துறைகளுள் சிறார் இலக்கியத்திற்கும் தனியிடம் உண்டு. இத்தகைய சிறார் இலக்கியம் குறித்துப் பேசுகின்ற கவிஞர் இக்பால் அலியின் பாடல்கள் பெரும்பாலும் சிறார்கள் தங்களுடைய சூழலில் அனுபவிக்கின்ற சமூகம் சார்ந்த பிரச்சினைகளை மையப்படுத்தியதாகவும், அவர்களின் எதிர்காலச் செயலாக்க மேம்பாட்டை நோக்கியதாகவும் இன ஒருமைப்பாட்டை மேம்படுத்தக்கூடியதாகவும் தார்மீக விழுமியங்கள் மற்றும் அறிவியல் சார்ந்ததாகவும் அமைந்துள்ளன. இவரின் 'நான் மூன்று சக்கரக்காரன்' (2002), 'அன்பு பெருக' (2002), 'குரங்குத் தம்பி' (2003) ஆகிய சிறுவர் பாடல் தொகுதிகள் மற்றும் 'நல்ல தொரு பயணம்' (2002) என்ற சிறுவர் கதை தொகுதி ஆகிய நான்கு நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது சிறார்களுக்கான ஐந்தாவது நூலாக சென்னை தமிழ்த் தொண்டன் பைந்தமிழ்ச் சங்கம் உலகளாவிய ரீதியில் 100 கவிஞர்களிடமிருந்து தலா 50 மழலைப் பாடலைகளைப் பெற்று ஐந்தாயிரம் மழலைப் பாடல்கள் கொண்ட தொகுப்பு நூலை 2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிட்டது. இது ஒரு இரட்டை நோபல் உலக சாதனைத் தொகுதி ஆகும். இதில் 'செல்லக் குட்டி' என்ற தலைப்பின் கீழ் இக்பால் அலியினுடைய 50 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது படைப்புக்கள் பற்றி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை மாணவிகளான எம்.எப்.எப். பர்ஹத் 'இக்பால் அலியின் கவிதைகள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பிலும், பாத்திமா அஸ்மா 'இக்பால் அலியின் சிறுவர் இலக்கியப் பணிகள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பிலும் ஆய்வேடுகள் சமர்ப்பித்து பட்டம் பெற்றுள்ளனர் என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

## சிறார் இலக்கியம்:

இலக்கியம் என்பது காலம் காட்டும் கண்ணாடி என்பர். அது நம் வாழ்க்கையின் நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் குறிக்கோளினை உடையது. ஒவ்வொரு காலத்திலும் ஏதாவது ஓர் உணர்வு மேலோங்கி நிற்கும். இதனைக் 'கால உணர்வு' என்பர். இத்தகைய இலக்கியத் தன்மை கொண்ட, சிறார்களுக்குப் பயன்படும் வாழ்வியல் கருத்துக்களை இக்பால் அலி சித்திரித்துள்ளார். அதிலும் சிறாரின் இரசனை, ஆர்வம், நற்பண்பு மற்றும் அறிகைசார் அம்சங்களைத் தூண்டும் கருத்துக்களைக் கொண்ட பெருமளவிலான பாடல்களையே தனது சிறுவர் பாடல்களில் பல்சுவையுடன் படைத்துள்ளார். அதிலும் குறிப்பாக, முன்பள்ளிச் சிறார்களுக்கும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கும் மிகப் பொருத்தமான பாடல்களை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறார்களுக்கு புலக்காட்சி ஒழுங்கமைப்பு ஏற்படுவதற்கும் மானுடவியல் மேம்பாட்டை முன்னெடுப்பதற்கும் பயன்படும் பாடல்கள் இவர்

எழுதிய நூல்களில் காணப்படுகின்றன. இவர் ஆரம்ப காலத்தில் எழுதிய சிறுவர் பாடல்களில் சில இசையமைக்கப்பட்டு கல்வியற் கல்லூரிகளிலும் பொது வெளிகளிலும் பாடப்பட்டு வருகின்றன. இதனால் இக்பால் அலி சிறார் இலக்கியத்தில் மேற்கோள் ஆனார். இவரது படைப்புப் புதுமை குறித்த விமர்சனங்கள் மற்றும் மதிப்பீடுகள் தேசிய பத்திரிகைகளிலும் ஆய்விதழ்களிலும் பல்கலைக்கழகங்களில் ஆய்வேடுகளாகவும் வெளிவந்து அவரை ஈழத்தின் சிறார் இலக்கியப் பரப்பில் முக்கியமான கவிஞர் என்ற அடையாளத்திற்கு உரியவராக்கியுள்ளது.

தமிழில் சிறுவர் இலக்கியம் குறித்து நோக்குமிடத்து இருபதாம் நூற்றாண்டு சிறுவர் இலக்கியத்திற்குப் பொற்காலம் எனலாம். இந்நூற்றாண்டைப் பொறுத்தவரை தமிழகத்தின் சிறுவர் இலக்கிய முன்னோடி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆவார். இவர் 1901-ல் சிறுவர் பாடல்களை எழுதத் தொடங்கினார். இவரின் பின் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1915-ல் பாப்பா பாட்டை எழுதி 'ஞானபானு' எனும் இதழில் வெளியிட்டார். கவிமணியே சிறுவர் விரும்பும் பொருள்களைப் பாடுபொருளாக்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (த. துரைசிங்கம், ஈழத்தில் சிறுவர் இலக்கியம், 2012:40).

சிறுவர் இலக்கியம் என்பது, பேச ஆரம்பிக்கும் குழந்தைகள் முதல் சுமார் பதினான்கு வயது வரையிலான குழந்தைகளுக்கான இலக்கியம் எனலாம். ஏழு வயது வரையிலானோர்க்கான இலக்கியத்தை குழந்தை இலக்கியம் என்றும் அதற்கு அதிகமான வயதினருக்கான இலக்கியத்தை சிறுவர் இலக்கியம் என்றும் வகைப்படுத்துவர். ஆனாலும் இவை இரண்டும் சிறுவர் இலக்கியம் என்றே பரவலாக வழங்கப்படுகிறது (பாத்திமா அஸ்மா, இக்பால் அலியின் சிறுவர் இலக்கியப் பணிகள் ஓர் ஆய்வு, 2023:1). 2002-ஆம் ஆண்டில் இக்பால் அலி இந்த இரு வகையிலான இலக்கியங்களையும் தழுவிய பாடல்களை அற்குரிய சொல், வாக்கியம், பத்திகளின் அமைப்பு ஆகிய உத்திகள் கொண்டமைந்த சிறுவர் பாடல் நூல்களாக வெளிக்கொணர்ந்துள்ளார். இக்பால் அலியின் சிறுவர் இலக்கிய பாடல் நூல்களின் வரவையடுத்து அறிவியல் சார்ந்த பாடல்கள் ஈழத்து இலக்கியப் பரப்பில் பெருமளவிலே முனைப்புப் பெற்றன. ஈழத்து சிறுவர் இலக்கியத்தில் திருப்புமுனையாகத் திகழும் இக்பால் அலி காத்திரமானதோர் சிறுவர் இலக்கியத்தைப் படைத்த பெருமைக்குரியவராகிறார். நவீன கவிதைத் துறையில் ஈடுபாட்டைக் கொண்டிருந்த இவர் சிறார் இலக்கியத்தில் பொழுது போக்கான வேடிக்கைப் பாடல்களையும் இயற்கையினையும் பாடிக் கொண்டிருந்த காலகட்டத்தில் சிறார்கள் அன்றாடம் எதிர் நோக்கும் சவால்களையும் அவலங்களையும் எடுத்துக் காட்டும் வகையில் பாடல்களை எழுதினார். 1984-ஆம் ஆண்டில் இலக்கிய உலகிற்குப் பிரவேசித்திருந்தாலும் 2000-ம் ஆண்டுக்குப் பிற்பாடு நவீன அறிவியல் சார்ந்த விடயங்களை பாடுபொருளாகக் கொண்டு சிறார்களுக்கு உகந்த பாடல்களை வாழ்வியல் உணர்வுகளுடன் படைத்தவர்களுள் இக்பால் அலிக்கும் தனிச்சிறப்பான இடம் உண்டு.

### நான் மூன்று சக்கரக்காரன்:

2002-ம் ஆண்டு ஜனவரி மாதம் 'நான் மூன்று சக்கரக்காரன்' என்ற சிறுவர் பாடல் தொகுதி வெளிவந்தது. இது கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏழாவது வெளியீடாகும். இந்தத் தொகுதியில் மரபும் புதுமையும் கலந்ததாக அமையப் பெற்ற பதினெட்டுப் பாடல்கள் உள்ளன. சிறார்களின் வயதையும் மனப்போக்கையும் அனுசரித்துப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. குறிப்பாக இப்பாடல்கள் குழந்தைகளின் உளமறிந்து குழந்தைப் பருவத்தின் புலன் வளர்ச்சி, விவேக வளர்ச்சி, சமூக வளர்ச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளதால் பள்ளி செல்லும் சிறார்கள், ஆசிரியர்கள் யாவரும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. மொத்தத்தில் குழந்தைப் பருவத்தின் அறிவு, திறன், மனப்பான்மை என்பவற்றினைக் கருத்தில் கொண்டு இந்நூல்




வடிவமைக்கப்பட்டுள்ளமையானது கவிஞருக்கு குழந்தை உளவியலிலுள்ள ஈடுபாட்டை புலப்படுத்துகிறது. மேலாக, யுத்த கால அனுபவங்களின் வழி குருதி கசியும் மொழிப்பாட்டாகவும், சமாதானத்திற்குரிய எதிர்வுகூறலாகவும், சமகால தொழில் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குமொரு பொதுவான பாடல் தொகுதியாகவும் கொள்ளத்தக்கது. அதே சமயம் ஈழத்து இலக்கியப் பரப்பில் இப்பாடல்கள் ஒரு வித்தியாசமான முறையியலைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை இக்பால் அலியினது சிறார்கள் சார்ந்த பார்வையின் அகலத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

'கவிப்பிரவாகம்' என்ற கலை இலக்கிய சஞ்சிகையில் 'தற்

கால சிறுவர் பாடல்களில்' என்ற தலைப்பில் முனைவர் கே. ரகுவரன், இக்பால் அலியின் 'நான் மூன்று சக்கரக்காரன்' நூல் பற்றி குறிப்பிடும் போது 'இனங்களுக்கிடையிலான பகைமை உணர்ச்சியே இந்நாட்டின் இன்றைய சாபக்கேடு. எந்த மன உணர்வும் இளம் வயதிலேயே ஆழப் பதிந்து விடுகிறது. 'இள மையிற் கல்வி சிலையில் எழுத்து' என்றும் 'ஐந்தில் வளையா தது ஐம்பதில் வளையுமா' என்றும் 'தொட்டிற் பழக்கம் சுடு காடு மட்டும்' என்றும் வழங்கும் தொடர்கள் அனுபவபூர்வ மான வார்த்தைகள். பகைமையுணர்ச்சியிலேயே தோய்ந்து விட்ட முதியவர்கள் சமாதானம் பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் வாய் வார்த்தையே. அடி மனதின் பகைமையுணர்ச்சி அவர்களை ஒரு நிலைக்கப்பால் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது. ஆக, இளஞ் சந்ததியிடம் இருந்தே உண்மையான சமாதான உணர்வு வெளிவரச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. அதைச் செய்வதற் கான அத்திவாரத்தையிடுவதில் இக்பால் அலி அதிக கரி சனை காட்டுபவராக விளங்குகிறார். இனப்பிரச்சினை எங்கள் நாட்டுக்கு அறிமுகப்படுத்திவிட்ட புதிய விடயங்கள் பல. அவற்றில் பெரியவர்கள் மட்டும்தான் பாதிக்கப்படுகின்றார் கள் என்று சொல்வதற்கில்லை. சின்னஞ் சிறார்களும் பாதிக் கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சிறார்களின் உள உணர்வுக ளையும் இக்பால் அலி பதிவு செய்ய முனைகிறார். பிரச்சினை நிறைந்த சூழலுக்குள்ளேயே பிறந்து வாழ்ந்து கொண்டிருக் கும் அகதிமுகாம், சோதனைச் சாவடி முதலானவையெல் லாம் ஒரு நாட்டின் இயல்பான அம்சங்கள் என்று கூறப்பட லாம். அந்த ஆபத்திலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டிய வர்களாக உள்ளோம். அந்த வகையில் சோதனைச் சாவடி, அகதி முகாம் என்பவற்றுக்கும் ஒரு நல்ல சமூகத்துக்கும் உள்ள இயைபின்மையை, அவை இல்லாதொழிக்கப்பட வேண்டியன என்ற உண்மையை சின்னஞ் சிறார்களின் உளத் தில் பதிய வைக்க வேண்டும் என்பது இக்பால் அலியின் கருத்தாக இருக்கிறது' என்கிறார் (கவிப்பிரவாகம், 2002:31-40).

கவிஞர் அன்புமணி இக்பால் அலியின் சிறுவர் பாடல்கள் பற் றிக் குறிப்பிடும்போது, 'இக்பால் அலியின் நூலில் காலத்துக் கேற்ற விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மனித நேயம், கணினி, நாங்கள் விளையாட, தொழுதிடுவோம், நான் மூன்று சக்கரக்காரன், சித்திரக் கொப்பி, அமுதாய் ஊறும் தண்ணீர், புகை வண்டி முதலிய பதினெட்டு பாடல்கள் இந்நூலில் உள் ளன. 'மனித நேயம்' முதல் பாடலாக அமைவது குறிப்பிடத் தக்கது. அதில்

*'நெஞ்சிலேதும் சுமையில்லாமல்*
*நிம்மதியாய் வாழ்ந்திடவே*
*மனித நேயம் ஒன்றே வெல்லும்*
*ஒற்றுமையாய் வாழ்வோம் வாநீ.'*

என்ற வரிகள் நம் கருத்தைக் கவருகின்றன. சமகாலப் பிரச்சி னைகளான சோதனைச் சாவடி, அகதி முகாம் முதலிய விட யங்களும் பாடல்களாக இடம்பெற்றுள்ளன.

*'பண்போடு பல்லினமும் சேர்ந்து*
*கண்ணிறைந்த இலங்கையில் வாழும்*
*பொன்மலரும் உள்ளங்கள் மகிழும்*
*புது வசந்தம் காண்போம் வாநீ.'*

*'அகதி அகதி முகாம்களைக்*
*காணக் காண வெட்கமே*
*பிறந்த தாய் நாட்டிலா*
*வாழ்வார் இந்த அகதிகள்.*

*அகதிகள் இல்லாதொழியவே*
*போர்கள் யாவும் போகவே*
*எழுந்து நின்று பாடுவோம்*
*ஒன்று பட்டு வாழ்ந்திடவே!'*

எனும் பாடல் வரிகள் சிறுவர் உள்ளங்களில் ஆழப்பதியும் என்பதில் சந்தேகமில்லை. சொந்த நாட்டில் மக்கள் அகதிக ளாக வாழும் அவலம் அவர்கள் சிந்தனையைத் தூண்டச் செய்யும். இவ்வாறு ஒவ்வொரு பாடலும், சிறுவர் உலகத்துக்கு ஒவ்வொரு செய்தியைச் சொல்கின்றது. சந்திக்கும் விடயங் கள் சிந்திக்கும் விடயங்களாக இப்பாடல்களில் இடம்பெறு கின்றன (தினக்கதிர் பத்திரிகை, 31.3.2002).

### அன்பு பெருக:

இக்பால் அலியின் 'அன்பு பெருக' எனும் சிறுவர் பாடல்கள் கொண்ட நூலில் விரவி நிற்கும் கருப்பொருட்களை பதிப்பகத் தார் நன்கு அறிந்து சிறுவர்களிடையே இன நல்லுறவு மேம் பட வேண்டும் என்ற கருத்துருவை மையமாகக் கொண்டு நூலின் அட்டைப் படம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளமை, கலா சார பன்முகத்தன்மை கொண்ட சிறுவர்களிடையே இனநல்லு றவு மேம்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகவும் அமைகிறது.

*'அன்பு பெருக வாழுவோம்*
*ஒன்று சேரப் பாடுவோம்*
*சமாதானம் என்பதை*
*நிலை நிறுத்தி ஆடுவோம்'*

இக்பால் அலியின் 'அன்பு பெருக' என்ற சிறுவர் பாடல்கள் கொண்ட தொகுதியில் போர் அற்ற நாடுதான் எல்லோருக் கும் வாழச் சிறந்தது என்றும் போர்க் காலச் சூழலில் இன வாத, வக்கிரக உணர்வுகள் எவ்வாறு சிறார்களிடையே விதைக்கப்பட்டு மன அழுத்தத்தைக் கொடுக்கின்றன என்ப தையும் இந்நிலையை மாற்றியமைப்பது கடினமானதாக இருந்தாலும் முதலில் சிறார்களிடையே சமாதானத்திற்கான நம்பிக்கையை அழுத்தமாகப் பதியச் செய்தால் மாத்திரம் தான் சமாதானத்திற்கு இணைவான சூழலை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை உணர்வினை கவிஞரின் பின்வரும் பாடல் வரிகள் சித்திரிக்கின்றன.

*'ஒன்று பட்டு ஒழுகுவோம்*
*ஐயம் இன்றிப் பழகுவோம்*
*அமுது என்ற அன்புதான்*
*நாட்டில் என்றும் நிலைக்குமே'*

'நமது கல்விக் கொள்கையில் சிறுவர் பாடல்கள் ஒரு முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளன. ஆத்திசூடி, கொன்றை வேந் தன், நன்நெறி போன்ற பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டமையும், இன்றைய கல்வி அமைப்பில் பாலர் வகுப்பில் பாடல் கற்பிப் பது ஓர் அம்சமாகக் கொள்ளப்படுவதையும் இந்தப் பின்ன ணியில் நோக்கலாம். பாலர்களின் உடல், உள வளர்ச்சிகள்

ஒருங்கே வளர்ச்சியுறுவதற்குச் சிறார் பாடல்கள் சிறந்த ஊடகமாக நம்பப்படுகின்றன. சிறுவர்களுக்குப் புத்தூக்கமாகவும் அறிவாராய்ச்சியியல் சார் வளர்ச்சிக்கு ஓர் ஏணியாகவும் சிறுவர் பாடல்கள் கற்பிக்கப்படுகின்றன. நீதியைப் போதிக்கும் பாடல்கள், சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பாடல்கள், சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் பாடல்கள், அன்பை நிலை நிறுத்தும் பாடல்கள் போன்றவை சிறுவர் இலக்கியத்திலும் கல்வி புகட்டலிலும் பாரிய விளைவுகளை செய்யத்தக்கவையாகும். இவ்வாறான பங்களிப்புக்களை பிரதிபலிக்கும் வகையில் இக்பால் அலியின் 'அன்பு பெருக' என்ற பாடல்கள் அமைந்திருப்பது இத்துறையில் அவரது தடத்தினை சமகாலமும் எதிர்காலமும் உள்வாங்கிக் கொள்ளும் என்பதனை எடுத்துரைப்பதாகக் கொள்ளலாம்' என்கிறார் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம்.எம். நூறுல்ஹக் (பாத்திமா அஸ்மா இக்பால் அலியின் சிறுவர் இலக்கிய பணிகள் ஓர் ஆய்வு, 2023:68-69).

## குரங்குத் தம்பி:

இக்பால் அலியின் இரு நூல்களின் வெளியீட்டு விழா இலங்கை அக்குறணையில் இடம்பெற்றது. அவருடைய 'குரங்குத் தம்பி' என்ற நாடகப்பாங்கிலான சிறுவர் பாடல்கள் குறித்து அந்நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கருத்துரைக்கும் போது 'குழந்தை இலக்கியம் படைப்பது இலகுவான விடயம் அல்ல. தாங்கள் வளர்ந்த பின்பு குழந்தைகளாக மாறி கவி படைப்பது என்பது ஒரு வித்தியாசமான கலை. வித்துவ நிலைக்கு வந்த பிறகு திரும்பவும் குழந்தைப் பருவத்திற்குச் சென்று அந்த நடையில் எழுதத் துணிவது என்பது அசாத்தியமான விஷயமாகும். மகாகவி பாரதியும் அப்படித்தான் குழந்தை இலக்கியம் படைத்தார். இன்றும் எல்லோருடைய மனதிலும் நிலைத்து நிற்கக் கூடிய இலகு தமிழில் பாரதியினுடைய குழந்தை இலக்கியம் அமைந்துள்ளது. எனவே, எவர் குழந்தை இலக்கியம் படைக்கிறாரோ அவர் மிகத் தேர்ந்த கவிஞராக இருக்க வேண்டும். விவஸ்தை இல்லாமல் எழுதுகின்ற கவிஞர்களும் சிலர் உள்ளனர். ஆனால் இக்பால் அலியினுடைய 'குரங்குத் தம்பி' புத்தகத்தில் 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல ஒரு வரியை மட்டும் வாசிக்கலாம் என நினைக்கிறேன்.

*'காட்டுக் குரங்கு வீட்டுக்கு வந்தது*
*பாட்டுப் பாடி கூத்துப் போட்டது*
*சட்டி பானை திறந்து பார்த்தது*
*தாப்புக் காட்டி தூக்கிச் சென்றது.'*

மற்றுமொரு வரி

*'குரங்கின் வீட்டில் மனிதன் வாழ்க்கை*
*மனிதன் வீட்டில் குரங்கு வாழ்க்கை*
*காட்டை வெட்டி மனிதன் வாழ்ந்தான்*
*வீட்டைப் பிடித்து குரங்கான் வாழ்ந்தான்.'*

இவர் மிகப் பெரிய செய்தியைச் சொல்கிறார். இந்த விதமான ஒரு தத்துவத்தை குழந்தைகளின் பாடல் ஊடாக வெளிக்கொணர்கின்ற ஒரு திறமை அவருக்கு இருக்கிறது என்பதை நான் காண்கிறேன்' என்கிறார் (தினகரன் பத்திரிகை, 2024-05-29, ப.9). இவ்வாறு இக்பால் அலியின் பாடல்கள் மானுட வாழ்வியலுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதோடு பயன்படுவதாகவும் உள்ளது.

## செல்லக் குட்டி:

பொதுவாக இன்றைய நிலையில், ஒரு சாராரின் தொழில் மகிமையை யாருமே வெளியே சொல்வதில் கரிசனை காட்டுவதில்லை. அவர்கள் யார் என்பது கூடத் தெரியாது. அவர்கள் சமூகமைவில் விளிம்பு நிலையில் உள்ளனர். அவர்கள்தான் நாம் நகரங்களிலும் புறநகரங்களிலும் ஆரோக்கியமான சூழலில் வாழ்வதற்கு அர்ப்பணிப்புடன் பணிபுரிந்து வருகின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் அவர்களின் வாழ்க்கைச் சூழல் மிகவும் பரிதாபகரமானதாகும். இத்தகைய தொழில் சார்ந்தவர்களுடைய சேவையின் மகத்துவத்தை இக்பால் அலி 'நகரச் சுத்திகரிப்பான் புகழ்' என்ற பாடல் மூலமாக வெளிப்படுத்துவது மகிழ்ச்சி தருவதாகவுள்ளது.

***'நகரின் எழிலைப் பாரம்மா!***
***புதுமையாக இருக்குது***
***சுற்றுச் சூழலைப் பாரம்மா!***
***நறுமணக் காற்று வீசுது.***

***நகர மெங்கும் இயற்கையின்***
***காட்சிகள் தெரியுது பாரம்மா!***
***நகரச் சுத்திகரிப்பாளன்***
***எழுதிய ஓவியம் இதுதானோ'***

- இக்பால் அலி, செல்லக் குட்டி, 2024:15

மேற்தரப்பட்ட வரிகளில் நகரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுடைய சேவையின் பெறுமதி அறிமுகப்படுத்தப்படுகிறது. அத்தோடு இக்பால் அலி நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் அன்றாடம் நகரங்களிலும் புற நகரங்களிலும் சேருகின்ற கழிவுகளை அகற்றாதுவிட்டால், எத்தகைய துர்நாற்றம் வீசும் என்பதனை எடுத்துக் காட்டி அவர்களுடைய தொழிலின் மகத்துவத்தை சிறார்களின் உளத்தில் பதிவு செய்ய முற்பட்டுள்ளார். மக்களின் நல்வாழ்வுக்காகப் பணிபுரியும் நகர சுத்திகரிப்பாளர்களின் உயரிய அந்தஸ்தை சிறுபராயத்தில் இருந்தே சிறார்கள் புரிந்துகொள்ள இப்பாடல்கள் துணைபுரியும் என திடமாக நம்பலாம். இக்பால் அலியின் சிறுவர் பாடல்கள் பல பல்கலைக்கழக மாணவர்கள் தமது பட்டத்தினைப் பெறுவதற்குரிய ஆய்வுப் புலமாக அமைந்தமையானது பல்கலைக்கழக மட்டத்தில் அவரின் படைப்பாக்கத்திறன் கவனிப்புப் பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய புலமை மிக்கவரான இக்பால் அலியின் 'செல்லக் குட்டி' என்ற மழலைப் பாடல் தொகுதி கவனத்திற்குரியது.

***தொழில் நுட்ப வளர்ச்சியும்***
***புதுமை இங்கு காட்டுதே!***
***மனிதன் மீதான பாசத்தை***
***நாசம் பண்ணச் செய்யுதே!***

***போர் நடக்கும் நாட்டிலே***
***வானில் உயரப் பறக்குதே!***
***அப்பாவி யான மக்களை***
***கொன்று கொன்று குவிக்குதே!***

செல்லக் குட்டி, 2024:51.

இப்பாடல் மூலம் கொடிய போரின் அவலத்தை உலகில் வாழும் சிறார்களுக்கு எடுத்துக் காட்டுவதோடு உலகம் முழு வதும் போர் வெறித்தனத்தோடு நடமாடும் நாடுகளைக் கேலி பண்ணிக் கேவலப்படுத்துகிறார் கவிஞர் இக்பால் அலி. போருக்கெதிரான கவிஞரின் இந்த உணர்வுக் கூறுகள் போர் வெறியர்களை அடையாளப்படுத்துவதோடு மனித இருப்பின் பெறுமதியையும் எடுத்துரைத்து, சிறார்களுக்கு இன்று ஏற்பட் டிருக்கக்கூடிய துன்பச் சுமையையும் நமக்கு விளக்குகிறது. போர் எதுவுமே அறியாத பச்சிளம் பாலகர்களை, சின்னம் சிறு சுகளை கொத்துக் கொத்தாகக் கொன்றொழிப்பதை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தும் பாடலாசிரியர், இந்தக் கொடிய கொலை வெறியாட்டத்திற்கு நவீன தொழில்நுட்ப வளர்ச்சியே மையக்காரணம் எனவும் இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த முடியாத உலகத்தின் சமகாலத் தன்மையையும் இப்பாடலில் சித்திரிக்கின்ற பாங்கு கண்ணீரை வரவழைக்கத்தான் செய்-கிறது.

இக்பால் அலியின் மற்றுமொரு பாடல் ‘எங்கள் வீட்டு ஆயா’ எனும் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படும் பெண்ணொருவரின் பணிகள் பற்றிய பாடல் வரிகளாகும்.

***‘எங்கள் வீட்டு ஆயா***
***காலை உணவு தருவாள்***
***தினமும் பாட்டுப் பாடி***
***சுவை இன்பம் தருவாள்.***

***நாங்கள் ஏசிப் பேசினாலும்***
***சிரித்துக் கொண்டு மகிழ்வார்***
***அன்பு கொண்டும் பழகுவார்***
***கொஞ்சிப் பேசி உதவுவார்’***

செல்லக் குட்டி, 2024:8.

இப்பாடல் மிகவும் இயல்பான சொற்களைக் கொண்டு ஆயா வின் சேவையை மட்டுமல்ல, அப் பெண் தனக்கு ஏற்படும் இடையூறுகளையும் தாங்கிக் கொண்டு, அடுத்தவர்களை மகிழ்வூட்டுவதில் அவள் அடைகின்ற ஆனந்தத்தையும் படிப் போர் உணரும் வகையில் கவிஞர் சித்திரித்துள்ளார். கவிஞர் இக்பால் அலி தமிழ் மீதும் சமூக நல்லிணக்கத்தின் மீதும் நீங் காத பற்றுள்ளம் கொண்டவர். அவரது படைப்புக்கள் இன நல்லிணக்கத்தை மேம்படுத்துவதாக அமைந்திருக்கிறது. மேலாக, இனவாதத்தை, அரசியல் சூழ்ச்சிகளினால் சிறார்க ளிடையே விதைத்தல், சக வாழ்வை ஒழித்தல் போன்ற சமூக அவலங்களை இல்லாதொழிக்க வேண்டும் எனும் பேரார்வம் கொண்டவர். சிறார்களிடையே ஐக்கியம், சகோதரத்துவம், சமத்துவம் தழைத்தோங்க வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் கொண்டவர். இவ்வாறு மானுட மேம்பாட்டை வலுப்படுத்தக்கூ டிய விடயங்களைப் பாடுபொருளாகக் கொண்டு அதிகளவி லான பாடல்களை எழுதியுள்ளார்.

***‘சக வாழ்வு மலர்ந்திட வேண்டும்***
***கொடிய இனவாதம் ஒழிந்திட வேண்டும்***
***அன்பு ஒளி பெற வேண்டும்***
***கொடிய பகைமை நீங்கிட வேண்டும்’***

செல்லக் குட்டி, 2024:31.

மேலாக, இக்பால் அலி குறித்து பேராசிரியர் சபா. ஜெயராசா தமது ‘சிறுவர் இலக்கிய வளர்ச்சி’ என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ‘நவீன அறிவியலின் பரிமாணங்களை சிறுவர் களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் படைப்பாளிகளுள் இக்பால் அலி முக்கியமானவர். அறிவியற் செய்திகளை கூற வரும்போது அழகியற் பண்புகளைச் சுருக்கி விட முடியாது அவ்வாறான ஆக்கங்களை அதிக கவனத்துடன் மேற் கொள்ள வேண்டும். அந்த முயற்சியை வெற்றிகரமாக மேற் கொண்டவர்களுள் அய்யாசாமி, இக்பால் அலி, வாகரை வாணன், மு. பொன்னம்பலம், கண்டி மு. இராமச்சந்திரன், இ. சிவானந்தன், செ. யோகநாதன், கோகிலா மகேந்திரன், க. குணராசா ஆகியோர் தனித்துவம் பெறுகின்றனர்’ (அஸ்மா, இக்பால் அலியின் சிறுவர் இலக்கிய பணிகள் ஓர் ஆய்வு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 2023: 65-69).

## முடிவுரை:

ஈழத்து சிறார் இலக்கியத்தின் வழி மனிதகுல மேம்பாட்டிற் கான பங்களிப்புச் செய்துவரும் கவிஞர் இக்பால் அலியினு டைய சிறுவர் பாடல்களின் பாடுபொருள் சிறார்களிடம் அன்பு, அறம், அறிவு, நற்பண்பு மற்றும் மனித நேயத்தை வளர்த்தெடுக்கும் சிந்தனைகள் செறிந்தவையாகக் காணப்ப டுகின்றன. இவர் குழந்தைகளைப் பெரிதும் கவரக்கூடியவ கையில் ஒலி நயமும் ஓசை அழகும்மிக்க நடையில் மிக அரு மையான பாடல்களைத் தந்துள்ளமை அவரது முதிர்ச்சியை முன்நிறுத்துகிறது. இவர் அறிவியல் சார்ந்த விடயங்களை சித்திரித்துக் காட்டும் முறை தனித்தன்மையுடன் விளங்குகின் றன. அத்துடன் பாடல்களில் வாழ்வியலுக்கு சம்மந்தமில் லாத உணர்வுகளைத் தூண்டும் வரிகளைத் தவிர்த்திருப்ப தையும் அவதானிக்க முடிகிறது. ஆக, இவை சிறார்களின் வளர்ச்சிக்கான நுண்ணறிவை மேலோங்கச் செய்யக்கூடி யவை எனலாம்.

**உசாத்துணை:**


- இக்பால் அலி (2002), நான் மூன்று சக்கரக்காரன், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், கண்டி.
- இக்பால் அலி (2002), அன்பு பெருக, மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், கண்டி.
- இக்பால் அலி (2002), நல்லதொரு பயணம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், கண்டி.
- இக்பால் அலி (2023), குரங்குத் தம்பி, சிறுவர் பாடல்கள், அம்னா பதிப்பகம், சாய்ந்தமருது.
- இக்பால் அலி (2024), செல்லக் குட்டி, ராயல் பதிப்பகம், சென்னை.
- சபா ஜெயராசா (2012), சிறுவர் இலக்கிய வளர்ச்சி, குமரன் புத்தக இல்லம் கொழும்பு.
- துரைசிங்கம் த. (2012), ஈழத்தில் சிறுவர் இலக்கியம், உமா பதிப் பகம், கொழும்பு.
- பாத்திமா அஸ்மா (2023), இக்பால் அலியின் சிறுவர் இலக்கிய பணிகள்: ஓர் ஆய்வு, மொழித்துறை, தென்கி ழக்குப் பல்கலைக்கழகம்.





Jamahir.pm@thaiveedu.com



# பதிப்புத்துறைக்கோர் டேவிட் லிகோரி

## போர்க்கால இலக்கியங்களை ஆவணப்படுத்திய பதிப்பாளர்

– இயல்வாணன்

புத்தக வெளியீட்டுத்துறை என்பது ஈழத்தில் அவ்வளவு இலகுவானதல்ல. தமிழ்நாடு போன்ற பரந்த வாசகப் பரப்பு இங்கில்லை. கற்ற சமூகம் என்று சொன்னாலும் நூல் வாசிப்புக்கு அதிகம் நேரத்தையும் பணத்தையும் செலவு செய்யும் மனநிலையும் பலரிடமில்லை. புகையிரத நிலையங்களில் காணப்படும் புத்தகக் கடைகளில் நூல்களை வாங்கி புகையிரதத்தில் வாசித்துச் செல்லும் சிங்கள வாசகர்கள் போல தமிழ் வாசகர்களைக் காண முடியாது. தமிழ்ப் புத்திஜீவிதம் என்பது துறை சார் அறிவு சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளது.

இதனால்தான் ஈழத்தில் தமிழ் பதிப்புத்துறை பெரியளவில் வளர்ச்சியடையவில்லை. 1970-கள், 1980-களில் வீரகேசரி பதிப்பகம் நூற்றுக்கு மேற்பட்ட நாவல்களை வெளியிட்டு பெரியளவில் வாசக ஈர்ப்பைக் கொண்டிருந்தது. எழுத்தாளர்களிடம் பணம் பெறாமல் வெளியிட்டது. இந்திய வெளியீடுகளுக்கு அதிக வரி விதிக்கப்பட்ட நிலையில் வீரகேசரி அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, வீரகேசரி வெளியீடு, ஜனமித்திரன் வெளியீடுகளைச் செய்து வாசிப்பு இயக்கத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கியதுடன் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பங்காற்றியது. இலங்கை முழுவதுமிருந்து எழுத்தாளர்களின் நூல்களை குறிப்பாக நாவல்களை வெளியிட்டது.

எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், ரஜனி வெளியீடு (எஸ். எஸ். குகநாதன்), வரதர் வெளியீடு, பூபாலசிங்கம் புத்தகசாலை, தேசிய கலை இலக்கியப் பேரவை என்பனவும் தம்மளவில் இத்தகைய வெளியீடுகளைச் செய்துள்ளன. எழுத்தாளர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு அன்றிலிருந்து இன்று வரை பல வெளியீட்டு நிறுவனங்கள் நூல்களை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. பல எழுத்தாளர்கள் தமக்குச் சொந்தமாக ஒரு வெளியீட்டு நிறுவனத்தை உருவாக்கி தமது புத்தகங்களை வெளியிட்டு வந்துள்ளனர். கமலம் பதிப்பகம் (செங்கை ஆழியான்), அன்பு வெளியீடு (புதுமைலோ-லன்), பாமா பதிப்பகம் (சு. துரைசிங்கம்) என்பன இதற்கான சில உதாரணங்களாகும்.

வீரகேசரிக்குப் பின்னர் எழுத்தாளர்களிடம் பணம் பெறாமல் நூல் வெளியீட்டைச் செய்த வகையில் டேவிட் லிகோரி என்ற தனிமனிதர் முக்கியமானவராக விளங்குகிறார். ஈழத்து வெளியீட்டுத்துறைக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிய அவர் தனது 79-வது வயதில் கடந்த ஜனவரி 13, 2025 அன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காலமானார்.

நவம்பர் 17, 1945-ல் 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் பிறந்த டேவிட் பிலிப் கபிரியேல் லிகோரி தனது பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயத்தில் நிறைவு செய்தார். வீட்டில் வறுமை நிலவிய சூழலில் பாடசாலைக்குச் செல்லுமுன்னரும், மதிய உணவு இடைவேளையின் போதும் பத்திரிகைகளை கடைகளுக்கு விநியோகிக்கும் வேலையில் ஈடுபட்டார். பத்திரிகை விநியோகம், அச்சகத்துறைத் தொழில் சார்ந்தே அவரது பயணம் அமைந்தது.

ஆரம்ப காலத்தில் சினிமா பாட்டுப் புத்தகங்களை அச்சிட்டு, சைக்கிளில் எடுத்துச் சென்று அவற்றைக் கடைகளுக்கு விநியோகம் செய்து வந்தார். திரையரங்குகளின் சிற்றுண்டிச்சாலைகள், தேநீர் கடைகள், புத்தகசாலைகளில் இச்சினிமா பாடல் புத்தகங்கள் விற்பனையாகின. 'தேனிசை மழை' என்ற பெயரில் மாதாந்த சினிமா பாடல் சஞ்சிகையினையும் அவர் வெளியிட்டார். பாடநூல்கள், மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்களையும் அச்சிட்டும், விநியோகித்தும் வந்துள்ளார்.

இவ்வாறு சினிமா பாடல் புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டிருந்த வேளை வங்கியில் பணி புரிந்து கொண்டிருந்த ஒரு எழுத்தாளர் டேவிட் லிகோரியைப் பார்க்க வந்தார். பேச்சோடு பேச்சாக அவர் வெளியிடும் தேனிசை மழை மாத இதழ் பற்றிய பேச்சும் வந்தது. அவ்வேளை 'ஈழத்தில்தான் நிறைய எழுத்தாளர்கள் இருக்கிறார்களே! குறுநாவல், கட்டுரைத் தொகுதி, சிறுகதைத் தொகுதி, சிறுவர் நூல்கள் என்று அவர்களின் ஆக்கங்களை வாங்கி வெளியிட முடியாதா?' என்று கேட்டார்.

*'அவர் வந்தபோது காலைநேரம். அயலில் இருக்கும் அடைக்கலமாதா ஆலயத்தின் திருவிழாக்காலம். விழாக்கால மணியோசை கணீரென்று ஒலித்துக் கொண்டிருந்தது. எனது வீட்டிற்கு அருகிலுள்ள வீடு இந்து சமயத்தைச் சார்ந்தவர்களுடைய வீடு. அங்கு சுப்ரபாதம் கேட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுதே நினைத்துக் கொண்டேன் ஈழத்து எழுத்தாளர்களுடைய நூல்களை வாங்கி வெளியிடுவதென்று'* என டேவிட் லிகோரி இலக்கிய நூல்களை வெளியிடத் துணிந்தமையை பதிவு செய்துள்ளார்.




தனது சொந்தப் பெயரில் அமைந்த 'டேவிட் லிகோரி பதிப்பகாலயத்தின்' வெளியீடாக சினிமா பாடல் புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தவர் 1987-ம் ஆண்டு ஜுன் மாதத்தில் 'டேவிட் லிகோரி பதிப்பகாலயத்தின்' வெளியீடாக ஜோஸ்யர் ஐயா. சச்சிதானந்தம் எழுதிய 'வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமலராஜி' என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலுக்கு இலங்கை தமிழ் சோதிட ஆய்வு மன்றத்தின் தலைவராக இருந்த கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் அணிந்துரை எழுதியுள்ளார். இந்த நூலின் பதிப்புரையில் இரண்டாவது நூலாக ஒரு நாவல் வெளியிடப்படும் என்ற அறிவிப்பையும் டேவிட் லிகோரி வெளியிட்டிருந்தார்.

ஆயினும் நாவல் வெளிவரும்போது தனது டேவிட் லிகோரி பதிப்பகாலயம் என்பதை தொடர்பு முகவரியாகக் குறிப்பிட்டு விட்டு மீரா வெளியீடு என்ற பெயரிலேயே அதனை வெளியிட்டார். அவ்வகையில் செங்கை ஆழியான் எழுதிய 'மழைக்காலம்' என்ற நாவல் முதல் மீரா வெளியீடாக ஏப்ரல் 1988-இல் வெளிவந்தது. ரமணியின் வர்ண ஓவியத்துடன் அந்நாவல் வெளிவந்தது. தொடர்ந்து கே.எஸ். ஆனந்தனின் 'ராதையின் நெஞ்சம்', து. வைத்திலிங்கத்தின் 'பூம்பனி மலர்கள்', சிதம்பர திருச்செந்திநாதனின் 'முடிவல்ல ஆரம்பம்' ஆகிய நாவல்கள் குறித்த ஆண்டில் வெளிவந்தன.

1989-ல் செங்கை ஆழியானின் 'மண்ணின் தாகம்', கே.ஆர். டேவிட்டின் 'பாலைவனப் பயணிகள்', செம்பியன் செல்வனின் 'கானகத்தின் கானம்', செங்கை ஆழியானின் 'முற்றத்து ஒற்றைப்பனை', வளவை வளவனின் 'சங்கரன்' ஆகிய ஐந்து நூல்கள் மீரா வெளியீடாக வெளிவந்தன. 1990-இல் கே.எஸ். ஆனந்தனின் 'பூஜைக்காக வாழும் பூவை', 'இராவணன் கோட்டை' (சிறுவர் நவீனம்), இந்திரா பிரியதர்சினியின் 'நிலவே நீ மயங்காதே', சிதம்பர திருச்செந்திநாதனின் 'இருள் இரவில் அல்ல' ஆகிய நூல்கள் வெளிவந்தன.

1991-ல் செங்கை ஆழியானின்'அக்கினி', கே.ஆர். டேவிட்-

இன் ‘வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை’, சிதம்பர திருச்செந்தி நாதனின் ‘முள்முடி மன்னர்கள்’, ஓ.கே. குணநாதனின் ‘விடிய லைத் தேடி’, முருகுவின் ‘ஊருக்கல்ல’ ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன. 1992-ல் வாமதேவனின் ‘ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்’, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாத னின் ‘மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்’, தாமரைச் செல்வியின் ‘விண்ணில் அல்ல விடிவெள்ளி’, இயல்வாணனின் ‘சுவடுகள்’ ஆகிய நூல்கள் வெளிவந்தன.

1993-ல் தாமரைச்செல்வியின் ‘தாகம்’ வெளிவந்தது. 1994-ல் தாமரைச்செல்வியின் ‘வேள்வித்தீ’, கே.ஆர். டேவிட்டின் ‘ஒரு பிடி மண்’ ஆகியன வெளிவந்தன. 1995-ல் பொன். கணேச மூர்த்தியின் ‘தூரம் தொடுவானம்’ வெளிவந்தது. இவ்வாறு 26 நூல்கள் மீரா வெளியீடாக வெளிவந்துள்ளன.

1987-ம் ஆண்டில் முதலாம் ஈழப்போர்க் காலகட்டம். தொடர்ந்து இந்திய அமைதிகாப்புப் படையினரின் பிரசன் னம். 1987 ஒக்ரோபர் 10 முதல் புலிகள் இந்தியப் படையின ருக்கிடையிலான யுத்தம். 1990-ல் இந்தியப் படை விலகலைத் தொடர்ந்து சிறிய அமைதிநிலை. மீண்டும் 1990-ல் ஜுன் 30-இல் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பம் என டேவிட் லிகோரி புத் தகங்களை வெளியீடு செய்த காலம் போர்க் காலமாகவே இருந்தது.

அப்போது வார்ப்புரு எழுத்துகளை கோர்த்து அச்சிடும் முறையே இருந்தது. Letter Press என்று அந்த அச்சகங்கள் அழைக்கப்பட்டன. கொம்போசிட்டர்கள் என அழைக்கபடும் அச்சுக்கோர்ப்பவர்கள் ஒவ்வொரு எழுத்துக்களாக எடுத்து பந்தியாக்கி அச்சுக் கோர்ப்பார்கள். அதில் இருந்து கலிபு றூவ் எனப்படும் பகுதி மெய்ப்பினை ஒப்புநோக்குநர்கள் பார்ப்பார்கள். அதன்பின்னர் பிழையான எழுத்துருக்கள் சரி செய்யப்பட்டு, அடுத்த மெய்ப்பு பார்க்கப்படும். பின்னர் அவை ஒருங்கு சேர்க்கப்பட்டு பக்க வடிவமைப்பு செய்யப்ப டும். பின்னர் பேஜ் புறூவ் எனப்படும் பக்க மெய்ப்பு பார்க்கப் படும். அதன் பின்னர் திருத்தங்கள் செய்து மீண்டும் அச்சிட முன்னர் அச்சியந்திர மெய்ப்பு பார்க்கப்படும். இவ்வாறான ஒரு செயன்முறையூடாகவே ஒரு புத்தகத்தை அச்சிட்டு வெளியிட முடியும். ஆயினும் அக்காலத்து நூல்களில் பிழை கள் அருந்தலாகவே இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறு மிகுந்த சிரமத்தின் மத்தியில் நூல்களை உரு வாக்கி அவற்றை தனது துவிச்சக்கர வண்டியில் எடுத்துச் சென்று கடைகளுக்கும், நூலகங்களுக்கும் விநியோகம் செய் யும் பெரும்பணியை அவர் ஆற்றியிருந்தார். அதிலும் 1990-ம் ஆண்டின் பின்னர் அப்போதய பிரேமதாஸ அரசாங்கம் வடக்கு மாகாணத்தின் மீது பொருளாதாரத் தடையினை விதித்திருந்தது. மணணெண்ணெய், சவர்க்காரம், மின்கலங் கள், உணவுப் பொருள்கள், அச்சு சாதனங்கள், காகிதாதி கள் எல்லாமே இந்தத் தடைக்குள் அடங்கியிருந்தன.

அச்சுமை, எழுத்துருக்கள், கடதாசி என்பன பெறமுடியாதி ருந்த சூழலில் மாணவர்கள் பயன்படுத்தும் கோடிட்ட அப்பி யாசப் புத்தகங்களில் இலக்கிய நூல்களை அச்சிட்டு வெளி யிட்ட பெருமை டேவிட் லிகோரிக்கு உரியது. சமூகப் பொறுப் புடன் தீராத தாகத்துடன் அவர் இந்தப் பணியை மேற்கொண் டார். ஒரு புத்தகத்தை இரண்டு மூன்று அச்சகங்களில் அச் சிட்டு சேர்த்து உருவாக்கியும் உள்ளார். அக்காலத்தில் புளொக் செய்து அட்டை உருவாக்கப்படும். புளொக் தயாரிப் பதற்கான உலோகங்கள், இரசாயனங்களுக்கும் தட்டுப்பாடு நிலவியது. எனவே, ஓவியர்களிடமிருந்து படங்களைப் பெற்று, ஆனந்தன் என்ற கலைஞர் மூலம் மரத்தில் புளொக் தயாரிக் கப்பட்டு அட்டை பதிப்பு செய்யப்பட்டது.

நிதி வசதியற்ற ஒரு சாமானிய மனிதனாக இலட்சிய வேட்கை யுடன் போர்க்கால வாழ்வியல் அனுபவங்களை இலக்கிய ஆவணமாக்கிய வகையில் அவரது பணி விதந்து கூறத்தக் கது. செங்கை ஆழியானின் நூல்களுக்கு ஒரு தொகைப் பணம் செலுத்தியிருந்ததாகவும் ஒரு தடவை கதைக்கும் போது என்னிடம் கூறியிருந்தார். 1993-ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்ட 23-வது நாவலின் (தாகம்) இறுதிப் பக்கத்தில் ஒரு அறிவிப்பினையும் வெளியிட்டிருந்தார். புதிய எழுத்தாளர் களே! உங்களுக்கு மகிழ்ச்சியான செய்தி என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் அறிமுக எழுத்தாளர்களின் ஒவ் வொரு நாவலுக்கும் இரண்டாயிரம் ரூபா பரிசு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

1994-ல் யுத்தம் மேலும் தீவிரமடைந்து 1995-ல் யாழ்ப்பாண மகா இடம்பெயர்வு ஏற்பட்டது. அதுவரை புத்தகங்களை வெளியிட்டு வந்த அவர் இடம்பெயர்வோடு ஊரூராக அலைந்து, வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்து பொருளாதாரங் குன்றி மலேரியா முதலான நோய்களுக்காளாகி நீண்ட காலத் தின் பின்னரே ஒட்டாண்டியாக ஊர் திரும்பினார். ஒரு பழைய சைக்கிளும் அதில் சிறியதொரு புத்தகப் பொதியுமாக லிகோரியைக் கண்ட காட்சி மறைந்து அக்கராயனில் தண் ணீர்க் கொள்கலனோடு வரிசையில் நிற்கிற லிகோரியே கண் ணில் நிறையத் தொடங்கினார் என்று கருணாகரன் எழுதியுள் ளமை அவரது அகதி வாழ்வின் துயரத்தைச் சொல்கிறது.

அவரது சகோதரன் யுத்தத்தில் காணாமல் போனதும், அவ ரைத் தேடி இறுதிக் கணம் வரை அலைந்ததும் அவரது வாழ் வைப் புரட்டிப் போட்டது. யாழ்ப்பாணம் வந்த அவர் சில காலம் தமிழக சஞ்சிகைகளை கடைகளுக்கு விநியோகிக்கும் பணியைச் செய்தார். எதுவுமே அவரது பொருளாதாரத்தை உயர்த்தவில்லை. திருமணம் செய்யாமல் தனது சகோதரி யின் மூன்று பெண் பிள்ளைகளைக் காத்து அவர்களை ஆளாக்கி அந்தக் குடும்பங்களை நிமிரச்செய்த பெருங் குடும்பப் பணியையும் அவர் நிறைவாக ஆற்றியுள்ளார்.

அவர் மிக எளிமையானவர். எந்தப் பிரபல வெளிச்சத்துக்கும் ஆட்படாதவர். அதனால் ஈழத்து இலக்கிய உலகம் அவரை யும், அவரது சேவைகளையும் கண்டுகொள்ளவில்லை என் பது சோகமானது. 1990-களின் யாழ்ப்பாண வாழ்வியலை, போர்க்கால வாழ்வியலை ஆய்வு செய்பவர்களுக்கு டேவிட் லிகோரி வெளியிட்ட நூல்கள் முக்கிய இலக்கிய ஆதாரங்க ளாக உள்ளன. நடமாடும் நூலகமாக இருந்து வாசிப்பை ஒரு இயக்கமாக்கிப் பரவலாக்கும் பணியையும் அவர் ஆற்றியுள் ளார். அவ்வகையில் அவர் ஆற்றிய சேவை என்றும் நினைவு கூரப்பட வேண்டும்.



iyalvaanan@thaiveedu.com

# நாடகப் பேராசான்:
## அஞ்சலிக் குறிப்பு

– ப. ஸ்ரீஸ்கந்தன்



ஈழத்து நாடகத்துறையின் பேராளுமை குழந்தை. ம. சண்முகலிங்கம் அவர்கள் ஜனவரி 17, 2025 அன்று தனது 93-வது வயதில் காலமானார் என்ற செய்தியை கனத்த இதயத்துடன் தாய்வீடு பதிவு செய்கிறது. கூத்தின் ஆட்டங்களையும் பாடல்களையும் இணைத்து புதிய நாடக வடிவத்தை உருவாக்கி தமிழ் நாடகக்கலையை வேறு தளத்துக்கு உயர்த்திச் சென்ற பேராசான். 1978-ல் யாழ். நாடக அரங்கக் கல்லூரியை ஆரம்பித்து அவர் அதனைச் செய்தார். அரங்கக் கல்லூரி ஊடாகப் பட்டைதீட்டப்பட்டு வெளியே வந்த கலைஞர்கள் இன்று ஈழத்திலும் வெளிநாடுகளிலும் நாடக அமைப்புகளை ஸ்தாபித்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. நெருக்குவாரக் காலத்திலும் மண்ணில் இருந்து கொண்டு மண்ணின் அவலங்களையும் கதைகளையும் நாடகமாக்கி அரங்கேற்றிய மகா கலைஞன். குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட நாடகப் பிரதிகளை எழுதியும் பல பிறமொழி நாடகங்களை மொழிபெயர்த்தும் நாடகமும் அரங்கவியல் கற்பித்தலுக்குரிய நெறியாக்கியும் புதுமை செய்தவர்.

'எழுபதுகளின் நடுப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட நாடக டிப்ளோமா கற்கைநெறியில் பயிலும் வரை நாடகம் என்பது ஒரு கற்கைக்குரிய இயல் என்பதைத் தான் அறிந்திருக்கவில்லை' என வெளிப்படையாகவே பேசியவர். கொழும்பில் அரங்கவியல் பயிலும் நாட்களில் கொழும்பு நூலகத்தில் வாசித்த நாடக நூல்களும் ஜேர்மன் நாடகர் ஒருவர் மேடையேற்றிய சிறுவர் நாடகத்தைப் பார்த்த அனுபவமும் பிரபலமான சிங்கள நாடகர்களின் அறிமுகமும் தன்னை நாடகம் குறித்த அடுத்த பரிமாணத்துக்கு அழைத்துச் சென்றாதாக சொல்லியவர்.

1950-ல் யாழ். திருநெல்வேலி ஐ.எம்.எச்.ஆர் மண்டபத்தில் உள்ளூர்க் கலைஞர் கே.எஸ். செல்வரத்தினம் போன்றோருடன் சேர்ந்து 'சந்தியிலே' போன்ற மகிழ்வூட்டும் நாடகங்களை மேடையேற்றியதே இவரது ஆரம்பகால நாடக அனுபவமாக இருந்தது. ஆயினும் பின்னாளில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களுடன் இணைந்து நடிக்கும் அளவுக்கு தனது தேடலையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார். 1958-ல் கலையரசின் 'தேரோட்டி மகன்' நாடகத்தில் அருச்சுனனாக நடித்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதினார்.

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் முதன்முதலாக எழுதிய நாடகம் 'அருமை நண்பன்' ஆகும். பள்ளிக்கூடம் செல்லாது கும்மாளம் அடித்த மாணவர்கள் பற்றிய இந்நாடகத்தை 1958-ல் அவர் எழுதினார். 1961-ல் எழுதிய இவரது இரண்டாவது நாடகமான 'வையத்துள் தெய்வம்' என்ற நாடகத்தில் இவர் வள்ளுவராக நடித்துமிருந்தார். இந்நாடகம் 1974-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மேடையேற்றப்பட்டது நினைவு கொள்ளத் தகக்து. டிப்ளோமா கற்கைநெறியை முடித்த பின்னர் ஈழத்தமிழர்களின் மனங்களை உலுக்கிய பல காத்திரமான நாடகங்களை அவர் எழுதினார்.

யாழ். பல்கலைக்கழக கலாச்சாரப் பேரவைக்காக இவர் எழுதிய 'மண் சுமந்த மேனியர்' என்ற நாடகம் குடாநாட்டின் மூலைமுடுக்கெங்கும் மண்டபங்களிலும் வீதிகளிலும் நடத்தப்பட்டுப் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. குழந்தை அவர்களின் 'அன்னை இட்ட தீ' போராட்ட உளவியல் அவலங்களையும், 87-ல் இந்திய இராணுவம் மாணவிகள் மீது மேற்கொண்ட வல்லுறவின் விளைவுகளை வெளிக்கொணர்ந்த 'வேள்வித் தீ', மயிலிட்டி மக்கள் இடம்பெயர்க்கப்பட்ட முதலாவது இடப்பெயர்வை 'ஆர்க்கெடுத்துரைப்பேன்', பிள்ளைகளின் புலம்பெயர்வு காரணமாக மண்ணில் பெற்றோர்கள் படும் அவலங்களை விளக்கும் 'எந்தையும் தாயும்', இராமன் சீதையைத் தீக்குளிக்கக் கேட்டது போல் மக்களையும் கேட்காதீர் என அன்றைய அரசியலைக் கேள்விக்குள்ளாக்கிய 'மனத்தவம்', யுத்தத்தில் தோற்பது மனிதமே என்பதை மகாபாரதப் போரின் பதினான்காம் நாள் போரை மையப்படுத்திய 'ஆர்கொலோ சதுரர்' எனவும் பிறவுமாக பல மண்



ணின் கதைகளை நாடகமாகச் சொன்ன பெரும் கலைஞன் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர் கள்.

83 ஆடிக் கலவரத்தின் பின்னர் பாதுகாப்பு நில வரங்கள் காரணமாக பாடசாலை மாணவர்களுக் கான நாடகங்கள் பலவற்றை இவர் எழுதினார். பரியோவான் கல்லூரிக்காக ஆச்சி சுட்ட வடை, நரகத்தில் இடர்ப்படோம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியினருக்கு மாதொரு பாகம், எங்கள் தவப் பயன், தாயுமாய் நாயுமானார், புழுவாய் மரமாகி, முயலார் முயலுகிறார், பஞ்சவர்ண நரியார், இடுக் கண் வருங்கால் என்பன மாணவர்களுக்காக இவர் எழுதிய நாடகங்களில் சிலவாகும். இச்சி றுவர் நாடகங்கள் இன்றும் மேடையேற்றப்பட்டு வரவது பிரதியின் சிறப்பாகும். மன்னன் ஈடிப்பஸ், ஒரு பாவையின் வீடு, வெண்கட்டி வட்டம், அந்தி மாலைப் பாடல் ஒன்று, தான் விரும்பாத்தியாகி, அன்பமுதூறும் அயலார், அன்டிக்கனி ஆகிய இவர் மொழிபெயர்த்த நாடகங் கள் மேடையேற்றம் கண்டுள்ளன.

ஈழத்து நாடகத்துறைக்கு அளப் பரிய கருமங்களை ஆற்றிவிட்டு எதுவுமே செய்யாதவர் போல் அடக்கமாகவும் அமைதியகவும் இருந்த மகாஞானி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள். விருது, பட்டம், மாலை எதையும் பெற்றுக்கொள்ள மறுத்த அற்பு தமான மனிதர். நாடகம் முக்கிய மல்ல, மானுடம் தான் முக்கியம் என வழிகாட்டி வாழ்ந்த உத்த மர். அவர் 90 வயதை எட்டிய போது அவரது பாணியிலேயே திருமுறையிலிருந்து 'கற்பனை கடந்த சோதி' என்ற சொற்றொ டரைத் தலைப்பாக்கி சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டிருந்தோம். இன்று சோதியில் கலந்துவிட்ட அந்த மகானுக்கு தாய்வீடு தலை சாய்த்து அஞ்சலியைத் தெரி வித்துக்கொள்கிறது.



sriskandan@thaiveedu.com

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ‘மண்சுமந்த மேனியர்’ நாடகப் பிரதியில் போர்க்கால வாழ்வியல்

– வைதேகி செல்மர் எமில்



கலைப்படைப்புகள் அனைத்துமே அவை எழுந்த காலத்து சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டம்சங்களைப் படம் பிடித்துக் காட்டுவன. மனித வாழ்வோடு இரண்டறக் கலந்து அவை எழுதப்பட்ட காலத்து நிலைமைகளை வெளிப்படுத்துவதுடன் காலத்தின் பதிவுகளாகி மக்களது வாழ்வியல் முறைமைகளைக் காலம் கடந்தும் பேசவல்லன. அதன்வழி அவர்களை நெறிப்படுத்தி வழிபடுத்தவல்லன. இதற்கமைய அவை தோற்றம் பெற்ற காலத்து வாழ்வியல் முறைமைக்குச் சான்று பகர்கின்றன. அந்த வகையில் ஈழத்தில் 1980-களில் எழுந்த 'மண்சுமந்த மேனியர்', 1990-களில் எழுந்த 'அன்னை இட்ட தீ', 'எந்தையும் தாயும்' ஆகிய குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற மூன்று நாடகப் பிரதிகளும் ஈழத்தமிழரது போர்க்கால வாழ்வியல் குறித்த முக்கிய பதிவுகளாக அடையாளம் காணப்பெற்ற படைப்புக்களாகும். இவற்றுள், மண்சுமந்த மேனியர் எனும் நாடகப் பிரதியானது ஈழத்தமிழ் அரங்க வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்ததோடு யுத்தம் முனைப்புப் பெற்றிருந்த காலத்தில் ஈழத்தமிழ் மக்களது பேரிடர் சூழ்ந்த வாழ்வியல் நிலைமைகளைத் துணிந்து பேசிய வடிவமாகவும் காணப்படுகிறது. ஈழத்தமிழ்ச் சமூகத்தில் உணர்வுபூர்வமான  அதிர்வலைகளை ஏற்படுத்திய இந் நாடகம் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்த படைப்பாகவும் அமைந்தது. அது மட்டுமன்றி எதனையும் வெளிப்படையாகப் பேச முடியாத போர்க்காலச் சூழலைக் கருத்திற் கொண்டு எமது மரபார்ந்த விடயங்களான புராண இதிகாசங்கள், நாட்டார் பாடல்கள், கவிதைகள், பழமொழிகள், மரபுப் பாடல்கள் ஆகியவற்றோடு காவிய அரங்கு, குறியீட்டு அரங்க நுட்பங்கள், ஊமைப்பாங்கான சித்தரிப்புக்கள், ஒலி விளைவுகள் என்பவற்றுக்கூடாக எண்பதுகளில் தமிழ்ச் சமூகம் அனுபவித்த போர்க்கால வாழ்வியலை, உரிமைக்கான போராட்டங்களை, போர் சமூகத்தில் விளைவித்த பேரவலங்களை, சொந்த மண் மீதான பற்றுறுதி மிக்க வாழ்க்கையை இந்நாடகம் வெளிப்படுத்தி நின்றது. அக்கால மக்களது வாழ்வியல் நெறிமுறைகளை வலியுறுத்தும் இந்நாடகம், 'எது வந்தபோதும் எமது சொந்த மண்ணில் நின்று எதிர்த்து வாழத்தலைப்பட வேண்டும்' என்பதற்கமைய அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்ற விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் பேசத் துணிகின்றது. அந்த வகையில் எண்பதுகளில் வெளிவந்த நாடகப் படைப்புக்களுள் அதன் பேசுபொருள் சார்ந்தும், வடிவம் சார்ந்தும் மிகவும் காத்திரமான படைப்பாக மண்சுமந்த மேனியர் மேற்கிளம்புகின்றது. எண்பதுகளின் யுத்த நிலமைகளைப் பேசுவது மட்டுமன்றி மக்களின் வாழ்வியல் சவால்களையும் எடுத்துக் கூறத்தலைப்படுகின்றது என்ற வகையில் ‘மண்சுமந்த மேனியர்’ நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு யுத்தம் சமூகத்தில் நேரடியாகத் தோற்றுவித்த பாதிப்புகள் குறித்தும், போரினால் சமூகத்தில் தோற்றுவிக்கப்பட்ட விளைவுகள் குறித்தும் இக்கட்டுரை நோக்க விளைகிறது.

## குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்கள்:

பேரா.கா. சிவத்தம்பி அவர்களால் ‘ஈழத்தமிழ் நவீன நாடகத் தலைமுறை ஒன்றின் தாய்’ எனப் போற்றப்படும் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் ஒரு மாற்று அரங்கை உருவாக்கிய ஆளுமையாக நோக்கப்படுகிறார். நடிகர், நாடகாசிரியர், வளவாளர், போதனாசிரியர், விமர்சகர், ஆய்வாளர், மொழிபெயர்ப்பாளர், நெறியாளர் எனப் பன்முக ஆளுமையாக நோக்கப்படுகின்றார். 1950-களில் ஆரம்பித்த அவரது அரங்கப் பணியானது 80-களில் காத்திரமான அரங்கச் செயற்பாடுகளினூடாக உச்சம் பெற்றது.

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள், ‘அருமை நண்பன்’, ‘உறவுகள்’, ‘ஆரொடு நோகேன்’, ‘எங்கள் தவப்பயன்’, ‘சிலையின் சீற்றம்’, ‘பாரதியின் பாஞ்சாலி சபதம்’, ‘மனத்தவம்’, ‘வையத்துள் தெய்வம்’, ‘யார்க்கெடுத்துரைப்பேன்’, ‘அளப்பருங்கருணை’, ‘ஒற்றுமையின் சின்னம்’, ‘மூத்த கனவு’, ‘உன் கையில் பிள்ளை’, ‘கண்டனன் சீதையை’, ‘யாதும் ஊரே’, ‘நாய்படாப்பாடு’ என 133 நாடகப் பிரதிகளையும் 49 மொழிபெயர்ப்பு நாடகங்களையும் மொழிபெயர்த்துள்ளார். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு பிரச்சினைகளைப் பேசி நின்றதோடு அவற்றுக்கேயுரிய பொருத்தமான மோடிகளையும், வடிவங்களையும் தன்னகத்தே கொண்டமைந்தன.

இவற்றுள், ‘அன்னை இட்ட தீ’, ‘வேள்வித்தீ’, ‘மண்சுமந்த மேனியர்’, ‘நரகொடு சுவர்க்கம்’, ‘எந்தையும் தாயும்’, ‘ஆர் கொலோ சதுரர்’, ‘மனத்தவம்’, ‘பதியெழு அறியாப் பழங்குடி’, ‘அம்பலத்தார்’, ‘இனந்தெரியாதவர்’, ‘ஒட்டகம்’, ‘மாந்தோப்பு மயானம்’, ‘நீ செய்த நாடகமே’ என்பன போரியல் சார்ந்த கருத்துகளைப் பெருமளவில் பேசுகின்ற படைப்புகளாகக்

காணப்படுகின்றன.

போர் ஏற்படுத்திய மன வடுக்களைக் கூறுவதாக, 'அன்னை இட்ட தீயும்' போரின் காரணமாக பிள்ளைகள் சொந்த மண்ணில் வாழ முடியாமையின் நிமித்தம் 11 பிள்ளைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டுத் தனித்திருக்கும் பெற்றோரின் அவலத்தைக் கூறுவதாக, 'எந்தையும் தாயும்' நாடகமும், போரில் வெற்றி அல்லது முடிவு ஒன்றில்லை, தோற்பது மனிதம் தான் என்பதனை பாரதப்போரின் 14 நாள் போரை மையப்படுத்திக் கூறுவுதாகதாக 'ஆர்கொலோ சதுரர்' நாடகமும் 1987-ல் நடைபெற்ற மாணவர் வல்லுறவு மற்றும் அது சார்ந்த பிரச்சினைகளைக் கூறுவதாக, 'வேள்வித்தீ'யும், இராமன் சீதையைத் தீக்குளிக்கக் கேட்டது போல் மக்களையும் கேட்கிறீர்கள் என அன்றைய அரசியலைப் பேசுவதாக, 'மனத்தவமும்' ஈழத்தமிழ்ச் சமூகம் போரின் ஊடாகப் பட்டபாடுகளையும் அதை எதிர்த்து வாழத்தலைப்பட வேண்டிய உணர்வையும் ஊட்டுவதாக, 'மண்சுமந்த மேனியர்' நாடகமும் அமைகின்றன. இவற்றுள், 'மண்சுமந்த மேனியர்', 'அன்னை இட்ட தீ', 'எந்தையும் தாயும்' ஆகிய மூன்று படைப்புகளும் போர்க்கால வாழ்வியல் குறித்த முக்கிய படைப்புகளாகும்.



## மண்சுமந்த மேனியர் நாடக உருவாக்கப் பின்னணி:

1983-ல் ஈழத்தமிழரது தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றிருந்த காலம். இனக்கலவரங்கள், படுகொலைகள் நிகழ்ந்த பயங்கரச் சூழல். பல விடுதலை இயக்கங்கள் தோன்றி ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த தொடக்க காலம். இங்கு அரங்க செயற்பாடுகள் பற்றி முன்னெடுப்பதற்கோ அது பற்றிய கலந்துரையாடல்களை நிகழ்த்துவதற்கோ முடியாத சூழல். இராணுவம் குறித்த அச்சம் அனைவரையும் ஆட்கொண்டிருந்த நிலமையில் மக்களைப் போராட்டத்திற்குத் தயார்படுத்துவது மட்டுமன்றி, ஈழத்தமிழ் மக்களது பாடுகள், விடுதலைப் போராட்டம், அது குறித்த விழிப்புணர்வுகளை வழங்க வேண்டிய அவசியமான காலச்சூழலில் அரங்கினூடான வெளிப்பாடாக முகிழ்ந்தெழுந்த வடிவமே மண்சுமந்த மேனியர்.

போர், அதனால் மக்கள் சுமந்த பாடுகள், எதிர்த்து வாழத் துணிதல் போன்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துகின்ற படைப்பான மண்சுமந்த மேனியர், 1985-ல் யாழ் குடாநாடு முழுவதும் 60 மேடையேற்றங்களைக் கண்டது. அதனூடாக தமிழ்ச் சமூகத்தினரிடையே பெரும் அதிர்வலைகளைத் தோற்றவித்ததோடு அனைவரையும் திருப்பிப் பார்க்கவும் அது பற்றிப் பேசவும் வைத்த படைப்பு என்ற வகையில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகப் பிரதிகளுள் 'மண் சுமந்த மேனியரை' பிரதானப்படுத்தி அது வெளிப்படுத்தி நிற்கும் போர்க்கால வாழ்வியல் குறித்து இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

## பேசுபொருள்:

யாழ்ப்பாணத்தில் வாழும் சாதாரண விவசாயக் குடும்பத்தையும் அவர்களோடு உற்றார், உறவினர், அயலவர் எனப் பல பாத்திரங்களையும் இணைத்துக் கட்டமைக்கப்படும் கதைப் பின்னலூடாக 'மண் சுமந்த மேனியர்' போர்க்கால வாழ்வின் பல்வேறு பக்கங்களைப் பேச விளைகிறது.

யாழ் மண்ணில் நிகழ்ந்த, போர், அது சமூகத்தில் தோற்றுவித்த காயங்கள், வலிகள், சமூகப் பிறழ்வுகள், மனப் போராட்டங்கள் என்பனவற்றை மையக்கருவாகக் கொண்டமைந்த இந்நாடகம் விவசாயக் குடும்பத்தினூடாக யாழ்ப்பாணச் சமூகநிலை மாற்றங்களைக் கூறி நிற்கிறது. நாடகத்தின் இறுதியில், எது வந்தபோதும் எமது மண்ணில் தலை நிமிர்ந்து வாழுதல், வெளிநாட்டு மோகம், 'நான்' எனும் சுயம் என்பவற்றைத் தவிர்த்து 'எங்கடை', 'எமது' என்கின்ற பொது நோக்கோடு அனைவரும் ஒன்றுபட்டு வாழத்துணிதல், எல்லையில் நின்று பேசிப் பயனில்லை. அனைவரும் ஓரணியில் திரண்டு களத்தில் இறங்கிப் போரிட வாரீர் என்கின்ற அறைகூவல் பார்ப்போரிடத்தே விடப்படுகின்றது.

"நான் ஒரு நாட்டுக்கும் போகேல்லை. இதுதான் என்ர நாடு!
இதுதான் என்ர பூமி! இது தான் என்ரை மண்.
இந்த மண்ணிலை காலடி வடிவா(ய்)ப் பதிச்சு
உறுதியா நிண்டு, எல்லாரும் ஒண்டுபட்டு பாடுபடுவமெண்டால்...

ஏராளமாய் விளையும், தாரளமாய் கிடைக்கும்.
தன்மானத்தோடை நாங்கள் தலைநிமிர முடியும்!"

என்று கூறுவதோடு நாடக மாந்தர்கள் அனைவரும் உறுதியும் தீர்க்கமுமான முடிவும் உற்சாகமும் கொண்ட உள்ளத்தின ராக அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பதாக அரங்கில் செய லியக்கம் இடம்பெறுகின்றது. இது போன்ற ஒன்றுபடுதல் பார்ப்போரிடத்திலும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய ஒன்றுபட்ட சித்தரிப்பின் போது பின்வரும் பாடல் பாடப்படுகி றது.

*'அயலும் புடையும் வாழவேண்டும்*
*அன்னமும் சுற்றமும் வாழவேண்டும்*

*ஆச்சியும் அப்புவும் வாழவேண்டும்*
*அம்மானும் மாமியும் வாழவேண்டும்*
*'இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பாக,*
*எம் முன்னோர் நடந்த நிலப்பரப்பு*
*'ஒரு காலடி ஆனால்*
*ஓராயிரம் ஆண்டு*
*எம்வேர் நீண்டுள்ளது.'*

(பலஸ்தீனக் கவிதை)

என்பதற்கூடாக முகமிழந்து, முகவரியிழந்து, முதுசங்களைச் சிதைத்து, உறவுகளையிழந்து, எமக்கான அடையாளங்க ளைத் தொலைத்து இனியும் நாம் வாழத்தலைப்படோம் என்ப தும் மண் மீதான பற்றுறுதி மிக்க வாழ்வும் அழுத்தம் பெறு கின்றன. இதனையே 'மண்சுமந்த மேனியர்' எனும் நாடகத் தலைப்பும் காவி நிற்கிறது.

*எது வந்தபோதும்*
*மண் நினைவை மூச்சாக கொண்டவர்களாக*
*மண் வாசனையை நுகர்ந்தவர்களாக*
*மண்ணுக்காய் வாழ்பவர்களாக*
*மண்ணிலே வாழ்பவர்களாக*
*மண்ணுக்காய் மடிபவர்களாக*
*மண்ணிலே தொழில் புரிபவர்களாக*
*மண்ணை வளப்படுத்தக் கூடியவர்களாக*
*மண்ணுக்காய்ப் போராட வல்லவர்களாக*
*மண்ணை அடகு வைக்காதவர்களாக*
*மண்ணை எதிரியிடமிருந்து பாதுகாத்து*
*வாழத்துணிவது தான் 'மண் சுமந்த மேனியர்'.*

"இந்த மண்ணைச் சுமக்கும் புழுதி படிந்த மேனியரது வாழ்க் கையின் ஓர் துண்டம் அரங்கில் நாடகமாக எடுத்துக்காட்டப்ப டுகின்றது." என்ற பேரா. கா. சிவத்தம்பி அவர்களின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

## விவசாயக் குடும்பத் தெரிவும் பொருத்தப்பாடும்:

ஈழத்தமிழர் புரியும் எண்ணற்ற தொழில்கள் இருக்க ஏன் விவ சாயக் குடும்பத்தைக் கதையின் பாடுபொருளாக நாடகாசிரி யர் தெரிவு செய்தார்? ஏனைய தொழில்களை விட விவசாயத் துக்கும் மண்ணுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மண்ணும் மக்கள் வாழ்வியலும் இரண்டறக் கலந்த தொழில் விவசாயம். நிலத்தினைப் பண்படுத்துகையில் அதனால் நிறைந்த அறுவ டையும் வளமான வாழ்வும் கிடைப்பதைப் போன்று எமது மனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். 'நான்' என்ற சுயம் இழந்து 'நாம்' என்ற எண்ணம் ஓங்க வேண்டும். காசு, பணம், சொகுசு, அந்நியதேசம் என்ற சிந்தனையை மறந்து எமது நாடு, எமது மண், எமது சுதந்திரம் என்ற எண்ணம் வளர வேண்டும். தனி ஒருவராய் அன்றி ஒன்றுபட்டு உழைக்க வேண்டும், ஒற்றுமையாய் வாழ வேண்டும், பிறர் உழைப்பில் நாம் வாழும் நிலை மாறவேண்டும்... ஆகிய மனித மனங்கள் சார்ந்த பண்படுத்தல்களும் இங்கு பேசப்படுகின்றன. அவற் றின் அடிப்படையில் ஆசிரியரது விவசாயக் குடும்பத் தெரிவு மிகப்பொருத்தமானது.

'கூலிக்கு மண்ணிலை வேலை செய்த எங்கடை காலிலை, இந்த மண்தான் காவி படிந்திருக்கு.

காலிலை மட்டுமே, காலம் காலமா குந்தி இருந்து மண்ணைக் கிளறினம். மண்ணிலை இருந்து கிளம்பிற புழுதி, வேர்வை யாலை நனைஞ்ச எங்கடை கோவணச் சீலையிலை படிஞ்சு ஊறிக் கிடக்குது.

தோய்க்கத் தோய்க்க மண்காவி ஏறிச் சிவப்புக் கொடி யா(ய்)க் காத்திலை ஆடிக்காயுது.

முற்றும் துறந்து பரதேசம் போக அல்ல, எங்கடை கந்தல்லை காவி படிஞ்சது.

இந்த மண்ணிலை பற்று வச்சு, இஞ்ச நிண்டு எதிர்த்து வெல்ல, உரந்தரத்தான் எங்கடை உடுப்பிலை மண்காவி படிஞ்சிருக்கு.'

உடலில் மட்டுமன்றி அணிந்திருக்கும் உடையிலும் புழுதி தோய்ந்தவர்களாக மண்ணுக்கும் மானுடருக்குமான பிணைப்பு, மண் மீதான தீராத தாகம் என்பன போரிடருக்குள் இருந்து மீண்டெழுந்தவர்களாக யாருடைய ஆதிக்கத்தின் பிடிக்குள் ளும் அகப்படாமல் விடுதலையும், சுதந்திர உணர்வும் மகிழ்ச் சியும் கொண்டவர்களாக எமக்கான தேசத்தில் எமது சொந்த மண்ணில் வாழத்துடிப்பது தான்.

*'நூறு நூறாயிரம் தோள்களின் மீது ஏறி நின்று*
*எனது நிலம் என உரத்துச் சொல்கிறேன்.*
*'ஏழு சமுத்திர வெளிகளைத் தாண்டி*
*அதன் மேல் எழுகிற அலைகளை மீறி*
*அதனைக் கொண்டு போய்*
*எங்கும்; ஒலிக்கிறது காற்று'*
*'எனது நிலம் எனது நிலம்'*

(சேரன் கவிதைகள்)

'ஓம் இது என்ரை நிலம் எனக்கு முன்னம் என்ரை அப்பு அப்பு வின்ரை அப்பு, அவற்றை அப்பு, எண்டு காலாதி காலமா எங் கடை சனங்கள் குந்தியிருந்து வந்த நிலம். உறுதியள் எங்க ளிட்டை இதுகளுக்கில்லை, ஆனால் இதிலை இருந்தே தீரு வம் எண்ட மன உறுதி எங்களிட்டை இருக்கு.' 'உறுதியள் எங் களிட்டை இதுகளுக்கில்லை' என்பது கூட போர் தந்த பேரவ லம் தான். தொடர்ச்சியாக இடப்பெயர்வுகள், பேரழிவுகள் என் பன தமிழர் தம் இருப்புக்கான அடையாளச் சின்னங்கள், ஆவணங்களை இழப்பதற்கான காரணங்கள். இது மட்டு மன்றி இவை எமது தேசத்தை அபகரிப்பதற்கான அடையா ளங்களின் அழித்தொழிப்புகளும் கூட.

நாடக நிகழ்வின் தொடக்கத்திலேயே போர்ச்சூழல் தந்த வெளிப்படைத்தன்மையற்ற மறைவான வாழ்வு மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது. நாடகம் தொடங்கும் போது கணபதியை வேண்டிப் பாடும் பாடலானது திரை மறைவுக்குள் இடம்பெறுகிறது. இது மட்டுமன்றி கடவுளை வணங்குவது கூட பயந்தொதுங்கி மறைந்து வழிபட வேண்டிய நிலைமை குறிப்பாக வெளித்தெரிய வருகிறது.

'... ... ... ஆபத்துணையே கணபதி சரணம்'

என்ற பாடலடியூடாக எந்தவொரு ஆபத்தும் எம்மை நெருங்கி வராதபடி எம்மைக் காத்தருள்வாய் என்ற பய உணர்வு வெளிப்பாட்டின் குரலாக மேற்கிளம்புகிறது. இந்நிலைமையிலிருந்து தம்மைச் சுதாகரித்துக்கொண்டு முன்திரையை சற்று விலக்கிக் கொண்டு வந்த உரைஞர்கள்,

'காத்தருளுங் கருணாகரணேகம லாசினி காவலனே'

என வேண்டுவதும் போர்ச்சூழலும் அச்சூழலுக்குள் வாழும் எமக்கு எந்நேரத்திலும் வரக்கூடிய ஆபத்து சார்ந்த பய உணர்வும் வெளிப்பட்டு நிற்கின்றன..

## காலமும் நாடகப்பிரதியும்:

இந்நாடகம் எழுந்த காலப்பகுதி (1985) ஈழத்தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டம் குறித்த ஒரு விழிப்புணர்வை வேண்டி நின்ற காலம். இராணுவ அக்கிரமங்கள், வன்முறைகள் முனைப்புப் பெற்றிருந்த காலம். மக்கள் சுதந்திரமாக நடமாடுதல், கலைச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், மக்கள் ஒன்று கூடி எதனையும் வெளிப்படையாகப் பேசுதல் என்பன அச்சுறுத்தலுக்குரியவையாக நோக்கப்பட்ட காலம். இந்தப் பயங்கர உணர்வின் வெளிப்பாடாக அதிலிருந்து எதிர்பார்க்கும் விடுதலை உணர்வு, அவ்வுணர்வைப் பேச முற்படுகையில் எதிர்கொள்ளும் அச்சுறுத்தலுக்கான பாதுகாப்பு என்பது அக்காப்பு வணக்கத்தினூடாக எமக்குக் கிடைக்கும் செய்தியாகிறது.

## நாடக நுட்பங்கள்:

எந்த ஓர் இலக்கியமும் அது வாழும் காலத்து நிலைமைகளைப் பிரதிபலித்து நிற்கும். அது மட்டுமன்றி தனக்கான வடிவத்தைத் தீர்மானிப்பதிலும் அது எழுந்த காலம், சமூக, அரசியற் பின்புலங்களும் செல்வாக்குச் செலுத்தும். சமூகத்தில் நாம் படும் பாடுகளை வெளிப்படையாகப் பேசமுடியாத சூழல், கலைப் படைப்புக்கள் ஒவ்வொன்றும் தமது பாடுபொருளை வெளிக்கொணரப் பொருத்தமான நாடக நுட்பங்களைக் கையாள்வதற்கு வழிவகுக்கிறது.

இந்தப் பின்னணியில் எதனையும் வெளிப்படையாகப் பேசுவதில் உள்ள அச்சுறுத்தல், கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலைமை, எடுத்ததற்கெல்லாம் ஆயுதமுனை மிரட்டல் போன்ற நேரடியாகப் பேசமுடியாத பல விடயங்களை, மண் சுமந்த மேனியர் நாடகப் பிரதியில்; காவிய அரங்கப்பாணி, குறியீட்டு வாதம், கவிதைகள், நாட்டார் பாடல்கள், இதிகாசங்கள் என்பவற்றைக் கதையின் இடையே பொருத்தமான



வகையில் பயன்படுத்தி ஆசிரியர் குறிப்பால் உணர்த்திச் செல்கிறார்.

உதாரணமாக: பாண்டவர் - துரியோதனன், சூதாட்டம், பாஞ்சாலி, துகிலுரிதல், சங்கரன் கொடுத்த வாள், கிரிக்கெற் விளையாட்டு, நிலம் முழுவதும் சேறும் சகதியும், கல்லும் முள்ளும், வரம்பு, வயல் போன்ற சொற் பயன்பாட்டினூடாக குறியீடாக எமது வாழ்வு உணர்த்தப்படுகிறது.

நாடக நிகழ்வின் தொடக்கத்திலேயே, பாரதக் கதையில் இருந்து, குறிப்பாக பாஞ்சாலி சபதத்தினூடாக பாண்டவர் தனியரசு புரிந்து அரசாட்சி மேற்கொண்டு வரும் நாளில் துரியோதனன் அவர்களைச் சூது விளையாட அழைப்பதும் வஞ்சகத்தால் சகுனி காய்களைத் தவறாய் உருட்டி மாநகர்



இழந்து மடமாதை வைத்தாடுவதும் துச்சாதனனை அழைத்து அவள் துகிலதனை உரியச்செய்வதும் கண்ணன் மனமிரங்கி அவளைக் காப்பதும் இதனைப் பார்க்கப் பொறாத வீமன் கடுஞ்சினங் கொண்டு தண்டத்தை எடுத்தான், என காவிய அரங்கப் பாணிக்கூடாக எடுத்துரைப்பதும், நிகழ்த்திக்காட்டுவதுமாக குறியீட்டுப் பாங்கிலும் எமது போர்க்கால வாழ்வியல் எடுத்தியம்பப்படுகின்றது.

மேலும், இருதரப்பினரிடையே நிகழ்ந்த போரும் மூன்றாம் தரப்பினரது தலையீடுகள், சதி முயற்சிகள், அதனூடாக எமது தேசத்தை அதிகார வர்க்கத்தினர் தம்வசப்படுத்த நினைத்த முயற்சிகள், பாரதத்தில் பாஞ்சாலி போல் ஈழத்தில் பெண் குலத்துக்கு நிகழ்ந்த வன்முறைகள், இதனால் நிகழ்ந்த உயிர்ப்பலிகள். இத்தகைய பேரவலம் தந்த ஆயுதப் போராட்டத்தின் தேவை ஆகிய விடயங்களை உரைஞர்களூடாக நிகழ்த்திக்காட்டிய விதம் ஒரு புறம் இருக்க, எமது துயர் சூழ்ந்த வாழ்வை வெளிப்படையாகப் பேசக்கூட உரிமை மறுக்கப்பட்ட சூழலை ஆசிரியர் கையாண்ட குறியீட்டுப் பாணி, காவிய அரங்கப்பாணி நுட்பங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன. பாஞ்சாலி, "கண்ணா! கண்ணா!" எனக் கதறி அழைக்க, மேடையில் உள்ள பார்ப்போரும் "கண்ணா! கண்ணா!" எனக் கதறி, பக்திப்பரவச உச்சநிலைக்குச் செல்வர். இப்பாத்திரங்களை ஏற்று நடித்த உரைஞர்கள் தாம் ஏற்ற பாத்திரங்களில் இருந்து விடுபட்டவர்களாகின்றனர்.

"இது நடந்தது பாரதத்திலை. பாரதம் இதிகாசம்; அது வரலாறில்லை எங்கடை வாழ்வு இதிகாசமில்லை, அது வரலாறு. இதிகாசத்திலை, அதாவது கதையிலை கண்ணன் வருவான். மானங்காப்பான்." என்று உரையாடல் நாடக பாடத்தில் முற்றுத் தரிப்போடு முடிவடைந்தாலும்

'எங்களுக்கு யார் வருவார் ?' என்ற ஏக்கப் பெருமூச்சு, பார்ப்போர் மனவெளியில் ஈழத்தமிழ்ப் பெண் குலத்தின் பாடுகளையும் வலி சுமந்த காட்சிகளையும் தாங்கிக் குறிப்பால் வியாபிக்கின்றன.

இங்கு அந்நியமாதல் நுட்பம் ஆனது. நடிகர் தான் ஏற்கும் பாத்திரங்களுக்கான ஆஹார்ய அபிநயங்களை விடுத்து அந்நியப்பட்டு நின்று ஆங்கிக அபிநயத்தின் வழி தன்னை அப்பாத்திர செயலியக்கங்களுக்கூடாக வெளிப்படுத்துவதோடு முன்னர் நடந்த இதிகாசக் கதையை நிகழ்த்திக் காட்டும் வகையில் கதையானது பார்ப்போரிடத்தில் அந்நியப்பட்டு நிற்கின்றது.

நாடகவாக்கத்தின் போது குறிப்பால் உணர்த்த ஆசிரியர் காவியப்பாணி நுட்பத்தைக் கையாண்ட போதும், கருவில் இருந்து குண்டுச் சத்த ஓசைகளைத் தாலாட்டுகளாகக் கேட்டு வளர்ந்த பார்ப்போருக்கு அவர்கள் அனுபவித்த பாடுகள் சார்ந்த சித்தரிப்புகளை அரங்கின்வழி தரிசிப்பதன் ஊடாக அவர்களை ஒன்றிக்கச் செய்யும். ஆயினும் ஆற்றுகை நிகழ்த்தப்பட்ட காலமும் அக்காலத்து அரசியல் சமூக நிலைமைகளும் புற அச்சுறுத்தலில் இருந்து நாடக வடிவத்தையும் கலைஞர்களையும் பாதுகாக்க வேண்டிய சந்தர்ப்ப சூழலும் அது சார்ந்த தேவையும் இதுபோன்ற உத்திகளைக் கையாள வேண்டிய கட்டாயத்தை ஆசிரியருக்கு காலம் வழங்கியிருக்கிறது. இதற்குக் காலம் துணை போனது எனலாம்.

சொந்தமாக கையிருப்பில் ஆயுதமில்லாத போதும் அயலவரிடம் இரவல் வாங்கியென்றாலும் அடுத்தவரை அழிக்க வேண்டும் என்கின்ற ஆளும் வர்க்கத்தின் போர் வெறித்தனம் இராமாயணத்திலிருந்து உணர்த்தப்படுகிறது.

'வாரணம் பொருத மார்பும்......' எனத் தொடங்கும் பாடலூடாகவும் 'இலங்கை வேந்தர், அன்றும் இரவல் ஆயுதத்தில் தான் வீரம் புரிந்தனர்.' எனும் உரையாடலுக்கூடாகவும் இதனை அறிய முடிகின்றது.

இந்த இரவல் ஆயுதத்தில் நிகழ்த்திய வீரத்தில் சிக்குண்டு உயிர்நீத்த அப்பாவி மக்கள் எத்தனை ? பெற்றோரை இழந்து ஏதிலிகளாக்கப்பட்ட குழந்தைகள் எத்தனை ? வீடிழந்து, சொத்துச் சுகமிழந்து இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் நம் உறவுகள் எத்தனை ? கால் கைகள் இழந்து அங்கவீனர்களாக்கப்பட்ட உயிர்கள் எத்தனை ?

இத்தனை துயரங்களும் இலங்கை வேந்தர் இரவல் ஆயுதத்தில் வீரம் புரிந்தனர்' என்ற மேற்படி இராமாயணப் பாடலடியிலும், உரைஞர் உரையாடலுக்குள்ளும் மறைவாக எமக்கு உணர்த்தப்படுகின்ற உணர்வுமிக்க எண்ணவோட்டங்கள்.

இராமாயண, மகாபாரதக் கதைகளை மட்டுமல்ல எமது துயர் சுமந்த வாழ்வை வெளிப்படுத்த, பொருத்தமான கவிதைகளையும் ஆசிரியர் கையாண்டுள்ளார்.

***'எழுதப்படாத சரித்திரம்***
***துயர் சூழ்ந்து***
***ரத்தம் சிந்திய நிலங்களின் மீது***
***நெல் விளைகிறது***
***சணல் பூக்கிறது***
***மழை பெய்கிறது.'***

என அமையும் 'சேரனின் 'இரண்டாவது சூரியோதயம்' எனும் கவிதை குறிப்பிடும் 'ரத்தம் சிந்திய நிலங்களின் மீது' என்கின்ற வரி எத்தனையோ மனித உடல்களின் உயிர்ப் பலிகளை நினைவுபடுத்தி நிற்கின்றது.
'அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய்' என்பதற்கேற்ப சிறிய சிறிய அதிர்வுகளுக்கெல்லாம் மருண்டு வாழும் சோகம்.

'சீன வெடிக்குப் பறக்கிற காகங்களா(ய்)ச் சில்லறைச் சத்தத்துக்கெகெல்லாம் சிதறி ஓடுறம்.' எத்தகைய பேரவலம்.

***'முந்நூறு வேதியர் முன் எனக்கு***
***முகூர்த்தமிட்ட மாங்கல்யம்***
***மூவர் சபையிலே - நீர்***
***முறித்தெறிந்தும் போனிரோ'***

என்ற அன்னையின் ஒப்பாரிப் பாடலானது போரில் உடன்பிறந்தோர் இழப்புகளையும் கணவனை இழந்து விதவையாக்கப்பட்ட பெண்களது பேரவலங்களையும் நினைவில் நிறுத்துகின்றது. மேற்படி அவலக்குரல்களைத் தொடர்ந்து எதனையும் எதிர்கொண்டு துணிந்து வாழத் தலைப்பட வேண்டும் என்ற மன வைராக்கியத்தோடு படைக்கப்பட்ட கிழவன் பாத்திரம் கூட ஒரு கணம் தட்டுத்தடுமாறி இச்சந்தர்ப்பத்தில்,

***'இனிப்பட முடியாது இத்துயரம்***
***பட்டதெல்லாம் போதும் அப்பா'***

எனச் சொல்வதனூடாக தமிழ்ச் சமூகம் அனுபவித்த போரின் கொடுமைகள் அத்தனையும் இவ்விரு வரிகொண்ட உரையாடலுக்கூடாக பிழிந்து சாறாய்த் தரப்படுகிறது.

ஈழத்தமிழ்ச் சமூகம் இத்தனை துயரிடையே துடிதுடித்த போதும் ஆல் இந்தியா ரேடியோ மாநிலச் செய்தியில் போபால் எரிவாயுக் கம்பெனி விபத்து, அன்னை இந்திரா காந்தியின் அஸ்தி குறித்த செய்திகளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் கூட அயல் நாடான இந்தியாவில் இருந்து ஈழத்தமிழ்ச் சமூகத்துக்குக் கிடைக்கவில்லை என்பதும் இந் நாடகத்தில் வெளிப்படையாக உணர்த்தப்படுகிறது. "இவங்களும் இப்ப சேர்ந்து விளையாடுறாங்கள்'"என்கின்ற நண்பரது உரையாடலூடாக இது வெளித்தெரிகின்றது.

## பாத்திரங்கள்:

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களது நாடகப் பிரதிகளில் நாடக மாந்தர்களின் பங்கு முக்கியமானதாகும். மண் சுமந்த மேனியரில் இடம்பெறும் 'தாய்' என்கின்ற பாத்திரம் குடும்பத்துக்கான விடுதலையை வேண்டி, பிள்ளையின் படிப்பை நம்பி இருப்பவராகவும் 'தந்தை' எனும் பாத்திரம் போர் வாழ்வுக்குள் குடும்பத்தின் நாளாந்த வாழ்வாதாரச் சுமையை சமாளிக்கப் பாடுபடுபவராகவும் விடிவு வேண்டி இடையிடையே சில சமய சம்பிரதாயங்களில் நாட்டம் கொள்பவராகவும் ஊரவர், அயலவர்கள் என்கின்ற பாத்திரங்கள் அவ்வப்போது சமூகத்தில் நடக்கின்ற நிலைமைகளைப் பகிர்ந்து கொள்பவர்களாகவும், மற்றவர்களுக்கு நடந்தது எமக்கு நடக்கவில்லை என நிறைவு கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கிழவன் என்கின்ற பாத்திரம் யதார்த்தத்தைப் புரிந்து வாழ்கின்ற, நியாயங்களைத் தட்டிக்கேட்கின்ற, புத்தி புகட்டுகின்ற, சமூகத்து நிலமைகளை விமர்சிக்கின்ற பாத்திரமாக மட்டுமன்றி மண்சுமந்த மேனியர் என்கின்ற நாடகத்தின் பிரதான செய்தியையும் அதன் உணர்வலைகளையும் காவி நிற்கின்ற பாத்திரமாக சமூகப்பற்று, மண்பற்று அத்தனையும் ஒருங்கே சேரப்பெற்ற பாத்திரமாக சித்தரிக்கப்படுகின்றது.

இப்பாத்திரங்கள் தமிழ்ச் சமூகத்துப் போர்ச் சூழலுக்குள் வாழும் மனிதர்களது வேறுபட்ட குணாதிசயங்களைப் புலப்படுத்தி நிற்கின்றன. இந்த வகையில் ஜீவநதியில் இடம்பெறும் விரிவுரையாளர் க. ரதீதரனின், 'சண்முகலிங்கம்: ஒரு சமூகத்தின் சாட்சி' என்கின்ற கட்டுரையில் இடம்பெறும் சண்முகலிங்கம் அவர்களது பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டுக் கூறுதல் பொருத்தமுடையது.

'அரங்கப் படைப்புக்களில் நாடக மாந்தர்களை முக்கியமாகக் கருதும் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள், 'மண்சுமந்த மேனியர் நாடகத்தில் 'தமிழன்' என்றொரு பாத்திரம் தான் இருக்கிறது. அதுவே பல பாத்திரங்களாக, தமிழனின் பல்வேறு குணாதிசயங்களோடு இருக்கின்றது' என்கின்றார்.

இந்த வகையில் ஆறாத் துயரங்களாக போர் எம் சமூகத்தில் நேரடியாகத் தோற்றுவித்த பாதிப்புகளை மண்சுமந்த மேனியர் ஊடாகத் தரிசிக்க முடிகிறது.

## யுத்தத்தினால் சமூகத்தில் தோற்றுவிக்கப்பட்ட விளைவுகள்:

எமது தமிழ்ச்சமூகம் 30 ஆண்டுப் போரினுள் அகப்பட்டு எதிர்கொண்ட இன்னல்கள் ஒருபுறமிருக்க அவை சமூகத்தில் ஏற்படுத்திய பாதிப்புகள் என்பன இன்றுவரை எமது சமூக வாழ்வியல் பிறழ்வுகளில் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றன என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. இதனடிப்படையில் மண் சுமந்த மேனியர் நாடகப் பிரதியூடாக அது வெளிப்படுத்தி நிற்கும் போர் சமூகத்தில் தோற்றுவித்த விளைவுகள் குறித்து நோக்குவோம்.

- பிறர் தியாகங்களில் நாம் குளிர்காய நினைத்தல்
- நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என நினைத்தல்
- பாசம், பற்று, மனிதம் அனைத்தையும் இழந்து வாழும் மனப்பாங்கு
- ஊரவன் சாவில் பயன்பெற நினைத்தல்
- கடன், வட்டி ஆகியவற்றில் அகப்பட்டு மீள முடியாது

தவித்தல்
- அடுத்தவரிடத்தில் கையேந்தி வாழ நினைத்தல்
- ஏழை, பணக்காரர் என்கின்ற வர்க்க பேதம்
- வெளிநாட்டுப் பண வருவாயும் அதனால் எழும் சீதனப் பிரச்சினையும்
- போதைபொருள் கடத்தல்
- கலாசாரச் சீரழிவு, அந்நிய கலாசாரப் பரவலாக்கம் என்பன பாத்திர உரையாடல்களுக்கூடாக வெளித்தெரிய வருகின்றன.

எடுத்துக்காட்டாக,
கலாசாரச் சீரழிவு அந்நிய கலாச்சாரப் பரவலாக்கம் ஆகிய பண்புகள்.
'கப்பலேறின மாப்பிளையின்ரை புதுக்குடும்பத்தின்ரை மானம் இஞ்சை கப்பல் ஏறுறதும் உண்டு'
'தனித்துவம் கெட்டுச் சர்வதேசச் சாம்பார்ப் பண்பாடு இங்கு பரவலாமா ?'

என்கின்ற உற்றார், கிழவன் ஆகிய பாத்திர உரையாடலுக்கூடாக வெளித்தெரிவதை இங்கு குறிப்பிட்டுக் கூறமுடியும்.

இவ்வாறு 1980-களில் போர் சமூகத்தில் தோற்றுவித்த பாதிப்புகளை மண்சுமந்த மேனியர் நாடகப் பிரதியானது பாத்திர உரையாடலுக்கூடாக மிகத்தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது. அன்று இப்பிரதி சுட்டிக்காட்டிய, சமூகத்தில் தோற்றுவிக்கப்பட்ட பாதிப்புகள் இன்றுவரை நம்மிடையே தொடர்ந்து வருவது மட்டுமன்றி போர் முடிந்தும் முடியாதது போன்ற மௌன யுத்தத்திற்கான உணர்வலைகளை, போர்ச் சூழலைவிட இரட்டிப்பான மிக மோசமான நிலைமைகளை, இன்றுவரை எமது சந்ததியிடையே பரவலடையச் செய்து கொண்டிருக்கிறது என்பதனை எமது வாழ்பனுபவங்களினூடாக அறிய முடிகின்றது.

எடுத்துக்காட்டாக கலாசாரச் சீரழிவு, ஏழை - பணக்காரர் என்கின்ற வர்க்க பேதம், கடன் - வட்டி என்று குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடுகள், வன்முறைகள் என்பதற்கப்பால் பலரைத் தற்கொலைக்கும் தூண்டியுள்ளது. இது தவிர போதைபொருட் பயன்பாடு என்பது இன்று பாடசாலைச் சிறார்கள் முதல் சமூகத்தில் வயது வந்தவர்கள் வரை மிகப்பயங்கரமான வகையில் விஸ்வரூபம் எடுத்து சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருப்பதும் இதனால் பல மாணவர்கள் சிறை செல்லக் கூடக் காரணமாய் அமைவதுடன் சமூக மட்டத்தில் களவு, கொலை, பாலியல் வல்லுறவு என்கின்ற பல வன்முறைகளுக்கும் தூண்டு கோலாகவும் அமைந்து விடுகின்றது.

இத்தனை அவலங்களும் எமது சமூகத்தில் இன்றுவரை தொடர்கின்றனவென்றால் இவை அனைத்தும் கடந்த 30 ஆண்டுகாலப் போரின் விளைவுகளே. 80-களிலே குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் தனது மண் சுமந்த மேனியருக்கூடாக சமூகத்தின் பேரிடர் சூழ்ந்த வாழ்வியல் முறைகளையும் அதனால் ஏற்பட்ட தாக்கங்களையும் படம் பிடித்துக் காட்டுகின்றார். நாடகத்தில் கூறப்படும் விடயங்கள் இன்றும் எம்மக்கள் வாழ்வினூடாகப் பிரதிபலிப்பதனை எமது கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. மண்சுமந்த மேனியர் எனும் நாடகப் பிரதி காலம் கடந்தும் வாழும் ஒரு சிறந்த படைப்பாக நம்மிடையே உயர்ந்து நிற்கிறது.

'மாடுண்டு கண்டுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம் கேடு'

'பழிகளுக்கை எல்லாம் பெரும்பழி குமர்ப்பழி'

'தன் கையே தனக்குதவி'

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'

'போதுமெண்ட மனமே பொன்செய்யும் மருந்து'

போன்ற விழுமியக் கருத்துகளையும் இந்நாடகம் சமூகத்தினரிடையே வலியுறுத்த விளைகிறது.

கலைப்படைப்புகள் காலத்தின் பதிவுகளாகி மக்களது வாழ்வியல் முறைமைகளைக் காலங்கடந்தும் பேசவல்லன. அதன் வழி மக்களை நெறிப்படுத்தி வழிப்படுத்த வல்லன. ஈழத்தமிழரது போர்க்கால வாழ்வியல் குறித்த முக்கிய பதிவுகளுள் முதன்மை வாய்ந்த படைப்பாக அனைவரதும் கவனத்தைப் பெற்ற 'மண்சுமந்த மேனியர்' எண்பதுகளில் தமிழ்ச் சமூகம் அனுபவித்த போர்க்கால வாழ்வியலை, உரிமைக்கான போராட்டங்களை, போர் சமூகத்தில் விட்டுச் சென்ற பேரவலங்களை, சொந்த மண் மீதான பற்றுறுதி மிக்க வாழ்க்கையை, மக்களது வாழ்வியல் நெறிமுறைகளை வலியுறுத்துவதோடு அக்கால மக்களது போர்வலி மிகுந்த வாழ்வின் பல்வேறு பக்கங்களது பிரதிபலிப்பாகவும் நம்மத்தியில் காணக் கிடைக்கிறது. ஆயினும், தற்போது மூன்று தசாப்த காலப் போரைக் கடந்து வந்தபோதும் எமது வருங்கால சந்ததி எமக்கான வாழ்வியல் முறைமைகள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள், தனித்துவ அடையாளங்கள் என அனைத்தையும் மறந்து அவற்றைக் கேள்விக்குறியாக்கி யாவும் நிறைவாகப் பெற்ற உலகினுள் வாழ்வது போன்று முகமிழந்தவர்களாக வாழத் தலைப்படுகின்றனர். அத்தகைய மாயைக்குள் இருந்து மீண்டு யதார்த்தத்தைப் புரிந்து எம்மைப் பண்படுத்தி ஒரு சீரான வாழ்வோட்டத்தில் எமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டுமெனில் எமது வாழ்வியல் வலிகளைச் சுமந்து நிற்கின்ற மண்சுமந்த மேனியர் போன்ற படைப்புகளை அவ்வப்போது மனதிற் கொள்வதும் அதற்கமைய எமது சிந்தையைச் செப்பனிடுவதும் காலத்தின் கட்டாயமாகின்றது.

**உசாத்துணை:**

- கடலோடி (1985), 'அலை' 26, ஐப்பசி, யாழ்ப்பாணம்.
- கலையன்பன், (1985), 'தாயகம்'ii மே, யாழ்ப்பாணம்.
- சித்திரலேகா. மௌ (1985), 'புதுசு', 10 நவம்பர்.
- சங்கரசெல்வி, (1986), 'ஈழமுரசு' மே18, யாழ்ப்பாணம்.
- சண்முகலிங்கம். ம, (1998), 'மண்சுமந்த மேனியர்', தேசிய கலை இலக்கியப்பேரவை, கொழும்பு.
- சிவத்தம்பி. கா (1985), மல்லிகை (ஆகஸ்ட்-செப்ரெம்பர்), யாழ்ப்பாணம்.
- நவராஜ். நா, (2019), 'ஜீவநதி' 135 மார்கழி, யாழ்ப்பாணம்.
- ரதிதரன். க, (2019), 'ஜீவநதி' 135 மார்கழி, யாழ்ப்பாணம்.




vaitheki.emil@thaiveedu.com



# அருமை நண்பன்: குழந்தை ம. சண்முகலிங்கத்தின் முதல் நாடக எழுத்துரு

– நா. நவராஜ்

ஈழத்துத் தமிழ் நாடக உலகின் பிதாமகர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் எழுதிய முதலாவது நாடகம் 'அருமை நண்பன்'. தனது பத்தொன்பதாவது வயதில் (1950-ம் ஆண்டில்) திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் (YMHA) இணைந்து, தற்செயலாக நாடக உலகினுள் நுழைந்தார். விதானையார் க. செல்வரத்தினம் (கொமிக் செல்வரத்தினம் என்றும் இவரை அழைத்தனர்) என்பவருடன் இணைந்து நாடகங்களை நடிக்கத் தொடங்கி இடையில் 1953 சித்திரையில் இருந்து 1957 சித்திரை வரை இந்தியாவில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டு திரும்பிய குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் மீளவும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நாடகம்சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தார். 1957 ஐப்பசியில் செங்குந்த இந்துக்கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்ற பின்னரும் அது தொடர்ந்தது.

குழந்தை அவர்கள் ஆரம்பத்தில் நடிகராகவே தனது செயற்பாட்டைத் தொடங்கினார். எனினும் நாடக எழுத்துருக்களைப் படைப்பது தனது விருப்பத்திற்குரிய ஒரு செயற்பாடாகக் கண்டடைந்து அதில் வெற்றியும் பெற்றார். இது பற்றி 'குழந்தை ம. சண்முகலிங்கம் - படைப்பில் தொக்கு நிற்கும் படைப்பாளி' என்ற எனது கட்டுரையை காலம் - (இதழ்-51,2018), ஜீவநதி (இதழ் -135,2019) போன்றவற்றில் வாசிப்பதன் மூலம் அவரது நாடக எழுத்துருவாக்க ஆளுமை எந்தவாறு உருவாக்கம் பெற்றது என்பதை நீங்கள் கண்டறியலாம். ஆரம்பத்தில் Improvised Theater என்ற புதிதளித்தல் அரங்க முறைமையில் தமது நடிப்பு சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தபோது ஒத்திகை பார்க்கும் வேளையில் வசனங்களைப் பேசிப்பார்த்து உறுதி செய்தே மேடையில் நடித்தனர். அதனை எழுதும் வழக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை. 'நகைச்சுவை நடிப்பிற்கான பாத்திரங்கள் தான் அவருக்கும் (க. செல்வரத்தினத்துக்கும்) எனக்கும் கிடைக்கும். எங்கள் உரையாடல்களை நாங்கள் இருவரும் ஒத்திகையின்போது பேசி உறுதி செய்துகொள்வோம்.' என வெளிச்சம் (இதழ் -29. புரட்டாதி, 1994.) சஞ்சிகைக்கான நேர்காணலில் (நாடகவழக்கு ப,194) அவர் குறிப்பிடுவதன் மூலம் இதனை உறுதிசெய்யலாம். எனினும் நாடகத்தில் நடிக்கும் மற்றவர்களின் உரையாடல்களைக் குறித்து வைக்கும் பழக்கமும் நாடகத்திற்குரிய ஒத்திகையைப் பலமுறை பார்க்கும் வழக்கமும் இருந்தது. இவர்களின் இத்தகைய நாடகச் செயற்பாட்டுக்காலத்தில் நாடகத்தை எழுத்தாளர்களே எழுதும் வழக்கம் இருந்துவந்ததால் நாடகம் நடிப்பவர்கள் தங்களுக்குத் தேவையான நாடகத்தை எழுத்தாளர்கள் என அறியப்பட்டவர்களை வைத்தே எழுதி நடித்துவந்தனர். குழந்தை அவர்களும் 'செங்குந்தவில் படிப்பிக்கும் போது சிற்பியிடம் நாடக எழுத்துருவைப் பெறுவதற்காகக் கொடிகாமம் வரைக்கும் காரில் அலைந்து திரிந்தோம்' (ஆற்றுகை - 97/98. நாடகவழக்கு, ப,224.) எனத் தாங்கள் நாடகம் எழுதுவதற்குச் சிற்பியைச் சிக்கெனப்பிடித்தது பற்றிக் குறிப்பிடுகிறார்.

இத்தகைய பின்னணியில் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் இந்தியாவில் பட்டம் (நாடகத்தில் அல்ல) பெற்றுத் திரும்பி வந்து திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கத்துடன் இணைந்து இயங்கி வந்த காலப்பகுதியில் குறிப்பாக 1958-களில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளராகவும் இருந்தார். இந்து வாலிபர் சங்கம் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற நாட்களில் கலைவிழா எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தது. அவ் வழக்கத்தின் படி 1958-ல் நடைபெற்ற கலைவிழாவொன்றில் மேடையேற்றுவதற்காக, தனது இருபத்தியாறாவது வயதில் (ஆண்டுக்கணக்கின் படி இருபத்தியேழாவது வயதில்) - திருநெல்வேலியில் இருந்து கால்நடையாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குப் போகும் அந்தக்காலம் - பலாலிவீதியைக் கடந்து தற்போது மருத்துவபீடத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒழுங்கையால் நடந்து, 9.00 தொடங்கி 4.00 மணிவரை நடக்கும் பாடசாலைக்கு காற்சட்டைப்பொக்கற்றுக்குள் சாப்பாட்டுப் பார்சலைச் சொருகி வைத்துக்கொண்டு பாடசாலை சென்று படித்து மத்தியானம் சாப்பிட்டுவிட்டு திரும்ப நடந்துவாற அந்தக்காலம் - தம்மை விட வயதில் குறைந்த பெடியள் சிலபேர் தங்களோடு வந்து கொக்குவில் சுடலையில் நின்ற ஆலமரத்தில் ஏறி இருந்துவிட்டுப் பின்னர் பாடசாலை முடிந்து வரும் போது மீளத் தங்களோடு சேர்ந்து வீடு திரும்பும் காட்சியை நினைவுக்குக் கொண்டுவர, அதனைக் கருவாக்கி 'அருமை நண்பன்' என்ற தலைப்பிட்டுப் பதினொரு காட்சிகளாகப் பிரித்துத் தனது முதலாவது நாடகத்தைத் தற்துணிவோடு குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் எழுதினார். அதனை இந்து வாலிபர் சங்கத்தில் தானே நெறியாள்கை செய்து மேடையேற்றினார். இன்று இந்நாடகத்தின் மூல எழுத்துரு தொலைந்து விட்ட நிலையில் கலாநிதி க. ரதிதரன் 1994-ம் ஆண்டில் தனது சிறப்புக்கலைமாணி பட்டப்படிப்பின் இறுதி

யாண்டில் மேற்கொண்ட 'குழந்தை ம. சண்முகலிங்கம் நாடகப் பாடங்கள் - உறுப்பமைப்பியல்சார் ஏடாய்வு' என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் பக்கம், 133-ல் மூல எழுத்துருவின் முதல் பக்கத்தைப் பதிவு செய்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு மூல எழுத்துரு இருந்தது என்பதையும் நெறியாள்கையில் விதானையார் செல்வரத்தினமும் அவரோடு இணைந்திருந்தார் என்பதையும் அறியமுடிகிறது.

சிலரின் பதிவுகள் இந்நாடகத்தினைக் குழந்தை அவர்கள் 1957-ல் எழுதினார் எனக்குறிப்பிடுகின்றன. எனினும் குழந்தை அவர்கள் பற்றிய பல பதிவுகளிலும் அவரது நேர்காணல்களிலும் இந்நாடகம் 1958-களில் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாலும் சிற்பி பற்றிக் குழந்தையவர்கள் எழுதிய 'சரவணபவனைச் சரனென்றெய்தினேன்' என்ற கட்டுரையில் 'எனக்கும் சிற்பி' க்கும் இடையே இருந்த நெருக்கமான உறவு பற்றி நான் கூறாது விட்டால், அவருக்கான எனது சமர்ப்பணமாக அமையும் இக்கட்டுரை நிறைவு பெறாது. '1958-ம் ஆண்டு நான் எனது முதலாவது நாடகத்தை அச்சம் மிகுந்த மனநிலையோடு எழுதித் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் மேடையேற்றினேன். சிற்பி அதை வந்து பார்த்தார். பார்த்தபின்னர் என்னிடம் வந்து 'உங்களுக்கு நாடகம் எழுத வருகுது, விடாது எழுதுங்கோ' என்றார். நான் பெற்ற முதல் மரியாதை அது. அவர் சொல்லை நான் மதித்தேனா, இல்லை. எனது அடுத்த நாடகத்தை (கூடிவிளையாடுபாப்பா நாடகத்தைக் குறிப்பிடுகின்றார்.) நான் இருபது வருடங்களுக்குப் பின்னர்தான் எழுதினேன்.' எனக் குறிப்பிட்டுச் சொல்வதாலும் இந்நாடகம் 1958-ல் எழுதப்பட்டது என்ற முடிவே முன்நிற்கிறது.

இருப்பினும் 1958-ல் இந்நாடகத்தை எழுதியதாகக் குறிப்பிடும் அவர் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் எக்கலைவிழாவில் அரங்கேற்றினார் என்பதை எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. குழந்தை அவர்களின் குறிப்பின் படி இந்து வாலிபர் சங்கத்தில் தைப்பொங்கல், வருடப்பிறப்பு மற்றும் தீபாவளி போன்ற நாட்களில் கலைவிழா நடைபெறுவது அக்கால வழக்கமாக இருந்துள்ளது. 1958-களில் எழுதினாலும் தைப்பொங்கல் விழாவிற்கான காலக்குறுக்கத்தால் அதனைப் பழக்கி அவ்விழாவில் அரங்கேற்றியிருக்க முடியாது. எனவே வருடப்பிறப்புக் கலைவிழாவில் அல்லது தீபாவளிக் கலைவிழாவில் அரங்கேற்றியிருக்க வேண்டும். தீபாவளிக் கலைவிழாவில் அது அரங்கேறவில்லை என்பதைத் தெளிவதற்கு அவ்வாண்டில் நிகழ்ந்த இன்னொரு சம்பவத்தை இங்கே குறிப்பிடவேண்டியுள்ளது. அது குழந்தை அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற அவரது வாழ்வின் முக்கிய திருப்புமுனையாக அமைந்த கலையரசு சொர்ணலிங்கத்துடனான அறிமுகச் சம்பவம். திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நடந்த நீலா சத்தியலிங்கத்தின் நடன நிகழ்விற்குக் (எந்தத் திகதியில் என்பது தெரியவில்லை) கலையரசு சொர்ணலிங்கம் வந்திருந்தார். நிகழ்ச்சி முடிந்தது. காருக்காகக் காத்திருந்தார். இவ்வேளையில் குழந்தை அவர்கள் அவரை இனங்கண்டு, அவரைக் கவர்வதற்காக நிகழ்வு நடந்த மேடை அலங்காரங்களை, திரைகளைக் கழற்றும்போது இந்தியாவில் தான் பார்த்த T.K.S. Brothers சின் இராஜராஜசோழன் நாடகத்தில் இடம்பெற்ற வசனத்தை உரத்துப் பேசியபடி கழற்றினார். கலையரசர் எந்தத் துலங்கலும் இல்லாமல் கார் வர வெளிக்கிட்டுச் சென்றார். அதற்கான துலங்கல் ஆறுமாதங்கள் கழித்தே நிகழ்ந்தது. கலையரசரின் தேரோட்டி மகன் நாடகத்தில் நடிப்பதற்கான அழைப்பாக அது இருந்தது. கலையரசரின் பதிவின் படி தேரோட்டி மகன் நாடகம் 1959 பங்குனி மாதம் மானிப்பாய் இந்துக்கல்லூரித் திறந்தவெளி அரங்கில் முதல் மேடையேற்றப்பட்டதாகவும் (ஈழத்தில் நாடகமும் நானும் -1968. பக்கம் -187.) அதற்கான ஒத்திகை தனது வீட்டில் நான்கு மாதம் நடைபெற்றதாகவும் (மேற்பட் நூல். ப,186) காணக்கிடைக்கிறது. இவற்றை வைத்துப்பார்த்தால் ஒத்திகை 1958 கார்த்திகை மாதமளவில் தொடங்கியிருக்க வேண்டும். குழந்தை அவர்கள் தன்னை ஆறுமாதத்தின் பின்னரே (இது குத்துமதிப்பாகச் சொல்லப்படுவது) கலையரசர்




தேரோட்டி மகன் நாடகத்தில் நடிக்க அழைத்தார் என்று கூறுவார். அப்படியானால் கலையரசரை வைகாசி மாதம் அளவில் கண்டே, கவரும் செயற்பாட்டைக் குழந்தை அவர்கள் மேற்கொண்டிருக்கவேண்டும். குழந்தை அவர்கள் வாய்மொழிமூலம் 'அருமை நண்பன்' நாடகத்தைக் கலையரசரைச் சந்திப்பதற்கு முன்னர் அரங்கேற்றியதாகவே சொல்லிவந்தார். இவற்றை வைத்து நோக்கினால் தீபாவளிக் கலைவிழாவில் அது அரங்கேறவில்லை என்பது உறுதியாகிறது. எனவே 1958-ல் இடம்பெற்ற வருடப்பிறப்புக் கலைவிழாவே 'அருமை நண்பன்' நாடகம் அரங்கேறிய கலைவிழா என்பது பெறப்படுகிறது.

குழந்தை அவர்கள் இந்நாடகத்தை 1957-ல் எழுதி அவ்வாண்டுக் கலைவிழாக்களில் மேடையேற்றியிருக்க வாய்ப்பிருந்தாலும் சிற்பி வந்து பார்த்தார் என்ற கூற்றினைக் கொண்டும் குழந்தை அவர்கள் நாடகம் போடும்போது செயலாளராக இருந்தார் என்ற தகவலைக் கொண்டும் அதனை மறுக்கலாம். ஏனெனில் குழந்தை அவர்களுக்குச் சிற்பி உடனான தொடர்பு ஆசிரிய நியமனத்தின் பின்னரே உருவாகிறது. இவரது ஆசிரிய நியமனம் முன்னர் குறிப்பிட்டது போல 1957 ஐப்பசியில் இடம்பெற்றமையால் குழந்தை அவர்கள் 1957-ல் நாடகத்தை எழுதிப் பழக்கி அவ்வாண்டு நடைபெற்ற தைப்பொங்கல் கலை விழாவிலோ, வருடப்பிறப்புக் கலைவிழாவிலோ அல்லது தீபாவளிக் கலைவிழாவிலோ அரங்கேற்றியிருக்க வாய்ப்பில்லை. அப்படியெனில் 1957-ல் ஆசிரிய நியமனத்தின் பின்னர் எழுதி அதனை 1958-ம் ஆண்டு தைப்பொங்கலில் அல்லது வருடப்பிறப்பில் நடைபெற்ற கலைவிழாவில் மேடையேற்றியிருந்தாலே அதனைச் சிற்பி அவர்கள் வந்து பார்வையிட்டிருக்க முடியும். சிற்பி அவர்கள் தனது கலைச்செல்வி இதழை 1958-ம் ஆண்டு ஆடி மாதத்தில் தொடங்கிய பின்னர் இந்து வாலிபர் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பெரும்பாலும் பதிவு செய்து வந்துள்ளமையை அவ்வி

தழ்களைப் பார்க்கின்ற போது புரிந்துகொள்ளலாம். அந்தவகையில் குழந்தை அவர்கள் செயலாளராக இருந்தபோது இந்து வாலிபர் சங்கத்தின் கலாலய மாணவர்களின் அரங்கேற்ற நிகழ்ச்சி ஒன்று 27.09.1958 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. குழந்தை அவர்கள் அதனை சிறப்புற நடத்தியிருந்தார். அந்நிகழ்வில் கலாலய ஆசிரியர்களான ஐயாக்கண்ணு தேசிகர், சோமாஸ்கந்தசர்மா, வீரமணிஐயர், இராமநாதன் (ராமன்) போன்றவர்கள் பங்குபற்றினர். அதே மேடையில் பிரபல நாட்டிய ஆசிரியரான சுப்பையா அவர்களின் சிஷ்யை சாந்தா இளையதம்பியின் பரதநாட்டியமும் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சி பற்றிய ஒரு குறிப்பு சிற்பியின் கலைச்செல்வி சஞ்சிகையில் (ஐப்பசி -1958, கலை -01, காட்சி -04-ல் பக்கம் 40-ல்) கண்டதும் கேட்டதும் என்ற தலைப்பினுள் வெளியாகியது அதில் இந்நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்திவைத்தவர் மயில். சண்முகலிங்கம் எனக் குழந்தை அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த நாள் 28.09.1958 ஞாயிற்றுக்கிழமை வித்துவான் சு. சத்தியலிங்கத்தின் கச்சேரியும் அங்கு நடைபெற்றது. அதற்கு பெருமளவான இசைரசிகர்கள் திரண்டு வந்திருந்தனர். 1959-ல் தைப்பொங்கல் விழாவில் இந்து வாலிபர் சங்கத்தில் குழந்தை ம. சண்முலிங்கமும் கொமிக் செல்வரத்தினமும் இணைந்து ‘தாலியைக் கட்டு’ என்ற நாடகத்தை அரங்கேற்றினர். இதில் தரகர் முருகுப்பிள்ளையாகக் குழந்தை அவர்கள் நடித்தார். இது பற்றியும் கலைச்செல்வியில் (தை 1959, கலை -01, காட்சி -07 பொங்கல் இதழில் பக்கம், 64) கண்டதும் கேட்டதும் பகுதியில் பதிவொன்றினை சிற்பி அவர்கள் மேற்கொண்டுள்ளார். இவற்றின் அடிப்படையில் குழந்தை அவர்கள் 1958-ல் செயலாளராக இருந்தார் என்பதையும் அவர்களது நாடகத்தை சிற்பி அவர்கள் கண்டுகளிக் வருவதையும் இந்து வாலிபர் சங்கத்தில் பொங்கல் விழாவில் நாடகம் இடம்பெறுவதையும் உறுதி செய்யலாம். எனவே சிற்பி அவர்கள் கலைச்செல்வி இதழ் தொடங்குவதற்கு முன்னர் குழந்தை அவர்கள் ‘அருமை நண்பன்’ நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என்ற முடிவுக்கு வரலாம். இதன்படி நோக்குகின்ற போது ‘அருமை நண்பன்’ நாடகத்தை 1957 ஐப்பசிக்கும் 1958 ஆடிக்கும் இடையில் குழந்தை அவர்கள் அரங்கேற்றியிருக்க வேண்டும். எனவே குழந்தை அவர்கள் 1957-ல் இந்நாடகத்தை எழுதி 1958-ல், தான் செயலாளராக இருந்த காலப்பகுதியில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் அரங்கேற்றினார் என்ற முடிவுக்கும் வரலாம். எனினும் அது பற்றிய சரியான முடிவுக்கு வருவதற்குரிய தகவல்கள் குழந்தை அவர்களின் எழுத்துக்களிலும் உரையாடல்களிலும் வெளிப்படுத்தப்படவில்லை. அவரது எழுத்துக்களிலும் உரையாடல்களிலும் உள்ள ‘சிற்பி அருமை நண்பன் நாடகத்தைப் பார்த்தார்’ என்பதையும் குழந்தை அவர்கள் செயலாளராக இருந்த காலப்பகுதியில் எழுதி அரங்கேற்றப்பட்டது என்பதையும் முன்னிறுத்தினால் ‘அருமை நண்பன்’ என்ற இந்நாடகம் 1958-களில் எழுதப்பட்டு அவ்வருடம் நிகழ்ந்த வருடப்பிறப்புக் கலைவிழாவில் அரங்கேற்றப்பட்டது என்ற முடிவே மேற்கிளப்பி வருகிறது. எனினும் எனது தேடலில் தகவல்கள் புதிதாகக் கிடைக்கின்றபோது இதில் மாற்றங்கள் ஏற்படலாம்.

அருமை நண்பன் என்ற இந்நாடகத்தினைப் பலர் ‘நல்ல நண்பன்’ என்ற பெயரில் குறிப்பிட்டுவந்துள்ளனர். குழந்தை அவர்களின் சில நேர்காணல்களிலும் இந்தவாறே பதிவாகியுள்ளது. இந்நாடகத்தின் மூல எழுத்துரு வழமைபோல ‘அருமை நண்பர்’களால் அடிப்பொடிகளால் பிரதியுபகாரமாகப் பெற்றுச் செல்லப்பட்டு மீண்டும் அவர் கையை வந்தடையவில்லை. எனினும் அம் மூல எழுத்துருவை தாங்கள் கண்டோம் அதனை வாசித்தோம் என்று பலர் சொல்கிறார்கள். நான் மூல எழுத்துரு வைக் காணவில்லை, முன்னர் குறிப்பிட்டது போல் கலாநிதி க. ரதிதரன் 1994-ஆம் ஆண்டில் தனது சிறப்புக்கலைமாணிப் பட்டப்படிப்பின் இறுதியாண்டில் மேற்கொண்ட குழந்தை ம. சண்முகலிங்கம் நாடகப் பாடங்கள் - உறுப்பமைப்பியல்சார் ஏடாய்வு’ என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் பக்கம், 133-ல் ‘அருமை நண்பன்’ என்ற இந் நாடகத்தின் மூல எழுத்துருவின் முன்பக்கத்தை போட்டோப் பிரதி செய்து பதிவு செய்துள்ளதையும் அம் மூல எழுத்துருவைக் கண்டவர்களையுமே கண்டுள்ளேன். எனக்கு இந் நாடகத்தின் தட்டச்சுச் செய்யப்பட்ட ஒரு பிரதியே கிடைத்தது. அதனை வைத்து குழந்தை அவர்களுடன் கலந்துரையாடி அவ்வெழுத்துருவைச் செம்மைப்படுத்தினேன். உதாரணமாக கருப்பன் பாடுகிறான் எனப் பிரதியில் இருந்தது - கருப்பன் என்ன பாட்டுப்பாடினான் என்பது தெரியவில்லை. இதில் ஏதாவது பாடலை நாடகம் எழுதப்பட்ட காலத்தையும் பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தையும் கொண்டு தெரிவு செய்து போடுவது என்று தீர்மானித்தோம் பின்னர் நெறியாள்கை செய்பவரின் தெரிவுக்கு விடுவது என்று முடிவெடுத்து இதில் பாடல் எதனையும் நாம் சேர்க்கவில்லை. (குறிப்பு-20) இந்த வாறான விபரங்கள் நாடகத்தைத் தொடர்ந்து அறுபத்தியாறு குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக் குறிப்புகள் என்ற பகுதியில் கண்டு கொள்க. மூல எழுத்துரு இருந்திருப்பின் இன்னும் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். எனினும் இருப்பதைக்கொண்டு நாடக எழுத்துருவை முழுமைப்படுத்தி கணினியில் ரைப்செய்து ஒழுங்குபடுத்தி ஒருவடிவத்தினை உருவாக்கி ஜீவநதி வெளியீடாக பதிப்பித்துள்ளேன். மூல எழுத்துருவை வைத்திருப்பவர்கள் தந்தால் இன்னொரு பதிப்பில் அதனை வைத்துச் செம்மைப்படுத்தி அவர்தம் எழுத்துருவை அழியாது பாதுகாக்கலாம்.

‘ஒருவர் எழுதும் முதல் நாடகம் அவர் பார்த்த எல்லா நாடகங்களின் சாராம்சத்தையும் உள்ளடக்கியதாயும் அவர் ரசித்த மாதிரியில் பிறிதொன்றை உருவாக்கியதாயும் காணப்படும்’ என செக்கோஸ்லவோக்கியாவில் பிறந்து பின்னர் இங்கிலாந்தில் குடியேறி வாழ்ந்துவரும் நாடகாசிரியர் ரொம் ஸ்ரொப்பட் குறிப்பிடுவது போல குழந்தை அவர்களின் ஆரம்ப எழுத்துருவான இது திராவிடமுன்னேற்றக் கழகத்தின் வசனப்பாணியைக் குறிப்பாகப் பராசக்தி படத்தின் வசனங்களை ஒத்த வசனப் பாணியைக் கொண்டிருக்கின்றமையை இந்நாடகத்தின் நீதிமன்றக் காட்சியின் மூலம் உணரலாம். அத்தோடு இந்நாடகத்தில் அக்கால வழக்கில் இருந்த சில பழமொழிகளையும் குறிப்பாக ‘ராவணனை முந்தின மீசை’, ‘அறிகிறவன் அறிய வேண்டும் அரியாலைப் பினாட்டுத்தட்டை.’ போன்றவற்றையும் பயன்படுத்திச் செல்கிறார். இன்றைய சூழலில் பிள்ளைகள் வழிதவறிப்போகும் போக்கு அதிகரித்துள்ள நிலையில் தனது பாடசாலைக்காலத்தில் தான் கண்டவற்றை மனத்துள் வைத்து 1958-களில் இந்நாடகத்தை படைத்தளித்துள்ளார். அது இன்றைய வாழ்நிலையோடும் பொருந்திக்கிடப்பதை வாசகர்கள் வாசித்துக் கண்டுணர்வீர்கள்.



navaraj@thaiveedu.com

# தோழர் ‘வைகறை’ ரவி

– அருண்மொழிவர்மன்



கனடாவில் இருந்து வெளிவந்த முக்கியமான பத்திரிகைகளில் ஒன்றான ‘வைகறை’யின் ஆசிரியரும் மிக நீண்டகாலமாகவே சமூக, அரசியல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவந்தவரும் நண்பருமான ரவி என்கிற ரவிச்சந்திர நேசன் பொன்னுத்துரை ஜனவரி 25, 2025 அன்று இயற்கையெய்தி இருக்கின்றார்.

தனது சிறுவயது முதலே சமூகநலனில் அக்கறையும் அரசியல் உணர்வும் கொண்டு வளர்ந்த ரவி, எண்பதுகளில் ஈழத்தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருக்கொள்ளத் தொடங்கியபோது தானும் விடுதலை இயக்க அரசியலில் இணைந்துகொண்டார். தேசிய இன விடுதலை என்கிற அரசியல் பயணத்தில், அமைப்புகள் சிதறியபோதும், பல்வேறு ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ள வேண்டி வந்தபோதும் கூட, ரவி ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை பெறவேண்டும் என்கிற தனது நிலைப்பாட்டில் பற்றுறுதி கொண்டவராகவே இருந்தார். அவரது சமூக, அரசியல் செயற்பாடுகளும் அவர் ஆதரித்து நின்ற தளங்களும் இந்த அடிப்படையிலே அமைந்திருந்தன.

அவரது வைகறை பத்திரிகை, மாற்றுக் கருத்துகளுக்கு இடமளித்து, அதேநேரம் அவதூறுகளைத் தவிர்த்து வெளிவந்த முக்கியமான பத்திரிகையாகும். இந்த நிலைப்பாட்டுக்காகப் பல்வேறு நெருக்கடிகளையும் மிரட்டல்களையும் எதிர்கொண்டபோதும்,

> ***‘சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா***
> ***உட்கோட்டம் இன்மை பெறின்’***

என்கிற தனது மகுட வாசகத்தை வைகறை தொடர்ந்தும் கடைப்பிடித்து வந்தமைக்கு, ரவியின் தளராத மனவுறுதியே மூலாதாரம். வைகறை பத்திரிகையின் இந்த நிலைப்பாட்டின் காரணமாக தனிப்பட்ட மிரட்டல்களுடன், வைகறை பத்திரிகை விநியோகத்துக்காக வைக்கப்பட்டிருந்த கடைகளில் இருந்து எடுத்து எறியப்பட்டிருந்தபோதும் ரவி தனது நிலைப்பாட்டில் உறுதியாகவே இருந்துள்ளார்.

காலவோட்டத்தில் வைகறை பத்திரிகை நின்றுவிட்டபோதும் ரவி, இங்கு நடைபெறுகின்ற கலை, இலக்கிய, சமூக, அரசியல் நிகழ்வுகளில் பங்கெடுப்பவராகவும் ஆதரவளிப்பவராகவும் செயற்பட்டுக்கொண்டிருந்தார். இதனால் வைகறை வெளிவந்த காலங்களில் எனக்கு மிகவும் பிடித்த பத்திரிகையாகவும் வைகறையே இருந்தது என்பதுடன், கனடியப் பத்திரிகை ஒன்றில் பிரசுரமான எனது முதலாவது கட்டுரையும் வைகறையிலேயே வெளிவந்திருந்தது என்பதையும் குறிப்பிடுவது முக்கியமென்று கருதுகின்றேன்.

வைகறை பத்திரிகையை நிறுத்துவது என்கிற நிலைக்கு வந்தபின்னரும்கூட அப்போது வைகறையில் வெளிவந்து கொண்டிருந்த முக்கியமான தொடரொன்று நிறைவுறும்வரை காத்திருந்து அந்தத் தொடர் நிறைவுற்ற இதழே 2008-இன் இறுதிப்பகுதியில் வந்த கடைசி வைகறை. (இதன் பின்னர் 2009, 2010-இல் ஒவ்வொரு வைகறை இதழ்கள் வந்திருந்தன).

கிட்டத்தட்ட இந்தக் காலப்பகுதியிலேயே கலை, இலக்கிய, சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கிய எமக்கு தோழமையான ஆதரவைத் தருகின்ற ஒருவராக ரவி தொடர்ந்தும் விளங்கினார். அத்துடன் இங்கே நடக்கின்ற நூல் வெளியீடுகள், கலை இலக்கிய நிகழ்வுகள், போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு விளம்பர அனுசரணைகளைத் தானாக விரும்பிச் சென்று செய்கின்றவராகவும் ரவி இருந்துள்ளார்.

முரண்பாடுகள், மாற்றுக்கருத்துகளுக்கு அப்பால் எப்போது பார்த்தாலும் பளீரென்ற அந்தப் புன்னகையுடன் நேர்மறை எண்ணத்தைத் தோற்றுவிக்கின்ற ஒருவராகவே ரவி இப்போது என் நினைவுகளில் நிற்கின்றார்.

கடந்த சில ஆண்டுகளில் பல தனிப்பட்ட சந்திப்புகள், ஒன்றுகூடல்களிலும் ரவியை அடுத்தடுத்துச் சந்திக்கின்ற வாய்ப்புகளும் தொலைபேசி உரையாடல்களும் வழமையாகி இருந்தன. தமிழ் தேசிய அரசியல் குறித்த தீர்க்கமான உறுதிப்பாடும் தேசிய இன விடுதலையை வென்றெடுப்பதற்காகத் தொடர்ந்து போராடவேண்டும் என்ற நிலைப்பாடும், அர்ப்பணிப்பும் ரவியிடம் தொடர்ந்து இருந்தது. அவருடனான எந்த உரையாடலும் விரைவில் அரசியல், சூழலியல், சமூகம் குறித்ததாக மாறி நீண்டுசெல்வதே வழமையாக இருந்தது.

அரசியலுடன் சேர்த்து கல்வி, சூழலியல், புகைப்படம் எடுத்தல் போன்றவற்றிலும் பின்னாட்களில் ரவி தீவிரமான ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். சூழலியல் குறித்த அவரது ஈடுபாட்டின்காரணமான இயற்கையையும் வெவ்வேறு விலங்குகள், பறவைகளையும் புகைப்படங்கள் எடுத்து தனது முகநூலிலும் தனிப்பட நண்பர்களுக்கு அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். குறிப்பாக, அவர் எடுக்கின்ற



கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் எனக்குப் பிடித்தவை.

தனது ஈடுபாடுகள், சமூக அக்கறை, கல்வி போன்ற அனைத்தையும் ஒன்றுடன் ஒன்றிணைந்தவையாக ரவி பேணியும் மேம்படுத்தியும் வந்திருக்கின்றார். உயர்கல்வி கற்கவேண்டும் என்பதில் அவருக்கு ஆர்வம் இருந்தது, ஆனால் அதனை அவர் தொழிற்தேவைகளுக்காகவோ, அல்லது பதவி உயர்வுக்காகவோ செய்யாமல், சூழலியல் குறித்தே தனது உயர் கல்வியைத் தேர்ந்தெடுத்ததில் அவரது சமூகப் பிரக்ஞையும் இருக்கின்றது. அதுபோல புகைப்படத்துறையில் இருந்த ஆர்வத்தினால் அதில் தன் திறன்களை வளர்த்துச் சென்ற ரவி, அதிலும் சூழலியல் குறித்த தனது அக்கறையை வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகின்றது.

சிறுவயதிலேயே விடுதலைப் போராட்ட அரசியலில் ஈடுபட்டதால் உயர்கல்வியை இழந்த பல்லாயிரக்கணக்கானோரில் ஒருவரான ரவி, கல்விக்கான தன் தேடலையும் ஆர்வத்தையும் தொடர்ந்து வெளிப்படுத்தியே வந்தார். கார்ல்ரன் பல்கலைக் கழகத்தில் தகவல் தொழினுட்பத்துறையில் கற்றிருந்த போதும் பின்னர் சூழலியலில் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக யோர்க் பல்கலைக்கழகத்தில் சூழலியல் துறையில் பட்டம்பெற்ற ரவி, தனது உயர்கல்வியை யோர்க் பல்கலைக்கழகத்திலே தொடர்ந்து கற்று வந்தார். இப்பல்கலைக்கழகத்தின் சூழலியல், உயிரின ஆய்வுத்துறையில் (Faculty of Environmental and Urban Change - Resource Person) பணியாற்றி வந்தவர், தனது ஆய்வுப் பணிக்காகவே இலங்கை சென்றிருந்தார். அது குறித்த ZOOM வழியாக பல்கலைக்கழகத்தினருடன் உரையாடிக் கொண்டிருந்தபோதே கதிரையில் இருந்து சரிந்து விழுந்திருக்கின்றார். மாரடைப்புக் காரணமாக அவர் இறந்திருக்கின்றார்.

ஆரம்ப காலத்தில் தனது இயக்கத் தோழர்களால் ‘GUES ரவி’ என்றும் ‘தோழர் ரவி’ என்றும் அறியப்பட்டிருந்த ரவி, எமக்கு அறிமுகமானது ‘வைகறை ரவி’யாக. அதிலிருந்து, சூழலியல் குறித்த அக்கறைகொண்டவராக அந்தத்துறையிலும் தொடர்ந்து தேடல்களைச் செய்துகொண்டிருந்த ரவி, இனிய தோழராக நினைவுகளில் இருப்பார். ஒப்பீட்டளவில் அவருடன் மிகக் குறுகியகாலமே நான் பழகியிருக்கின்றேன். அவரது நண்பர்களும் தோழர்களும் அவரையும் அவரது கனவுகளையும் பற்றி விரிவாக எழுதுவதும் உரையாடுவதுமே நாம் அவருக்குச் செய்கின்ற தோழமை அஞ்சலியாகும் என்று நம்புகின்றேன்.



arunmozhivarman@thaiveedu.com




‘The Passionpreneur Exclusive’ என்பது, புத்தகங்களை எழுதுவதிலும், படிப்பதிலும் உள்ள ஆர்வத்தால், பதிப்புத் துறையில் இயங்குபவர்களை அவர்களது துறையில் ஒரு குறிப்பிடத்தக்க உயரத்துக்கு கொண்டுவரும் நோக்கத்துடன் ஆங்கிலத்தில் The Asian Review எனும் புகழ்பெற்ற இலக்கிய இணையத்தளம் வெளியிட்ட நேர்காணல்களின் தொடராகும். Passionpreneurs நேர்காணல் தொடரானது, தங்கள் சொந்த நாட்டிலும், அதற்கு அப்பாலும் பதிப்பு அறத்தோடு சிறந்த பணிகளில் ஈடுபடுகிற, உலகின் பதிப்பக சமூகத்துடன் இணைய விரும்புகிற வெளியீட்டாளர்களை முக்கியமாக உள்ளடக்குகிறது.

இன்று இலங்கையில் புத்தக வெளியீட்டுத் துறையில் இயங்கும் ஒரு முக்கிய பெண்மணி காஞ்சனா ப்ரியகாந்த. ஆங்கிலத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்த பிறகு, ஆங்கில ஆசிரியராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் பதிப்புத் துறையிலும், எழுதுவதிலும் தனக்கிருந்த ஆர்வத்தைக் கண்டறிந்தார். இலங்கையின் மிகப் பெரிய இணைய சில்லறைப் புத்தகக் கடைகளில் ஒன்றான KBOOKS மற்றும் மின் புத்தகங்கள், ஒலிப் புத்தகங்கள் (audio books) இரண்டையும் வழங்கும் டிஜிட்டல் வாசிப்பு தளமான KReader.lk ஆகியவற்றின் நிறுவுனராகவும், அதன் CEO ஆகவும் உள்ளார்.

தனது பள்ளி நாட்களில் இருந்தே, காஞ்சனா இலக்கிய முயற்சிகளில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெவ்வேறு இலக்கிய வகைமைகளில் பன்னிரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார். இலங்கையில் பாராட்டுகளைப் பெற்ற அவரது சமீபத்திய சிறுகதைத் தொகுப்பான ‘கனவு பிடிப்பவர்கள்’ (Dream Catchers) தேசிய அங்கீகாரம் பெற்றமையும் அவரது இலக்கிய சாதனைகளில் அடங்கும். அவரது எழுத்துகள், பல மொழிகளில் பரவி, கவனத்தை ஈர்த்துள்ளன, அவருடைய சில படைப்புகள் இலக்கிய விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டன. மேலும், அவரது எழுத்துகள் ஆங்கிலம், தமிழ் மற்றும் நேபாளி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

அவர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தியாவில் உள்ள The Foundation of SAARC Writers and Literature (FOSWAL) அமைப்பின் ஆலோசகராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார்.

2023-ம் ஆண்டு, இந்தியாவில் உள்ள The Foundation of SAARC Writers and Literature (FOSWAL) அமைப்பினால் சார்க் இலக்கிய விருதுகள் மற்றும் FOSWAL இலக்கிய விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

காஞ்சனா ப்ரியகாந்தவுடன் Asian-review.com நிகழ்த்திய நேர்காணலை, தாய்வீடு வாசகர்களுக்காக தமிழில் தருகிறோம்.

▶ **கற்பித்தல் என்பது அறிவைப் பகிர்ந்துகொள்வதாகும், புத்தகங்களும் அதையே செய்கின்றன. எங்கள் இணையத் தளத்தின் 25,000−க்கும் மேற்பட்ட தினசரி வாசகர்களுக்கு, ஆசிரியராக இருந்து பதிப்புத்துறையில் வளர்ந்து வரும் ஒரு தொழிலதிபராக மாறிய உங்கள் கதையைப் பற்றிச் சொல்ல முடியுமா?**

நீங்கள் செல்ல வேண்டிய பாதை குறித்து நிச்சயமற்ற நிலையில் இருக்கும்போது, சரியானது உங்கள் முன் மெல்ல மெல்ல வெளிப்படும் என்று நான் எப்போதும் நம்பினேன். ஆசிரியராகவும் தொழிலதிபராகவும் மாறுவது எனது கனவுகளின் ஒரு பகுதியாக இருக்கவில்லை என்றாலும், எழுதுவது எனது நீடித்த ஆர்வமாக இருந்து வருகிறது. நான் கொழும்பில் இருந்து கணிசமான தூரத்தில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் வளர்ந்தேன். அப்போது அங்கு பல்வேறு வளங்களை எளிதில் அணுகுவது மிகவும் சிரமமாக இருந்தது. சமூக ஊட

கங்களின் சலசலப்பும் இருக்கவில்லை. நம் உலகம் மட்டுப் படுத்தப்பட்டிருந்தது.

தெய்வ கடாட்சமாக, எனக்கு வாய்த்த எழுதுவதற்கான திறமை இயற்கையாகவே புத்தக உருவாக்கத்தில் வந்து சேர வில்லை. வாழ்க்கை என்னை ஒரு ஆசிரியரின் பாத்திரத்திற்கு அழைத்துச் சென்றது. இது எதிர்பாராத ஒரு பயணமாக விரி வடைந்தது. ஆங்கில மொழியைக் குறைவாக வெளிப்படுத் தும் குழந்தைகளுக்கு சிறப்பாக கற்பிப்பதற்கான ஆற்றல் எனக்கிருப்பதை நான் கண்டேன். மேலும் ஆங்கிலத்தை அவர்களுக்கு இலகுவாக மாற்ற வேண்டும் என்ற ஆசை, அவர்களின் ஆங்கில வாசிப்பு மற்றும் புரிந்துகொள்ளும் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஒரு செயல்நூலை எழுத தூண்டுதலளித்தது.

இருப்பினும், அதற்கென ஒரு வெளியீட்டாளரைக் கண்டுபிடிப் பது கடினமான பணி என்பதை புரிந்து கொண்டேன். நான் பல வெளியீட்டாளர்களை அணுகினேன். அவர்கள் கையெழுத் துப் பிரதியை மதிப்பாய்வுக்கு சமர்ப்பிக்க பரிந்துரைத்தனர். அதற்கு பதிலாக, நான் வேறு வழியில் சென்று, அதை KSP பப்ளிஷர்ஸ் என்ற பெயரில் சுயாதீனமாக வெளியிட்டேன். பின்னர் அதற்கு KBOOKS என மறுபெயரிடப்பட்டது. ஆரம் பத்தில், எனது படைப்புகளில் மட்டுமே கவனம் செலுத்தும் திட்டம் இருந்தது. ஆனால் காலம் வேறு யோசனைகளையும் கொண்டு வந்து சேர்த்தது.

காலப்போக்கில், பல்வேறு எழுத்தாளர்களுக்கான தளமாக KBOOKS பரிணமித்தது. இன்று, எண்பத்தைந்துக்கும் மேற் பட்ட விருதுகள் பெற்ற மற்றும் குறும் பட்டியலில் இடம்பெற்ற அச்சுப் புத்தகங்களை வெளியிட்டதில் பெருமை கொள்கி றோம். பயணம் இத்துடன் நிற்கவில்லை, KReader-இன் கீழ் கிட்டத்தட்ட ஐந்நூறு மின்புத்தகங்களுடன் டிஜிட்டல் துறையி லும் இறங்கினோம்.

சாராம்சமாகச் சொல்வதானால், உங்கள் ஆர்வத்தைப் பின் தொடர்வது என்பது இலட்சியம் சார்ந்தது. நீங்கள் செய்வதில் நிறைவைக் கண்டறிவதும், காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றுவதும் சமமாக பலனளிக்கும். அதுதான் KBOOKS, KReader ஆகியவற்றின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு வடிவ மைத்துள்ளது, அது நீங்கள் அறியாத பாதையைத் தழுவிக் கொள்ளும் போது வெளிப்படும் எதிர்பாராத அழகுக்கான சான்றாகும்.

▶ **இலங்கையின் பதிப்புச் சூழலில் ஒரு முன்னணி வெளி யீட்டாளர் என்ற வகையில், இலங்கையின் பொருளா தார நெருக்கடி பதிப்புத்துறையில் மட்டுமல்லாமல், இலக்கியவெளியின் மீதும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி உங்கள் கருத்து என்ன?**

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மறுக்க முடியாத துரதிர்ஷ்டவசமானது. பல்வேறு தொழில்கள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதிக்கிறது. பொருளாதாரம் நிலையற்றதாகவே உள்ளது. அன்றாடம் அதிகரித்துவரும் அடிப்படைத் தேவைகளின் தவிர்க்க முடியாத விலை உயர்வு மக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது. இந்தப் பொருளா தார அழுத்தம் வெளியீட்டுத்துறை, இலக்கியவெளி ஆகிய இரண்டிற்கும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக உள்ளது. பகுதி நேரமாக அல்லது பொழுதுபோக்காக எழுதுவதில் ஈடு படும் பல இலங்கை எழுத்தாளர்களுக்கு, உயர் மதிப்புள்ள இலக்கியப் படைப்புகளை உருவாக்குவது ஒரு சவாலான விடயமாக மாறியுள்ளது. 23 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டில், ஒவ்வொரு குடிமகனும் தீவிர வாசக ராக இல்லை. இது சாத்தியமான வாசகப் பரப்பை மேலும் சுருக்குகிறது.

ஒரு காலத்தில் எழுத்தாளர்களையும், பதிப்பாளர்களையும் புத்தகம் வாங்குவதன் மூலம் ஆதரித்த அரசாங்க முயற்சி கள் பட்ஜெட் கட்டுப்பாடுகள் காரணமாக குறைந்துவிட்டன. இதன் விளைவாக, அதிக முதலீடுகள் தேவைப்படுவதால், வெளியீட்டாளர்கள் சோர்வடைகிறார்கள். இதில் ஈடுபட்ட தனி நபர்கள் வேறு தொழில்களுக்கு மாறியுள்ளனர். இது நிலை மையை மேலும் சிக்கலாக்குகிறது. அதிக வரி விதிப்புகள் வழக்கமான வாசகர்களை புத்தகங்களுக்கு செலவழிப்பதில் இருந்து தள்ளி வைக்கின்றன. இது ஒரு தீங்கான சுழற்சியை உருவாக்குகின்றன. நாகரிக சமுதாயத்தின் இலட்சியங்களில் இருந்து விலகி, உயிர்வாழ்வதற்கான-உறுதியான இயக் கத்தை நோக்கி சமூகம் செல்ல வேண்டிய ஆபத்தான சூழலை இந்த காட்சி சுட்டிக்காட்டுகிறது. பொருளாதார நெருக்கடியானது வெளியீட்டுத்துறையிலும் இலக்கிய வெளி யிலும் ஆழமான பாதிப்பைக் கொண்டிருக்கிறது. தற்போ தைய நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில் பதிப்புத்து றையின் இருப்பையும், மறுமலர்ச்சியையும் உறுதி செய்வ தற்கு கூட்டு முயற்சிகளும், நெகிழ்வுத்தன்மையும், மாறும் சூழ்நிலைமைகளுக்கேற்ப தகவமைப்புத் தன்மையும் அவசி யமானதாகும்.

▶ **தலா ஒரு நபருக்கு: அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண் ணிக்கை என்ற கணக்கில், ஒரு நபருக்கு உலகின் அதிக எண்ணிக்கையிலான அச்சிடப்பட்ட புத்தகங்க ளுக்கான சாதனையை தெற்காசியா பெற்றுள்ளது. ஆயினும்கூட, நூலாசிரியர்களுக்கு நல்ல ஊதியம் வழங்கப்படுவதில்லை, பதிப்புரிமைகள் பெரும்பாலும் மீறப்படுகின்றன. தவிர, வெளியீட்டாளர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு போதியளவில் முதலீடு செய்வ தில்லை. இலக்கியச் சூழலில் வளர்ந்து வரும் ஒரு பதிப்பாளராக, குறிப்பாக இளம் தலைமுறையைச் சேர்ந்தவராக, இந்தச் சூழ்நிலை குறித்த உங்கள் கருத்து என்ன? பதிப்புத் தொழில்துறையில் இந்த ஆரோக்கியமற்ற போக்குகளை மாற்றுவதற்கான உங் கள் பார்வை என்ன?**

நிச்சயமாக, தெற்காசியா ஒரு நபருக்கு அதிக அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கான சாதனையைப் பெற்றுள்ளது. ஆனால், நூலாசிரியர்களுக்குப் போதுமான ஊதியம் வழங்குதல், பதிப் புரிமை மீறல்கள் மற்றும் போதுமான வெளியீட்டாளர் முதலீடு

போன்ற சிக்கல்களை எதிர்கொள்கிறது என்ற கருத்தை நிவர்த்தி செய்வதில், ஓர் எழுத்தாளராகவும், ஒரு பதிப்பாளரா



கவும் எனது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் ஒரு நுணுக்கமான முன்னோக்கை வழங்க விரும்புகிறேன்.

பதிப்புத் தொழில்துறையில் தவறாக வைக்கப்பட்ட குற்றச் சாட்டுகள், வதந்திகள் அல்லது அனுமானங்களில் மட்டுமே நாம் சார்ந்திருக்கக்கூடாது. மாறாக, உண்மைகள் மற்றும் புள்ளி விபரங்களின் அடிப்படையில் ஒரு நியாயமான மதிப் பீட்டை நான் பரிந்துரைக்கிறேன். சிலர் பதிப்பாளர்களை சுரண்டுபவர்களாகச் சித்தரிக்கலாம். என்றாலும், வெளியீட் டின் வணிகப் பக்கம் சிக்கலானது என்பதை உணர்ந்து வெளிப்படைத்தன்மையுடனும் உண்மையுடனும் இதை அணுக விரும்புகிறேன். எனது தனிப்பட்ட பயணத்திலிருந்து இதைக் கூறுகிறேன். ஒரு தசாப்தத்திற்கு முன்பு அச்சிடப்பட்ட ஒரு சிறு கதைத் தொகுப்பிலிருந்துதான் எனது இலக்கியப் பணி தொடங்கியது. அது விற்பனையில் சவால்களை எதிர் கொண்டது. வெளியீட்டாளர் கணிசமான முதலீடு செய்தார். ஆனால், பிரதிகள் எதிர்பார்த்தபடி விற்கவில்லை. என்றா லும், அது எனது இலக்கியப் பயணத்திற்கு வழி வகுத்தது, அங்கீகாரத்தையும் வாய்ப்புகளையும் பெற்றுக்கொடுத்தது. ஒரு எழுத்தாளராக, விலைமதிப்பற்ற அங்கீகாரம் மற்றும் கௌரவம் போன்ற அம்சங்களை அது பெற்றுத் தருவதால் ராயல்டி கொடுப்பனவுகளுக்கு அப்பால் எனது நன்றியுணர்வு நீண்டுள்ளது. இந்த கூட்டுப் பயணத்தில் இரட்டைப் பொறுப்பை ஒப்புக்கொள்வது முக்கியம். இதில் சரியான விநி யோகம் மற்றும் விளம்பரத்தை உறுதி செய்வது ஒரு வெளி யீட்டாளரின் பங்காகும். அதேநேரம், எழுத்தாளர்கள் தங்கள் படைப்பை சரியான இலக்கியத் தரத்தோடு உருவாக்க வேண் டும். இது ஒரு இலக்கியப் படைப்பின் வெற்றிக்கு இரு தரப்பி னரும் பங்களிக்கும் ஒரு கூட்டுறவு சார்ந்த பரிமாணமாகும்.

நியாயமான வணிக நடைமுறைகளில் உறுதியான நம்பிக்கை கொண்டவளாக, வெற்றி என்பது இருவழிப் பாதை என்பதை வலியுறுத்துகிறேன். வெளியீட்டாளர் மீதான குற்றச்சாட்டுகள் நியாயமானதாக இருந்தால், நியாயமான தீர்ப்புக்கு தகுந்த ஆதாரம் முன்வைக்கப்பட வேண்டும். நன்கு அறியப்பட்ட, அதிகம் விற்பனையாகும் எழுத்தாளர்கள் பெரும்பாலும் தங் கள் வெளியீட்டாளர்களுடன் நம்பகமான உறவைப் பேணுகி றார்கள். பதிப்பாளரின் நேரம், உழைப்பு உட்பட அவரது பன் முக முதலீடுகள் பற்றியும் அவர்களுக்குப் புரிதலுள்ளது.

வெளியீட்டாளர்களைச் சுரண்டல் பேர்வழிகளாகப் பார்ப்பதற் குப் பதிலாக, பரஸ்பர புரிதலையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பது அவசியம். எழுத்தாளர்கள் சுரண்டப்படுவதாக உணர்ந்தால், அவர்கள் நேரடியாகவே பதிப்பாளருடன் அவ ரது முயற்சியில் பங்கெடுக்க முடியும். இது இரு தரப்பினரின் முயற்சிகளும், முதலீடுகளும் பகிர்ந்துகொள்ளப்படும் சூழ லுக்கு வழிவகுக்கிறது. இறுதியில் மிகவும் சமநிலையானதும், வளமானதுமான இலக்கிய சூழலுக்குப் பங்களிக்கிறது.



jiffry.hassan@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***



# ஒரு நூலின் உருவாக்கம் : ஆசிரிய - வெளியீட்டாளருக்கான கைந்நூல்

**– என். செல்வராஜா**

கடந்த மாத இதழில் ஒரு நூலுக்குப் பக்கங்களைக் குறிப்பிடும் பாரம்பரியம் எவ்வாறு வந்தது என்றும், பின்னாளைய அச்சக/வடிவமைப்புத்துறை மாற்றங்களை உள்வாங்கி பக்கங்களுக்கு எண்ணிடப்படும் முறைமை எவ்வாறு மாற்றங் கண்டது என்பது பற்றியும் கண்டிருந்தோம். இவ்விதழில் ஒரு நூலுக்கு சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் முறை பற்றிய விளக்கத்தைத் தர முயல்கின்றேன்.

இன்று இலங்கையில் வெளியிடப்படும் பல நூல்களின் பின்னட்டையிலும் உட்புறமும் காணப்படும் பத்து அல்லது பதின்மூன்று இலக்கத் தொடரையே சர்வதேசத் தராதர நூல்எண் அல்லது International Standard Book Number (ISBN International Standard Book Number (ISBN) என்று குறிப்பிடுகின்றோம். எழுபதுகளுக்குப் பின் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகி, உலகெங்கும் அந்தந்த நாட்டுத் தேசிய நூலகங்களாலும் வெளியீட்டு முகவர்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின் மூலம் மொழிவழியாகவன்றி, இலக்கங்களால் ஒரு நூலின் குறிப்பிட்ட சில வர்த்தகத் தகவல்களைப் பதிவு செய்து வைப்பதன் மூலம் அனைத்துலகரீதியாக மொழித்தடையைத் தாண்டி குறித்தவொரு நூலுக்கான ஒரு நூலியல் அடையாளத்தை, அல்லது நூல் பற்றிய தகவலைப் பரிமாறிக்கொள்ள முடிகின்றது.

ISBN-13: 978-1-888799-97-2

ISBN-10: 1-888799-97-8

9 781888 799972

ஆரம்பத்தில் இருந்து டிசம்பர் 2006 வரை இத்தராதர எண் 10 இலக்கங்களையே கொண்டிருந்தது. தகவல் மூலங்களின் பௌதிக அமைப்பை வேறுபடுத்தும் வகையில் ஜனவரி 2007 முதல் மூன்று இலக்கங்கள் முன்னால் சேர்க்கப்பட்டு இப்போது 13 இலக்கங்கள் கொண்டதாக வழங்கப்படுகின்றது. இன்றைய நிலையில் இம்மூன்று இலக்கங்களும் 977, 978 அல்லது 979 ஆக இருக்கின்றன. (977- சஞ்சிகை வடிவம், 978 நூல் வடிவம், 979 இசைவடிவம்).




சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் முறையானது ஜெனிவாவிலுள்ள சர்வதேச தராதர நிறுவனத்தினால் International Standard Organisation (ISO) 1972-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. நூல் வெளியீட்டகங்கள், தமது வெளியீடுகளை இலகுவில் இனம் கண்டுகொள்ளும் நோக்குடன் தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஒவ்வொரு ஒழுங்கில் நூலுக்கான அடையாள இலக்கங்களை வழங்கி வந்துள்ளன. நிறுவனங்களுக்கிடையே இவ்வகையான இலக்கம் வழங்கும் முறையில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த வேறுபாடுகள், நூலீட்டல் கடமைகளில் ஈடுபடும் நூலகர்களுக்கும், புத்தகவிற்பனையாளர்களுக்கும் பல நடைமுறைச் சிக்கல்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி வந்துள்ளன. 1960-களின் பிற்ப

குதியில் கணனியின் பாவனை நூல் வர்த்தகத்தில் அறிமுகப் படுதப்படுத்தப்பட்டது. அதையடுத்து நூல்வெளியீட்டு நிறுவ னங்கள் தமது நூலியல் தரவுகளைக் கணனி மயப்படுத்துவ தில் படிப்படியாக ஈடுபட்டனர். அவ்வேளையில் தத்தமது நூல்களுக்கான குறியீட்டு எண்களை வழங்குவதில் பொதுவா னதொரு முறை பின்பற்றப்படவேண்டும் என்று கருதினர். அதாவது அனைத்து நூல்வெளியீட்டு நிறுவனங்களும் தாம் தமது நூல்களுக்கு வழங்கும் அடையாள இலக்கம் பொது மைத் தன்மையுடையதாக இருக்கவேண்டும் என்று தீர்மானித் துக் கொண்டன.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு ஸ்தாபனமே இத்தகைய குறியீட்டு இலக்கங்களை வழங்க அதிகாரமளிக்கப்பட வேண்டியதன் அவசியம் அவ்வேளையில் உணரப்பட்டதன் பயனாக ஜெனீவாவில் 1972-ம் ஆண்டு சர்வதேச தராதர ஸ்தாபனம் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஐக்கிய இராச் சியத்தில் 1967-ம் ஆண்டுகளில் விட்டேக்கர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவந்த நூல்களுக்குக் குறியீட்டுஎண் வழங் கும் முறை சில மாற்றங்களுடன் சர்வதேச தராதர நூல் எண் வழங்குவதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் படிப்படி யாக இது உலகநாடுகளெங்கும் பரவலாயிற்று.

சர்வதேச தராதர நூல் எண் ஐந்து பகுதிகளைக் கொண்டது. வர்த்தக உலகில் உருவாக்கப்படும் ஒரு உற்பத்திப்பொரு ளுக்கு கோட்டுரு அடையாளம் வழங்குவதென்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இன்றைய கணனிமயப்படுத்தப்பட்ட வாழ் நிலையில் மாறிவிட்டது. ஒரு வர்த்தக நிலையத்தில் நீங்கள் வாங்கும் எந்தவொரு பண்டத்திலும் கோட்டுரு அடையாளம் இருப்பதை அவதானிக்கலாம். நூல்கள் இதற்கு விதிவிலக்கா கிவிட முடியாது. நாங்கள் நூல்களுக்கு வழங்கப்படும் கோட் டுரு அடையாளம் (Bar Code) பற்றியே இங்கு கவனத்தைச் செலுத்த முனைகின்றோம்.

ஐ.எஸ்.பீ.என். இலக்கக் குறியீட்டில் குறிப்பிடப்படும் தகவல் கள் அனைத்தும் ஆசிரிய வெளியீட்டாளராலோ, வெளியீட்டு நிறுவனத்தாலோ விண்ணப்பத்தின்போது வழங்கப்படும் தக வல்களை அடிப்படையாக வைத்தே கட்டமைக்கப்படுகின் றது. அதனால் நூல்விபரத் தகவல்களை ஐ.எஸ்.பீ.என். ஏஜென்சிக்கு (முகவருக்கு) வழங்கும்போது அவதானமாகச் செயற்படவேண்டும். அதற்கு வெளியீட்டகங்களும், பதிப்ப கங்களும், ஆசிரிய வெளியீட்டாளர்களும் ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தைப் பற்றிய பின்னணித் தகவல்களை ஓரளவாகு தல் அறிந்து வைத்திருக்கவேண்டும்.

சர்வதேச தராதர நூல் எண்ணுக்கான முதலாவது பகுதி EAN Prefix. இதனை European Article Number என்ற சொற்றொட ரின் சுருக்கமாகக் கொள்வர். இரண்டாவது பகுதி நூல் வெளி யிடப்பட்ட பிரதேசத்தை (நாட்டைக்) குறிக்கும். மூன்றாவது பகுதி அந்த நூலின் வெளியீட்டாளரைக் குறிக்கும். நான்கா வது பகுதி அந்த வெளியீட்டு நிறுவனத்தால் அல்லது ஆசி ரிய வெளியீட்டாளரால் (Author-Publisher) ஐ.எஸ்.பீ.என். இலக்கத்துடன் வெளியிடப்பட்ட எத்தனையாவது நூல் என்ப தைக் குறிக்கும். இறுதிப் பகுதி பரிசோதனை இலக்கம் எனப் படும். இது ஐ.எஸ்.பீ.என். இலக்கம் வழங்கும் அதிகார மையம் பயன்படுத்தும் ஒரு கணிதக் குறியீட்டுக் கணிப்பு எண். இது எப்போதும் 0 முதல் 10 வரையான இலக்கத்தைக் கொண்டிருக்கும். இவ்விலக்கம் தொழில்நுட்பக் காரணிக ளால் ஒரு தானத்தையே கொண்டிருக்கவேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக 0 முதல் 9 வரையிலான ஒற்றைத் தானத்தைக் கொண்டதாகவும் 10-ம் இலக்கம் மாத்திரம் ரோமன் குறியீட் டைப் பயன்படுத்தி x என்று குறிப்பிடப்பட்டு இருக்கும். இந்த ஐந்து பிரிவுகளும் இடைவெளிவிட்டு அல்லது ஒரு தரிப்புக் குறியீட்டுடன் (-) குறிப்பிடப்படவேண்டியது மிகவும் அவசிய மானதாகவும். அறியாமை, கவனயீனம், அக்கறையின்மை போன்றவற்றின் காரணமாக இவ்வேறுபாடுகளை அறியாமல் இடைவெளியின்றி தொடர்ச்சியாக இவ்விலக்கங்களை நூல்க ளில் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து இலக்கத் தொகுதிகளையும் உள் ளடக்கிய சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number -ISBN) ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சர்வ தேச தராதர நிறுவனத்தின் பிரதிநிதியாக விளங்கும் தேசிய நூலகத்தினால் நியமிக்கப்பட்ட அதன் பிரிவொன்றினால் அல் லது பிரதிநிதியினால் மட்டுமே வழங்கப்படுவது வழமையா கும். தகவல் மூலங்களின் பௌதிக அமைப்பை வேறுபடுத் தும் வகையில் EAN Prefix எனப்படும் மூன்று இலக்கம் கொண்ட தொகுதி, ஜனவரி 2007 முதல் ISBN இலக்கத்தொட ரில் முன்பகுதியில் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டு இப்போது 13 இலக்கங்கள் கொண்ட இலக்கத் தொடராக சர்வதேச தரா தரநூல் எண் வழங்கப்படுகின்றது. பிரசுர வடிவங்களைப் பொறுத்தவரையில், இன்றைய நிலையில் இம்மூன்று இலக் கங்களும் 977, 978 அல்லது 979 ஆக ஒதுக்கப்பட்டு இருக் கின்றன. (977- சஞ்சிகை வடிவம், 978- நூல் வடிவம் / ஏட்டுப் பிரதிகள், 979- இசைவடிவம்).

ஜெனீவாவில் இயங்கும் தலைமை நிலையத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு குழும இலக்கம் (Group Number) வழங்கப்படுகின்றது. அதுவே அந்த நாட் டுக்குரிய தனித்துவ எண்ணாகக் கருதப்பட்டு சர்வதேச தராத ரநூல் எண்ணின் முதலாவது பகுதியில் குறிப்பிடப்படுகின் றது. இலங்கை 1986ம் ஆண்டு நடுப்பகுதியில் சர்வதேச தரா தர நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தகுந்தது. இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள தனித் துவ எண் 955 என்பதாகும். ஆரம்பத்தில் இலங்கையில் வெளியாகிய நூல்கள் அனைத்தினதும் தராதர எண் 955-ல் ஆரம்பமாகியிருப்பதை அவதானிக்கலாம். பின்னாளில் அப ரிமிதமான நூல்வெளியீட்டின் காரணமாக சில நாடுகளுக்கு இரண்டு இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக மலேசியாவில் 967, 983 ஆகிய இரு இலக்கங்கள் பயன்படுத் தப்படுகின்றன. சிங்கப்பூர் 981, 9971 ஆகிய இரு இலக்கத் தொடர்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தியா 81, 93 ஆகிய இரண்டு இலக்கங்களையும் பயன்படுத்து கின்றது. இவ்வகையில் இலங்கைக்கு 955 உடன் மேலதிக மாக தற்போது 624 என்ற குழும இலக்கமும் வழங்கப்பட்டுள் ளது.

இரண்டாவது பிரிவு இலக்கமான வெளியீட்டாளர் குறியீடு ஒரு குறித்த நாட்டில் பதிவு பெற்ற வெளியீட்டாளருக்கு வழங்கப்ப டும் தனித்துவமான தொடர் இலக்கமாகும். தமது வெளியீட்டு நிறுவனத்தை அல்லது தம்மை ஒரு வெளியீட்டாளராகப் பதிவு செய்து கொள்வது சிரமமானதொரு காரியமில்லை. முதலில் ISBN நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஒரு விண்

ணப்பப் படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து அவர் களுக்கு அனுப்பி வைத்தால் போதுமானது. அவ்விண்ணப் பப் படிவத்தில் வெளியீட்டாளரின் பெயர், முகவரி, கடந்த காலங்களில் வெளியிட்ட நூல்கள், திட்டமிடப்பட்டுள்ள நூல் கள் போன்றவை தொடர்பான விபரங்கள் கேட்கப்பட்டிருக் கும்.

பிரித்தானியாவில் வெளியீட்டாளர் பட்டியலில் பதிவு செய்யப் பட்டு பத்து தொடர் இலக்கங்களை வழங்குவதற்கு 125 பவுண்கள் வரை (விற்பனை வரி நீங்கலாக) அறவிடப்படுகின் றது. மற்றைய நாடுகளில் அமைந்துள்ள தேசிய நூலகங்க ளில் அந்தந்த நாட்டுச் செலவினங்களைக் கேட்டறிந்து கொள்ளமுடியும்.

ஒரு வெளியீட்டாளர் தனது தலைமை அலுவலகம் இயங்கும் நாட்டிலேயே தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும். நூல் எங்கு அச்சிடப்படுகின்றது அல்லது எங்கு சந்தைப்படுத்தப்ப டுகின்றது என்பது இங்கு முக்கியமல்ல. சர்வதேச தராதர எண் வெளியீட்டாளரை முதன்மைப்படுத்தியே வெளியிடப்படு கின்றது. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தவரை, ஒரு எழுத்தாளர் தானே நூலை எழுதி வெளியிடுவதாலும், முதலீட்டைத் தானே மேற்கொள்வதாலும் தன்னை ஒரு வெளி யீட்டாளராகப் பதிந்து கொள்ள உரித்துடையவராவார். ஜேர் மனியில் இருக்கும் ஒரு எழுத்தாளர் தனது சொந்தப் பணச் செலவில் ஒரு நூலை பிரித்தானியாவில் அச்சிட்டு வெளியிடு வாராயினும் அவர் ஜேர்மன் வெளியீட்டாளராகவே கருதப்படு வார். அவரது நூலுக்கான தராதர எண் ஜேர்மனியிலுள்ள தரா தர எண் வழங்கும் நிறுவனத்திடமிருந்தே பெற்றுக்கொள்ளப் படல் வேண்டும். அதேவேளை அவர் பிரித்தானியாவில் நூலை அச்சிடுவதால், அந்நாட்டிலுள்ள பதிப்பகத்தின் ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும் வாய்ப்புள்ளது. எது எவ்வாறாகவிருப்பினும், ஒரு நூலுக்கு ஒரு சர்வதேச தராதர நூல் எண் மாத்திரமே பெறவேண்டும். கணனித் தொழில்நுட்ப உலகில் அந்த இலக்கமே குறித்த நூலுக்கான அடையாளமாகும். ஐ.எஸ்.பீ.என். இலக்கம் எவ்வி தமான சட்டபூர்வமான அதிகாரங்களையோ பாதுகாப் பையோ கொண்டிராதபோதிலும், சில நாடுகள் தமது நாட்டு ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தைப் பெற்ற நூல்களுக்கு சிறப்புச் சலுகைகள், விற்பனை வசதிகள், பரிசுப்போட்டிகளில் பங் கேற்பதற்கான வாய்ப்புகள் என்பவற்றை வழங்குகின்றன.

தமிழகத்தில் இயங்கும் வெளியீட்டகங்களினூடாக தமது நூலை வெளியிடும் ஈழத்துப் படைப்பாளிகள் தமது நூல்க ளுக்கு அந்தந்த வெளியீட்டகத்தின் கீழேயே ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தைப் பெற்றுப் பதிகின்றனர். தமது நூலை இந்தியா விலோ, புலம்பெயர் நாடுகளிலோ எளிதாகச் சந்தைப்படுத்து வதில் ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் இதனால் வாய்ப்பைப் பெற் றுக்கொள்ள நேரிடலாம். இந்தியாவில் வெளிவரும் தமிழ் நூல்களில் ஐ.எஸ்.பீ.என். தராதர எண் பரவலாகப் புழக்கத் தில் உள்ளதால் நூலீட்டலில் தராதர எண் வழங்கப்படாத நூல்கள் ஓரங்கட்டப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. இலங்கைத் தேசிய நூலகமும், இலங்கை இலக் கிய, கலை, கலாச்சார அமைப்புகளும் வழங்கும் முன்னுரி மைகளால், அண்மைக்காலங்களில் இலங்கையில் வெளியா கும் பல தமிழ் நூல்கள் இவ்விலக்கத்தைத் தாங்கி வருவதும் கவனிக்கப்படல் வேண்டும். சாகித்திய மண்டலப் பரிசுக்குத் தேர்வுசெய்யப்படும் நூல்களுக்கும் இலங்கை நூலகங்களில் கொள்வனவு செய்யப்படும் நூல்களுக்கும் இவ்விலக்கம் கட் டாயப்படுத்தப்பட்டால், இலங்கையில் ஐ.எஸ்.பீ.என். இலக் கத்தைப் பதிவுசெய்யும் ஆர்வத்தை மேலும் அதிகரிக்கச் செய்யலாம்.

வெளியீட்டாளர்களுக்குப் பதிவிலக்கம் வழங்கப்பட்டதும் அப்பதிவுகள் யாவும் காலத்துக்குக் காலம் வெளியீட்டாளர் வழிகாட்டி (ஆண்டு நூல்) நூலில் பிரசுரிக்கப்படும் நடை முறை ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்றது. பதிவுசெய் யப்படும் நூல்களில் 5 பிரதிகள் தேசிய நூலகத்திற்கு அனுப் பப்படவேண்டும் என்ற கட்டாயமும் உண்டு. அப்படிப் பெறப் படும் நூல்களின் பிரதிகள் அங்கத்துவ தேசிய நூலகங்க ளுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழமை. ஜெனீவாவில் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் காலத்துக்குக் காலம் இவை சேர்த்துக்கொள்ளப்படும். குறிப் பிட்டதொரு வெளியீட்டாளருக்கு வழங்கப்பட்ட சர்வதேச தரா தர நூல் எண் எக்காரணம் கொண்டும் அந்நாட்டில் மற்றொரு வெளியீட்டாளருக்கு வழங்கப்படமாட்டாது. வெளியீட்டாளர் தான் ஒரு நூலை வெளியிடத் தீர்மானித்ததும் உத்தேசநூல் பற்றிய நூலியல் தரவுகளை அதற்கென இருக்கும் ஒரு படி வத்தில் நிரப்பி அனுப்ப வேண்டும்.

சில நூல்கள் நூலகப்பதிப்பு, சாதாரண பதிப்பு என்று இரு வகையில் வெளியிடப்படுவதுண்டு. ஒரே நூலின் சாதாரண பதிப்புக்கும் நூலகப் பதிப்புக்கும் இடையே பௌதிக வேறு பாடு இருப்பதாலும், விலை வேறுபாடு இருப்பதாலும், இரு பதிப்புகளுக்கும் வெளியீட்டாளர் விரும்பினால் வெவ்வேறு சர்வதேச தராதர நூல் எண்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு நூல் வெளியிடப்பட்டு சிலகாலங்களின் பின் அதன் இரண்டாவது பதிப்பு மாற்றமெதுவுமின்றி மறுபிரசுரமாக வெளியிடப்பட்டால் (Reprint) முதலாம் பதிப்புக்கு வழங்கப் பட்ட நூல் இலக்கத்தையே மறுபதிப்பு நூலுக்கும் பயன்படுத் தலாம். ஆனால் மாற்றங்களுடன் திருத்திய பதிப்பாக (Revised Edition) வெளியிடப்படுமேயானால் அது இரண்டாவது பதிப்பு என்று கணக்கிடப்பட்டுப் புதிய தராதர நூல் எண் வழங்கப்படும்.

ஒரு வெளியீட்டாளர் பதிவுசெய்யும் நூல்கள் தொடர் இலக்க ஒழுங்கில் பதியப்படும் அந்தத் தொடரிலக்கம் சர்வதேச தரா தர நூல் எண்ணின் மூன்றாவது பிரிவில் தரப்படுகின்றது. கொழும்பு குமரன் புத்தக இல்லம் 'சுவாமி விபுலாநந்தர் பன் முகப் பார்வை' என்ற செ.யோகராசா அவர்களின் நூலை 2015-ல் வெளியிட்டிருந்தது. அந்நூலுக்கான ISBN இலக்கம் 978-955-659-455-3. என்பதாகும். இதில் 659 என்பது குமரன் பதிப்பகத்திற்கென இலங்கையில் சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் அமைப்பினர் வழங்கிய தனித்துவமான நிறு வன இலக்கமாகும். 455- என்பது மேற்படி 659 என்ற இலக்கத் துக்குரிய குமரன் புத்தக இல்லம் பெற்றுக்கொண்ட 455-வது நூலைக் குறிக்கின்றது. இறுதிப் பகுதியில் உள்ள 3- என்ற இலக்கம், ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தை உருவாக்கி வழங்கிய நிறுவனம் மேற்கொள்ளும் ஒரு கணிதக் கணிப்பீட்டுக் குறியீ டாகும். இது 0 முதல் 10 வரையிலான ஒற்றைத் தானத்தி லேயே எப்பொழுதும் இருக்கும். 10-ஆவது இலக்கத்தை x என்று ரோமன் இலக்கத்தில் குறிப்பிடுவார்கள் என்பதை முன்

னர் குறிப்பிட்டிருக்கிறேன்.

சர்வதேச தராதர நூல் எண் பின்வரும் உருவ அமைப்புள்ள வெளியீடுகளுக்கு வழங்கப்பட மாட்டாது. நாட்குறிப்புகள் (Diaries), கலண்டர்கள், விளம்பரப் பிரசுரங்கள், நாடக கலை நிகழ்ச்சி நிரல்கள், நிறுவன வழிகாட்டிகள் (Prospectus), தலைப்புப் பக்கம், விளக்கம் போன்றவற்றைக் கொண்டிராத படங்கள் ஆகியன தவிர்ந்த சஞ்சிகை பருவவெளியீடுகள் ஆகியனவும் சர்வதேச தராதர நூல் எண் பெறத் தகுதியற்ற வையாகும். சஞ்சிகைகளைப் பொறுத்த மட்டில் சர்வதேச பருவ வெளியீட்டுத் தராதர எண் (ISSN) வழங்கும் திட்டம் அமுலிலுள்ளது. இதுபற்றி இக்கட்டுரையின் இறுதிப்பகுதி யில் விளக்கப்படும்.

ஒரு வெளியீட்டாளர் தனது தனிநூல் அல்லாததொரு வெளி யீடொன்றுக்கு சர்வதேச தராதர நூல் எண் (ISBN) பெற்றுக் கொள்வதற்குத் தகுதியானதாவென்பதை முன்கூட்டியே தராதர எண் வழங்கும் நிறுவனத்திடமிருந்து தெரிந்து கொள் ளலாம். மேலும், இலங்கையில் சர்வதேச தராதர நூல் எண் இல்லாமல் ஏற்கெனவே வெளியிடப்பட்டு விட்ட நூலொன் றுக்கு சர்வதேச தராதர நூல் எண் கோரி விண்ணப்பிக்க முடி யாது என்ற விதியொன்றிருந்தது. பின்னாளில் சில நாடுகள் அதனை மாற்றியுள்ளன. குறிப்பிட்ட நூலை மறுபிரசுரம் செய்ய முற்படும் வேளையில் மாத்திரம் விண்ணப்பிக்கலாம் என்பதே பொதுவான நடைமுறையாகும். பழைய நூல்களுக் குச் சர்வதேச தராதர நூல் எண் பெற்று ஒட்டிவைத்து விற் பனை செய்வதன்மூலம் வெளியீட்டு நிறுவனத்தின் நூலின் வெளியீட்டு ஒழுங்கு சரிவரப் பேணப்பட முடியாது போக லாம். இதனால் பொதுவாக எவரும் தமது பழைய நூல்க ளுக்கு சர்வதேச தராதர நூல் எண் பெற முயற்சிப்பதில்லை.

இலங்கையில் முதற் பதிப்பைக் கண்ட நூலொன்றை தமிழ கத்தில் இரண்டாம் பதிப்பாக அல்லது, தமிழகப் பதிப்பாளர் ஒருவரின் வாயிலாக வெளியிடுமிடத்து இந்திய சர்வதேச தரா தர நூல் எண் ஒன்றை அந்த மண்ணில் இயங்கும் வெளியீட்ட கத்தின் பதிவின்கீழ் பெற்றுக்கொள்ளவேண்டும். அவ்வேளை யில் இலங்கையில் இலங்கை வெளியீட்டாளருக்கு வழங்கப் பட்ட சர்வதேச தராதர நூல் எண்ணை அங்கு மேலதிகமா கவோ, பிரதியீடாகவோ பயன்படுத்தலாகாது.

தராதர இலக்கத் தொகுதியின் இறுதிப்பிரிவு (நான்காவது பிரிவு) பரிசோதனை இலக்கமாகும். முன்னைய மூன்று பிரிவு இலக்கங்களும் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை ஒரு கட்டளை விதி (Formula) மூலம் அறிந்து கொள்வதற்காக இப்பிரிவு இலக்கம் பயன்படுத்தப்படும். இவ் விலக்கம் எப்போதும் ஒரு தான இலக்கமாகவே காணப்படும்.

சர்வதேச தராதர நூல் எண் வழங்குவதால் ஒரு ஈழத்து ஆசி ரிய, வெளியீட்டாளருக்கு என்ன நன்மை கிட்டப்போகின்றது என்று நீங்கள் சிந்திக்கக்கூடும். சர்வதேச தராதர நூல் எண் ணைப் பெறுவதால் நவீனமயப்படுத்தப்பட்டு வரும் தேசிய நூல் வெளியீட்டாளர் வரிசையில் எம்மவரும் இடம்பெற்று விடு கின்றனர். காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் எம்மவரின் பெயரும் இடம்பெ றுமாகையால் காலக்கிரமத்தில் சர்வதேச மட்டத்தில் அனை வரும் அறிமுகமாவது சாத்தியமாகிறது. இது அந்தந்த நாட் டின் ISBN முகவர்களின் முறையானதும் ஒழுங்குபடுத்தப்பட்ட துமான நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.

நூலகங்களில் நூற்தேர்வு நடவடிக்கைகளை நவீனமயமாக் கும் இவ்வேளையில் இத்தகைய வழிகாட்டி நூல்களில் இடம் பெறுவதால் எமது வெளியீட்டாளர்கள் தமது வெளியீடுகளை சந்தைப்படுத்த நல்ல வாய்ப்பும் கிட்டுகின்றது. இலங்கைச் சாகித்திய மண்டலப் போட்டிகளுக்கு வழங்கப்படும் நூல்க ளில் சர்வதேச தராதர நூல் எண் உள்ள நூல்கள் முன்னு ரிமை பெறுகின்றன. ஒரு நூல் உருவாகிய நாடு பற்றிய அடை யாளத்தை சர்வதேச தராதர நூல் எண் தருகின்றது.



சர்வதேச தராதர நூல் எண் பெற்றதும் அவ்விலக்கத்தை நூலின் பின்புற அட்டையில் தெளிவாக அச்சிடல் வேண்டும் என்பது விதிமுறையாகும். இதை நூலின் பின்னட்டையின் அடிப்பகுதியில் (10 பொயின்ட் எழுத்தில்) அச்சிட வேண்டும் என்பது விதியாகும். நூலுக்கு மேலுறை(Jacket) இடப்பட்டு விற்பனை செய்யப்படுமிடத்து அந்த மேலுறையிலும் இவ்வி லக்கம் பொறிக்கப்படல் வேண்டும். மேலும் இவ்விலக்கம் நூலின் தலைப்புப் பக்கத்தின் பின்புறத்திலும் (Verso) 14 பொயின்ட் அளவிற்கு மேற்படாமல் அச்சிடப்படல் வேண்டும். ISBN என்ற நான்கு ஆங்கில எழுத்துக்களுடன் நூலுக்கான எண்ணை அதன் ஐந்து பிரிவுகளையும் வேறுபடுத்தத் தக்க வாறு குறுக்குக்கோடிட்டு அச்சிட வேண்டும். ISBN என்ற எழுத்துகளின் முடிவில் இலக்கங்கள் தொடங்கும் இடத்தில் எவ்வித அடையாளங்களும் இடம்பெறலாகாது. சர்வதேச தராதர நூல் எண் பெற்றுக்கொண்டதும் அவ்வெண்ணுக்குப் பொருத்தமான கோட்டுரு அடையாளம் (Bar Code) பதிப்ப கங்கள் அல்லது பக்க வடிவமைப்பாளரின் உதவியுடன் இணையத்தளத்திலிருந்து எளிதாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இனி வரும் தொடரில், ஒரு ஈழத்துத் தமிழ் நூலுக்கான சர்வ தேச தராதர நூல் எண் பதிவதில் காணப்பட்ட குறைபாடுகள், தவறான எண்ணக்கருக்கள் பற்றிய எமது கணிப்பீடுகளை யும், சஞ்சிகைகளுக்காக வழங்கப்படும் ISSN இலக்கம் பற்றி யும் ஆராய்வோம்.

(இன்னும் வரும் ...)



selvarajah.n@thaiveedu.com



# கரவையூர்க் கவிஞர் மன்னவன் கந்தப்பு

– வே. விவேகானந்தன்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே, வடமராட்சிப் பிரதேசத்தில் இயல், இசை, நாடகம் என முத்தமிழும் கொஞ்சிக் குலாவும் இடம் கரவெட்டியாகும். இங்கு தச்சை விநாயகர் குடிகொண்டிருக்கும் தச்சந்தோப்பைச் சூழவுள்ள குறிச்சிகளான வாழைத்தோட்டம், பெரியதோட்டம், சிறுமணியந்தோட்டம், மலையாளந்தோட்டம், அரியதோட்டம் ஆகியவற்றில் ஒன்றான பெரிய தோட்டத்தில் வாழ்ந்து வந்த பெரியார், முருகேசு பொன்னாச்சி இணையருக்கு ஏக புத்திரராக 1926-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதினெட்டாம் திகதி கந்தப்பு அவர்கள் பிறந்தார்.

கரவெட்டியில் கல்விச் செல்வத்தை வாரி வழங்கி வந்த, மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கற்று, அதே பாடசாலையில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (S.S.C) முதலாம் பிரிவில் சித்தியடைந்தார். அங்கு கல்வி பயிலும் போது ஆசிரியர்களினதும் சக மாணவர்களினதும் கவர்ச்சிக்குரியவராகக் காணப்பட்டார். விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். உடற்பயிற்சி, யோகாசனப் பயிற்சி மற்றும் சாரணியத்தில் கோபுரம் அமைத்தல், கையில் நடத்தல், தடியில் நடத்தல், வளையத்தில் தொங்கி சாகசங்கள் புரிதல் என அனைத்திலும் பங்குபற்றி முன்னிலை வகித்தார். இவர் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் முன்னிலை வகிக்க, இவரது ஆற்றலை அறிந்து செல்லையா ஆசிரியரும், கார்த்தி-கேசு ஆசிரியரும் ஊக்கமளித்தமை முக்கிய காரணமாகும்

கந்தப்பு அவர்கள் ஆங்கில மொழியில் புலமை பெறும் நோக்குடன், நெல்லியடி மத்திய மகாவித்தியாசாலையில் சேர்ந்தார். அங்கு பயிலும் போது, இவரிடம் இயல்பாகவே காணப்பட்ட துடிப்பு, குறும்பு, தமிழ்ப் புலமை, சிலேடைத் தமிழில் பேசி ஏனையவர்களைக் கவரும் பண்பு, கவிதை புனையும் ஆற்றல் என்பவற்றைக் கண்டு வியந்த கலாநிதி சிவப்பிரகாசம் அவர்கள் தமிழுக்கு நீ 'மன்னவன்' என விழித்துப் பாராட்டினார். அத்துடன் அவரது மனதிலும் திறமை மிக்க மாணவன் என்ற இடத்தைக் கந்தப்பு பெற்றுக் கொண்டார். தொடர்ந்து இவர் தனது தமிழ் அறிவைக் கூர்மைப்படுத்தவும், கவி புனையும் ஆற்றலை மேம்படுத்தவும் தென் புலோலியூர் கந்த முருகேசனாரிடம் மாணவனாகச் சேர்ந்து கற்றார்.

பின்னர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் சித்தியடைந்து, திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து கொண்டார். அங்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் நன்மதிப்பைப் பெற்று அவரது மனதிலும் இடம் பிடித்தார். கந்தப்பு அவர்களின் சிலேடைத் தமிழ், கவிபுனையும் ஆற்றல், ஏனையவர்களைக் கவரும் வகையில் தமிழில் பொடி வைத்துப் பேசும் பண்பு என்பவற்றைக் கண்டு 'உண்மையிலேயே நீ மன்னவன்' தான் எனக் கூறிப் பெருமகிழ்வு கொண்டார். கலாநிதி சிவப்பிரகாசம் அவர்கள் மன்னவன் எனக் கூறியதை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் அங்கீகரித்ததைத் தொடர்ந்து கந்தப்பு என்ற பெயர் படிப்படியாக மங்கி மன்னவன் என்ற பெயர் பிரகாசிக்கத் தொடங்கியது. கந்தப்பு அவர்கள் தமிழ் இலக்கியம், மற்றும் கவிதை உலகில் 'மன்னவன் கந்தப்பு' என்ற பெயரிலேயே இறுதி வரை வலம் வந்தார்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த மன்னவன் கந்தப்பு புசல்லாவ பரி. திருத்துவக் கல்லுரி, மற்றும் பதுளை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றி யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று, தனது பிறந்த ஊரான கரவெட்டியில் விக்னேஸ்வரக் கல்லூரியில் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். பின்னர் யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், 1982-ம் ஆண்டு முதல் 1986-ம் ஆண்டு வரை, தான் ஆரம்பக் கல்வியைக் கற்ற, பின்னர் ஆசிரியராகப் பணியாற்றிய மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் திகதி ஓய்வு பெற்றார்.

பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றாரே தவிர கல்வி, கலை, இலக்கியம் மற்றும் சமூகப் பணிகளைத் தொடர்ந்தும் மேற்

கொண்டு வந்தார். பண்டிதர் வீரகத்தியுடன் இணைந்து வாணி கலைக் கழகத்திலே பாலபண்டிதர் மற்றும் பண்டிதர் வகுப்பு களை நடாத்தினார்.

மன்னவன் கந்தப்பு கவிதை புனைவதில் தனக்கென ஒரு



தனித்துவத்தைப் பேணி வந்தார். பழமையும் புதுமையும் சம மாக வளர்ச்சி அடைந்து வரும் கரவையூரில், தமிழ்ப் புலமை பற்றி அவ்வூரைச் சேர்ந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர் கள் 'கரவெட்டிக் கிராமத்திலே தான், ஏறத்தாழ சமகாலத்தில் கணபதிப்பிள்ளை ஆசிரியரின் தச்சை சிலேடை வெண்பாவும் ரஞ்சகுமாரின் கோசலையும் தோற்றம் பெற்றன' எனக் குறிப் பிட்டுள்ளார். அதாவது, அங்கு பழமை இலக்கியங்களும் புதுமை இலக்கியங்களும் சமமாக வளர்ச்சி பெற்று வந்தன. அந்த இருவகை இலக்கியங்களையும் கையாண்டு புதுமைக் கும் பழமைக்கும் பாலமாக மன்னவன் கந்தப்பு விளங்கினார்.

மன்னவன் கந்தப்பு 1966 – 1970 காலப் பகுதிகளில் இலங்கை வானொலியில் கவிதைகள் மூலம் தமிழ் உலகெங்கும் அறி முகமானார். சொற்செறிவும் பொருட்செறிவும் மிக்க அவரது கவிதைகள் அனைவரையும் கவர்ந்தன. கவியரங்குகளில் அவரால் வாசிக்கப்பட்ட பொருள் செறிந்த, சமயோசிதமான, சாமர்த்தியமான சிலேடைக் கவிதைகள் சபையோரை சிரிக்க வும் சிந்திக்கவும் செய்தன.

வாழ்த்துப்பாக்கள், பாராட்டுப்பாடல்கள் என்பவற்றோடு, பிரி வுத் துன்பப் புலம்பல்கள், எனப்படும் சரமகவி பாடுவதிலும் வல்லவராக விளங்கினார். இவர் இரண்டு வயதாக இருக்கும் போது, தாயாரை இழந்து, பேத்தியாருடன் வாழ்ந்து வந்தார். தன்னை வளர்த்த வள்ளிப் பேத்தியும் இறந்தபோது அவர் இயற்றிய சரமகவி பின்வருமாறு.

***தொட்டுப் பிசைந்துணவீந்த என் தாய் புவி நீங்கவுயிர்***
***விட்டுப் பிரிந்தன என்றே ஒரு தந்திகண்டு ரயில்***
***எட்டிப் பிடித்திர வோடி ராவாக நான் வந்ததும்***
***சுட்டுப் பொசுக்கிய சாம்பலைக் கண்டனன் சூழ்வினையே***

***ஊருக்கு நல்லவள் உற்றார் அயல் பிறருள்ள சுற்றம்***
***யாருக்கும் நல்லவள் எல்லோர்க்கும் குஞ்சி உறவு முறைப்***
***பேருக்கும் நல்லவள் ஆவி துறந்திறை ஈசனது***
***ஊருக்கு நல்லது சொலவோ போயினாள் ஓ சதியே.***

இப்பாடல் வரிகளின் மூலம் பிரிவுத் துயரால் வருந்துவோரின் உள்ளுணர்வை அவர் எடுத்துக் காட்டும் பாங்கு தனித்துவம் வாய்ந்தது. இவரது உறவினர்கள், நண்பர்கள் மறையும் போது இவர் பாடும் சரமகவிகள் உள்ளத்தைத் தொடுவன வாக அமையும். இவரது மிக நெருங்கிய நண்பரும் வட்டாரக் கல்வி அதிகாரியுமான பொன். கணேசன் அவர்கள் மறைந்த போது பாடிய சரமகவி பிவருமாறு அமைந்தது.

***'கட்டிய வேட்டியுங் கைமுட்டச் சட்டை குறிமடிப்பு***
***இட்டதோர் சால்வை அணிந்திறு மாப்புடன் ஏறிவந்து***
***பட்டிமன் றத்திலே நீபேசக் கேட்டவர் கேட்க இனிப்***
***பட்டிமன் றங்களை நாடுவரோ இல்லை நைந்தனமே'***

வெண்பா, அகவல், விருத்தம், கட்டளைக் கலித்துறை முத லான யாப்பு வடிவங்களைச் செம்மையாகக் கையாண்டு கவி தைகள் புனைந்த கவிஞர் மன்னவன் கந்தப்பு புதுக் கவிதை வடிவிலும் கவிதைகளை இயற்றினார். இவரது கவிதைகளில் இயல்பாகவே நகைச்சுவையும் சிலேடைப் பண்பும் அதிகமா கக் காணப்படும். இளம் வயதிலேயே தினகரன் நடாத்திய கவிதைப் போட்டியில் 'குறளாமை' எனும் தலைப்பில் எழுதப் பட்ட கவிதை, தங்கப் பதக்கத்தைப் பெற்றது. ஈழநாடு பத்தா வது ஆண்டு நிறைவு விழாவுக்காக நடாத்திய கவிதைப் போட்டியில் இவரது கவிதை முதற் பரிசைப் பெற்றது.

கரவையூர் மாணிக்கவாசகர் வித்தியாலயம், விக்னேஸ்வரக் கல்லூரி, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் ஆகிய

பாடசாலைக் கீதங்களை யாத்த பெருமை மன்னவன் கந்தப்பு வைச் சாரும். இவர் நகைச்சுவை ததும்ப சிலேடை அணியில் எழுதிய ஏராளமான கவிதைகள் மற்றும் நகைச்சுவை பொதிந்த சிலேடைப் பேச்சுகள் என்பன சேகரித்துப் பாது காக்கப் படாமையால் அவை நூலுருவில் வெளிவரவில்லை என்பது கவலைக்குரியதொன்றாகும். பேராசிரியர் அ. சண்மு கதாஸ் அவர்களின் பவள விழா மலரில், குறிப்பிட்ட சிலே டைப் பேச்சுக்கள் சிலவற்றை மாத்திரம், மன்னவன் கந்தப்பு எழுத்துருவில் ஆவணப் படுத்தியுள்ளார்.

மன்னவன் கந்தப்பு அவர்கள் சமூக அமைப்புகளுடன் இணைந்து சமுகப் பணிகளையும் ஆற்றினார். நாடக கவி-மணி வீ. கிருஸ்ணாழ்வார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கரவையூரில் விழாக் குழுவை அமைத்து, பேராசிரியர் கா. சிவத்தம்பி மற்றும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி உட்பட, உள்ளூர் கல்விச் சான்றோர்களையும் இணைத்து 'நாடக கவிமணி நூற்றாண்டு மலரை' யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வெளி யிடுவதற்கு பக்கபலமாக நின்று செயற்பட்டார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நூல் வெளியீட்டுச் சபையில் சேர்ந்து இருபத்தியேழு நூல்கள் வெளிவரப் பேருதவி புரிந்தார். மாணிக்கவாசகர் வித்தியாலய நூற்றாண்டு விழா மலர் வெளி யீட்டுக் குழுவின் தலைவராக செயற்பட்டு, மலரை சிறப்பாக வெளிக் கொணர்ந்தார். கட்டைவேலி-நெல்லியடி பலநோக் குக் கூட்டுறவுச் சங்கக் கலாச்சாரப் பெருமன்றம், வடமராட்சி கம்பன் கழகம் என்பவற்றுடன் இணைந்து சேக்கிழார் விழா, சமய மற்றும் கலை நிகழ்வுகள் என்பவற்றை ஏற்பாடு செய்து நடாத்துவதற்கு முன் நின்று செயற்பட்டார். ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம், வட இலங்கை சங்கீத சபை ஆகிய அமைப்புகளில் நிர்வாக உறுப்பினராக அங்கம் வகித்து ஊக்கமளித்தார்.

அரசியல் துறையிலும் ஆர்வம் கொண்ட கவிஞர் மன்னவன் கந்தப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளராகவும் தலைவர் அமரர் எம். சிவசிதம்பரத்தின் மிக நெருங்கிய நண்ப ராகவும் விளங்கினார். பொதுத் தேர்தல்களில் உடுப்பிட்டித் தொகுதியில் சிவசிதம்பரம் போட்டியிட்ட வேளைகளில், அவ ரது வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தார். பின்னர் கரவை யூரில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் இணைந்து அதன் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருடன் நெருக்கமாகப் பணியாற்றினார். அகில இலங்கை தமிழ் காங் கிரஸ் கட்சியின் கீதத்தை யாத்தவர் கவிஞர் மன்னவன் கந் தப்பு அவர்களே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மன்னவன் கந்தப்பு அவர்கள் கந்தமுருகேசனாரிடம் மாணவ னாக இருந்து தமிழ் மொழியை ஆழமாகக் கற்றதுடன், அவ ரது முற்போக்குக் கொள்கைகளையும் பின்பற்றத் தொடங்கி னார். ஏழை பணக்காரர், படித்தவர், படியாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எந்தவொரு பாகுபாடும் பாராது அனைவரு டனும் சமமாகப் பழகினார். மரணச் சடங்கின் போது பறை மேளம் இசைப்பதை ஒரு மேலாதிக்கத்தின் செயற்பாடு எனக் கருதிய மன்னவன் கந்தப்பு, தனது குடும்ப உறவுகளின் இழப் பின் போது, பறை மேளம் பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்ற ஒரு எழுதாத விதியை ஏற்படுத்தியிருந்தார். பணவரு வாயைக் கருத்தாகக் கொண்ட சமயக் கிரியைகளை அடி யோடு வெறுத்தார். போலியாக சமய அடையாளங்களை அணிந்து கொண்டு நடமாடுவதையும் அவர் விரும்பவில்லை. திருவிழாக் காலங்களில் கூட அவர் கோயில்களுக்குப் போவ தில்லை. ஆனால் அவரது ஆழ்மனதில் இறை நம்பிக்கை இருந்தது என்பதனை அவர் இயற்றிய பாடல்கள் மற்றும் கவி தைகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. குறிப்பாகக் கர வையூரில் இருந்து கதிர்காம முருகனுக்குப் புறா மூலம் தூது அனுப்பும் வகையில் அமைந்த 'புறா விடு தூது' இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கவிதை, கட்டுரை, பாடசாலைக் கீதம், சனசமூக நிலையக் கீதம், வாழ்த்துப்பா, கல்வெட்டு என எழுத்து மூலமும், மர ணச் சடங்கு, அந்தியேட்டி, திருமணச் சடங்கு, பாராட்டுவிழா, நூல்வெளியீடு, கழகக் கூட்டம், பட்டமளிப்பு விழா, அரசியல் கூட்டம் எனச் சமூக வைபவங்களில் கலந்து கொண்டும் சுறு சுறுப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்த மன்னவன் கந்தப்பு அவர்களை, வாழும் காலத்திலேயே கௌரவிக்க வேண்டும் எனக் கருதி, கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுற வுச் சங்கக் கலாசாரப் பேரவை, 'நகைச்சுவை மன்னன்' என் னும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டு விழாவை நடத்தியது. 2001-ம் ஆண்டு இந்துக் கலாசார அமைச்சு 'கலை ஞான கேசரி' என்னும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தது.

சிறந்த ஆசிரியர், சிறந்த நிர்வாகி, கவிஞர், கட்டுரையாளர், சமூக சேவையாளர், முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பன் முக ஆளுமையுடன் 'மன்னவன்' என்ற பெயரோடும் புகழோ டும் வாழ்ந்து வந்த கந்தப்பு அவர்கள் 2004-ம் ஆண்டு பெப்ர வரி மாதம் பதினைந்தாம் திகதி கரவையூரில் அமரத்துவம் அடைந்தார். அவரது மறைவின் போது, அவரது சீடர்களில் ஒருவரான தங்கமயில் என்பவர் பின்வருமாறு ஒரு சரமகவி யைப் பாடியிருந்தார்.

***'நீறிலா நெற்றியுள் நிமிர்ந்த சிவ நினைவு உள***
***மாறிலா மன்னவன் யாவர்க்கும் அன்புளப்***
***பேறிலே பெரியவன் பெரும் பகிடிப் பொக்கிசம்***
***தேறினான் சிறு குடில்வள்ளி நாதன் தங்க நீழல்'***

மன்னவன் கந்தப்பு அவர்களின் படைப்புகள் சேகரிக்கப் பட்டு, நூலுருவில் வெளிவராமை ஒரு குறைபாடாகக் கருதப் படினும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 'மன்னவன்' பற் றிய விபரங்களைப் பெற்று ஆய்வுகளை மேற்கொண்டு பல்க லைக்கழகத்தில் பேணிப் பாதுகாத்துள்ளனர். அவை பொது மக்களும் அறியக் கூடிய வகையில் வெளிக்கொணரப் பட வேண்டியது அவசியமாகும்.



vivekananthan.v@thaiveedu.com

# பன்முகக் கலைஞர் நடிகர் சிவகுமார்

– சு. வேணுகோபால்



நடிகர் சிவகுமாரின் ‘இது ராஜபாட்டை அல்ல’ என்ற தொடர் ஜூனியர் விகடனில் வரத் தொடங்கியபோது கல்லூரியின் புது முக மாணவனாக படித்துக்கொண்டிருந்தேன். தொடரைப் படிக்க வாய்ப்பு கிடைக்காது. சீனியர் மாணவர்கள் தங்கள் அறைக்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அப்படி இருந்தும் ஒரு வாரம் அந்தத் தொடரின் ஒரு பகுதியைப் படித் தேன். அதில் ‘நதியினில் வெள்ளம் கரையினில் நெருப்பு, இரண்டுக்கும் இடையில் இறைவனின் சிரிப்பு’ என்ற கண்ண தாசனின் வரிகள், தன் வாழ்க்கைப் பயணத்தை, அதனுள் இருக்கும் சிக்கலில் இருந்து எப்படித் தவிர்த்து மீள முயற்சி செய்தார் என்பதை வெளிப்படுத்துவதுபோல இருந்தது. இந் தக் குறிப்பிட்ட இடம் அந்தத் தொடரில் வந்ததா வேறு இடத் தில் சிவகுமார் எழுதிய கட்டுரையில் வந்ததா என்று சந்தேக மும் வருகிறது. ஏனென்றால் ‘இது ராஜபாட்டை அல்ல’ என்ற கட்டுரைத் தொடர் நூலில் அவ்விடம் இல்லை, சிவகுமாருக்கு கடவுள் தந்த வரங்களில் ஒன்று அபாரமான நினைவாற்றல் சக்தி. பாரதியின் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய இரண்டு இலக்கியப் பகுதிகளையும் அப்படியே திரும்பச் சொல்லும் ஆற்றல் அவருக்கிருந்ததை 1995-க்கு முன்னமே அறிந்தேன். 1998-ற்கு முன் தற்செயலாக ஒரு ஓட்டல் விடுதி யில் இருந்து அவசர அவசரமாக நடந்துச் சென்றதைப் பார்த் தேன். 1998-ல் அவரைப் பார்க்கவும், பேச்சைக் கேட்கவும் நல்ல சந்தர்ப்பம் அமைந்தது. திருப்பூர் தமிழ்ச்சங்கம் என்னு டைய ‘நுண்வெளிக் கிரகணங்கள்’ நாவலை 1997-ம் ஆண்டிற் கான சிறந்த நாவலாகத் தேர்வு செய்து கௌரவித்தது. அந்த நிகழ்வில் நடிகர் சிவகுமார் சிறப்பு அழைப்பாளராக வந்து பேசினார். அவர் எந்த இடத்திற்கும் வேகவேகமாக நடந்து செல்வதும் படபடவென வெடிப்புறப் பேசுவதும் அவரிடம் நெருங்கிச்செல்ல முடியாதபடி ஒரு தயக்கத்தை ஏற்படுத்தி யது. மதிய உணவு வேளையின்போது ஒதுங்கியிருந்த என்னை அழைத்து ‘அந்த நாவலை கொண்டுவந்திருக்கீங் களா’ என்று கேட்டார், ‘கொண்டு வரல சார்’ என்றேன். ‘சரி ஊருக்குப் போனதும் எனக்கு அனுப்புங்க படிக்கிறேன்’ என்று சொன்னார். கிட்டத்தட்ட 26 ஆண்டுகள் முடிந்துவிட் டன. அவருக்கு ‘நுண்வெளிக் கிரகணங்கள்’ நாவலை அனுப் பாமலேயே இருக்கிறேன். சென்ற வாரம் நடிகர் சிவகுமாரின் இளைய மகனார் கார்த்திக் அவர்களுடன் சந்தித்துப் பேசும் வாய்ப்பு அமைந்தது. அந்த நிகழ்வில் கார்த்திக் இருக்கி றாரா இல்லையா என்று உறுதிப்படத் தெரியாததால் சிவகுமா ரிடம் சேர்த்துவிடுவதற்காக என்று எடுத்துவைத்த புத்த கத்தை அன்றும் வீட்டிலேயே வைத்துவிட்டுப் போனேன். இது ஒரு வகையான கூச்சம்தான் தவிர வேறொன்றும் இல்லை.

சிவகுமார் ஒரு நடிகர் மட்டுமல்ல. சிறந்த ஓவியர், சிறந்த சொற்பொழிவாளர், பொறுப்புணர்வு மிக்க தந்தை, பண்பாளர் என்பதை பின்பு மெல்லமெல்லத் தெரிந்துகொண்டேன். ஏழை எளிய, நன்றாகப் படிக்கிற மாணவர்களுக்கு உதவி வருபவர் என்பதுதான் நான் அறிந்த அன்றைய முதல் தகவல். பன்மு கம் மிக்க ஒரு ஆளுமையை நெருங்கிச் சென்று பழகாமல் விட்டுவிட்டோமே என்ற ஆதங்கம் இப்போதும் உண்டு. அல் லது வாய்க்கிற சந்தர்ப்பங்களைக் கைவிட்டுவிடக் கூடியவ னாக இருந்து வந்திருக்கிறேன். ஒவ்வொரு பத்தாண்டுகளும் சிவகுமார் வெவ்வேறு பரிமாணங்கள் எடுத்துத் தன் வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றிக்கொண்டிருக்கிறார்.தன்னை அறிந் தவன் ஞானி என்பர்களே அப்படித் தன்னைப் புதுப்புது வித மாக மலரவிட்டுக்கொண்டே இருக்கிறார். அந்த மலர்ச்சியும் வாசமும் மனித சமூகத்திற்குப் பயன்படும்படியாக இருக்கி றது என்பது கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது. சிவகுமாருக் குப் பின் வந்த ரஜினி, கமலஹாசன் திரைத்துறையில் ஒரு உச்ச நட்சத்திரங்களாக வெளிப்பட்டார்கள். சிவகுமார் ஏன் அந்த எல்லைக்குச் செல்லவில்லை என்பதற்குக் காலத்தின் நிழலும், பண்பாட்டு அறமும் அவரை எழுந்து ஆடவிடாமல் செய்திருக்கிறது என்பேன்.

சிவகுமார் நடிக்க வந்த காலத்தில் சிவாஜி கணேசனும் எம்.-ஜி. ராமசந்திரனும் யாராலும் அசைக்க முடியாத புகழின் உச்சியில் பறந்து கொண்டிருந்த காலம். கதாநாயகன் வாய்ப்பு என்றால் அவர்கள் மட்டுமே என்றிருந்த காலம். சினிமா என்பது லாபம் நோக்கிய தொழில் என்றிருப்பதனால் சிவாஜிக்கும் எம்.ஜி.ஆருக்கும் இருந்த ரசிகர் செல்வாக்கு அதை ஈட்டித் தந்துகொண்டிருந்தபோது புதுமுகங்கள் உள்ளே நுழைந்து காலூன்றிப் புதுசாக எழுந்து கோலோச்சு வது என்பது முடியாத காரியம். ஆனால் அவர்களின் செல் வாக்குக்கிடையே தனக்கு வந்த சிறு வாய்ப்புகளையும் மறுக் காமல் ஏற்ற சிவகுமார் தன்னுடைய முயற்சியால் அந்தப் போர்க்களத்தில் நுழைந்தார். சிவகுமார் போல அதே காலகட் டத்தில் புதுமுகங்களாக வெளிப்பட்ட ஜெய்சங்கர், ரவிச்சந்தி ரன் போன்றவர்கள் பெரிய அளவில் ஜொலிக்க முடிய வில்லை. அவர்களிடம் தனிப்பாணிகள் இருந்தன. தென்ன கத்து ஜேம்ஸ்பாண்ட், மக்கள் கலைஞன் என்ற புகழ்மொழி கள் வந்தும்கூட அவர்கள் உச்சிக்கொம்பைத் தொட வில்லை. சிவகுமாருக்கும் இவர்களுக்கும் இருந்த வேறுபாடு என்னவென்றால் சிவகுமார் இருபெரும் மரபின் தொடர்ச்சிக்

குள்ளிருந்து எழுந்து வரப்பார்த்தார். ஜெய்சங்கர் அந்த மர பின் தொடர்ச்சிக்கு அப்பாலிருந்து உருவாகினார். அதனால் முதல் பத்தாண்டுகள் அவரால் தாக்குப்பிடிக்க முடிந்தது. சிவகுமார் புகழ்பெற்ற நடிகர்களின் படங்களில் தம்பியாக, மகனாக, முருகனாக வந்த வாய்ப்பைத் தட்டி ஒதுக்காமல் ஏற்று நடித்தார்.

கிராமம் என்ற பண்பாடு, உறவுகளின் பிரிக்க முடியாத இழை களின் வீரியம், வண்டலாகப் படிந்துவிட்ட ஒழுக்கம் என்ற வேலி, அறத்தோடு வளரவேண்டும் என்கிற ஆசை, மூத்தோர் கள் மீது கொண்ட மரியாதை, முறைகளை மீறினால் மற்றவர் கள் தூற்றுவார்கள் என்ற கவனம், நம்மால் மற்றவர்கள் வீழ்ந் துவிடக்கூடாது என்ற கவலை, இவை ஏதும் அந்த கிராமத்து இளைஞனிடமிருந்து விலகாமல் இறுக்கமாகப் பற்றியிருந்த தால் சிவகுமார் என்ற நடிகன் மெல்லவே வளர முடிந்தது. மிகச்சிறந்த ஓவியன் சினிமாதான் தன் ஆன்மதிருப்தி என்று தேர்வுசெய்துகொண்டபின் வந்த எளிய வாய்ப்புகளைப் இறு கப்பற்றி சாதித்துவிடவேண்டும் என்று தொடர்ந்து போராடி னார். ரஜினி, கமல் இருவரின் வருகை என்பது 1975-க்கு பின் னான காலம். சிவாஜி மற்றும் எம்.ஜி.ஆர் இருவரின் உச்ச காலம் முடிவுற்றுவிட்டது. சிவாஜி தொடர்ந்து நடித்தாலும் அவருடைய உச்ச நிகழ்வு தங்கப்பதக்கம் படத்துடன் நின்று விட்டது. 1975-க்கு பின் தமிழ் சினிமாவில் வேறுவிதமான கதையாடல்கள் கொண்ட திரைப்படங்கள் தோன்றிவிட்டன. போக்கிரி, விடலைப் பையன்களின் லீலைகள், ரவுடி, கொலைகாரன் இம்மாதிரியான கதாபாத்திரங்களுக்கு பெரிய மவுசு ஏற்பட்டது. இதுதான் ரஜினி, கமலை ஒரு உச்சத்திற்கு கொண்டுபோகப் போகிறது என்று யாரேனும் நினைத்திருக்க கூடுமா? சிவகுமார் இயல்பில் இதன் செயல்பாடுகளுக்கு மாற்றானவர். அவ்வாய்ப்புகளைத் தவிர்த்தார். 'சிவப்பு ரோஜாக்கள்' படத்தில் நடிக்க வந்த வாய்ப்பை அவர் தவிர்த் தது இயல்பானதுதான். 'புவனா ஒரு கேள்விக்குறி'யில் ஒரு மாறுதலுக்காக வில்லன் பாத்திரத்தை ஏற்றார். ரஜினிக்கு நல் லவன் பாத்திரத்தை விட்டுத்தந்தார். தமிழ்ச் சினிமா ரசிகர் கள், சினிமாவைச் சினிமாவாகப் பார்க்க மாட்டார்கள். ஒரு படத்தில் வில்லன் தோற்றத்தில் நடித்தால் அதுவே அடுத்த டுத்து மோசமான கேரக்டர்களுக்கு வாய்ப்பாக வந்து நிற்கும். நடிகர் மோகன் 'விதி' படத்தில் வில்லனாக வந்த பின் அவ ரைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டது தமிழ்ச் சினிமா வாழ்க்கை.

ரஜினி, கமல் ஆகியோர் போக்கிரித்தனமான கதாநாயக பாத் திரங்களையும் விரும்பி ஏற்றார்கள். சிவகுமார் திரைத்தொழி லையும் வாழ்வின் ஒரு அறம் சார்ந்த பகுதியாகவே பார்த் தார். முன்னைய தலைமுறையின் கட்டுமீறி வர முடியாத சூழ லும், பின்னைய தலைமுறையின் கட்டுமீறிய சூழலும் சிவகு மாருக்குப் பாதகமாகவே அமைந்துவிட்டன. சிவகுமார் அவர் கள் முதல் தலைமுறை நடிகர்களில் அழகன். உடலை நன் றாக பேணிய மார்க்கண்டேயன். சினிமா வேறு வாழ்க்கை வேறு என்று அறிந்துகொண்டவர். எண்ணக் குமுறல்களை வெளிப்படுத்தாத பண்பாளன். வாய்ப்பிற்காக இயக்குநர்களி டமோ தயாரிப்பாளர்களிடமோ தொடர்பைப் பேணவேண்டும் என்கிற ரீதியில் முயலாத கிராமத்தான். இதெல்லாம் சிவகு-மார் என்கிற நடிகனுக்குள் படிந்திருக்கும் வண்டல் படிவங் கள். சினிமாத் துறைக்கு இவை குறைபாடுகள். மானுடனுக்கு இவை கண்ணியங்கள். சிவகுமார் கண்ணியங்களைப் பற்றி னார்.

சூலூர் பக்கத்தில் காசிக்கவுண்டன் புதூரில் மேட்டாங்காட்டு விவசாயியின் மகனாகப் பிறந்த சிவகுமாருக்கு ஓவியத்தில் அல்லது சினிமாவில் மலர வேண்டும் என்று ஆசை, பதினோ ராம் வகுப்பு படித்து முடித்து என்ன வேலைக்கு போவது என்று இருக்கும்போது தோன்றுகிறது. அச்சமயம் ஒரு வாய்ப்பு வருகிறது. மில்லில் சூப்பர்வைசர் பணி. பொள் ளாச்சி மாமா ஆறுமுகக்கவுண்டர், கலங்கள் கிராமம் ஸ்ரீனி வாச நாயுடுவின் மில்லில் வேலைக்கு ஏற்பாடு செய்துவைத் தது கொதிப்பை உண்டாக்கியது. தன் வளர்ச்சியிலும் தன் குடும்பத்து வளர்ச்சியிலும் எப்போதும் முன்நிற்கும் மாமா தன் கனவைச் சிதைத்து சுக்குநூறாக்கி இப்படி ஒரு படு பாதாளத்தில் தள்ளிவிட்டாரே என்று கோபத்தில் திட்டிக் கடி தம் எழுதுகிறார். தன் மீது அக்கறை கொண்ட ஆசிரியர் குமா ரசாமியிடம் ஓடிப்போய் யோசனை கேட்கிறார். தாய்க்கோ மாமா வேலை வாங்கித் தந்துவிட்டான் என்ற மகிழ்ச்சி. எந்த பக்கம் போவது என்ற அல்லாட்டம் இவருக்கு. சிவகுமாரின் ஓவியக்கலை மீதும் படிப்பு மீதும் நன்மதிப்புகொண்ட ஆசிரி யர் இந்தச் செக்குமாட்டு வேலையில் மாட்டிக்கொள்ள வேண் டாம் என்று கூறுகிறார். திட்டி எழுதிப்போட்ட கடிதம் சேருவ தற்குள் ஊர் வந்த மாமா சிவகுமாரின் ஆசையை உணர்ந்து நாயுடுவிடம் அவன் சென்னைக்குச் சென்றால் பெரிய ஆளாக வருவான் என்று மீட்டுக் கொண்டுவந்தது மட்டுமல் லாமல், டிக்கெட் ரிசர்வ் செய்யாமல் மூன்றாம் வகுப்பு பெட்டி யில் சர்க்கரை வியாதியுடன் ஏறிச்செல்கிறார். இந்த உறவின் உணர்வுப் பின்னணியில் வளர்ந்த சிவகுமார் நடிகர் ஆனார். வாழ்வில் நடிக்காமல் போனார்.

நல்ல நடிகனாக உருவாகவேண்டும், மதிப்பு மிக்க மனித னாக பேசப்படவேண்டும் என்ற ஆசையும் லட்சியமும் உந் தித் தள்ளுகிறது. இந்தச் சிறு சிறு வேடங்கள் நடிப்பை வளர்த்தெடுக்காது என்பதை உணர்ந்து நாடக மன்றத்தில் சேர்ந்து பயிற்சிப்பெற விரும்புகிறார். அலைந்து திரிந்து மேஜர் சுந்தரராஜன் நடத்திவரும் நாடகக்குழுவில் சேர விரும் புகிறார். அதை மேஜரிடம் சொல்ல 'குழந்தே! வைரம் தன் னைத்தானே பட்டைத் தீட்டிக்கொள்ள முடியாது. அடுத்தவன் தான் அதை செய்யணும்' என்று தன் நாடகக் குழுவில் சேர்த்து வளர்த்தெடுக்கிறார். 'அப்பாவி' நாடகத்தில் பல எதிர்ப்புகளுக்கிடையில் 'அப்பாவி' என்ற கனமான பாத்தி ரத்தை ஏற்கவைத்து அந்த நாடகத்தின் கதாநாயகனாக வெளிக்கொணர்கிறார். ஒரு படத்தில் இரண்டு கதாநாயகர்க ளில் ஒருவர் என்ற வாய்ப்பு வருகிறது. சிவக்குமார் ஏற்கிறார். படம் துவங்கியபோது இரண்டாம் நிலை கதாநாயகன் என்கி றார்கள். முறுக்கிக்கொண்டு வெளியேறாமல் வாய்ப்பைப் பயன்படுத்த நினைக்கிறார். படம் வளர்கிறது. எந்த சாட் வைத்தாலும் கதாநாயகன் முகம் தெரிய சிவகுமாரின் முதுகு தெரிய படம் முழுக்க காட்சி எடுக்கப்படுகிறது. முக்கியமான ஒரு கட்டத்தில் நீண்ட வசனம் பேசவேண்டிய காட்சி. பக்க வாட்டில் நின்று பேசினால் முதுகு மட்டும் தெரியுமே என்று மாறி நின்று பேசுகிறார். ஒரு பழம் நடிகையின் பெயரைச் சொல்லி என்ன மிஸ்டர்! அந்த அம்மா மாதிரி எப்பப் பார்த்தா லும் காமராவுக்கு நீ மூஞ்சிய காட்டணும்னு நினைக்கிற என கேலி பேசுகிறார். முதுகைக் காட்டி வணங்கினால் அசிங்க மாக இருக்குமே என்று பக்கவாட்டில் வந்து வணங்குகிறார். என்ன மிஸ்டர்! நாடகக்காரன் மாதிரி சைடுல வந்து கும்பிடு றீங்க. நேரா வந்து கும்பிடுங்க இப்படி நாடகக் குழுவில் இருப்பதைக்கூட ஏளனத்திற்கு உரியதாகப் பார்க்கப்படுகி



றது. படம் முழுக்க முகம் காட்டவிடாமல் முதுகையே காட்டும் படி செய்கிறார் அந்த ஹீரோ. இதுவும் ஒரு படிப்பினை ஆகி றது.

'மதன மாளிகை' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கிற வாய்ப்பு வருகிறது. காட்சிகள் பம்பாய் நகரத்தில் எடுக்கப்ப டுகின்றன. நடிகர் நடிகைகள் ஓபராய் ஹோட்டலில் தங்க வைக்கப்படுகின்றனர். செலவைக் குறைக்க வெளியில் இருந்து சாப்பாடு வரவழைக்கப்படுகிறது. இந்த ரகசியம் தெரிய வெளியேற்றப்படுகின்றனர். வேறொரு ஓட்டலில் தங்கி

நடிக்கிறார்கள். பணம் போட்டுப் படம் எடுப்பவருக்கு முழு உழைப்பை வழங்கவேண்டும் என்று விரும்புகிறார். அதுவும் வண்ணப்படமாக எடுக்கிறார் என்று நெகிழ்ந்து கொடுக்கிறார். சூட்டிங் முடிந்து உழைத்து களைத்து வந்து நிம்மதியாக தூங்கலாம் என்று வந்தால் ஓட்டலின் பின்புறம் மின்சார ரயில் பாதை. 15 மணி 16 மணி நேரம் தலையை இரண்டாக பிளப்பதுபோல மின்சார ரயில் சக்கர ஒலி தாக்கும். இரவெல்லாம் தூங்கமுடியாது. இப்படி 30 நாட்கள் தூங்க முடியாமல் தங்கி நடித்த அனுபவம் வந்து தாக்குகிறது.

சிவகுமார் ஒரு இடத்தில் எழுதுகிறார் 'பல லட்சங்கள் செலவழித்து எவ்வளவோ கஷ்டப்பட்டு எடுத்த படம் தோல்வியடைந்தது. இதுபோல் சினிமா கலைஞர்கள் நெஞ்சில் எத்தனையோ ஈட்டி பாய்ந்து உதிரக் கசவை ஏற்படுத்துகின்றன. எப்போதோ தான் ஒரு பூ மாலை வந்து அந்த ஈட்டிமீது விழுந்து எங்களுக்கு ஆறுதல் தருகிறது'. அனுபவத்தின் கவித்துவமான வரிகள் இவை. மலைப்பாங்கான பகுதிகளில் 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' படக்காட்சிகள் எடுக்கப்படுகின்றன. வந்த இடத்தில் திரைப்படக்குழு இளைஞன் டீக்கடை பொண்ணுடன் தொடர்பு இருப்பதாக சண்டை எழ சமாதானத்திற்கு ஓடுகிறார்கள். பின்பு அங்கு படம் எடுக்க முடியாமல் ராசிபுரத்திற்கு பக்கத்தில் அத்தனூருக்குத் தூக்கிக்கொண்டு கிளம்புகிறார்கள். வெயிலில் எங்கெங்கோ அலைந்து திரிந்து எடுத்த படம். 35 நாள் தாடியில் முகம் கறுத்து உதடுகள் காய்ந்து பரட்டைத் தலை, கிழிந்த சட்டையோடு நின்றிருந்த கோலத்தைக் கண்ட ஒரு ரசிகர் 'சேலத்தில் முந்தாநாள் முதல் இரவு படம் பார்த்தேன். அந்தப் படத்தில இந்த ஆள் ரொம்ப அழகா இருந்தான். நேர்ல பார்த்தாத்தான் எவ்வளவு அவலட்சணமானவன்னு தெரியுது. எல்லாம் மேக்கப்மேன் சாமர்த்தியம். இவ்வளவு அசிங்கமானவன எவ்வளவு அழகா காட்றானுங்க. இவனயே இப்படி அழகா காட்டுனா நம்மளை எவ்வளவு அழகா காட்டுவான்' காதில் படும்படி சொல்கிறார். அவரது வசவு படம் வெற்றி பெறும் என்று ஒரு திடமான நம்பிக்கை உண்டாக்கியது என்கிறார்.

வால்பாறை பக்கம் ஒரு இயற்கைக் காட்சியை வரைந்து எடுத்துவரச் செல்கிறார். ஓவிய வேலையை முடிக்க நாலு மணி ஆகிறது. பேருந்தைப் பிடிக்க நடந்துசெல்ல வேண்டும். ஒரு மலசர் என பழங்குடிப் பெண் முன்னால் செல்கிறார். வழித்துணை கிடைத்துவிட்டது என்று நினைக்கிறார். அவரும் இவரது உடை அலங்காரத்தையும் நிறத்தையும் பார்த்து 'அசலூரா' என்று பேசிக்கொண்டே வருகிறார். ஊர் எல்லை நெருங்கும் முன்பே 'சாமி நான் வேகமா முன்னாடி போயிடுறேன் நீங்க ரொம்ப தூரம் போனப்புறம் வாங்க, எவனாவது தப்பா நினைப்பான்' என்று சொல்லி வழித்தடம் வந்த பெண் விலகிச்செல்கிறாள். நம் வாழ்க்கையின் சிடுக்கைப் பற்றிய அவதானிப்பு இது.

'கற்பகம்' படம் பிரபல்யமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் படத்தை அம்மாவிற்கு காட்டவேண்டும் என்று சிவக்குமார் விரும்புகிறார். அதற்கு முன் அம்மா பார்த்தது ஒரே ஒரு ஊமைப்படம் மட்டும்தான். சினிமா பார்ப்பது ஒரு நல்ல பழக்கம் இல்லை என்பது அம்மாவின் எண்ணம். அது அசிங்கம்பிடித்த வேலை என்பார். அம்மாவின் இந்த முடிவை மாற்றவும் ஒரு நல்ல படத்தை காட்டவும் விரும்பி சம்மதிக்க வைக்கிறார். சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போகிறார். தியேட்டர் கேட் சாத்தப்பட்டிருக்கிறது. கூட்டம் இல்லை. சைக்கிளை நிறுத்தி விட்டு அருகில் சென்று பார்க்கிறார். 'பாரதப் பிரதமர் நேருவின் மறைவை முன்னிட்டு தியேட்டர் இன்று விடுமுறை' என்று எழுதிப் போட்டு இருப்பதை கண்டு ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். சிவகுமார் நேரு மறைவைப் பற்றிச் சொல்கிறார். 'எனக்கெல்லாம் சினிமா ஆசை வந்தா இப்படித்தான். நான் சொன்னேன் நீ கேக்கல' என்ற அம்மாவின் கூற்றால் வருந்துகிறார்.

மறுபடியும் அந்த படத்தை காட்டியே ஆகவேண்டும் என்று அழைத்துச் செல்கிறார் கே.ஆர். விஜயாவை மாடு முட்டி சாகடிக்கும் காட்சியில் போன, மின்சாரம் வராமலேயே போகிறது. தாய்மீது சிவக்குமாரின் அன்பு அளப்பரியது. அதை இந்த தொடரில் பல்வேறு இடங்களில் பல்வேறு குணரூபங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். சிவகுமாருக்குத் தெலுங்கு படத்தில் நடிக்கிற வாய்ப்பு வருகிறது. பல வெற்றிப் படங்களை இயக்கியவர் வாய்ப்பைத் தருகிறார். படப்பிடிப்பில் பளபளவென ஜொலிக்கும் ஆடைகள் அணிந்ததால் மிக இறுக்கமாக இருக்கிறது. நடிப்பதில் திரும்புவதில் சிரமம் இருக்கிறது. இந்த காஸ்டியும் இடுப்பில் பட்டன்கூட போடமுடியவில்லை எப்படியோ வயிற்றை எக்கிப்போடுகிறார். ஒரு உண்மை தெரிய வருகிறது. வேறு படத்தில் ஒரு தெலுங்கு ஹீரோ போட்ட ஆடைகள். படம் தோல்வி அடைந்ததால் இப்படிப் பழைய காஸ்டியூம்களை கொடுத்து நஷ்டத்தினைத் தேற்றுவார்கள் என்று தெரியவருகிறது. ஒரு காட்சியில் குனிந்து பொருளை எடுக்கிறார் டர்ர்ரென கிழிந்துவிடுகிறது. தன் சொந்த ஆடைகளைக் கொண்டுவந்து நடிகிறார். சொந்த ஆடையில் நடித்து உதவிய சிவகுமார், நடிக்க கொடுத்த காஸ்டியூம்களை எடுத்துப் போய்விடுகிறார் என்ற அவதூறுறையும் சந்திக்கநேர்ந்தமையை குறிப்பிடுகிறார்.

மொட்டை மாடியில் அமர்ந்து படகு ஓட்டுவதைப்போல ஓட்டுங்கள். தண்ணீரில் படகு போகிற காட்சி எடுக்கிற கேலிக்கூத்து நடக்கிறது. பேசிய பணம் வரவில்லை. திருமணநாள் நெருங்குகிறது. பணத்திற்கு அலைகிறார். சாண்டோ சின்னப்பத் தேவர் தந்து உதவுகிறார். திரும்பி அந்தப் பணத்தைத் தந்தபோது எனது அடுத்த படத்திற்கு இதை அட்வான்ஸாக வைச்சுக்க என்று தருகிறார். உயர்ந்த மனிதன் படத்தில் சிவாஜிக்கு மகனாக, வீட்டு வேலைக்காரனாக நடிக்கும் பாத்திரம். படம் ஆரம்பித்தபோது எம்.ஜி.ஆரிடமிருந்து அழைப்பு வருகிறது. 'பாசம்' படத்தில் அவருக்குத் தம்பியாக நடிக்கும் பாக்கியம். ஏ.வி.எம். நிறுவனத்திடம் சொல்லி உறுதி பெற்று வருவதாகச் சொல்ல ஓடுகிறார். 'உயர்ந்த மனிதன்' படத்தில் சிவாஜி உடன் 60 காட்சிகளில் வருகிறீர்கள். சிவாஜிக்கு கால்சீட் பிரச்சினை வரும் என்று சொல்லவும் அதைச்சொல்ல எம்.ஜி.ஆரிடம் ஓடுகிறார். எம்.ஜி.ஆர் நானே ஏ.வி.எம் இடம் சொல்கிறேன். சிவாஜி சார் கால்சீட் நாட்களில் நான் விட்டுத்தருகிறேன் என்கிறார். ஏ.வி.எம் இடம் ஓடுகிறார். இறுதியில் ஒரு விஷயத்தை முழுமையாக முடிக்கப் பார்ப்பார். இங்கும் அங்கும் ஓடாதே என்று சொல்ல எம்.ஜி.ஆரிடம் தன் வருத்தத்தைச் சொல்கிறார். 'பொழைக்கத் தெரியாத பிள்ளையா இருக்கிறியே சரி உன் இஷ்டம்' என்று விட்டுவிடுகிறார்.

இரண்டே நாட்களில் ஒரு இடி விழுகிறது. ஸ்டுடியோ தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். எம்.ஜி.ஆர் இடம் ஓடிப்போய்ச் சொல்ல நினைக்கிறார். சிவகுமார் நடிக்க வாய்த்த பாத்திரத்தில் முத்துராமன் நடிப்பதாகச் செய்தி வந்திருப்பதைப் பார்க்கிறார். 18 மாதங்கள் வேலை நிறுத்தம்

நடைபெறுகிறது. புகழ்பெற்ற எம்.ஜி.ஆர் உடன் நடிக்கும் வாய்ப்பு கைவிட்டுப் போகிறது. பின்னாளில் எம்.ஜி.ஆர். 1967-ண்டு குண்டடிப்பட்டு மருத்துவமனையில் இருந்தபோது அவரைக் காணச்செல்கிறார். மற்றவர்கள் அவரைப் பார்க்க வேண்டாம், பார்த்தால் உரையாட விரும்புவார் அது அவருக்குச் சிரமத்தைத் தரும் என்கின்றனர். சரி என்று ஜன்னல் வழியாகப் பார்க்கிறார். அதை எம்.ஜி.ஆர். பார்த்துவிடுகிறார் உடனே உள்ளே வரும்படி அழைக்கிறார். காவல்காரன் படத்தில் எம்.ஜி.ஆருடன் தம்பி வேடத்தில் நடிக்கச் சந்தர்ப்பம் வந்தபோது தன் தாயாரின் உழைப்பை, வளர்த்த விதத்தை எம்.ஜி.ஆருக்கு சிவகுமார் சொல்லியிருக்கிறார். தாயின் அன்பைக் குறித்து இருவரும் பேசியிருக்கிறார்கள். அதை நினைவில் வைத்து ஊருக்குப் போயிருந்தியா ஊர்ல அம்மா சௌக்கியமா இருக்காங்களா என்று அவர் தெளிவாகக் கேட்டதை நினைவு கூறுகிறார். 37 கட்டுரைகளில் மூத்த கலைஞர்கள், தன்னுடன் நடித்த நடிகர்கள் அவர்களின் வெளிப்பாடுகள் அனுசரணைகள் ஒவ்வொருவரிடமும் வெளிப்பட்ட நடிப்பின் சிறப்புகள் உன்னத மனிதர்களாக வெளிப்பட்ட தருணங்கள் என எவ்வளவோ விடயங்களை ‘இது ஒரு ராஜபாட்டை அல்ல’ என்ற நூலில் பகிர்ந்திருக்கிறார். திரைத்துறையில் ஓடி ஓடி தொட்ட மைல்கற்களும் பட்ட காயங்களும் எடுத்த சில முத்துக்களும் இந்நூலில் ஜீவத்துடிப்புடன் இருக்கின்றன. ஒவ்வொரு அத்தியாயமும் புதிதான அனுபவத்தைத் தருகிறது.

1966-லிருந்து 1986-வரை 20 ஆண்டுகள் ஒரு கலைஞன் தன்னைச் சினிமாவில் நிலை நிறுத்திக்கொள்ள ஓடிய ஓட்டங்கள், பட்டத் துயரங்கள், எட்டிய கிளைகள், முறிந்து விழுந்த சரிவுகள், அவ்வப்போது வந்தடைந்த பாராட்டுக்கள், இழந்துபோன வாய்ப்புகள், கிட்டியதை உண்மையுடன் ஏற்று செய்த காரியங்கள் எனப் பல்வேறு சித்திரங்களின்வழி தன்னை இந்த நூலில் திறந்து வைக்கிறார். விடாப்பிடியாக இந்தத் துறையில் நின்று சில பெயர் சொல்லும் படங்களைத் தந்திருக்கிறார். வியாபார ரீதியாக சில வெற்றிப் படங்களைத் தந்திருக்கிறார். தொடர்ந்து முட்டிமோதி 40 ஆண்டுகள் திரைத்துறையில் பணியாற்றியிருக்கிறார். சினிமாவில் நுழைந்த சில ஆண்டுகளிலேயே அவருக்கு ஒரு தெளிவு கிடைத்துவிட்டது. உண்மையில் கொடைக்கானல் மேகத்திற்கும் சினிமாப் புகழுக்கும் வேறுபாடு இல்லை. நம்மைக் கேட்டுக்கொண்டு அது வருவதுமில்லை. நம் அனுமதிபெற்றுப் போவதுமில்லை. ஏதோ அதிர்ஷ்டக் காற்று இந்தக் குப்பையைக் கோபுரத்தில் ஏற்றி விட்டிருக்கிறது. அடுத்து ஒரு துரதிஷ்டக் காற்று அடித்து மீண்டும் குப்பைமேட்டுக்குத் தள்ளி விடுகிறது. சிவகுமாரின் இந்த அனுபவ வாக்குமூலத்தில் மண்ணில் உருண்டு விழுந்த எத்தனையோ கலைஞர்கள் நினைவிற்கு வருகிறார்கள். சிவகுமார் இந்தச் சினிமாப் புகழை எதார்த்தத்துடன் அணுகினார். வாய்ப்பை ஏற்றார். தரப்பட்டதைச் செய்தார். ஐயன் ஆட்டுவிக்கும் பம்பரம் நான். சாட்டை நீ. என்னால் செய்ய முடிந்ததைச் செய்கிறேன் ஏற்றத்தைக் கொடுத்தாலும் வீழ்ச்சியைக் கொடுத்தாலும் ஏற்கிறேன். உடல் ஆரோக்கியம், மன நிம்மதி இந்த இரண்டை மட்டுமே கேட்கிறேன் என்று ஓர் இடத்தில் வணங்குகிறார்.

சிவகுமார் என்ற சினிமாக் கலைஞரின் அத்தியாயம் வித்தியாசமானது. சிகரத்தில் ஏறி நின்று தனது கொடியை நீண்ட நாட்கள் பறக்கவிடாமல் இருந்திருக்கலாம். ஆனால் பாதாளத்தில் விழுந்து தோற்றுப் போகாமல் தன் முயற்சியை, வாய்ப்பை விடாமல் ஏற்றிருக்கிறார். உச்சியையும் அடையாமல் அடியிலும் விழாமல் நடுக்கம்பத்தில் நின்று தனது கைகளை நீண்ட காலமாகக் காட்டியபடி இருக்கிறார். இலக்கியம், ஓவியம், மனித உறவு என்று தொய்வில்லாமல் இருக்கிறார். அந்த அர்ப்பணிப்புக்கு மிகப்பெரிய கொடையை காலம் அளித்திருக்கிறது. சூரியா, கார்த்திக் என்ற இரு கலைஞர்களின் மிகப்பெரிய வெற்றிகள் மூலம் தனது வெற்றியை நிலைநிறுத்திக் காட்டியிருக்கிறார். அதற்காகவே அவரது உழைப்பு தொடர்ந்து வந்திருக்கிறது. உண்மையில் சிவகுமார் சினிமாத் துறையில் விழுந்துவிடவில்லை. மிக உயரத்திற்கு தன் இரு தோள்களின்வழி இரு மகன்களை உயர்த்திக் காட்டிவிட்டார். தமிழ்ச் சினிமாவில் வேறு எந்த நடிகரும் இவ்விதமான இடைப்பட்ட வாய்ப்புகளில் தனது சகல ஆற்றலையும் வெளிப்படுத்தியது இல்லை. தமிழ்ச் சினிமாவில் தன் வலியை ஏற்று கசப்புகளை உண்டு செரித்து அழகான வெற்றிகளைத் தந்திருப்பவர் சிவக்குமார்.

சிவக்குமாரின் ‘இது ராஜப்பட்டை அல்ல’ நூல் ஒரு நாவலாக எழுதப்பட்டிருக்குமானால் சின்னச்சின்ன வெற்றிகளின் ஊடே காயங்களின் காவியமாக உருமாறி இருக்கும். வெற்றியும் சரிவுகளுமாக மாறிமாறி நிகழ்ந்த மாய ஆட்டத்தில் ஓயாமல் முயன்று ஏறிய பிடிவாதமும் சோர்வுறாத உழைப்பும் தெரிகிறது. எழுதப்படாது, சொல்லப்படாது விடப்பட்டிருக்கும் ஏமாற்றங்கள், மகிழ்ச்சித் தருணங்கள், துயரமூச்சுகள் இந்த நூலெங்கும் வியாபித்து இருக்கின்றன. யாரையும் காயப்படுத்த வேண்டாம் என்ற கவனம், கண்ணியத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டாம் என்ற உணர்வு, இந்த அளவு சொன்னால் போதும் என்ற அவரது எண்ணம், உத்வேகத்தை நிதானப்படுத்தியிருக்கிறது. அவை சொல்லப்பட்டிருந்தால் இதைவிடச் சிறந்த காவியமாகவே மாறியிருக்கும். என்றாலும் தன் வாழ்வைத்தொட்டு எழுதப்பட்டிருக்கும் சிறந்த திரை உலக அனுபவ நூல் இது. திரை உலகில் ஒருவர் பல்வேறு தடைகளுக்குப்பின் உயர்ந்த எல்லையை அடைந்திருக்கலாம். ஒரு எல்லைக்கு அப்பால் வாழ்வுதரும் அனுபவ வாய்ப்புகள் இல்லாமல் போகும். இதே போல திரை உலகில் இருந்து ஒதுங்கிக் கொண்டவர்களுக்கும் சுய கட்டுப்பாடு இல்லாமல் வீழ்ந்தவர்களுக்கும் வித்தியாசமான அனுபவங்கள் வாய்க்காது. ரஜினி போல உச்சத்தில் இருப்பவரின் ஒரு படம் ஓடவில்லை என்றால் அவருக்குப் பாதிப்பொன்றும் இல்லை. ஆரம்பத்திலிருந்தே சரிவு, நிமிர்வு, நிதானம் என்று தொடர்ந்து ஓடியவருக்கு நிகழ்ந்த அனுபவங்கள் வேறானவை. பெரிய சம்பாத்தியம் இராது. சொல்லமுடியாத வேதனைகளும் தத்தளிப்புகளும் நிறைந்தவை. சொன்னால் வேறுவிதமாக வீழ்த்திவிடும் என்ற யதார்த்தம். இந்த ஆபத்தை உணர்ந்து, ஓட்டத்திலே தற்காத்துக்கொண்டு ஓடி இருக்கிறார். முன்னேறத் துடித்தவனின் வாழ்வு அவ்விதம் ஆக்கியிருக்கிறது. சிவகுமார் என்றால் அதில் சிவகுமார் மட்டும் இல்லை. ஒரு கிராமம் இருக்கிறது. நல்லபிள்ளை என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. உறவு இருக்கிறது. இந்தப் பாத்திரத்தை சிவகுமார் கடுமையான போட்டி உலகத்திலும் விடாது வென்றிருக்கிறார் என்பது என் எண்ணம். பலருக்கு இவரது வழித்தடம் ஒரு பாடம்.



venugopal@thaiveedu.com

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
**VASANTHAM TAMIL WELLNESS CENTRE**
**PRESENTS...**

சமூக உளவளம் பேணும் தொடர் - 89
**Psychosocial Educational Series - 89**

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

# தமிழர் பண்பாட்டை உலகறியச் செய்த நாடக மேதை

## A Legacy of Shanmugalingam * Walking with Mud - Sweats - Tears

**03 February 2025 (Monday)**
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)

**Zoom ID: 918 584 6813**
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588



Prof. S.Maunaguru

சக நாடக பேராசிரியர்

பட்டறையில் வளர்த்தெடுத்த மாணவி



Malini Pararajasingham
Director
Kalasaagaram School of Fine Arts,
Toronto



**Join us via zoom: CLICK HERE or go to link below in the email**

**Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!**



Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172

VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW

647-374-4685
VASANTHAM.CA

# காமன் கூத்து

## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலை - 02

– அருணாசலம் லெட்சுமணன்



காமன் கூத்தில் பிரதான பாத்திரங்களில் ஒன்றாக மன்ம தன் விளங்குகிறான். மதன் என்ற சொல் காமதேவன் எனவும் பொருள் தருகிறது. மனதை வென்றவனை அழைப்பதற்கும் ‘மன்மதன்’ என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மன்மதன் காதல் கடவுளராகவும் சித்திரிக்கப்படுகிறான். மன்மதன் எதிர் பாலாரிடையே காதலை ஏற்படுத்தும் சக்தியாகவும் அணுகப் படுகிறான். பேரழகனாகவும் சித்தரிக்கப்படுபவனாக விளங்கு கிறான். மன்மதன் காமன், ராகவிருந்தன், அனங்கன், கந்தர்-வன், மனோசித், ரதிகந்தன், மதனன், புஸ்பவனன், மாறன், புஸ்பதானுவன், வசந்தன், மான்மகன், மகரக் கொடியோன், அங்குசன், வனசன், சித்தசன், வேனிலாளி, அநங்கன், வண்டு ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறான். காமத்துக்கு அதி பதியாக விளங்கும் மதன் தேவர்குலத்திற்குரியவனாக அடை யாளப்படுத்தப்படுகிறான். பேரழகனான மதன் கரும்பு வில் லையுடையவனாகவே விளங்குகிறான். அவ்வில்லிற்கு நாண் தேனீகளால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. காம னின் அம்பு ஐந்து வித நறுமணங்களைக் கொண்டதாக விளங்குகிறது. கிளியே மன்மதனின் வாகனமாகக் கொள்ளப் படுகிறது. மதன் திருமாலின் மகனாக விளங்குகிறான். மாறாக பிரம்மனின் மகனாகவும் சில இடங்களில் பார்க்கும் நிலையும் காணப்படுகிறது. பிரம்மாவின் தம்பியாக சித்தரிக்கும் முனைப்புகளும் இடம்பெறுகிறது. திருமால் கண்ணனாக அவ தறித்தபோது, கண்ணன் ருக்மணி ஆகியோரின் புதல்வன் பிரத்திம்யும்மனனாக அவதரித்ததாகவும் கூறப்படுகிறது.

காமன் கூத்தில் இரதிதேவியும் பிரதான பாத்திரங்களில் ஒன் றாக விளங்குகிறாள். மன்மதனின் காதல் தேவியாகவும், மனைவியாகவும் விளங்கும் இரதி காமன் கூத்தில் முக்கிய வகிபங்கை ஏற்கிறாள். காமினி, சுகுமாரி, சுகந்தி, சுகன்யா, சரோஜினி, சரோஜா, காமன்மனைவி, பித்தளை, லில்லி மலர், பேரழகி ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறாள். ‘இரதி’ என்பது பிறரால் விரும்பப்படுதல் எனவும் பொருள்படுகிறது. சிவபெருமானின் மகளாக இரதி சித்தரிக்கப்படுகிறாள். இரதி யின் பிறப்பு பற்றி பின்வரும் புராணக் கதையும் அவதானிக் கத்தக்கது. மயன் எனும் தேவதச்சன் உலகிலுள்ள அழகை யெல்லாம் ஒன்று திரட்டி ஒரு பெண்ணாக்கியுள்ளான். அறி வாற்றலாலும், அழகினாலும் அனைவரின் கவனத்தை ஈன்ற அப் பெண் ‘இரதி’ என பெயர் பெறுகிறாள். வாழ்வியல் நடை முறைகளில் ஒரு பெண்ணின் இயங்கும் இயலும் தன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பாத்திரமாகவும் இரதியின் வகி பங்கு சிறப்பிடம் பெறுகிறது. காமத்தின் பெண் கடவுளராக இரதி சித்தரிக்கப்படுகின்ற வழமையும் கவனிக்கத்தக்கது. அன்னப்பறவை இரதி தேவியின் வாகனமாக அமையப்பெறு கிறது.

வாழ்வியலில் இல்லற இன்பத்தின் நெறிமுறை பண்பாட்டுசார் அவதானத்துடன் முக்கியத்துவம் பெறுகிறது. அதனைப் போதிப்பதற்கு மனிதகுலம் மன்மதன் இரதி பாத்திரங்களைப் பிரதானப்படுத்துகின்ற கதை மரபோடு தொடர்புபடுகிறது. சொற்பொழிவு, நாடகம், நாட்டியம், உடுக்கடி பாடல் முறைமை, வில்லுப்பாட்டு, சினிமா போன்ற கலை இலக்கிய வடிவில் முன் வைப்பதற்கு ஆர்வம் காட்டியுள்ளார்கள். இவ்வ டிவங்கள் பொழுதுபோக்கு அம்சங்களாக வடிவமைக்கப்படு கின்றமை அவதானத்திற்குரியதாகும். மாறாக பக்திக்குரியதா கவும் அணுகப்படும் வழமை குறித்த அவதானம் குறிப்பிடத் தக்கதாகும். இக்காமன் கதை கூத்தாக மலையக மக்களால் அணுகப்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். பிரித்தானிய காலனித்துவத்தில் தென்னிந்தியாவில் இருந்து புலம்பெ யர்ந்த மக்கள் தங்களின் பயில் நிலைக்குரிய இக்கலையை இலங்கையிலும் நிலைநாட்டுவதில் இவர்களது பங்கேற்பு குறித்த அவதானம் சிறப்பிற்குரியதாகும். உழைத்து களைத்த நிலையில் தங்களது ஓய்வு நேரங்களில் இக் கலை ஊடான போதனையை உள்வாங்கிக் கொள்ளும் பிரயத்தனம் சிறப் பிற்குரியதாகும். காமன் கதையைக் கூத்தாக அரங்கேற்றும் முனைப்பில் கதை பிரளாது முன் வைக்கும் நுட்பங்கள் குறித்த அவதானம் கவனிக்கத்தக்கது. பல்வேறு கலைகளின் ஒன்று சேர்க்கையாகவும், பல்துறை கலைஞர்களின் ஆளு மைப் பண்புகள் உற்று நோக்கத்தக்கதாகும்.

நாட்டுப்புற கலை வடிவங்களில் பபூன் என்ற கோமாளியின பாத்திரம் இன்றியமையாததாக விளங்கியது. காமன்கூத்தும் நாட்டுப்புற கலை வடிவமாக திகழ்கின்ற நிலையில் இப்பாத் திரத்தின் பங்கேற்பும் முக்கியத்திற்குறியதாகும். கூத்து, நாட

கம், சினிமா, தொடர்கள், கதைகள் என்பவற்றில் நகைச்சுவைகளின் சேர்க்கை மிகுந்த அவசியத்திற்குரியதாக உணர்த்தப்படுகிறது. இவ் நகைச்சுவைகளை வெளிப்படுத்தும் பாத்திரங்கள் மிகுந்த வரவேற்பை பெற்றுக் கொள்கிறார்கள். பார்வையாளர்களைச் சிரிக்க வைப்பது மட்டுமல்லாது மிகுந்த லாவகத்துடன் சிந்தனையைத் தூண்டும் பங்கேற்பு சிறப்பிற்குரியதாகிறது. இக் கூத்தின் பயில்நிலையில் பபூன் என்ற கோமாளியின் நகைச்சுவை வகிபங்கு குறிப்பிடத்தக்கதாகும். பபூன் என்பது வாலில்லாத குரங்கு எனப் பொருள்படும். குரங்கு சேட்டை என விவரிக்கும் நடைமுறை தற்போதும் பின்பற்றப்படுகின்றது. இக்கூத்தில் கோமாளிக்குரிய உளவியலை அறிந்த அணுகுமுறையை லாவகத்துடன் பிரயோகிக்கும் நுட்பம் கவனத்திற்குரியதாகும். கோமாளிக்குரிய தன்மையை வெளிப்படுத்தும் ஆளுமைக்குரியவர்கள் இப்பாத்திரத்தை ஏற்பார்கள். சிரிப்பு, பயம், வியப்பு, கோபம், துக்கம் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பண்பு இவர்களில் சிறப்பம்சமாகும். உடல் மொழி நகைச்சுவையைப் பயன்படுத்தி நகைச்சுவை கலந்த அம்சங்களை வெளிப்படுத்துவதில் தேர்ச்சி பெற்றவர்களாக கோமாளிகள் விளங்குவார்கள். மாறுப்பட்ட ஆடைகள், வண்ணமயமான சிகை அலங்காரங்கள், வர்ணமிடப்பட்ட மூக்கு, வித்தியாசமான காலணிகள் போன்றவாறு கோமாளிகள் வித்தியாசமான தோற்றங்களில் தன்னை அலங்கரித்துக் கொள்வார்கள். அவ்வாறான ஒரு பிரயோகமே காமன் கூத்திலும் காணப்படும்.

காமன் கூத்தைப் போலவே மலையக மக்களின் ஏனைய கலை வடிவங்களிலும் பபூன்களின் பங்கேற்பு சிறப்பிடம் பெறுகிறது. குறிப்பாக மலையக நாடகங்களில் பபூன்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்கதாக விளங்குவதை அவதானிக்கலாம். நாடகத்தை கொண்டு செல்வது, தொய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது போன்ற விடயங்களிலும் சமயோசித அணுகுமுறையை பிரயோகிக்கும் வல்லமையிலும் இப்பாத்திரம் முக்கிய வகிபங்கை பெறுகிறது. எடுத்துக்காட்டாக நாடகம் ஒன்றில் பபூன் பாத்திரம் பாடிய பின்வரும் பாடல்கள் அவதானத்திற்குரியதாகும்.

***வந்தனம் வந்தனம் வந்தனம்...***
***வந்த சனமெல்லாம்***
***குந்தனும் குந்தனும் குந்தனும்...***

***வந்தனம் சொல்லித் தந்தேனே...***
***வந்தனம் சொல்லித் தந்தேனே***
***தக்கடா தக்கா - தக்கடா தக்கா***
***ததிங்கனத்தோம் - தக்கடா தக்கா***
***வந்தனம் சொல்லி தந்தேனே...***
***பப்பளப்பள பளப் பளப் பள***
***பபூன் வந்தேனே - சோக்கா***
***பபூன் வந்தேனே - தலுக்கா***
***பபூன் வந்தேனே***
***பாங்கான இச் சபைக்கு..***
***டபாய் தந்தேனே - நானும்***
***டபாய் தந்தேனே - நானும்***
***டபாய் தந்தேனே...***

என்றவாறு அமைகிறது. பொதுவாக சந்தர்ப்பத்திற்கேற்ற உரையாடலையும், பாடல்களையும் முன் வைப்பதில் பபூன்களின் ஆளுமைகள் வியத்தகு விடயங்களாக அமைகின்றன. இவ்வாறான பிரயோகத்தில் பல மலையக நாட்டார் பாடல்கள் பல மேடைகளில் களம் கண்டு வந்துள்ளன. துரைமார், கங்கானிகள், கணக்கப்பிள்ளைமார் மீதான வசைகளும் நகைச்சுவையாக முன்வைக்கப்டுகின்றமை மிக லாவகமாக இடம்பெறும். கூத்துக்களை முறையாக வழிப்படுத்தி அரங்கில் ஆற்றுகை செய்து வந்த ஆளுமைகளை அண்ணாவியார் என அழைப்பது வழமையாகும். இவர்கள் கூத்துப்பாடல்களை மனனம் செய்துள்ள நிலையில் அப்பாடல்களை இராகத்துடன் இசைக்க வல்லவர்கள். இசைக்கலை, ஆடற்கலை, ஒப்பனைக்கலை, அரங்க அமைப்பு கலை, நேர முகாமைத்துவ கலை போன்ற பல்வேறு கலை அம்சங்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்குகிறார்கள். வேறுப்பட்ட கலை ஆளுமைகளை முகாமை செய்யும் ஆற்றலும் இவர்களில் சிறப்பம்சமாக விளங்குகிறது. மலையகத்தில் பிரயோகிக்கப்படும் காமக் கடவுளர்களின் கதைப்பற்றிய கூத்துமுறையினை வழிப்படுத்துபவரை ‘காமன் கூத்து வாத்தியார்’ ‘காமன் மாஸ்டர்’ என அழைப்பதுண்டு. பிரதானமாக தொழிற்படும் காமன் வாத்தியாருக்கு உதவி வாத்தியார்களின் ஒத்துழைப்பும், சிரேஸ்ட வாத்தியார்களின் வழிப்படுத்தலும் கிடைப்பதுண்டு. குறித்த ஊர் எல்லையில் வாழும் இளைஞர்கள், கற்றவர்கள், தொழிற்சங்க பிரிவினர்கள், ஆலய பரிபாலன சபையினர்கள் ஆகியோரிடையே ஒன்றுபட்ட தன்மையை ஏற்படுத்தி காமன் கூத்தை தோட்டத்தில் முறையாக நடத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்குவதிலும் கைத்தேர்ந்த ஆளுமைகளாக திகழ்கிறார்கள். காமன் நட்டதன் பின்னர், காமன் கூத்தை நிறைவு செய்யும் நாள் வரையிலும் தனது ஊரிலும், அயல் தோட்டங்களிலும் ரதி, மதன், கோமாளி இணைந்த ஆட்டத்தையும் நடத்துவதற்கான முன்னெடுப்புகளை திட்டமிடுதலும் பெரும் கலையாக திகழ்கிறது. இக்காலக்கட்டத்தில் கூத்தை நிறைவு செய்யும் தினம் வரையிலான ஆற்றுகைகளுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதுடன், ஆபரணங்கள் உடைகளை வடிவமைத்தல், தேவையான பொருட்களை வடிவமைத்தல், பெற்றுக் கொள்ளுதல், நிதியை சேகரித்தல் போன்ற நடைமுறைகள் அவதானம் செலுத்தப்படும். இச் செயற்பாடுகளுக்காக பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல், அவற்றை மேற்பார்வை செய்தல், ஒருங்கிணைத்தல் செய்தல் என்ற வகையில் காமன் வாத்தியாரில் பொதிந்திருக்கும் முகாமைத்துவ ஆளுமை சிறப்பிற்குரியதாகும்.

தமிழர்களுக்கு விசை கொடுத்த கருவியாக ‘தப்பு’ சிறப்பிக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்ட மக்களினது வீரிய மிக்க சக்தியாக தப்பிசை விளங்குகிறது. போர்ப்பறையாகவும் தப்பிசை பயன்படுத்தப்பட்டு வந்தமைக்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன. தப்பை இசைக்கும் போது மனதில் வீரம் கலந்த புதுத் தெம்பை தோற்றுவிக்கும். தப்பிசையை கேட்டதும் கால்கள் இயல்பாகவே அசைவு பெறும். தப்பு மரக்கட்டையால் செய்யப்பட்ட வட்ட வடிவான அமைப்பில் மாட்டுத் தோலை பொருத்தி உருவாக்கப்பட்டது. புளியங்கொட்டைகளை அரைத்து செய்யப்பட்ட பசையினை மாட்டுத் தோலில் பூசி பதப்படுத்தப்பட்ட தோலினையே இவ்வாறு இழுத்து

கட்டி இவ் இசைக்கருவி ஆக்கப்படுகிறது. பின்னாளில் தோட் டங்களில் ஆட்டுத்தோலையே பயன்படுத்தினார்கள். இவ் வாறு தப்புகளை உருவாக்கும் பணியிலும் தேர்ச்சி பெற்ற ஆளுமைகள் மலையகத் தோட்டங்களில் உள்ளார்கள். இக் கருவியே காமன் கூத்து முழுமையிலும் பயன்படுத்தப்படுகி றது. தப்பிசைக்கும் போது பொதுவாக சோடியாகவே தப்பு கள் இசைக்கப்படுகின்றன. நவரச சுவை உணர்வுகளையும் வெளிப்படுத்தும் சாதனமாக தப்பு விளங்குகிறது. தப்பை சூடேற்றும் (தப்பு காய்ச்சுதல்) கலையே தனித்துவமாக நோக் கப்படுகிறது. தப்பிசைக்கும் கலைஞர்கள் அவதானத்தின் மூலமாக இக்கலையில் தேர்ச்சி பெறுகிறார்கள். தப்பிசைக் கும் கலைஞர்களின் தயார் நிலையோடு ரதி, மதன், கோமாளி ஆட்டம் வலம் வருவதற்கு தயாராக இருக்கும்.

தப்பை இசைப்பதற்கு இருவிதமான குச்சிகள் பயன்படுத்தப் படுகின்றன. இடதுகையிலுள்ள குச்சி 'சிம்புகுச்சி' என்றும், வலதுகையிலுள்ள 'அடிக்குச்சி' என்று அழைக்கப்படும். சிம்பு குச்சி மெல்லிய நீண்ட குச்சியாகவும், அடிக்குச்சி நீளம் குறைந்ததாகவும் பருத்ததாகவும் காணப்படும். இடதுகையில் இயல்பான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் பழக்கம் கொண்டவர்கள் இக்குச்சிகளை மாறி பிரயோகிப் பார்கள். கட்டை விரல், மற்ற விரல்களுக்கு இடையில் குச் சியை பிடித்துக் கொண்டு தப்பின் கீழ் புறத்தில் இருந்து அடிக்கப்படும். கட்டைவிரல், ஆட்காட்டி விரல்களில் நீண்ட குச்சியை பிடித்துக் கொண்டு தப்பின் மேல் பகுதியில் இருந்து அடிக்கப்படும். தப்பின் மத்தியப் பகுதியில் அடிக் குச்சியால் அடிக்கப்படுகிறது. சிம்புக்குச்சியால் தப்பின் மேல் பகுதியில் அடிக்கப்படும். இவற்றை மாறி மாறி அடிக்கின்ற போது புதிய மெட்டுகள் தாளக்கட்டுகள் உருவாக்கப்படுகின் றன. ஒவ்வொரு தேவைப்பாட்டிற்கும் தனித்தனி தப்படிகள் பிரயோகப்படுத்தப்படுகின்றன. சப்பரத்தடி, டப்பா அடி, மருள் அடி, பாடல் அடி, சினிமா அடி, இணைப்பு அடி, வாழ்த்து அடி எனவும் பூசைத்தப்பு, சாவுத்தப்பு என்றவாறு தப்பிசை வேறுபடுகின்றன. தோட்டங்களில் நிகழ்வுகளில் தவிர்க்க முடியாத இடத்தை பெற்ற தப்பின் பிரயோகம் குறைந்துள்ள நிலையில் இவ்விடத்தை மேலைத்தேய இசைக்கருவிகள் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மலையக மக்களைப் பொருத்தவரையில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கான வரவின் போது காடுகளில் கொடிய விலங்குகளை துரத்தும் பாதுகாப்பு கருவியாகவும் தப்பு பயன்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காமன் கூத்தில் வேட உடைகள் குறித்த அவதானமும் முக்கி யத்துவத்துக்குரியதாகும். மன்மதன், இரதி ஆகிய பாத்திரங் களுக்கான உடைகள், அணிகலன்கள் தேவைப்படுகிறது. காமன் ஊன்றிய நாட்களில் இருந்து காமதகனம் நிகழ்வு இடம் பெறும் நாள் வரையில் இவ்விரு பாத்திரங்களுக்கு மாத்திரமே உடைகளும், அணிகலன்களும் தேவைப்படும். இந்நாட்களில் கோமாளியும் ஓர் அங்கம் என்ற வகையில் கோமாளிக்குரிய ஒப்பனை மேற்கொள்ளப்படும். மன்மதன் பச்சை நிற ஆடையை அணிந்த நிலையில் இந்நிறத்திலேயே அரிதாரமும் பூசப்படும். தலையில் கிரீடமும், கையில் புஜங்க ளும், மார்பில் மாலைகளும், வளையல்களும் அணிவிக்கப்ப டும். அவ்வாறே இரதிக்கு கிரீடம், புஜங்கள், காப்பு போன்றன வும் அணிவிக்கப்படும். இருவருக்கும் காற்சலங்கை அணி விக்கப்படும். இரதிக்கு மஞ்சள் நிறத்திலான் ஆடையும், மஞ் சள் நிற அரிதாரமும் பூசப்படும். மேற்குறித்த அணிகலன்கள் மரக்கட்டைகளைப் பயன்படுத்தியே ஆக்கப்படுகிறது. இவ் ஆபரணங்களை மேற்கொள்வதும் ஓர் கலையாக அணுகப்ப டுகின்றது. இவ்வாறன தயார்ப்படுத்தலுடனேயே குறித்த தோட்டத்தை வலம் வரும் நடவடிக்கை இடம்பெறும். அவ் வாறே அண்மையிலுள்ள தோட்டங்களின் அழைப்பை ஏற்று அத் தோட்டங்களுக்குச் செல்கின்ற வழமையும் அவதானிக் கத்தக்கது.

காமன் ஊன்றுதல் நிகழ்வு இடம்பெற்று இரண்டு வாரங்கள் கழிந்த பின்னர் காம தகனம் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் இடம் பெறும். இறுதி நிகழ்வுகளுக்கான தயார்ப்படுத்தும் செயற்பா டுகள் முன்னெடுக்கப்படும். அதுவரையிலான ரதி மதன் ஆட் டங்களோடு வலம் வரும் செயற்பாடுகள் பயிற்சிக்குரியதாக வும், நிதி திரட்டும் செயற்பாடாகவும் அமையப்பெறும். ரதி மதன் ஆட்டங்களோடு அணியாக வலம் வருபவர்கள் ஒரு தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு முறையாக பயணிப்பதை அவதானிக்க முடியும். பாடல்களைப் பாடும்போது ஒத்திசைக் கும் கோசமாக அணியினர் பாடல்களை பாடும் விதமும் குறிப்பிடத்தக்கது. மதன், ரதி திருமணத்திற்குப் பின்னரே கதை நகர்வு இடம்பெறுகிறது. இருந்த போதிலும் அதன் பின் னர் பாட வேண்டிய பாடல்களே வலம் வரும் நிகழ்வுகளில் பாடப்படுகின்றன. காமன் ஊன்றியதன் பின்னர் நிகழ்வு நிறை வடையும் வரையில் குறித்த தோட்டங்களில் காணப்படும் கட் டுப்பாட்டு வரையறைகள் கவனிக்கத்தக்கது. பொதுவாக அக் காலக்கட்டத்தில் மாமிச உணவுகளை உண்பதையோ, சமைப்பதையோ தவிர்த்துவிடுவார்கள். பக்திநிலையில் இக் கூத்துடன் அனைவரும் இரண்டரக் கலந்து நிலைப்பெற்றிருப் பார்கள். இத்தோட்டத்தில் வாழும் ஏனைய மதத்தவர்களும் இந் நடைமுறையைப் பின்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்க தாகும். அத் தோட்டங்களில் வாழும் கிறிஸ்தவ, பௌத்த மதத்தவர்களும் இக்கூத்தில் பங்கெடுப்பதை அறிய முடிகி றது. பினனாளில் தோட்டங்களுக்கு கிறிஸ்தவ சபையினர்கள் வருகைத்தந்ததன் பின்னர் அச் சபைகளுக்கு மதமாறியவர் கள் இவ்வாறான விடயங்களில் ஒதுங்கிக் கொள்ளும் போக் கும் கவலைக்குரியதாகும்.

காமன் கூத்து குழுவினர் தங்கள் தோட்டங்களுக்கு அண் மைய தோட்டங்களுக்குச் செல்லும் போது முறையான அணு குமுறையை பின்பற்றுவார்கள். காமன் கூத்து குழுவினர் குறித்த தோட்டத்திற்கு வருகைத் தருவதற்கான விருப்பத்தை அறிவிக்கும் வகையில் கடிதம் அனுப்பப்படும். இக்கடிதம் கோயில் கமிட்டி தலைவர் அல்லது தோட்டக்கமிட்டி தலைவ ருக்கு பெயரிடப்பட்டிருக்கும். அக்கடிதம் கிடைத்தவுடன் குறித்த தோட்டத்தின் முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் இணைந்து குறித்த நாளில், குறித்த நேரத்தில் காமன் கூத்து குழுவினரை வரவேற்க காத்திருப்பார்கள். வந்தவர்களை வர வேற்று தேனீர் வழங்கி, பாத்திரங்கள் உடை மாற்றி ஒப்பனை செய்து கொள்வதற்காக பொருத்தமான இட வசதி செய்து கொடுப்பார்கள். ஒப்பனை விடயங்கள் நிறைவு செய்த பின் னர் ஆலயத்திற்கு அழைத்துச் செல்வார்கள். சில வேளைக ளில் ஆலய வளாகத்திலேயே ஒப்பனை நடைமுறைகளை

மேற்கொள்ளப்படும். ஆலயத்தில் இடம்பெறும் பூசையைத் ஆலய பூசகர் திருநீறு வைத்து விடுவார். ஆலய முற்றத்தில் மதன் இரதி ஆட்டம் இடம்பெறும். அவ்வாட்டத்தை தொடர்ந்து ஊரை வலம் வரும் நடவடிக்கை தொடரும். பிள் ளையார் துதி பாடலும் கூத்தில் இடம்பெறும்.

*ஹரி ஓம் நமோ எனவே பெரியோர்கள் துதிக்கொண்டு*
*அம்பிகையால் ஈன்றெடுத்த தும்பிமுகப் பிள்ளையாரே*
*அரைநொடிப் போல் உன் முகத்தில் கருணை விழியும் திறந்து*
*ஆதித்தன் தன் அருளால் சோதி குண்டலம் பெருக*
*அணிந்த முத்துமாலை ஜொலிக்க மணிமுத்து ஆயிரங்கள்*
*அச்சு வெள்ளம் பச்சரிசி உச்சித பாலில் சமைத்து*
*அரும்பு கோதம்பரிசி கரும்பு வெல்லம் குடித்து*
*அக்கணத்திலே பரப்பி முக்கன் தேங்காயுடைத்து*
*அம்சமாக கற்பூரம் ஏந்தி புகழ் கீதம் நான் பாடி*
*இம்புல்பிட்டி, கல்லாறு தோட்டத்திலே*
*நாங்கள் அனைவருமாய் கூடி காமன் சரித்திரத்தை*
*கானமாக பாடி ஆடுவதற்கும், காத்தருள வேண்டுமையா*
*எங்கள் நேர்த்தியுள்ள விக்கினரே!*

காமன் கூத்திலுள்ள இனிமையான பாடல்களை பாடுவார் கள். அவ்வாறு அமைந்த பாடல்களுள் எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலை நோக்கலாம்.

*தென்றல் ரதம் நானெடுத்து பெண்ணே - பெண்ணே*
*அந்த தேவர் சபை போரனடி கண்ணே கண்ணே*
*தென்றல் ரதம் நீர் எடுக்க வேண்டாம் வேண்டாம்*
*அந்த தேவர் சபை நீரும் போக வேண்டாம் வேண்டாம்*
*செங்கரும்பு வில்லெடுத்து பெண்ணே பெண்ணே*
*அந்த சிவன் மீது போர்தொடுக்க போறேன் போறேன்*
*ஐயா செங்கரும்பு வில்லெடுக்க வேண்டாம் வேண்டாம்*
*அந்த சிவன் மீது போர்தொடுக்க வேண்டாம் வேண்டாம்.*

இவ்வாறு வேறு தோட்டங்களுக்குச் செல்லும் போது காமன் கூத்து பாடலைச் சிறப்பாக பாடும் பாடகர்களையும் அழைத்து செல்வார்கள். அவ்வாறே தப்பிசைக்கும் கலைஞர் களையும் அழைத்து செல்வது வழமையாகும். இவ்வாறான பயணம் காமன் கூத்து பயில் நிலையில் இல்லாத தோட்டங் கள் நோக்கியே இடம்பெறும். ஒரு தோட்டப்பிரிவில் காமன் ஊன்றிவிட்டால் அத் தோட்டத்திற்கு வெளியில் இருந்து காமன் கூத்து குழுவினர் வருகைத் தர மாட்டார்கள். காமன் கூத்து இடம்பெறாத தோட்டங்களுக்கு அண்மையிலுள்ள தோட்டங்களில் இருந்து எத்தனை குழுக்களும் வருகைத் தர லாம். வேறு தோட்டங்களில் இருந்து கூத்தை நிகழ்த்தும் அணியினர் வருகைத் தந்தால் தப்பு காயச்சிதல், மற்றும் தப் பிசைக்கும் செயற்பாடுகளின் ஒத்தாசை புரிவார்கள். தப்பி சைக்கும் போது குளிர்படுவதனால் தப்புகள் மதத்து போவ துண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சூழலிலுள்ள குப் பைக் கூலங்களை ஒன்றிணைத்து தீயிட்டு தப்புகளை சூடாக் குதலாகும். குளிரில் தப்புகள் மதத்து போகின்ற சந்தர்ப்பங்க ளில் தப்பை சூடாக்கும் பணிகளுக்கு ஊரவர்கள் ஒத்து ழைப்பு வருவார்கள். இது மட்டுமல்லாமல் ஊர்வலம் நிறைவ டைந்த நிலையில் உணவு வழங்கி மகிழ்தல், நிதி சேகரித்து வழங்குதல், தங்கள் ஊர் எல்லை வரை சென்று வழியனுப்பி வைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வார்கள். இச் செயற்பாடுகள் இரண்டு ஊர்களுக்கிடையிலான நட்புறவை வளர்ப்பதற்கு ஏதுவாக அமைகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கூத்தில் ஈடுபட்டுள்ள பாட கர்கள் பாடல்களில் எதிர்வாதம் புரிந்து கொள்வதுண்டு. தங் களது வித்துவத்தை காண்பிக்கும் வகையில் பாடல் இசைக் கப்படுவதுண்டு. மொழித்திறமையை வளர்க்கும் பணியையும் இக்கூத்து வளர்த்துள்ளமைக்கு எடுத்துக்காட்டாக இவ்விட யத்தை நோக்கலாம். மலையக மக்களில் வேறூன்றியிருந்த நாட்டார் வழக்காற்றின் ஓர் அங்கமான பழமொழிகளையும் விடுகதைகளையும் பிரயோகித்துக் கொள்ளும் களமாகவும் அமையப் பெறுவதுண்டு. விடுகதைகளைப் பாடல் வடிவில் முன்வைத்து அவற்றுக்கு விடையைக் கோரும் நடைமுறை யும் பின்பற்றப்படுகிறது. அவ்வாறு அமைந்த பாடல்களில் பின்வரும் பாடல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

*ஐந்தாறு வண்டி மாட்டை ஓர்*
*ஆற்றங் கரையான் முழுங்குது பார்*
*அம்மியைத் தூக்கி தண்ணித் தவளை*
*முழுங்குது பார்*
*வாத்தியாரைத் தூக்கி கீரைப் பாத்தி*
*முழுங்குது பார்*
*கவியறிந்த வானவரே எந்தன்*
*செவிதனிலே சொல்லும்படி*
*கட்டுடைக்க வேண்டுமென்று*
*உன் கால்களிலே தெண்டமிட்டேன்...*

என்றவாறு வினாத் தொடுப்பதும் அவற்றுக்கு பொருளறிந்து விடையளிப்பதும் இடம்பெறும். அவ்வாறே பின்வரும் பாட லும் அவ்வாறான முனைப்புடன் முன்வைக்கப்படுகிறது.

*கண்ணுமுண்டு வாயுமுண்டு*
*அது பெண்ணுமல்ல ஆணுமல்ல*
*கழுத்திலே மாலையுண்டு*
*நெழிந்த கால் கையுமில்லை*
*கவுந்தமில்லா மேனியது*
*கொஞ்சம் சிவந்திருக்கும் ரூபமது*
*மங்கையர்க்கு காடை வார்க்க*
*அது என்ன வசனமது?*

என வினா தொடுப்பதாகவும் அமையப்பெறும். காமன் கூத்து இடம்பெறும் இறுதி நிகழ்வு தொடர்பான பிரசார நடவடிக்கை யாகவே இவ்வலம் வரும் செயற்பாடுகள் இடம்பெறுவதுண்டு. இறுதி நிகழ்வுக்கு, அண்மையிலுள்ள தோட்டங்களில் வாழும் மக்களுக்கு அழைப்பு விடுக்கும் களமாகவும் இதனைப் பயன்படுத்திக் கொள்வதுமுண்டு. காமன் பண்டிகை தொடர் பில் அறிவித்தல் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ள நடைமு றைகளையும் அவதானிக்கலாம். காமன் கூத்தின் பிரதான செயற்பாடு குறித்த களம்
நோக்கி விரைவோம்.

தொடரும் ...



letsumanan.a@thaiveedu.com



# பெண் மொழி - பெண் மையவாதம்

சி.ரமேஷ்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தீவிரமாகப் பெண்ணியச் சிந்தனை வலுப்பெற்ற நிலையில் பெண்கள் தங்கள் சுய இருப்பை, உள்மனதை, பெண் நடத்தைவாத முறைகளை, நுண்மை, பருண்மைக் காட்சிகளைப் புற உலகத்தாக்குதல்களைத் தாங்களே விசாரணை செய்யத்துணிந்தனர். இதனால் கவிதை அரசியல் புதிய பரிமாணத்தைப் பெற்றது. தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் பெண்ணடையாள மையம் சிதைக்கப்படும்போது பெண், எழுத்தை ஊடகமாக்கினாள். அங்கு பெண்ணின் வலியும் மன உளைச்சலும் பெண்ணெழுத்தாக வடிவம் பெறும்போது பெண்ணின் உள்முகத் தன்மை புதிய அடையாளத்தைப் பெற்றது. சமூக உறவுமுறைகளை மீறி பெண்ணின் அக அனுபவங்களை, சமூக முரண்களை, பெண்ணுடலை அவள் அரசியல் ஆக்க முற்பட்டவேளையில் பெண்ணிலைவாதக் கவிதைகள் முனைப்புப் பெற்றன. பெண் கவிஞர்களின் கவிதையின் பாடுபொருள், வடிவம், மொழி, ஆகிய புனைவு வெளிப்பாடுகளைப் பெண்ணிலை நோக்கில் அணுகும் பெண்மையவாதம் (Gyno criticism), ஆண் சொல்லாடலை மறுவாசிப்புக்குட்படுத்துவதுடன் பெண்ணிலக்கியத்துக்கான இலக்கிய மரபு, திறன் குறித்து ஒரு புதிய இலக்கிய வரலாற்றுக்கான தளத்தை உருவாக்குகிறது.

1979-ல் இதனைப் பரீட்சார்த்த முயற்சியாக அணுகியவர் இலக்கிய விமர்சனத்திற்கான ட்ரூமன் கபோட் விருதைப் பெற்ற எலைன் ஷோவால்டர் (Elaine Showalter) ஆவார். 1970-களில் இலக்கியம் ஆண்களால் நிறைந்திருந்து பெண்கள் ஓரங்கட்டப்பட்ட நிலையில் இவரின் 'பெண்ணிய கவிதை நோக்கி' என்ற கட்டுரை இலக்கிய உலகில் பெருந்தாக்கத்தைச் செலுத்தியது. பெண்ணிய பாரம்பரியத்தைப் புரிந்து கொள்வதற்கும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கும் எலைன் ஷோவால்டர் ஆய்வுகள் துணைநின்றன. பெண் இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கும் இலக்கியப் புனைவின் வழி பெண் பற்றிய வரைப்படத்தை உருவாக்கி கொள்வதற்கும் பெண்மையவாதம் உதவுகிறது. கலாசாரத்துக்குள் ஊடாடி அனுபவ இழைக்குள் கட்டுண்டு திளைக்கும் பெண் உணர்வுகள் மொழிவழி இலக்கியமாகப் பரிணமிக்கும் போது பெண்மொழி தோற்றம் பெறுகிறது. எலைன் ஷோவால்டரின் கூற்றுப்படி பெண்மையின் அகநிலைச் செயற்பாடு மாத்திரமன்றி அவள் கொண்டிருக்கும் தொழில்சார் தொடர்புகளும் பெண்மையவாதத்துடன் தொடர்புடையது. ஆண் மேலாதிக்கநிலைகள் சுரண்டல்களை மட்டுமே எதிர்க்கும் பெண்மையவாதம் ஆண்களை நட்புடன் அணுகுகிறது. பால் கவர்ச்சியால் தூண்டப்படும் பெண்களின் அக அனுபவங்கள், அவர்களது சகோதரத்துவம் அவர்களின் துணைக்கலாசாரம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு எழும் பெண்மையவாத எழுத்துகள் இலக்கியம், வரலாறு, மானுடவியல், மொழியியல் தளங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. 'பெண்ணின் மொழி' என்ற சொற்கூட்டைப் பயன்படுத்தும் சமூக மொழியியல் பெண் அறிஞரான ராபின் லாக்கோப், தன்னுடைய 'மொழியும் பெண்ணின் இடமும்' என்னும் நூலில் 'பெண்ணின் மொழி அதிகாரத்தொனி அற்றதாகவும் தன்னுடைய ஓரத்து வாழ்வை எதிரொலிப்பதாகவும், அமைந்துள்ளது' எனச் சுட்டிக்காட்டினார்.

பெண்ணின் நுண்ணுணர்வுகளை ஆண் பாடும்போது பெண்ணிலை குறித்த ஆணாதிக்க அரசியல்நிலை வெளிப்படுமேயன்றி அது பெண் அனுபவமாகாது. பெண்களுக்கேயான பண்பாட்டை மையப்படுத்தி பெண்ணினூடாகப் பெண்ணெழுத்து புனைவாக்கம் பெறும்போது பெண்மொழி இலக்கியத்தில் சாத்தியப்படுகிறது. பெண் பெண் அனுபவ மையம், அதன் அமைப்பு, வெளிப்பாடு, நடை, சார்ந்து பெண் படைப்பாக்கம் நுண்ணாய்வு செய்யப்படும்போது பெண்மொழியின் காத்திரத்தன்மையை அறிந்துகொள்ளமுடிகிறது. டாலேஸ்பென்டர் 'பெண்ணெழுத்தானது எழுச்சி அற்றதாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும், நரம்புத்தளர்ச்சிக்குரிய அடையாளம் கொண்டதாகவும், மிகையுணர்ச்சி கொண்டதாகவும், மெல்லிய கீச்சொலி உடையதாகவும் விளங்குகிறது' என மதிப்பிட்ட வேளையில் பிரான்சியப் பெண்ணாய்வாளரான ஹெலன் சிக்சு 'பெண்ணின் எழுத்துக்களை இப்படியெல்லாம் வரையறைப்படுத்தமுடியாது. ஒரு போதும் கோட்பாட்டிற்குள் அடைக்க முடியாது. பெண் பற்றிய பழைமையான கருத்தாடல்களை, புரிதல்களை மாற்ற வேண்டுமானால் பெண் தன்னுடம்பை எழுத வேண்டும் என்பார். ஆயினும் 'தீவிரமான படைப்புத்தளத்தில் ஆண், பெண் ஒருவர் மற்றொருவராக மாறுவது நிகழ்கிறது. தீவிரமான ஒரு கலைஞனின் குரல் பால் வேறுபாடு அற்றது' என்னும் ருத்வென்னின் கூற்று பெண் வெளியின் உள்ளகத் தன்மையை மீள் வாசிப்புக்கு உட்படுத்துகிறது. ஈழத்தில்

புதுவை இரத்தினதுரை 'மாளவிகா' என்னும் பெயரிலும் ஹரிஹர சர்மா 'ஆமிரபாலி' என்னும் பெயரிலும் கற்சுறா 'ஆதிரா' என்னும் பெயரிலும் இதனைக் கவிதைகளில் சாத்தியப்படுத்தியுள்ளனர். மேரிபி, ஹியாத் முதலானோர் ஆண், பெண் வழிப் படைப்புக்களைக் கணனி வழியாக ஆய்விற்கு உட்படுத்தியவார்கள் ஆவர். இவர்களின் ஆய்வின்படி 'பெண்ணின் மொழிநடை ஆணின் மொழிநடையிலிருந்து வேறுபட்டது'. தமிழிலக்கியப் பயில்பரப்பில் ஈழத்து நவீன கவிதைகளைப் பெண்மையவாதக் கோட்பாட்டின் அடிப்படையில் பெண்வழி எழுத்துக்களைப் பெண் அனுபவங்களுக்கூடாக நோக்குதல் சிறப்பாகையால் இக்கட்டுரை இதற்கமைய மேற்கொள்ளப்படுகிறது.

ஈழத்து நவீன கவிதைப் பரப்பில் 1980கள் முக்கியமான காலகட்டமாகும். 14-05-1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் 'சுதந்திர இறைமை உள்ள மதச்சார்பற்ற சோசலிஷ தமிழீழத்தை அமைத்தல்' என்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை அடுத்து 1980-களில் தாயக விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெறுகிறது. இக்காலப்பகுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் (21-07-1977), தமிழருக்கு எதிரான வன்முறைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. போரினை அவாவி நின்ற இளைஞர், யுவதிகளின் மனம் அரசியல் ஓர்மைக்குள் தம்மைக் கட்டமைத்துக் கொண்டது. இவ்வரசியல் சூழ்நிலையே பல்வேறு இயக்கங்களின் தோற்றுவாய்க்கும் கால்கோளிட்டது. இக்காலப் பகுதியில் விடுதலை இயக்கங்களைச் சார்ந்தும், இயக்கச் சார்பற்றும் உருவாக்கப்பட்ட பெண்அமைப்புக்கள் பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் பெண் சமத்துவம், பெண் விடுதலையைக் கோரிநின்றன.

இச்சூழ்நிலையில் பெண் கல்வியால் பெண்ணிற்கான சிந்தனையோட்டம் வலுப்பெற்ற நிலையில் மீண்டும் பெண்ணிற்கான இலக்கியத்தளம் ஆழமாகப் வித்திடப்பட்டது. பெண் தன்னிருப்பை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவையேற்பட்டது. இதன் ஊற்று ஈழத்தில் நவீன கவிதைக்கு வித்திட்டது. பெண்ணியக் கோட்பாடுகளும் பெண்ணிய திறனாய்வுகளும் புதிய கருத்தாடல்களின் வழி பெண் எழுத்துக்களை மறுவாசிப்புக்குட்படுத்தின. புதிய பண்பாட்டுச்சூழலில் புதியஅனுபவங்களின் வழி பெண்ணிற்கான மொழியில் பெண்ணுடல் சார் பதிவுகள் நவீன கவிதைகளாகப் பரிணமித்தன. பேசாப் பொருட்களைப் பேசுவதும் அந்தரங்கமான வலிகளைப் பதிவு செய்வதும் பண்பாட்டு ஒழுக்கலாற்றை மறுபரிசீலனை செய்வதும், நவீன கவிதைக்கான புதிய வெளியைத் திறந்தன.

பெண்மொழி உடலரசியலை வெளிப்படையாகப் பேசுகிறது. பெண் உடல் ஒடுக்குமுறை மற்றும் எதிர்ப்பின் தளமாக மாறுகின்ற சூழலில் பெண்ணுடலை ஆணுக்கான வெறும் போகப் பொருளாகச் சித்திரிக்காது அதனைப் போராட்டத்தின் கருவியாக வலியுறுத்தும் போக்கு 1960-களில் முதன் முதலில் அமெரிக்காவில் வெளிக்கிளம்பியது. பெண்ணியக் கருத்தியல் தளத்தில் கட்டமையும் உடல் அரசியல், உடலின் மூலம் அதிகாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் சமூக விதிமுறைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் நிறுவனங்கள் மனித உடலை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆராய்கிறது. மனித உடலைச் சுற்றியுள்ள சமூக, கலாசார மற்றும் அரசியல் சிக்கல்களை வெளிப்படுத்தி நிற்கும் உடல் அரசியல் பாலினபிரச்சினைகளில் அதிகம் கவனஞ் செலுத்துகிறது. ஆணாதிக்க எதிர்ப்பு அரசியல் திட்டங்களுக்கு உடல் எவ்வளவு முக்கியம் என்பதை போதுமான அளவு வலியுறுத்து உடல் அரசியல் அவசியம் என்பதை ஈழத்துக் கவிதைகள் வலியுறுத்தி நிற்கின்றன.

பல்வேறு வன்முறைகளுக்குப் பெண்ணுடல் தொடர்ந்து ஆளாக்கப்படும்போது, பெண்ணுடல் குறித்த புரிதலை இப்போது சமூகத்தில் உரையாடுவது முக்கியமானது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பெண்ணியவாதிகள் பெண் உடல் மற்றும் பெண் உடலைப் பற்றிய கருத்துக்கள் பெண்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதித்திருந்தன என்பது குறித்தும் ஆய்வு செய்தனர்.

மூன்றாம் உலகச் சமூகங்களில் பெண்களின் இலக்கியப் பணிகளை ஆய்வு செய்வதற்கு பெண்ணுடல் குறித்த தனித்துவமான பார்வை அவசியம். இதனை மையப்படுத்தி கேது எச். காட்ராக் (Ketu H. Katrak) எழுதிய Politics of the Female Body என்னும் நூல் முக்கியமானது. காலனித்துவ சாம்ராஜ்யத்தின் குடிமக்களை வாழ்க்கை முறைகளை ஆய்வுக்குட்படுத்தும் காட்ராக் பின்காலனித்துவ இலக்கிய நூல்களையும் கவனமாக பகுப்பாய்வு செய்கிறார். இந்தியாவைச் சேர்ந்த அனிதா தேசாய், கானாவிலுள்ள அமா அடா ஐடு மற்றும் டிரினிடாட்டைச் சேர்ந்த மெர்லே ஹாட்ஜ் என விரியும் இவருடைய பார்வை போராட்டங்களில் எதிர்ப்பு உத்தியாக பெண்ணுடல் கையாளப்பட்டதையும் விளக்கி நிற்கிறார். இந்நூலில் பெண்களின் நாவல்கள், கவிதைகள், கதைகள் மற்றும் கட்டுரைகள் என்பவற்றை ஆராயும் காட்ராக் வாய்வழி வரலாறுகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை ஆராய்கிறார்.

உடலின் அனுபவத்தை மொழி வாயிலாக வெளிப்படுத்தும் பெண்ணெழுத்து தன்னுடைய அகத்தை அப்பட்டமாகச் சித்திரிக்கின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலமைப்பில் உள்ள வேறுபாடே அவர்களின் படைப்பின் வேறுபாடுகளுக்கும் அடிப்படையாக அமைகிறது. அதாவது ஆணிலிருந்து வேறுபட்ட பெண்ணுடலின் தனித்தன்மைகளான மார்பு, பெண்குறி, கருவைச் சுமக்கும் வயிறு, போன்றவையும் அவற்றின் மூலமாக நிகழும் பூப்பு, மாதவிலக்கு, சூல், குழந்தைப்பேறு, தாய்-சேய், உறவு போன்ற உள்ளார்ந்த தனித்த அனுபவங்களைப் பெண்மொழியால் பதிவு செய்வதே பெண்படைப்பாகும். காமமும் உடலின் இரகசியங்களும் மதிப்பற்ற பண்பாட்டுச் சூழ்நிலையில் பேச முடியாது அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் பெண்ணுடலின் உள்ளாந்த இரகசியங்கள், இயல்புகளைப் பாடுதல், பெண்ணுடலைக் கொண்டாடுதல், நுண்ணுணர்வு சார் காமத்தைக், கலவியைப் பாடுதல், ஈழத்து நவீன கவிதையின் இயங்கு தளங்களாயின. ஆயினும் இதன் தொடக்கப் புள்ளி ஔவையாரிலிருதே தொடங்குகின்றது எனலாம்.

*'முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?*
*ஓரேன்! யானும் ஓர் பெற்றி மேலிட்டு*
*ஆஅ ஒல் லெனக் கூவுவேன் கொல்?*
*அலமரல் அசைவளி அலைப்ப, என்*
*உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே'*

*- குறுந்தொகை 28*

ஔவையார் குறித்த விம்பங்கள் யாவும் உடைந்து சிதறும்படி இளம் பெண்ணினுடைய பாலியல் உணர்வுகளை வெளிப்படையாக இக்கவிதையில் பேசுகிறார். சுழலுதலையுடைய அசைந்து வருகின்ற தென்றல் காற்று காதல் நோயின் கொடு




மையை அறிந்து கொள்ளாமல் அலைக்கழிக்கின்றது. எனது உள்ளத்தில் எழுகின்ற காமநோயை அறிந்து கொள்ளாது கவலையின்றி தூங்கும் ஊரில் உள்ளாரை யான் முட்டுவேனா? தாக்குவேனா? இவ்வாறு உறங்கும் ஊரார்க்கு ஒரு தலையீட்டை மேற்கொண்டு ஆவென்றும் ஒல்லென்றும் ஒலியை உண்டாக்கிக் கூறுவேனா? இன்னது செய்வது என்பதை யான் அறியேன். காலகாலமாகப் பண்பாட்டுரீதியாகக் கட்டுப்பாட்டுக்குள் இருத்தி வைக்கப்பட்ட பெண் உணர்வை ஔவையார் மேற்பூச்சற்று மனத்துக்கு நெருக்கமான மொழிக்கூடாக வெளிப்படுத்திச் செல்கிறார்.

ஆணாதிக்க சமூகம், பெண்ணுடல் என்பது உழைப்புக்கும் இனவிருத்திக்கும் உரியது என்னும் கருத்துநிலையை காலகாலமாகக் கொண்டுள்ள நிலையில் அதனைப் பெண்ணிலைவாதிகள் உடல் அரசியல் வாயிலாக எதிர்க்கின்றனர். பண்பாட்டுரீதியாகக் கட்டுப்பாட்டுக்குள் இருத்தி வைக்கப்பட்ட பெண்ணை விருப்பு, வெறுப்பு என்ற உணர்ச்சிகள் அற்ற நுகர்வுப்பண்டமாக, ஆணாதிக்கச் சமூகம் நோக்கும் நிலையில் சங்கரியின் 'அவர்கள் பார்வையில்' என்ற கவிதை இதனைத் தெளிவுபடுத்தி நிற்கிறது.

***எனக்கு முகம் இல்லை***
***இதயம் இல்லை / ஆத்மாவும் இல்லை /***
***அவர்களின் பார்வையில் / இரண்டு மார்புகள்***
***நீண்ட கூந்தல் / சிறிய இடை / பருத்த தொடை***
***இவைகளே உள்ளன./***
***சமையல் செய்தல் / படுக்கையை விரித்தல்***
***குழந்தை பெறுதல் /***
***பணிந்து நடத்தல் / இவையே எனது கடமைகளாகும். /***
***கற்பு பற்றியும் / மழை பெய்யெனப் பெய்வது பற்றியும் /***
***கதைக்கும் / அவர்கள் எப்போதும் எனது உடலையே /***
***நோக்குவர். / கணவன் தொடக்கம் /***
***கடைக்காரன் வரைக்கும் / இதுவே வழக்கம்.***

*- சொல்லாத சேதிகள்*

உடலியல் சம்மந்தப்பபட்ட காரணிகளே பெண்ணடிமைத் தனத்தின் அடிப்படைகள் என்பதை 'அவர்கள் பார்வையில்' என்னும் கவிதை யினூடாக எடுத்துரைக்கும் சங்கரி, பாலினரீதியாகப் பெண்ணைப் போகப் பொருளாய் ஆண் சமூகம் நோக்கும் தன்மையானது பெண்மையை மதிப்பிழக்கச் செய்யும் என்பதையும் இக்கவிதையினூடாக வெளிப்படுத்துகிறார். இதன் வெளிப்படையான பிரதிபலிப்பை முகைசிரா முகைடீனின் 'நான் பேச நினைப்பதெல்லாம்' கவிதையிலும் காணலாம்.

***என்னை! / ரசிக்கவும் வாங்கவும் / ருசிக்கவும் வாழவும் /***
***உனக்கு இஷ்டம் தான்! / அதுவும் என் உணர்வுகளை /***
***விலக்கியும் விற்கவும்-என் / கொள்கைகளை/ முடக்கியும்***
***கொளுத்தவும் / தலைப்பட்டுக் கொண்டு***

ஈழத்தில் போர் ஏற்படுத்திய அச்சம் மனிதனை உயிர்ப்பின்றி, உணர்வின்றி, வெறும் ஜடமாய் வாழச் செய்கிறது. வெளியில் சென்று ரசிக்க முடியா நிலவு நினைவில் மட்டும் வந்து போக, இருந்தும் அனுபவிக்க முடியா நிகழ்கால இருப்பை மைதிலி உடற்கூற்று வழியே 'கிலி' கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

***இரவைச் சிடுசிடுக்கிறாள்***
***அம்மம்மாக்கிழவி***
***நிலவு***
***நாட்களைப் பற்றிய***
***நினைவுகளில் கழிகிறது***
***இன்று -***
***அருகிருந்தணைத்து***
***முலை பற்றும் கணவன் பிடியிலும்***
***உயிர்ப்பில்லை.***

*- இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்*

இக்கவிதையில் கணவன் மனைவிக்கும் இடையிலான அந்தரங்க உறவு, யதார்த்த வாழ்வியல் சித்திரிப்பு வழியே காட்சிப்படுத்தப்படுகிறது. ஆண், பெண் பரஸ்பர நட்பின் நிமித்தம் நிகழும் கரு உயிர்த்தல் என்பது பெண்ணின் வாழ்வோடு தொடர்புடையது. பெண்ணுடலானது போகத்துக்குரியது அல்ல. மதிக்கப்பட வேண்டிய இவ்வுடலானது ஆண்மைய சமூகத்தால் இழிவானதாகவும் மோகத்துக்குரியதாகவும் கருதப்படுகிறது. சுயமதிப்பிழக்கச் செய்யும் இந்நோக்கு தவறானது. இதனை ஆழியாளின் 'தடைகளைத் தாங்கி' என்னும் கவிதை எடுத்துரைக்கிறது.

*நீயும் நானும்*
*வரையறைகளைக் கடக்க வேண்டும் - நான்*
*உன் விவேகத்தோடும்*
*நீ என் வீரியத்தோடும்*
*கடக்க வேண்டும்*
*எனினும்*
*என் கருவறையை நிறைப்பது உன் குறியல்ல*
*என்ற புரிதலோடு வா*

- உரத்துப்பேச

பெண்ணை நுகர்வுப்பொருளாகக் கருதும் மரபுரீதியான ஆணாதிக்கச் சமூக யாதார்த்த நிலை தவிர்க்கப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் இக்கவிதை அதிகாரத் தொடர்பற்று பெண்மை அதற்குரிய தன்மைகளுடன் மதிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைக்கிறது. தன்னியல் சார் இருப்பினூடாகப் பெண்ணுடலின் பிரத்தியேகப் பிரச்சினைகள் ஈழத்துக் கவிதைகளில் மிக நுட்பமாக எடுத்துரைக்கப்படுகின்றன. மரபுசார் ஒழுக்கவியல் கற்பிதங்களுக்கூடாக மறைக்கப்பட்ட பெண் உணர்வுகள் நவீன கவிதை சொல்லிகளால் ஒழுக்கநிலைவரம்பு மீறலுக்கூடாக நுட்பமாக ஈழத்துக் கவிதைகளில் காட்சிப்படுத்தப்படுகிறது. மைதிலி, கல்யாணி, றஞ்சனி, ஆழியாள், கலா, கற்பகம் யசோதரா கவிதைகளில் ஆணாதிக்க சமூகத்தால் காலாகாலமாகப் பெண்ணுக்கு வகுக்கப்பட்டு வந்த கற்புநிலையும் புனிதங்களுக்கூடாக மறைக்கப்பட்ட பாலியலுணர்வுகளும், பாலியலுறுப்புகளும் அகம்சார் சுயத்துவத்துக்கூடாகவும் புறநிலைசார் காட்சிப் படிமங்களுக்கூடாகவும் வெளிப்படுகின்றன.

*பாலியல் தன்மை என்பது ஒரே நேரத்தில்*
*கட்டுப்படுத்தக் கூடிய, ஒடுக்கப்பட*
*வேண்டிய, அச்சப்படத்தக்க வெளியாக*
*மட்டுமன்றிப் புதிய புலங்களைத்*
*தேடிச் செல்லும் களமாகவும், இன்ப தூய்ப்பின்*
*விளைநிலமாகவும் அந்த*
*அடிப்படையில் சாகசங்களைச் சாத்தியப்படுத்தக்*
*கூடியதாகவும், கிளர்ச்சி*
*யூட்டக் கூடியதாகவும் மனித நெருக்கத்தின்*
*ஆதாரமாகவும் உள்ளது*

*- பெண் எழுத்துக்களில் பாலியல் அரசியல், தீராநதி, 2005-யூலை*

என்னும் அ. மார்க்ஸின் கூற்று முக்கியமானது. உடல்நிலை சார்ந்து மன அழுத்தத்தால் பெண் நசுக்கப்படுகையில் அது ஏற்படுத்தும் வலி மைதிலியின் 'கடி' என்னும் கவிதையில் எவ்வித விரசமுமின்றிப் படிமமாக வெளிப்படுகிறது.

*கடிப்பதன் காரணத்தினால் தான்*
*முதலில்*
*சொறியத் தொடங்குவது*
*பிறகு*
*தோல் உரிவுஇரத்தக் கசிவு எரிவு*
*சில சமயங்களில் தழும்பு*
*கடித்தால் சொறியாதே என்கிறீர்கள்*
*எப்படி...*
*கடித்தால் யாருக்கும்*
*சொறியத்தானே*
*சொல்லும்*

*- இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்*

'பெண்ணின் பாலியல் செயற்பாடு என்பது கவிதையை உற்பத்தி செய்யும் படைப்புத் தன்மையோடு ஒத்தது' என்பார் ஹெலன். எனவே உணர்வுச்சுழியில் இழுத்துச் செல்கின்ற இந்தப் படைப்பாக்க குணத்தினால் வறட்சியான ஆணாதிக்க போக்கு நிலையைத் தகர்க்க முடியும். பெண் தன் கலை இலக்கியப்பிரதியில் முழுமையாகத் தன்னுடம்பைப் பதிவு செய்வதால் அவளுடைய சுயம் மாசுபட்டு போவதில்லை. இக் கூற்றின் பிரதிபலிப்பை ஈழத்து நவீன கவிதையிலும் காணலாம். ஆண்மைய பாலியல் நுகர்வுக்கூடான பெண்ணிலை சார் இருப்பை அவாவி நிற்கும் கவிதைகளாக றஞ்சனியின் 'புரிதலின் அவலம்' மைதிலியின் 'பொருள், அந்தநாள், ஆழியாளின் 'தடை தாண்டி', சுல்பிகாவின் 'யோனியாகிப் போன பெண்கள்' போன்ற கவிதைகள் காணப்படுகின்றன.

ஈழத்துக்கவிதைகளில் பெண்ணுடலை வெறும் அழகுத் தோற்றமாகக் கருதும் பார்வை தவறானது என்னும் கருத்து பெண் கவிஞர்களால் முன்வைக்கபட்டது. பெண்ணின் பிறப்போடு தொடர்புடைய உடலியல், உடல் சார்ந்த அழகு பெண்ணை அடிமையாக வைத்திருக்குமேயன்றி அவளைப் போற்றுதற்குரிய கால்கோலாக அமையாது எனக் கருதும் பெண்ணியக் கவிஞர்கள் உடல் சார் அவையங்களினூடாக ஆழமான படிமங்களை உருவாக்கி கவிதைகளை யாத்தனர். இப்பெண்கவிஞர்களால் கையாளப்பட்ட 'மையக்குறியீடுகள்' சொல்ல வேண்டிய கருவை ஆழமாகவும் அழுத்தமாகவும் கூறுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. தமிழ்க்கவிதையில் இப்பாடுபொருள் புதியதொரு அத்தியாயத்தை தொடக்கி வைத்தது என்பதுவும் மறுப்பதற்கில்லை.

1980-களுக்குப்பின் ஈழத்தில் பெண்ணியவாதிகளின் பண்பாட்டுச்சூழல் உருவாக்கப்பட்டபோது பெண்படைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்ணியத்தின் தீவிரபோக்கைக் கருத்தாடல்களுக்கூடாக உள்வாங்கிய பெண் கவிஞர்கள், பெண்ணுடல், உறுப்பு, உணர்ச்சி ஆகியவற்றின் கருத்தாடல்களின் அனுபவங்களை, அகத்தை, அந்தரங்க வலியைப் படைப்பு மொழியாகக் கொண்டு நவீன கவிதைகளை உருவாக்கினர். இக்காலப்பகுதியில் இலக்கிய மீட்டுருவாக்கத்தின் மூலம் பெண்ணிற்கான ஒரு புதிய வெளியை நவீன கவிதை திறந்தது. இங்கு 'பெண் மொழி என்பது ஒடுக்கப்பட்ட பெண்ணுடலுக்குள் சூழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு, ஆகியன உள்ளிட்ட அக நிகழ்வுகள் சார்ந்து உருவாகிறது' என்பார் பா. வெங்கடேசன் (பெண்படைப்பாளிகளின் கவிதைகளில் பெண் மொழி பக்.10). பொதுவாக தான் சார்ந்த சூழலோடு முனைப்பு பெறும் பெண்மொழியானது பிரத்தியேக மனப்படிமங்களுக்கூடாகப் பால்சார்ந்த தனித்த அடையாளங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. பெண்ணின் நுண்ணுணர்வுகள் புனைவுகளுக்கூடாக அழகியல்சார் கருத்துருவாக்கங்களின் வழி வெளிப்படும்போது, கவிதையானது பெண்மொழியைச் சாத்தியப்படுத்துகிறது. நான் என்னைப் பகிர்ந்து கொள்ளும் வடிவம் தான் கவிதை. நான் தான் என் கவிதை. என் கவிதை தான் நான் என்றும், நான் எனக்காக எழுதுகிறேன். என் எழுத்து எனக்குள் நிகழ்பவையின் பிரதிபலிப்புக்கள் (கருவறை வாசனை) என்னும் கனிமொழியின் கூற்று இதனை உறுதிப்படுத்துகிறது.



ramesh.s@thaiveedu.com



# இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள் 3

– கோட்டி திருமுருகானந்தம்




இலங்கையில் வாழும் மக்களின் அன்றாட வாழ்வியலைக் காட்டும் படைப்புகளையும் இவ்விதழ் வெளியிட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது. இளம் பிள்ளைகளைப் பாலியல் பலாத் காரம் செய்யும் கயவர்கள் மலிந்துள்ளனர். சிறுபிள்ளைகள் எனக்கூட பாராமல் தங்கள் வன்மத்தைக் காட்டுகின்றனர். தங்கள் வீட்டிலும் இளம் பிள்ளைகள் இருக்கிறார்களே. அவர் களுக்கும் இத்தகைய இழிசெயல்கள் நடந்தால் என்ன செய் வது என்பதை இவர்கள் ஒருபோதும் நினைத்துப் பார்ப்ப தில்லை. ஒருவேளை உணவுகூட இல்லாமல் அல்லலுறும் மக்களிடமும் வரதட்சணை கேட்கும் மனிதாபிமானமற்ற மக் கள் இருப்பதைப் பார்க்கும்போது இவர்கள் மனிதர்களா எனக் கேட்கத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட சமுதாயத்தில் நாம் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம் எனக் கவிஞர் கள் வருந்திப் பாடியுள்ள பாக்களையும் இவ்விதழ் வெளியிட் டுள்ளது.

*‘மலரத் துடிக்கும் / மொட்டுக்களைக் கூட*
*பாதியிற் பறித்து / நெருப்பிற் கிரையிடும் / நீசர்கள்*

*தெருவோரத்தில் வாழும் / அகதிகளிடம் கூட*
*சீதனம் கேட்கும் / மனிதாபிமானிகள்*

*வீடு வீடாயேறி யிறங்கி / வயிறு வளர்க்கும்*
*பிச்சைக் காரர்களிடமே*
*கொள்ளையடிக்கும் / கொடுங்கோலர்கள்*

*வட்டிப் பணத்தில் / வானத்தில் பறக்கும்*
*கோடீஸ்வர வள்ளல்கள்*
*காசுக்காக மானம் விற்கும்*
*கபோதிகள் உண்மை பேசும் / உத்தமர்களின்*
*உயிரைக் குடிக்கும் / உதவாக் கறைகள்’*

- சி சிவரஞ்சனி, ஓசை இதழ் 15, ப. 9

எனக் கவிஞர் சிவரஞ்சனி மனமுருகி பாடியுள்ள பாடல் இலங் கைத் தமிழ்ச் சமுதாய அவலங்களைக் காட்டுகிறது. இது இலங்கைத் தமிழ் மக்களுக்கும் மட்டும் பொருந்தும் எனச் சொல்ல முடியாது. உலகெங்கும் இத்தகைய இழிசெயல்கள் எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கெல்லாம் பொருந்தும் என லாம்.







'கணவனுக்கு ஒரு மடல்' என்ற கவிதை பெண்களின் மனவுணர்வுகளையும் இக்கால வாழ்வியல் சூழல்களையும் ஒருங்கே கூறும் வண்ணம் உள்ளது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்பதற்கிணங்க இன்றைய தலைமுறையும் வாழ்ந்து வருகிறது. ஆனால் அடுத்த தலைமுறை இப்படி வாழுமா எனத் தெரியாது. நம் முன்னோர்கள் வாழ்வில், ஆண்கள் பொருளீட்ட பெண்கள் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டார்கள். ஆனால் இன்று பெண்கள் பொருளீட்ட ஆண்கள் அதை அனுபவிக்கும் நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இத்தகைய சூழலில் வாழும் பெண் கவிஞர்கள் படைத்துள்ள கவிதை ஆண்களை மட்டுமல்ல சமுதாயத்தையும் சிந்திக்க வைக்கிறது.

**காவலனாய் நீயும் / காலம் முழுமையும்-என்னை**
**காத்திடுவாய் என்றே / கழுத்தில் வாங்கினேன் தாலி**

**வளமாக நாமும் / விதமாக வாழ்ந்திட**
**வேண்டுமென்றீர் ரொக்கம்**
**தயங்காமல் என்னை / வெளிநாடு அனுப்பினீர்**

**மறுக்காமல் நானும் / தேசம் விட்டு வந்தேன்**
**ஓடாய்த் தேய்ந்து / ஒரு மனதாய் நானும்**
**அனுப்பும் பலத்தையிங்கு / அஞ்சாமல் அழித்திடுதல்**
**முறைதானோ கூறும்**

**கண்ணீர் சிந்தி / கண்காணாத் தேசத்தில்**
**கடுமையாய் உழைத்தும் / மிஞ்சியது எது**

**குடிபோதை / குடியைக் கெடுக்குமென்று**
**குழந்தைகூட அறியும்**
**அறியாமல் நீயும் / அழிப்பது நியாயமா**

**அர்த்தமில்லாக் களவுகளாய்**
**என் வாழ்வும் / அஸ்தமித்து விடுமே**
**பதில் சொல்வாய் / பாதகனே**

- அருளானந்தி விஜயராஜ், நீங்களும் எழுதலாம் இதழ் 1, ப. 6

எனக் கணவன் பாதகனாக மாறியுள்ள சூழலைக் கவிஞர் பாடியுள்ளார். இத்தகு சமுதாய அமைப்பில் நாம் வாழ்கிறோம் என்னும்போது மனம் வருத்தமடைகிறது. இத்தகைய இழிகுணம் படைத்த ஆண்கள் சமுதாயத்தில் இருக்கிறார்கள். நம் முன்னோர்கள் பெண்களைப் போற்றினார்களே தவிர ஒருபோதும் தூற்றவில்லை என்பதை இன்றைய இளைய சமுதாயம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இலங்கை இனப்போரால் மனிதம் மலிவானதைக் கவிஞர் கலா விஸ்வநாதன் 'மனிதம் மகிழ' என்ற கவிதையில் நன்றாகப் பாடியுள்ளார். இலங்கையில் எல்லா வளமும் இருக்கிறது, இலங்கையைச் சுற்றி கடல் இருப்பதால் மீன்பிடித் தொழில் சிறப்பாக உள்ளது. மன்னார் வளைகுடாவில் முத்தெடுக்கும் தொழில் நடக்கிறது. மலையகத்தில் தேயிலை விளைகிறது. நாடெங்கும் விவசாயம் மூலம் பலதரப்பட்ட தானியங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இத்தகைய நாட்டில் மகிழ்ச்சியாக வாழவேண்டிய மக்கள் சொத்து சுகமிழந்து சண்டையிடுவதால் இரத்த ஆறு கெருக்கெடுத்து ஓடுகிறது. மனிதம் மகிழ்ச்சியாக வாழவேண்டும் எனக் கவிஞர்கள் மட்டும் விரும்பினால் போதுமா. பெரும்பான்மை இனமான சிங்கள இனம் இதை விரும்ப வேண்டுமல்லவா.

**'நித்தம் இந்த தேசத்தில் / இரத்தம் சிந்தும் கோரம்**
**சொத்திழந்து சுகமிழந்து / சித்தம் சுமக்கும் பாரம்**

**முத்தான ஈழவள நாட்டில் / முகிழ்த்த முறுவலின் ரோகம்**
**கத்தும் ஆழி அலைகளாய் / கரை சேராத சோகம்**

**வித்தான சமாதானம் விளைய /விரும்பும் மக்கள் மனம்**
**சத்தான சமரச பேச்சின்றி /சறுக்கும் இனவாதக் குணம்**

**யுத்தமே வாழ்வாகிக் போயின்**
**யோகமாகும் ஆயுத வியாபாரம்**
**பித்தராய் மனிதர் பிரிந்திட / பெருகும் வறுமை ராகம்**

**புத்தரைப் போசிக்கும் பூமியில்**
**புனிதம் புதைகுழி போகும் / சித்தர் செப்பும் மொழிகளை**
**சிந்தியாது பேயாட்சி நீளும்**

**மாணிக்கம் விளையும் மண்ணில்**
**மனிதம் மகிழ வாழ வேண்டும்**
**காணிக்கையாகும் உயிர்பலி நீங்கி**
**கவிதையாய் மக்கள் வாழ வேண்டும்'**

- கலா விஸ்வநாதன், நீங்களும் எழுதலாம் இதழ் மூன்று, ப. 7

எனக் கவிஞர் கலா விஸ்வநாதன் மானுட மகிமைக்காகப் பாடியுள்ளார். ஆனால் இங்கு வாழும் மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். பலர் உயிர் தப்பி உலகின் பல பாகங்களில் வாழ்ந்து வருகின்றனர்.




‘பெண்ணே எழுந்து விடு’ என்ற கவிதை பெண்களின் இருப்பைப் பேசுகிறது. பெண்கள் வளர்ந்துவிட்டதாக உலகம் பேசுகிறது. ஆனால் இன்னும் வளரவில்லை என்பதை இந்த கவிதை உணர்த்துகிறது. ஆண்களின் அடிமை தனத்திற்கு இரையாகாமல் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் திற னைப் பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். பிள்ளை பெறும் இயந்திரங்களாக மட்டுமல்லாமல் இப்பாரை உய் விக்க வந்தவள் என்பதைப் பெண் உணரவேண்டும் என்ற கருத்தமைந்த பாக்களையும் இவ்விதழ் வெளியிட்டுள்ளது.

***‘பெண்ணே எழுந்து விடு / விழுந்து கிடப்பது வீரமல்ல***
***முன்னே விரிந்து கிடக்கும் / முது உலகின் முதுசம் நீ***

***கட்டில் சுகம் கொடுப்பதும் / கரு சுமப்பதும் மட்டும்-உன்***
***கடமை என்று-வெறும் / விட்டிலாய் வாழ்வதும் வாழ்வா***

***முறம் கொண்டு புலி விரட்டி-வீர***
***முலையூட்டி மகவு வளர்த்து***
***செரு வென்ற வரலாறு-சங்க புறம் கூறல் அறியாயோ***

***பன்னாட்டுப் பணிப்பெண்ணாய்***
***பரிதாப நிலை போதும்-பாதம்***
***உன்னாட்டில் ஊன்றிட்டு / உலகளாவிப் பார்***

***மனிதர் சந்தையில் / மலிவு விலையில்-நீ***
***புனிதமற்ற உணர்ச்சிகளுக்கு / புதிர்ப் படையல் ஆவதுமேன்***
***கட்டுக்களை அறுக்க-இனியும்***
***கவியரசன் பாரதி வரமாட்டான்-வலிய***
***முட்டைகளை உடைத்து / முயன்று வரும் பறவை போல்***
***எழுந்து விடு***

***பாத்திரங்கள் தேய்ப்பதுவும் / பத்து வீடு பெருக்குவதும்***
***சாத்திரமா உனக்கு-உன் / காத்திரத்தை உணர்ந்து***
***காலடியை நகர்த்து***

***ஆசைகளுக்கு உன்னை / அடகு வைத்தாயானால்***
***கற்பிழந்து கரு சுமந்து / வற்புறுத்தும் மரணத்தை***
***வலிந்து நீ அடைவாய்***

***அக்கினிக் குஞ்சுகள்-தீயில் / அவிசுகள் ஆவதா***
***கிஷாலினிகளே உஷாராகுங்கள்***
***தீத்திறத்தாரை எரிக்கும் / போர்த்திறம் பெறுங்கள்.***

- சௌ சந்திரகலா, நீங்களும் எழுதலாம் இதழ் 30, ப. 18

எனக் கவிஞர் பெண்களுக்குக் குரல்கொடுத்துள்ளதைப் பார்க்க முடிகிறது. உலகம் மாறி விட்டது, வளர்ந்து விட்டது என்றெல்லாம் பேசுகிறோம், எழுதுகிறோம். நாம் வளர்ந்து விட்டோமா என்பதைச் சற்றும் பார்ப்பதில்லை. நாம் வளர்ந்து இருந்தால் பெண்களைக் கண்களாகப் போற்றியிருப்போம் அல்லவா.



ஒரு பெண்ணின் மனநிலையை ஒரு பெண்தான் நன்றாக உணர்ந்தறிய முடியும். இதற்கு இணங்க பெண்களின் மனநி லையைக் காதல் ரசம் சொட்டச் சொட்ட பாடும் கவிஞர்கள் அவர்களின் விகரதாபங்களையும் குறிப்பிட்டுள்ளனர். பெண் களின் உளவியல் அறிந்த பெண்கள் கவிஞர்களாக இருக் கும்போது இத்தகைய கவிதைகளைப் பெண்ணியப் பார்வை யிலிருந்து வடிக்க முடிகிறது.

***‘துருப்பிடித்துக் கறுத்த***
***கடிகாரத்தின் செயற்பாட்டை விழுங்கி***
***எழுகிறது ஓர் பருவப் பெண்ணின் கிளர்ச்சிகள்***
***உயிர்ப்பைக் குரலிலும்***
***காதலை மார்பிலும் பதுக்கிய***
***அவளது எதிர்பார்ப்பும் ஆசையும்***
***எந்த மனதையும் சென்றடையாது***
***மூடிக் கொள்கிறது***
***நெருடல்களில் தனிமை புரியாது***
***விறைத்துக் கொள்கிறது குறி***
***என்னை / என் உடலை***
***நூறாயிரம் மலர் கொண்டு மூட***
***எத்தனிக்கிறது எனதிந்த ஆன்மா***
***எதிரில் மண்டியிட்டு அணைத்து***
***கசப்புகளை உள்வாங்கி /பாதங்களை வருடி***
***பெருவிரலின் வெடிப்புக்களையெல்லாம்***
***தன் வாய் கொண்டு மூடி***
***என்னை / என் இளமையை***
***இன்பத்தை வேண்டி நிற்கும் உதடுகளை***
***கபளீகரம் செய்கிறது உனது உடல்***
***வழி அனுப்பி வைக்கும் தைரியமின்றி***
***காதலின் பெயரால் ஓர் ருத்ர தாண்டவம்***
***நடந்து முடிகிறது’***

- தான்யா, மறுபாதி இதழ் மூன்று, ப. 13

எனக் கவிஞர் தான்யா பாடியுள்ள கவிதை பெண்களின் மன தைக் காட்டுகிறது. அதோடு அவர்களின் உளவியலையும் வாசகர் அறிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கிறது.




கண்ணாடி பாத்திரத்தைக் கையாள்வது போல மாமியார் மருமகள் உறவு அமையவேண்டும். கைதவறி போட்டால் உடைந்துவிடும். விரிசல்கூட விழாம பார்த்துக் கொண்டால் தான் அதில் குடும்பம் என்னும் பூங்கொத்தை அடுக்க முடியும். இப்படி வீட்டிற்கு வரும் மருமகள் அமையவேண்டும். மருமகள்களும் மாமியார் வயதானவர்கள், கணவரையும் மற்ற குழந்தைகளையும் வளர்த்தவர்கள், முதுமைபடியில் ஏறத் தொடங்கி உள்ள அவருக்குத் தோள்கொடுத்து பிணியும் மூப்பும் அடையும் காலத்தில் அரவணைத்துச் செல்ல எண்ண வேண்டும். இப்படி ஒரு பெண் நல்ல மருமகளாக இருக்க வேண்டும் எனச் சமுதாயம் எதிர்பார்க்கிறது. மணம் புரிந்து கணவன் இல்லம் ஏகும் பெண், மனைவி, தாய், அண்ணி, ஓரகத்தி, பாட்டி, மாமி எனப் பல படிநிலைகளைக் கடந்து வாழ்கிறாள். இத்தகு பெண்கள் எப்படியெல்லாம் இருக்கிறார்கள் எனக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**‘பிறந்தகம் விட்டவள் / பிரியமாய் வருபவள்**
**புகுந்த வீட்டிலே புதுமைப் படைப்பவள்**
**மண்ணில் மகவை / மலரச் செய்பவள்**

**மனதால் மலரின் இதழை ஒத்தவள்**
**பஞ்ச பூதத்தின் / பாரிய சக்தி**
**பாசம் நிறைந்த ஆழியின் அமைதி**
**உறக்கம் தொலைத்த / உதய சூரியன்**
**ஓய்வே இல்லா / உலகப் பிறப்பவள்**
**ஆற்றல் கொண்ட அற்புத தேவி**

**தேற்ற முடியா / திவ்விய சோதி**
**அச்சம் அகற்றினால் எரிக்கும் நெருப்பு**
**அத்து மீறிடும் / ஆண்களின் எதிர்ப்பு**
**காத்திரம் தெரிந்தவள் / சகலமும் புரிவாள்**
**மூத்த பொய்மைகள் / முடித்தும் வைப்பாள்**
**காத்து மனிதம் / ஏற்றியே விடுவாள்**
**கவலைகள் தாங்கி கடனாய்ச் சுமப்பாள்**

**நிமிர்ந்த நடையில் / நேர்மை விழியில்**
**திமிரைக் காட்டி / திகைக்கச் செய்வாள்**
**உலக வாழ்வில் / நுட்பம் தேடி**
**ஓதும் பனுவல் / கற்றுத் தேர்வாள்**
**இருக்கும் வரைக்கும் / இவளைத் தெரியாது**
**இல்லை என்றால் / எதுவும் இயங்காது**
**காற்றாய் எங்கும் / கலந்து இருப்பாள்**
**நேற்றை நாளையாய் / நகர்த்திச் செல்வாள்**
**நாணம் அச்சம் / மடமை பயிர்ப்பு**
**ஞானம் ஆக்கி நல்லகம் காப்பாள்**
**புன்னகை மலர்ந்து**
**புரட்சிக் காட்டி தன்னகம் மறைத்து**
**பிரபஞ்சம் ஆவாள்’**

- புவனேஸ்வரி சண்முகநாதன், காற்புள்ளி மூன்றாம் இதழ், ப.43

எனப் பெண்ணைப் பிரபஞ்சம் படைக்கும் ஆற்றல் உள்ளவளாகக் கவிஞர் காட்டியுள்ளார். இதில் உண்மை இல்லாமலில்லை. குழந்தைகளைப் பெற்றெடுத்து தாயாகும் வாய்ப்பைப் பெண்கள் மட்டும் பெற்றுள்ளனர். இதனால் அவள் பிரபஞ்சமாக இருக்கிறாள் எனச் சொல்வதில் தவறில்லை.

தேன்மொழி, நோக்கு, கவிஞன், அக்னி, பொன்மடல், தூது, பூபாளம், புள்ளி, கவிதை,யாத்ரா, நிலம், இரண்டாவது பக்கம், இருப்பு, கவிதேசம், நடுகை, தவிர, வடம், ஓசை, அகசலனம், நீங்களும் எழுதலாம், கவிதய், மறுபாதி, கவிஞன், பேனா, வாசல், நவயுகம், க-வி-தை போன்ற கவிதை இதழ்கள் இலங்கைத் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு உரமாக இருந்துள்ளன. இந்த இதழ்கள் வெளியிட்டுள்ள பெண்பாற் கவிதைகளை இக்கட்டுரை ஓரளவு ஆராய்ந்துள்ளது. இக்கவிதைகள் யாவும் பெண்பாற் கவிஞர்களின் உள்ளங்களைக் காட்டுகின்றன.



kotti.thirumuruganadam@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# திருவாழ்க்கைப்பட்டாள்

**– த. ஜீவராஜ் –**

அதிகாலை வேளையில் ஆதினி குழுவினர் தங்கி இருந்த யாத்திரிகர் மடம் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. பொழுது புலரும் முன்னமே பாவநாசத் தீர்த்தத்தில் நீராடி விட்டு வந்திருந்த ஆதினியையும், கோதையையும் அலங்காரம் செய்யும் பணிகளில் அறிவாட்டிப் பாட்டியும், அபிராமியும் ஈடுபட்டிருந்தார்கள். இருகுழந்தைகளின் தாயாக கோதையின் தாய் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாலும் உதவிக்கு வந்திருந்த அபிராமியின் நண்பிகளான தேவரடியார்கள் ஒப்பனை செய்வதற்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். குறித்துக்கொடுத்த நேரம் நெருங்குவதை உணர்ந்து கொண்ட அறிவாட்டிப் பாட்டி அவர்களை அவசரப்படுத்தினாள். அறிவாட்டி பாட்டியுடன் ஆதினியும், ஒரு தேவரடியாரும் திருக்கோணேச்சரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர். அபிராமி, கோதையையும் அவள் தாயையும் மற்றைய தேவரடியாரையும் கூட்டிக்கொண்டு மகாவிஷ்ணுவின் ஆலயமான விண்ணகரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள். முன்னே நடந்து கொண்டிருந்த அறிவாட்டிப் பாட்டி செருமிக் கொண்டு கதைக்கத் தொடங்கினார். ஆதினிக்கு அருகாக நடந்து கொண்டிருந்த தேவரடியார் சந்தர்ப்பத்தைப் புரிந்து கொண்டு குருவிற்கும் சிஷ்யைக்கும் குறுக்கே நிற்காமல் சற்று முன்னே வேகமாக நடக்கலானாள்.

நம்ம ஊர் சாமிகளுக்கு படையல் வைக்கிறத பார்த்திருக்கிறாய்தானே? என்று, மலையை நோக்கி மூச்சு வாங்க ஏறிக் கொண்டிருந்த அறிவாட்டிப் பாட்டி ஆதினியிடம் கேட்டார்.

ஓம் பாட்டி. மறக்க முடியுமா? ஆடெல்லாம் கொண்டு வந்து பலி கொடுக்கிறது இன்னமும் ஞாபகத்தில இருக்கிறது, என்று உடல் சிலிர்த்தபடி உற்சாகமாகச் கூறினாள் ஆதினி.

ஆட்ட எப்படிக் கொண்டு வருவாங்க? என்று திரும்பிக் கேட்டாள் அறிவாட்டிப் பாட்டி.

குளிப்பாட்டி, பூமாலை எல்லாம் போட்டு, திருநீறு, சந்தனம் பூசி, குங்குமம் வச்சுப் பார்க்கவே மங்களகரமாக இருக்கும் என்றாள் ஆதினி. ஆனா அதற்குப் பிறகு அந்த ஆட்டை, பாரம் கூடிய கத்தியால பூசாரி வெட்டுறதை நான் ஒருநாளும் பாக்கல பாட்டி என்றாள் ஆதினி. அவள் கண்களின் ஓரத்தில் மெல்லிய கண்ணீர்த் துளிகள் அரும்பி இருந்தன.

வயது தந்த அயர்ச்சியால் சற்று நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட அறிவாட்டிப் பாட்டி பெரியதொரு பெரு மூச்சை விட்டாள். நாங்களும் அப்படித்தான் கோயிலுக்கு நேந்து விட்டதால கடவுளாக மாறிவிடமாட்டம் என்றாள் எதிரில் தெரிந்த கோபுரத்தைப் பார்த்தபடி.

புரியுது பாட்டி என்று கூறியபடி அறிவாட்டிப் பாட்டியின் முகத்தில் தோன்றி மறையும் எண்ணங்களின் பிரதிபலிப்புக்களைப் புரிந்துகொள்ள முயற்சித்தாள் ஆதினி. அது அத்தனை சுலபமானதாக இருக்கவில்லை.

கோபுரத்துக்குக் கீழ ஆடினாலும் நாம குடிசையில இருந்து வந்தத மறந்திடாத. அதுமட்டுமில்ல தலைக்கோலி விருது கிடைச்சாலும் அது நம்மட கலைக்கு கிடைச்ச விருதே ஒழிய நம்ம தலைக்கு கிடைச்சதில்லை என்றாள் அறிவாட்டிப் பாட்டி. காட்டுல பயமில்லாம வாழ்ந்திடலாம். மனிசருக்கு நடுவில இருக்கக்குள்ளதான் உசுரக் கையில பிடிச்சுக் கொண்டு விழிப்பா இருக்கணும் என்று நிறைய விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தாள் அறிவாட்டிப் பாட்டி. இதெல்லாம் நான் உனக்குத் திரும்பத் திரும்பச் சொன்னதுதான். இருந்தாலும், இப்பையும் சொல்லணும் போல இருக்கிறது என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

சிறுவயதில் மாடுகளோடும் மற்றைய கால்நடைகளோடும் காடுகளிலும், மேய்ச்சல் நிலங்களிலும் வாழப்பழகிய ஆதினிக்கு மனிதரோடு வாழ்வதில் உள்ள சிக்கல்களை அவள் பட்ட அனுபவங்கள் வாயிலாக அறிவாட்டிப் பாட்டி பலமுறை சொல்லி இருக்கிறாள். இந்தப் புதிய மண்ணில் மனிதக் கூட்டங்களுக்கு நடுவில் தங்கள் இருவரையும் தனியாக விட்டுப் போவதற்கு அறிவாட்டிப் பாட்டிக்கு அச்சமாக இருக்கிறது என்பதை அவரின் பேச்சின் தொடர்ச்சியில் இருந்து ஆதினி புரிந்து கொண்டாள்.

உண்மையில் கந்தளாயில் இருந்து புறப்படும்போது ஆதினிக்கு இருந்த பயத்தின் பெரும் பாகத்தை அவள் கடந்து வந்த நாட்களில் அனுபவித்த கஷ்டங்கள் விலக்கி விட்டிருந்தது. இனி என்ன வந்தாலும் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும் என்ற மனதைரியத்தை அது தந்திருந்தது. தான் அதிகம் நேசிக்கும் அறிவாட்டிப் பாட்டியைப் பிரியவேண்டி வருமே என்ற பயம்தான் இப்போது அவள் மனது முழுவதையும் ஆக்கிரமித்து இருந்தது.

மீண்டும் மலை ஏறுவதற்குத் தயாரான அறிவாட்டிப் பாட்டி



மனதுக்குள் என்ன நினைத்தாளோ தெரியாது திரும்பி ஆதி
னியை உற்றுப் பார்த்த படி 'நம்மள நாம சாமிக்கு மட்டும்
தான் அர்ப்பணிச்சிருக்கம் மனுசருக்கு இல்லை' என்றாள்.
அவள் குரலில் உறுதியுடன் கூடிய கண்டிப்பு இருந்தது.
ஆமோதிப்பது போல தலையாட்டினாள் ஆதினி. மாரிகால
முகில் போல மனவானை இருளாக்கிக்கொண்டிருந்தது, ஆதி
னிக்கு மனிதர்கள் மேல் இருந்த பயம்.

சாமிக்கு வெட்டிற இறைச்சிதானே நாம சாப்பிட்டா என்ன
என்று வசதி படைச்சவங்க நினைப்பாங்க அதுதான் சொன்ன
னான். பயப்படாத அபிராமி உங்க இருவருக்கும் காவலாக
எப்பொழுதும் இருப்பாள் என்று ஆறுதல் கூறினாள் அறிவாட்
டிப் பாட்டி. அவர்கள் கதைத்துக் கொண்டே ஆலயத்தை வந்
தடைந்திருந்தார்கள். அறிவாட்டிப் பாட்டி ஆலய பணியாளர்
களும், பூசகரும் சொல்கின்ற விடையங்களை ஓடி ஓடிச் செய்
துகொண்டிருந்தார். அவருக்குத் துணையாக தேவரடியார்கள்
சிலர் உதவிக்கொண்டிருந்தனர். ஒரு தூணில் சாய்ந்தபடி
தூரத்தில் தெரியும் மிகப்பெரிய கோணைநாயகரின் மூல
இலிங்கத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டி
ருந்தாள் ஆதினி.

உரிய நேரம் வந்ததும் தேவரடியார்கள் சிலர் வந்து ஆதி
னியை அழைத்துச் சென்றார்கள். வெட்ட வெளியில் உருவம்
இல்லாத தெய்வங்களுக்கு மரத்தடியில் படையல் வைத்து
அருகில் இருந்து வழிபட்டவள் ஆதினி. முதல் முறையாக
வானுயர்ந்த கோபுரத்தோடு அமைந்திருக்கும் ஆலயத்தில்
பரிவார தெய்வங்களின் துணை இருக்க மூலஸ்தானத்தில்
சுயம்புவாக வீற்றிருக்கும் மூலவரைக் காண மண்டபங்க
ளைக் கடந்து சென்றுகொண்டிருந்தாள்.

மூலவருக்கு முன்னிலையில் ஆதினி வடக்கு நோக்கி அமர
வைக்கப்பட்டாள். பூக்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்த
மூலவரைச் சுற்றி ஆதினியின் கழுத்தில் அணிவிப்பதற்குரிய
திருக்காப்பு நாண் சுற்றப்பட்டு இருந்தது. பூசகர் மூலவருக்கு
ரிய பூசைகளை முறைப்படி ஆரம்பித்தார். ஆதினி கண்
களை இறுக மூடிக்கொண்டாள். அவளது தந்தை கேசவனின்
இறுதிக் கணங்களில் அவரது உடல் குளிர்ந்தது போல் தனது
உடலும் சம்பந்தமே இல்லாமல் குளிர்ந்து உறைவதாக
உணர்ந்தாள். பூசை முடிந்ததும் மணப்பெண்ணை கன்னிகா
தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அறிவாட்டிப் பாட்டி
நீர் வார்த்து ஆதினியை கோயிலுக்குத் தாரை வார்த்துக்கொ
டுத்தாள். பின்னர் பூசகர் மூலவரைச் சுற்றி இருந்த திருக்
காப்பு நாணைக் கழற்றி ஆதினியின் கழுத்தில் அணிவித்து
விட்டார். சுற்றி இருந்தவர்கள் மணமக்களின் மீது பூக்களைத்
தூவி வாழ்த்தினர்.

ஆயிரம் ஆண்டுகளாகச் சுயம்புவாக வீற்றிருக்கும் கோணை
நாயகரை மணம்முடித்த ஆதினியின் எண்ண ஓட்டங்களை
அவதானிப்பதற்கு அருகில் இருந்தவர்களுக்கு நேரம் இருக்க
வில்லை. ஒவ்வொருவருக்கும் அடுத்துச் செய்யவேண்டிய
தனித்தனியான கடமைகள் இருந்தன. அனைவரும் பரபரப்
பாக இயங்கிக்கொண்டிருந்தார்கள். இறுதியில் கண்மூடி
அமர்ந்திருந்த ஆதினியை எழுப்பி அறிவாட்டியின் கால்க
ளில் வீழ்ந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும்படி அருகில்
இருந்தவர்கள் கூறியபோது ஆதினி கோயில் அதிர வாய்விட்
டுக் கத்தினாள். அறிவாட்டி ஆதினியை
இறுக அணைத்துக்கொண்டாள்.

(தொடரும் ...)



jeevarajah@thaiveedu.com



# இருள் உலகுக்குள் நுழையும் செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்

–ச. சத்யதேவன்

பிரெஞ்சு இராணுவ தளபதி சார்லஸ் பார்பியர் போர்க்களத் தேவைக்காக உருவாக்கிய தகவல் பரிமாற்ற குறியீட்டு முறை, இருள் உலகில் வாழும் மனிதர்களின் வாழ்வில் ஒரு புதிய விடியலாக மாறியது.

நெப்போலியன் கால போர்களங்களில் இரவில் விளக்குகளையோ தீப்பந்தங்களையோ பயன்படுத்தாமல் அவசர தகவல் பரிமாற்றம் செய்வது இராணுவ வீரர்களின் பெரும் சவால்களில் ஒன்றாக இருந்தது. இரவில் உத்தரவுகளை வாசிக்க விளக்கை ஏற்றிய நேரங்களில், அது அவர்களின் இருப்பிடத்தை எதிரிகளுக்கு காட்டியது. இதனால் எதிரிகளின் தாக்குதலால் படையினருக்கு அதிகமான இழப்புகள் ஏற்பட்டன.

இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக, பிரெஞ்சு இராணுவ தளபதி சார்லஸ் பார்பியர் (1767-1841) ஒரு புதிய தகவல் பரிமாற்ற முறையை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். குறுகிய காலம் மட்டுமே இராணுவத்தில் தளபதியாக இருந்தாலும், இருட்டில் கண்ணின் உதவியில்லாமல், தொடுவதன் மூலம் தகவல்களைப் புரிந்துகொள்ளக்கூடிய தகவல் பரிமாற்ற முறையை அவர் கண்டறிந்தார்.

1809-ம் ஆண்டில் பார்பியர் தான் கண்டறிந்த முறையை ‘Princips of French Expeditive for writing as quickly as speaking’ என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். இந்த வெளியீட்டில், அவரது முறையை அக்காலத்தில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த sténographie, tachygraphie, okygraphie ஆகிய முறைகளுடன் ஒப்பிட்டு விவரித்தார். இந்த முறையின் சிறப்பம்சம், எந்தவிதமான வெளிச்சத்தின் தேவை இல்லாமல் தகவல்களை பரிமாறுதல். வெறும் காகிதம், மடிப்பு கோடு மற்றும் கத்தியால் செய்யப்படும் சிறிய வெட்டுகளால் தகவல் குறியீடுகள் உருவாக்கப்பட்டன. இந்த முறையில், ஒரு தாளை மடித்து ஒரு கோட்டை உருவாக்கி, கத்தியால் வெட்டுக்களைச் செய்வது அடிப்படையாக இருந்தது. வெட்டுக்களின் கோணம் மற்றும் கோட்டுடன் உள்ள தொடர்பு (மேலே அல்லது கீழே இருக்கிறதா, தொடுகிறதா அல்லது தொடாமல் இருக்கிறதா) ஒவ்வொரு எழுத்தையும் குறிக்குமாறு வடிவமைக்கப்பட்டது.

இந்த முறை, களத்தில் உள்ள இராணுவ வீரர்களுக்கு மட்டுமின்றி, எழுதும் கருவிகள் இல்லாத பயணிகளுக்கும் உதவியாக இருந்தது. இருப்பினும், இந்த முறை வழக்கமான எழுத்துப் பொருட்கள் இல்லாமல் தகவல்களைப் படிக்க உதவியாக இருந்தது. ஆயினும் இதை கண்ணால் மட்டுமே வாசிக்க முடிந்தது. இதனால், இந்த முறைமையானது இரண்டாம் கட்டத் தேவைகளுக்குப் பொருந்தாது என்பதுபோல காணப்பட்டது.

இந்த வெட்டுகள் - கோணங்கள் மற்றும் கோடுகளுடன் தொடர்புடையவை. ஒவ்வொரு வெட்டும், எழுத்துகளைக் குறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இந்த முறையை கண்ணால் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது. விரல்களால் உணர்ந்து வாசிக்க முடியவில்லை.

1815-ம் ஆண்டில், பார்பியர் தனது இரண்டாவது நூலை வெளியிட்டார். இந்த புத்தகம் அவரது 1809 வெளியீட்டில் விவரிக்கப்பட்ட முறையிலிருந்து முற்றிலும் விலகிச் சென்றதுடன், இது மிகவும் மாறுபட்ட பார்வையாளர்களையும் இலக்காகக் கொண்டிருந்தது. இந்த முறையில் அவர் நவீனமான உயர்த்தப்பட்ட புள்ளி முறையை பயன்படுத்தினார். இந்த முறையின் மூலம், பார்வைச் சிக்கல் உள்ளவர்களும் தகவல்களைத் தொடுவதன் மூலம் வாசிக்க முடிந்தது.

சார்லஸ் பார்பியர் தனது புள்ளி எழுத்து முறையை உருவாக்கிய போது, அது பார்வை மாற்றுத்திறனாளிகளிடம் நேரடியாக சோதிக்கப்படவில்லை. இருப்பினும், அவர் பின்னர் செயிண்ட்-சல்பைஸ் திருச்சபையில் உள்ள இளம் குழந்தைகளிடமும், பார்வை மாற்றுத்திறனாளி ஓய்வூதியதாரர்களுக்கான பாரிஸ் நல்வாழ்வு மையத்திலுள்ள சில கைதிகளிடமும் பரிசோதனை செய்தார். பார்பியர் கண்டுபிடித்த முறைமையில் கருவிகள் - காகிதத்தில் புள்ளிகளை உருவாக்கும் முனை மழுங்கிய துளைப்பான், துளைகளைப் போதிய இடைவெளியில் அமைக்க ஒரு அளவுகோல், புள்ளிகள் செங்குத்தாக வரிசையாக இருப்பதை உறுதிசெய்யும் நகரக்கூடிய வழிகாட்டி - அவர் உருவாக்கிய முறையின் முக்கிய அங்கங்களாக இருந்தன. ஆயினும் அக்காலத்தில் இவை இன்னும் நடைமுறையில் உருவாகாத ஊகங்களாகவே இருந்தன.

அப்போது, இந்த முறை பார்வை மாற்றுத்திறனாளிகளும் படிக்கவும் எழுதவும் உதவும் என்பதை நிரூபிக்க உரிய ஆதாரங்கள் இல்லை. இருப்பினும், அவர் தனது முறையை

பிரான்சின் ராயல் இன்ஸ்டிடியூட் ஃபார் ப்ளைண்ட் யுத் (Royal Institute for Blind Youth) பள்ளிக்கு அனுப்பினார். அப்பள்ளியின் இயக்குநராக இருந்த செபாஸ்டியன் கில்லியே (Sébastien Guillié), அங்கு பயன்படுத்தப்பட்டுவரும் உயர்த்தப்பட்ட cursive தட்டச்சு முறையின் காரணமாக பார்பியரின் முறையை நிராகரித்தார்.

1821-ல், இயக்குநராக அங்கு அலெக்ஸாண்ட்ரே-ரெனே பிக்னியர் (Dr. Alexandre-René Pignier) வந்து சேர்ந்தார். பார்பியரின் முறையை மீண்டும் பரிசீலனை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. பிக்னியர், பார்பியரின் முறையை கற்றுக்கொள்ள வேண்டும் என மாணவர்களுக்கு அனுமதி வழங்கினார். இந்த முறைமையைப் பயன்படுத்திய மாணவர்கள், முன்னதாக அவர்களால் சாத்தியமில்லாத செயல்களை, குறிப்புகளை எடுத்து படிப்பதற்கும் பயன்படுத்த முடியும் என்பதை உணர்ந்தனர்.

முந்தைய cursive முறையில் உருவான சிக்கல்களும் விலையுயர்ந்த கருவிகள் இல்லாமை காரணமாக, மாணவர்கள் பள்ளியை முடித்து வெளியேறிய பின்னர் வாசிக்கும், எழுதும் திறனை நீடித்துக் கொள்ள முடியாத நிலை உருவானது. இதைத் தீர்க்கும் முயற்சியாக பார்பியரின் முறை அவர்களின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

1809-ம் ஆண்டு பிறந்த லூயிஸ் பிரெயில், தனது சிறுவயதில் ஏற்பட்ட விபத்தால் பார்வையை இழந்தார். அவரது ஊக்கம் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவால் 1819-இல் பிரான்சின் ராயல் இன்ஸ்டிடியூட் ஃபார் ப்ளைண்ட் யுத் பள்ளியில் சேர்ந்தார். அங்கு இரண்டு ஆண்டுகள் உயர்த்தப்பட்ட cursive முறையில் கற்றுக்கொண்டிருந்தபோது, பார்பியரின் புள்ளி எழுத்து முறை அறிமுகமானது. இந்த முறையால் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அவரை ஆழமாக ஈர்த்தன.

பிரெயிலும் அவரது சக மாணவர்களும் பார்பியரின் முறையின் திறனையும் அதன் குறைபாடுகளையும் விவாதித்தனர். புள்ளி எழுத்து முறையின் வாசிப்பு மெதுவாக இருந்தாலும், அதில் உள்ள சாத்தியக்கூறுகள் அவர்களை ஆர்வமூட்டின. இந்த கலந்துரையாடலின் விளைவாக, 1824-ம் ஆண்டில், தனது 15-ம் வயதில், பிரெயில் ஆறு-புள்ளி முறையை கண்டறிந்து அதனை மேலும் மேம்படுத்தினார். 1829-இல் தனது முறையைப் பற்றிய முதல் நூலை வெளியிட்டார்.

1833-ம் ஆண்டுக்கு முன்னர் பார்பியர் பிரெயிலின் கண்டுபிடிப்பைப் பற்றி அறியவில்லை. அறிந்ததும் பிரெயிலின் நூலைக் கேட்டுப் பெற்றுக்கொண்டதுடன், அதை உடனடியாகப் படித்து, பிரெயிலுக்கு வாழ்த்துக் கடிதம் எழுதினார். அதைப் பிரெயிலின் ஆறு-புள்ளி முறையிலேயே எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொது மனிதருக்கு எட்ட முடியாத விதமாக மத மடாலயங்கள் மற்றும் பிரபுக்கள் வீடுகள் என ஒரு குறுகிய உலகில் மறைந்தும் மறைத்தும் இருந்த நிலையை கட்டன் பேர்க் தனது கண்டுபிடிப்பால் மாற்றினார். புத்தகங்களை அந்த குறுகிய உலகில் இருந்து பரந்த உலகுக்கு கொண்டுசெல்லும் வழியை அவர் திறந்து வைத்தார். இதேபோல், லூயி பிரெய்லின் பிரெயில் முறைமை, இருள் சூழ்ந்திருந்த பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு வாசிப்பிற்கும் இலக்கியத்திற்குமான புதிய வழியை உருவாக்கியது.

பிரெயிலின் முறைமையைப் பற்றிய ஹெலன் கெல்லர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, 'மனிதகுலம் கட்டன் பேர்கிற்கு எவ்வளவு கடன்பட்டிருக்கிறதோ, அதே அளவுக்கு லூயி பிரெய்லிற்கும் பார்வை மாற்றுத்திறனாளிவர்களாகிய நாம் கடன்பட்டிருக்கிறோம்,' எனக் கூறினார். இந்த கூற்றுகள், பிரெயிலின்



முறைமையின் முக்கியத்துவத்தை மற்றும் அதன் வழியாக பார்வை மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை வலியுறுத்துகின்றன.

தமிழ் பார்வை மாற்றுத்திறனாளிகளின் இருள் சூழ்ந்த உலகிற்குள் பிரெயில் முறைமையைக் கொண்டுவந்து அந்த உலகை ஒளியால் நிரப்புவதற்கு அரை நூற்றாண்டுக்கும் மேல் காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பல பத்து ஆண்டுகளின் பின் தான் தமிழ் பார்வையற்றோருக்கான தமிழ் பிரெயில் முறையின் பயன்பாடு சாத்தியமாகியது.

## தமிழில் விழிப்புலனற்றோர் பள்ளி மற்றும் தமிழ் பிரெய்ல்:

1888-ம் ஆண்டு, பாளையங்கோட்டையில் உள்ள சாரா டக்கர் கல்வி நிறுவனத்திற்கு (Sarah Tucker Institutions) பிச்சை எடுக்கும் நோக்கத்துடன் பார்வை மாற்றுத்திறனாளி சுப்பு என்ற சிறுவன் வந்தான். அப்போது அந்த நிறுவனத்தின் முதல்வராக இருந்த மிஸ் ஆஸ்க்வித் (Miss Askwith, C.M.S.), அவனைப் பார்த்து, 'இது ஒரு கல்வி நிறுவனம்; தொண்டு இல்லம் அல்ல' என்று தெரிவித்தார். ஆனால், சுப்பு சிரித்துக்கொண்டே, 'அப்படியாயின் எனக்கு கல்வி கொடுங்கள்' என துணிச்சலுடன் பதிலளித்தான்.

அந்த வார்த்தைகள் மிஸ் ஆஸ்க்வித்தின் மனதை ஆழமாகத் தட்டின. சிறுவனின் மாறாத தன்னம்பிக்கையும், கல்வி பெறும் உறுதியும் அவரை மிகவும் பாதித்தது. அவர் உடனடியாகவே சுப்புவுக்கு உதவ முடிவு செய்தார். இதை ஒரு சவாலாகக் கருதி, அவனை தனது வீட்டில் தங்கவைத்தார். இதன் மூலம், சுப்புவுக்கு கல்வி பயிலும் வாய்ப்பை ஏற்படுத்தி, அவன் வாழ்க்கையில் மாறுதல் கொண்டு வர முயன்றார்.

இந்த சம்பவத்தால், மெட்ராஸ் மாகாணத்தில் பார்வை மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கென தனித்துவமான கல்வி அமைப்பை உருவாக்கவேண்டிய அவசியம் தெளிவாக உருவானது. மிஸ் ஆஸ்க்வித் மற்றும் சாரா டக்கர் கல்வி நிறுவனத்தின் மற்ற முன்முயற்சியாளர்கள் இணைந்து, 1890-ம்

ஆண்டில் பார்வை மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான முதல் பள்ளியை ஆரம்பித்தனர். இந்தப் பள்ளி, பார்வை மாற்றுத்திறனாளி குழந்தைகளின் வாழ்க்கையைத் திருப்பிக் காட்டும் முக்கிய தளமாக மாறியது.

பள்ளியின் முதல் மாணவர் பள்ளியின் முதல் ஆசிரியரானார். முதல் ஆசிரியரின் மறைவுக்குப் பிறகு, 1892-ம் ஆண்டு மற்றொரு ஆசிரியர் நியமிக்கப்பட்டார். அந்த காலகட்டத்தில்,



பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி இரண்டாகப் பிரிக்கப்பட்டது: ஒன்று ஆண்களுக்கும் மற்றொன்று பெண்களுக்கும்.

இந்தப் பள்ளியில் சேர்க்கப்பட்ட முதல் பெண் மாணவி ஆவுடையம்மாள், ஆறு வாரங்களில் தமிழ் எழுத்துகளைப் படிக்கக் கற்றுக்கொண்டார். பள்ளியின் இரண்டாவது பெண் மாணவி மாடத்தி. இவ்விரு பள்ளிகளிலும் இரண்டு முக்கிய பிரிவுகள் இருந்தன. முதல் பிரிவு வாசிப்பு, எழுதுதல் மற்றும் எண்கணிதம் போன்ற பாடங்களை கற்பித்தது. இரண்டாவது தொழில்துறை பிரிவில் பருத்தி நெசவு, பிரம்பு வேலை, தூரிகை செய்தல் மற்றும் கூடை பின்னுதல் போன்ற தொழில்களைக் கற்றுக்கொடுத்தது.

வில்லியம் மூன் (William Moon) கண்டறிந்து அறிமுகப்படுத்திய 'Moon's Type Method' என்ற பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான எழுத்து முறையின் உதவியுடன், மிஸ் ஆஸ்க்வித் புதிய பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான தமிழ் எழுத்து முறையை உருவாக்கினார். அந்த முறையினால், மாணவர்கள் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ள முடிந்தது.

தமிழ் பிரெயிலின் உருவாக்கத்தில், மிஸ் ஆஸ்க்வித் தமிழ் மொழியின் ஒலியியல் மற்றும் அமைப்பு கூறுகளை ஆராய்ந்து புதிய வடிவமைப்பை உருவாக்கினார். தமிழ் உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் மற்றும் உயிர்மெய்யெழுத்துகளுக்கான தனித்துவமான புள்ளி வடிவங்களை அவர் வரையறுத்தார். இந்த முயற்சி தமிழ் பிரெயிலை சர்வதேச பிரெயில் சட்டங்களுடன் பொருந்தக்கூடியதாக மாற்றியது.

1895-ம் ஆண்டு, பாளையங்கோட்டை அருகே உள்ள பண்ணைவிளையில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான மற்றொரு பள்ளி தொடங்கப்பட்டது. அந்த பள்ளியின் ஆசிரியர்களாக, ஏழு படித்த பார்வை மாற்றுத்திறனாளிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் பாளையங்கோட்டை பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளியின் முன்னாள் மாணவர்கள் ஆவார்கள்.

1908-ம் ஆண்டில், பார்வையற்றோருக்கான 'தரிசனமனை' என்ற சொந்தக் கட்டடம் அமைக்க ஆரம்பிக்கப்பட்டது. 1909-ஆம் ஆண்டில் அந்தக் கட்டடம் முடிக்கப்பட்டது. இந்த முயற்சிகளுக்கு முழுமையான வழிகாட்டியாக மிஸ் ஆஸ்க்வித் இருந்தார்.

மிஸ் ஆஸ்க்வித்தின் தன்னலமற்ற முயற்சிகள் இந்தியா முழுவதும் பார்வை மாற்றுத் திறனாளிகளின் கல்வியையும், சுயமரியாதையையும் மேம்படுத்தியது. 1890-ம் ஆண்டு தொடங்கிய இந்த முயற்சி, இன்று பலருக்குக் கல்வி மற்றும் வாழ்வின் அடித்தளமாக விளங்குகிறது. பாளையங்கோட்டையில் செல்வி அன்னி ஜேன் ஆஸ்க்வித்தின் செயற்பாடுகள், ஆயிரக்கணக்கான பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும், புறக்கணிக்கப்பட்ட பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் சுயசார்புடைய வாழ்க்கையை வழங்கியது.

தமிழில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி தொடங்கப்பட்ட காலத்தில், பத்து ஆண்டுகள் முன்னோ அல்லது பின்னோ, செம்மொழி தமிழ் நூல்கள் அச்சு வாகனத்தின் மூலம் பரவலாகச் செல்லத் தொடங்கியிருந்தன. எனினும், பொது சனங்களுக்கு அவற்றை அறியவும் அணுகவும் தேவையான வாய்ப்புகளும் வசதிகளும் கிடைக்காமல் இருந்தது. தனித் தமிழ் இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் எழுச்சிக்கு பிறகே பொதுசனத்தில் பண்டைய தமிழ் செம்மொழி இலக்கியங்களின் மீதான ஆர்வம் உருவானது. மேலும், திராவிட இயக்கங்களின் ஆட்சியின் பின்தான் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பொதுமக்களிற்கு பரவலாக அறிமுகமானது.

தமிழ் பொதுமக்களின் நிலையே இவ்வாறு இருக்கையில், பார்வை மாற்றுத்திறனாளிகளின் நிலையை பற்றி சொல்லவே தேவையில்லை. வாசிப்பு என்னும் ஒளி தமிழ் பார்வை மாற்றுத்திறனாளிகளின் இருள் உலகிற்கு சென்று நூறு ஆண்டுகள் கடந்த பிறகும், தமிழர்களாகிய அவர்களுக்கு தமது புகழ்பெற்ற செம்மொழி தமிழ் இலக்கியங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் மிக மிக குறைவாகவே இருந்தன. பண்டைய தமிழ் இலக்கியங்களை அறியவும் கற்கவும் விரும்பிய பார்வை மாற்றுத்திறனாளிகள், பிறரின் உதவியை நாட வேண்டியதோடு, பெரும் சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. செம்மொழி தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை, பார்வை மாற்றுத்திறனாளிகளின் உலகம் பெரும்பாலும் இருளிலேயே மூழ்கியிருந்தது.

தமிழுக்கு செம்மொழி தகுதி வழங்கப்பட்டதும், அதன்

தொடர்ச்சியாக உருவாக்கப்பட்ட செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ்மொழியின் செழுமையையும் செம்மையையும் உலகறியச் செய்த மிகப்பெரிய முன்னேற்றமாகும். இந்த நிறுவனம், பார்வை மாற்றுத்திறனாளிகளின் உலகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, அந்நிலையை புதிய கட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது.

பார்வை மாற்றுத்திறனாளிகள் தமிழ் செம்மொழியின் புகழ் பெற்ற மற்றும் பாரம்பரிய செவ்வியல் இலக்கியங்களை ரசிக்கவும், தங்களின் கல்வி, அறிவு, மன அமைதியைக் கூர்மையாக்கவும் வழிவகுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், பிரெய்லி எழுத்து முறையில் செவ்வியல் நூல்களை வெளியிடும் திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம், பார்வை மாற்றுத்திறனாளிகள் பண்டைய தமிழ் இலக்கியங்களைத் தங்களது உணர்வுகளாலும் வாசிப்பதன் மூலம் திருப்தியடையவும், தங்களின் நுகர்வுலகத்தை மேலும் செழுமைப்படுத்தவும் வழி செய்யப்பட்டது.

இந்த பெருமைக்குரிய திட்டத்தின் கீழ் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 46 தமிழ் நூல்களை பிரெய்லி முறையில் வெளியிட்டுள்ளது. இதில், 41 நூல்கள் செம்மொழித் தமிழ் இலக்கியங்களாக திகழ்கின்றன. இந்தப் பெரும் சாதனை, பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு இழந்த இருள் உலகத்திலிருந்து வெளிச்சத்தை கொண்டு வந்த நம்பிக்கையின் விளக்காகும்.

சாதாரணமாகக் கிடைக்காத செம்மொழித் தமிழ் படைப்புகள் இப்போது பிரெய்லி எழுத்து முறையின் வாயிலாக பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் எட்டியதாக மாறியுள்ளன. இந்த முயற்சி, தமிழ் மொழியின் தகுநிலையை உலக அளவில் நிலைநிறுத்தும் உயர்ந்த செயல் எனப் போற்றப்படுகிறது.

### அந்நூல்களாவன:

தொல்காப்பியம், பெரும்பாணாற்றுப்படை, களவழிநாற்பது, கைந்நிலை, நற்றிணை, முல்லைப்பாட்டு, ஐந்திணைஐம்பது, சிலப்பதிகாரம், குறுந்தொகை, மதுரைக்காஞ்சி, ஐந்திணைஎழுபது, மணிமேகலை, ஐங்குறுநூறு, நெடுநல்வாடை, திணைமொழிஐம்பது, முத்தொள்ளாயிரம், பதிற்றுப்பத்து, குறிஞ்சிப் பாட்டு, திணைமாலை நூற்றைம்பது, இறையனார் அகப்பொருள், பரிபாடல், பட்டினப்பாலை, பழமொழி நானூறு, நன்னூல், கலித்தொகை, மலைபடுகடாம், சிறுபஞ்சமூலம், புறப்பொருள் வெண்பாமாலை, அகநானூறு, நாலடியார், திருக்குறள், தண்டியலங்காரம், புறநானூறு, நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி, சிறுபாணாற்றுப்படை, கார்நாற்பது, யாப்பருங்கலக்காரிகை, திருமுருகாற்றுப்படை, இன்னாநாற்பது, ஆசாரக்கோவை, நம்பியகப்பொருள், பொருநராற்றுப்படை, இனியவைநாற்பது, முதுமொழிக்காஞ்சி ஆகியனவாம்.

செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தின் பிரெயிலி வடிவில் வெளியிடப்பட்ட 46 நூல்களும் பார்வை மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டுக்காக உருவாக்கப்பட்டவை. இந்நூல்கள் எளிய உரையுடன், மூலப்பாடங்களை எளிய சந்தி அமைப்பிலும் கொண்டுள்ளன. முக்கியமாக, இந்த நூல்கள் அனைத்தும் அச்சிட்டு, பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என நிறுவனம் அறிவித்துள்ளது.

### இலவச பிரெயிலி நூல்கள் பெறுவதற்கான நடைமுறைகள்:

இந்தியாவிற்குள் வசிப்பவர்கள்: தமக்கு தேவையான நூலின் பெயர் மற்றும் விவரங்களை 7845874314 என்ற WhatsApp



எண்ணுக்கு அனுப்பலாம்.

அல்லது books@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல்களை அனுப்பவும்.

நூல்களை பெற விரும்புபவர்கள், அனுப்ப வேண்டிய முகவரியுடன், தாங்கள் பார்வை மாற்றுத்திறனாளி என்பதற்கான சான்றிதழை இணைக்க வேண்டும். சான்றிதழுடன் தகவல்களை அனுப்பினால், அஞ்சல் கட்டணமின்றி நூல்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

இந்தியாவிற்கு வெளியே வசிப்பவர்கள்: இந்நூல்களைப் பெறுவதற்கான நடைமுறைகள் பற்றி நேரடியாக தகவல் இல்லை. மேலதிக விபரங்களுக்கு கீழ்காணும் முகவரிகள் மூலம் தொடர்பு கொள்ளலாம்:

தொடர்பு விபரங்கள்:

முகவரி:
செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்,
செம்மொழிச் சாலை,
பெரும்பாக்கம்,
சென்னை - 600100.

மின்னஞ்சல்: office@cict.in

தொலைபேசி: +91-044-22540125

இந்தச் சேவையின் மூலம், செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் பார்வை மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் புதிய ஒளியாகும் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.



sathiyathevan.s@thaiveedu.com

# தலைமை அகம்



- குகன் சங்கரப்பிள்ளை

ஆக மூன்று இறாத்தல் எடையுள்ள ஒரு இறைச்சிக் கொத்து. இந்த உறுப்பின் தொழிற்பாட்டுக்கு இரண்டு விதமான கலங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன. இருபத்து நான்கு மணித்தியாலங்களும் சதா இயங்கிக்கொண்டிருக்கும் இந்த உறுப்பை இயக்குவதற்கு மிகக் குறைந்த அளவு சக்தி, அதாவது ஒரு மின் விளக்கினை (light bulb) இயக்கத் தேவையான சக்தி எவ்வளவோ, அவ்வளவு மட்டுமே போதுமானது. இந்த உறுப்பிலுள்ள கலங்களுக்கு உயிரூட்டும் இரத்த நாடி, நாளங்களை ஒன்றுடன் ஒன்று இணைத்து நீட்டிப் பார்த்தால் அவை ஒரு இலட்சம் (100,000) மைல் நீளத்தைத் தாண்டியதாக இருக்கும். பூமியில் பிறந்து, வாழ்ந்து, மறைந்த அல்லது வாழ்ந்துகொண்டிருக்கும் வேறெந்த உயிரினங்களிலும் இது உருவாக வில்லை. சூரிய மண்டலத்திலுள்ள வேறெந்தக் கிரகங்களிலும் தோன்றவில்லை, ஏன் நமது சூரியமண்டலம் இருக்கும் பால்நட்சத்திர குடும்பத்தில் (Milkyway Galaxy) உள்ள கோடான கோடி சூரியன்களை சுற்றி உழலும் கிரகங்களில் கூட தோன்றியிருக்காமல் இருக்கலாம். இந்தக் கட்டுரையினை வாசிக்கும் அல்லது கேட்கும் நீங்கள் இதன் உரிமையாளர், இந்த உறுப்பு வேறொன்றுமில்லை மனித மூளைதான்.

நீங்கள் எப்போதாவது மனித மூளையை நேரடியாகப் பார்த்திருக்கிறீர்களா? அதனைத் தொட்டும் தடவியும் அதன் மேற்பரப்பை உணர்ந்திருக்கிறீர்களா? ஜெலியைப் போன்ற தன்மையையும், மேற்பரப்பு முழுவதும் வளைந்தும், நெளிந்தும், மேடும், பள்ளமுமாய் இருக்கும் இதைப் பார்க்கின்ற ஒவ்வொரு தடவையும் ஓர் அதிசயமான காட்சியைப் பார்ப்பது போல பிரமிப்பு எனக்கு ஏற்படுகின்றது. இந்த இறைச்சிக் கொத்திலிருந்துதான் உலகம் முழுவதும் பேசும் மொழிகள், தத்துவங்கள், அறிவியல், கணிதம், மதம், சட்டம், அரசியல், ஏன் கடவுள் கூட உருவாகின. எல்லையற்ற அளவு விரிந்திருக்கும் இந்தப் பிரபஞ்சத்தையும், விபரிக்கவே முடியாத அளவு சிறிதாக அணுவுக்குள் நாட்டியமாடும் சிறு துணிக்கைகளின் தன்மையையும் விளங்கிக் கொள்வதற்கு மனித மூளையைத் தவிர இந்த பூமியில் வேறொன்றும் இல்லை. ஏன் இந்தப் பிரபஞ்சத்தில் கூட வேறொன்றும் இல்லாமல் இருக்கலாம். எமது உணர்வுகள், நினைவுகள், கனவுகள் யாவும் எமது மூளையில் இருக்கும் பில்லியன் கணக்கான கலங்களில் நடைபெறும் மின்-இரசாயன (electro chemical) தாக்கங்களினால் இந்தக் கலங்களுக்கு இடையே உருவாகும் பிணைப்புகளில் இருந்துதான் உருவாகின்றன. அது மட்டுமல்ல நாம் யார் என்பதனையும் இந்த இணைப்புகள் தான் தீர்மானிக்கின்றன. இந்த மின்-இரசாயன இணைப்புத் தாக்கங்கள் நிற்கும் போது மனிதரின் வாழ்வும் நின்றுவிடுகிறது. பக்கவாதம், தலையில் ஏற்படும் காயங்கள், மூளை சார்ந்த நோய்கள் மற்றும் குடி, போதைப் பொருள் பாவனை போன்ற ஏதாவது ஒன்றினால் இந்த பிணைப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் எமது அடையாளத்தினையே மாற்றிவிடும். உடம்பிலுள்ள வேறு எந்த உறுப்புகளையும் போலல்லாது மூளையின் ஒரு சிறு பகுதியில் ஏற்படும் பாதிப்பு ஆளை முழுவதுமாக மாற்றிவிடும்.

மூளை என்ற உறுப்பின் முக்கியத்துவத்தினை மனிதர்கள் அறிந்துகொள்வதற்கு நீண்ட நாட்கள் எடுத்துக்கொண்டது. நீண்ட காலமாக மனிதர்கள் அவர்களது மனம், உணர்வுகள் யாவும் அவர்களது இதயத்தில்தான் குடிகொண்டிருக்கின்றன என நம்பியிருந்தார்கள். பண்டைய எகிப்திய சாம்ராஜ்யத்தின் மன்னர்கள் இறந்தபோது அவர்களின் உடல்களைப் பதப்படுத்திப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டனர். இவை இன்றும் எகிப்தில் இருக்கும் பிரமிடுகளுக்கு அடியின் நடுவே மம்மிகளாக (mummies) பாதுகாக்கப்படுகின்றன. அன்று வாழ்ந்த மனிதர்கள் இறந்துபோன உடல்களில் (மம்மிகளின்) இதயங்களைப் பலவகையான மூலிகைகள், திரவியங்கள் உபயோகித்து பாதுகாக்க முற்சித்திருக்கின்றனர், ஆனால் மூளைகளை பாதுகாக்க எந்த முயற்சியும் இல்லை. மாறாக, வெறும் மண்டையோடு மட்டுமே எல்லா மம்மிகளிலும் காணப்படுகிறது. கிரேக்க பேரறிஞர் அரிஸ்டோட்டல் மூளை இதயத்தில் இருக்கும் ஆத்மாவை குளிர்விக்கும் ஓர் உறுப்பு என நம்பினார். இன்றும் எமது உணர்வுகளின் இருப்பிடம் இதயம் என்றுதான் நாம் பேசிக்கொள்கிறோம். நாம் உணர்ச்சிவசப்பட்டு காதலி அல்லது காதலனிடம் மனத்தைப் பறிகொடுக்கும் போது இதயத்தையே அடையாளமாக்க கவிதையில் பேசுகிறோம்.

நவீன மனிதர்களின் மூளை, மிக நீண்டகாலப் பரிணாம மாற்றங்களினால் செதுக்கி எடுக்கப்பட்ட ஓர் அற்புதமான உறுப்பு. ஏறக்குறைய 540 மில்லியன் (540,000,000) வருடங்க

ளாக பரிணாமம் அடைந்து வந்திருக்கும் ஓர் அங்கம். கிட்டத் தட்ட 600 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த உயிரினங்களின் உடலமைப்பில் முதன்முதலில் ஒரு பாரிய பரிணாம மாற்றம் நிகழ்கிறது. உயிரினங்களின் உடல மைப்பு, இருபக்க சமச்சீர் (bilateral symmetry) உடைய உட லமைப்பாகப் பரிணாமம் அடைகின்றன. அதாவது உடல மைப்பில் மேல், கீழ், வலம், இடம், முன்புறம், பின்புறம் என இலகுவாகப் பிரித்து அடையாளம் காணக்கூடியவாறு மாற் றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றத்தின் விளைவாக, பூமி யின் வரலாற்றில் மிக குறுகிய காலத்தில், பாரிய எண்ணிக் கையிலான விலங்கினங்கள், இலட்சக்கணக்கான வகைக ளில் தோன்றின. இவ்வாறு உயிரினங்கள் உருவான காலகட் டத்தை Cambrian explosion என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு முன்னர் வாழ்ந்த உயிரினங்கள் jellyfish போல வட்டமாகவோ, நீள்வட்டமாகவோ, உருண்டை யாகவோ, குழாய் வடிவத்திலோ எதோ ஒரு வடிவத்தில் அதா வது இடம், வலம், முன், பின் என பிரித்துப் பார்க்க முடியாத வகையிலான உடலமைப்பைக் கொண்டிருந்தன. இந்த உயி ரினங்கள் அவற்றின் உடலுக்கு வெளியே இருக்கும் சூழலை அறிந்து கொள்வதற்காக உணர்வுக் கலங்களை (Sensory cells) ஒரு வலைப்பின்னலாக அவற்றின் வெளித் தோலுக்கு அடியில் அமைத்திருந்தன. இவ்வாறான உணர்வுக் கலங்கள் இந்த உயிரினத்துக்கு வெளியுலகில் இருந்து எதாவது ஆபத்து வருகிறதா, அல்லது உணவு கிடைக்குமா என்கின்ற அடிப்படையில் தகவல்களைத் திரட்டி இந்த உயிரினகங்க ளின் நகர்வுகளைத் தீர்மானித்திருக்கின்றன.

உயிரினங்கள் இருபக்க சமச்சீர் (bilateral symmetry) உடைய உடலமைப்பாகப் பரிணாமம் அடைந்தபோது உணர் வுக் கலங்கள் பலவிதமான உணர்வுகளை உணரும் வண் ணம் பரிணாமம் அடைந்து அதாவது ஒளி, ஒலி, மணம், சுவை போல வேறு வேறு உணர்வுகளைப் பகுத்து அறிவதற்காக வேறு வேறு கலங்களை உடைய உறுப்புகளாகப் பரிணாமம் அடைந்தன. அது மட்டுமல்லாமல் இவ்வாறு பரிணாமம் அடைந்த உறுப்புகள் யாவற்றையும் இருபக்க சமச்சீர் (bilateral symmetry) உடைய உயிரினங்கள் அவற்றின் உடலின் முன்புறத்தில் அமைத்து உடலமைப்பை உருவாக்கிக் கொண்டன. இவ்வாறு உணரும் கலங்களில் சில புலன்களா கப் பரிணாமம் அடைந்தன, இன்னும் சில புலன்களில் இருந் துவரும் தகவல்களை ஆராயவென கும்பலாக ஒன்றுகுவிந்து மூளை என்ற உறுப்பாகப் பரிணாமம் அடைந்தன. ஆரம்பத் தில் இவ்வாறு பரிணாமம் அடைந்த உயிரினங்களில் உள்ள மூளை மிகக் குறுகிய அளவிலேயே அதாவது நூற்றுக்கணக் கான எணிக்கையிலேயே மூளைக் கலங்களை கொண்டிருந் தன. இந்த மூளை கலங்களுக்கும் நவீன மனிதர்களின் மூளையில் இருக்கும் கலங்களுக்கும் இடையில் எந்த வேறு பாடுகளுமில்லை.

இருபக்க சமச்சீர் (bilateral symmetry) உடைய உடல மைப்பை உடைய விலங்கினங்களில் வெளியுலகை அறியும் உறுப்புக்களான புலன்கள் உடலின் முன்புறத்திலும், உடலை இயக்கும் கலங்கள் உடலின் வேறு ஒரு இடத்திலும் அமைந்திருக்கும் போது வெளியுலகில் இருந்து வரும் தக வல்களை உடலை இயக்கும் உறுப்புகளுக்கு உடனடியாக அனுப்புவதில் சிக்கல் இருக்கிறது. இந்தச் சிக்கலுக்குத் தீர் வாக இந்த உயிரினங்களில் பரிணாம மாற்றங்களினால் இரண்டு உத்திகள் உருவாக்கப்பட்டன. முதலாவதாக மூளைக் கலங்களில் இருந்து ஒரு பகுதி நீண்டு வளர்ந்து (Axon) உடலினை இயக்கும் பகுதிகளுடன் இணைந்து கொண்டன. இவைதான் எமது உடலினில் இருக்கும் நரம்பு கள். இரண்டாவதாக தகவல்களை மின் சக்தி (electrical energy) மூலம் மிக விரைவாகக் கடத்தும் வல்லமை பெற்றன. உணர்வுக் கலங்கள், இவற்றின் நீட்சியான நரம்புத் தொகுதி, இந்த நரம்புகள் மூலம் வேகமாகத் தகவல்களைக் கடத்தும் பொறிமுறையினை பெற்றிருந்த உயிரினங்கள், மிக வெற்றி கரமாகப் பூமியில் வாழ்வை தொடர்ந்தன. நரம்புத் தொகுதி கள் புலன்களில் இருந்து மட்டுமல்லாமல் உயிரினங்களின் உடலின் உள்ளார்ந்த நிலைமைகளையும் (internal states) மூளையின் கலங்களுக்கு அறியப்படுத்தின. உடலின் உட் தேவைகளுக்காக உடலுக்கு வெளியில் இருப்பவற்றை உணர்வதும் (sensing), உணர்ந்தவற்றின் அடிப்படையில் நகர்தலும் (reacting) படிப்படியாக பரிணாமம் அடைந்து உட லுக்கு வெளியே இருப்பவற்றை அறிதலெனும் (knowing) நிலை உருவாகிறது. இதற்கு நினைவு (memory) முக்கியமா கிறது. நினைவுகள் மூலம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி அறிதல் (associative learning) எனும் அறிவுமுறை பரிணா மம் அடைகிறது. அதாவது தொடர்புபடுத்திக் கற்றுக்கொள் ளல் (associative learning) என்பதற்குச் சிந்திப்பது அவசிய மாகிறது. இவ்வாறாக மூளை என்ற உறுப்பின் தொழிற்பாடு வெளியில் இருப்பவற்றை உணர்வது என்ற நிலையினில் இருந்து சிந்திப்பது என்ற நிலைக்குப் படிப்படியாகப் பரி ணாம மாற்றங்களுக்கு உட்படுகிறது.

இன்று பூமியின் மணற்பரப்பில் வாழும் நவீன மனிதர்களின் நீண்ட பரிணாம மாற்ற வரலாற்றைப் பரிணாமவியல் உயிரி யல் ஆய்வாளர்கள் (evolutionary biologist) பின்வருமாறு விபரிக்கின்றனர். ‘முதலில் மீன்கள் (fish), இவற்றிலிருந்து நில-நீர் வாழ்வினங்கள் (Amphibians) பரிணாமம் அடைந் தன. அவற்றில் இருந்து ஊர்வன (reptiles) பரிணாமம் அடை கின்றன. ஊர்வனவில் இருந்து பாலூட்டி (mammals) விலங்கி னங்கள் உருவாகின்றன. இந்த விலங்கினங்களின் ஓர் அங்க மாக உயர் விலங்கினங்கள் (primates) தோன்றுகின்றன. இவ் வாறு தோன்றிய உயர் விலங்கினங்களில் இருந்து நவீன மனி தர் பரிணாமம் அடைந்திருக்கின்றனர். இந்த உயிரினங்களின் உடலமைப்பின் பரிணாம மாற்றங்களுக்கேற்ப அவற்றின் மூளையும் பல பரிணாம மாற்றங்களுக்கு உட்பட்டு இருக்கி றது. மனித மூளையில் இருக்கும் பல பகுதிகள், மீன்கள், ஊர் வன மற்றும் பாலூட்டி விலங்கினங்களில் இருக்கும் மூளை யின் பல பகுதிகளுடன் அமைப்பு ரீதியாகவும் செயற்பாடு ரீதியாகவும் ஒத்திருக்கின்றன. மனிதக் குரங்குகளின் (chimpanzee) மூளைக்கும், நவீன மனிதர்களின் மூளைக்கும் அமைப்பு முறையில் வேறுபாடுகள் மிக மிக குறைவு. ஏன் வேறுபாடுகள் இல்லையென்றே கூறலாம். அமைப்பு முறை யினில் வேறுபாடுகள் இல்லையெனினும் மனித மூளையின் பல பகுதிகள் பரிணாம மாற்றங்கள் காரணமாக மிகப் பாரிய ளவில் விரிவாக்கம் (scaled up) அடைந்திருக்கின்றன.

மனித மூளை கோடிக்கணக்கான கலங்களைக் கொண்டுள்

ளது. அதுமட்டுமல்லாமல் மிகச் சிக்கலானதும் இறுக்கமானது மான தொடர்புகளை இந்த கலங்களுக்கு இடையே கச்சித மாக (compact) இணைத்திருக்கும் ஒரு சிக்கலான உறுப்பு. மூளையில் உள்ளவை விசேடமான கலங்கள், இவற்றை நியூ ரான் (neuron) என்றழைப்பார்கள். இந்த கலங்களுக்கு உறுது ணையாக இருப்பவை கிளியேல் (Glial) எனும் கலங்கள். மூளையின் கட்டமைப்பு இந்த இரண்டுவிதமான கலங்களினா லேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இவைதவிர மூளையில் microglia எனும் விசேட நோய் எதிர்ப்பு கலங்களும் மூளை யினை நோய்களில் இருந்து பாதுகாப்பதற்கு இருக்கின்றன. கிளியேல் கலங்கள் வெள்ளை நிறமானவை, இதனால் இது white matter என்றழைக்கப்படுகிறது. நியூரோன் கலங்கள் சாம்பல் நிறமானவை இவற்றை gray matter என்பார்கள். மனித மூளையில் மட்டும் எண்பத்தியாறு பில்லியனுக்கும்




(8600,000,000,000) அதிகமான நியூரோன் கலங்கள் இருக்கின் றன. இவை ஒன்றுடன் ஒன்று, ஒன்றுடன் பல, பலவுடன் பல என இணைப்பில் இருக்கின்றன. மனித மூளையில் இந்த இணைப்புகளின் எண்ணிக்கை பல ட்ரில்லியன்களுக்கும் (Trillions - 100,000,000,000,000) மேலானவை. மூளைக் கலங் களுக்கு அதாவது நியூரோன்களுக்கு இடைப்பட்ட இணைப்பை சினபிஸ்ஸஸ் (synapses) என்பார்கள். இந்த இணைப்புகளுக்கு இடையில் ஏற்படும் உறவுகளும், பிரிவுக ளும்தான் வாழ்வெனும் அற்புத நாடகம்.

மூளையின் தொழிற்பாட்டை விளங்கிக்கொள்வதற்காக நரம் பியல் வல்லுநர்கள் மூளையினைப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றிற்குப் பலவிதமான பெயர்களும் இட்டு விபரிக் கின்றனர். மூளையின் ஒரு குறிப்பிட்ட தொழிற்பாடு என்பது நரம்பியல் வல்லுநர்கள் பிரித்து இருப்பது போல ஒரு குறிப் பிட்ட பகுதியின் செயற்பாடுகளில் மட்டும் முழுமையாகத் தங் கியிருக்கவில்லை மாறாக மூளையின் பல பகுதிகளில் இருக் கும் நியூரோன்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலம் நடைபெறுகிறது. இங்கு நாம் புரிந்துகொள்வதற்காக மட்டும் மேலோட்டமாக இந்தப் பகுதிகளை நான்கு பகுதிகளாக விப ரிக்கிறேன்.

- முதலாவது, மூளைத்தண்டு - (Brainstem)
- இரண்டாவது, உணர்வு செயலி அல்லது உணர்வு மூளை - (Limbic system)
- மூன்றாவது, சிறு மூளை அல்லது உடலுறுப்புகளை இயக் கும் மூளை - (Cerebellum)
- நான்காவது, பெருமூளை அல்லது சிந்திக்கும் மூளை - (Cerebrum)

## மூளைத்தண்டு – (Brainstem):

இதனைப் பார்த்தால் ஒரு தாவரத்தின் ஒரு பகுதிபோல அதா வது சிறு தண்டு போல தோற்றமளிக்கும். பெருமூளை (Cere- brum) போல மூளைக்கே உரித்தான கவர்ச்சியான பல வளை வுகள் நெளிவுகள் இல்லாத ஒரு பகுதி. இதன் தோற்றத்தை வைத்து மூளைத்தண்டின் தொழிற்பாடுகளைக் குறைத்து மதிப்பிட்டுவிடாதீர்கள். மூளைத்தண்டுதான் மூளையும் உட லின் ஏனைய பாகங்களில் இருந்து வரும் நரம்புகளும் சந்திக் கும் இடம். கிட்டத்தட்ட மத்திய போக்குவரத்து நிலையம் போல. இந்தப் பகுதியினாலேயே மூளையில் இருந்தும் உட லின் மற்ற பகுதிகளில் இருந்தும் தகவல்களுக்கான சமிக் ஞைகள் பரிமாறப்படுகின்றன. நீங்கள் உங்கள் பல் தீட்டுவ தற்காகவோ அல்லது வீணைக் கம்பிகளை மீட்டுவதற்கா கவோ உங்கள் கைகளை எவ்வாறு பயன்படுத்துவதென்பதற் கான தகவல்கள் யாவும் மூளைத்தண்டினூடாகவே பரிமாறப் படுகின்றன. மூளைத்தண்டின் மேல் பகுதியினை தலமஸ் (thalamus) என்பார்கள். தலமஸ் ஒரு திசைவி (router) போலச் செயற்படுகிறது. அதாவது புலன்களில் இருந்தும் உடலின் பாகங்களில் இருந்தும் வரும் தகவல்களை அவை மூளையின் எந்த பகுதிக்குச் செல்லவேண்டும் என்பதனைத் தீர்மானித்து அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கிறது. அது மட்டுமல்லாமல் தலமஸ் தன்னிச்சையாக (automatic) இயங்குகிறது. உதாரணமாக நாம் தெரியாமல் ஒரு ஆணி யின் மேல் கால் வைத்துவிட்டோம் என்றால் உடனடியாகவே காலை அதில் இருந்து எடுக்கிறோம். அய்யோ! என்று கத்து கிறோம். நோவினால் முகம் சுளிக்கிறோம். இப்படி சகல நடவ டிக்கைகளையும் செயற்படுத்துவதற்கான தகவல்களை நரம் புகளூடாக மின்னல் வேகத்தில் அதாவது ஒரு செக்கனுக்கு 100 மீட்டர் வேகத்தில் தலமஸ் கடத்துகிறது. தலமஸ் நாம் உணர்வதற்கு முன்னரே ஆணி காலில் குத்தியதற்கான எதிர் வினையினை ஆற்றுகிறது (automatic reaction).

தலமஸ் எமது சுவாசம், இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு, பசி என பலவற்றை அவதானிக்கின்ற ஒரு பகுதியாக மூளை யில் செயற்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தலமஸ், மூளைத் தண்டின் மற்றப் பாகங்களுடன் இணைந்து எமது உடலில் உள்ள பல உறுப்புகளின் செயற்பாடுகளை சுயாதீனமாக இயக்குகிறது. உமிழ்நீர் சுரப்பது, கண்ணீர் சிந்துவது, இரு மல், தும்மல், வாந்தி இப்படிப் பல வகையான சுயாதீனமான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. நாம் எப்போது சுவாசிக் கவேண்டும் என்பதனை சிந்திக்கவே தேவையில்லை, அதே

போல ஒரு மோசமாகப் பழுதான உணவை நாம் சாப்பிட்டுவி டுவோமாயின் மூளைத்தண்டு உடனடியாக, நாம் உணர்வ தற்கு முன்னரே வெளியேற்றிவிடும். எமது தூக்கம் கூட மூளைத்தண்டினூடாகதான் கட்டுபடுத்தப்படுகிறது. நல்ல வேளை மூளைத்தண்டு என்ற ஒன்றிருப்பதனால் உடலின் இயங்கியலுக்கான அத்தியாவசியமான தொழிற்பாடுகள் யாவும் சுயாதீனமாக நடைபெறுகின்றன. கற்பனை செய்துபா ருங்கள் நமது சுவாசம் சுயமாக (automatic) நடைபெறாத ஒரு நிகழ்வாக இருக்குமாயின் அதாவது நாம் சிந்தித்துச் செயற்படுத்தும் ஒரு நிகழ்வாக இருக்கும் பட்சத்தில் வாழ்வு எவ்வளவு சிக்கலாக மாறி இருந்திருக்கும் என்பதனை? நீங் கள் சில வேளைகளில் ஒரு நோயாளி, 'Vegetative state' எனும் நிலையினில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டிருப்பீர் கள். இவ்வகையான நோயாளிகளின் மூளைத்தண்டில் எந்த விதமான பாதிப்புகளும் இல்லாமல் இருக்கும், அதே வேளை மூளையின் மற்றப் பகுதிகளில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருக் கும். இதுவே இந்த நோயாளிகளை இந்த நிலைக்கு உட்ப டுத்தி இருக்கிறது. துரதிஷ்டவசமாக நூற்றுக்குத் தொண் ணூற்றென்பது சதவீத மான நோயாளிகள் இந்த நிலையினி லிருந்து மீள்வதில்லை.

## உணர்வு செயலி அல்லது உணர்வு மூளை Limbic system:

உயிரினங்களில் உணர்ச்சிகள் பரிணாமம் அடைந்ததற்கு முக்கிய காரணம் அவை ஆபத்தான சூழ்நிலையில் இருந்து தப்பிப் பிழைப்பதற்கே. மற்ற உயிரினங்களை விட மனித மனத்தில் எழும் உணர்ச்சிகள் இன்னுமொரு படி மேலும் விருத்தியடைந்திருக்கின்றன. இவை சமூகம் சார்ந்த உணர்ச் சிகள் (social emotions) உதாரணமாக: பொறாமை, அனுதா பம், நீதி நியாயமான உணர்வு (sense of justice), குற்ற உணர்வு (guilt) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனால் மனித மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளுக்கு மூளையின் குறிப்பிட்ட ஒரு பகுதியே காரணம் என்று இலகுவாகக் குறிப் பிட முடியாது. இங்கே விபரித்திருப்பது மனித மனங்களில் உருவாகும் அடிப்படை உணர்வுகளைப் பற்றியதே. நாம் எத னைச் செய்வதாயினும் அதற்கு ஒரு தூண்டலாக எமது உணர்ச்சிகள் (emotions) அமைகின்றன. எமது மனத்திலெ ழும் ஆனந்தம், கோபம், கவலை, பயம், பரவசம் போன்ற சகல உணர்ச்சிகளையும் தூண்டுவது எமது உணர்வு மூளைப் பகுதியே. இந்த உணர்ச்சிகள் காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்களை இயக்கும் பகுதி தன்னியக்க நரம்பு மண்டலம் (the autonomic nervous system) என்றழைக்கப்ப டுகிறது. பல பிரிவுகளை உள்ளடக்கிய உணர்வு மூளை பகுதி (Limbic system), மூளைத்தண்டுக்கும் (Brainstem) சிந் திக்கும் மூளைக்கும் (Cerebrum) இடையே இருக்கிறது. தெரு வில் குரைக்கும் நாயினை விரட்டுவதா? அல்லது தவிர்த்து அடுத்த தெரு வழியே போவதா? என்று முடிவெடுப்பது தொடக்கம், கவர்ச்சிகரமான ஒருவரின் அழகினை இரசித்த படி வீதியில் நடந்து சென்று எதோ ஒன்றுடன் முட்டி மோது வது போன்றதான சகலவற்றுக்கும் இந்தப் பகுதிதான் கார ணம்.

உணர்வு மூளை, ஹைபோதலமஸ் (hypothalamus), ஹிப் போகம்பஸ் (hippocampus) மற்றும் அமிக்டிலா (amygdala) ஆகிய மூன்று முக்கியமான பகுதிகளை உள்ளடக்கி உள் ளது. புலன்களில் இருந்து வரும் தகவல்களில் மணங்களைத் தவிர மற்றவை யாவும் உணர்வு மூளை பகுதியில் இருக்கும் ஹைபோதலமஸ் (hypothalamus) எனும் பகுதியினூடாகவே மூளையின் மற்ற பகுதிகளுக்குச் சென்றடைகின்றன. புலன்க ளில் இருந்துவரும் தகவல்கள் எமது மனதுக்கு கிளர்ச்சி யினை ஊட்டுவனவாகவோ அல்லது பயமுறுத்துவனவா கவோ இருக்கலாம். எது எப்படியோ இந்தத் தகவல்கள் எமது மனதில் பலவிதமான உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன. இந்த உணர்ச்சிகள் எமது உடல்நிலையிலும் மாற்றத்தை ஏற் படுத்துகிறது. உதாரணமாக நாம் எதோ ஒன்றைப் பார்த்துப் பயந்து விடுவோமாயின் எமது இதயத்துடிப்பு அதிகரிப்பதிலி ருந்து உடல் நடுங்கும் வரை பல உடல் மாற்றங்கள் எமது கட் டுப்பாட்டை மீறி நடைபெறுகின்றன. இந்த மாற்றங்களை ஹைபோதலமஸ் (hypothalamus) பகுதியே நிகழ்த்துகிறது. இந்த மாற்றங்களை ஹைபோதலமஸ் தன்னியக்க நரம்பு மண்டலப் பகுதியினூடாகவும் (the autonomic nervous sys- tem) முளைப் பகுதியில் உள்ள நொதியங்களைச் சுரக்கச் செய்வதன் மூலமும் இயக்குகிறது. உடலில் ஏற்படும் உணர்ச் சிகளைக் கட்டுப்படுத்தும் உணர்வு மூலையில் இருக்கும் இன்னுமொரு பகுதி அமிக்டிலா (amygdala- கிரேக்க மொழி யினில் பாதாம் பருப்பை (almond) அமிக்டிலா என்றழைப் பார்கள்). இந்த பகுதி உருவத்தில் பாதாம் பருப்பைப் போலக் காட்சியளிப்பதால் இதனை அமிக்டிலா என அழைக் கின்றனர். ஹைபோதலமஸ் எமது மனதில் ஏற்படும் உணர்ச் சிகளினால் உடல் நிலையினை மாற்றுகின்றதெனின், அமிக் டிலா எமது உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் பகுதியாகச் செயற்படுகிறது. இதனால் அமிக்டிலாவினை எமது மனதில் ஏற்படும் உணர்ச்சிகளின் spark plug என்றழைப்பார்கள்.

புலன்களில் இருந்து வரும் தகவல்களினால் எதோ ஒருவகை உணர்ச்சிகளை எமது மனதில் தூண்டுவது மட்டுமே உணர்வு மூளையின் செயற்பாடு அல்ல. இவ்வாறாகத் தோன்றிய உணச்சிகள் எங்கே, எப்போது தோன்றியன என்பவற்றையும் நினைவில் வைத்துக்கொள்வதுகூட உணர்வு மூளையின் செயற்பாடாகும். நினைவில் வைத்துக்கொள்வதனை வழிந டத்தும் முக்கியமான பகுதி உணர்வு மூளையின் இன்னு மொரு பாகமாக இருக்கும் ஹிப்போகம்பஸ் (hippocampus). இந்த ஹிப்போகம்பஸ் என்ற சொல்லும் கிரேக்க மொழியிலி ருந்து வந்த ஒரு சொல்தான். இதற்கு கிரேக்க மொழியில் கடல்குதிரை என்று அர்த்தம். ஆக, ஒரு அங்குலம் அளவு இருக்கும் இந்தப் பகுதி மூளையின் இரண்டு பாகங்களிலும் அமைந்துள்ளது. கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிதென்பார் களே அதுபோல, ஹிப்போகம்பஸ் ஒரு அங்குலமான அள வாக இருந்தாலும் மூளையின் முக்கியமான ஒரு தொழிற் பாட்டை இது செய்கிறது. ஹிப்போகம்பஸ் இடம், காலம் சார்ந்த தகவல்களை மூளையில் பதிவு செய்கிறது. இடம், காலம் போன்றவற்றைப் பதிவு செய்யும் ஹிப்போகம்பஸ், இந் தத் தகவல்களை எமது மூளையில் இருக்கும் பெருமூளைப் (Cerebrum) பகுதியில் உள்ள கலங்களுடன் பகிர்வதன் மூலம் எமது நீண்டகால நினைவாற்றலைப் பேணுகிறது. சில

ஆய்வாளர்கள் ஹிப்போகம்பஸ் நூல் நிலையங்களில் இருக்கும் தரவரிசைப் பட்டியல் (Index) போல மூளையில் செயற்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். ஹிப்போகம்பஸ் பகுதியில் இருக்கும் மூளை, கலங்களுக்கு பாதிப்பு ஏற்படுமாயின் நாம் ஒரு இடத்திலிருந்து வீடு திரும்பி வரமுடியாது. கடந்த கால நினைவுகளை மீண்டும் நினைக்க முடியாது. வயோதிப காலத்தில் ஹிப்போகம்பஸ் பகுதி சுருங்குவது ஒரு வழமையான நிகழ்வு. இதனால்தான் வயோதிபத்துடன் மறதியும் கூடவே தொடர்கிறது. ஆனால் சமீபகால ஆய்வுகள் இந்தச் சுருக்கத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலகுவான வழிவகைகளையும் கூறுகிறது. நிம்மதியான தூக்கம், நீண்ட நடைப் பழக்கம், உறவுகள், நண்பர்களுடன் அதிக நேரத்தை ஆனந்தமாகச் செலவிடல் (தனிமையைத் தவிர்த்தல்), புதியனவற்றைக் கற்றல், வாசிப்பு இவை ஹிப்போகம்பஸின் சுருக்கத்தைக் குறைகின்றன, அதாவது மறதி என்ற நோய்க்கு மருந்தாகின்றன.

## சிறு மூளை அல்லது உடலுறுப்புகளை இயக்கும் மூளை – Cerebellum:

'நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்' என்று



பாரதி பாடினான். நாம் நிமிர்ந்து நடக்கும் போதும் சரி, தலை குனிந்து வணங்கும் போதும் சரி, புவியீர்ப்பின் காரணமாகக் கீழே விழுந்துவிடாமல் இருப்பதற்கு எமது தசை நார்கள் விரிவதும் சுருங்குவதுமாகத் தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருக்கின்றன. இந்தத் தசை நார்களின் இயக்கத்தை நெறிப்படுத்துவன மூளையில் இருக்கும் சிறுமூளைப் (Cerebellum) பகுதிதான். சுருக்கமாகக் கூறுவதாயின் சிறு மூளை எமது உடலின் சம நிலையைப் (Balance) பேணுகின்றது. சிறுமூளை எமது தலையின் பின்புறத்தின் கீழ்ப்பகுதியில் கழுத்துக்கு மேலே மூளையின் இரண்டு பாகங்களுடனும் இணைந்து இருக்கிறது. பல மடிப்புகளைக் கொண்ட சிறுமூளை ஒரு பெரிய எலுமிச்சம் பழத்தினளவு இருக்கும். இந்த மடிப்புகளை நீட்டி விரித்துப் பார்த்தால் இரண்டு 8 X 11 அங்குல சாதாரண பேப்பர்களின் அளவு இருக்கும்.

மூளையின் கன அளவில், ஆக 20 விகிதத்தைக் கொண்டிருக்கும் சிறுமூளை, மூளையில் இருக்கும் மொத்தக் கலங்களின் எண்ணிக்கையில் 60 விகிதத்திற்கும் அதிகமானவற்றைக் கொண்டுள்ளது. மூளையின் பல சுயாதீனமான செயற்பாடுகளுக்கு சிறுமூளை, மூளைத் தண்டுடன் இணைந்து செயற்படுகிறது. நாம் சைக்கிள் ஓடவோ அல்லது keyboard வாசிக்கவோ பழகுகிறோம் என்றால், முதலில் எமது பெருமூளையில் இருக்கும் பகுதிகள் எமது கைகளையோ அல்லது கால்களையோ எவ்வாறு இயக்க வேண்டும் என்பதற்கான சமிக்கைகளை எமது தசை நார்களுக்கு மூளைத் தண்டினூடாக வழங்கிக்கொண்டே இருக்கும். மூளைத் தண்டுடனும் பெருமூளையுடனும் தொடர்பில் இருக்கும் சிறுமூளையும் தசை நார்களை இயக்கும் சமிக்கைகளை தசை நார்களில் இருந்து கற்றுக்கொள்ளும். பயிற்சி எடுத்து சில நாட்களின் பின் நாம் சைக்கிள் ஓடப் பழகிவிடு வோம் இப்பொழுது எமது தசை நார்களைப் பயிற்சியின் மூலம் கற்றுக்கொண்ட சிறுமூளையே கட்டுப்படுத்தத் தொடங்கிவிடும். நாமும் சைக்கிள் ஓடும்போது எதோ சிந்தித்துகொண்டோ அல்லது கதைத்துகொண்டோ போகலாம். எமது கால்களும் கைகளும் தானாகவே சைக்கிளை இயக்கும். இவை தவிர நாம் பேசுவது, சிந்திப்பது, நினைப்பது போன்ற அறிவாற்றல் மிக்க செயற்பாடுகளுக்கும் பெருமூளைக்கு உறுதுணையாக சிறுமூளை செயற்படுகிறது.

## பெருமூளை அல்லது சிந்திக்கும் மூளை – Cerebrum:

நமது மூளையின் மேற்பரப்பில் ஒரு கசங்கிய கைக்குட்டை போலச் சுருங்கி இருக்கும் பகுதிதான் பெருமூளை அல்லது சிந்திக்கும் மூளைப் பகுதியாகும். இந்தப் பகுதியினை தமிழில் புறணி என்றும் ஆங்கிலத்தில் Neocortex என்றும் அழைப்பார்கள். Cortex என்பது லத்தீன் மொழியில் மரப்பட்டையைக் குறிக்கும் சொல். மரப்பட்டை எவ்வாறு மரங்களின் உட்பகுதியினைப் பாதுகாக்கிறதோ அது போலவே தலையினுள் இருக்கும் ஆத்மாவை சுருங்கிய வடிவத்தில் தசைகள் போலக் காட்சியளிக்கும் இந்தப் பகுதியும் பாதுகாக்கும் என மூளையின் கட்டமைப்பை முதலில் பார்த்தவர்கள் நம்பினர், இதனால் இதனை Cortex என அழைக்க தொடங்கினார்கள். Neo என்பது நவீனம் எனப் பொருள்படும். அதாவது பரிணாம மாற்றங்களில் சமீபத்தில் உருவான பகுதி, இதனால் இதனை Neocortex என்றழைக்கின்றனர். பாலூட்டி விலங்கினங்களில் மட்டும் உருவாகி இருக்கும் Neocortex மனிதர்களில் விரிந்து

வளர்ந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் இந்தப் பகுதி 6 அடுக்குகளை (layers) கொண்டிருக்கிறது. இந்த 6 பகுதிகளையும் ஒன்றிணைத்து நீட்டி விரித்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 17.2 சதுர அடி பரப்பளவைக் கொண்டிருக்கும். மூளையின் மேற்பரப்பில் இருக்குமிந்த Neocortex பகுதிதான் சிறந்த கவிதைகள், கதைகள், கருத்துகள், அழகிய தத்துவங்கள், ஆழமான அலசல்கள், அற்புதமான ஓவியங்கள் மற்றும் வியந்து போற்றும் கலைப்படைப்புகள் யாவற்றினதும் ஊற்றுக்கண். நாம் அறிந்தவரை இதனைப் போல ஒரு சிந்திக்கும் உறுப்பு வேறு ஓர் உயிரினத்திலோ, எந்த ஒரு கம்பியூட்டரிலோ அல்லது எந்த ஓர் இயந்திரத்திலோ உருவாகவில்லை.

முதன்முதலில் பெருமூளைப் பகுதியினைப் பார்ப்பவர்களுக்கு அதில் தெரியும் வளைந்து, நெளிந்து, சுருங்கி இருக்கும் பகுதிதான் ஆச்சரியத்தைக் கொடுக்கும். மற்றப் பாலூட்டி விலங்கினங்களில், உதாரணமாக எலி போன்றவற்றில் இருக்கும் பெருமூளைப் பகுதி சுருக்கங்கள் குறைந்து வளுவளுப்பாக இருக்கும். மனிதர்களின் பெருமூளை அமைப்பு அதிக சுருக்கங்களை உடைய பகுதியாக உருவாக்கமடைவதற்கு பரிணாம மாற்றங்கள் முக்கிய காரணமாகும். பரிணாம மாற்றங்கள் காரணமாக எமது பெருமூளை பெருத்து வளர்ந்த போது அந்த வளர்ச்சிக்கு எமது மண்டையோட்டின் கன அளவு இடையூறாக இருந்தது. இதற்குத் தீர்வாகப் பரிணாம மாற்றங்கள் வளர்ந்த பெருமூளையின் பாகங்களை வளைத்து, மடித்து எமது கபாலத்துக்குள் அடக்கி கொண்டது. பெரு மூளையின் மடிப்புகள் அதிகமாக இருக்கும் விலங்கினங்களின் புத்திசாலித்தனமும் அதிகரித்துக் காணப்படுகிறது. மூளை என்ற உறுப்பினை அவதானிப்பவர்கள் அது இரண்டு பாகங்களாகப் பிளவுப்பட்டிருப்பதனைக் காண்பார்கள். இவ்வாறு இரண்டு பாகங்களாகப் பரிணாமம் அடைந்ததற்கான காரணங்களை வேறு ஒரு கட்டுரையில் பார்ப்போம். இப்பொது மூளையின் வெளிப்புறம் இருக்கும் புறணி அதாவது Neocortex பற்றியே சுருக்கமாக விபரிக்கிறேன். இந்தப் பகுதியினை அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் மேலும் நான்கு பகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர். பிரித்த பகுதிகளை lobs என்று அழைப்பார்கள்.

- **Frontal lobe:** நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்தல், சிந்தித்தல், முடிவெடுத்தல், திட்டமிடல் போன்ற பல நடவெடிக்கைகள் யாவும் மூளையின் இந்த பகுதியிலேயே நடைபெறுகின்றன.
- **Parietal lobe:** புலன்களில் இருந்துவரும் சமிக்ஞைகளை ஆராயும் பகுதி
- **Temporal Lobe:** மொழியாடல், கேட்பது, உணர்ச்சிகள், நினைவுகளைப் பராமரிப்பது என மூளையின் பல செயற்பாடுகளை முன்னெடுக்கும் பகுதியாக விளங்குகிறது.
- **Occipital Lobe:** கண்களில் இருந்து வரும் தகவல்களை ஆராயும் பகுதி.

வேறு வேறு புலன்களில் இருந்து வரும் சமிக்ஞைகளை (signals) ஆராயப் பெருமூளையின் வேறு வேறு பகுதிகள் விருத்தியடைந்து இருக்கின்றன. உதாரணமாக, கண்களில் இருந்து வரும் ஒளி, காதுகளில் கேட்கும் ஒலி என சகல புலன்களில் இருந்து வரும் தகவல்களை ஆராயவெனத் தனித்தனிப் பகுதிகள் உள்ளன. வியக்கத்தக்க வகையில் இந்தப் பகுதிகளில் உள்ள கலங்கள் யாவும் அமைப்பு ரீதியாக ஒரேமாதிரியானவை. இதில் ஆச்சரியப்படும் விடயம் என்னவெனில் ஏதாவது குறைபாடு காரணமாக எமது புலன்களின் செயல்திறனை இழந்து விடுவோமாயின் மூளையில் இந்தப் புலன்களை ஆராயும் பகுதி மற்றைய புலன்களை ஆராயும் பகுதியுடன் இணைந்து அந்தப் பகுதியினை விரிவாக்கி வெளியில் இருப்பவற்றை உணரச் செய்கிறது. உதாரணமாக, செவிப்புலனை இழந்த பலர் மற்றவர்களின் உதடுகளின் அசைவின் மூலம் அவர்கள் என்ன பேசுகின்றனர் என்பதனைப் புரிந்து கொள்வார்கள், அதுபோலவே பார்வைத் திறனை இழந்தோர் நுணுக்கமாகக் கேட்கும் ஒலிகள் மூலம் சூழலை உணர்ந்து கொள்வார்கள். பெரு மூளையினைப் பற்றி பேசும்போது அதில் இருக்கும் தனித்துவமான ஒரு பகுதியினைப் பற்றி குறிப்பிடவேண்டும். அது தான் Frontal lobe-இன் ஒரு பகுதியாக இருக்கும் Prefrontal Cortex. சரியாக உங்கள் நெற்றிக்குப் பின்னால் இருக்கும் மூளைப் பகுதி இது. இந்தப் பகுதியில்த்தான் எமது ஒழுக்கம், நேர்மை, தார்மீகக் காரணங்கள் போன்ற பல மனநிறைவான எண்ணங்கள் உருவாகின்றன. மற்ற எந்த ஓர் உயிரினத்திலும் இல்லாத அளவு இந்தப் பகுதி மிகப் பெரிதாக மனித மூளையில் வளர்ந்திருக்கிறது. எமது மூளை ஒரு நிறுவனம் போல செயற்படுமாயின் இந்த Prefrontal Cortex பகுதிதான் அதன் தலைமையகமாகும்.

உலகில் உள்ள எந்த விதமான இயந்திரங்களையும் மனித மூளையின் தொழிற்பாட்டுடன் ஒப்பிடவே முடியாது. மனித உடலில் ஏறக்குறைய 200 மில்லியன் உணர்வுக் கலங்கள் (sensory receptors) இருக்கின்றன, இவற்றிலிருந்து தகவல்கள் தொடர்ந்து எமது மூளைக்குச் சென்றுகொண்டிருக்கின்றன. இந்த 200 மில்லியன் மூளைக் கலங்களும் 3 மில்லியன் நரம்புக் கலங்களூடாக (sensory fibers), மூளையுடன் தொடர்பில் இருக்கின்றன. இவற்றுடன் 16 பில்லியன் புறணிக் கலங்கள் (Cortical cells) இருக்கின்றன. இவை யாவும் தொடர்ந்து விழிப்பாக இருப்பதுடன் தேவைக்கேற்ப தொடர்புகளை இவற்றிற்கிடையில் மின்னல் வேகத்தில் நடத்துகின்றன. இந்தத் தகவல்களில் இருந்துவரும் தகவல்கள் மூலம் வெளியுலகம் தொடர்பாகவும் எமது உள்ளார்ந்த உடல் நிலைமை தொடர்பாகவும் ஒரு விம்பத்தை மனித மனத்தில் உருவாக்கி, மனித இனத்தை இந்தப் பூமிப்பந்தின் மேற்பரப்பில் வெற்றிகரமாகப் பரப்பிக்கொண்டே இருக்கின்றன. உயிரினங்களின் மூன்றரை பில்லியன் வருட பரிணாம மாற்றங்களினால் உருவான கோடான கோடி உயிரினங்களில் தோன்றிய உறுப்புகளின் அமைப்புகள் யாவற்றிற்கும் மேலான ஒரு கிரீடத்தை மனித மூளை பெற்றிருக்கிறது. தலையில் சுமக்கும் இந்தக் கிரீடத்தை நாம் மிக பக்குவமாகப் பாதுகாப்போம்.



kugan.s@thaiveedu.com




பிரித்தானியாவைச் சேர்ந்த றோய் பாஸ்கர் (Roy Bhaskar) என்னும் தத்துவஞானியும் அவரது கூட்டாளிகளும் விமர்சன யதார்த்தம் (Critical Realism) என்னும் தத்துவச் சிந்தனைப் பிரிவைத் தோற்றுவித்தனர். சமகாலத் தத்துவத்தில் (Contemporary Philosophy) முக்கியமான ஒன்றாகக் கருதப்படும் இத்தத்துவப் பிரிவைச் சேர்ந்த சிந்தனையாளர்கள் மார்க்சியத்தால் கவரப்பட்டு, மார்க்சியத்தில் இருந்து பல கருத்துகளை உள்வாங்கித் தமது தத்துவத்தைச் செழுமைப்படுத்தினர். 1970-களில் இச்சிந்தனை தருக்கவியல் நேர்க்காட்சிவாதம் (Logical Positivism), தோற்றப் பாட்டியல் (Phenomenology) ஆகிய கோட்பாடுகளுக்கு எதிரான வாதங்களை முன்வைத்தது. இச்சிந்தனைப் பிரிவைச் சேர்ந்தவரான றோய் பாஸ்கர் அமைப்பியல்வாதம் குறித்தும் தமது கவனத்தைச் செலுத்தி



னார். அவரது சமூகவியலை, அமைப்பியல் மார்க்சிசம் (Structural Marxism) என்று வரையறை செய்யலாம். ஆயினும் அவரது கருத்துகள் அல்தூசரின் கருத்துகளில் இருந்து வேறுபட்டனவாக இருந்தன.

றோய் பாஸ்கரின் விஞ்ஞான மெய்யியல் மார்க்சியத்தின் பொருள்முதல்வாத அறிவாராய்ச்சியலை (Epistemology of Materialism) அடிப்படையாகக் கொண்டது. அமைப்பியல் தத்துவவாதி என்ற முறையில் றோய் பாஸ்கர் விஞ்ஞானத்தின் பணி யாது என்பதை அமைப்பியல் நோக்கில் விளக்கினார். இயற்கை உலகையும், சமூக உலகையும் (Natural and Social World) விளக்கியுரைப்பதற்கு அமைப்புகளும் (Structures), அவ்வமைப்புகள் சார்ந்த இயக்கமும் செயல்முறைகளும் (Mechanisms and Processes) கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை, முக்கியத்துவம் உடையவை என அவர் குறிப்பிட்டார். அத்தோடு சமூகக் கோட்பாடு மனிதர்களின் விடுதலை இலக்கினைக் (Emancipatory Goals) குறியாகக் கொண்டது என்ற மார்க்சியக் கருத்தையும் றோய் பாஸ்கர் அழுத்திக் கூறினார். அவரின் இத்தகைய அணுகுமுறை அவரை மார்க்சியத்திற்கு நெருக்கமானவராக அடையாளம் காட்டுகிறது. மானிட விடுதலையை இலக்காகக் கொண்ட விஞ்ஞானம் உலகின் இயக்கம் பற்றிய ஆய்வில் கட்டமைப்புகளை அலட்சியம் செய்ய முடியாது. கட்டமைப்புகளை மாற்றுவதில் மனிதச் செயலியின் (Human Agency) வகிபாகம் யாது என்ற பிரச்சினையையும் றோய் பாஸ்கர் கவனத்தில் கொள்கிறார்.

மனிதர்கள் கட்டமைப்புகளைப் பற்றிய உணர்வற்றவர்களாய், அக்கட்டமைப்புக்குப் பலியாகுபவர் (Unconscious Victims of Structures) என்ற கருத்தை றோய் பாஸ்கர் நிராகரித்தார். மனிதச் செயலிகள் கட்டமைப்புகளைப் பற்றிய அறிவையும் உணர்வையும் உடையவர்களாய் அவற்றை மாற்றுவதில் முனைப்புடன் செயற்படுபவர்கள் (Active Agents) என றோய் பாஸ்கர் குறிப்பிட்டார்.

### மார்க்சியமும் சமூக விஞ்ஞானங்களும்:

சமூக விஞ்ஞானங்களில் மார்க்சியம் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. சமூக விஞ்ஞானங்களுக்கும் மார்க்சியத்துக்கும் முறையியல் (Methodology), கோட்பாடு (Theory) என்ற இருவிடயங்கள் ஊடாக நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது.

20-ம் நூற்றாண்டின் புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் (Post Revolutionary Societies) மார்க்சியம் அரசின் கருத்தியலாக அல்லது உத்தியோகபூர்வ கருத்தியலாக (Offical Ideology) இருந்துள்ளது. இதனைவிட மேற்குநாடுகளிலும் கிழக்கு உலகிலும் உள்ள பல்கலைக்கழகங்களின் புலமையாளர்களிடம் மார்க்சியம் செல்வாக்குச் செலுத்தியது. பொருளியல், அரசியல், விஞ்ஞானம், சமூகவியல், வரலாறு, மானிடவியல், ஊடகவியலும் தொடர்பாடலும் (Media and Communications) இலக்கியம், பண்பாட்டுக் கற்கைகள் (Cultural Studies) ஆகிய கல்வித்துறைகளில் மார்க்சியம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. இத்துறைகளில் கற்பித்தலிலும் ஆராய்ச்சியி

லும் புலமையாளர்கள் மார்க்சிய கோட்பாட்டையும் முறையியலையும் பிரயோகித்தனர். பல்கலைக்கழகங்களின் மார்க்சிய சமூக விஞ்ஞானப் பேராசிரியர்கள் பலர் நேர்க்காட்சிவாதத்தை நிராகரிப்பவர்களாகவும், மார்க்சியத்தை ஏற்றுக் கொள்பவர்களாகவும் தம்மை அடையாளப்படுத்தினர். மார்க்சியக் கோட்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையனவான பின்வரும் கோட்பாடுகள் மேற்கிளம்பின.

- விமர்சனக் கோட்பாடு (Critical Theory)
- பெண்ணியம் (Feminism)
- தங்கியிருத்தல் கோட்பாடு (Dependency Theory)
- உலக முறைமைக் கோட்பாடு (World Systems Theory)
- பண்பாட்டுக் கற்கைகள் (Cultural Studies)
- பின் காலனித்துவ கற்கைகள் (Post Colonial Studies)

மேற்குறித்த கோட்பாடுகள் நேர்க்காட்சி வாதத்திற்கு எதிர்ப்பாகவும் அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோட்பாடுகளின் தோற்றம் மார்க்சியத்தின் செல்வாக்கை உயர்த்தியது. இவற்றுள் விமர்சனக் கோட்பாடு (Critical Theory) தங்கியிருத்தல் கோட்பாடு (Dependency Theory) என்பன மார்க்சியத்தால் உளத்தூண்டலைப் பெற்ற கோட்பாடுகள் ஆகும். ஆயினும் பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் ஆகிய இரண்டு கோட்பாடுகளும் கிளர்ச்சிக் கவர்ச்சி மிக்கனவாக இருந்தன. இதனால் மார்க்சியத்தின் கிளர்ச்சிக் கவர்ச்சி (Radical Appeal) மங்கத் தொடங்கியது. அரசியல் பொருளாதாரமும் சமூக உறவுகளும் (Political Economy and Social Relations) மார்க்சியம் அழுத்தம் கொடுத்த விடயங்களாகும். இவை மார்க்சியத்தின் 'அடிப்படைகள்' (Foundations) ஆக மார்க்சியர்களால் கருதப்பட்டன. ஆனால் ஆய்வாளர்களில் பலர் மேற்கட்டுமானம் (Super Structure), பிரதிநித்துவம் (Representation) எனப்படும் பண்பாடு கருத்தியல், இலக்கியம் ஆகிய விடயங்களில் கவனம் குவித்தனர். அரசியல் பொருளாதாரமும், சமூக உறவுகளும் பற்றி ஆராய்வதைவிட மேற்குறித்த பண்பாடு கருத்தியல், இலக்கியம் ஆகிய மேற்கட்டுமானம் சார்ந்தவிடயங்களை ஆராய்வது காலநடைக்கு உகந்ததென (Fashionable) ஆய்வாளர்களில் ஒரு பிரிவினர் கருதவும் தொடங்கினர்.

### சுருக்கம்:

நான்கு பாகங்களாக அமைந்த இத்தொடர் கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- 19-ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற மார்க்சியக் கோட்பாடு, ஒரு தத்துவம், பொருளாதாரக் கோட்பாடு, சமூகக் கோட்பாடு (Social Theory) எனப் பல்பரிமாணங்களை உடையதாக விளங்கியதோடு, முதலாளித்துவ சமூக அமைப்பை ஒழிக்கும் அரசியல் செயற்பாட்டுக்கான வழிகாட்டி (Guide to Political Action) என்ற பண்பையும் கொண்டதாக இருந்தது. மார்க்சியம் புலமைத்துறைக்குள் (Academic Field) 20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தான் புகுந்தது. அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், மானிடவியல், இலக்கியமும் பண்பாட்டுக் கற்கைகளும் ஆகிய துறைகளைச் சேர்ந்த புலமையாளர்கள் இக்காலகட்டத்தில் மார்க்சியத்தால் கவரப்பட்டனர். சமூக விஞ்ஞானங்களிலும், மனிதப் பண்பியல் துறையிலும் (Humanities) செல்வாக்கு பெற்றிருந்த மைய நீரோட்ட, அதிகார முறைமைக்கு எப்போதும் சார்பானதான (Pro Establishment) சிந்தனைப் போக்கிற்கு மாற்றீடான சிந்தனையாக மார்க்சியத்தைப் புலமையாளர்கள் கருதி ஏற்றுக் கொண்டனர்.
- நேர்க்காட்சிவாதம் எதிர் பின்-நேர்க்காட்சிவாதம் என்னும் விவாதத்தின் சொல்லாடலைக் கொண்டு முறையியலை வரையறை செய்தல் முடியாது. ஏனெனில் மார்க்சியம் பொருள்முதல்வாதம் எதிர் கருத்துமுதல்வாதம் (Materi-




alism Versus Idealism) என்ற இரண்டிற்குமிடையலான விவாதத்தின் பின்புலத்தில் 19-ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. மார்க்சிய முறையியலையும் இந்த வேறுபட்ட இருமைநிலை (Dualism) சார்ந்த விவாதங்களின் பின்புலத்திலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டும். மார்க்ஸ் தம்மைப் பொருள் முதல்வாத தத்துவத்தின் சார்புடையவராக அடையாளப்படுத்தினார். மார்க்சும் எங்கல்சும் தமது தத்துவம் பொருள் முதல்வாதம் எனவும் அதுஒரு விஞ்ஞான எனவும்(Materialist and Sciencticfic Philosophy) கூறினர்.
- மார்க்சும் எங்கல்சும் 'விஞ்ஞானம்' என்னும் எண்ணக்கருவை இயற்கை விஞ்ஞானங்களின் மாதிரியில் விகுத்துக்

கொண்டனர். தமது காலத்தின் இயற்கை விஞ்ஞானங்கள் இயற்கை உலகம் பற்றிய விஞ்ஞான அறிவை (Scientific Knowledge) இயற்கை பற்றிய பொதுவிதிகளைக் (Universal Law) கண்டுபிடித்ததன் மூலம் விளக்கிக் கூறியதை எங்கல்ஸ் கண்டார். அவ்வாறே கார்ல் மார்க்சும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் (Historical Materialism) என்னும் வரலாறு பற்றிய பொது விதியையும் (Universal Law of History) உபரிமதிப்பு என்னும் பொருளாதார விதியையும் (Economic Law of Surplus Value) கண்டுபிடித்ததாக எங்கல்ஸ் குறிப்பிட்டார். மார்க்சும் எங்கல்சும் விஞ்ஞானம் பற்றிய தமது எண்ணக் கருவை பகுத்தறிவு வாதத்தின் (Rationalism) அடிப்படையில் வடிவமைத்தனரேயன்றி, அனுபவவாதத்தின் (Empiricism) அடிப்படையில் வகுத்துக் கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

- மார்க்சிசம் மதிப்பீடுகள் சாராத நடுவுநிலை விஞ்ஞானம் (Value – Neutral Science) அன்று. மாக்சிசம் சமூக விடுதலை அரசியல் (Social Emancipatory Politics) சார்புடைய கொள்கைப் பிடிப்புடைய விஞ்ஞானமாகும். மார்க்சியக் கோட்பாடு இக்கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. நேர்க்காட்சி வாதத்திற்கும் மார்க்சியத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு இதுவாகும்.

## புறநிலைத்தன்மையும் யதார்த்தமும்:

புறநிலைத் தன்மையும் யதார்த்தமும் (Objectivity and Reality) என்னும் விடயத்தில் மார்க்சிய அறிவாராய்ச்சியலுக்கும் நமக்குப் புறத்தேயுள்ள யதார்த்தம் (External Reality) பற்றி நேர்க்காட்சி வாதத்தின் கருத்துகளுக்கும் இடையே ஒற்றுமை காணப்படுகிறது. மார்க்கிசம் போன்றே நேர்க்காட்சிவாதமும் மனித அகத்திற்கு வெளியே சுதந்திரமான இருப்புடைய (Independently of Human Mind) புற உலகம் உள்ளது என்று கூறுகிறது. புறத்தே உள்ள யதார்த்தம் பொருண்மையானது. புறநிலையானது, உண்மையானது. (Material objective and Real) என்றே மார்க்சிசமும் கருதுகிறது. ஆனால், மார்க்சிசம் தீவிர கருத்துமுதல்வாத எதிர்ப்பும், அகநிலைவாத எதிர்ப்பும் (Anti Idealist and Anti-Subjectivist) கொண்ட கோட்பாடாகும். நேர்க்காட்சி வாத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையிலான ஒற்றுமைகள் சில இருப்பினும் ஒரு குறிப்பிட்ட விடயம் சார்ந்த வேற்றுமை முக்கியமானது. மார்க்சியம் புறநிலையும் (Object) அகநிலையும் (Subject) ஒன்றோடொன்று பிணைப்புற்றுள்ளன எனக் கூறுகிறது. மார்க்சிய அறிவாராய்ச்சியலின் (Epistemology)படி புறநிலை, அகநிலை என்னும் இரண்டும் இயங்கியல் இடைத் தொடர்பால் பிணைக்கப்பட்டுள்ளன (Dialectically Inter Connected).

- மார்க்ஸ் பொருள் முதல்வாத அறிவாராய்ச்சியியல், பொருள்முதல்வாத சமூகக் கோட்பாடு என்பனவற்றை உருவாக்கியதோடு, அவற்றை சமூக ஆய்வில் விமர்சன நோக்கில் பிரயோகித்தார். மூலதனம் என்ற பெருநூலை அவர் விஞ்ஞான நோக்கில் எழுதத்துணிந்த போது மூன்று விஞ்ஞான இலக்குகளை (Scientific Objectives) அடைவதற்கு திட்டமிட்டார்.
  - சந்தையை அடிப்படையாகக் கொண்ட சொத்துடமை முறையின் (Market Based system of private property) நிறுவன அமைப்பின் இயல்புகளை அனுபவம் சார்ந்த ஆய்வுத்தரவுகளின் அடிப்படையில் கட்டமைப்பதை மார்க்ஸ் இலக்காகக் கொண்டார்.
  - இத்தகைய நிறுவன முறையின் விளைவுகள் எவையென எடுத்துக் காட்டுவதும் அவரது இலக்காக இருந்தது.
  - முதலாளித்துவ சமூக பொருளாதார முறைமைகள் (Capitalist Socio Economic Systems) வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களில் உருவாகியிருந்தன. இவற்றின் நிறுவன ஒழுங்கமைப்பு (Institutional Order) உருவாக்கம் பெற்ற வரலாற்றுச் செயல் முறையை (Historical Process) கண்டறிவதும் அவரது நோக்கமாக இருந்தது.
- மார்க்சின் தத்துவமும் சமூகக் கோட்பாடும் குறிப்பிட்ட தொரு சமூக உள்ளதன் இயலின்படி (Social Ontology) அமைந்திருந்தன. அவர் சமூக உலகம் (Social World) பற்றிய கூரிய விமர்சன மதிப்பீடுகளை முன்வைத்தார். சமூகக் கட்டமைப்புகள் சுயத்துவமான காரண காரியத் தர்க்கத்துடன் (Own Logic of Casuality) இயங்குபவை என அவர்




கருதினார். ஆயினும் மனிதர்களின் தலையீடுகளும் சமூக நடைமுறைகளும் (Interventions and Social Practices) தாக்கம் புரிகின்றன. கட்டமைப்புகளை மாற்றவும் உருவாக்கவும் கூடிய வகையில் மனிதர்களின் தலையீடுகளும் சமூக நடைமுறைகளும் அமைகின்றன என மார்க்ஸ் குறிப்பிட்டார்.

- நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானத்தின் குறுகிய அனுபவவாத (Narrow Empiricism) நோக்கை மார்க்சும், மார்க்சிஸ்டுகளும் விமர்சித்தனர். புலக்காட்சி, அவதானிப்பு, பரிசோதனை என்பன மட்டுமே உண்மை அறிவைப் பெறுவதற்கான வழி என்று நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானம் கூறு

வதை அவர்கள் நிராகரித்தனர், அதனைத் தீவிரமான குறுக்கல்வாதம் (Extreme form of Reductionism) என விமர்சித்தனர். இவ்வாறே அறிபவரையும் (knower), அறியப்படும் சமூக உலகையும் (Social World) பிரிப்பதன் மூலம் புறநிலையை குறுகிய சட்டகத்திற்குள் நேர்க்காட்சி வாதம் எல்லைப்படுத்துவதாகவும் குறிப்பிட்டனர்.

- முழுமை (Totality) என்பது மார்க்சியத்தின் முக்கியான எண்ணக் கருக்களில் ஒன்றாகும். சமூகத் தோற்றப்பாடுகளை அருவமானதும் தனிமைப்படுத்தப்பட்டனவுமான விடயங்களாக்குவது தவறு; அவற்றை முழுமையின் பகுதிகளாக, இணைத்துப் பார்த்து அவற்றைப் பொருள் கொள்ள வேண்டும் என மார்க்சிஸ்டுகள் வலியுறுத்தினர்.
- ‘சமூக யதார்த்தம்’ (Social Reality) என்பது மார்க்சியத்தின் இன்னொரு முக்கியமான எண்ணக் கருவாகும். மனித மனத்திற்கு அப்பால் புறத்தே சுதந்திரமாக இயங்கும் புற உலகம் என்னும் ‘யதார்த்தம்’ உள்ளது என மார்க்சிசம் கூறுகிறது. இச்சமூக யதார்த்தம் சமூக வர்க்கங்கள் (Social Classes), பொருளாதார உறவுகள் (Economic Relations) உற்பத்திச் சக்திகள் (Forces of Production) என்பனவற்றை உள்ளடக்கியது. இவையாவற்றினதும் ஒட்டு மொத்தமான வடிவமே ‘ஸ்தூலமான உலகம்’ (Concrete World) எனப்படுவது. யதார்த்தம் எமது சித்தத்தில் அல்லது உணர்வு நிலையில் (Consciousness) இருக்கும் விடயமன்று, அது பகுதி பகுதியாகித் துண்டங்களாகவும் இருப்பதில்லை, மாறாக பொருண்மியமான முழுமையாக (Material Reality) அது உள்ளது. சமூக கட்டமைப்பு என்னும் முழுமையினால் (The Totality of Social Structures) மனித வாழ்வின் பொருண்மியக் கூறுகள் உருவாக்கப்படுகின்றன. இந்த யதார்த்தத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் வெளிப்படையான தோற்றங்களுக்கு அப்பால் சென்று (Go Beyond it’s mere Appearance) ஆழ ஊடுருவிப் பார்த்தல் வேண்டும். அதாவது சமூக உறவுகளை அதன் மையமான உள்ளடக்கத்தின் புரிதலுடன் பொருள் கொள்ளுதல் வேண்டும். வெளித் தோன்றங்கள் யதார்த்தத்தை மிகைப்புனைவு செய்து காட்டுவன, ஆகையால் விமர்சன ரீதியான ஆய்வு ‘புனைவு என்றும் கடினமான புற ஓட்டிற்குள் அமைந்திருக்கும் அறிவார்ந்த சத்தான உள்ளீட்டை வெளிக் கொண்டு வரவேண்டும்’ (Discover the rational kernel within the mystical shell)

இக்கட்டுரை ‘Social Research: Philosophical and Methodological Foundations என்னும் நூலின் 13வது அத்தியாயமான ‘Post-positivist Social Science Marxism and Social Science Methodology’ என்னும் கட்டுரையின் (பக் 244-267) தழுவலாக்கமாகும். இந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட ஆவர். இந்நூலின் வெளியிட்டாளர் ‘சமூக விஞ்ஞானிகள் சங்கம்’ (SSA) கொழும்பு (2015).

### மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள்:

கட்டுரையின் முடிவில் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட பயனுள்ள நூல்கள் சிலவற்றை மேலதிக வாசிப்புக்காகச் சிபாரிசு செய்துள்ளார்.

மார்க்ஸ் எங்கல்ஸ் எழுத்துக்களில் ஆய்வு முறை (Method) குறித்த குறிப்புகள் அங்கும் இங்குமாகச் சிதறிக்கிடக்கின்றன. அவர்களின் ஆய்வு முறை பற்றியதாக அமையும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம், மார்க்சிய தத்துவம் பற்றிப் பல நூல்கள் உள்ளன. மார்க்சிஸ்ச கோட்பாட்டின் முறையியல் பரிமாணம் பற்றிய கோட்பாட்டு ஆய்வுகள் பல 20-ம் நூற்றாண்டில் வெளியாயின. பின்வரும் நூல்கள் வாசிப்புக்காகச் சிபாரிசு செய்யப்படுகின்றன.

- Lenin எழுதிய Materialism and Empirio Criticism - 1907-இல் இதன் முதல் பதிப்பு வெளியானது. 1971-ல் மொஸ்கோ அயல்மொழிகள் பதிப்பகம் இதனை வெளியிட்டது.
- Karl Korsch எழுதிய Marxism and Philosophy யேர்மன் மொழியில் எழுதப்பட்ட இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 1970-ல் வெளியானது.
- George Lukacs எழுதிய History and Class Consciousness (1970).
- Lucio Colletti-யின் இரண்டு கட்டுரைகள் Marxism as Sociology (1972) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளது.
- Perry Anderson எழுதிய Considerations in Western Marxism (1976), Arguments with in English Marxism (1980) என்னும் இருநூல்கள். இந்நூல்கள் மார்ச்சிய முறை, கோட்பாடு என்பன குறித்து 20-ம் நூற்றாண்டில் இடம் பெற்ற விவாதங்களைத் தொகுத்துக் கூறுவன.
- Terrel Carver எழுதிய Marx and Marxism (2008): மார்க்சியத்தின் தத்துவார்த்த முறையியல் அம்சங்களைப் பற்றி அலசும் அண்மைக்கால வெளியீடாகும்.

### நூற்பட்டியல்:

- Anderson, Perry
  - Considerations of western Marxism (1976)
  - Arguments within English Marxism (1980), London Verso
- Carver, Terrel 2009, ‘Marx and Marxism in Theodore M. Porter and Dorothy Ross, EDS Cambridge History of science Vol 7, The Modern Social Sciences, Cambridge, Cambridge University Press 183 - 204
- Colletti, Lucio, 1972 From Rousseau to Lenin - Studies in Ideology and Society. London, New Left Books ‘Marxism As Sociology’ என்னும் கட்டுரை மேற்படி நூலில் சேர்க்கப்பட்டுள்ளது (பக். 3-44)
- Korsch, Karl (1923), 1970 Marxism and Philosophy Newyork, Monthly Review Press
- Lenin. V.I (1905), (1956) The Development of Capitalism in Russia, Moscow Foreign Languages Publishing House
  - (1909) 1977 Materialism and Empirio Criticism
- Lukacs, George, (1925), 1971 ‘The Marxism of Rosa Luxum Burg’ in History and class Consciousness: Studies in Marxist Dialectics London Merlin Press.



shanmugalingam@thaiveedu.com

## இனப்படுகொலையின் அரசியல் - 11

# பௌத்தமும் வன்முறையும்: சில கற்பிதங்கள்



–தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### அறிமுகக் குறிப்புகள்

அகிம்சையின் மார்க்கமாக அறியப்பட்ட பௌத்த நெறியைப் பின்பற்றும் சமூகங்கள் கட்டற்ற வன்முறையிலும் போரிலும் ஈடுபடும்போது அது மிகப்பெரிய முரண்நகையாகத் தெரிகிறது. வரலாற்றுப் பார்வையில் பௌத்தத்திற்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்பானது, பௌத்தத்திற்கு வழங்கப்பட்டுள்ள 'அகிம்சையின் மார்க்கம்' என்ற அடையாளத்தைக் கேள்விக்குட்படுத்துகிறது. இந்த அடையாளத்தை நிறுவுவதற்காகக் கட்டமைக்கப்பட்டவற்றில் பல வரலாற்று உண்மைகளுக்கு முரணானவை. அவ்வாறான ஒரு உதாரணம் அசோக மன்னன் பற்றியது.

இன்று எமக்குச் சொல்லப்படும் வரலாற்றில் மன்னன் அசோகன் என்பவன் வன்முறையில் இருந்து அமைதியை நோக்கித் திரும்பிய ஒரு நாயகனாக அடையாளப்படுத்தப்படுகிறார். பௌத்த நூல்களில் அவர் அளவுக்கதிமாகப் புனிதப்படுத்தப்பட்டுள்ளார். இது அசோகன் குறித்த வரலாற்றுச் சிதைவுக்கு முக்கிய காரணம். பௌத்தர்களால் அவர் கொடூரமானவராக இருந்து நீதியுள்ளவராக மாறியவராக நினைவு கூரப்பட்டாலும், போர் அட்டூழியங்களுக்காக அவர் வருந்தியதான அதே ஆணையில், கிளர்ச்சி செய்பவர்கள் எதிர்கொள்ளக்கூடிய விளைவுகள் குறித்து அவர் எச்சரிக்கிறார். அவரைப் பொறுத்தவரை சமாதானம் என்பது போரினாலேயே சாத்தியமானது; போரைத் தடுப்பதால் சாத்தியமானதல்ல. அவர் கொல்லப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட மற்றும் அவர்களின் தாயகத்திலிருந்து இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு அவர் இழப்பீடு வழங்கியதற்காகான எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால் அசோகன் குறித்து எமக்குச் சொல்லப்படும் கதை என்பது போரில் ஏற்படும் உயிரிழப்புக்களைக் கண்டு வருந்தி போருக்கு எதிராகவும் அகிம்சைக்காகவும் பௌத்த மதத்தைத் தழுவினார் என்பதே.

இவ்விடத்தில் பேராசிரியர் எஸ்.ஜே. தம்பையா சுட்டிக்காட்டும் முக்கியமான விடயமொன்று உண்டு. குறித்த போரில் ஈடுபடுவதற்கு முன்பாகவே அசோகன் பௌத்த மதத்திற்கு மாறிவிட்டார் என்பதே வரலாறு என்றும் அவ்வகையில் குறித்த போரில் அசோகனும் அவரது படைகளும் நிகழ்த்திய படுகொலைகள் ஒரு பௌத்த மன்னனின் கொலைகளே. பௌத்த மன்னனாக இருந்தபோதும் ஏனைய தென்னாசிய மன்னர்கள் செய்தது போல நடைபெற்ற கொலைகளுக்கு மன்னிப்புக் கோருவதாக பொதுவெளியில் அறிவிப்பதன் மூலம் வெற்றிகொண்ட தேசங்களின் மக்களை வென்றெடுக்க முடிகிறது. இதையே அசோகரும் செய்தார். இது குறித்த விரிவான குறிப்புகளை எஸ்.ஜே. தம்பையாவின் 'World Conqueror and World Renouncer : A Study of Buddhism and Polity in Thailand against a Historical Background' என்ற நூலில் காணலாம்.

அசோகனைச் சுற்றி எழுப்பப்படும் புனித பிம்பம் சரியானதல்ல என்றும் அந்த பிம்ப உருவாக்கத்தில் பௌத்த இலக்கியங்கள் பிரதான பங்களிப்பை ஆற்றின என்றும் பௌத்தத்தை அமைதியின் மார்க்கமாக வரலாற்றின் துணையுடன் நிறுவுவதற்கு அசோகனின் கதை வாய்ப்பாகத் திரிக்கப்பட்டது என்று தனது நூலில் பேராசிரியர் ரொமிலா தாப்பர் 'Asoka and the Decline of the Mauryas' என்ற தனது நூலில் விரிவாக எடுத்துரைக்கிறார். அசோகனின் வரலாற்றை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் அவர் பௌத்த மதத்திற்கு மாறி கலிங்கப் போரின் வெற்றிக்குப் பிறகும் தொடர்ச்சியாக வன்முறைகளில், கொலைகளில் ஈடுபட்டார் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அதற்கு பௌத்த துறவிகளின் உயர்பீடமான சங்க ஆதரவு கொடுத்தது. அசோகர் தனது ஆட்சியின் இறுதிக்காலத்தில் புத்தர் உருவத்தை வணங்க மறுத்தமைக்காக 18,000 ஜைனர்களைக் கொன்றார். அவரது மகன் குணாலா, அரண்மனை சூழ்ச்சியில் கண்களை இழந்த பிறகு, சூழ்சிக்குக் காரணமான தனது சொந்த ராணியை உயிருடன் எரித்தார். மத சகிப்புத்தன்மைக்காக வழக்கமாகக் கொண்டாடப்படும் அசோகா, சங்கத்தின் விவகாரங்களில் கொடிய தலையீடுகளை மேற்கொண்டார். ஜைனர்களைக் கொன்று குவித்தார். புத்த அரசர்களின் வரலாற்றை வரன்முறையாக நோக்கினால், பௌத்தர்கள் அல்லாதவர்களுக்கு எதிராக அசோகரின் வெகுஜன வன்முறைகள் விதிவிலக்கானவை அல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

### வரைவிலக்கணப் பிரச்சினைகள்:

ஒன்பதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற சீன பௌத்த துறவி லின்ஜி யிக்சுவான் தனது சீடர்களிடம், 'நீங்கள் புத்தரை சாலையில் சந்தித்தால், அவரைக் கொல்லுங்கள்' என்று கூறியதாகக் கூறப்படுகிறது. இந்தக் கூற்று மிகவும் சிக்கலானது. இருப்பினும், வெளிப்படையான விளங்கிக்கொள்ளும் நோக்கத்திற்கு அப்பால் இன்னொன்று உள்ளது: ஒருவர் விடுத



லைக்கான வெளிப்புற புத்தரை அல்ல, உள்ளே வசிக்கும் (அகத்தில்) புத்தரைத் தேட வேண்டும். இந்த வழியில், புத்த ரைக் கொல்லும் எண்ணம் ஒரு நபரை விழிப்புணர்ச்சி அடை யச்செய்து புத்தர் பற்றிய மாயையான கண்ணோட்டத்தில் இருந்து வெளியேற்றுகிறது. அதேவேளை குறித்த கூற்று ஒரு குறியீட்டு மட்டத்தில் வன்முறையின் சக்தியை எடுத்துக்காட் டுகிறது.

பௌத்த சிந்தனைகள், கோட்பாடுகள் மற்றும் செயல்களில் வன்முறை நிறைந்துள்ளது. இருப்பினும், இது பரவலாக அங் கீகரிக்கப்படவில்லை அல்லது புரிந்துகொள்ளப்படவில்லை. மியான்மார் மற்றும் இலங்கை போன்ற மோதல்களில் ஈடுப டும் பௌத்தர்களைப் பற்றிய உலகளாவிய ஊடகங்களில் பௌத்தத்தால் தூண்டப்பட்ட வன்முறைகள் பற்றிய ஏராள மான ஆய்வுகள் உள்ளன. இருந்தபோதிலும், பௌத்தர்க ளும் பௌத்தமும் சமாதானத்தின் பிரதிநிதிகள் என்ற ஒரு பர வலான மனநிலை உள்ளது.

சீன-ஜப்பானியப் போர் (1894-1895), ரஷ்ய-ஜப்பானியப் போர் (1904-1905) ஆகியன பௌத்தத்தால் நியாயப்படுத்தப்பட்ட போர்களின் சில அழுத்தமான எடுத்துக்காட்டுகள். ஜென் அட் வார் என்ற தனது முதன்மைப் படைப்பில், பிரையன் விக் டோரியா பத்தொன்பதாம் மற்றும் இருபதாம் நூற்றாண்டுக ளின் ஜப்பானியப் போர்களின் போது, சாதாரண மற்றும் துற வற ஜப்பானிய பௌத்த ஈடுபாடு பற்றிய தகவல்களை வழங் கியுள்ளார். நாகரிகம் அச்சுறுத்தப்படும்போது வன்முறை அவசியம் என்பதே அக்காலத்தின் மையக்கருத்தாக இருந் தது என்று அவர் சொல்கிறார். சீன-ஜப்பானியப் போரின் போது (1894-1895), பௌத்தர்களிடையே கிட்டத்தட்ட எந்த சமாதான இயக்கமும் நடைபெறவில்லை என்றும், மேலும் போரை நியாயப்படுத்திய பௌத்தத் தலைவர்களிற்கு எந்த பற்றாக்குறையும் இல்லை என்றும் குறிப்பிடுகிறார். இந்த போரை ஏற்றுக்கொள்வதற்கான பல முன்னோடிகளில் ஒருவ ரான ஷிங்கோன் பௌத்த மதகுருவான ஷாகு அன்ஷோவிட மிருந்து வந்தவர். ஜனவரி 1885-ல், 'வன்முறைக்கு எதிரான இரக்கமுள்ள பௌத்த தடைகள் பற்றிய விவாதம்' என்ற கட் டுரையை வெளியிட்டார். அதில் அவர் பின்வருமாறு தெரிவித் தார்: 'இரண்டு வகையான போர்கள் இருந்தன; நியாயமான போர் மற்றையது சட்டமற்ற போர். பௌத்தர்கள் இரண்டாவது வகை யுத்தத்தை எதிர்க்க வேண்டும். முதலாவது வகைக்கு ஆதரவு வழங்க வேண்டும். ஏனெனில் அத்தகைய போர்கள் மனிதகுலம் துயரத்தில் விழுவதை தடுக்கிறது.'

ரஷ்ய-ஜப்பானியப் போரின் போது (1904-1908), பௌத்த துற விகள் பொதுவாக நாகரிகத்தைப் பாதுகாக்க வேண்டிய அவ சியத்திலிருந்து, குறிப்பாக பௌத்தத்தைப் பாதுகாப்பதற் காக இதேபோன்ற உணர்வுகளை வெளிப்படுத்தினர். புகழ் பெற்ற ரின்சாய் புத்த துறவி ஷாகோ சென் இராணுவ மதகுரு வாக பணியாற்றி நியாயமான போரின் அவசியத்தை ஊக்கு வித்தார். அவரது பிரசங்கம் ஒன்றில்' உண்மையில் போர் ஒரு தீயதும் பெரியதுமாகும். ஆனால் தீயதுக்கெதிரான போர் நாம் இறுதி இலக்கை அடையும் வரை தடையின்றி நடத்தப் பட வேண்டும். ஜப்பான் பெரும் தயக்கத்துடன் நுழைந்துள்ள தற்போதைய போர் நடவடிக்கைகளில் தாய்நாடு எந்த அகங் கார நோக்கத்தையும் பின்பற்றவில்லை, ஆனால் அது நாகரி கத்துக்கும் அமைதிக்கும் அறிவொளிக்கும் விரோதமான தீமைகளை அடிபணியச் செய்ய முயல்கிறது' என்று சொன் னார். அக்கால ஜப்பானிய பௌத்த துறவிகளுக்கு, நாகரிக மும் பௌத்தமும் அச்சுறுத்தப்படும் வரை போரைத் தவிர்க்க வேண்டும் என்பதே நோக்காக இருந்தது. அதேநேரம் போர் நியாயப்படுத்தப்படும் போது அதற்கான முழுமையான ஆத ரவை பௌத்த துறவிகள் அனைத்து வகைகளிலும் வழங்கி வந்திருக்கிறார்கள்.

இலங்கையின் போரில், ஆயுதங்கள், விமானங்கள், பிற இரா ணுவ உபகரணங்களில் புத்த உருவங்கள் பதிக்கப்பட்டன. இராணுவப் பணியாளர்கள் இரக்கம் போன்ற பௌத்தக் கொள்கைகளை இணைத்து, கொலையை நியாயப்படுத்த வெறுமை போன்ற கருத்துக்களைப் பயன்படுத்தினர். இரா ணுவ நடவடிக்கைகளுடன் பௌத்த உருவங்களையும் அடை

யாளங்களையும் புகுத்தும் இந்த முறை சித்திரவதைச் செயல்கள் வரை நீண்டுள்ளது. இந்த சித்திரவதைகளும் பௌத்த தத்துவங்களின் பெயரால் நியாயப்படுத்தப்பட்டுள்ளன.

இவை குறித்து கேள்வி எழுப்பப்படுகின்ற போதெல்லாம் இரண்டு வகையாக பதில்கள் எப்போதும் வழங்கப்படுகின்றன. முதலாவது, பௌத்தர்கள் இந்த மோதல்களில் ஈடுபட்டால் அவர்கள் உண்மையான பௌத்தர்கள் அல்ல. பௌத்தமும் வன்முறையும் குறித்து ஒரு இலங்கைப் பௌத்தரிடம் உரையாடும் போது இப்பதில் நிச்சயம் கிடைக்கும். ஆனால் இந்தப் பதில் ஒரு சவாலான சிக்கலை எதிர்கொள்கிறது. 'உண்மையான' பௌத்தர்களைக் கண்டறியவும் உறுதிப்படுத்தவும் உலகளாவிய அதிகாரம் எதுவும் இல்லை. பௌத்த சங்கங்கள் (துறவற சமூகங்கள்) தங்கள் குறிப்பிட்ட சமூகத்



தைச் சேர்ந்த பிக்குகளை நீக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும், அனைத்து துறவிகளையும் ஆய்வு செய்வதற்கான உலகளாவிய தளம் என்ற ஒன்று இல்லை, எனவே யார் உண்மையான பௌத்தர் என்பது கேள்விக்குரியது மட்டுமன்றி முடிவு செய்யப்படவியலாததும் கூட.

இரண்டாவது, பிரபலமான பதில், பௌத்தத்தின் தாக்கம் கொண்ட வன்முறையின் எடுத்துக்காட்டுகள் உண்மையில் பௌத்தம் பற்றியது அல்ல, மாறாக இராணுவம் மற்றும் அரசியல் பற்றியது. இந்த வகையில், ஜப்பானிய மற்றும் இலங்கைப் போர்கள், அரசாங்கங்கள் தங்கள் போர்க்குணமிக்க முயற்சிகளில் பௌத்தத்தை மேலோட்டமாகப் பயன்படுத்திய வழிகளை வெளிப்படுத்துகின்றன. இந்த நடவடிக்கைகளில் அரசு மற்றும் அரசியலின் பொருத்தம் பற்றி எந்த சர்ச்சையும் இல்லை. இருப்பினும், இந்த உதாரணங்களை அரசியலுக்குள் குறுக்குவது சிக்கலானது.

இங்கே பிரச்சினை யாதெனில், பௌத்த மதம் பற்றிய மேற்கத்தேய ஆய்வுகள், ஏனைய மேற்கத்தேய சமயங்களின் அதே சட்டகத்தின் வழி விளங்கப்பட்டன. குறிப்பாக பௌத்தம் குறித்த முற்கற்பிதங்கள் பௌத்த கோட்பாடுகள் குறித்த வரைவிலக்கண உருவாக்கத்தில் பாரிய சிக்கல்களை உருவாக்கியுள்ளன. இதில் வன்முறை குறித்த பௌத்த சிந்தனைகள் முக்கியமானவை. பௌத்த நெறிமுறைகள் மற்றும் வன்முறை பற்றி விவாதிக்கும் போது ஒரு பொதுவான குறிப்பு அகிம்சை பற்றிய கருத்தாகும். பௌத்தம் உட்பட பல தெற்காசிய மதங்களில் அகிம்சை என்பது அடிப்படையான நெறிமுறைக் கருத்தாகும். மோகன்தாஸ் காந்தியின் பணி மற்றும் சத்தியாகிரகம் எனப்படும் அவரது அமைதியான எதிர்ப்பின் மூலம் மேற்குலகம் அகிம்சையை நன்கு அறிந்தது. காந்தியைப் பற்றி எழுதப்பட்ட ஏராளமான புலமைசார் எழுத்துக்கள் அவரது 'அகிம்சையை' வன்முறையின்மை என்று மொழிபெயர்த்தன. இதைத் தொடர்ந்து அகிம்சையை 'வன்முறையின்மை' என்று மொழிபெயர்க்கும் இந்தப் போக்கு பரவியது.

காந்தியால் பிரபலமான அகிம்சைக்கான வார்த்தையான 'அஹிம்சாவின் வேர் ஹிம்சா'. அதனுடைய நேரடியான வரையறை, 'தீங்கு செய்ய விரும்புவது'. பௌத்த நெறிமுறைகள் மற்றும் வன்முறை பற்றிய விவாதத்திற்கு அஹிம்சைக் கொள்கை மிகவும் முக்கியமானது. ஆனால் அகிம்சையை 'வன்முறையின்மை' என்று மொழிபெயர்ப்பது, இந்த வார்த்தையின் முழு வரையறைகளையும் பௌத்த தத்துவத்திற்குள் அதன் பொருத்தத்தையும் உள்ளடக்கத் தவறிவிட்டது. ஸ்டீபன் ஜெங்கின்ஸ் போன்ற பௌத்த ஆய்வு அறிஞர்கள், அகிம்சையின் தவறான மொழிபெயர்ப்பையும், பௌத்தம் மற்றும் வன்முறை பற்றிய விவாதங்களுக்கு இது கொடுக்கும் குழப்பத்தையும் விமர்சன ரீதியாக எடுத்துரைத்துள்ளனர். அகிம்சை என்ற சொல் ஹிம்சா என்பதிலிருந்து உருவானது, இது வன்முறையைக் குறிக்காது, ஆனால் காயம் அல்லது தீங்கு என்பதைக் குறிக்கும். அதுபோல, அகிம்சை என்றால் தீங்கு செய்யாதது அல்லது காயமில்லாதது என்று பொருள். இந்த முக்கியமான வேறுபாடானது மேற்கத்தேய ஆய்வாளர்களின் 'வன்முறை' குறித்த மோசமான பயன்பாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

### வியாக்கியானப் பிரச்சினைகள்:

பௌத்தம் மற்றும் வன்முறை பற்றிய இலங்கையின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொண்ட, டெஸ்ஸா பர்தோலோமியூஸ் கொலை செய்வதற்கு ஒரு பௌத்த தர்க்கம் இருப்பதாக வாதிடுகிறார். பொதுவாக முதன்மைக் கடமைகளைப் போலவே தேரவாத பௌத்தத்தில் வன்முறையில் ஈடுபடுவது தவறாக இருந்தாலும், எந்த வன்முறைச் செயலும் நன்மை பயக்குமானால் பௌத்தம் வன்முறையை அனுமதிக்கும் என்று அவர் கூறுகிறார். உள்நாட்டுப் போரின் போது இலங்கைத் துறவிகளை பர்த்தலோமியூஸ் நேர்காணல் செய்தார். தன் உரையாடல்கள் முழுவதும், தற்காப்பு வன்முறை, அகிம்சை கொள்கையை மீறாது என்று மீண்டும் மீண்டும் துறவிகள் வலியுறுத்துவதை அவர் கண்டார். பார்தோலோமியூஸ் இந்த முரண்பாட்டை முதன்மையான இயக்கவியலின் கட்டமைப்பிற்குள் கண்டறிகிறார். பௌத்தத்தின் பாதுகாப்பு ஒரு புதிய சூழலை வழங்குகிறது, இது வேறுபட்ட கடமையைக் கோருகிறது. இந்த வித்தியாசமான கடமைக்கு வன்முறை தேவைப்படுகிறது. இந்த நிலைப்பாடு இலங்கையின் புராண-வரலாற்றுக் கதையான மஹாவம்சத்தில் வியக்கத்தக்க வகையில் தெளிவாகத் தெரிகிறது. பார்க்க:Tessa Bartholomeusz, In Defense of Darma: Just-War Ideology in Buddhist Sri Lanka. Routledge: 2002

துட்டகைமுனுவின் போரும் வன்முறையும் பௌத்தத்தைக் காப்பது என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்டதை எடுத்துக்காட்டும் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர இவ்வாறு சொல்கிறார்:

மில்லியன் கணக்கானவர்களைக் கொன்றதை அடுத்து குற்

றத்தை நிராகரிப்பது அகிம்சைக்கான கடமையின் பின்னணியில் நிகழ்வது விந்தையானது. இங்கே, சூழல் அகிம்சையில் இருந்து பௌத்தக் கோட்பாட்டின் பாதுகாப்பு மற்றும் மகிமையைக் காப்பதற்கான கடமை என்ற வடிவத்தை எடுக்கிறது. துட்டகைமுனுவின் போர் அரசியல் அதிகாரத்திற்காக அல்ல, மாறாக புத்தரின் கோட்பாட்டை நிலைநாட்டுவதற்காக என்று விளக்குவதனூடாக வன்முறை நியாயப்படுத்தப்படுகிறது.

டேனியல் கென்ட் பர்தோலோமியூஸ் முன்வைத்த வாதங்களின் மீதான வலுவான விமர்சனத்தை வழங்குகிறார். அவர் இலங்கையில் களப்பணி மேற்கொண்டதோடு போர் வீரர்களுக்கு பிரசங்கம் செய்யும் புத்த பிக்குகளுடன் பயணம் செய்தார். பௌத்தர்கள் எவ்வாறு போரில் ஈடுபடலாம் மற்றும் அவர்களின் பௌத்த பாரம்பரியத்தைப் பேணுவது போன்ற பர்தோலோமியூஸ்ஸின் அதே கேள்விகளுடன் கென்ட் மல்யுத்தம் செய்தபோதும், அவரது முடிவுகளுடன் கென்ட் உடன்படவில்லை. வெளிநாட்டுக் கருத்துக்களைத் திணிப்பதற்குப் பதிலாக, பௌத்த முறைக்கு உள்நாட்டில் உள்ள கருத்துக்கள் மூலம் பௌத்தம் மற்றும் வன்முறை பற்றிய பகுப்பாய்வைக் கண்டறிவது முக்கியம் என்று அவர் வாதிடுகிறார். குறிப்பாக மத அமைப்புகளைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட சூழல்களுக்குள் நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் முக்கியமானது. ஒரேயொரு சிங்கள-பௌத்த தேசம் என்ற உணர்வும் பாதுகாப்பின்மையும் இலங்கையில் பௌத்தத்தின் பெயரால் வன்முறையை நியாயப்படுத்துகிறது என்று கென்ட் வாதிடுகிறார். பார்க்க: Daniel W. Kent, 'Onward Buddhist Soldiers: Preaching to the Sri Lankan Army' In Buddhist Warfare. Oxford University Press: 2010

பாதுகாப்பின் முதன்மையான தர்க்கம் இலங்கை பௌத்த மரபுகளில் மட்டுமல்லாமல் தாய்லாந்தில் உள்ள பௌத்தர்களும் இதைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதே. உதாரணமாக, 1970-களில், தாய்லாந்தின் முக்கிய பௌத்த துறவி கிட்டிவுத்தோ, கம்யூனிசத்திற்கு எதிராக பௌத்தத்தை பாதுகாக்க தனது பிரச்சாரமான 'நவஃபோன்' உரைகளின் போது மனிதர்-மனிதர் அல்லாத வேறுபாட்டைப் பயன்படுத்தினார். கிட்டிவுத்தோவின் கூற்றுப்படி, ஒரு கம்யூனிஸ்ட் மிருகத்தனமான ஒரு நபரே தவிர முழுமையான நபர் அல்ல. மிக முக்கியமாக, அவரது மரணம் பௌத்தக் கோட்பாட்டைப் பாதுகாக்க உதவும் என்றார்.

கம்யூனிஸ்டுகளைக் கொல்வதில் தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்த, கிட்டிவுத்தோ, 'குதிரைப் பயிற்சியாளரான கேசியிடம்', புத்தரின் உரையாடலைத் துணைக்கழைக்கிறார். குதிரைப் பயிற்சியாளருடன் புத்தரின் உரையாடல் பயிற்சி என்பதில் மக்களுக்கும் குதிரைகளுக்கும் இடையிலான ஒற்றுமையைப் பற்றியது. ஒரு கட்டத்தில், ஒரு நபர் எந்த பயிற்சிக்கும் அடிபணியவில்லை என்றால், 'அடங்காத' நபர் கொல்லப்படுகிறார் என்று புத்தர் விளக்குகிறார். இருப்பினும், இந்தக் கூற்றுக்குப் பிறகு, புத்தர் இந்த நிகழ்வில், மரணம் என்பது அந்த நபரின் தேவைகளை கைவிடுவதாகும் என்று விளக்குகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நபரின் மரணம் என்பது அவர் தனது திறன்களை கொலை செய்வதாகும்.

கிட்டிவுத்தோவின் இந்த உரையின் பயன்பாடு விவாதத்திற்குரியதாக இருந்தாலும், பௌத்த விதிவிலக்குகள் எவ்வாறு முதன்மையான கதையாடல்களில் பயன்படுத்தப்பட்டன என்பதை நிரூபிக்கிறது. கிட்டிவுத்தோ தனது வாதத்தின் விதிவிலக்கான தன்மையை ஒப்புக்கொண்டாலும் பௌத்தத்தையும் தேசத்தையும் பாதுகாக்க கொலை அவசியம் என்று வாதிடுகிறார்: மேலும் சொல்கிறார்: 'எங்கள் மாவீரர்கள் மக்களைக் கொல்ல வேண்டும்; இந்த கொலைச் செயல் நிச்சயமாக தீங்கானது என்றாலும் அந்த மக்கள் இந்நாட்டின் எதிரிகள் என்பதால் அந்தக் கொலைகளுக்கான தகுதி அதிகம். இங்கு, பௌத்தத்தின் பாதுகாப்பு என்பது கொல்லப்பட்டவர்களை விட முக்கியமானதாக உள்ளது. எனவே அவர்கள் மிருகங்களை விடச் சிறந்தவர்கள் அல்ல.' விரிவான குறிப்புகளுக்குப் பார்க்க: Charles Keyes, 'Political Crisis and Militant Buddhism,' In Religion and Legitimation of Power in Thailand, Laos, and Burma, ANIMA Books: 1978.

2004 முதல், தெற்கு தாய்லாந்தில் வசிக்கும் புத்த பிக்குகளுக்கு பாதுகாப்பின் தேவை அதிகரித்தது. ஜனவரி 2004-ல் தொடங்கி, மலாய் முஸ்லீம் கிளர்ச்சியாளர்கள் தாய்லாந்தின் தெற்கு மாகாணங்கள் மூன்று முழுவதும் பௌத்த சமூகத்திற்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர். 20 ஆண்டுகளுக்கும் மேலாக, தாய்லாந்து அரசாங்கம் இந்த மாகாணங்களை - பட்டானி, யாலா, நராதிவாட் - இராணுவச் சட்டத்தின் கீழ் வைத்துள்ளது. தற்செயலான வன்முறை மற்றும் இடைவிடாத பயம் காரணமாக, சில தாய்லாந்து பௌத்த பிக்குகள் கைத்துப்பாக்கிகளை அருகில் வைத்துக்கொண்டு இரவில் அவற்றுடன் உறங்கியுள்ளனர். இது துறவற விதிகளை மீறுவதாக அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் தங்களையும் மடத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தாலே தாம் துறவற விதிகளை மீறுவது பற்றிக் கவலைப்படுவதில்லை என்று விளக்குகிறார்கள்.



இந்த நெருக்கடியைக் கையாள, தாய்லாந்து அரசாங்கம் எதிர்த்துப் போராடிய ஒரு வழி இரகசிய இராணுவத் துறவிகளை நிலைநிறுத்துவதாகும். இந்த வீரர்கள் பௌத்த துறவிகளாக நியமிக்கப்பட்ட பிறகு, தங்கள் இராணுவ அந்தஸ்து, ஆயுதங்கள் மற்றும் மாதாந்த சம்பளத்தை இரகசியமாக வைத்திருக்கிறார்கள். இந்த நடைமுறை பல பௌத்த மடாலயச் சட்டங்களை மீறும் அதேவேளையில், இராணுவத் துறவிகள் பாதுகாப்பு என்ற சொல்லாட்சி மூலம் தங்கள் இருப்பை நியாயப்படுத்துகிறார்கள்.

இராணுவத் துறவிகள் பௌத்தத்தைப் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை அவர்களது இருப்புக்கான முதன்மைக் காரணம் என்று நியாயப்படுத்துகின்றனர். இதற்கு வன்முறை

யைப் பயன்படுத்த வேண்டும் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். இராணுவத் துறவிகள் வன்முறையை தீவிர மாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், இந்தக் குறிப்பிட்ட சூழலில், அது அவசியம் என்பதை அவர்கள் உணர்ந்துள்ள னர். இது பௌத்தமும் வன்முறையும் குறித்த இன்னொரு பரி மாணத்தைக் காட்டி நிற்கிறது. இது குறித்த தகவல்களுக்கு பார்க்க: Michael Jerryson, Buddhist Fury: Religion and Violence in Southern Thailand. Oxford University Press: 2011.

## தொடரும் குறிப்புகள்:

'பௌத்தம்' என்பது ஒன்றல்ல. அதைப் பௌத்தங்கள் என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் இவை புத் தரின் போதனைகளின் அடிப்படையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கலாசார நிறுவனங்களின் வலைப்பின்னலா கும். புத்தர் ஒரு வரலாற்று கதாபாத்திரமாகக் கருதப்பட்டா லும், இந்த வரையறை வேண்டுமென்றே பௌத்த அமைப்புக ளுடன் தொடர்புடைய பௌத்த மரபுகள், குறிப்பிட்ட நம்பிக் கைகள், நூல்கள் மற்றும் தலைவர்கள் ஆகியவற்றில் காணப் படும் வேறுபட்ட முரண்படும் பண்புகளை உள்ளடக்கியதாக உள்ளது. பௌத்த கொள்கைகள் மற்றும் அதைப் பின்பற்று பவர்களில் மகத்தான பன்முகத்தன்மை உள்ளது. எனவே பௌத்தம் என்ற ஒற்றைப் பொதுமைப்படுத்தலுக்குள் இதை அடக்கிவிட முடியாது.

ஏறக்குறைய ஒவ்வொரு பௌத்த பாரம்பரியமும் நான்கு உன் னத உண்மைகளை அதன் அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டிருந்தாலும், அவற்றை விரிவாக விளக்கி விளக்கும் ஒருங்கிணைக்கும் நியமன நூல் எதுவும் இல்லை. சிங்களம், தாய், பர்மிய, சமஸ்கிருதம், பாலி, மற்றும் கெமர் ஆகிய மொழிகளின் புனித நூல்களை ஒப்பிடும் போது உன்னத உண்மைகளின் மாறுபட்ட விளக்கங்களை ஒருவர் எளிதாகக் காணலாம். அத்துடன் ஒவ்வொரு மொழியியல் வகையிலும் புவியியல் வேறுபாடுகள் உள்ளன. கூடுதலாக, ஒவ்வொரு பௌத்த பாரம்பரியமும் ஒரு பாரம்பரியத்தின் இயல்பைக் கொண்ட தனித்துவமான நடைமுறைகள் மற்றும் கோட்பாடுக ளைக் கொண்டுள்ளது.

பௌத்த வன்முறை என்பது எந்த வகையிலும் போரின் எல் லைக்கு உட்பட்டது அல்ல. உதாரணமாக, உணவுக்காக விலங்குகளைக் கொல்வதற்கான நெறிமுறை நியாயம் பௌத்த மரபுகள் முழுவதும் அதிகம் விவாதிக்கப்படுகிறது. இந்த பிரச்சினையில் பல்வேறு கருத்துக்கள் இருந்து வருகின் றன. பெரும்பாலான சீன பௌத்த மரபுகள் மரக்கறி உணவுப் பழக்க வாழ்க்கை முறையை பரிந்துரைத்தாலும், திபெத்திய மற்றும் மங்கோலிய புத்த மரபுகள் உணவுக்காக விலங்கு களை அறுப்பதை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டன. சாந்தி அசோக் போன்ற பிளவுபட்ட குழுக்களைத் தவிர, பிற பிரிவு கள் தங்கள் துறவிகள் மாமிசம் சாப்பிடுவதைத் தடைசெய்கி றார்கள், இலங்கை, பர்மா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுக ளில் உள்ள தேரவாத பௌத்த துறவிகள் தங்களுக்கு வழங் கப்படும் மாமிசம் உட்பட எந்த உணவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரசியல் நோக்கங்களுக்காகச் செய்யும் தற்கொலை ஒரு வகையான தியாகம் என்பது குறிப்பாக பௌத்த வட்டாரங்க ளுக்குள் சர்ச்சைக்குரியது. வியட்நாமில் நடந்த அமெரிக்கப் போரின் போது, வியட்நாமியத் துறவிகள் தீக்குளித்து, சமூக உணர்வில் மாற்றத்தைத் தூண்டுவதற்காகத் தங்கள் நிலை யற்ற உடல்களாகக் கருதியவற்றைத் தியாகம் செய்தனர். அவர்களின் நோக்கங்கள் ஒரு தனித்துவமான சூழலால் நுணுக்கமாக இருந்தாலும், பௌத்த மரபுகளில் துறவற தற் கொலைகள் அசாதாரணமானது அல்ல.

இவ்வாறாக, வரலாறு முழுவதும் தனிநபர்களாக பௌத்தர்க ளின் நெறிமுறைத் தெரிவுகளின் ஒரு பகுதியாக வன்முறைப் பிரச்சினைகள் இருந்துள்ளன. இந்த சிக்கல்கள் பல நூற் றாண்டுகளாக அரசியல் அமைப்புகள் மற்றும் நிறுவனங்க ளின் கட்டமைப்பு மற்றும் அமைப்பு முறைகளின் ஒரு பகுதி யாகும். ஒழுங்கமைக்கப்பட்ட பௌத்த வன்முறையின் இந்த வடிவங்களின் இன்றைய ஆதரவாளர்கள் பெரும்பாலும் வன் முறையை நியாயப்படுத்தும் பௌத்த புராண வரலாறுகளை யும், போர்க் கதைகள் நிறைந்த வரலாறுகளையும் குறிப்பிடு கின்றனர்.

பௌத்தத்தில், ஒவ்வொரு மத பாரம்பரியத்திலும், போர் என் பது பல்வேறு வழிகளில் மதத்துடன் தொடர்புடையது. சில போர்கள் பௌத்த சமூகத்தை வெவ்வேறு நம்பிக்கையிலி ருந்து எதிரிகளுக்கு எதிராக பாதுகாக்க நடத்தப்படுகின்றன. மற்ற சந்தர்ப்பங்களில் பௌத்தத்தின் இரண்டு வெவ்வேறு பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் மோதியுள்ள னர். இதன் அடிப்படையாக எந்த நம்பிக்கை சரியானது மற் றும் எந்த சமூகம் வலிமையானது என்பது இருந்தது. இன்னும் பிற சந்தர்ப்பங்களில், புத்த மதக் கருத்துக்கள் மற்றும் துறவ றத் தலைவர்கள் போர்களுக்கு தங்கள் சட்டபூர்வமான தன் மையைக் கொடுத்துள்ளனர். இல்லையெனில் அவை வெறு மனே பாதுகாப்பு, வெற்றி அல்லது பழிவாங்கும் போர்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கலாம்.

ஒவ்வொரு முறையும் பௌத்தத் தலைவர்கள் (சங்கம்) தம் காலத்தில் வாழ்ந்த அரசியல் ஆட்சியாளர்களுடன் நெருக்க மாகப் பழகும்போது சங்கம் சீரழிந்து சீரழிந்து வந்ததாக பௌத்த அரசியல் வரலாறு கூறுகிறது. சங்கத்தின் அடிமைத் தனமான அடிபணிதலும் ஆட்சியாளர்களின் சார்பாகச் செயற்படும் செயல்களும் சங்கமும் பௌத்தத் தலைவர்க ளும் அரசின் நடைமுறைக் கையாளாக மாறுவதற்கு வழிவ குத்தது.

இலங்கையில் பௌத்தர் அல்லாதவர்களாக தமிழ் சிறுபான் மையினருக்கு எதிராக அவர்களின் அரசாங்கத்தின் சமீபத் திய இராணுவ நடவடிக்கைகள் 'புத்த தர்மத்தைப் பாதுகாப்ப தற்காக' செய்யப்பட்டதாக சமகால சிங்கள பௌத்தர்கள் கருதுகின்றனர். இது யதார்த்தத்தை விளக்குகிறது: வன்மு றைக்கும் பௌத்தத்திற்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்பின் அடிப்படைக் காரணங்கள் கோட்பாடு அல்லது நடைமுறையின் தவறான புரிதலைக் காட்டிலும் மிகவும் சிக்க லானவை. இது புத்த மதத்தைப் போலவே மற்ற உலக மதங் களுக்கும் பொருந்தும். இந்தப் பின்புலத்திலேயே இலங்கை யின் இறுதிப் போரின் பேரழிவை பௌத்தத்தின் பெயரில் நியாயப்படுத்தியதை நோக்க நேர்கிறது.



meenilankco@thaiveedu.com


இரகுவம்மிசம்.
அரசகேசரி
ச. பொன்னம்பலபிள்ளையால்
1887.

# வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் பங்களிப்பு: அரசகேசரியின் இரகுவமிசம்

– மைதிலி தயாநிதி

வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தல் என்பது பல நூற்றாண்டுகளாகத் தொடரும் செயற்பாடு என்பதும், அதில் ஈழத்தவரும் ஆர்வமுடன் தங்கள் பங்களிப்பை நல்கியுள்ளனர் என்பதும், 'தமிழ்ப்படுத்தல்' என்பதை மொழிபெயர்ப்பு, தழுவல் என இரண்டாக வகுத்து நோக்கலாம் என்பதும், ஈழத்தவரின் தமிழ்ப்படுத்தற்பணி (அ) காலனித்துவத்திற்கு முந்திய காலகட்டம், (ஆ) காலனித்துவ காலம், (இ) சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலம் என மூன்று காலகட்டங்களாக வகுத்து நோக்கப்படும் என்பதும் முந்தைய கட்டுரையில் கூறப்பட்டது. இனி இக்கட்டுரையில் காலனித்துவ காலத்திற்கு முன்னர், ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தில் அரசோச்சிய காலத்தில் (பொதுசகாப்தம் 1210-1620) தமிழ்ப்படுத்தப்பட்ட காவியமான அரசகேசரியின் இரகுவமிசம் தொடர்பாக நோக்கலாம்.

நூற்தலைப்பு பற்றிய சிறுகுறிப்பொன்று. 1887-ல் ச. பொன்னம்பலபிள்ளையால் பதிப்பிக்கப்பட்ட நூலின் தலைப்பு 'இரகுவம்மிசம்' என்று கொடுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையும் அவ்வாறே தனது கட்டுரையில் எழுதியுள்ளார். வம்சம் என்பது வடமொழிச் சொல். அதைத் தமிழில் வமிசம் என்றே பொதுவாக எழுதுவர். உதாரணம்: மகாவமிசம் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியில் வம்சம், வமிசம் என இருசொற்களும் உண்டு. ஆனால் வம்மிசம் என்ற சொல் இல்லை. ஆனால், அவ்வாறு எழுதும் வழக்கும் உண்டு என்று தெரிகிறது.

'ஈழத்தில் தனித்துவமான ஓர் இலக்கியப் பாரம்பரியம் தோன்றுவதற்கான அடிக்கல் நாட்டப்பெற்ற' ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலிருந்து யாழ்ப்பாண வடமொழி இலக்கிய மரபின் வரலாறு தொடங்குகிறது எனலாம். 13-ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தாபிக்கப்பட்ட ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சிக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களுள் பிரதானமானது காளிதாசரின் இரகுவமிசத்தை முதனூலாகக் கொண்ட அரசகேசரியின் இரகுவமிசம் எனும் காவியமாகும். 'வன்றிசைக் காளிதாசன் வடமொழி தென்றிசைத் தமிழால் நனி செப்புகேன்' என்று அரசகேசரி, பாயிரத்தில் பாடுகின்றார். இங்கு 'வன்றிசை' என்பது வடதிசையைக் குறிக்கிறது.

அரசகேசரியின் காலம் குறித்து இருவகையான கருத்துகள் நிலவுகின்றன. யாழ்ப்பாண வைபவ மாலை, அவரைக் கனக சூரிய சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் மருமகன் என்று கூறு



கிறது. இக்கருத்தை ஏற்போமாயின், 15-ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அரசகேசரி வாழ்ந்தார் எனக் கொள்ளலாம். எனினும், போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் குவெய்றோஸ் அரசகேசரி 1591 முதல் 1616 வரை ஆட்சி செய்த எதிர்மன்னசிங்கனின் தம்பி எனக் கூறியுள்ளார். இதன் பிரகாரம் அரசகேசரியின் காலத்தை 16-ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியும் 17-ம் நூற்றாண்டின் தொடக்கமும் என்று கொள்ளலாம். இதையே. வேலுப்பிள்ளை ஏற்றுக் கொள்கிறார்.

காளிதாசரின் வடமொழி இரகுவம்ச காவியம் சூரிய வம்சத்தி

னரின் விருத்தாந்தங்களை எடுத்துக்கூறுவது. இக்காவியத்தில் முக்கியமான மன்னர் இருவர்: ஒருவர் இராமர், மற்றவர் இராமரின் முன்னோருள் ஒருவரான இரகு. இரகுவின் பெயராலேயே இராமர் பிறந்த வம்சம் 'இரகுவம்சம்' என்று அழைக்கப்படுகிறது. இராமருக்கும், ஆரியச் சக்ரவர்த்திகளுக்கும் இடையே உள்ள தொடர்பின் தன்மை என்ன? இந்த உறவு எவ்வாறு உருவாக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டது? மேலும், இத்தகைய தொடர்பு உருவாக்கப்பட்டதற்கான அடிப்படை உந்துதல்கள் அல்லது வரலாற்றுச் சூழல்கள் என்ன? என்ற கேள்விகளுக்கு விடை காண இக்கட்டுரை முயல்கிறது.


உ
கணபதி துணை
யாழ்ப்பாணத்து அரசரும்
தமிழை விருத்தி செய்தவரும்
மஹாவித்துவானுமாகிய
செகராசசேகரமஹாராஜாவினல்
இயற்றுவிக்கப்பட்ட

செகராசசேகரமாலை
மூலமும், உரையும்.

யாழ்ப்பாணம்
ஜோதிஷர்
வி. சபாபதிஐயரால்
பரிசோதித்து
தமது
ஸ்ரீபாஸ்கர யந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

இக்கட்டுரை அரசகேசரியின் இரகுவம்சம் தென்னிந்தியாவில் பதினான்காம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்ட விஜயநகர ஆட்சிக்காலத்தில் முக்கியத்துவம் பெற்ற இராமர் வழிபாட்டுடனும், இராமரை தெய்விக, தார்மிகத் தலைமையாகக் கட்டமைத்தற் செயற்பாட்டுடனும் தொடர்புடையது என்பதை வலியுறுத்துகிறது. அத்துடன், வடமொழிக்காவியத்தின் தமிழாக்கம் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசியல் அங்கீகாரத்திற்கும் (Political Legitimacy), பண்பாட்டு அடையாளத்துக்குமான (Cultural Identity) கருவியாகத் திகழ்ந்தது என்பது இக்கட்டுரை முன்வைக்கும் கருத்தாகும்.

வேலுப்பிள்ளை 28.11.1988-ல் 'அரசகேசரியின் இரகுவம்மிசமும், அது எழுந்த இந்துப் பண்பாட்டுச் சூழலும்' என்ற தலைப்பில் நிகழ்த்திய சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரையில் இவ்விடயம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளார். முன்னுரை, ஈழநாட்டுப் பழந்தமிழ் இலக்கிய நூல், தோன்றிய காலமும் காரணமும், ஆழ்வார் திருநகரியின் வைணவத் தமிழ்ச் சூழல், யாழ்ப்பாண மன்னரும் இரகுவம்மிசக் கதையும், தஞ்சாவூரின் இராமாயணச் சூழல், பரராசசேகரனைக் கவர்ந்திருக்கக்கூடிய கதை, கம்பர் காட்டிய வழியில், இன்பச் சுவை, தழுவலா, மொழிபெயர்ப்பா?, வித்துவத்தன்மை, அரசகேசரியின் கவிச் சிறப்பு என வெவ்வேறு தலைப்புகளின் கீழ்த் திரட்டப்பட்ட பயன்மிக்க தகவல்களையும், ஊகங்களையும் கொண்டதாய் அக்கட்டுரை அமைந்துள்ளது. ஆனால், தரப்பட்டுள்ள செய்திகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தக் கூடிய மையமான வாதம் அதில் இல்லை. மேலும், இராமர் வழிபாடு அரசியல்ரீதியான முக்கியத்துவம் பெறுவது விஜய நகர அரசு காலத்திலேதான். ஆனால் இது குறித்து அவரது கட்டுரை போதிய கவனம் செலுத்தவில்லை. ஒருவகையில் அக்குறையை ஓரளவேனும் நிவிர்த்தி செய்யுமுகமாகவே எனது கட்டுரை அமைகிறது.

விஜயநகர ஆட்சிக்காலத்தில் இராமாயணத்தினதும், இராமவழிபாட்டினதும் செல்வாக்கு அதிகரித்தமைக்குரிய காரணங்களை இனி நோக்குவோம். ஷெல்டன் போலக் (Sheldon Pollock) எனும் புலமையாளர் 'Ramayana and Political Imagination In India' எனும் தனது கட்டுரையில் முஸ்லிம் படையெடுப்புகள் மற்றும் டெல்லி சுல்தானத்தின் (Delhi Sultanate)விரிவாக்கம் என்பவற்றை அதற்கான காரணங்களாகக் காட்டுகின்றார். இந்த வரலாற்று நிகழ்வுகளால் இராமாயணமானது அரசியல் மற்றும் கருத்தியற் சாதனமாக மாறியது என்றும், இராமரின் கதை அரசியலிலும், பொது வாழ்விலும் முக்கிய இடத்தை வகிக்கத் தொடங்கிற்று எனவும், அவற்றின் விளைவாக இராமர் கோவில்களின் எழுச்சியும், அவரது வழிபாட்டுக்கு அரசின் ஆதரவும் அதிகரித்தது என்றும் அவர் கூறுகிறார். தக்கணத்தில் (Deccan) டெல்லி சுல்தானத்தின் ஆட்சி விரிவாக்கப்பட்ட பின்னர்தான், 1336-ம் ஆண்டில் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டதுடன், தலைநகரின் மையத்தில் இராமர் கோயிலும் அமைக்கப்பட்டது. சுருங்கக்கூறின், டெல்லி சுல்தானிய அரசு விஸ்தரிக்கப்படும்போது இராமாயண காவியம் முன்னொருபோதும் அனுபவித்திராத பிரபல்யத்தை எய்திற்று. விஜயநகர ஆட்சியாளர்கள் இராமரைத் தெய்விக அரசபதத்தின் (Divine Kingship) குறியீடாகக் கொண்டனர். அத்துடன், 'நாட்டின் சுதேசிகள்' என்ற வகையில் தமது ஆட்சியின் தார்மிக உரிமையை நிலைநாட்டவும், 'மற்றவர்கள்' (others) என்று பார்க்கப்படும் அந்நியப் படையெடுப்பாளர்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்ளவும், 'இந்து' பண்பாட்டு அடையாளத்தையும், ஐக்கியத்தையும் வலுப்படுத்தவும் 'இராமர்' எனும் பிம்பத்தைப் பயன்படுத்தினர்.

ஆனால், அஜய் கே. ராவ் தனது ' A New Perspective on the Royal Rama Cult at Vijayanagara' என்ற கட்டுரையில் விஜயநகரப் பேரரசின் காலத்தில் இராமர் வழிபாட்டின் எழுச்சியைப் பற்றிய ஷெல்டன் போலொக்கின் கருத்துக்கு மாற்றான ஒரு நுணுக்கமான பார்வையை முன்வைக்கிறார். போலொக், இரா

மர் வழிபாட்டின் தோற்றத்தை, இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி விரிவாக்கத்திற்கு எதிராக நிகழ்ந்த ஓர் அரசியல் விளைவாகக் காட்டுகிறார். ஆனால், ராவ், இதனை மறுத்து, தென்னிந்திய ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தின் இறையியல் மற்றும் பண்பாட்டுத் தாக்கங்களை முக்கிய காரணங்களாகக் குறிப்பிடுகிறார். இராமாயணம் வைஷ்ணவ தத்துவ அடிப்படைகளில் மறு மதிப்பீடு செய்யப்பட்டதையும், தெய்விகக் கருணை, சரணாகதி தத்துவங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டதையும் எடுத்துக் காட்டுகிறார். விஜயநகர காலத்தில் இராமர் வழிபாட்டை நிறுவனமயமாக்குவதில் ஸ்ரீவைஷ்ணவர்களின் பங்கு முக்கியமானதாக இருந்தது என்று ராவ் வலியுறுத்துகிறார். அவர்கள் விஜயநகர மன்னர்களின் குலகுருவாகப் பணியாற்றியதுடன் அரசவைப் பண்பாடு (Court Culture) ஆலயநடைமுறைகள் (Temple Practices) முதலானவற்றில் செல்வாக்கும் செலுத்தினர். இராமர் வழிபாட்டை மையமாகக் கொண்ட விஜயநகர அரசு எனும் கருத்தாக்கம் முதலாம் தேவராயர் காலத்தில் (1406–1422), அதாவது பதினைந்தாம் நூற்றாண்டிற்றான் நகர் மத்தியில் உருவான இராமர் கோயிலுடன் தொடங்கியது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். மொத்தத்தில், இராமர் வழிபாட்டின் எழுச்சி, இஸ்லாமிய அரசியல் ஆதிக்கத்துக்கு எதிரானதன்று என்று கூறமுடியாது; மாறாக, தென்னிந்திய ஸ்ரீவைஷ்ணவ இறையியல், பண்பாட்டு வளர்ச்சியின் நீண்டகால விளைவு என அதை எடுத்துக் கொள்வதே பொருத்தம் என்று அவர் கருதுகிறார்.

ஸ்ரீவைஷ்ணவமரபில் இராமாயண இறையியல் வளர்ச்சியை ஆராயும்போது, இதற்கு உந்துகாரணிகளாக இருந்திருக்கக் கூடிய அரசியல் நிலைமைகளின் முக்கியத்துவத்தை ராவ் குறைத்து மதிப்பிட்டாரோ என்ற எண்ணம் தோன்றுகிறது. ஸ்ரீவைஷ்ணவர்களின் இறையியற் தத்துவ வளர்ச்சியானது வரலாற்று அரசியல் வெற்றிடத்தில் நிகழவில்லை என்பதை மனங்கொள்ள வேண்டும். இஸ்லாமியப் படையெடுப்புகள், டெல்கி சுல்தானிய ஆட்சி விரிவாக்கம், இவற்றால் ஏற்பட்ட உள்ளூர் அரசியல் தளம்பல்கள், பண்பாட்டு விசாரங்கள் என்பவற்றால் ஸ்ரீவைஷ்ணவர்கள் பாதிக்கப்பட்டமையின் விளைவே இராமாயணம் தொடர்பான அவர்களின் இறையியற் சிந்தனையோட்டங்கள் எனக் கொள்ளலே பொருத்தமானது. அதாவது , இராமாயணமும், இராமவழிபாடும் விஜயநகர அரசில் முன்னிலைப்படுத்தப்பட்டதற்கு போலக் கூறுவது போன்று தனியே அரசியல் காரணங்களோ அல்லது ராவ் கூறுவது போன்று வெறுமனே விஜயநகர ஆட்சியாளர் மீது ஸ்ரீவைஷ்ணவர்கள் செலுத்திய செல்வாக்கு என்றோ எடுக்க வேண்டியதில்லை. இவ்விரு காரணிகளும் சேர்ந்தே தொழிற்பட்டன எனக் கொள்ளலாம்.

விஜயநகர அரசின் இராம வழிபாடு, அம்மன்னர்கள் தம்மை இராமரின் அவதாரமாகக் கருதிக் கொண்டனர் என்பதைக் கூறும் அரசியல் வாசகமாகவும் (Political Statement)கொள்ளலாம். ஆனால், விஜயநகர அரசு தோற்றம் பெறுதற்கு முன்பேயே, தமிழ்நாட்டு அரசர்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே இராமருடன் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டனர் என்று வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார். ‘தென்னிலங்கையர்கோன் தலையரிந்த திருநெடுமால் இவனென்ன, தென்னவனைத் தலையரிந்தவன்’ என்று கல்வெட்டொன்று மூன்றாம் குலோத்துங்க சோழன் பற்றிக் கூறுகிறது. முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 1256-ல் இலங்கையை வென்ற போது, திருப்பதியில் உள்ள வடமொழிக் கல்வெட்டொன்று அவனை ‘இலங்கையை வென்ற இரண்டாவது இராமன்’ எனப் பாராட்டுகிறது. எனவே, கம்பராமாயணத்தின் தாக்கம் காரணமாக அரசர் தம்மை இராமருடன் அடையாளப்படுத்திக் கொண்டனர் என்று வேலுப்பிள்ளை கூறுகின்றார். விஜயநகர அரசின் எழுச்சிக்கு முன்னர் பதியப்பட்ட இப்பதிவுகளை, விஜயநகரகால ‘இராமர்’ பற்றிய கருத்தியலிலிருந்து வேறுபடுத்தியே பார்க்கவேண்டும். ஏனெனில் இவை இரண்டுமே வெவ்வேறு வரலாற்றுக்காலகட்ட கருத்தியல் சார்புகளைக் கொண்டுள்ளன. விஜயநகரகாலக் கருத்தியலில் இராமர் வெறுமனே வீரரும், முன்மாதிரியான மன்னரும் மட்டுமல்ல, புறச்சக்திகள் நிலத்தைக் கைப்பற்றும் காலகட்டத்தின்போது, அவருடன் அடையாளப்படுத்திக் கொள்வது என்பது அரசுரி




மையை நியாயப்படுத்தும் ஒரு செயற்பாடுமாகும். தமிழகத்தில் கம்பர் பாடிய இராமகாதையின் செல்வாக்குக் காரணமாக போரில் வென்ற தமிழக மன்னர்கள் செயற்கரிய இயற்றிய வீரபுருஷராகக் கருதப்பட்டு இராமருடன் அடையாளப்படுத்தப்பட்டனர் எனலாம்.

எனினும், 14-ம் நூற்றாண்டில் முஸ்லிம் படையெடுப்புகளையும், டெல்கி சுல்தானிய ஆட்சியையும் எதிர்கொண்ட பிற்காலப் பாண்டியர்கள் தமது பெயரில் ‘இராம’ என்பதைச் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, கலியுகராமன் சடாவர்மன் வீரபாண்டியன் (1297-1342), கோதண்டராமன்

சடாவர்மன் சுந்தர பாண்டியன் (1314-1319) போன்ற பெயர்களை வேலுப்பிள்ளையின் கட்டுரையிற் காணலாம். இது அரசியல் தளம்பல்கள் நிலவிய காலகட்டத்தில், தமது அதிகாரம் கேள்விக்குறியாக்கப்படும்பொழுது தமது அதிகாரத்தையும் ஆட்சியுரிமையையும் வலியுறுத்தப் பாண்டியர் இராமரின் பெயரைப் பயன்படுத்தினர் எனலாம். டெல்கி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் சேனாதிபதி மல்லிக்காபூர் 1311-ம் ஆண்டில் மதுரை மீது படையெடுத்தமையும், 1327-ல் துக்லக் மகம்மதுவின் படையெடுப்பும், பாண்டிநாடு டெல்கி சுல்தானிய அரசின் 23 மாகாணங்களில் ஒன்றாகியமையும் பிற்காலப் பாண்டிய மன்னரின் அதிகாரம் குன்றியமைக்கு முக்கிய காரணங்களாகும். 1371-ல் விஜயநகர மன்னன் முதலாம் புக்கதேவராயருடைய மகன் குமாரகம்பணன் மதுரையில் முஸ்லிம் ஆட்சியை ஒழித்ததுடன் அதனைத் தனது அரசுடன் இணைத்துக் கொண்டான்.

## இராமர் வழிபாடும் ஆரியச்சக்கரவர்த்திகளும்:

யாழ்ப்பாண மன்னர்கள் சிவ வழிபாட்டாளர்களாக இருப்பினும், இராமருக்குக் கோயில் அமைத்து வழிபட்டனர். 15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய கோகில சந்தேசய யாழ்ப்பாணத்தில் இராமர் கோயில் அமைந்திருந்தது என்று கூறுவதுடன், இராமரின் பிரகாசமான தோற்ற வருணனையையும் தருகிறது. இராமர் விஷ்ணுவின் அவதாரம் எனக் கருதப்பட்டதால், பின்னாளில் விஷ்ணு ஆலயமாக இது மாறியிருக்கலாம் என்று C.E. கொடகும்புரா கருதுகிறார்.

மேலும், ஆரியசக்கரவர்த்திகளின் தோற்றம் பற்றிய தொன்மம் அவர்களை இராமருடன் நேரடியாகத் தொடர்புடைய இராமேஸ்வரத்துடன் பிணைக்கிறது. இராமர் இராவணனை (பிராமணனை) கொன்ற பாவத்திலிருந்து விடுபட சிவலிங்கத்தை இராமேஸ்வரத்தில் நிலைநிறுத்தி ஆரியசக்கரவர்த்திகளுக்கும் இராமேஸ்வரத்துக்குமான தொடர்பு அவர்களை அறம், தீமையை வெல்லல் என்பவற்றின் குறியீடாக விளங்கும் இராமபாரம்பரியத்துடன் (The legacy of Rama) இணைக்கிறது. 'யாழ்ப்பாண இராச்சியத்திலே தோன்றிய முதல் நூல்களுள் ஒன்று என்று கூறத்தக்க செகராசசேகர மாலையைப் பாடிய சோமசர்மா இராமபிரானையும் ஆரியச்சக்கரவர்த்திகளையும் நெருக்கமாகப் பிணைக்கின்றார். இராமபிரான் இராமேசுவரரைப் பூசிக்கும்படி நியமித்த ஐந்நூற்றுப் பன்னிரண்டு காசிப் பிராமணர்களுள் இருவரை அவரே அரசராக்கி ஆரிய வேந்து எனப் பட்டம் கட்டி, எருதையும் கொடியாக நல்கினார் என்பது அந்நூற் சிறப்புப் பாயிரத்திலே வெளியிடப்பட்டுள்ள கதை' என்று வேலுப்பிள்ளை கூறுகின்றமை கவனத்திற்குரியது.

மேலும், இராமர் தோன்றிய சூரியகுல வமிசத்தினரே ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற கற்பிதம் அரசகேசரியின் இரகுவமிசத் தமிழாக்கத்திற்கு உந்துதல் அளித்தது எனலாம். 'ஆரியச்சக்கரவர்த்திகள் பாண்டிய மேலாதிக்கத்தினின்றும் விடுபட்டுத் தனியாட்சி செய்யத் தொடங்கியதும், யாழ்ப்பாணத்து மக்களின் விசுவாசத்தைப் பெறுவதற்காகத், தமது குலத்துக்குத் தெய்விக உரிமைத் தொடர்பு கற்பிக்க முனைகிறார்கள். இவ்வாறு, 'சூரியகுலத்து உதித்த மிகப் புகழ்பெற்ற மன்னரான இராமரால் அரசுடைமை உரித்தாக்கப்பட்ட அரசகுலம் என்ற பெருமை யாழ்ப்பாண அரசருக்கு வழங்கப்படுகிறது' என்று வேலுப்பிள்ளை கூறுவது பொருத்தமாகவே உள்ளது. அதை உறுதி செய்வது போன்றே அரசகேசரி இரகுவமிசத்தைத் தமிழ்ப்படுத்தியுள்ளார். அதுவும் மன்னன் பரராசசேகரன் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் இவ்விலக்கியப் பணியை மேற்கொண்டதாக அரசகேசரி பாயிரத்தில் கூறுகின்றார்.

யாழ்ப்பாண இராச்சியமானது வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, இரகுவம்சம் போன்ற காவிய ஆக்கங்கள் சாத்தியமானவையா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. விஜயநகர மன்னருக்கு இஸ்லாமிய ஆட்சி விஸ்தரிப்பு கலக்கம் அளித்தது போல, மேனாட்டிலிருந்து போர்த்துக்கேயர் வருகையும், உள்ளூர் ஆட்சியில் அவர்களின் இடையறாத தலையீடும், கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதலில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டமையும், யாழ்ப்பாண மன்னருக்குத் தலையிடி கொடுப்பனவாய் அமைந்தன என்பதில் ஐயமில்லை. அரசியல், சமயம், பண்பாடு இம் மூன்றும் இணைந்த இரகுவம்சத்தின் தமிழாக்கம் மேற்கூறப்பட்ட புறச்சக்திகளுக்கு எதிரான ஒரு கருத்தியல் ஆவணமாக மிளிர்ந்தது எனலாம். வேலுப்பிள்ளை நூல் உருவாக்கத்திற்கான ஊகமொன்றினைத் தனது கட்டுரையிற் தந்துள்ளார்.

'பதினான்காம் நூற்றாண்டு இறுதியிலே யாழ்ப்பாண இராச்சியத்தின்மீது விசயநகரப் பேரரசின் மேலாதிக்கம் ஏற்பட்டபோதும், பதினைந்தாம் நூற்றாண்டு நடுப்பகுதியிலே சிங்கள அரசு மறுமலர்ச்சி பெற்றபோதும் யாழ்ப்பாண அரசுக்குப் பிரச்சினைகள் தோன்றின. பதினாறாம் நூற்றாண்டு நடுப்பகுதியிலேயிருந்து போர்த்துக்கேயரின் தொல்லைகள் தொடர்ந்ததால் யாழ்ப்பாணத்து வரலாறு இரகுவம்சத்தின் பிற்பகுதி மன்னர் வரலாறுபோல், வீழ்ச்சியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. இராமராச்சியம் என்ற இலட்சியத்திலே எதிர்கால யாழ்ப்பாண மன்னர்களை வழிநடத்துதற்காக. பரராசசேகரன் இந்த நூல் தமிழாக்கம் பெறுவதை விரும்பியிருந்திருக்கலாம்'

நிறைவாக, காளிதாசரின் இரகுவம்சத்தை அரசகேசரி தமிழில் மொழிபெயர்த்தமை என்பது ஓர் இலக்கிய முயற்சி மட்டுமன்று, ஆழமான அரசியல் மற்றும் பண்பாட்டுச் செயற்பாடு மாகும். யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்திகளின் அரசுரிமை கோரல்களுக்கான நியாயப்பாட்டினை வலுப்படுத்த 'இராமர்' கருத்தாக்கம் பயன்பட்டது. இது யாழ்ப்பாண ஆட்சியாளர்களை சூரிய வம்சத்தின் தெய்வீக பரம்பரையுடன் இணைத்ததன் மூலம் சாத்தியமானது. எனவே, போர்த்துக்கேயரின் வருகையாலும், ஆட்சித் தலையீடுகளாலும் மதமாற்ற முயற்சிகளாலும் ஏற்பட்ட குழப்பமான வரலாற்றுச் சூழலில் யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தை, சமய, பண்பாட்டு அடையாளத்தை உறுதிப்படுத்தப் பயன்படுத்திய உத்திகளின் ஒருங்கிணைந்த பகுதியாக இரகுவம்சத்தின் தமிழாக்கம் அமைந்தது எனலாம்.



maithilithayanithy@thaiveedu.com

# மகாபாரத அம்மானை

– பால சிவகடாட்சம்

இளம்பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட ஒரு பாடல் வடிவமே அம்மானையாகும். மரத்தாலான பந்துகள் மூன்றை ஒருவர் பின் ஒருவராக மேலே எறிந்து பிடிப்பதுதான் இந்த விளையாட்டு. இந்த விளையாட்டில் முக்கியமாகப் பந்தை எறிந்து பிடிக்கும்போது ஒவ்வொரு பெண்ணும் பாடவேண்டியிருக்கும். தன் தலைவனைப் பற்றி ஒரு கேள்வியை எழுப்பியபடி ஒருத்தி பந்தை எறிந்துபிடிப்பாள். அடுத்தவள் அக்கேள்விக்கான பதிலைக் கூறியபடி பந்தை எறிந்து பிடிக்க மூன்றாமவள் இருவருக்கும் பதில் கூறிப் பந்தை எறிவாள். பாடலின் இறுதிச் சீரில் அம்மானை என்ற சொல்வரும். இந்த மகளிர் விளையாட்டு பிற்காலத்தில் இசையோடு கூடிய ஓர் இலக்கிய வடிவமாகக் கூர்ப்படைந்தது. குறிப்பாகக் கலம்பகம் என்னும் ஒரு சிற்றிலக்கிய வடிவத்தின் பதினெட்டு உறுப்புகளில் ஒன்றாக அம்மானை இன்று அறியப்படுகிறது. எனினும் அம்மானைப் பாடலைத் தமிழ் இலக்கியத்தில் முதன் முதலில் இடம் பெறவைத்தவர் இளங்கோ அடிகள் ஆவர்.

***வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்***
***ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை?***
***ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்***
***தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை;***
***சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை***

**இதன் பொருள்:**

பெருங்கடலை வேலியாகக் கொண்ட இவ்வுலகினை ஆண்டு உயர்ந்தோங்கும் அரண் காத்த வலியவன் யார் அம்மானை? உயர்ந்த அரண் காத்த வலியவன் வானத்தில் தொங்கு கதவு மூன்றும் எறிந்த சோழன் பார் அம்மானை சோழன் புகார் நகரம் பாடுவோம் அம்மானை

தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் என்று அறியப்படும் சோழமன்னன் ஒருவனது புகழ் பாடுகிறார் இளங்கோ அடிகள். வானம் என்னும் ஊரில் தொங்கு கதவுகள் மூன்று கொண்ட கோட்டையைத் தகர்த்த சோழமன்னன் என்று இப்பாடலுக்கு விளக்கம் தந்துள்ளார்கள் சில அறிஞர்கள்.

'காசிக் கலம்பகம்' என்னும் நூல் குமரகுருபரர் இயற்றியது. இந்நூலில் இடம்பெற்றுள்ள ஓர் அம்மானைப் பாடலை அடுத்துப் பார்ப்போம்.

***கலைமதியின் கீற்றணிந்த காசியகிலேசர்***
***சிலைமதனைக் கண்ணழலால் செற்றனர்காண் அம்மானை***
***சிலைமதனைக் கண்ணழலால் செற்றனரேயாமாகில்***
***மலைமகட்கு பாகம் அருளுவதேன் அம்மானை?***
***வழங்காரோ அப்பாலும் மாலானால் அம்மானை***

**இதன் பொருள்:**

பிறைநிலவின் கீற்றை அணிந்த காசி விஸ்வேசுரர் கரும்புவில் மன்மதனைக்கண்ணால் எரித்தார் பார் அம்மானை கரும்புவில் மன்மதனைக் கண் நெருப்பால் எரித்தது உண்மையானால் மலைமகளுக்குத் தனது உடலின் பாகத்தைக் கொடுத்தது ஏன் அம்மானை?

காதல் மயக்கத்தினால் உடலில் பாதியைக் கொடுத்தாரோ அம்மானை

கேள்வியும் பதிலுமாக வரும் அம்மானைப் படல்களில் இருந்தும் சற்று வேறுபட்ட அம்மானையை மாணிக்கவாசகர் அறிமுகப்படுத்தியுள்ளார். தன்னை ஆட்கொண்ட தலைவனாம் இறைவனைக் கேள்வி பதில் வடிவமாக இல்லாது அவன் பெருமையையும் கருணையையும் பாடும் மாணிக்கவாசகரின் அம்மானை இது.

***கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்***
***தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்***
***காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்***
***தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன் காட்டி***
***நாட்டார் நகைசெய்ய நாமமேலை வீடெய்த***
***ஆள்தான்கொண்டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்***

பிற்காலத்து நாட்டர் இலக்கியங்களில் குறிப்பாகப் புராண இதிகாசக்கதைகள் தொடர்பான கதைப்பாடல்களில் அம்மானை முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இத்தகைய அம்மானைப் பாடல்கள் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் இலகுவான மொழிநடையில் அமைந்திருப்பதை அவதானிக்க முடியும். 'மகாபாரத அம்மானை' என்று அறியப்படும் நூல்பற்றி இன்றுவரை நான் கேள்விப்பட்டதில்லை. நூலகம் இணையத் தளத்தைத் (noolaham.org) திறம்பட நடத்திவரும் குழுவினரால் ஏட்டுச்சுவடியொன்று எனது பார்வைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி சுவடியில்

காணப்படும் பாடல் ஒன்றை மட்டும் இங்கு தந்துள்ளேன்.

மண்ணுக்காகவும் பெண்ணுக்காகவும் பொன்னுக்காகவும் நடைபெற்ற மகாபாரதப் போரில் பங்குபற்றி வெற்றியும் பெற்றபின்னர் அனைத்து ஆசைகளையும் கைவிட்டு மகாவிஷ்ணுவிடம் சரணடைய விரும்புகிறார்கள் தருமரும் அவரது நான்கு தம்பி மார்களான பஞ்சபாண்டவர்கள். வைகுண்டம் சென்று பெருமாளைத் தரிசிக்கும் தமது பேராசையினை ஒரு தெய்வீக அன்னத்திடம் தருமபுத்திரர் எடுத்துரைப்பதுபோல் அமைந்துள்ளது இந்த அம்மானைப்பாடல்.

ஆசை என்பதற்கு ஒரு இறுக்கமான வரைவிலக்கணம் கொடுக்கமுடியாது. ஒருவன் உண்பதற்கு நல்ல உணவுக்கும் படுத்து உறங்குவதற்கு வசதியான ஒரு இடத்துக்கும் ஆசைப்படுவதையும் கசினோ விளையாடிக் காசு சம்பாதிக்க ஆசைப்படுவதையும் ஆசை என்னும் பொதுவான ஒரே வார்த்தைக்குள் அடக்கிவிடமுடியாது. எனவேதான் ஆசைக்கு ஓர் அளவுண்டு என்று கூறிவைத்தார்கள் நம் முன்னோர்கள். ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால் அடையமுடியாப் பொருளின் மீது ஆசை வைப்பதில் அர்த்தமில்லை. அற்ப ஆசைகளையும் அளவுக்கு மீறிய ஆசைகளையும் தருமபுத்திரர் வாய்மொழியாகப் பட்டியலிட்டுத் தந்துள்ளார் மகாபாரத அம்மானையைப் பாடிய புலவர்.

***மண்ணாசை பொன்னாசை மற்றுமுள்ள பெண்ணாசை***
***பெண்ணாசை விட்டுப் பிள்ளை மேல் ஆசையற்று***

***தேடும் திரவியமும் சேனைமன்னர் ஆசையற்று***
***வீடுவிட்டுக் காடுறைந்து வித்தகனைத் தான்தேடி***

***வந்தவர்க்கு இன்னும் அறிவுண்டோ இப்போது?***
***இந்தமட்டும் இல்லை இனிமேலும் எப்படியோ!***

என்று அப்போதைய பாண்டவரின் நிலை பற்றிக் கூறிவிட்டு பல்வேறுவிதமான ஆசைகளை வரிசைப்படுத்துகிறார் இப்புலவர்.

***உடலில் உயிரிருந்து உணவுசெய்யும் ஓர் ஆசை***
***அடரும் பிணிதீர்க்க அபிஷேகம் ஓர் ஆசை***

***வெயிலுக்கு ஒரு நிழலை விரும்புவதும் ஓர் ஆசை***
***துயிலுதற்கு நல்லநிலம் சூதானம் ஓர் ஆசை***

***தாகத்துக்குண்ணும் ஒரு தண்ணீரும் ஓர் ஆசை***
***நாகத்துக்கஞ்சி நடப்பதுவும் ஓர் ஆசை***

***அரித்தவிடஞ் சொறிதரு அற்பசுகம் ஓர் ஆசை***
***பிரித்தபல சாஸ்திரங்கள் விளம்புவதும் ஓர் ஆசை***

***கரடிபுலியானை கண்டு அஞ்சுவதும் ஓர் ஆசை***
***சிறகுதடி கொண்டு உயிரைக் கொல்லுவதும் ஓர் ஆசை***

***இடரு வரும் ஈதெனவே எண்ணுவதும் ஓர் ஆசை***
***படரு பயிர் போகம் பண்ணுவதும் ஓர் ஆசை***

***எப்போது மண்ணில் இருப்பதுவும் ஓர் ஆசை***
***ஒப்பாத பெண்களையும் உறவுசெய்யும் ஓர் ஆசை***

***கன்னல் செந்நெல் இட்டுக் கருதுவதும் ஓர் ஆசை***
***பொன்னும் வெள்ளிதேடிப் புதைப்பதுவும் ஓர் ஆசை***

***நாடாளுஞ் செங்கோல் நடத்துவதும் ஓர் ஆசை***
***மாடாடுதேடி மகிழ்ந்திருப்பதும் ஓர் ஆசை***

***புலைகொலைகள் செய்யப் பொருந்துவதும் ஓர் ஆசை***
***மலைகடல்கள் ஏறி மருவுவதும் ஓர் ஆசை***

***மெய்மறந்து பொய்யுரைக்க விரும்புவதும் ஓர் ஆசை***
***நெய்பால் தயிரென்று நினைப்பதுவும் ஓர் ஆசை***

***வெளிதாண்டியே கவனம் விளையாடும் ஓர் ஆசை***
***அழியாமற் கற்பம் அருந்துவதும் ஓர் ஆசை***

***மனைதோறும் பிச்சை வாங்குவதும் ஓர் ஆசை***
***புனல் ஆடவென்று போவதும் ஓர் ஆசை***

***ஒடுக்கமது குகையில் ஒடுங்குவதும் ஓர் ஆசை***
***எடுக்கும்பல கோலம் எடுப்பதுவும் ஓர் ஆசை***

***இந்தமட்டும் ஆசை இருக்குதுகாண் இவ்விடத்தில்***
***அந்தாசை தன்னில் அதிலும் ஒரு பேராசை***

***தம்பியர்க்கும் எந்தனுக்கும் தானே தெவிட்டாத***
***எம்பெருமாள் ஆசையென்றால் எங்கள் மனதிலுந்தான்***

***அளவற்ற ஆசையது அன்னமே எங்களுக்கு***
***களபமணி மார்பனையே கண்டாற் துயர் தீரும்***

***ஆசையது தீரும் அச்சுதனைக் கண்டாக்கால்***
***நேசமுடன் மகிழ்ந்து நெடுமால்தனைத் தொழுவோம்***

***என்றுதன்மர் சொல்ல இன்பமுடன் அன்னமுந்தான்***
***நன்றுதானே நன்று நன்மையுள்ள தன்மரென்று***

***மனங்கிளர்ந்து பட்சி மரத்தைவிட்டுக் கீழிறங்கி***
***வனங்கடந்து நல்ல வைகுந்தந் தான் நோக்கி***

***சென்று திருமாலுடனே தெண்டனிட்டங் கேதுசொல்வார்***
***ஒன்றுபத்து நூறாய் உண்மையொரு தன்மையுமாய்***

***மாற்றறியப் பஞ்சவர்கள் மனத்தையெல்லாம் ஆராய்ந்து***
***எத்துயரம் வந்தாலும் ஏதுபிழை வந்தாலும்***

***அத்துயரந் தன்னைஅணுவளவும் எண்ணார்கள்***
***மாலே துணையென்று வருகிறார் பஞ்சவர்கள்***

என்று பாண்டவரின் ஆசைபற்றிப் பெருமாளுக்கு அறிவிக்கிறது அந்த அன்னப்பறவை.



Sivakadadcham@thaiveedu.com



# மாயக் கண்ணனா? மானுடக் கண்ணனா?

– கிருங்கை சேதுபதி

இரத்தமும் சதையுமாய்த் தன் காலத்து மனிதர்களைத் தமது படைப்புகளில் உயிருடன் உலவவிட்ட பெருமை, புதுமைப்பித்த னுக்கு உண்டு. ஜெயகாந்தனுக்கு உண்டு. இவர்களுக்கெல்லாம் முன்னோடியான பாரதிக்கும் உண்டு.

முன் சொன்னவர்களைவிட, அவர்களுக்கெல்லாம் மூத்தவரான பாரதிக்குத் தன் பாத்திரங்களை எந்த வடிவில் புனைவாகத் தருவது என்பதிலும் ஒரு தனித்தன்மை இருந்தது.

தன் அகத்துள் புகுந்த பாத்திரப் பண்புகளைத் தக்க சமயத்தில் பாரதியார் வெளிப்படுத்தும்போது அதன் வடிவம் கவிதையாக, கதையாக, கட்டுரையாக, துணுக்குச் செய்தியாக அமைவதற்குப் பத்திரிகையின் இடமும் தேவையும் காரணிகளாய் இருந்திருக்கின்றன. இவையனைத்திற்கும் மேலாக, அவரிடம் இருந்த ‘ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணும் ஆற்றல்’ எப்போதும் அவரை உந்தி இயக்கிக்கொண்டே இருந்திருக்கிறது எனலாம்.

இதுதான் பார்க்குமிடங்களிலெல்லாம் பார்க்கும் பொருள்களிலெல்லாம் கண்ணனை நீக்கமறக் காணும் நோக்கினை, பகவத்கீதை வாயிலாக அவரிடம் பதிய வைத்திருக்கிறது. ஆழ்வார் பாசுரங்களின் தூண்டுதல் அவரை, ‘அறுபத்தாறு’ பாட வைத்ததோடல்லாமல், ‘கண்ணன் பாட்டை’யும் கம்பீரமாகப் பாட வைத்திருக்கிறது.

முன்சொன்ன நூலில் தன்னை முன்னிறுத்தித் தான் கண்ட சித்தர்களைத் தரிசனப்படுத்திய பாரதி, பின்னர் குறிப்பிடும் கண்ணன் பாட்டில், தான் கண்ட எளிய மனிதர்களை, அவர்களின் உன்னத தெய்வீகத் தன்மையைத் தன் அனுபவமாகத் தந்திருக்கிறார். புனிதம் நிறைந்த மனிதம் அவற்றுள் ஆன்மீக ஒழுங்குடன் முழுமையாய் அமைந்து புத்துணர்வு தருகிறது. பாரதி தெய்வீகத் தமிழ்க் கவியாகப் பரிணமிக்கிறார். புதுச்சேரி வேதபுரம் ஆகிறது. வேதபுரத்தார்கள் தேவர்கள் ஆகிறார்கள். பாரதி தன் பாடல்களில் புதுமை செய்கிறார். அது வறட்டு வேதாந்தமாகவோ, முரட்டுத் திணிப்பாகவோ இல்லை என்பது உண்மை.

அதற்கான உயிர்ச்சாட்சியங்களில் ஒருவராகத் திகழ்பவர் குவளைக் கண்ணன்.

புதுச்சேரி மண்ணில், முற்றிலும் ஒரு புதிய இடத்தில் தன்னை வலிய நுழைத்துக் கொண்ட பாரதிக்குப் பற்றுக்கோடாக, பாதை காட்டும் கண்ணனாக வந்து ஒட்டிக்கொண்ட ஒரு உன்னத பாத்திரமே குவளைக் கண்ணன்.

அதுவரையில் தன் பாட்டுக்குத் தமிழ்ப் பாட்டிசைத்துக் கொண்டிருந்த பாரதிக்குள் ஆழ்வார்களைப் பதியமிட்ட பெருமையும் குவளைக் கண்ணனையே சாரும். சிவ கோத்திரத்து பாரதியை, வைணவச் சார்பில் திளைக்க வைத்தவரும் இவரே.

பாரதியின் வாழ்வில் மட்டுமன்றி, பாரதியார் இல்லத்தாருடனும் தன்னை இணைத்துக் கொண்டவர் குவளைக்கண்ணன். அவர் பாரதியாலும் பாரதி குடும்பத்தாராலும் அவ்வப்போது நினைவுபடுத்தப்படுகிற அளவிற்குச் சிறப்பான இடத்தை வகித்திருக்கிறார். அவர் குறித்து, பாரதியின் இளைய புதல்வி சகுந்தலா பாரதி ‘என் தந்தை’ நூலில் இப்படி எழுதுகிறார்.

‘என் தந்தையாருக்கு, ‘குவளைக் கண்ணன்’ என்றொரு சீடன் உண்டு. அவர் அதிகாலையில் எழுந்ததும், வைஷ்ணவ கோவில் பாணியில், ‘திருவாய்மொழி’ பாடுவார். ‘கிருஷ்ணா, நீ காலையில் திருவாய்மொழி பாடுவதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால், ஏனடா, திருவாய்மொழி ‘அழுகிறாய்’? என்று ஒருநாள் என் தந்தை அவரைக் கோபித்தார். குவளைக் கிருஷ்ணன், உடனே, ‘ஸ்வாமி, தாங்கள் திருவாய்மொழி பாட வேண்டும். நான் கேட்டு ஆனதிக்க வேண்டும்’ என்றார். என் தந்தைக்குத் திருவாய்மொழிப் பாடல்கள் பாடமில்லை. குவளைக் கிருஷ்ணன் எங்கோ போய் ஒரு பெரிய புஸ்தகம் கொணர்ந்து தந்தார்.

***‘பொலிக பொலிக பொலிக***
***போயிற்று வல் உயிர்ச் சாபம்***
***நலியும் நரகமும் நைந்த***
***நமனுக்கு இங்கு யாது ஒன்றும் இல்லை’***
என்ற பாடல்,

***‘மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணிவண்ணன்***
***மணிமுடி மைந்தன்’***

என வரும் பாடலையும் அர்த்த பாவத்துடன் பாடிக் காண்பித்தார். குவளைக் கிருஷ்ணனுக்கு இதைக் கேட்டதும் உண்டான மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் அளவேயில்லை. உடனே, ‘ஸ்வாமி, தாங்கள் சொல்லுகிறபடி திருவாய்மொழியைப்



பாடத்தான் வேண்டும்' என்றார்.

குவளைக் கண்ணனின் வேண்டுகோளின்படி, பாரதி திருவாய் மொழி பாடியதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. தன் படைப்பு களிலும் அவற்றின் சாரத்தை, தன்மையை, தன் பாணியில் வெளிப்படுத்தத் தொடங்கினார். முன் பாடிய பாடல் மரபு கடந்து கண்ணன் பாட்டைப் புதிதாகப் பாடத் தொடங்கினார்.

சொந்த அனுபவத்தையும், முந்தைய ஆழ்வாராதிகள் பாடிய பிரபந்தம்வழி பெற்ற அனுபவத்தையும் முன்னிறுத்தி எழுந்த கண்ணன் பாட்டில், சேவகனாகக் குவளைக் கண்ணன் வந்த வகையறிந்த நாம், இனி, அவர் சீடனாகிச் சிறந்த திறத்தை காணலாம்.

***

கண்ணன் என் சீடன் என்ற தொடக்கமே அதியற்புதமாய் அமைகிறது.

***'யானே யாகி என்னலாற் பிறவாய்  
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்  
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்'***

என்று மாயக் கண்ணனைத் தான் உணர்ந்த வகையில் அடை யாளம் காட்டிய பாரதி, அவன் மனித உருவில் ஒரு சீடனாகி நின்ற சித்திரத்தை வரையத் தொடங்குகிறார்.

***'என்னிலும் அறிவினில் குறைந்தவன் போலவும்,  
என்னைத் துணைக்கொண்டு என்னுடை முயற்சியால்  
என்நடை பழகலால் என்மொழி கேட்டலால்  
மேம்பாடு எய்த வேண்டினோன் போலவும்,  
யான்சொலும் கவிதை என்மதி அளவை  
இவற்றினைப் பெருமை இலங்கின என்று  
கருதுவான் போலவும், கண்ணன் கள்வன்  
சீடனா(ய்) வந்து என்னைச் சேர்ந்தனன்'***

அடுத்து நடந்தது என்ன? அது என்ன சின்னக் கதையா? அதுவொரு பெரிய பாரதக் கதை.

தன்னை அறிவாளன் போலவும், சீடனை மதியில் குறைந்த வன் போலவும் எண்ணி, அவனுக்குப் பற்பல அறிவுரைகள் சொல்லி, பாடம் நடத்தி, பாரதி பட்ட தொல்லைகள் பலவாம்.

பின்னர்தான் தெரிகிறது, வந்த சீடன் பேதையல்லன். அவ னைச் சீடனாய் ஏற்ற தான்தான் பேதை என்கிற தெளிவு பார திக்கு ஏற்பட்டுவிடுகிறது. மாயக்கண்ணனின் இந்த நாடக வலைக்குள் வீழ்ந்து தவிக்கும் தன் நிலையைத் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி, விரிக்கிறார் பாரதி.

***

***தெய்வமே!***
***பேதையேன் அவ்வலைப் பின்னலில் வீழ்ந்து***
***பட்டன தொல்லை பலபெரும் பாரதம்;***

இந்த இடத்தில் தன் விமர்சனத்தையும் முன்வைத்துப் பேசுகிறார். 'தன் உள்ளத்தை வெல்ல முடியாத தான் உலகினை வெல்ல முயல்கிறேன். பிறர் உள்ளச் சிறுமை அகற்றிச் சிவ நெறியில் நிறுத்த விரும்பும் தான், தனக்குள்ளே தெளிவும் சலிப்பில்லா மகிழ்ச்சியும் பெற்றவன் அல்லன்' என்று தன் நிலை தெளிகிறார்.

***'உளத்தினை வென்றிடேன்; உலகினை வெல்லவும்***
***தான் அகம் சுடாதேன் பிறர்தமைத் தான் எனும்***
***சிறுமையின் அகற்றிச் சிவத்திலே நிறுத்தவும்***
***தன்னுளே தெளிவும் சலிப்பிலா மகிழ்ச்சியும்***
***உற்றிடேன்'***

என்பது பாரதியின் வாக்கு. இந்தக் கட்டத்தில்தான் கண்ணன் சீடனாகி, பாரதி முன் வருகிறான்.

***

இந்த உலகத்தில் மனிதர்களுக்கு உற்ற துயரங்களையெல்லாம் மாற்றி, அவர்களை இன்பத்தில் இருக்க வைத்து, தான் எண்ணிய பிழைக்கெல்லாம் தண்டனை கொடுக்க உள்ளம் கொண்டவனாய் மாயக்கண்ணன் வருகிறான். தானே வலியத் தேடி வருகிறான். வந்து சார்கிறான். பாரதி பாடுகிறார்.

***'இந்தச் சகத்திலே உள்ள***
***மாந்தர்க்கு உற்ற துயரெலாம் மாற்றி***
***இன்பத்து இருத்தவும் எண்ணிய பிழைக்கு எனைத்***
***தண்டனை புரிந்திடத் தான் உளம் கொண்டு,***
***மாயக் கண்ணன் வலிந்து எனைச் சார்ந்து,***
***புகழ்ச்சிகள் கூறியும், புலமையை வியந்தும்,***
***பலவகை யால் அகப் பற்று உறச் செய்தான்;'***
(சகம்- உலகம், மாந்தர்- மனிதர்)

அந்தப் புகழ்ச்சிக்கு மயங்கி, தன் புலமையை நிலைநிறுத்த ஆசிரியனாகத் தன்னை வரித்துக் கொண்ட பாரதி, பின்னர் அந்த நிலையினை உணர்ந்து பின்வரும் ஓர் உவமையைத் தனக்குக் கூறிக் கொள்கிறார்.

வெறும் வாயை மெல்லும் கிழவிக்கு அவலாய்க் கிடைத்த வாய்ப்புபோல் ஆனது இது.

***'வெறும்வாய் மெல்லும் கிழவிக்கு இஃதுஓர்***
***அவலாய் மூண்டது;'***

பின்னர் என்ன ? ஆசானாகி அறிவுரை கூறி, அவனை உயர்வு படுத்துவதில் ஊக்கம் கொள்கிறார்.

***'யானும் அங்கு அவனை***
***உயர்நிலைப் படுத்தலில் ஊக்கம் மிக்கவனாய்,'***

பாரதி உபதேசங்கள் புரிகிறார்.

***

- இன்னது செய்திடேல்.
- இவரோடு பழகேல்.
- இவ்வகை மொழிந்திடேல்.
- இனையன விரும்பேல்.
- இன்னது கற்றிடேல்.
- இன்னநூல் கற்பாய்.
- இன்னவர் உறவுகொள்.
- இன்னவை விரும்புவாய்.

'எனப்பல தருமம் எடுத்தெடுத்து ஓதி', குருகுலக் கல்விபோல் ஓய்வில்லாமல் சீடனொடு போராடி, அவனை நெறிப்படுத்த எடுத்துக் கொண்ட தனது சிரமத்தை முயற்சியை, ஓய்விலாது அவனோடு உயிர்விடலானேன்... என்கிறார் பாரதி.

ஆசான் சொன்னதை அப்படியே ஏற்றானா, சீடன் கண்ணன் ? இல்லை.

***

ஆசானாக, பாரதி சொன்னவை பல. ஆனால், சொல்லச் சொல்லக் கேட்பவனாகக் கண்ணன் இல்லை. அதற்கு நேர் எதிர் நெறியில் நடப்பவனாகச் சீடன் ஆகிவிட்டான். அதற்குப் பாரதி சொல்லும் உவமை, கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம் எதிர் செய்யும் மனைவி போல் நிகழ்விலே செய்து கொண்டிருக்கிறான் சீடன்.

'செய்' என்றால் செய்யான். 'செய்யாதே' எனில் செய்வான். 'போ' எனில் போகான். 'போகாதே' எனில் விரைந்து போவான். இப்படி,

***'கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம்***
***எதிர்செயும் மனைவிபோல், இவனும்நான் காட்டு(ம்)***
***நெறியினுக் கெல்லாம் நேர்எதிர் நெறியே***
***நடப்பான் ஆயினன்?'***

அதுமட்டுமா ?

ஆசான் காட்டிய வழிகளை விலக்கித் தானே தன் வழியில் நடத்தல், உலகினர் வெறுக்கும் ஒழுக்கத்தை எல்லாம் தலையாய்க் கொண்டு நடத்தல், என பழிச்சொல்லுக்கும் இகழுக்கும் மிகத்தகுதி உடையவனாய், ஆசானாகிய பாரதியின் மனம் வருந்துமாறு நடப்பதையே நாள் கடமையாகக் கொண்டுவிட்டான். நாளுக்கு நாள் இந்தச் செயல் ஓங்கி வளர்வதனால் வீதியில் காணும் பெரியவர்கள், கிழவியர் அனைவரும் இவனைக் கிறுக்கன் என்று இகழ்ச்சி பேசி, ஏளனம் செய்யும் நிலைக்கு வந்துவிட்டான்.

இவையெலாம் ஆசானுக்கு நேர்ந்த அவமானங்கள் அல்லவா ? அதனால்,

**நெஞ்சிலே எனக்குத்**
**தோன்றிய வருத்தம் சொல்லிடப் படாது.**
**முத்தன் ஆக் கிடநான் முயன்றதோர் இளைஞன்**
**பித்தன்என் றுஉலகினர் பேசிய பேச்சு என்**
**நெஞ்சினை அறுத்தது; நீதிகள் பலவும்**
**தந்திரம் பலவும் சாத்திரம் பலவும்**
**சொல்லிநான் கண்ணனைத் தொளைத்திட லாயினேன்.**

என்கிறார் பாரதி. 'நீ தேவநிலை எய்திடாவிட்டாலும் பரவா யில்லை. மனிதத் தன்மையிலாவது நழுவாது நட' என்று கூறி, கண்ணனைக் காக்க விருப்பம் கொண்டு,

***தீயெனக் கொதித்துச் சினமொழி யுரைத்தும்,
சிரித்துரை கூறியும், செள்ளென விழுந்தும்,
கேலிகள் பேசிக் கிளறியும், இன்னும்
எத்தனை வகையிலோ என்வழிக்கு அவனைக்
கொணர்ந்திட முயன்றேன்;***

என்று எடுத்த முயற்சியினால், 'கொள்பயன் ஒன்றில்லை.' மாறாக,

***கண்ணன் பித்தனாய்க் காட்டாள் ஆகி,
எவ்வகைத் தொழிலிலும் எண்ணம் அற் றவனாய்,
எவ்வகைப் பயனிலும் கருத்து இழந் தவனாய்,
குரங்காய்க் கரடியாய்க் கொம்புடைப் பிசாசாய்,
யாதோ பொருளாய், எங்ஙனோ நின்றான்.***

இதனால், மனம் புண்ணாகி, கடுங்கோபம் கொண்டு, கண் ணனை நேரே கண்டு, அவனை ஏதேனும் ஒரு தொழிலில் நிறுத்திச் சரி செய்ய வேண்டும் என்று நினைக்கிறார். ஒருநாள் கண்ணனைத் தன் வீட்டிற்குக் கூட்டிவந்து, தனிப்பட பேசுகி றார்.

'மகனே, என்மீது அளவு கடந்த நேசமும் அன்பும் வைத்தவன் நீ. அதனை நம்பி உன்னிடம் நான் ஒன்று கேட்கிறேன். அதன் படி நீ சேரிடம் அறிந்து செய்ய வேண்டும்' என்று வேண்டு கோள் விடுக்கிறார்.

'தேவைக்கு வேண்டிய பொருளைத் தேடுவதற்கான நேரம் போக, எஞ்சிய பொழுதுகளில், வரலாற்றில் விருப்பமும், தருக்கச் சிந்தனையும், கவிதையின் மெய்ப்பொருள் ஆராய் வதில் மிகுதியான ஈடுபாடும் கொண்டோர் அருகினில் நீ இருந்தால் எனக்கு நல்லது. அதனால் என் பயன் கருதி, எனக் கொரு துணையாய் நீ சில நாட்கள் இருந்திடு. மறுக்காமல் எனக்குத் துன்பம் ஏதும் செய்துவிடாமல், இருப்பதற்கு இணங்கு' என்கிறார். அதற்கு கண்ணனும்,

***'அங்ஙனே புரிவேன். ஆயின் நின் னிடத்தே
தொழில்இலா து யாங்ஙனம் சோம்பரில் இருப்பது?
காரியம் ஒன்று காட்டுவை யாயின்.
இருப்பேன்'***

என்றான்.

உடனே பாரதி, 'நான் எழுதிய பாடல்களை எல்லாம் நாளும் பிரதி எடுத்துக் கொடு' என்கிறார். நல்லது என்று சொல்லிய கண்ணன் ஒரு நாழிகைப் பொழுது இருந்தான். பின்னர் 'போகிறேன்' என்கிறான். உடனே கோபம் கொண்ட பாரதி ஏற் கெனவே எழுதிய பழங்கதையின் ஒரு பகுதியை, அவன் கையில் கொடுத்து, 'அழகாக எழுதிக் கொடு' என்றார். ஏற் றுப் பணி செய்பவன் போல, வாங்கிய கண்ணன் ஒரு கணப் பொழுது அமைதியாய் இருந்தான். பின் மீண்டும், 'போகி றேன்' என்றான்.

பின்னர் இன்னும் கோபம் தலைக்கேற, 'சொன்னது கேளாமல் ஏன் போகிறேன் என்கிறாய். பித்தன் என்று உன்னை இகழ்ந்து சொல்லியது தவறில்லைப்போலும் என்று பேசுகி றார். அதற்குக் கண்ணன் நாளை வந்து செய்கிறேன் என்கி றான். பொறுமை இழந்த பாரதி, 'இப்போதே இந்த வேலை யைச் செய்கிறாயா? இல்லையா? ஒரு வார்த்தை சொல்' என்று சொல்லி முடிப்பதற்குள் 'இல்லை' என்று பதில் சொல் லிவிட்டான் கண்ணன்.

***வெடுக்கெனச் சினத்தீ வெள்ளமாய்ப் பாய்ந்திடக்
கண்சிவந்து இதழ்கள் துடித்திடக் கனன்றுநான்
சீச்சீ, பேயே, சிறிதுபோழ் தேனும்
இனிஎன் முகத்தின் எதிர்நின் றிடாதே.
என்றும் இவ்வுலகில் என்னிடத்து இனிநீ
போந்திடல் வேண்டா, போபோ, போ' என்று
இடியுறச் சொன்னேன்; கண்ணனும் எழுந்து
செல்குவ னாயினன்.***

எடுத்த முயற்சி தோற்றுப் போனது. கண்ணீர் சொரியத் தன் தோல்வியை ஒப்புக்கொண்ட கதைசொல்லியாகிய பாரதி, 'எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பயனின்றிப் போயின. இனி நீ வாராய் போ' எனக் கூறி வழியனுப்பிவிடுகிறார். ஒருவ கையில் மனத்துயர் நீங்கி, அமைதியும் கொள்கிறார். ஆனால், கதை இன்னும் முடிந்துவிடவில்லை.

போன கண்ணன் ஒரே கணத்தில் திரும்பி வருகிறான். நல்ல தொரு எழுதுகோல் கொணர்கிறான். எழுதக் காட்டிய பகு தியை அழகுற எழுதிக் கொடுக்கிறான்.

***'ஐயனே, நின்வழி அனைத்தையும் கொள்வேன்.
தொழில்பல புரிவேன். துன்பம்இங்கு என்றும்,
இனிநினக்கு என்னால் எய்திடாது' எனப்பல
நல்லசொல் உரைத்து நகைத்தனன் மறைந்தான்.***

மறைந்த கண்ணன் மறுகணத்தில் அவர் நெஞ்சில் தோன்றி நிகழ்த்திய உரை இது.

***'மகனே, ஒன்றை ஆக்குதல் மாற்றுதல்
அழித்திடல் எல்லாம் நின்செய லன்றுகாண்;
தோற்றேன் எனநீ உரைத்திடும் பொழுதிலே
வென்றாய்; உலகினில் வேண்டிய தொழிலெலாம்
ஆசையும் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்க நீ' என்றான்.'***

அவனை வாழ்த்தி இப்பாடலை முடிக்கிறார் பாரதி.

நனவிடைத் தோன்றிய நல்ல நிகழ்வு ஒன்று பற்றிக் கனவை யும் கலந்து பாரதி படைத்த கவினுறு படைப்பு, கண்ணன் என் சீடன். அவன் மாயக் கண்ணனா? மண்ணிடை உதித்த மானி டக் கண்ணனா? குவளைக் கண்ணன் சாட்சியாக மேலாய்வு செய்யலாம்.



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியாகாண்டத்தின் 11-வது படலமாகிய குகப் படலத்திலுள்ள சுவையான செய்யுள்கள் சிலவற்றை எடுத்துச் சுவைத்தோம். இவ்விதழில் அயோத்தியா காண்டத்தின் 12-வது படலமும் இறுதிப் படலமுமாகிய திருவடி சூட்டுப் படலத்திலுள்ள செய்யுள்கள் சிலவற்றிலுள்ள கம்பனின் கவிநயத்தை நுகர்ந்து களிப்போம்.

தனது பரிவாரங்களுடன் கங்கைக் கரையை அடைந்த பரதன் பரத்துவாச முனிவனைக் கண்டு வணங்குகின்றான். அம்முனிவன் அவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறான். பின்னர் பரதனிடம், ‘முடிசூடி அரசுபுரியாமல் மரவுரியுடுத்துச் சடைதரித்துக் காடுநோக்கி வரக் காரணம் யாது?’ எனக் கேட்கப் பரதன் பெருஞ்சினங் கொள்கிறான்.

***சினக்கொடுந் திறற் சீற்றவெந் தீயினான்***
***மனக்கடுப் பினன் மாதவத் தோங்கலை***
***எனக்கடுத்தது செய்திலன் என்றசொல்***
***உனக்கடுப் பதன் றாலுரவோ யெனா.***

*கம்ப. அயோத்தி. 1086*

சினக்கொடுந்திறற் சீற்றவெந் தீயினான் - முனிவன் சொன்னதைக் கேட்ட பரதன் மிகுந்த சினத்தினால் சுட்டெரிக்கும் நெருப்பைப் போன்றவனானான். மனக்கடுப்பினன் மாதவத்து ஓங்கலை - உள்ளங் கொதிப்பவனாக, மாபெருந் தவத்தை மேற்கொள்ளும் அம்முனிவனை நோக்கி எனக்கடுத்தது செய்திலன் என்றசொல் - எனக்குத் தக்கதாகச் செய்யவேண்டியதை நான் செய்யவில்லை என்று சொன்ன சொல்லானது, உனக்கு அடுப்பதன்றால் உரவோய் எனா - அறநெறிகளை நன்கறிந்த உனக்கு ஏற்றதாகுமா என்பதைச் சொல் எனச் சினத்துடன் கேட்பதாகப் பொருள்படுகிறது.

பரதன் கொண்டசினத்தை வெந்தீயெனக் கம்பர் கூறுவது ‘சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமெனும் ஏமப் புணையைச் சுடும்’ என்னும் வள்ளுவரின் வாக்கோடு ஒப்பு நோக்கக் கூடியது. பரதன் முனிவனை நோக்கி, ‘நீர் கூறியது உமக்கு ஏற்றதுமன்று, எனக்கு ஏற்றதுமன்று’ எனக் கூறி இராமனுக்குத் தம்பியாகப் பிறந்தநான், அவனுக்குரிய அரசைக் கொள்ளமாட்டேன். இராமன் அயோத்திக்கு மீண்டும் வந்து அரசைக் கொள்ளாவிட்டால் அவனுடனே நானும் கானகத்தில் உறைவேன் எனத் தனது மனவுறுதியைக் கூறுகின்றான். அதனைக் கேட்டு மகிழ்ந்த முனிவன் பரதனைச் சேனையோடும் தனது ஆச்சிரமத்துக்கு அழைத்துச் சென்று பல்வகையாக விருந்தளிக்கப் பரதனோ விரதம் பூண்டவனாகக் காய் கிழங்குகளை உண்டு தரையில் உறங்குகின்றான். பின்னர் பரதன் தனது படைபரிவாரங்களுடன் சித்திரகூடம் நோக்கிச் செல்கின்றான். இவர்கள் செல்லும்போது எழுந்த ஆரவாரத்தைக் கேட்டு இலக்குமணன் மலையுச்சியொன்றில் ஏறிப் பார்த்தபோது பரதன் சேனையுடன் வருவதுகண்டு, இராமனுடன் போர்புரியவே வருகின்றான் என்று சினமடைந்து, ‘அவனையும் அவனது படையையும் நொடிப்பொழுதில் அழித்துவிடுகிறேன்’ என்று சூளுரைத்துப் போர்க்கோலம் கொள்கிறான்.

***தழைத்தவான் சிறையன தசையுங் கவ்வின***
***அழைத்தவான் பறவைகள் அலங்கு பொன்வடிம்பு***
***இழைத்தவான் பகழிபுக் கிருவர் மார்பிடை***
***புழைத்தவான் பெருவழி போகக் காண்டியால்.***

கம்ப. அயோத்தி. 1121

தழைத்தவான் சிறையன - செழித்தபெரிய இறகுகளையுடைய, அலங்கு பொன்வடிம்பு இழைத்த - அசைந்து ஒலிசெய்கின்ற கரும்பொன்னினால் விளிம்பு அமைக்கப் பெற்ற, வான் பகழி - எனது பெரிய அம்புகள், இருவர் மார்பிடைபுக்கு தசையுங் கவ்வின- பரதன், சத்துருக்கன் ஆகிய இருவரதும் மார்பிலேயும் தைத்து அவர்களது தசையைக் கௌவிக்கொண்டு, அழைத்தவான் பறவைகள் -வானத்தில் செல்லும் கழுகு முதலிய பறவைகளை விருந்துண்ண அழைத்தவாறு, புழைத்தவான் பெருவழிபோகக் காண்டியால் - துளைத்துண்டாக்கிய பெருவழியாகப் போவதைப் பார்ப்பாயாக என்றுசினம் கொண்ட இலக்குமணன் இராமனுக்குக் கூறுவதாகச் செய்யுள் அமைந்துள்ளது.

விசையொடு செல்வதற்காக அம்புகளுக்கு இறகுகட்டும் வழக்கம் இருப்பதால் ‘தழைத்தவான் சிறையன’ என்று இலக்குமணனுடைய அம்புக்குக் கம்பர் அடைமொழி கொடுத்தள்ளார். இச்செய்யுளுக்கு, நன்கு தழைத்து வளர்ந்த சிறகுகளை உடைய பெரியகழுகு ஏனைய கழுகுகளையும் கூவிஅழைத்துக்கொண்டு,இருவர் மார்பிடையேயும் எனது அம்புகள் புகுந்துதுளைத்த பெருவழியில் நுழைந்து மார்புத் தசைகளை கௌவி அள்ளிச் செல்வதைக் காண்பாயாக! என்று இலக்குமணன் இராமனிடம் சினத்துடன் கூறுவதாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. எனவே இச்செய்யுள் சிலேடை அணிநயத்தில் அமைந்திருப்பதைக் காண்கிறோம். வான் - பெரு ஆகிய சொற்கள் ஒருபொருளையே குறிக்கும் ஒருபொருட்

பன்மொழியைக் கம்பர் இங்கே பயன்படுத்தியிருப்பதையும் நோக்கலாம். கடுஞ்சீற்றங் கொண்ட இலக்குமணனை இராமன் சமாதானப் படுத்துறுகிறான்.

***நங்குலத் துதித்தவர் நவையுள் நீங்கினர்***
***எங்குலப் புறுவர்கள் எண்ணின் யாவரே***
***தங்குலத் தொருவரும் தருமம் நீங்கிலர்***
***பொங்குலத் திரளொடும் பொருத தோளினாய்!***

*கம்ப. அயோத்தி. 1125*

பொங்குலத் திரளொடும் பொருததோளினாய்! - கற்தூண்களைப் போன்றதிரண்டதோள்களையுடையவனே!, நங்குலத் துதித்தவர் நவையுள் நீங்கினர் - நமதுகுலத்தில் பிறந்தவர்கள் குற்றத்தின் நின்றும் நீங்கியவர்கள், எங்குஉலப் புறுவர்கள்- அவர்கள் எவ்வாறு அளவிட்டுச் சொல்லப்படக் கூடியவர்கள், எண்ணின் யாவரே தங்குலத் தொருவரும் தருமம் நீங்கிலர் -

**தமக்கு மிகநெருக்கமானவர்கள் இறந்துவிட்டால் அவரோடு சேர்ந்து தாமும் இறந்துபோகாமல் இருக்கின்றோமே என்று இரங்கியழும் உலக இயல்பினை 'காவல நீவானடைந்தாய் இன்னும் இருந்தேன் நான் வாழ்வுகந்தே!' என்னும் வரிகளால் இராமனின் வாயிலாகக் கம்பர் கூறும் சிறப்பைக் காண்கிறோம்.**

சிந்தித்துப் பார்த்தால் தமது குலத்துக்கு பழியுண்டாக்கு வதற்காக அறத்திலிருந்தும் நீங்கியவர் யாருள்ளார்? எவருமில்லை என்பதாகச் செய்யுள் பொருள் தருகிறது. வாய்மையைக் காப்பதற்காகத் தந்தை உயிர்துறந்ததை இராமன் அவனுக்கு நீனைவூட்டுவதாக இக்கருத்தைக் கொள்ளலாம். இவ்வாறு இலக்குமணனை இராமன் ஆற்றுப்படுத்திக் கொண்டிருந்தபோது அவர்களை நோக்கிவரும் பரதனின் உருவத்தை இராமன் காண்கின்றான்.

***தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்***
***அழுதழி கண்ணினன் அவலம் ஈதென***
***எழுதிய வடிவமொத்து எய்துவான் தனை***
***முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான்.***

*கம்ப. அயோத்தி. 1132*

தொழுதுயர் கையினன் துவண்டமேனியன் - தலையின்மேல் கைகூப்பித் தொழுதவாறு மிகவும் தளர்ந்துபோன உடம்பை உடையவனாக, அழுதழி கண்ணினன் -இடைவிடாது தொடர்ந்து அழுதுகொண்டிருந்ததால் பொலிவிழந்த கண்களை உடையவனாக, அவலம் ஈதென எழுதிய வடிவமொத்து- துன்பத்தின் வடிவம் இவ்வாறுதான் இருக்கும் என்று எழுதிக்காட்டிய உருவமாக, எய்துவான்தனை முழுது ணர் சிந்தையான் முடியநோக்கினான் - தன்முன்னே வந்துநின்றவனை முற்றும் அறிந்தஉள்ளத்தை உடையவனாகிய இராமன் தலையிலிருந்துகால்வரை முழு உருவையும் உற்றுப்பார்த்தான். பரதன் கொண்டுள்ள துன்ப உணர்வு நிலையை இச்செய்யுள் வழியாகக் கம்பர் சிறப்பாகவே எடுத்துக் காட்டியுள்ளார். துன்பத்தின் வடிவம் இதுதான் என்று எழுதிவைத்தபடி பரதன் வந்தான் என்று, 'அவலம் ஈதென எழுதிய வடிவமொத்து எய்துவான்' என்னும் சிறந்த சொல்நயமும் பொருள்நயமும் மிக்ககம்பனின் கவிநயம் நம்மை வியக்கவைக்கிறது.

இவ்வாறு துன்பத்தின் வடிவமாகத் தோற்றமளித்த பரதனைப் போர்க்கோலம் கொண்டிருந்த இலக்குமணனுக்கு 'நீ நினைத்த பரதனின் போர்க்கோலம் இதுதானாபார்' என்றுகாட்ட இலக்குமணனும் நாணமுற்றவனாக அதிர்ச்சியில் உறைகிறான்.

***எல்லொடுங் கியமுகத் திளவல் நின்றனன்***
***மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழும்***
***சொல்லொடுஞ் சினத்தொடும் உணர்வு சோர்தர***
***வில்லொடுங் கண்ணநீர் நிலத்தில் வீழவே.***

*கம்ப. அயோத்தி. 1134*

மல்லொடுங்கிய புயத்தவனை- தவத்தை மேற்கொண்டதால் வலிமைகுன்றிய தோள்களோடு காட்சிதரும் பரதனைக் கண்டு, வைதெழும் சொல்லொடுஞ் சினத்தொடும் உணர்வு சோர்தர - முன்புதான் கொண்டிருந்த சொற்களும், அவன்மீது கொண்டிருந்த சினமும், தன்னுணர்வும் சோர்ந்துபோக, வில் லொடுங் கண்ணநீர் நிலத்தில் வீழவே-பரதனைஎதிர்த்துப் போரிடஏந்தியிருந்த வில்லும்,பரதன் மீதுஎற்பட்ட இரக்கத்தால் பெருகிய கண்ணீரும் நிலத்தில் விழவும், எல்லொடுங் கியமுகத் திளவல் நின்றனன் - போர் வெறியினால் பொலிவு கொண்டிருந்த முகத்தின் களையை இழந்தவனாக இலக்குமணன் நின்றான் என்று கம்பர் காட்சிப் படுத்துகின்றார். பரதனைக் கண்முன்னே காணும்வரை அவன்மீதுவெறுப்பும் சினமும் கொண்டிருந்தவன் இலக்குமணன். தவக்கோலத்தால் இளைத்துப்போயிருந்த பரதனின் தோற்றத்தைக் கண்டவுடன் அவன் ஏந்தியிருந்த வில்லும் அவனது கண்களிலிருந்து கண்ணீரும் ஒருசேரநிலத்தில் விழுந்தன என்னும் கம்பரின் கூற்று இலக்குமணனிடம் ஏற்பட்ட சினத்தை இரக்க உணர்வு இழுத்து நிலத்தில் வீழ்த்தியது என்பதைச் சிறப்பாகவே படம் பிடித்துக் காட்டுகிறது.

பரதன் இராமனின் முன்வந்து அவனது காலடிகளில் விழுந்து வணங்குகின்றான். அவனைத் தூக்கியெடுத்து தழுவிக் கொண்டு தந்தை நலமாக இருக்கின்றாரா? எனக் இராமன் கேட்கத் தந்தை மறைந்துவிட்டசெய்தியைப் பரதன் சொல்கிறான். தந்தை இறந்த செய்தி காதில் விழும்முன்னரே இராமன் உணர்விழந்து நிலத்தில் விழுந்து புலம்புகிறான்.

***நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்***
***தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே***
***எந்தாய் இகல்வேந்த ரேறே இறந்தனையோ***
***அந்தோ இனிவாய்மைக் காருளரோ மற்று.***

*கம்ப. அயோத்தி. 1143*

நந்தாவிளக்கனைய நாயகனே - அணையாத விளக்கை யொத்த தலைவனே! நானிலத்தோர் தந்தாய் - இவ்வுலகிலுள் ளோர்க்கெல்லாம் தந்தையைப் போன்றவனே! தனியறத்தின் தாயே-ஒப்பற்ற அறத்துக்குத் தாய்போன்றவனே! தயாநி லையே - அருளுக்கு இருப்பிடமானவனே! எந்தாய் - என் தந் தையே, இகல்வேந்தர் ஏறேஇறந்தனையோ - பகையரசர்க் கெல்லாம் சிங்கம் போன்றவனே நீமடிந்து போயினையோ? அந்தோ இனிவாய்மைக் காருளரே மெய்யுற்றார் - ஐயோ! உண்மைக்கும் உறவுக்கும் உன்னைப்போல இனி யார் இருக் கின்றார் என்று இராமன் புலம்புகின்றான். தயரதன் தன் நற் குண, நற்செய்கைகளாலும் புகழாலும் தமதுகுலத்தை விளங்கச் செய்தவனாகையால் 'நந்தாவிளக்கனைய நாய கனே' என்று விளிப்பதாக இருக்கிறது. தொல்காப்பியர் கூறிய வழியில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்கள் பற்றிய பொருண்மையில் நானிலம் என்று உலகை யும், நானிலத்தோர் என்றுஉலகில் வாழும் மக்களையும் ஆகு பெயரால் கம்பர் குறிக்கின்றார். தந்தையின் இரக்ககுணச் சிறப்பை எடுத்துக்காட்டத் தந்தையைத், 'தாயே தயாநி லையே' என இராமன் அழைப்பதாகஆணைப் பெண்ணாக உருவகித்துச் சிறப்பித்திருக்கின்றார் கம்பர்.

***தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டு***
***கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ***
***வானடைந்தாய் இன்னும் இருந்தேன்நான் வாழ்வுகந்தே***
***ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள்வேலாய்.***

*கம்ப. அயோத்தி. 1148*

ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள்வேலாய் - உடல் மதம் பிடித்த பகைவர்களது உயிர் பறித்த ஒளிமிக்க வேலை யுடையவனே! தேனடைந்த சோலைத் திருநாடுகைவிட்டு- நான் தேன்பொருந்திய சோலைகள் சூழ்ந்த செல்வம் கொழிக்கும் கோசலநாட்டைக் கைவிட்டு, கானடைந்தேன் என்னத் தரியாது காவல நீ - நான் கானகத்தை வந்தடைந்து விட்டேன் என்பதைத் தாங்கமாட்டாமல், வானடைந்தாய் இன் னும் இருந்தேன் நான் வாழ்வுகந்தே - நீவானுலகம் சென்று விட்டாய். ஆனால் நானோ உன் இறப்பை அறிந்தபின்னும் இவ்வுலக வாழ்வை விரும்பி இன்னமும் பிழைத்திருக்கின் றேன் என இராமன் மேலும் புலம்புகின்றான். அன்புசிறிதும் இல்லாத என்னிடத்து நீ அன்புவைத்தாய் என்று இராமன் புலம்புவதாகவும், தமக்குமிக நெருக்கமானவர்கள் இறந்து விட்டால் அவரோடு சேர்ந்து தாமும் இறந்துபோகாமல் இருக் கின்றோமே என்று இரங்கியழும் உலக இயல்பினை காவல நீ வானடைந்தாய் இன்னும் இருந்தேன் நான் வாழ்வுகந்தே! என் னும் வரிகளால் இராமனின் வாயிலாகக் கம்பர் கூறும் சிறப் பைக் காண்கிறோம்.

தந்தையின் இறப்பை அறிந்துவருந்திப் புலம்பிய இராமனை வசிட்டன் தேற்றத் தம்பியும், தானும் கங்கையில் நீராடித் தந் தையாருக்குரிய கடன்களைச் செய்து பின் சீதையிருக்குமிடம் சென்று தந்தையிறந்த செய்தியைத் தெரிவிக்க அவளும் இரங்கிப் புலம்புகின்றாள். தாயார்கள் சுமந்திரனால் அழைக் கப்பெற்றுவர அங்கு எல்லோரும் இரங்கிப் புலம்புவோரானார் கள். கதிரவனும் மறைந்து பின்பொழுது புலர்கிறது. எல்லோ ரும் சூழ்ந்திருக்கின்ற வேளையில் இராமன் பரதனை நோக்கி, தந்தையும் இறந்துவிட்டார். நாடோ உன்னுடையது. நீமுடிசூ டிக் கொள்ளாமல் விரதவேடம் பூண்டது ஏன்? எனவினவுகி றான். அது கேட்டுப் பரதன் தன் தாயின் செயலுக்காக வருந் திவனாகத் தன்னையும் நொந்தவனாக, நீர் மீண்டும் நாட்டுக் குவந்து அரசை ஏற்கவேண்டும் என்று இராமனை வேண்டுகி றான். தாய் தந்தையரின் சொல்லை மீறுவது அறமன்று. நீஅர சாள்வதே தக்கது. வாய்மையைக் காப்பதற்கு பதினான்கு ஆண்டுகள் நான் வனத்தில் உறைந்தே தீரவேண்டும். அது வரை என் பணியால் நீஅரசுபுரிக! என இராமன் அவனுக்குஉ ணர்த்துகிறான். அதற்குப் பரதன், அப்படியானால் நாட்டை ஆள்பவர் ஆளட்டும். நானும் உம்முடன் காட்டில் உறை வேன் என்று கூற, தேவர்கள் கூடிப் பரதனைநோக்கி, 'தந்தை யின் சொற்படி புவிகாத்தல் உன்கடன்' என்று கூறி வலியு றுத்த வேறுவழியின்றி அவனும் வானவர்களின் கட்டளைக்கு இசைய வேண்டியதாகிறது.

***ஆமெனில் ஏழிரண்டு ஆண்டில் ஐயநீ***
***நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்***
***கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி***
***சாமிதுசரத நின் ஆணை சாற்றினேன்.***

*கம்ப. அயோத்தி. 1216*

ஆமெனில் ஏழிரண்டு ஆண்டில் - அப்படியானால், பதி னான்கு ஆண்டுகள் கழிந்தவுடன், ஐயநீ நாமநீர் நெடுநகர் நண்ணி- பகைவர்கள் அஞ்சுகின்ற அகழிநீர் சூழ்ந்த அயோத்தி மாநகரைஅடைந்து, நானிலம் கோமுறை புரி கிலை யென்னில்- இவ்வுலகை அரசாட்சி செய்யவில்லை யென்றால், கூரெரி சாமிது சரதநின் ஆணை சாற்றினேன்- நான் எரிபுகுந்து உயிர்மாய்ப்பேன். இது திண்ணம். உன்மேல் ஆணை. என்று பரதன் கூற, இராமன் அதற்கு உடன்படுகி றான். அப்போது,

***அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினான்***
***முடித்தலம் இவையென முறையிற் சூடினான்***
***படித்தலத்து இறைஞ்சினன் பரதன் போயினான்***
***பொடித்தலம் இலங்குறு பொலங்கொள் மேனியான்.***

*கம்ப. அயோத்தி. 1219*

அழுதகண்ணினான் - அழுதகண்களுடன்,பொடித்தலம் இலங் குறு பொலங்கொள் மேனியான்- நிலத்தின் புழுதிபடிந்திருந் தும் நிறைந்த அழகானமேனியையுடைய பரதன், அடித்தலம் இரண்டையும் படித்தலத்து இறைஞ்சினன்-இராமனின் காலடி யில் விழுந்துவணங்கி அவன் அணிந்திருந்த காலணிகள் இரண்டையும் இரந்துபெற்று, முடித்தலம் இவையென முறை யிற் சூடினான் பரதன் போயினான்- தனக்குரிய மணிமுடி இவைதான் என்று தலையில் வைத்தபடி அயோத்திக்கு மீண் டுசென்றான். அடித்தலம் - முடித்தலம் என முரண் தொடை யில் காலணியைத் தலைஅணியாகக் கொண்டான் என்னும் சிறந்த சொல்லாட்சிமிக்க செய்யுளோடு கம்பராமாயணத்தின் இரண்டாவது காண்டமாகிய அயோத்தியாகாண்டத்தைக் கம்- பர் நிறைவுசெய்கிறார். நானும் அடுத்த இதழில் மூன்றாவது காண்டமாகிய ஆரணியகாண்டத்தில் உங்களுடன் இணைந்து கொள்கிறேன்.

(வளரும் ...)



shanmugarajah@thaiveedu.com



## தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர்

# மாவை சேனாதிராஜா

## (27.10.1942 - 29.01.2025)

– பி. பற்குணரஞ்சன்

மாவை சேனாதிராஜா என அழைக்கப்படும் சோமசுந்தரம் சேனாதிராஜா அவர்கள் இலங்கையில் புகழ் பூத்த அரசியல் வாதியாகவும் இலங்கைத் தமிழரசு கட்சியின் மூத்தத் தலைவ ராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் அறியப்பட்டவர்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர் என்பதால் தனது பெயருடன் முன்னிணைப்பாக 'மாவை' என்ற சொல்லைச் சேர்த்துக்



கொண்டார். சோனாதி, மாவை, மாவை அண்ணன் என்றும் அழைக்கப்பட்ட மாவை சேனாதிராஜா அவர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராவார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடமான மாவிட்டபுரத்தில் 1942 ஒக்ரோபர் 27-இல் பிறந்த மாவை சேனாதிராஜா, தனது ஆரம்பக் கல்வியை வீமன்காமம் பாட சாலையில் கற்று, உயர் கல்வியை நடேஸ்வராக் கல்லூரியில் பூர்த்தி செய்து, இலங்கை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலைப் பட்டப்படிப்பை நிறைவு செய்திருந்தார்.

கல்வி கற்கும் காலப்பகுதியிலேயே தீவிர அரசியல் ஈடுபாடு கொண்டவரான மாவை, 1960-களில் பாடசாலைக் கல்வி யைப் பூர்த்தி செய்தவுடன் நேரடியாகவே அரசியலில் இறங் கினார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் பௌத்த சிங்கள வர்களின் இறையாண்மை மிக்க தேசமாக இலங்கை கருதப் பட்டதால், பௌத்த சிங்கள அரசியல் தலைவர்களின் இன வாதக் கருத்துகள் தமிழ் மக்கள் மத்தியில் அமைதியின் மையை ஏற்படுத்தின. சிறிமாவோவின் ஐக்கிய முன்னணி அர சாங்கம் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளில் தொடந் தும் ஈடுபட்டதால், தமிழ் இளைஞர்கள் ஹர்த்தால்கள், பகிஸ் கரிப்புகள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் எனத் தொடர் போராட்டங்களை மேற்கொண் டனர். அக்காலப்பகுதியில் தமிழ் இளைஞர் வாலிபர் முன்ன ணியில் இணைந்து கொண்ட மாவை சேனாதிராஜா, 1961-இல் தந்தை செல்வா தமிழ் மக்களுக்காக நடத்திய சத்தி யாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றினார். இதையடுத்து, இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் 1962-ஆம் ஆண்டு தன் னை இணைத்துக் கொண்ட மாவை சேனாதிராஜா அவர்கள் பின்னர் தீவிரமாக இயங்கத் தொடங்கினார். இலங்கை தமிழ் அரசு கட்சியின் இளைஞர் அணியில் இணைந்துகொண்ட இவர், மக்களுக்கான அறப்போராட்டங்கள் பலவற்றில் பங் கெடுத்தார்.

ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தில் 1966-ஆம் ஆண்டு இணைந்த அவர், அதன் செயலாளராக 1969-ஆம் ஆண்டு வரை கடமையாற்றியுள்ளார். அரச பயங்கரவாதம் தமிழ் பேசும் மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்த காலப்பகுதி யில் இனவன்முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். இதனால் மாவை சேனாதிராஜா 1973-இல் கைது செய்யப்பட்டார். இவருடன் ஈழவேந்தனும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மிகக் கொடூரமான முறையில் இவ்விரு வரும் சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் நான்காண்டுகள் கழிந்த நிலையில், அதாவது 1977-இல் விடுதலை செய்யப் பட்டனர். சிறையிலிருந்து வெளிவந்த நிலையில் 1978-இல் இந்தியா சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி

கற்று பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார். 1969 முதல் 1983 வரையான காலப்பகுதியில் இலங்கை அரசால் பதினொரு தடவைகள் கைது செய்யப்பட்டு ஏழு வருடங்களுக்கு மேலான காலப்பகுதியைச் சிறையில் கழித்தார்.

1972-ஆம் ஆண்டு சிறையிலிருந்து வெளியில் வந்த மாவை சேனாதிராஜா தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக திருவாளர் அமிர்த்த லிங்கம் அவர்களால் நியமிக்கப்பட்டார். சேனாதிராஜா 1989 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார். பின்னர் அ. அமிர்தலிங்கம் ஜூலை 13, 1989 படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அவரின் இடத்திற்கு சேனாதிராஜா நாடாளு மன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். இதேபோல் 1999 ஜூலை 29-இல் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், நீலனின் இடத்துக்கு நாடாளு மன்றம் சென்றார்.

2000-ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி (தவிகூ) வேட்பாளராக யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் 2001 ஒக்ரோபர் 20-இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தவிகூ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ததேகூ) என்னும் கட்சி உருவாக்கப்பட்டது. 2001 தேர்தலில் ததேகூ சார்பாக யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார். அந்த தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 14, பேர் விடுதலைப்புலிகளை ஏகப்பிரதிநிதியாக ஏற்க வேண்டும் என்பதை நாடாளுமன்ற குழு கூட்டத்தில் தீர்மானம் எடுத்தபோது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி அவர்கள் அதை ஏற்கமுடியாது என்ற போதிலும் மாவை விடுதலைப்புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கவேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தார்.

2004, 2010, 2015 தேர்தல்களில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். செப்ரெம்பர், 2014-இல் சேனாதிராஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 2000 ஆண்டு தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். 2014-ஆம் ஆண்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த 10 ஆண்டுகளாக இலங்கை தமிழரசுக் கட்சி தலைவராக மாவை சேனாதிராஜா செயற்பட்டார்.

இக்காலப்பகுதியில் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் கட்சி உறுப்பினர்களால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு இணங்கிப் போகவேண்டிய நிலை இருந்தது. சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு கட்சி சார்ந்து சிந்திக்க வேண்டிய நிலையில் இருந்தமையால், வேறுபட்ட கொள்கை சார்ந்தும் செயற்பட்டார். இதனால் கட்சி மெல்ல சீரழிந்து செல்வதை அவதானித்து 2024, பொதுத் தேர்தலின் பின்னர் கட்சியில் உள்ள சிலருடைய கருத்து முரண்பாட்டால் தலைவர் பதவியில் இருந்து தான் விலகவுள்ளதை அறிவித்த மாவை சேனாதிராஜா அவர்கள், அந்த பதவியை 2024 ஜனவரி 21-இல் ஜனநாயக ரீதியாக தெரிவாகிய சிவஞானம் சிறிதரனை வகிக்குமாறும், கடிதமூலம் கோரியிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்கள் 'தொடர்ந்தும் அடுத்த மாநாடு வரை நீங்களே தலைவராக இருங்கள்' என மாவையைப் பார்த்து கூறியதையடுத்து, அதனை அவர் ஏற்றிருந்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. சிறிதரனுக்கு தான் வழங்கிய கடிதப் பிரதியை பதில் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கத்துக்கு அனுப்பியபோது, 2024 டிசம்பர் 14 அன்று வவுனியாவில் நடைபெற்ற மத்தியகுழு கூட்டத்தில் மாவை தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டபோது, கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. அதனைத் தொடர்ந்து அப்பதவியில் தான் இருக்கப்போவதை மாவை அறிவித்தார். இந்நிலையில் அடுத்த மத்திய செயற்குழு



கூட்டம் 2024 டிசம்பர் 28-இல் வவுனியாவில் இடம்பெற்றபோது சி.வி.கே. சிவஞானம் பதில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், மாவை சேனாதிராஜாவுக்கு அரசியல் குழு தலைவர் பதவி வழங்கப்பட்டது. ஆனால் அவர் அதை ஏற்கவில்லை.

இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்காக அரசியல் களத்தில் நின்று அகிம்சை போராட்டங்களை நடத்தி மக்கள் பணி செய்த மாவை, அறப்போராட்டங்கள் நடத்தி நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பிய முக்கிய தலைவர்களில் ஒருவர். ஆளுமையும் அர்ப்பணிப்பும் மிக்க மாவை சேனாதிராஜா அவர்கள் பாரம்பரிய தமிழரசுக் கட்சி உறுப்பினர்களால் ஆழமாக நேசிக்கப்பட்டவர்.

சாத்வீக போராட்ட களத்தையும், ஆயுத போராட்ட களத்தையும் சமகாலத்தில் சந்தித்த முதுபெரும் தமிழ் அரசியல்வாதியான மாவை சேனாதிராஜா அவர்கள் ஜனவரி 29, 2025-இல், தனது 82-வது வயதில் காலமானார்.

ஈழத்தரசியல் வரலாற்றில் ஆழமாகத் தடம் பதித்த மாவையின் அரசியல் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது. மாவை சேனாதிராஜாவின் அரசியல் வரலாறு இன்றைய இளைய சமூகத்தால் சரியான முறையில் அறியப்படவில்லை. ஈழநாட்டின் அரசியல் வரலாறு தீர்க்கமான முறையில் தெளிவாக எழுதப்பட்டால், ஈழத்து அரசியலில் அவருக்குரிய சரியான இடத்தை நாம் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு.



ranjan.x@thaiveedu.com

# தமிழ்வலை - 112

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-112 வினா

### இடமிருந்து வலம்

2 இலங்கையில் ஓர் இடம்

5 அப்துல் ஹமீதின் பேர்போன நிகழ்ச்சி

7 பதில்

8 உறவினர்

9 இரண்டாக வெட்டு

10 கொடுக்கினால் தீண்டும் பிராணி

11 சரசுவதி

14 முகவுரை

16 புளித்துப்பொங்கு

18 தாளிக்கப் பயன்படும் இலைவகை

### மேலிருந்து கீழ்

1 ஒருவகை அரிசி

2 சம்மதம் பெறாமல் (4-6)

3 ஒருவகைக் காலணி

4 ஒருவருக்கு எதிராக ஒருவரை மூட்டிவிடு (3-2)

6 தண்மை

7 ஒருவகைக் கனிமரம்

12 வேதம்

13 வருடம்

15 புறாவுக்காக தன்னை தியாகம் செய்த மன்னன்

17 ஒருவகைத் தானியம்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-111-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 அ | சா | ந் | | 2 அ | ந் | த | மா | ன் |
| 3 கு | ரு | | | | ந் | | | | |
| | ம் | | 4 கா | | த | | 5 ந | 6 கா | து |
| | 7 பொ | ன் | மா | லை | ப் | பொ | ழு | து | |
| 8 உ | ரு | | லை | | பு | | ம் | | 9 பி |
| | ள | | | | ரி | | பு | | டி |
| | 10 க | ள | ங் | 11 க | ம் | | | 12 மா | யா |
| | ம் | | | லை | | | 13 ப | ண் | ணை |
| | | | 14 சா | | | 15 கா | | பு | |
| 16 மீ | ன் | பா | டு | ம் | தே | னா | டு | | |

## தமிழ்வலை-111 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சிவகுமார் கம்சிகா, சுன்னாகம்.
பிரபாகரன் பரதராசா, நோத்யோர்க்.
சபா குகநாதன், பாரிஸ்,
உமா கதிர், ஏஜக்ஸ்.
தேவாம்பிகை அரவிந்தன், இங்கிலாந்து
புஷ்பம் நாகராஜா, திருச்சி.
மேரி கெலன் தேவதாஸ், நோத்யோர்க்
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

## குமாரசாமி ரூபிகா,

### கிளிநொச்சி.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.





# வாழ்வுரிமை !

## அமாயாவின் கடிதம்

– மா. சித்திவினாயகம்

புதிய வருடம், உங்கள் எல்லோர்க்கும் என் வந்தனங்கள் !

அன்பேயுருவான விலங்குகளே, பறவைகளே அவசர அவசர மான என் பயணத்தை, உங்களிடம் சொல்லவும் விடவில்லை ஸ்ரெவ்வனி. அழுத கண்ணீரோடு அவளோடு புறப்பட்டு விட் டேன். ஷ்ரெவ்வனி கழுத்துப்பட்டியைப் போட்டு அழைத்த போது என்னால் மறுக்கமுடியவில்லை. முதலில் எங்கு அழைக்கின்றாள் என்றும் புரியவில்லை. அவளது அவசர மும், அவளது கண்களில் திரண்டிருந்த கண்ணீரும் என் மனதை உறுத்த அவளோடு புறப்பட்டேன்.

நான் புறப்பட்ட தருணத்தில் நீங்கள் அனைவரும் மழை வெள்ளத்துள் அலைப்புண்டு தரவை வயல்களில் இருந்தி ருக்க வேண்டும். என் உடமைகளை எடுத்துக் கொண்டு விமா னத்தில் அவள் என்னை ஏற்றியபோது என் பிறந்த பூமியைப் பிரிந்து செல்கிற உணர்வில் நான் அழுதேன். ஸ்ரெவ்வனி என்னை அணைத்துக் கொண்டாள். உங்களிடம் சொல்லாமல் பயணப்பட்டது மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்துகிறது. விமானப் பயணம் இதுதான் முதற்தடவை எனக்கு என்றில்லா விடினும், இந்தமுறைப் பயணம் ஏனோ மிகவும் மனதை உறுத்துகின்றது. இன்று நாங்கள் எங்களைப் புரிந்து கொள்ள மொழியை நன்றாக கற்றுக்கொண்டுள்ளோம்.

பூலோகத்திலிருந்து விண்ணுலகினூடாக நான் முகில்களைத் தாண்டி மேலெழுகின்றேன். மனிதர்கள் நம்புவதுபோல் எந்த தேவர்களும், தேவதைகளும், சுவர்க்கமும் வானில் என் கண் ணில் தெரியவில்லை. பூமிப்பந்தில், தற்செயலான பிறப்புக ளான மனிதர்களும், நாமும் மிகப் பெரிய அர்த்தம் தேடிய லைவதென்பதுதான் கீழே விரிந்து கிடக்கிற பூமியின் சாபம். நாங்கள் போகும் பயணம் இந்தியாவில் தரித்து பின் கனடா போவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. கனடாவில் இருந்து, மீண்டு இந்தியாவில் வசிக்கும் ஸ்ரெவ்வனியின் சிநேகிதியான துளசியை சந்திக்கவே அந்த ஏற்பாடு. இந்தியாவில் தங்கிய வேளை நாம் பலவிடங்களை துளசியோடு சேர்ந்து பார்த்தோம்.

இந்தியா மிக ஏழ்மையான தேசம் என துளசி தன் தேசத் தைப் பற்றி ஸ்ரெவ்வனியோடு முறைப்பாடு செய்தாள். ஆனா லும் இவர்கள் கலை சிறந்தது. தொன்மைமிக்கது என்றாள் ஸ்ரெவ்வனி. தொன்மையில் என்ன சிறப்பிருக்கிறது? என் றாள் துளசி. இவர்கள் வைரங்கள் என்று போற்றிப் பாதுகாப் பாக வைத்திருப்பவை முழுமுடத்தனங்களைத்தான். சாதிப்பி ரிவுகளை, ஏற்றத் தாழ்வுகளை மொழி மீதான அதீத காதலை மட்டுந்தான். - கோபத்தோடு சொன்னாள் துளசி.

மொழியறியா விலங்குகளிலிருந்து சிறிது பரிணாமம் பெற்று, ஆளுக்கொரு மொழி பிரித்தழிகிற மனிதர்களைப்போல மிரு கங்கள் இன்னமும் ஆகிவிடவில்லை என்பது மகிழ்வு தான். மொழி என்பது தகவல் பரிமாற்றக்கருவி. அதைவிட அதில் வேறொன்றில்லை. அவரவர் மொழிகளுக்கு புனிதந்தேடி ஆளுக் காள் மோதி அழிவதுதான் பூமியின் வரலாறாய் திகழ்கிறது.

வந்தாரை வாழ வைக்கும் பண்பும், விருந்தோம்பலுமே மனித இனச்சிறப்பு என்று மார்தட்டுகிற இனங்கள் ஒருவர் கண்டு பிடித்தோ, அல்லது செய்த பொருளையோ அதன் உண்மை யான பெயரில் அழைக்க விரும்புவதில்லை. தாங்கள் தம் மொழிப் பெயர்களை மட்டுமே அவைகளுக்கு வைக்கத் துடிக்கின்றார்கள். துளசி பேசிய படியேயிருந்தாள். இந்தியா என்பது சாதிகளால் உருவாக்கப்பட்ட தேசம். இங்கு தோன் றிய சமயங்களும், இங்கு வந்தேறிய பிறசமயங்களும் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள அந்தச் சாதிய கட்டமைப்பை சுவீக ரித்துக் கொண்டமைதான் இங்கு மகா அதிசயம் என்றாள் துளசி.

ஸ்ரெவ்வனி வாயடைத்துப் போனாள். மதங்களில் புதிய சிந்த னைகளை, மாற்றங்களைச் சீர்திருத்தமாகக் கொண்டுவந்து சாதியைப் போக்கமுடியாதோ என்றாள் ஸ்ரெவ்வனி. சொல்ல ளவில் அன்பே சிவம் என்றும், அனைவரும் சகோதரர் என்றும் சொல்லுபவை தான் அனைத்து மதங்களும். ஆனால், நடை முறையில் சாதிக்காக மதம் மாறியவர்கள் கூடச் சாதியை இறுக்கமாகவே இன்றளவும் பேணுகின்றார்கள். மதமெதுவு மற்றுப் போனால்தான் சாதியைச் சிதைக்கலாம் என்ற மார்க்ஸ் அவர்கள் முன்வைத்த வர்க்கப்போராட்டம் தான் சிறப்பென அறிந்தும், அதைத் தோற்கடிப்பதே தங்கள் கட மையாக இருப்பவர்கள் இந்தச் சந்தர்ப்பவாதிகள் என்றாள் துளசி. இன்னமும் ஒருபடி மேலே போய்... மொழி, பண்பாட் டுச் சீர்திருத்தம், மதச்சீர்திருத்தம் என்றெல்லாம் தங்கள் சாதிகளைத் தக்க வைக்கக் கூடியதாக சாதி வளர்ப்புக் கம் யூனிசம் பேசுபவர்கள் இந்த இந்தியர்கள் என்றாள் துளசி.

இங்கு மிருக வணக்கம் முக்கியமானதொன்று. மிருகங்களை வணங்கும் மனிதர்களல்லவா நம் முன்னோர். அதற்குச் சான் றாகத் தான் எருமை, யானை, புலி, காண்டாமிருகம், ஆடு, யுனிக் கோர்ண் என்ற ஒற்றைக் கொம்பாடு, மற்றும் பாதிமிரு கமும் பாதி மனித உடலுமான பல விலங்குகள் அங்கு காட் சிப்படுத்தப்பட்டிருந்தன. ஆமாம், நாம் மிருகங்களில்



இருந்து வந்தவர்கள் தானே என்றாள் ஸ்ரெவ்வனி. அமாயா வாகிய என்னைத் தடவியபடியே பாரசீக கடற்பரப்பைத் தாண்டிய மொசப்பத்தோமியாவிலும், மனிதமீன் இருந்ததைப் படித்ததாய் ஞாபகம் என்றாள் ஸ்ரெவ்வனி.

உலகெங்கும் மூடர்கள் தான் அரிஸ்டோட்டில் இந்திய விலங் கென சொன்னது இந்த யுனிக்கோர்ண் என்ற ஒற்றைக்கொம்பு எருதைத்தான் என்று, யுனிக்கோர்ண் உருவத்தை தடவினாள் இந்தியத் தோழி துளசி. இது தமிழ் நாகரிகம் என்பவர்கள் இதுக்கு தமிழ்ப் பெயர் இன்னமும் வைக்கவில்லை என்றாள் அவள்.

ஆராய்வாளர்கள் சேர். ஜோன் மார்சலும், சேர். மோர்டிமர் வீலரும் தூக்கிக் கொண்டாடிய யுனிக்கோர்ண் இது. 5000 வருட மண்ணைத்தோண்டி நாகரிகம் தேடுபவர்கள், கூட இருக்கும் சக மனிதரை குழி தோண்டிப் புதைக்கிற கேடான வர்களாக இருக்கின்றார்கள். சாதி பகுத்து ஏற்றத்தாழ்வோடு வாழ்பவர்களாயிருக்கின்றார்கள்.

வெளியே வந்த நாங்கள் பெருஞ்சாவடியில் ஒரு சாப்பாட்டுக் கடையடிக்கு வந்தோம்.

என்னை ஸ்ரெவ்வனி நீளமான நீல நிற கயிற்றில் கட்டி, தன் கையோடு பிணைத்திருந்தாள். நான் அங்கு பார்த்த நாய்கள் மெலிந்து போயிருந்தன. ஆனாலும் அவற்றிற்கு மட்டுமே உணர்வும், மானமும் மிகுதியாக இருப்பதாக எண்ணி வந்தேறி நாயான என்னைப் பார்த்துக் குலைத்தன. நான் அங்கு நின்ற சிறு நாயருகே போய் நான் உன் நண்பன், உன் இனமென்றேன். அது சீற்றத்தோடு என்னைக் கடிக்க வந்தது. நீ என்னின நாயல்ல என்றன அவை கூட்டாக.

நாயெல்லாம் ஒன்றுதானே என்ற நான், நாமெல்லோரும் ஒன்றானால் தானே நம் உரிமைகளைப் போராடிப் பெறலாம் என்றேன் நான். அவை கூட்டாக குலைத்தபடியே இருந்தன. தன்னினத்தையே ஒன்றோடு ஒன்று சேர்க்காத இவற்றின் விடுதலைக்காகவா இத்துணை காலமும் நாம் விலங்குப்பண்ணையில் போராட்டம், புரட்சி என மாய்ந்தோம்.

நம் அனைவர் வாழ்க்கையையும் குலைப்பது நாம் நம்மீதே கொண்டுள்ள சந்தேகம் தான். முதலில் எம்மவர்களை நாம் நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டுமென்றேன், என்னைப் பார்த்துக் குலைத்த அந்த நாய்களிடம். அந்த நாய்கள் நான் சொல்வதைக் கிரகிக்காமல் என்னைத் துரோகி, வந்தேறி என்றெல்லாம் திட்டியபடி மேலும் குலைத்தபடியே இருந்தன.

மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் என்று இந்த உலகை எந்த வேறுபாடுமின்றித் தின்று தொலைப்பது, ஒருவர்மீது ஒருவர் காட்டுகிற வெறுப்பும், இந்த நம்பிக்கையீனமும்தான். நான் பெருமூச்செறிந்தேன். அந்த தெரு நாய்கள் தம் ஊரிலுள்ள நாய்கள் மட்டுமே தம்மின நாய்களென்றும் அவையே இங்கு நாட்டாண்மை என்றும் உறுதியாக நம்பி நின்றன. உள்ளூர் நாய்கள் எது செய்தாலும் சரியென்றே ஊர் நாய்கள் வாதிட்டன.

***‘காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்...’***

என்ற பாரதியின் பொதுமை செத்துக்கிடந்தது. இந்த நிலம் நமக்கான நிலம். நாம் தனித்துவமானவர்கள். நம் பண்பாடு வேறு உன்போன்ற வந்தேறிகளின் பண்பாடு வேறு என்று உருவேறியாடிய அந்த நாய்களைப் பார்த்து அமாயாநாய் பயந்து போய் ஸ்ரெவ்வனியோடு ஒன்றியது.

***‘உழுது போடும் மாடே
உரிமை உனக்கு கேடோ
தொழுது நிற்கச் சொன்னால்
தொலைவில் ஓடுவாயோ
அழுகை என்ன இங்கே
அடிமை விலங்கு நீயே
முழுமை உலகும் மனிதர்
மொத்தச் சொத்து அன்றோ...’***

எனப் பாடுகிற சுயநல மனிதரும், நம் நிலம் இது எமக்கு மட்டுமே அதிகாரம் என்கிற இந்த நமது விலங்குகளும் அடிப்படையில் ஒரே கருத்தியல் கொண்டவைதான்.

கடை வாயிலில் நின்ற வயோதிபர் ஒருவரை, கடையின் காவலாளி கழுத்தில் பிடித்து வெளியே தள்ளினான். ஸ்ரெவ்வனியின் காலடியில் வந்து விழுந்த அந்த முதியவரின் தோள் பிடித்து தூக்கினாள் ஸ்ரெவ்வனி. பசியோடிருக்கும் அந்த முதியவருக்கு அந்த ஹோட்டலில் இருத்தி உணவு வாங்கிக் கொடுத்தாள்.

கிழவனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். இருவருமே இன்று கல்யாணங் கட்டி நன்றாக இருந்தார்கள். இவரது உழைப்பு இருந்தவரை உடன் வைத்திருந்தவர்கள், உழைப்பை இழந்த போது அவரைத் தெருவில் விட்டார்கள். பிள்ளைகள் குடும்பம் இவரைத் தவிக்க விட்டுவிட்டு ஊரை விட்டே போய்விட்டார்கள் என்றார் அந்த முதியவர் கண்களில் நீர்மல்க. அவர் இன்று தனித்துப் போனார். அவரது கரத்தில் இரண்டு ரூபாய்கள் இருந்தன இந்தப் பூவுலகில் அந்த இரண்டு ரூபாய்க்கு எதையும் எவரும் வாங்கிவிட முடியாது.

கிழிந்த சட்டைப் பாக்கெட்டில் இருந்து, அந்த 2 ரூபாயை எடுத்து, ஸ்ரெவ்வனியை நோக்கி நடுங்கும் கரங்களோடு நீட்டினார். சாப்பாடு வாங்கிக் கொடுத்த நன்றியுணர்வைக் காட்ட. இதுதான் என் கையில் இருக்கு தாயே... நேற்று முதல் எதுவும் சாப்பிடவில்லை. இந்தக் காசை நீட்டி எதையும் வாங்க முடியவில்லை. நீ வாங்கித் தந்து என் உயிர் காத்தாய் தாயே. நன்றி உணர்வில் அவர் நா தளதளத்தது.

தயங்கித் தயங்கி வந்த அவரது வார்த்தைகள் மிக பரிதாபகரமாக இருந்தது. குரல் நடுங்கும் அவரது வார்த்தைகளுள் கௌரவம், மானம், அவர் வாழ்ந்த வாழ்க்கை அத்தனையையும் துருத்திக்கொண்டு நிற்கிறது. அவமானத்தில் அவர் இன்று குறுகிப் போயிருந்தார்.

வாழ்ந்த மனிதர்கள் நொந்து கெட்டு வயிற்றுப் பசிக்கு கையேந்துகிற நிலையென்பது சாவிலும் கொடியது. அவர் கண்களில் இருந்து கண்ணீர் மெலிதாக கசிந்தன. அழ வேண்டாம். ஸ்ரெவ்வனி அவர் கண்களைத் துடைத்தபோது அமாயா நாயாகிய நான் நன்றியோடு ஸ்ரெவ்வனியை நாவால் நக்கினேன்.

கடந்தகால வாழ்க்கையை நினைத்து கண்ணீர் வடிக்கிறேன். முது வயதில் பிள்ளைகளுக்குச் சுமையாகி அவர்களால் ஒதுக்கி வைக்கப்படும் ஒவ்வொருவரின் துன்பமும் அவர் கண்ணீரில் வடிந்தது. பேரக்குழந்தைகளைக் கூடத் தன்னிடம் பேச விடாத தன் மருமகள்களை, அவர்களை நம்பும் தன் மகன்களை எண்ணித் துக்கித்த கண்ணீர் அது.

சொந்த மருமகளினால் சோற்றைத் திருடியதற்காக வீட்டில் உள்ள பொருள்களை திருடியதாக வீட்டினை விட்டு விரட்டியடிக்கப்பட்ட அந்த அப்பாவி மனிதரின் கதையைக் கேட்ட அமாயா, மனிதர்களிலும் விலங்குகளிலும் தாம்வாழ அவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள் என்பதை உணர்ந்தது. ஒருவர் பசிக்க இன்னொருவர் உண்டுகொழுக்கின்ற கெட்ட உலகு இது, வாழ்க்கை கொடியது தான், சாப்பிட்ட பின் தள்ளாடிய படியே எழுந்தார் அந்த முதியவர். ஸ்ரெவ்வனியிடம் 2 ரூபாயை நீட்டினார். சுயமரியாதையை இறுதிவரை விட்டுவிடாத அவரின் உறுதி அது. ஸ்ரெவ்வனி சிரித்துக் கொண்டே

அவர் பைக்கெற்றில் 10 ஆயிரம் ரூபாய்கள் பணம் வைத்து அவரை ஆதரவோடு அணைத்தாள். ஆற்றாமையோடு அழு தார் அவர்.

வாடிய பூக்களை அப்புறப்படுத்தி எறிந்துவிட்டு வாழும் பூக் களை மட்டும் ஏற்றித் துதிக்கிற மனிதத்தின் இயல்பு, ஒவ் வொரு மனிதருக்கும் விலங்கிற்கும் முதுமையென்பது கொடி யது. தன்னின மூத்தவர்களையே காப்பாற்ற இயலாத இத்தகு சமூகத்துள், போர்களும் புரட்சிகளும் எத்தகு மாற்றத்தை ஏற் படுத்தும். தன்னுடைய விலங்குப்பண்ணைப் போராட்டம் சரி தானா என்று தன்னையே நொந்தது அமாயா. போர்களினால் வாழ்வு பெருஞ் சோகமாகிவிட்டது. இப்போர்களை எவ்வளவு விரைவில் ஒழித்துவிட முடியுமோ அவ்வளவு விரைவில் ஒழித் துவிட வேண்டும். அப்போதுதான், போரொழிந்த சமத்துவ சமுதாயம் பூக்கும்.

போர் ஒழிந்து விட்டால், இத்தகு முதியவர்களின் பிரச்சினைக ளும் சமூக ஏற்றத் தாழ்வுகளும் நெருக்கடிகளும் தூர்ந்து விடுமா? உண்மையில் வல்லான் தன் ஆதிக்கத்தை தக்க வைப்பதற்கானது தானா போர்கள்? அமாயா கலங்கிப் போனாள். தான் விலங்கின விடுதலைக்கானதாக எண்ணியி ருந்த போரட்டத்தின் அடிப்படை என்ன? மனிதரை அழித்து விலங்குகளை ஆட்சியதிகாரத்தில் ஏற்றுவதால் விலங்கினத் துள் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நீங்கி விடுமா என்ன?

100 ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த மண் தம் சொந்த மண் என்று இருந்த எவரும் இன்று இல்லை. இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்குப் பின்னர் வரப்போகிற ஆண்டுகளில் இன்றி ருக்கும் எவரும் இருக்கப்போவதுமில்லை. யார் போராடினார் கள், எதற்குப் போராடினார்கள் என்கின்ற தேடல் கூட இல்லா மல் அனைத்தையும் அந்தச் சமூகங்கள் மறந்து போகும்.

எவரைத் துரோகி என்று கொன்றார்களோ, எவரை அடிமை யாக்கி விற்றார்களோ அனைத்தும் எந்த விபரமும் அற்று அழிந்து போகும். அனைத்தும் புதிதான புதிய தடங்களில் பூமி சுழலும். புதிய வரலாறுகளை புதியவர்கள் எழுவார்கள். நிலம் போனால் பலம் போகும்! பலம் போனால் இனமே போகும்' என்று எழுதுகிற ஒவ்வொருவரும் தன் வீட்டு வேலிக் கதிகால்களைத் தள்ளிப் போட்டதற்காக பக்கத்து வீட்டுக்கா ரரைக் கொன்று மாய்பவர்கள்தான். அவர்கள் எல்லோரும் இறுதியில் எல்லைகள் எதுவுமின்றி, ஒரு பிடி மண்ணும் சொந் தமின்றி இறந்தே போகின்றார்கள். யாரும் இந்த உலகத்தில் நித்திய உயிருடன் மீண்டு மரணப் பெருவாழ்வு வாழ்பவர்க ளல்ல.

1947-ல் இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிந்த போது, அன்று வரை ஒன்றாக இருந்தவர்கள், பாகிஸ்தானாகிய தம் நிலத் தில் தாம் துன்புறுத்தப்படுவோமோ என்ற பயத்தில் 70 லட்சத் துக்கும் மேற்பட்ட இந்துக்கள் ஒருவித கலக்க வெறியோடு அடைக்கலம் நாடி இந்தியாவுக்கு வந்தார்கள். அதே எண் ணிக்கையில் இந்தியாவிலிருந்து முகமதியர்களும் பாகிஸ்தா னிய மண்ணில் தான் தம் பாதுகாப்புண்டு என்று அதை நாடி ஓடினார்கள். இந்த மக்கள் நம்புவது எதை? சக மனிதரை நம் பாமல் போவதன் தாற்பரியமென்ன?

இத்தகு வெறுப்புப் பரிமாற்றம் தான் இன்று வரை குரூர வாழ் வியலாக அங்கு நிலைக்கிறது, வெறுப்பு, வன்முறைக்கும், இரத்தஞ்சிந்துதலுக்கும் காரணமாக இருக்கிறது. மானிடந் தன் மனதளவில் திருந்தாமல் வெறும் போரும் புரட்சியும் இந்த மக்களை நல்வழிப் படுத்துமா?

பரிணாமத்தை நம்புகிறவர்கள், பலவந்தமாக தாக்கி, மற்றை யோரைக் கொன்று, தற்காப்பு செய்துகொள்வதையும், சண் டையையும் மிருகப் பண்பாட்டின் ஓர் உயர் வடிவாக மனித ரைக் கருதுகிறார்கள். சண்டை செய்வது என்பது மனிதரின் உள்ளியல்பாக, அது அவர்களுடைய ஒவ்வொரு அணுவி லும் இருக்கிறது. இப்புவியில் இன்றைக்குத் தான் நினைத்த எல்லாம் தோற்றுத் துக்கித்துப் போயிருந்தது அமாயாவிற்கு. ஸ்ரெவ்வனி நெடுநேரம் போனில் பேசிக் கொண்டிருந்தாள். என்ன நினைத்தாளோ தெரியவில்லை... துளசி, சேர்ச் ஏதா வது அருகில் இருக்கிறதா என்றாள்.

ஆம் என்றபடியே அடுத்த தெருவிலிருந்த சேர்ச்சிற்கு அழைத்துச் சென்றாள் துளசி.

ஸ்ரெவ்வனி சேர்ச்சிற்குப் போனாள். நானும் கூடவே சென்றேன்.

சென்றவள் பாவ மன்னிப்புக் கூடத்தில் குருவிற்கு அருகில் அமர்ந்து அழுதாள்.

மகளே ஆண்டவன் சந்நிதி முன் யாரும் அழ வேண்டிய தில்லை. உன்குறைகளைச் சொல். அது மன்னிக்கப்படும் என்றார். பாதர் எங்களின் மிருகப் பண்ணையில் வளர்த்த விலங்குகள், பறவைகள் யாவையும் பெரு வெள்ளம் அடித் துச்சென்று விட்டது. தாழ்வு நிலத்துள் காசைக் கொடுத்துப் பண்ணையமைத்த எங்களின் கொடுஞ்செயலால் அத்தனை பண்ணை விலங்குகளும் அழிந்து போயினவே என்றழுதாள்.

கலங்காதே மகளே. கர்த்தர் உன்னை மன்னித்து, உன் பாவங்களைக் கழுவுவார். அந்த வெள்ளத்துள் தொலைந்த விலங்குகளைக்கூட கடவுள் தன் அருகில் அமர்த்திச் சாந்தி யளிப்பார் என்றார். ஸ்ரெவ்வனியின் பரிதவித்த மனம் லேசா னது. அமாயாவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன் விலங்குப் பண்ணை உறவுகள் அனைத்தும் அழிக்கப் பட்டு விட்டனவே! தங்கள் சுயநலத்திற்காக கரடிப்போக்கின் தாழ்நி லத்தில் பண்ணையமைத்து விலங்குகளைக் கொன்ற இந்த மனிதர்களை குருவானவர் சொன்னபடி கடவுள் மன்னித்து விடுவாரா?

சொற்கேளாமல் ஆப்பிளைத் தின்றதற்காக இற்றைவரை அனைத்து உயிர்களுக்கும் மரணத்தைக் கொடுக்கிற கட வுள்... பண்ணை விலங்குகளை வேண்டுமென்றேயழித்த இந்த மனிதர்களை மன்னித்து விடுவாரா?

இந்தியாவை விட்டு றொறன்ரோ பறந்து கொண்டிருந்தது அமாயாவின் விமானம். அமாயா கண்ணீரோடு எழுதிய கடி தத்தை முடித்தது. இனி யாருக்காக இக்க டிதம்?

(முற்றும்.)



sithivinayagam@thaiveedu.com

# நாளும் பொழுதும் நம் கையில் இல்லை

—உஷாதீபன்

'நாலு கிலோ கோதுமை இந்தப் பையில... இது ரசப் பொடிக்கு. அரைச்சு வைக்கிறீங்களா?' கேட்டவாறே உள்ளே நுழையப் போன அவனை ஓடிவந்து வாசலிலேயே தடுத்து 'சரி ஸார்...' என்றவாறே வாங்கிக் கொண்டான் அவன்.

'எப்போ வரட்டும்...?' என்று வழக்கமாகக் கேட்பதுதான். அன்று கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை. மேற்கொண்டு கேள்விக்குறியோடு இவன் முகத்தைப் பார்த்தவாறே நின்றிருந்தான்.

நிலைமையைப் புரிந்துகொண்ட இவன் 'வர்றேன்...' என்றுவிட்டுக் கிளம்பினான்.

எப்பொழுது போகிறது, எப்பொழுது வருகிறது என்று யாருக்கும் தெரியாது. தினசரியில் ஒரு நேரம் குறிப்பிட்டிருந்தார்கள். அந்தக் குறிப்பிடப்பட்ட நேரத்தில் மிகச் சரியாகப் போய்க் கொண்டிருந்தது.

அது போகவும், போய்க்கொண்டிருந்தது. அதற்குத்தான் இப்போது நேரம் காலம் இல்லை.

கிளம்பும்போது இவன் பார்வை மாவு மில்லின் உள்ளே பரவியது. இடதுபுறம் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு இயந்திரங்கள் நிற்கும். ஒன்று மாவு அரைக்க. இன்னொன்று காரப் பொடிகள் அரைக்க. உள்ளே பரவியிருந்த இருட்டுக்குள் அவை சரியாகத் தெரியவில்லை.

வாசலில் வரிசை போடப்பட்டிருந்தது. இவன் கொடுத்ததை வரிசையில் கொண்டு வந்து வைத்திருந்தான் அவன். என்னதான் பழகியவன், தெரிந்தவன் என்றாலும் தொழில் தர்மம் என்பது வேறுதானே? தன்னைப் போலத்தானே மற்றவர்களும் பழக்கம் அவனுக்கு.

'நாளைக்குப் பையன் வர்றான்... அவசரம்னு சொல்லிக் கொடுங்க... அப்பத்தான் வரிசைல வைக்காம உள்ளே தனியா வச்சிருந்து அரைச்சுக் கொடுப்பான்...'

வீட்டிற்குத் திரும்பியவுடன் சாந்தா கண்டிப்பாய்க் கேட்பாள். 'சொல்லிக் கொடுத்தீங்களா...?'

இதையெல்லாம் சொல்வது போலவா அங்கு நிலைமை உள்ளது? அவனே பாவமாய் நின்று கொண்டிருக்கிறான். இன்னிக்குப் பொழப்பு என்னாவப் போகுதோ? என்று. இதில் எனக்கு மட்டும், எனக்கு மட்டும் என்று சொல்வது சாத்தியமா? நியாயம்தான் ஆகுமா?

பெண்களுக்கு ஆனாலும் ஆத்திரம் ஜாஸ்திதான். இந்த ஆத்திரம் 'தன் காரியக் கெட்டி' என்ற வகை சார்ந்தது. வீட்டுச் சூழலையே வெளிச் சூழலாகவும் நினைப்பது! தன் வீடு, தன் பிள்ளை, தன் குடும்பம்... என்கிற காரிய சாத்தியச் சிந்தனை.

இவன் வண்டியை எடுக்கும்போது அவன் 'வாங்க ஸார்...' என்று விடை கொடுத்தான்.

'போயிட்டு வாங்க... முடிச்சு வைக்கிறேன்...' என்று பொருள் அதற்கு.

பெரும்பாலான கடைகள் அடைத்திருந்தன. ஒன்றிரண்டு டீக் கடைகளைத் தவிர. ஏதாவது பந்த்தோ என்பது போல.

'கரன்ட்டோ இல்ல... உள்ளே இருட்டு... வெந்து தணியுது... என்னத்தக் கடையைத் தெறந்து என்னத்தை வியாபாரத்தப் பண்ணி...? ரெண்டு மணிக்கு மேலதான்...'

பலபேர் சமீபமாக இந்த நடைமுறையைத்தான் பின்பற்றுகிறார்கள். இவனே வீட்டில் இருந்து புண்ணியமில்லை என்றுதான் கிளம்பியிருந்தான். நூலகம், அஞ்சலகம், வங்கிப் பணி என்று சில வேலைகளைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியேறியாயிற்று.

போய்விட்டுத் திரும்பும்போது மணி மூன்றை நெருங்கும். கரன்ட் வரச் சரியாயிருக்கும். வந்தவுடன் சாப்பிட்டுவிட்டு மாவு அரைக்க உட்கார வேண்டியதுதான். அது அவன் வழக்கமான பணி.

'உழுந்து நல்லாப் பொங்கி வரணுமாக்கும்... பிறகுதான் வழிக்கணும்...' - ஒவ்வொரு முறையும் இந்தப் பாட்டைப் பாடி விடுவாள் சாந்தா.




‘எனக்கென்ன தெரியாதா? புதுசாச் சொல்றே? இன்னிக்கு நேத்திக்கா அரைக்கிறேன். கடந்த மூணு வருஷமா நாந்தான் செய்திட்டிருக்கேன்... இன்னும் சொல்றதை விட மாட்டேங் கிறே நீ?’

‘அப்போ என்ன அர்த்தம்? இன்னும் சரியா வரலேங்கிறது தானே? அப்பத்தான் மாவு காணும்... இட்லியும் பூவா இருக் கும்... அதைத் தெரிஞ்சிக்குங்க...’

எதைச் செய்தாலும், எப்படிச் செய்தாலும் இந்தப் பெண்க ளுக்கு ஏனோ திருப்திப்படவே மாட்டேனென்கிறது. அவர்கள் சொல்வதைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சரி, சரி என்று கேட்க ஆரம்பித்தோமானால் கழுத்தில் கலப்பை யைக் கட்டி உழுது விடுவார்கள் போலிருக்கிறதே?

சமையலறைக்கு அவர்கள்தான் பிரதானம் என்பதைக் காலம் காலமாய் நிறுவியிருக்கிறோமில்லையா? அது அவர்களின் இரத்தத்தோடு ஊறிப் போய்க் கிடக்கிறது. அந்த கௌர

வத்தை லேசில் விட்டுக்கொடுக்க அவர்களும் தயாரில்லை போலும்...!

இன்று காலை கூட குக்கரில் சாதம் வைத்து ஒரே ஒரு காய் தானே இருக்கிறது என்று இருந்த புடலங்காயை விறு விறு வென்று நறுக்கி பொரித்த கூட்டுப் பண்ணி இறக்கியாயிற்று.

'அப்பாடீ...! இவ்வளவு உரைப்பா?' என்றாள் சாந்தா.

தான் படுக்கையைவிட்டு எழும் முன் இந்தப் பயல் சமைய லையே முடித்து விட்டானே என்ற பொறாமையோ என் னவோ?

'கொஞ்சம் உப்பு, உரைப்பு, புளிப்பு தூக்கலாத்தாண்டி இருக்கணும்... அப்பத்தான் வச்ச காய்கறி உள்ளே இழுக் கும்... இல்லன்னா மிஞ்சிப் போகுமாக்கும்...!

'அது சரி... கழுத வயசாச்சு... இன்னும் நாக்கு ருசி போகலை! உப்பு, புளிப்பெல்லாம் குறைக்கப் பழகிக்குங்க...'

'நளபாகம்னு தானேடீ சொல்லி வச்சிருக்கான்... ஆம்பி ளைங்க செய்தா அப்படித்தான் வெடிப்பா இருக்கும்...'

சமீபத்தில் விழா நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. பல வியாபார ஸ்தலங்களில், வணிக வளாகங்களில் ஜெனரேட்டர் கள் இடைவிடாமல் ஓடிக் கொண்டிருந்தன. அந்த அசுர சத் தங்கள் அந்தப் பகுதியின் அமைதியையே கெடுத்து சாலைப் பகுதியில் புகையைக் கிளப்பி சுற்றுப் புறத்தையே மாசுபடுத்திக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் பொருட்படுத்தாது ஜனம் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தது. அவரவர் பிழைப்பைப் பார்த்தாக வேண்டுமே? எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டுதான் போயாக வேண்டும் என்ற சகிப்புத் தன்மையோடு ஊரும் உலகமும் இயங்கிக் கொண்டிருப்பதாய்த் தோன்றியது. அத னாலேயே எல்லாமும் அதுபாட்டுக்கு நடந்துகொண்டிருப்பது போல் தோற்றமளிக்கிறதோ என்று நினைத்தான்.

அஞ்சலகத்திற்குள் நுழைந்தபோது அவ்வளவு கூட்டம் இருக் கும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. அங்கும் கரன்ட் இல் லாமலிருந்தது. கணினி இயக்கமின்றிக் காத்துக் கொண்டிருந் தார்கள் எல்லோரும். பணியாளர் உட்பட. வாசலில் வண்டி நிப்பாட்டத் துளி இடமில்லை.

'என் வண்டிய எவனோ லவுட்டிட்டான் சார்...' அங்குமிங்கு மாய்ப் பரபரத்துக்கொண்டிருந்த ஒருவர் இவனைப் பார்த்துச் சொன்னார். திருடிட்டான் என்பதைத்தான் அவர் அப்படிச் சொல்கிறார் என்று ஒரு நிமிடம் கழித்துத்தான் புரிந்தது இவ னுக்கு. எத்தனையோ பேர் அங்கிருக்க, அவர் இவனைப் பார்த்துச் சொன்னது எதற்காக என்று புரியவில்லை. சொல்ல வேண்டும் என்று தோன்றிய முகமாய்த் தெரிந்ததோ என் னவோ?

'எங்க வச்சீங்க...?'

'இங்கதான் சார்... இப்டி...' கையைக் காண்பித்தார் அவர்.

'பூட்டினீங்களா...?' இவன் அடுத்த கேள்வி போட்டான்.

'அதெல்லாம் ஒரு பூட்டா சார்... படக்குன்னு இழுத்துறுவா னுங்க... உள்ள போயிட்டு வந்திருவோமுன்னு பார்வையா வச்சிட்டுப் போனது. நிமிஷத்துல காணல... அருமையான உறீரோ வண்டி சார்...'

அப்பொழுதுதான் தொலைந்தது சைக்கிள் என்று தெரிந்தது. இந்தக் காலத்தில் சைக்கிள் கூடத் திருடுகிறார்களா என்ன? 'பூட்டினேன்' என்று அவர் உறுதிப்படுத்தாதது இவனைச் சங் கடப்படுத்தியது. தொலைத்து நிற்பவரிடம் 'நீங்க கவனமாப் பூட்டியிருக்கணுமில்ல...? என்று குத்திக் காட்டி எப்படிச் சொல்வது? நிகழ்வே அவருக்கு அதை உணர்த்தியிருக் குமே?

அவர் முகமும், அதில் படிந்திருக்கும் சோகமும், இன்று பூரா வும் தன்னைச் சங்கடப்படுத்தும். அந்தக் கூட்டத்தில் யாரென்று கேட்பது? எங்கென்று தேடுவது? இப்படி ஒரு மனி தனின் நஷ்டத்தை உணராமல் வாகனங்களும் மனிதர்களும் வழக்கம்போல் பரபரப்பாக.

ஊரும், உலகமும் ஏனிப்படிப் பொய்யும் புரட்டும், திருட்டும், குற்றமுமாக நிறைந்து போய்க் கிடக்கிறது? ஐம்பது ஆண்டு களுக்கு முன்னாலெல்லாம் இவ்வளவு மோசமில்லையே? தெருவில் ஒரு போலீஸ்காரர் வருகிறார் என்றால் அத்தனை தலைகளும் பயத்தோடும் படபடப்போடும் ஆச்சரியமாய் ஒளிந்திருந்து நோக்குமே? அவமானமாய் நினைக்குமே? அப்படியிருந்த தலைமுறையெல்லாம் போய், இன்றைய இயங்குதளம் ஏனிப்படிப் பலவழிகளில் தடம் மாறி நிற்கிறது?

வரிசை நீண்டிருந்தது. அன்று ஓய்வூதியம் வழங்கும் நாள் என் பது அப்பொழுதுதான் உறைத்தது. எப்பொழுதுமே அந்த நாளைத் தவிர்த்து விடுவதுதான். கூட்டம் எக்கச் சக்கமாய் இருக்கும். குறைந்தது ரெண்டு மணி நேரமாவது ஆகும். மற்ற காரியங்களெல்லாம் தடைபட்டுப் போகும்.

அப்படியே வெளியேறினான். வீட்டில் செலவுக்குப் பண மில்லை என்பது நினைவுக்கு வந்தது. வங்கியிலாவது கூட்டம் குறைவாகவிருக்கிறதா பார்ப்போம் என்று புறப்பட்டான். எவ் வளவு பணம் இருப்பில் இருக்கும் என்று தெரியவில்லை. குறைந்தது ஆயிரம் ரூபாயாவது இருக்கவேண்டும் என்பது விதி. குறைந்தால் அபராதம். கேட்க வேண்டுமென்ற அவசி யம் இல்லை. இயந்திரம் அதுவாகவே கழித்து விடுகிறது. நவீன அறிவியல் தொழில்நுட்பத்தோடு அறிவிப்பில்லாத நவீன நஷ்டங்களும் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றிக்கொண் டுவிட்டன. தவிர்க்க முடியாமலும், எதிர்ப்புத் தெரிவித்துப் பல னில்லையென்றும் தவித்துப்போய்க் கிடக்கிறார்கள். என்ன, ஏது, எதற்காக என்று தெரியாமலேயே ஒரு மூத்த தலைமுறை இவற்றிலெல்லாம் பின் தங்கிவிட்டதோ என்று தோன்றுகிறது.

பக்கத்துச் சந்தில் ஓரமாக வண்டியை நிறுத்திப் பூட்டிவிட்டுத்

திரும்பியபோது அங்கே விட்டுச் செல்வது பாதுகாப்பா என்ற நினைப்பு எழுந்தது. நிறைய வண்டிகள் நின்றனதான். அந்த வங்கிக்கு வருபவர்கள் அங்கேதான் நிறுத்துகிறார்கள். அருகிலுள்ள கடைக்காரர்களும் அங்கேதான். ஒருமுறை அங்கே நிறுத்தி வண்டியை எடுத்தபோது, பக்கத்து வண்டியில் இடித்து, ஒன்றன்பின் ஒன்றாக எல்லா வண்டிகளும் கீழே சரிந்து விட்டன. யாரும் பார்க்கும் முன்பாக ஒவ்வொன்றாய் எடுத்து நிறுத்தி பெரும் அவஸ்தைப் பட்டுப்போனான். இவன் வண்டியை மட்டும் எடுத்துக்கொண்டு நகர்ந்திருக்கலாம் தான். மனசு கேட்கவில்லை. இப்பொழுது இப்படித் தனியே நிறுத்துவது சரியா என்று தோன்றியது. வசதியாய் நிறுத்தி, திருடிக் கொண்டு போ என்று சொல்வது போலிருந்தது.

இன்றைய வெளிச் சூழல் இம்மாதிரிப் பல சந்தேகங்களைத் தோற்றுவிக்கத்தான் செய்கின்றன. எங்கும் எதிலும் ஒரு நம்பிக்கையற்ற தன்மை. எப்படியிருந்தால் என்ன, எதைச் செய்தால் என்ன, என்ற தைரியத்தில், நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு இப்படியெல்லாமுமே மிகவும் குறைந்து பட்டுக் கிடப்பதாய்த் தோன்றியது.

வங்கியில் சம்பளப் பணம் இன்னும் கணக்கில் ஏறாதது ஏமாற்றத்தைத் தந்தது. அதை நினைத்துக் கொண்டுதான் வந்தது. சமீப காலமாக இந்த நடைமுறை பலவித சிரமங்களைத் தோற்றுவித்துள்ளது. ஒன்பது அல்லது பதினைந்து ஸ்தானங்களைக் கொண்ட வங்கிக் கணக்கு எண்ணில் ஒரு எண் மாறினாலும் போச்சு! அவரவர் சேமிப்பு வங்கிக் கணக்கில் பணம் ஏறாது.

ஏறலை, ஏறலை என்று நான்கைந்து தரம் வங்கிக்கு அலைந்து பிறகு அந்தத் தவறு உணர்ந்து, எங்கே நடந்த தவறு, என்ன அதற்குத் தீர்வு என்று கண்டுபிடித்து சரி செய்து, கடைசியில் சம்பளப் பணத்தைக் கண்ணில் பார்ப்பதற்குள் ஒம்பாடு எம்பாடு ஆகிப் போகிறது. குறைந்தது பத்து நாட்களாவது வேண்டும் இந்த நடவடிக்கைகள் முடிய. இந்தப் பத்து நாட்களுக்குள் வீட்டில் சமாளிப்பது யார்? எப்படி? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இன்று வரை பதில் இல்லை. கணினிதான். ஆனாலும் மனிதர் இயக்குவதுதானே அது? மனிதர்கள் கையை வைக்கும் எல்லாவற்றிலும் தவறுகள் நடந்துகொண்டுதான் இருக்குமோ என்னவோ? விஞ்ஞான உலகின் தொழில்நுட்ப மாற்றங்களைக் காலத்திற்கேற்ப ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமெனினும் இந்த நடைமுறைக் குறைபாடுகளை இல்லாமல் பண்ணுவது யார்? அதுவும் மனுஷர்தானே செய்தாக வேண்டும். ஆக அடிப்படையான விழுமியங்கள் அழியாமல் இருந்தால்தானே இவையெல்லாம் சாத்தியம். என்னென்னவோ நினைக்கத் தலைப்பட்டான்.

இப்போது என்ன செய்வது என்ற நிகழ்வுலக யோசனை கடைசியில் மண்டையைக் குடைந்தது. எவ்வளவு பணம் கைவசம் இருக்கிறது என்று பார்த்தான். சாந்தா அரிசி வாங்கி வரச் சொன்னது நினைவுக்கு வந்தது. அஞ்சலகம் அருகேயுள்ள அரிசி ஆலைக்குத் திரும்பப் போக வேண்டும்.

அரிசி ஆலையில் ஆளே இல்லை. எப்பொழுதும் நாலைந்து பேராவது வாங்கிக் கொண்டிருப்பார்கள்! என்னவாயிற்று? சந்தேகத்தோடேயே நுழைந்தான்.

புதிதாக விலைப் பட்டியல் ஒன்று தொங்கியது அங்கே. 'மின் உற்பத்தி பாதிப்பினால் அரிசி விலை கடும் உயர்வு...' காலையில் செய்தி படித்திருந்தது சட்டென்று நினைவுக்கு வந்து பயமுறுத்தியது.

ரூபாய் அறுபதுக்கு விற்ற இட்லி அரிசி எழுபது என்று போட்டிருந்தது. எழுபதுக்கு விற்ற சாப்பாட்டு அரிசி இன்று எண்பது! இவனுக்கு விலையைப் பார்க்க வயிற்றைக் கலக்கியது. பத்து கிலோ வாங்கினால் அறுநூறு ஆகும் இடத்தில் இன்று எழுநூறு! நூறு ரூபாய் கூட ஆகிறது. மாதம் இருபது கிலோ செலவாகிறதென்றால், ரூபாய் இருநூறு கூட - அழ வேண்டும். என்ன வயிற்றெரிச்சல்?

இப்படியே ஒவ்வொன்றும் கூடிக்கொண்டே போனால்... ஒரு சாதாரணர் என்னதான் செய்வது? எப்படித்தான் சமாளிப்பது? பிரமிப்பாய் இருந்தது இவனுக்கு.

'ஐம்பது ரூபாய்க்குள் என்ன அரிசி இருக்கிறது என்று கேட்டான். அதில் ஒரு பத்து கிலோ என்று சொல்லி வாங்கிக் கொண்டான். மனதுக்குள் சாந்தா என்ன சொல்வாளோ என்ற சந்தேகம் வேறு எழுந்தது. 'சாதம் குழையாம இருக்குமா, கேட்டீங்களா?'

'நியூஸ் பேப்பரை நிறுத்திடுங்க...' நேற்று அவள் சொன்னது.

'ஆமா, அதுலதான் வந்திடுதாக்கும் எல்லா நஷ்டமும்...?' என்றான் இவன்.

'பின்ன? நூறு ரூபா மிச்சமாகுமில்ல...? டி.வி. நியூஸ்தான் கேட்குறீங்கல்ல...? அது போதும்... இந்தப் பாழாப்போன அரசியல்... அடிதடி, வெட்டு, குத்து... இதுகளை விலாவாரியாப் படிக்காட்டா என்ன? குடியா முழுகிடும்...?'

'எனக்கிருக்கிற ஒரே பொழுதுபோக்கு அது ஒண்ணுதான்... நானென்ன சினிமா, ட்ராமான்னா அலையறேன்... சின்ன வயசிலேயிருந்து அப்படி ஒரு பழக்கம்... காலைல எழுந்தவுடனே அச்சு மை மூக்குல ஏற அதைப் படிச்சாகணும்... இது உனக்குப் பிடிக்கலயா?'

'பிடிக்காம இல்லீங்க... இந்த அரசியல் சாக்கடையை வெறுமே கேட்டாப் போதாதான்னுதான் சொல்ல வந்தேன்... நடக்குறது அத்தனையும் தப்பு...!. எதுக்கு அநாவசியமா அதை வரி விடாமப் படிச்சு மனசை வேறே கெடுத்திட்டு?'

'அரசியல்னா நீ ஏன் இந்தக் கட்சி அரசியலை மட்டும் பார்க்கிறே? நம்ம வாழ்க்கையே அரசியல்தாண்டீ? அன்றாட வாழ்க்கைல ஒவ்வொரு நடவடிக்கைலயும் அரசியல் கலந்துதான் இருக்கு. அதைப் புரிஞ்சிக்கோ... இந்த உலகத்துல எங்கேயோ நடக்குற சில நல்லவைகளைத் தெரிஞ்சிக்கிறதுக்கும், நடக்கக்கூடாதது நடந்திட்டிருக்கு பாரு அதைப் புரிஞ்சிக்கிறதுக்கும், என்னமாதிரியெல்லாம் நாம இருக்கக்கூடாதுன்னு உணர்ந்துக்கிறதுக்கும், நம்மைப் பாதுகாத்துக்கிற

துக்கும்கூடன்னு நாம இந்த செய்திகளை ஒண்ணு விடாமப் படிச்சித்தான் ஆகணும்.!. இல்லன்னா, உலக நடைமுறைகளி லேர்ந்து நாம அந்நியப்பட்டுப் போவோம்...' இவன் பதிலுக்கு அவள் ஒன்றுமே சொல்லாதது இவனுக்குள் பெருமிதத்தை ஏற்படுத்தியிருந்தது.

சொல்ல வேண்டியதை, அவசியமானதை, அதன் பக்குவத் தோடு எடுத்துப் பதமாய் முன் வைத்தால் சரியாய்த்தான் போய்ச் சேரும் என்று திருப்திப்பட்டுக் கொண்டான்.

கொஞ்சூண்டு அரிசியை எடுத்து வாயில் போட்டான். ருசி வேறுபட்டிருப்பதாய்த் தோன்றியது. மட்டமான அரிசியைக் கொடுத்து விட்டானோ? எதை என்ன ரகம் என்று சொல்லி விற்கிறார்கள்? எவனுக்குத் தெரியும்? அவன் கொடுத்தது தான், வாங்கியதுதான். பாலிஷ் பண்ணிய அரிசி என்கிறார் களே, சமீபமாய்... அதாயிருக்குமோ? அரை இருட்டுக்குள் நின்று வாங்கியதில் தராதரம் தெரியவில்லை. இருட்டில் நடக் கும் எல்லாமுமே தப்புதான் போலிருக்கிறது.

அப்பாவி ஜனங்களில் தானும் ஒருவனாய் நின்று புலம்புவது போல் ஒரு பிரமை.

மாவு மில்லை அடைந்தபோது அங்கே அதே பழைய இருட்டு தான் வரவேற்றது.

'இன்னைக்குக் கரன்ட் வராதாமே சார்... ஏதோ பராமரிப்புப் பணிங்கிறாங்க...?' சொல்லிக்கொண்டே பக்கத்து டீக்கடையி லிருந்து வந்தான் அந்த ஆள். தினசரி அணைப்புக்குப் பதிலா இப்படி ஒரு பெயரா? என்றான் இவன்.

வரிசை அப்படியே இருந்தது. எடுத்துக்கொண்டு போய் விட லாமா என்று ஒரு கணம் நினைத்தான். பிறகு வந்தால் கடை சிக்குப் போய்விடும். யோசித்தவாறே நின்றான்.

அடிக்கும் வெயிலுக்கு அந்த வேப்பமரத்தடி பெருத்த ஆசு வாசமாயிருந்தது. ஊசியாய் இறங்கியது வெயில். இன்று நிச்ச யம் மழை வரும் என்று தோன்றியது.

'சார்... பொழுது போயிடுச்சி... இனிமே சாயங்காலம் கரன்ட் வந்தாலும் ஆறு மணிக்கு மேலே அரைக்க முடியாது. இன் னைக்குப் பொழப்பு அவ்ளதான் சார்...'

அவன் குரலில் இருந்த சங்கடம் இவனை உறுத்தியது. 'அய் யய்ய... அப்புறம்...?' என்றான் அவனைப் பார்த்து.

'ஒரு நூறு ரூபா இருந்தாக் கொடுங்க சார்... பிறகு கழிச்சிக்கி டலாம்...'

ஒரு நிமிடம் யோசித்தான் இவன். வேறு என்ன முக்கியச் செல வுகள் என்று உணர எடுத்துக்கொண்ட நேரம் அது. அரிசி வாங்கியதில் நூறு மிச்சப்படுத்தியது உள்ளதே?

'இந்தாங்க... பிடிங்க...' என்றவாறே எடுத்து நீட்டினான்.

'அடுத்தடுத்து கழிச்சிக்கிடுவோம் சார்...' என்றான் அவன்.

'ரைட்டு... கரன்ட் வந்தவுடனே முதல்ல எனக்கு அரைச்சுக் கொடுத்திடுங்க... பிறகு வர்றேன்...' என்றுவிட்டுக் கிளம்பி னான். குரலில் அவனையறியாமல் ஒரு உரிமை புகுந்து கொண்டிருந்தது.

செய்த உதவிக்கு ஈடாக, வரிசையைக் கணக்கிடாமல் எனக்கு முதலில் என்று சொன்னது கூட ஒரு வகையில் தவறுதான்.

அன்றைய நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக மனதில் தோன் றின. திட்டமிட்டபடி எதுவுமே நடக்கவில்லை. சிறு சிறு வேலை கள் கூடக் கெட்டுவிட்டன. நாளும் பொழுதும் நம் கையில் இல்லையோ? அவனவனுக்கு அவனவன் காரியங்கள் பெரிது தானே?

வீட்டிற்கு வந்தபோது 'மாவு என்னாச்சு...?' என்றாள் சாந்தா.

'இங்கமாதிரி அங்கயும் கரன்ட் இல்ல...' என்றான் இவன். ஃபோன் அலறியது. 'வணக்கம் சார்... ராஜாமணி சாரா...? நா செல்லமுத்து ஓ.ஏ. பேசுறேன்...' எதிர்முனையில் குரல் கேட் டது.

அப்பொழுதுதான் இவனுக்கே ஞாபகம் வந்தது. 'அடடே, மறந்திட்டனே... இதோ வந்துட்டேயிருக்கேன்... ஆபீஸ்லயே இருங்க...' என்றவாறே ஃபோனை வைத்தான்.

'ஒரு மணி நேரத்துல திரும்பிடுறேன்... கரன்ட் வந்தா உழுந் தைப் போடு... அதுக்குள்ள வந்திடுவேன்...' - பரபரக்கச் சொல்லிவிட்டு வண்டியை எடுத்தான் மீண்டும்.

வானம் முட்டிக்கொண்டு வந்தது. கருத்த மேகங்கள் அடர்த்தி யாய்த் திரள ஆரம்பித்திருந்தன. செல்லமுத்து பியோன்/ பியூன் தன் மனைவியை மருத்துவ மனையில் சேர்த்திருந்த தும், கருப்பை விலக்கல் ஆபரேஷனுக்காக அவர் முன்பணம் விண்ணப்பித்திருந்ததும், 'திங்கட்கிழமை பில் பிரசன்ட் பண் ணிருவோம், கவலைப் படாதீங்க... நான் டிரஷரில சொல்லி வாங்கித்தர்றேன்..' என்று வாக்களித்திருந்ததும்... எப்படி இதை மறந்து போனோம் என்று வெட்கமாயிருந்தது இவ னுக்கு. ஒரு நாளைய யதார்த்த நடைமுறைகள் அன்றைய சூழலினால் எத்தனை பாதிப்புக்குள்ளாகின்றன?

பட்டியலும் கணினியில்தானே தயாரித்தாக வேண்டும். அலு வலகத்தில் கரன்ட் இருக்குமா? தவிப்போடு வண்டியைக் கிளப்பினான். கலவரத்தோடு பார்த்துக்கொண்டு நின்றாள் சாந்தா. 'மழைக்குள்ள திரும்பிடுங்க...' என்றாள். தெருத் திரும்புகையில் அது அவன் காதில் விழுந்ததா தெரிய வில்லை. இப்படி மதியச் சாப்பாடுகூடச் சாப்பிடாமல் ஓடுகி றானே என்பதும் அப்பொழுதுதான் அவளுக்கே மனதில் தோன்ற, தெருவையே வெறிக்கப் பார்த்தவாறு செய்வதறி யாது சங்கடத்தோடு நின்று
கொண்டிருந்தாள்.



ushadeepan@thaiveedu.com



# அவளை எனக்கு மிகவும் பிடிக்கும்

– அ. கந்தசாமி

அருந்தவம்... வாழ்வின் நடுத்தரத்தைக் கடந்துவிட்ட கட்டைப் பிரம்மச்சாரி. துறவறத்தில் பற்றுக்கொண்ட பிரம்மச்சாரி இல்லை. இல்லறத்தில் பற்றில்லாத பிரம்மச்சாரி.

ஆரோடையும் வம்புதும்புக்குப் போகாமல் தானுண்டு தன்ர வேலையுண்டு எண்டிருக்கிற சுபாவம்.

இன்று காலையில் வந்த தொலைபேசி அழைப்பு, அவனது சிந்தையைச் சீரழித்துக்கொண்டிருந்தது. முடிவுகளால் தீர்த்து வைக்க முடியாத குழப்பம். தானாக ஆறி அடங்கவேண்டிய துயரம்.

பேருந்தை விட்டிறங்கிய அருந்தவம், மார்க்வில் பேரங்காடியை நோக்கி நடந்தான். பேரங்காடியின் உள்வீதிகளில் நடந்து வருவது அருந்தவத்துக்குப் பிடிக்கும். அது அவனுக்கு மன உளைச்சலைக் குறைக்கும் மருந்து.

இந்தப் பேரங்காடிகள் பெரும் பணம் விழுங்கி. ஒரு பொருள் வாங்கவேண்டும் என்று போறவர்கள் ஒன்றோடு திரும்புவதில்லை. பலரும் பல பொருட்களை அள்ளிக்கட்டிக்கொண்டு அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தார்கள்.

பேரங்காடியின் மேற்தளத்தில் ஆழ்ந்த சிந்தனையோடு நடந்துகொண்டிருந்தான் அருந்தவம். பன்மொழிகளும் செவி மோதிச்செல்லும் இடம் அது. அவற்றுக்குள் இருந்து தாய் மொழியைத் தனித்துப் பிரித்தெடுக்கும் தன்மை மொழியில் பற்றுள்ளோருக்குப் பொதுவாகவே இருக்கும். அருகில் யாரோ தமிழ் பேசுவது அருந்தவத்தின் காதில் விழுந்தது. பெண் குரல். நடையைத் தளர்த்தினான் அருந்தவம். அது இவன் மூளை நரம்பொன்றில் ஏற்கனவே பதியப்பட்ட குரல்.

அவளாக இருக்குமோ? அவளாக இருந்தால்... அவன் என்னைக் கண்டுவிடக் கூடாது.

அருந்தவம் ஒரு மறைவிடத்தில் ஒதுங்கித் திரும்பினான்.

அவள்தான்... நிசாந்தி. அவள் எப்படி இங்கே? அன்று.. ஜெர்மனி போக இருப்பதாகத்தானே கூறினாள்.

அவ்விடத்தை விட்டகன்ற அருந்தவம் ரிம்கோட்டன் கோப்பியோடு ஒரு பெஞ்சில் அமர்ந்தான். உயர எழுந்த கோப்பியின் ஆவியோடு எழுந்து கலந்தன அவன் நினைவுகள்.

அவரவர் செய்யும் தொழில்களைச் சுட்டித் தொழில் செய்வோரைக் கூப்பிடுவது ஒரு பொது வழக்கம். யார் எவர் எதைச் செய்தாலும் அவர்களுக்கானதொரு தொழில் சார்ந்த பெயர் இருக்கும். அவ்வாறானோரின் இடுகுறிப் பெயர்கள் பலருக்கும் நினைவில் நிற்பதில்லை. அதற்குத் தேவையும் இருப்பதில்லை.

மீன் விற்பவர் மீன்காரர் ஆகிவிடுவார். பால் விற்பவர் பால்க்காரர் ஆகிவிடுவார். பூசாரியார், பரியாரியார் என்ற காரணப் பெயர்களால் காணாமல் போன இடுகுறிப் பெயர்கள் ஏராளம்.

எங்கட ஊரில ஒரு தையல்காரர் இருந்தவர். தொடக்கத்திலை ஆர் வைச்சானோ தெரியாது. அவர் எல்லோருக்கும் ரெயிலர் ஆனார். மனிசன் ஐம்பது வருசமா ஊருக்கே தைச்சுப் போட்டிருக்கும். ஆனா, கடைசி வரைக்கும் அவற்றை சொந்தப் பேர் ஆருக்கும் தெரிஞ்சிருக்கேல்லை.

இதென்ன பெரிய குற்றமே? நான் அதைச் சொல்ல வரேல்லை.

வயசோட சேர்த்து மனிசருக்குப் பல பருவங்கள் வாற மாதிரி, ஒரு காலத்திலை எங்களுக்குப் புலம்பெயர் பருவம் எண்டொரு பருவமும் எங்களோட இணைஞ்சிருக்கிறது உங்களுக்குத் தெரியும்.

இந்தப் பருவம் வந்த பிறகு, வசதி இல்லாதவை, குடியிருந்த வீட்டை ஈடுவைச்சு, பொம்பிளையளின்ரை கழுத்திலை, காதிலை மின்னினதுகளைப் பிடுங்கி அடைவு வைச்சு, முன் பின் தெரியாத ஒருத்தன்ரை காலடியிலை கொட்டிப்போட்டு 'சேர், அண்ணை' எண்டு முன்னும் பின்னும் அலைவியளே அவனுக்கு என்ன பெயர் வச்சனியள்?

ஏஜென்சிகாரன்.

கிட்டத்தட்ட எங்களுக்குள்ளை அப்பிடி ஒரு சாதியையே நாங்கள் உருவாக்கி வைச்சிருந்தம். ஒவ்வொரு ஏஜென்சிக்காரனும் சிற்றரசர் மாதிரி உலா வந்ததை அவ்வளவு லேசா மறக்கேலாது.

•

மூக்குப் பேணியிலை சுடச்சுட அம்மா வச்சிட்டுப்போன பால்கோப்பி ஆவி அடங்கிக் கிடந்தது. அருந்தவம் முகட்டைப் பார்த்தபடி அங்கங்க கட்டு விட்டுப்போன ஒரு பிரம்புக் கதிரையில சாய்ந்திருந்தான்.

அம்மா வந்து எட்டிப் பார்த்தாள். மகனின் மனநிலை கவலையைத் தந்தது. வெளிக்காட்டினால் அவன் மேலும் உடைந்து போவான்.

'தம்பி கோப்பி ஆறிப்போச்சு. சூடாக்கிக் கொண்டாறன்' பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே போனாள்.

முதலிலை இருந்ததையும் பிந்திப் பிறந்ததையும் தூக்கி விழுங்கிப் போட்டுப் பிறந்த பிள்ளை. அதனாலை அருந்தவம் பெயருக்கேத்த மாதிரி ஒரே பிள்ளை.

உழைக்கும் யந்திரமான கணவன் கண்மூடிக் கனகாலம். சொத்துப் பத்துகள் சொல்லும்படி இல்லை. விரல்களில் ஒட்டாமல் சில பருக்கையளை விழுங்கிக் கொள்ளக் கூடிய வாழ்க்கை.

தாய் கடும் மனஓர்மம் கொண்ட மனிசி. போர்ச்சூழலும் பொருளாதாரச் சிக்கல்களும் அருந்தவத்தை எங்கையாவது வெளிநாட்டுக்கு அனுப்ப வேணும் எண்ட முடிவை எடுக்கச் செய்தது. அதுக்கெண்டே கொஞ்சத்தைச் சேமிக்கவும் செய்தாள்.

அருந்தவத்துக்கு இப்ப புலம்பெயர் பருவம்.

கிடந்த சொத்துப்பத்துகளையும் அருந்தவத்தையும் ஈடு வைச்சுப் பணத்தைப் புரட்டி, நல்லவர் வல்லவர் எண்டு ஆரோ சுட்டுவிரல் நீட்டின ஒரு ஏஜென்சிக்காரனுக்குக் குடுத்தாள்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமாய் பல தடவை அலையவிட்ட ஏஜென்சிக்காரன நினைச்சு நொந்து போயிருந்த ஒரு பொழுதிலை, அவனிட்டை இருந்து ஒரு தகவல்.

சிங்கப்பூருக்கு வரட்டாம்.

இந்தச் செய்தி அருந்தவத்துக்கு உற்சாகத்தைத் தரேல்ல... ஊருக்குள்ளேயே அலைய விட்டவன், வெளியாலை எங்கெங்க அலையவிடப்போறான் எண்டு ஆருக்குத் தெரியும்? அதோட, அம்மாவையும் தனிய விட்டிட்டு..?

தலைக்கு நெருக்கமாய் அம்மாவின்ர பெருமூச்சு, நிமிர்ந்து பார்த்தான். கலங்கிய கண்களை அவனுக்குத் தெரியாமல் ஒருச்சரிந்து ஒற்றிக்கொண்டாள்.

'அம்மா நீங்கள்தானே எனக்குத் தைரியம் தரவேணும். நீங்களே கண்ணைக் கசக்கினால் எப்பிடி நான் நிம்மதியா வெளிக்கிடுவன்'.

இமையை வெட்டினால் கரை உடைக்கக் காத்திருக்கும் கண்ணீர் வென்றுவிடும். மனம் வெம்பியது.

'சரோவுக்கு சொல்லிப் போட்டியோ ராசா' அருந்தவம் நிமிர்ந்து பார்த்தான்.

'சரோ...'

சின்ன வகுப்பிலை இருந்து ஒண்டாய்ப் படிச்ச அய்யர்ப் பெட்டை. விசேஷங்களுக்குப் போய்வாற அளவுக்குக் குடும்பப் பழக்கம். அது அம்மாவைக் கண்டால் ஓடிவந்து ஒட்டிக் கொள்ளும்.

தகப்பனில்லை. சொந்தமா ஒரு வயிரவகோயில் இருக்கு. சரோவின்ற தாய்க்காறி படு பிரயாசி.

கையளவு காணியிலை குடியிருந்த வயிரவரைச் சுற்றி நிறைய முட்புதர் நிலங்கள். அந்தக் காணிக்காரரிட்டைப் போய், 'நிலத்தைக் கோயிலுக்குத் தாங்கோ, ஏதோ என்னாலை இயண்டதைத் தாறன்' என்று அவள் இரந்தபோது பலர் காசு வாங்கமலே நிலங்களை ஈர்ந்தார்கள்.

'கோயிலுக்குத்தானே கேக்கிறேன்...' எண்ட சரோவின்ர அம்மாவின்ர குரல் பலற்றை காதுகளை மட்டும் இல்ல, பக்தர்களின்ர இதயத்தையும் தொட்டுது.

இப்ப முனியப்பர், காலபைரவர் போன்ற உக்கிர தெய்வங்களைத் தவிர சகல சாமிகளும் வயிரவருக்கு அருகில் குடில் கட்டிக் குடிவந்தார்கள்.

இதில் ஒரு தனிச் சிறப்பு. பூசை செய்பவர்கள் மச்சம் மாமிசம், குடிவகை இல்லா மனிதர்கள். முக்கியமாக பூநூலால் முதுகு சொறியா அந்தணர்கள்.

இவர்களில் பெண்களும் அடக்கம். பெண்கள் அரிச்சகர்களாக வந்த பிறகு, கோவிலுக்கு வரும் கூட்டம் முக்காலமும் வரிசை கட்டி நின்றது.

அருந்தவம், சரோவைச் சகோதரியை போலை பார்த்தான், பழகினான் எண்டு பொய் அளக்கக்கூடாது. பாலும் தயிரும் கடைஞ்செடுத்து உடன மிஞ்சும் வெண்ணையும் மோருமாய், சரோ தாமரை இலைத் தண்ணீராய்த் தளதளத்தாள். அவள் மொழிகளால் பேசுவதைவிட விழிகளால் பேசுவதுதான் அதிகமாய் இருக்கும். நம்மடை ஆளுக்கு விழி மொழியை வாசிக்கிற பக்குவம் அப்ப வசப்பட்டிருக்கேல்லை.



‘அவள் அய்யர்ப் பெட்டை, நமக்கு ஒத்து வராது, அந்த நாச மாய்ப்போன நினைவே வரக்கூடாது’ என்று விலத்தித்தான் நடந்தான்.

அவளைக் கைப்பிடிப்பவன் போன பிறப்பில் தினமும் முக் கண்ணனுக்கு மூன்று வேளையும் வில்வ அரிச்சனை செய்தவ னாய்த்தான் இருப்பான்.

பயணம் சொல்ல, சரோ வீடு நோக்கி நடந்தான். வீட்டில் அவள் தனியாகத்தான் இருந்தாள்.

கதவைத் திறந்தவள், ‘உள்ளே வாங்கோ’ எண்டாள்.

‘அம்மா இப்ப வந்திருவா இருங்கோ’

அருந்தவம் பூசி மெழுகி வைத்த வெளித்திண்ணையில் இருந்து கொண்டான்.

‘வெளியிலை நல்ல காத்து வீசுது. இதிலையே இருக்கிறனே.’

பதில் சொல்லாமல் வாசல் நிலையில் கைகளை ஊன்றி அருந்தவத்தையே பார்த்தபடி நின்றவள்,

‘இனி எப்ப என்... எங்களைப் பாக்கத் திரும்பி வருவியள்’ என் றாள். அவள் கண்கள் கலங்கியதுபோல் தெரிந்தது.

‘அது தன் பிரமையாக இருக்கும்’ என நினைத்துக் கொண் டான் அருந்தவம்.

‘இந்தக் கேள்விக்கு என்ன சொல்லலாம் எண்டு யோசிக்கி றன். கண்ணைக் கட்டி சகாராப் பாலைவனத்திலை விட்ட மாதிரி இருக்கு. ஆன, என்ரை உள்மனசுக்கு ஒண்டு மட்டும் தெரியுது. உங்களை இங்கை எண்டு இல்லை, திருப்பியும் எங்கையோ ஒரு இடத்திலை கட்டாயம் சந்திப்பன். அப்ப... இடைவெளி விட்டான் அருந்தவம்.

‘அப்ப... என்ன சொல்லுங்கோ...’ ஆவலில் கன்னக் கதுப்புக் கள் உப்ப அவனை விழுங்குபவள் போல் பார்த்தாள்.

‘அதை அப்ப சொல்லுறன்’ திருப்பி வருவன், அது வரைக் கும்... ஏதோ சொல்ல வந்தவன், அம்மாவைப் பாத்துக்கொள் ளுவியளோ ? என்றான்.

இனி அதுவும் என்ர வீடு... என்றவள், உள்ளே சென்று சின்னப் பையை எடுத்து வந்தாள்.

‘இதை என்ரை அன்பளிப்பா வைச்சுக் கொள்ளுங்கோ.’

நீட்டினாள், தயக்கத்தோடு வாங்கியவன் சம்பிரதாயமாக ‘இதெல்லாம் என்னத்துக்கு ?’ என்று சொல்லி முடிக்கும் முன் சுட்டுவிரலை தன் உதட்டில் நிமிர்த்தி நிறுத்தினாள். சிறு பிள் ளைகளை ‘மூச்சுவிடாமல் இப்பிடியே இருக்கவேணும் அசை யப்படாது’ என்று தாய்மார் உறுக்கி வெருட்டுகின்ற பாவனை.

தாலி கட்டிற புண்ணியவான் தோளில போட்ட சால்வை யோடை இவளோடு போகேலாது. இடுப்பிலை சுத்திக் கொண்டு பின்னாலைதான் போகவேண்டி வருமோ ? இவள் தான் மனிசி எண்டால், பின்னாலை முந்தானையைப் பிடிச்சுக் கொண்டும் போகலாம்.

இன்னும் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தால் ஏதும் ஏடாகூ டம் ஆகிவிடலாம்.

‘நான் போயிற்று வாறன், போய்ச் சேர்ந்தவுடன கடிதம் போடு வன். பதில் போடவேணும்’ என்றபடி புறப்பட்டான். அவன் சுவாசப் பை சுமையேறிய உணர்வை ஏற்படுத்தியது.

திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான். அதில்தான் எத்தனை பாவங்கள், பாவனைகள்.

‘அப்படியே ஓடிச்சென்று, அவளை அள்ளி அணைத்து, உதடு கள் உரச...’

‘அடேய் நாயே.. உருப்படுற வழியைப் பார்’ என்று உள்மனம் உலுக்க, அவளைப் பார்த்துவிட்டு கையசைத்துத் தன் வழி நடந்தான் அருந்தவம். அவன் உருவம் மறையும்வரை அவள் வாசலில் பார்த்திருந்ததை அருந்தவம் அறியமாட்டான்.

‘கையில் காசுபணம் சேர்ந்தவுடன, சரோவின்ர அம்மாவோட பேசி, அவளைக் கட்டவேணும்.’ அவன் மனசுக்குள் சரோ விசு பரூபம் எடுக்கத் தொடங்கியிருந்தாள்.

முதல் தடவையாக விமானம் ஏறி, தான் கால் பதித்த முதல் வெளிநாடு என்ற பெருமையைச் சிங்கப்பூருக்குக் கொடுத் தான் அருந்தவம். ஏஜென்சிக்காரன் கொடுத்த அறிவுரைக ளின் படி, ரைக்சிக்காரன் உதவியோடு, செல்லவேண்டிய இடத்தை இலகுவாகக் கண்டுபிடித்தான் அருந்தவம்.

சிங்கப்பூரில் இருபத்திநாலு மணிநேரமும் இந்தியத் தெத்துத் தமிழும் இலங்கையின் சுத்தத் தமிழும் புணர்ந்து வாழும் சிரங்கோன் வீதிக்கு அருகில்தான் அந்த இடம் இருந்தது. அந்த இடம் எப்படி இருக்கும் என்ற எந்த எதிர்பார்ப்பும் இல் லாமல் கதவைத் தட்ட, கறுத்துத் தடித்த உருவம் ஒன்று கத வைத் திறந்தது.

கதவின் ஊடே புறப்பட்ட காற்று அருந்தவத்தின் முகத்தைக் கழுவ, நானாவித நாற்றங்களால் திணறிப்போனான் அருந் தவம்.

திறந்தவர், ‘நீங்கள் அருந்தவம் தானே, ஏஜென்சிக்காரர் தகவல் தந்தவர். வாங்கோ... இங்க நாங்கள் பதினைஞ்சு பேர் இருக்கிறம். உங்களோட பதினாறு. நான்தான் இந்த வீட்டுக்கு இப்ப பொறுப்பு. ஆறு மாசமாய் இருக்கிறன். இரண்டு கிழமை முடிய ஒருக்கா மலேசியா போயிட்டு வரவேணும்.’

பலருக்கும் சொல்லிய பழக்கம் போல... மனப்பாடம் செய்து சொல்வதைப் போல ஒப்புவித்தார்.

நாற்சதுரமாய் ஒரு நீள் மண்டபம். உள்ளே புகை மண்டலம்.

பீடிப்புகை, சுருட்டுப்புகை, அடுப்புப்புகை, அடுப்பில் பாலை விறகை திணிக்கும்போது எழும் மணம், பனம் பாளையைக் கொத்திப் பிளந்த குரும்பையை எரிக்கும்போது எழுகின்ற பன்னாட்டு மணம் என எல்லாம் கலந்த மணத்தை அவன் சுவாசம் இனம் பிரித்துப் பார்த்தது.

உள்ளே நிறைய இவனை ஒத்த இளவட்டங்கள். குழுக்களாக் குந்தியிருந்தபடி சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். பலர் வாய்கள‌ில் கொள்ளிக் கட்டைகள் புகைந்துகொண்டிருந்தன.

யாரோ ஒருவன் வந்தான்.

'அண்ண, நல்வரவாகட்டும். பைய அங்க வையுங்கோ. அங்க பாருங்கோ, சுருட்டிக்கிடக்கிற பாய், அதுதான் உங்கட. மாறுப்படாமல் கவனமாய்ப் பாவிக்கவேணும்.' கிழிந்து கிடந்த பாயின் ஓட்டைக்குள்ளால் அழுக்குத் தலையணையின் நுனி எட்டிப் பார்த்தது.

'அண்ண, இங்க எல்லாம் ரேனின் படிதான் நடக்கும். நீங்கள் சமைக்கவேணும் வீடு, குழியலறை எல்லாம் துப்பரவாக்கவேணும். உங்கட ரேன் வரேக்க சொல்லுவம். பக்கத்திலை எங்கள மாதிரிப் பொம்பிளைப் பிள்ளையள் இருக்கினம். இசகு பிசகாய் ஏதும்ஆயிடக்கூடாது, விளங்கிச்சே அண்ண' என்று கண்டிப்பும் நக்கலும் கலந்த நடையில பேசினான் வந்தவன்.

இங்கு மனித முகங்கள் அடிக்கடி வருவதும் போவதும் நடைமுறைதான். ஆனால் பத்தோடு பதினொன்றாக அங்கு ஒன்றி விட மனம் ஒப்பவில்லை. ஏஜன்சிக்காரன் அங்கேயில்லை. விசாரித்துப் பார்க்கலாம் என்றால் விளக்கம் தரும் நிலையில் யாரும் இல்லை.

பாம்பு தின்னுற ஊருக்குப் போனால் நடுத்துண்டு எனக் கெண்டு நிக்கவேணும் எண்டு அம்மா சொல்வது நினைவுக்கு வந்தது. அந்தச் சூழலைப் பழக்கிக்கொள்ளப் போராடினான். அருந்தவத்தின் படிப்பும் பக்குவப்பட்ட பண்பும் மற்றவர்களிடத்தில் இருந்து அவனை வேறுபடுத்திக் காட்டியது. சில நாட்களில் பலரும் அருந்தவத்தோடு நட்போடும் மதிப்போடும் பழகத் தொடங்கியிருந்தார்கள். சூழலும் பழக்கப்படத் தொடங்கியிருந்தது.

அருந்தவம் அடிக்கடி வெளியே போய்வரும்போது பெண்கள் இருக்கும் வீட்டு வாசலைப் பார்க்கத் தவறுவதில்லை. அடிக்கடி அந்த வாசலால் போய்வரும் பெண்களும் இந்தப் பக்கமாய்ப் பார்ப்பார்கள். சிலருக்குச் சிலரோடு தொடர்பும் இருந்தது.

கையில் இருந்த காசு கரைந்துகொண்டிருந்தது. ஏஜென்சிக்காரன்ர அசுமாத்தத்தையே காணோம். சோர்ந்து போகும் போதெல்லாம் மனசுக்குள் சரோ தோன்றித் தாலாட்டுப் பாடி விட்டுப் போவாள்.
நல்ல வெய்யில் நேரம். சிரங்கோன் வீதியில் சனக்கூட்டத்தை விலக்கி நடந்துகொண்டிருந்தான். தீராத் தாகம் வாட்ட ஒரு பழச்சாறு விற்கும் கடைக்கருகில் நின்று பர்சைத் திறந்தான். இருக்கும் பணம் யூஸ் குடிக்கக் காணாது.

கடைக்காரர் தமிழ்நாட்டுக்காரர். வெட்கத்தை விட்டு, தண்ணீர் கிடைக்குமா என்று கேட்க, இந்தாங்கோ இந்த யூசைக் குடியுங்கோ என்று ஒரு கை அருந்தவத்தை நோக்கி நீண்டது. திரும்பினான்.

'பெண், தமிழ்ப் பெண், யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்.'

'இல்ல... நீங்க...,'

'நான் இங்க உங்களுக்குப் பக்கத்து வீடுதான். உங்கட ஏஜென்சிதான் எனக்கும். உங்கள அடிக்கடி கண்டிருக்கிறன். முதல்ல இதைக் குடியுங்கோ.'

வாங்கி 'மடக்' கெனக் குடித்து முடித்தான் அருந்தவம்.

இருவரும் பேசிக்கொண்டே நடந்தார்கள்.

ஏஜென்சிக்காரனைக் கண்டுபிடிக்கேலாமல் கிடக்கு... உங்களுக்காவது கிடைக்கிறாரோ? எனக் கேட்டான் அருந்தவம்.

'உங்களைப் போல ஆம்பிளையாலை முடியாததை எங்களாலை எப்பிடி?

'அப்பிடிச் சொல்லக்கூடாது. பெண்களென்றால் பேயும்...'

'கரெட்... கட்டாயம் கண்ணீர் விடும். மனிசர்களுக்குத் தான் கண்ணீர் வத்திக் கனகாலமாப்போச்சு. நான் இருக்கிற ரூமுக்குப் போன மாத வாடகை இன்னும் குடுக்காததாலை வீட்டுக்கார மனிசி பேயறைஞ்ச மூஞ்சியோடை திரியுது. ஊருக்கு எழுதி இண்டைக்குத்தான் காசு வந்தது. எடுத்துக்கொண்டு வாறன்.

உங்களுக்கு எப்பிடி? எல்லாம் ஒழுங்காக் கிடைக்குதோ?

ஒரு பெண் தானா வந்து கதைக்கிறாள். ஒளிவு மறைவில்லா வெளிப்படையான பேச்சு. நான் பொய் சொல்லக்கூடாது. அம்மா அடிக்கடி சொல்லுவா, பொய் சொல்லுறவ வாய்க்கு பொரியும் கிடைக்காது எண்டு.

'உண்மையைச் சொன்னா, உங்களுக்குப் பக்கத்தில நிக்கிற இந்த ரெண்டு காலடி மண்தான் இப்போதைக்கு. அதுவும் உங்களுக்குச் சொந்தமில்லை. இந்த இடத்தை விட்டுப் போனால் வேறை ரெண்டு கால்கள் அதிலை வந்து நிக்கும்'.

நடந்துகொண்டிருந்தார்கள்.

எதைப் பேசுவது? கதைப்பதற்கான சொற்களும் இல்லை.

'உங்கள் பெயர் என்ன?'

பதிலுக்கு அவள் இமைகளால் படபடத்தாள்.

‘பெயரைத் தெரிந்து கொள்ளுறது பெரிய பிழையா? உங்களை எப்பிடிக் கூப்பிடுறது எண்டு தெரியேல்லை. அதுதான்.’

‘ஏன் கூப்பிடவேணும். நான்தான் பக்கத்திலையே நிக்கிறனே.’ இது என்னடா வல்லடிவழக்கு.

‘இல்லை உங்கடை பெயரைத் தெரிஞ்சு கொள்ளுவம் எண்டு கேட்டனான்.’

‘தெரிஞ்சு கொண்டு என்ன செய்யப் போறியள்.’

‘புட்டவிக்கலாம். இடியப்பம் பிழியலாம். தோசை சுடலாம். ஏன் உப்புமாக் கூடக் கிண்டிப் பாக்கலாம்.’ அவனுக்குள் நக்கல் சொற்கள் பல நெட்டி முறித்தன. இந்தச் சிங்கப்பூரிலை ஆரோ ஒருத்தி தானாய் வந்து கதைக்கிறாள். என்ர அவசரத்தாலை அதை அள்ளி மூடக்கூடாது.

உதட்டில் ஒரு மென்நகையை நெளிய விட்டான்.

அவள் முறைத்தாள்.

‘நான் சீரியசாச் சொல்லுறன். நீங்கள் இளிக்கிறியள்.’

அழகிய அவள் விழிகளில் சினம் சிந்தியது. அது போலியா, உண்மையா என உரைத்துப் பார்க்க உபகரணங்கள் கைவசம் இல்லை.

கொஞ்சம் விட்டுப் பிடிப்பம். எட்டுமூலைக் கொடியையே முகில்களைத் தாண்டிப் பறக்கவிட்ட கைகள் இவை. இதைத் தாண்டி எங்கை ஆத்தை நீ போகப்போறாய்?

‘உங்கடை பேரை வைச்சுக் கன விசயங்கள் செய்யலாம் பாருங்கோ... உதாரணத்துக்கு எருமை மாட்டிலை பால் கறக்கலாம்.

‘பகிடீ. எனக்குச் சிரிப்பே வரேல்லை’.

‘இதுக்குப் பாருங்கோ நகைச்சுவை உணர்வு எள்முனை அளவாவது இருக்கவேணும், உணர்வுகள் உலர்ந்த உள்ளத்தில் சாம்பல்தான் பூத்திருக்கும். சாமந்திப்பூ மலராது.’

நின்று பார்த்தாள். ‘நிசாந்தி’ என்றாள்.

நிசாந்தி நல்ல பெயராச்சே... அதைச் சொல்ல ஏன் இவ்வளவு பிடுங்குப்பாடு?

‘சரி, இதிலை கொஞ்சக் காசை வைச்சுக்கொள்ளுங்கோ. பிறகு உங்களுக்கு வரேக்கை தாங்கோ..’

50 டொலரை அவன் கையில் திணித்துவிட்டு நிசாந்தி அகன்றாள்.

‘பிறகு எப்ப சந்திக்கிறது..?’

‘ஒவ்வொரு நாளும்’

‘எங்க?’

‘முஸ்தபா கடைக்கு முன்னால...’

பின்வந்த பல மாலை நேரங்களில், முஸ்தபா கடை முன்றல் இவர்களுக்கு கதை பேசும் களமாகியது.

ஒருநாள், பேசிக்கொண்டிருக்கும்போது நிசாந்தி அருந்தவத்தின் கையைப் பற்றினாள். ‘நான் நேராகவே கேக்கிறன். எனக்கு உங்களப் பிடிச்சிருக்கு. என்னைக் கலியாணம் முடிப்பீங்களா?’ இதை அருந்தவம் எதிர்பார்க்கவில்லைத்தான். நல்ல நட்பு என்ற எல்லையைத் தாண்டி, நிசாந்தி அருந்தவத்தின் அகப்பரப்புக்குள் கால் வைக்க முயன்றிருக்கிறாள்தான்.

சரோ அங்கே இருக்கிறாளே! ஆனால், சரோ தன் காதலை வெளிப்படுத்தவில்லை. இவள் வெளிப்படுத்துகிறாள்.

அருந்தவம் கைகளை உதறவில்லை, ஆனால் முகத்தில் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் வேறு எங்கோ பார்த்தான். நிசாந்தி நல்லவள்தான். வெளிப்படையானவள். ஆனால்... ஆனால்...

சரோவே உயர்ந்து நின்றாள்.

நிசாந்தியின் கையைச் சற்றே விலக்கினான்.

‘நிசாந்தி, என் மனசிலை இன்னொருத்தி இருக்கிறாள். நான் நல்ல நட்போடதான் பழகினனான். அந்த எல்லையை நான் எண்டைக்கும் மீறேல்ல.’

‘அதை ஏன் எனக்கு முதல்ல சொல்லேல்ல...’

‘சொல்லவேண்டிய தேவை வரேல்ல... என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ...’

‘நான் நாளைக்கு ஜெர்மன் போறன். உங்கள என்னாலை இழக்க ஏலாது. திருப்பி நான் சந்திக்கேக்கையும் இதைக் கேப்பன்.’

அருந்தவம் எங்கோ பார்த்துக்கொண்டிருந்தான். நிசாந்தி போய்க்கொண்டிருந்தாள்.

அதற்குப் பின் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அருந்தவம் கனடாவுக்கு வந்து சேர்ந்தான். இடையே அம்மா தவிர யாரோடும் தொடர்பு இல்லை. ஊரில் அம்மா வாங்கிய கடனின் வட்டி வானளவாக வளர்ந்திருந்தது.

அல்லும் பகலும் அயராத உழைப்பு. அவ்வப்போது சரோவுடன் கடிதத் தொடர்பு. தன் அன்பை வெளிப்படுத்திக் கடிதங்கள் எழுதினாள் சரோ. இவன் காதலும் கடிதங்களில் கறை

படியாமல் படர்ந்திருந்தது.

இப்படியே சில ஆண்டுகள் உருண்டிருக்கும். சரோவை மன தில் கொண்டு, தாய்நாட்டுக்குப் போய்வர நினைத்தான் அருந்தவம்.

ஒருநாள் அம்மா தொலைபேசித் தொடர்பில் வந்தாள். சரோ வுக்குத் திருமணமாகிவிட்டது என்ற குண்டைத் தூக்கி அருந் தவம் தலையில் போட்டாள். இருவர் உறவும் அரசல் புரசலா கத் தாய்க்கும் தெரிந்தே இருந்தது. அவளும் அதை விரும்பி யிருந்தாள். ஆனால் சாதித் தகுதி குறுக்கே நிற்கிறதே.

'யாரோ யாழ்ப்பாணக் கோயில் குருக்களின் மகனாம். நல்ல வசதியாம்.' என்றாள் தாய்.

அந்தச் செய்தியோடு, அவன் ஊர் திரும்பும் ஆசையும் உடைந்துபோனது. ஸ்பொன்சரில் கனடா வந்த அவன் தாய் கடந்த 20 வருடமாகக் கெஞ்சிக்கொண்டிருக்கிறாள்.

திருமணம் வேண்டாம் என்ற பிடிவாதத்தில் இருந்து அருந்த வம் இறங்கவே இல்லை.

இன்று காலையில்தான் அந்தத் தொலைபேசி வந்தது. எடுத் ததும் மறுமுனையில் இருந்து அழும் குரல். இவன் யார் என்று கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை. மீண்டும் அழுகுரல்.

'ஆரெண்டு சொல்லுங்கோ... நான் போனை வைச்சிருவன்' என்று சொல்ல..., மறுமுனையில் இருந்து 'நான் சரோ' என்ற சொற்கள் தளதளத்தன.

அருந்தவம் ஆடிப்போய்விட்டான். அவனுடைய உணர்வுகள் உறுப்புகள் எல்லாமே ஒரு கணம் இயக்கத்தை நிறுத்திப் பின் இயங்கியிருக்கவேண்டும்.

அவள் இப்போது விதவை. தமிழ்நாட்டுக்குச் சென்ற அவள் கணவன் விபத்தில் இறந்து போனான். நீண்ட காலத்துக்குப் பின் பிறந்த பன்னிரண்டு வயது மகன். ஏதோவொரு வழியில் தொலைபேசி எண்ணைப் பெற்று அருந்தவத்தை அழைத்தி ருக்கிறாள்.

இந்தப் பெரும் பாரத்தோடுதான் அங்காடிக்குள் நுழைந்தி ருந்தான் அருந்தவம்.

குடித்து முடிக்காத பாதிக்கோப்பி ஆறிப்போயிருந்தது.

'நீங்கள் அருந்தவம்தானே... குரல் கேட்டு நிமிர்ந்தான்'

எதிரே நிசாந்தி.

அவன் அனுமதி இன்றியே முன் இருக்கையில் இருந்தாள். 'நீங்கள் கனடாவிலைதான் இருக்கிறீர்கள்' எண்டு அறிஞ்சன்.

பெரிய மாற்றமில்லை. வயதின் முதிர்ச்சி சிறிதாக முகத்தில் தெரிந்தது.

'நீங்கள் இங்க எப்படி?'

'ஜெர்மனியிலைதான். இப்ப ஒரு மாசமாய் இங்க.'

மென்மையாய்ப் புன்னகைத்தான் அருந்தவம்.

'அண்டைக்கு விட்ட இடத்திலை இருந்து தொடங்கலாமா?'

'என்ன?'

'நான் இன்னும் கல்யாணம் செய்யேல்ல.'

'ஏன்?'

'உங்களத் தெரிஞ்சதால, என்னைப் புரோப்போஸ் பண்ணின ஒவ்வொருத்தரையும் உங்களோட ஒப்பிட்டன். ஒருத்தரும் கிட்ட வரேல்லை.'

நிசாந்தியை உற்றுப் பார்த்தான் அருந்தவம்.

'என்னைக் கல்யாணம் செய்யிறீங்களா?' மீண்டும் அதே வெளிப்படை.

'இல்லை, முடியாது.' அன்றைய தயக்கம் அருந்தவத்திடம் இன்று இல்லை.

'எனக்குத் தெரியும், நீங்கள் இன்னும் கலியாணம் கட் டேல்லை.'

வியப்பும் சற்றுச் சினமும் கலந்த பார்வையோடு அழுத்தமாய் அவளை நோக்கினான்.

'இல்ல எனக்குக் கல்யாணம் முடிஞ்சுது.'

'பொய்... உங்கட ஒரு பிரண்டை நேற்று ஒரு கலியாண வீட் டிலை கண்டனான். அவர் சொன்னவர்.'

'அவர் அப்பிடிச் சொல்லியிருந்தால் அது சரி. ஆனா எனக் குக் கல்யாணம் ஆயிட்டுது.'

'எப்ப,'

'இண்டைக்கு விடிய...'

ஆறிய கோப்பிக் குவளையைக் குப்பைக் கூடைக்குள் எறிந் துவிட்டுப் போய்க்கொண்டிருந்தான் அருந்தவம்.

இப்போது அவன் நடையில் தளர்ச்சி இல்லை.



kandasamy.a@thaiveedu.com




மிக மிக நீண்ட காலத்தின் முன் மலையின் அடிவாரம் ஒன்றில் ஓர் ஏழை விவசாயியும் அவனுடைய வயது முதிர்ந்த கைம்பெண்ணான தாயும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களிடம் ஒரு சிறிய காணி இருந்தது. அது அவர்களுக்கான உணவை அளித்தது. அவர்கள் பணிவானவர்கள், அமைதியானவர்கள், மகிழ்ச்சியானவர்கள்.

சைனிங் என்ற அந்த மாகாணத்தை ஒரு கொடுங்கோலன் ஆண்டு வந்தான். அவன் ஒரு வீரன். உடல் வலிமை இல்லாதவர்களை, உடல் நலம் குன்றியவர்களை வெறுத்தான். அதனால் அவன் ஒரு கொடூரமான பிரகடனத்தை எல்லோருக்கும் அனுப்பினான். வயது போனவர்களை உடனடியாகக் கொன்றுவிடும்படி முழு மாகாணத்திற்கும் கடுமையான கட்டளையிட்டான். அக்காலம் மிகவும் கொடூரமானது. முதியவர்க ளைச் சாவதற்கு விட்டுச் செல்வது வழக்கமாகவும் இருந்த காலம் அது. அந்த ஏழை விவசாயி வயதுபோன தன் தாயில் மிகவும் பயபக்தியும், அன்பும் உள்ளவன். அந்தப் பிரகடனம் அவனைத் துக்கத்தில் ஆழ்த்தியது. ஆனால் எவருமே அந்தக் கொடுங்கோலனின் பிரகடனத்தை மீறுவதற்கு ஒன்றுக்கு நாலு தரம் யோசிப்பார்கள். அதனால் ஆழமான, நம்பிக்கையற்ற பெருமூச்சுகளுடன் அங்கிருந்த இளைஞர்கள் முதியவர்களையும் வலிமையற்றவர்களையும் கருணைக் கொலை செய்ய ஆயத்தமானார்கள். அப்படியான மரண முறையே அக்காலத்தில் வழக்கத்திலுள்ள கருணையான கொலை செய்யும் முறை.



மற்சுவோ பாஷோ 1644-1694. இவர் ஏடோ என்ற ஜப்பானிய காலத்தில் (1603-1868) மிகவும் புகழ் வாய்ந்த கவிஞர். அவருடைய பயணக் கட்டுரைகளும் பெயர் போனவை. இவர் ஒரு ஹைக்கூ கவிஞர். இவர் ஹைக்கூக் கவிதையின் ஆசான் என்று அழைக்கப்படுகிறார். ஆரம்பத்தில் ஆசிரியராக இருந்த அவர், நகரத்திலிருந்த சமூக, இலக்கிய வட்டத்தைத் துறந்து, நாடு முழுவதும் அலைந்து திரிந்தார். அவரின் கவிதைகள் அதிலிருந்து பெற்ற தூண்டுதலால் எழுதப் பெற்றவை. அவரின் The Old Pond, Narrow Road ஆகிய கவிதைகள் மிகவும் பெயர் போனவை. இவர் ஜப்பானிலும் மேற்கு நாடுகளிலும் பெயர் போனவர். இவரின் கவிதைகள் எளிமையும் இயல்புப் பாணியும் குறைந்த பட்ச வடிவமும் கொண்டவை. இவர் சமுராய் போர் வீரர் வம்சத்தைச் சேர்ந்தவர் என்றும் நின்ஜா குடும்பத்தைச் சார்ந்தவர் எனவும் நின்ஜுஶ்சு கலையில் - உளவுக் கலையில் - தேர்ச்சி பெற்றவர் என்றும் சொல்லப்படுகிறது.

ஒருநாள் சூரியன் மறைந்து கொண்டிருக்கையில் அவன் தன் வேலையை முடித்தபின் வெளுக்காத அரிசியை எடுத்துச் சமைத்தான். அப்படியான அரிசியைத்தான் அந்த ஏழைகள் உண்டார்கள். அதைக் காய வைத்தான். அதை ஒரு மூட்டையாகக் கட்டினான். பின் அதைத் தோளில் போட்டுக்கொண்டான். அத்துடன், ஒரு சுரைக் குடுவையில் குளிர்ந்த இனிமையான நீரை நிரப்பி அதையும் தோளில் போட்டுக் கொண்டான். அதன் பின் பலவீனமான தன் முதிய தாயை தோளில் தூக்கி வைத்துக்கொண்டு மலையில் ஏறும் கடும் பயணத்தைத் துவங்கினான். பாதை நீளமானதும் செங்குத்தானதும் ஆகும். அந்த ஒடுங்கிய பாதையில் குறுக்கும் நெடுக்குமாக இன்னும் பல பாதைகள் சென்றன. அவற்றை வேட்டைக்காரர்களும் மரம் வெட்டுபவர்களும் உண்டாக்கி இருந்தார்கள். சில இடங்களில் அவன் தொலைந்தும் குழம்பியும் போனான். அதைப்பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து சென்றான். எந்தப் பாதையானாலும் அவனுக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. தொடர்ந்து கண்மூடித்தனமாக ஏறிக்கொண்டிருந்தான். மரங்கள் ஏதுமற்ற உச்சியை அடையும்வரை போய்க் கொண்டிருந்தான். அந்த மலைக்குப் பெயர் ஒபற்சுயமா. ‘வயது முதிர்ந்தோர் கைவிடப்படும் மலை’ என்பது அதன் பொருள்.

முதிய தாயின் கண்கள் அத்தனை பார்வைக் குறைவுடையதல்ல. மகன் ஒரு பாதையிலிருந்து இன்னொரு பாதைக்கு அவசரமாகச் சென்றதை அவதானித்துக் கொண்டிருந்தார். அதனால் அவருடைய அன்பு நிறைந்த உள்ளம் பதற்றம் அடைந்தது. மகனுக்கு மலையின் குறுக்கும் நெடுக்குமாகச் சென்ற பாதைகளும் தெரியவில்லை. அதனால் அவர் திரும்பிப் போவது ஆபத்தானதாக இருக்கும் என்று தாய் நினைத்தார். அதற்காக, அவர் தன் கைகளை நீட்டி மரக்கிளைகளிலிருந்து சிறு குச்சிகளை ஒடித்து அவற்றை வழிகள் நீளம் ஒரு சில அடிகளுக்கொருதரம் போட்டுக்கொண்டு வந்தார். கடைசியில் மலையுச்சி வந்தது. மகன் களைத்துப் போக, நெஞ்சம் புண்ணாக, தன் தாயை மெதுவாக இறக்கி வைத்தான். பின் தன் இறுதிக் கடமையாக வசதியான ஓர் இடத்தை அன்பான தன் தாய் தங்குவதற்காகத் தயாரித்தான். பைன் மரத்தின் கிளைகளைப் பொறுக்கி மென்மையான ஒரு படுக்கை ஒன்


ஜீவா

றையும் தயார் செய்தான். அதன் பின் முதிய தன் தாயை மெல்லத் தூக்கி அதில் வைத்தான். பஞ்சு பொதிந்த மேலங்கியால் அவரின் கூனிய தோள்களைச் சுற்றிக் கட்டினான். பின் கண்ணீர் நிறைந்த கண்களுடனும் வலி நிறைந்த இதயத்துடனும் அவன் விடை பெற்றான்.

தாயிடம் இருந்து கடைசியாக விடைபெற்றபோது தாயின் நடுங்கிய குரலில் முற்றும் சுயநலமற்ற அன்பு நிறைந்திருந்தது. அவர் உரிமையுடன் தன் மகனுக்கு ஆணையிட்டார். 'உன் கண்களைத் திறந்து வைத்துக்கொள், மகனே. மலைப் பாதையில் ஆபத்துக்கள் அதிகம் உள்ளன. கவனமாகப் பார்த்துப் போ. கிளைகள் இடப்பட்ட பாதையால் நடந்து போ. அவை உன்னை தெரிந்த பாதைவரை இட்டுச் செல்லும்.' மகனின் ஆச்சரியமடைந்த கண்கள் பாதையை உற்றுப் பார்த்தன. பின் தன் ஏழைத் தாயையும் பார்த்தான். அவரின் முதிய கைகள் தோல்கள் சுருங்கிப் போயிருந்தன. கைகள் கடும் உழைப்பால் அழுக்காகி இருந்தன. அவனுடைய இதயம் வெடித்து விடுவது போல இருந்தது. நிலத்தில் குனிந்திருந்து உரத்து அழுதான். 'ஓ, என் மதிப்புக்குரிய தாயே, உனது அன்பு என் நெஞ்சை நொருக்கி உடைத்து விட்டது! உன்னை விட்டு விட்டு நான் போக மாட்டேன். நாங்கள் இருவரும் கிளைகள் போட்ட அந்தப் பாதையின் நீளம் போவோம். இருவரும் ஒன்றாகவே சாவோம்!' என்றான்.

திரும்பவும் தாயைத் தூக்கி தோளில் போட்டான். இப்போது அவர் பாரமற்று இருந்தது போலத் தெரிந்தார். அவசரமாக பாதையில் இறங்கி நடந்தான். நிழல்கள் ஊடாகவும் நிலா வெளிச்சத்திலும் நடந்தான். பள்ளத்தாக்கில் இருந்த தங்கள் சிறிய குடிசை நோக்கி நடந்தான். குடிசையில் சமையலறை நிலத்தின் கீழே உணவு பொருட்கள் வைப்பதற்காக ஒரு சுவர் அலமாரி இருந்தது. அதை வெளியே இருந்து பார்க்க முடியாது. மறைவான இடத்தில் இருந்தது. அங்கே அவன் தன் தாயை மறைத்து வைத்தான். அவருக்குத் தேவையான எல்லாவற்றையும் வைத்தான். அவரைக் கண்டுபிடித்து விடுவார்களோ என்ற பயத்தில் பயந்துகொண்டு காவல் காத்துக் கொண்டிருந்தான். காலம் சென்றது. அவர் பாதுகாப்பாக இருப்பார் என்று அவன் நம்ப ஆரம்பித்தான். அப்போது ஒரு நாள் ஆளுநன் நியாயமற்ற ஓர் ஆணையைப் பிறப்பித்தான். தன் அதிகாரத்தைப் பற்றி பெருமையுடன் பேசுவதைப் போல. அவனுடைய ஆணை என்னவென்றால் நாட்டில் உள்ள அனைவரும் சாம்பல் கயிறு ஒன்றைக் கொண்டு வந்து காட்டவேண்டும்.

முழு மாகாணமும் பயத்தால் நடுங்கியது. அந்த ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆனால் சைனிங்கில் உள்ள எவரால் அந்த சாம்பல் கயிறை உண்டாக்க முடியும்? ஒருநாள் இரவு அந்த செய்தியை தன் தாய்க்கு இரகசியமாகச் சொன்னான். 'பொறு!' என்றார் தாய். 'நான் யோசித்துச் சொல்கிறேன்,' என்றார். இரண்டாவது நாள் என்ன செய்ய வேண்டும் என்று அவர் சொன்னார். 'வைக்கோலை முறுக்கி ஒரு கயிற்றை தயார் செய். பின் அதைத் தட்டையான கற்களில் வைத்து காற்று வீசாத ஒரு இரவில் கொழுத்து.' மகன் அங்குள்ள மக்களை அழைத்தான். தாய் சொன்னது போலச் செய்தான். நெருப்பு அணைந்தவுடன் கற்களில் ஒரு சாம்பல் கயிறு துல்லியமாகக் கிடந்தது, ஒவ்வொரு முறுக்குடனும் திருப்பத்துடனும் கூடிய இழை வெளியே அழகாக வெளிக்காட்டிக் கொண்டிருந்தது.

ஆளுநனுக்கு அதைக் காட்டினான். இளைஞனின் கூரறிவைக் கண்டு மிக மகிழ்ந்த ஆளுநன் அவனைப் பெரிதாகப் புகழ்ந்தான். இருந்தும் அவன் அந்த ஞானத்தை எங்கே இருந்து பெற்றான் என்பதை அறிய விரும்பி அவனைக் கட்டாயப்படுத்திக் கேட்டான். 'கடைசியில்! கடைசியில்! உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கே,' என்று மகன் அழுதான். கீழே குனிந்திருந்து உண்மையான தன் கதையைச் சொன்னான். ஆளுநன் அதைக் கவனமாகக் கேட்ட பின் அமைதியாகச் சிந்தித்தான். இறுதியில் தன் தலையைத் தூக்கிச் சொன்னான். 'சைனிங்குக்கு இளைஞர்களின் பலத்திற்கு மேலாக, இன்னும் ஒன்றும் தேவை. முதியவர்களின் ஞானமும் தேவை. நரையுடன் ஞானமும் வருகிறது என்ற முதுமொழியை நான் மறந்து விட்டேனே என்று தீவிரமாகச் சொன்னான். அதோடு, அவனுடைய ஆணையையும் மீளப் பெற்றுக் கொண்டான். கொடுமையான சட்டம் நீக்கப்பட்டது. அதைப் பற்றிய கதை தான் அங்கே இன்னும் சொல்லப்படுகிறது.



mahalingam.k@thaiveedu.com






# நிறைவுற நிகழ்ந்த மருதோவியம்





இன்றளவில் தமிழகம் நன்கு அறிந்த ஓவியர் திரு டிராட்ஸ்கி மருது அவர்கள். தமிழர் ஓவிய மரபில் தனக்கெனத் தனித்து வமானதோர் பாதையை வகுத்து அதில் தன் ஓவிய மரபைப் பேணிச்செல்பவர். ஓவியம் சார்ந்து அவர் தொட்டிருக்கும் உச்சங் களைப் பிற தமிழ் ஓவியர் பலரும் தொட்டி ருக்கவில்லை என்பதே உண்மை.

இவருடைய ஓவியங்கள் ஒன்றேனும் தமது இதழ்களில் இடம்பெறாதா எனப் பலரும் காத்திருக்கும் சூழலில், கடந்த 15 ஆண்டுக ளுக்கு மேலாகத் தாய்வீடு இதழோடு இணைந்து பயணிப்பவர் ஓவியர் மருது. மாதந்தோறும் குறைந்தது ஓர் ஓவியமேனும் தாய்வீடு இதழில் இடம்பெறும். பெரும் ஓவியர் ஒருவரோடு இணைந்து பணியாற்று கின்றோம் என்ற பெருமை தாய்வீடு இதழுக்கு எப்போதும் உண்டு.

மிகச் சிறந்த ஓவியர் என்பதற்கும் மேலாக அவர். தனக்கென உயர்ந்த வாழ்வியல், அரசியல் கொள்கைகளையும் கொண்டவ ராகத் திகழ்கின்றார்;. அதுவே அவருக்கும் அவருடைய ஓவியங்களின் மேன்மைக் குமான சமூகப் பெறுமானத்தை அதிகரித்து விடுகின்றது.

அவருடைய ஓவியங்களாலும் அவர் கொண் டிருக்கும் உயர்ந்த மானுடப் பண்புகளாலும் ஈர்க்கப்பட்டோர் பலர் உலகெங்கும் வாழ்ந்து வருகின்றனர். அத்தகையோரின் நீண்டநாள் கனவொன்றின் நிறைவேற் றுகையே ஜனவரி 29, 2025 புதன்கிழமை நடைபெற்ற 'மருதோவியம்' என்ற பெயரில் ஓவியப் பேராளுமைக்குப் பெருமதிப்புச் செய்த மாண்புறு விழா.








இந்த விழா ஏற்பாட்டாளர்களுடன் பேசும் போது, இது எங்களுடைய நீண்டநாள் கனவாகவும் நினைவாகவும் இருந்தது என்றார்கள். இந்த விழாவில் பங்கேற்கும் வாய்ப்பு தாய்வீடு இதழுக்கும் கிடைத்தது என்பதும் பெருமைக்கு உரிய செய்தி.

சென்னையில் கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு மண்டபத்தில் நீண்ட நிகழ்வாக நடைபெற்றிருந்தது. காலை 10 மணிக்குத் தொடங்கி, மாலை ஆறு மணி வரை, நான்கு அமர்வுகளாக இந்த நிகழ்வு நடைபெற்றமை சிறப்பாக இருந்தது. இவ்வாறானதோர் மதிப்பளிப்பு எமக்குப் புதுமையாகவே இருந்தது.




10:30-க்கு, காலை அரங்கைத் தன் வரவேற்புரையுடன் தொடங்கினார் 'வையம்' இதழ் ஆசிரியர் சந்திரசேகர். ஓவியர் மருது அவர்களை அவர் மூன்று தலைமுறை வாழ்வினூடாகவும் வாழ்வியல் பண்புகளூடாகவும் அழகாக அறிமுகம் செய்தார். மருது, அறிமுகம் தேவையில்லாத பெருமுகம். எனினும், சந்திரசேகர், மருது குறித்துப் பேசியவற்றைக் கேட்டபோது சில புதிய செய்திகளும் எமக்குக் கிடைத்தன.

தொடர்ந்து அரங்கைத் தலைமை தாங்கினார் ஓய்வுபெற்ற இந்திய நிர்வாக சேவை அதிகாரியும் சிந்துவெளி நாகரிக ஆய்வாளருமான திரு. ஆர். பாலகிருஷ்ணன். ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களின் ஓவிய ஆற்றல் குறித்து அவர் விதந்துரைத்த வகைகச் சிறப்பாக இருந்தது. மருது இல்லாமல் தனது நூல்கள் இல்லை என்று குறிப்பிட்டார்.




நிகழ்வுக்கு முன்னிலை வகித்தார் மூத்த ஓவியர் திரு. ஆர்.பி. பாஸ்கரன். இவர் ஓய்வபெற்ற ஓவியக்கல்லூரி முதல்வர்;. ஓவியர் மருதுவின் சிறப்புகளை ஓர் ஆசிரியராக அழகுறக் கூறினார். திரு பாஸ்கரன் மருது அவர்களுக்கு தான் வரைந்த அழகான ஓவியம் ஒன்றை நினைவுப்பரிசாக வழங்கினார். அதேவேளை மருது அவர்களும் தான் வரைந்த பெரியார் ஓவியம் ஒன்றை அவருக்கு வழங்கினார்.

நிகழ்வைத் தொடக்கிவைத்து உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டிருந்தவர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அவர்கள். மருது, இன்குலாப், தான் உள்ளிட்ட ஐவர் ஒன்றாக ஈழம் சென்று திரும்பிய கதையைக் கூறினார். அப்போது அங்கு தமக்கு வழங்கப்பட்ட வரவேற்புகளையும் சிலாகித்தார்;. மருதுபோன்ற உண்மையானதொரு கலைஞர்; பாராட்டப்பட

வேண்டியவர் என்றும், தனக்கென ஒரு கொள்கையோடு, விட்டுக்கொடுப்புகள் இன்றி, உறுதியாகப் பயணிப்பவர் என்றும் குறிப்பிட்டார்.

அதையடுத்து, உரையாளர்களாக திரு நக்கீரன் கோபால். திரு கரு. பழனியப்பன், திரு ரவி சுப்ரமணியம், தாய்வீடு இதழ் சார்பில் திரு பொன்னையா விவேகானந்தன் என்போர் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொருவருடைய உரையும் மருது அவர்களின் வெவ்வேறு பரிமாணங்களைத் தொட்டுச் சென்றன. கூறியது கூறல் என்பதைப் பெருமளவில் தவிர்த்து, அவருடைய படைப்பாற்றலின் பல்வேறு கோணங்களையும் அவர் பண்புகளையும் குறிப்பிட்டார்கள்.

திரு பொன்னையா விவேகானந்தன், தாய்வீடு இதழுக்கும் ஓவியர் மருது அவர்களுக்குமான உறவைக் குறிப்பிட்டோடு, கனடாவில் அவரோடு பழகிய நினைவுகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டதுடன், தாய்வீடு வழங்கிய மதிப்பளிப்புப் பட்டயத்தையும் வழங்கினார்.



இரண்டாம் அமர்வு மதியம் 12 மணிக்கு ஆரம்பமானது. இதில் நடிகரும் மருது அவர்களின் நண்பருமான நாசர், வீ. அரசு என்போர் கலந்துகொண்டு, மிகச் சிறந்த உரைகளை ஆற்றினர். நாசரின் தேவதை படத்தில் மருது அவர்கள் கலை இயக்குநராகப் பணியாற்றி அனுபவங்களை அழகுறப் பகிர்ந்தார்.

நண்பகல் இடைவேளைக்குப் பின்னர் பிற்பகல் அமர்வு 3.00 மணிக்கு ஆரம்பமானது. அபிராமி சண்முகம் அவர்களின் இயக்கத்தில் உருவான மருது அவர்களைப் பற்றிய ஆவணப்படம் திரையிடப்பட்டது. இதுவரை பலருக்கும் தெரியாத பல செய்திகளை இந்த ஆவணப்படம் வெளிப்படுத்தியது. அதில் மிஸ்கின், வெற்றிமாறன் உள்ளிட்ட பலருடைய நேர்காணல்கள் இடம்பெற்றன.

தொடர்ந்து, மருது அவர்கள் பங்காற்றிய சில நூல்கள் அரங்கிலே வெளியிடப்பட்டன. அதில் மருதுவின் ஓவியங்களை அடக்கிய தலைவன், தலைவி, அவன், அவள் என்ற நூல்களும் கருணாகரன் எழுதிய 'காணாமல் ஆக்கப்பட்டோருக்கான இரண்டு செயலிகள்| என்ற நூல், 'வையம்' வெளியீடாக வெளியிடப்பட்டது. அத்துடன்; மருதுவின் தந்தையார் எம்.ஆர். மருதப்பன் எழுதிய, 'லியான் டிராட்ஸ்கியும் கலைஞரும்' என்ற நூல் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து ப. திருமாவேலன், குணா கவியழகன் ஆகியோர் உரையாற்றினர். வெளியிடப்பட்ட நூல்களில் மருது அவர்களின் பங்களிப்பு எத்துணைச் சிறப்புற்றிருந்தது என்பதைக் அழகுறக் குறிப்பிட்டனர்.

மூன்றாம் அமர்வில், சி. மகேந்திரன், திருமுருகன் காந்தி, ஊடகவியலாளர் குணசேகரன், மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்பான உரைகளை வழங்கினர்.

விழாவின் நிறைவுரைக்காக அழைக்கப்பட்ட இருவரும் சிறப்பும் முதன்மையும் மிக்கவர்கள். பழ. நெடுமாறன் அவர்களையும் அவர் ஆற்றிய பணிகளையும் அறியாதோர் இலர். தள்ளாத வயதெனினும் மருது அவர்களை நன்கு விளங்கிக் கொண்டவராக உரை நிகழ்த்தினார். பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக்கூறி, அவற்றை நிகழ்வுக்கு வந்திருந்தவர்களோடு ஒப்பிட்டுப் பேசினார். தமிழகத்துக்கான பொதுப் பிரச்சினைகள் வந்தபோது தமிழ்த் தலைவர்கள் கட்சி வேறுபாடு துறந்து ஒன்றுபட்டார்கள். அதுபோல் இன்றும் இந்தப் பாராட்டு நிகழ் வில் பலதரப்பட்டோர் அணி திரண்டிருக்கின்றார்கள். மருது என்றதும் வேறுபாடுகளை மறந்து இங்கு ஒன்று கூடி இருக்கிறார்கள். இத்தகை யோரை இணைப்பதற்கு மருது போன்றவர்களால் மட்டுமே முடியும் எனக் குறிப்பிட்டார்.

அடுத்து, வழக்கறிஞரும் திராவிடர் கழகத்தின் முதன்மையாளருமான அருள்மொழி நிறைவுரை வழங்கினார். அவருடைய பேச்சாற்றல் தமிழ் உலகம் நன்கறிந்தது. மருது தனக்கான ஓவியராக இல்லாமல் சமூகத்துக்கான ஓவியராக திகழ்கின்றார் எனக் குறிப்பிட்ட அவர், எமது வரலாற்றுக் கதைகளைச் சிறுவர்களுக்கான ஓவிய நூல்களாக இவர் விரைவில் வெளியிட வேண்டும். இல்லையெனில் வடதிசைக் கதைகளுக்குள் எமது தலைமுறைகள் கரைந்துவிடும் என்றும் குறிப்பிட்டார்.

நிறைவில், மருது அவர்களின் ஏற்புரை. அன்றைய நாளின் மிக நெகிழ்ச்சியான தருணம் இது.

பொதுவாகவே கலைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள். அதில் இவர் தனிரகம். உணர்ச்சியும் மகிழ்ச்சியுமாக அவர் ஆற்றிய உரை நன்றிப்பெருக்காக அமைந்தது.

காலை முதல் மாலை வரை அரங்கு நிறைந்த நிகழ்வாக இடம்பெற்ற இந்த மதிப்பளிப்பு விழாவின் போது மருது சிறப்பிதழாக வெளிவந்த 'வையம்' இதழும் வழங்கப்பட்டது. அத்தோடு, 'லியான் டிராட்ஸ்கியும் கலைஞரும்' என்ற நூலும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.






























உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Office: 905-201-9977


HOMELIFE
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
• Family Portraits
• Children Portraits
• Business Portraits
• Passport & Citizenship Photos
• Classic Weddings
• Arangetram
• Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER
604 398 7272
TORONTO
647 219 3110
CALGARY
403 879 7272


Ervamatin
Hair Lotion
Lotion Capilar
- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

**CSC Credit Solution Centre**

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
HOMELIFE
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
உங்கள் Gas Furnace இருந்து CO அளவிற்கு
$2100 Rebate Available Now
call us 416-414-2280
AATEK
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673.9865
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life 100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
Home Evaluation
Home Staging
Professional Photography
Social Media Marketing
Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Patricia Peter BBM
416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடர்பான அனைத்து...
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

2458 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
Bus:416-270-1111 | Fax:416-270-7000

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd., Brokerage*

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
416-321-6000
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell 416 505 8532

DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX
LATHAN VARATHARAJAH